

ஸ்ரீ நடராசத் தத்துவம்

டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி

வானதி பதிப்பகம்

ஸ்ரீ நடராசப் பெருமானின் ஆங்கிகாபிநயுத் தத்துவங்கள்

1. இளம் பிறை
தக்கன் சாப வீடு (பு)
காம தகனம் (பு)
உயிர் வளர்ச்சி(பி)
காலச் சின்னம் (பி)
ஒஷதி நாதன்

2. மயிலிறகு
கிராதார்ஜூனியம் (பு)
மேற்செல் உயிர் (பி)

3. கொக்கிறகு
குண்டாசுர வதம் (பு)
அரசத்தன்மை

4. இடக்கண்
சந்திர மண்டலம்
இடநாடி (யோ)
இச்சா சக்தி

5. வலக்கண்
சூரிய மண்டலம்
பிங்கலை நாடி (யோ)
ஞான சக்தி

6. நுதல் விழி
விஸ்வதாட்சம் (பி)
சகஸ்ராட்சம் (ஆ)
அக்கினி அம்சம் (ப)
நடு நாடி (யோ)
சுழுமுனை (யோ)
காம தகனம் (பு)
கிரியா சக்தி

7. திருநீறு
பிருதிவித் தன்மை (ப)
லய சிருஷ்டி (பி)
திரிபுரமெரித்தல் (பு)
திரிசத்யம்
சுடலையாடல்

8. காபாலம்
பிரம்ம சிரச்சேதம் (பு)
பிட்சாடனர் (பு)

9. ஊமத்த மலர்
அட்ட மூர்த்தம்
யோகி (யோ)

10. கங்கை
ஜலமய மூர்த்தம் (ப)
கங்காதரர் (பு)
சகஸ்ரார அமுதம் (யோ)
பாப விமோசனம் (ஆ)
ஆதிப் பெருந்திரு

11. நுண் சிகை
தட்சிணா மூர்த்தம் (பு)
ஞானம் (யோ)
குருத்துவம்

12. கொன்றை மலர்
கற்பகவல்லி (பு)
சாரோப, சாமீப, சாயுச்யம் (ஆ)

13. துடி
தோற்றம் (ஐ)
துடியாடல் (கி)

14. தீயகல்
சங்காரம் (ஐ)
தீ (ப)
எரியாடல் (கி)

15. குழை
சக்தி அம்சம்
பிருகிருதி (பி)
அர்த்தநாரீஸ்வரம் (பு)

16. தோடு
சிவ அம்சம்

17. நீல கண்டம்
அமிர்தம் கடைதல் (பு)
சமன்பாட்டு நிலை (பி)
தீ தகற்றல்
அமரத்வம்

18. காபால மாலை
பிரம்மகர்ப்பக் கழிவு (பி)
யுகாந்தரம் (பி)

19. ஆதிவராகக் கொம்பு
வராகாவதாரம் (பு)
பிரபஞ்ச சமநிலை (பி

20. ஆமை ஓடு
விஷ்ணு அம்சம் (பு)
கூர்மாவதாரம் (பு)
பிரபஞ்சக் காவல் (பி)

21. நரசிம்மரின் குருதித் தோல்
நரசிம்மவதாரம் (பு)
சரபமூர்த்தம் (பு)

22. அபயகரம்
காத்தல் (ஐ)
சுபமூர்த்தம் (ஆ)

23. அரவணி
நாக சக்தி
சீவாத்மா (ஆ)
குண்டலினி (யோ)

24. கைகள்
விராட்புருடத்தன்மை (பு) (பி)
வீர செயற்பாடு மிகுதி

25. தோள்கள்
திரிவிக்ரம நிலை (பு)
திசைகள் (பி)
காற்று (ப)

26. பூநால
நாயகத் தன்மை (ஆ)
வேதாந்தம்

27. உதர பந்தம்
வேக மூர்த்தம் (ஆ)

28. கஜஹஸ்தம்
வீசுகரம்
திருவடி சுட்டல்
இன்ப வழிகாட்டி

(பு) = புராணம்
(யோ) = யோகம்
(ஆ) = ஆகமம்
(ப) = பஞ்ச பூதம்
(ஐ) = ஐந்தொழில்
(பி) = பிரபஞ்ச இயல்



திருச்சிற்றம்பலம்



29. உடல்
ஆகாயம் (ப)
30. புலி உரி
தாருக வனம் (பு)
பிட்சாடனர் (பு)
31. யானை உரி
கஜசம்மாரம் (பு)
மாயாமலம் (ஆ)
32. ஊர்த்துவ மேரு
உலகோற்பத்தி (பி)
பிட்சாடனர் (பு)
துறவு
33. கோவணம்
தூய ஞானம்
34. குஞ்சிதபாதம்
சிதம்பர மகாத்மியம் (பு)
அருளல் (இ)
35. சிலம்பு
வேதங்கள்
கேளா ஒலி (யோ)
36. கழல்
வீரட்டம்
பிறப்பறுத்தல்
பதிநிலை
புருடன்
37. வீர கண்டாமணி
வீரம் (கி)
மந்திரத் திருவுரு
வெற்றி
திறன்
38. ஸ்தித பாதம்
ஊன்றிய திருவடி
காலாந்தகர் (பு)
மறைத்தல் (இ)
பதிநிலை
நிலம் (ப)
வினைப்பயன் ஊட்டல்
39. முயலகன்
கோயிற் புராணம் (பு)
தாருகவனம் (பு)
மும்மலம்
40. திருவாசி
இரண்ய கர்ப்பம் (பி)
பிரபஞ்சம் (பி)
பூரணத்துவம்
41. திருவாசி சுடர்
த்வனி (யோ)
பீஜ மந்திரங்கள் (ஆ)
42. கமலபீடம்
தகராலயம் (யோ)
இதயக் கமலம் (யோ)
சகஸ்ராரம் (யோ)

படம் எண் 9

தரு உலகநாதன்...

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ நடராசத் தத்துவம்

திரு. உலகநாதன்

டாக்டர் வை. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் இளைஞர் நல நெறியாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : ஜூன், 1996

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 80.00

Laser Typeset at : Vishva Computers, Madurai – 625 001
Printed at : Ravi Raja Offset, Madras – 14

45-1



உ

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸமஸ்தானம்

காஞ்சிபுரம்

தலைமை அலுவலகம்: 1, சாலைத் தெரு, பெரிய காஞ்சிபுரம்-631 502.

தேதி: 12.9.94

தில்லையம்பதியை மையமாகக் கொண்டு அண்டசராசரப் பேரியக்கத்தை ஆற்றிவரும் அரும்பெரும் சக்தியின் [illegible]ஸ்வரூபமே ஆனந்த தாண்டவமூர்த்தியாம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திவ்யஸ்வரூபம்.

இம்மூர்த்தியின் சிறப்புகள் அனைத்தையும் சமயம் - சரித்திரம் - இலக்கியம் - கலை முதலான பல கோணங்களில் முழுமையாக விளக்கும் பெருமுயற்சியின் விளைவாகும் 'ஸ்ரீ நடராஜத் தத்துவம்' என்னும் நூலின் பிரதி கண்டு மகிழ்கிறோம்.

மதுரை டாக்டர். வை. தக்ஷிணாமூர்த்தி அவர்களது இவ்வரிய முயற்சி முழுப்பலனையும் அளிப்பதாக முடிவுற அளப்பரிய சக்தி ஸம்பன்னனாம் ஸ்ரீ நடராஜரின் இன்னருள் சுரக்க ஆசிர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதினம்

26வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம் மயிலாடுதுறை (அஞ்சல்) 609 001.

'ஞாலம் நின்புகழே மிகவேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே'

அணிந்துரை

சிவபிரான் கொண்டருளிய மூர்த்தங்கள் பலவற்றுள் தலைமையும், பெருமையும் உடையது நடராசமூர்த்தம். உடலை இயக்கும் இதயத்துடிப்பு போல உலக இயக்கத்திற்கு இப்பெருமானது தாண்டவம் துணை புரிகிறது. பெருமான் இத்திரு நடனத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்தருள்கிறார். ஆதலின் இந்நடனம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனப் பெயர் பெறும்.

இத்தாண்டவத்திற்குரிய சிறப்புத் திருத்தலம் சிதம்பரம் ஆகும். பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுக்காக இந்நடனத்தை நிலவுலகில் பெருமான் தில்லையில் செய்தருளினான் என்பது புராண வரலாறு. தில்லைத் திருமுறைகளும் பிற பாடல்களும் இத்தலத்திற்கே இறைவனது நடனச் சிறப்பு உரியவாதலைக் கூறுகின்றன.

இறைவன் ஆடிய தாண்டவங்கள் சங்கார தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் முதலான நடனங்களைப் புராணங்கள் தெரிவிக்கின்றன. சிவனாடிய பதினோரு வகையான ஆடலைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இத்தகைய பெருமைக்குரிய நடராசப் பெருமான் திருவுருவம் சிவாலயங்கள் அனைத்திலும் விளங்கக் காணலாம். திருமூலர் இறைவனது ஐவகைக் கூத்துக்களின் சிறப்பைத் திருமந்திரத்தில் தெரிவித்துள்ளார்.

தெய்வீகக் கலையழகுமிக்க இத்திருவுருவ அமைப்பையும், சிறப்பையும் தத்துவத்தையும் அனைத்து நாட்டு அறிஞர்களும் வியந்து போற்றுவர். உலகில் பலரும் இத்திருவுருவை விரும்புவதால் பலர் இத்திருவுருவங்களைக் களவு செய்து விற்கும் இழி செயலையும் புரிந்து வருகின்றனர். சைவ நன்மக்கள் தங்கள் வழிபடு கடவுளர்களைப் போற்றிப் பாதுகாக்கக் கடவர்.

ஆடல் வல்ல பெருமானின் சிறப்புகளைப் பலரும் அறிந்துணரும் வண்ணம் டாக்டர். திரு. வை. தக்ஷிணாமூர்த்தி இந்நூலை எழுதியுள்ளார்.

நடராஜ தத்துவம் இந்நூலில் விரிவாக நன்கு ஆராயப் பெற்றுள்ளது.

அன்பர் டாக்டர். வை. தக்ஷிணாமூர்த்தி இந் நற்பணியில் ஈடுபட்டு பண்புரிந்து நலமுடன் வாழவும் அன்பர்கள் இந்நூலைப் படித்துப் பயன் எய்தி இன்புறவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை

சீர்வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி

அவர்கள் குருமாசந்நிதானம்

திருவாவடுதுறை - 609 803 (தஞ்சாவூர் மாவட்டம்)

நாள்: 17.11.94

'நமசிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க'

"வாழ்த்துரை"

பாராட்டுக்குரிய அன்பர் திரு. டாக்டர். வை. தட்சிணாமூர்த்தி அவர்கள் முறையாக, சிறப்புற ஆய்ந்து இயற்றியுள்ள 'ஸ்ரீ நடராசத் தத்துவம்' என்னும் நூலினைப் பார்வையிட்டு மகிழ்ந்தோம்.

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவற்றின் பக்குவத்திற்கு ஏற்ப போகம் யோகம் வேகம் என்னும், மூவகை திருவடிவங்களைத் தாங்கிவந்து அவற்றை ஆட்கொள்கிறான். இம்மூவகை திருவடிவங்களைத் தன்னுள் அடக்கி மேலான மூர்த்தியாகக் திகழ்ந்தருள்பவர் நடராசப்பெருமான். ஐந்தொழில்களோடு ஞானமயமான சிதாகாசத்தின் இயல்பினையும் அறிவித்தருளும் மேன்மையானது நடராச மூர்த்தம்.

சிவதாண்டவ மூர்த்தங்களின் தொன்மை, வளர்ச்சிநிலை, நடராசர் திருவடிவத் தத்துவம், சிவநெறி பரவியுள்ள இடங்களிலெல்லாம் நடனப்பெருமான் வழிபாடு நிலவுதல், தில்லைத் திருத்தல சித்சபை சார்ந்த பகுதிகளின் தத்தவ விளக்கம், திருவைந்தெழுத்தின் சிறப்பு முதலிய அறிந்து பயன்கொள்ள வேண்டிய பல அரிய செய்திகள் இந்நூலின் சிறந்த விளக்கம் பெற்றுள்ளமை போற்றற்குரியது.

திருவருள் துணையுடன் ஆசிரியர் மேற்கொண்ட நீண்டநாள் ஆய்வின் சிறந்த பயனாக மலரும் இந்நூல் பெருமான் இன்னருள்போல இன்பம் பெருக்கவும் ஆசிரியரின் பணி சிறந்து உலகு உயர்பயன் கொள்ளவும் அருள அருளதரு ஞானமா நடராசப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கிறோம்.

'ஓம்'

நியூயார்க்
3.10.1994

முன்னுரை

பேராசிரியர் டாக்டர். தட்சிணாமூர்த்தி அவர்கள் பல வருடங்களாக பொறுமையுடனும் பொறுப்புடனும் நடராச சிவ தத்துவங்கள் பற்றி சேகரித்துள்ள உண்மைகளை, சுருக்கத்திலும் சுருக்கமாக இப்புத்தகத்தில் தந்துள்ளார்கள். படிக்கும் போதெல்லாம் அரிய பெரிய தத்துவங்களை அறிந்து கொள்கின்றோம். மூழ்கும் போதெல்லாம் கைநிறைய முத்துக்களுடன் மேல் வருகின்றோம்.

புத்தகங்கள் பலமுறை படிப்பதற்கு தகுதி பெறுவது இலகுவல்ல. சில புத்தகங்கள் படிக்க படிக்க பயன் அளிக்கும். இப்புத்தகமோ வாழ்நாள் முழுதும் சாதனையில் முன்னேற எளிய முறையில் தினமும் எடுத்துச் சொல்லும் நண்பனாக ஏன் குருவாக அமைந்திருக்கிறது.

ஆகாயமே ஆண்டவனின் உருவமற்ற உருவம். ஏகாந்த வெளிக்குள் இருக்கும் வேதாந்த வித்தகனே' என அகத்திய முனிவர் நாடிச்சுவடியில் வர்ணித்திருக்கிறார்.

அகில பிரமாண்டமான அண்டங்களும் எவ்வளவோ கோடி சூர்ய சந்திர கிரகங்களும் ஒன்றோடொன்று மோதாமல் எவ்வளவோ வேகத்தில் சுழல வேண்டிய அளவு வெட்ட வெளியை (Empty Space) ஆண்டவன் அமைத்து இயற்கைச் சட்டங்களுள் நடத்தி வருகிறார். இது எவ்வளவு மகத்தான செயல் என்று வரையறுக்க இயலாது. கால் பந்து சிறிதாயினும் அதை விளையாடும் பொழுது எவ்வளவு பெரிய விளையாட்டு மைதானம் வேண்டி இருக்கிறது என்று நினைத்து பார்க்கும் பொழுது வெட்ட வெளியின் சிருஷ்டியின் பெருமை விளங்கும்.

சிவன் பூதங்களாக மண், நீர், அக்னி, வாயு, என்றும் அவை எல்லாம் தோன்றும் சூட்சும ஆகாயமாயும் விளக்குகிறார். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு அணுவையும் அவரது நடனத்தால் அசைத்து ஆட்டி வருகிறார். சிவ தத்துவங்களில் தலைசிறந்த நடராச தத்துவத்தை எவ்வளவோ ஆதாரங்களுடன் விளக்கித் தருவதோடு சரித்திரத்தில் நடராசர் வழிபாடு வளர்ந்த முறையும் ஆசிரியர் எழுதி இருக்கிறார்.

பேராசிரியர் டாக்டர். வை. தட்சிணாமூர்த்தி ஏற்றி வைத்துள்ள தீபம் என்றும் பிரகாசித்து பக்தர்கள் உள்ளங்களில் எங்கெங்கும் நடராசர் வழிபாடு துவங்கி பெருகி வளர்ந்தோங்க பிரார்த்திக்கின்றேன்.

டாக்டர் அழகப்ப அழகப்பன்
தலைவர்
இந்து திருக்கோவில் சபை.

ஸ்ரீ நடராச தத்துவம்

சிவதாண்டவ மூர்த்தங்களின் வளர்ச்சியும் தத்துவமும்

முன்னுரை

தொடக்கம்

எனது ஸ்ரீ நடராசத் தத்துவ ஆய்வு 1962இல் 'தித்திக்கும் திருவைந்தெழுத்து' என்ற செந்தமிழ்ச் செய்தி கட்டுரையில் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, உலெகெங்கணும் பரவிய சைவம், நடராசத் தத்துவம், ஆகமங்கள் நவிலும் எழுவகைத் தாண்டவங்கள், சிற்பரத்தினம் போற்றும் ஒன்பது மூர்த்தங்கள், நாட்டிய சாத்திரத்தில் நடனங்கள், பரத சேனாபதீயம் நவிலும் திருக்கூத்துக்கள், தில்லைத் திருநடம், கூத்தநூல் புகலும் திருக்கூத்துக்கள், புராணங்கள் போற்றும் திருக்கூத்துக்கள் என்ற பல ஆய்வுக் கட்டுரைகளாகப் பல இதழ்களிலும், மலர்களிலும் வெளி வந்தன.

இனிய கல்வி

மஹ்மூதுபந்தர் என வழங்கும் பரங்கிப்பேட்டை என்ற ஊரில் எனது தாய்மாமன் அமரர் மலைப்பெருமாள் அவர்களின் அமிர்த விலாச அச்சகத்துக்கு, இஸ்லாமிய ஆசுகவி ஒருவர் வருவார். தன் நெஞ்சில் குறுக்கும், நடராசரின் திருப்பெயரைக் கூறி நடராஜமயம் எனக் கூறி பெருமைப்படுவார். 1946இல் பதினைந்தாவது வயதில் இந்நிகழ்ச்சி என் மனதில் நடராச வித்தினை ஊன்றியது. எனது தாய்வழிப் பாட்டி அமிர்தத்தம்மாள் அவர்கள், சிதம்பரம் திருக்கோவிலுக்குப் பன்முறையும் கோலமிட்டு அலகிட்டுத் திருதொண்டு செய்தவர்கள். தில்லைக் கோவில் வழிபாடுகள், திருக்கோவில் யானையின் மறைவு, திருவிழாக்கள் பற்றிய பல நுணுக்கச் செய்திகளைக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் கூறி வந்ததுண்டு. அவர்கள் இராமலிங்க அடிகளார் அவர்கள் தம் வீட்டுவழி இளமையாக்கினார் கோவிலுக்குச் செல்வதை நாள்தோறும் கண்டவர்.

ஆய்வின் கரு:

சிவதாண்டவ மூர்த்தங்களின் ஆத்மக, தெய்வத, பௌதிகத் தத்துவங்களை, சமய நூல்களாய சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணங்கள் முதலியவற்றின் வழி ஆய்வதே இவ்வாய்வின் குறிக்கோள்.

சிவதாண்டவ மூர்த்தங்களின் அக தரிசன, ஒலி, ஒளி வைபவமான யோகக் காட்சிகள், பக்தர்களின் சேவா தரிசனங்கள், ஆங்கிக அபிநய உறுப்புகளாய கரம், சிரம் முதலியவற்றின் வழி உணர்த்தப்படும், தத்துவ உருவகப் பொருண்மை, திருவைந்தெழுத்தாய மந்திரத்தின் நுண்பொருளாய் அமையும், சிவ தாண்டவ மோன தரிசனக் காட்சிகள் முதலியன ஆய்வின் கருப்பொருள்களாய் அமைகின்றன.

சிதம்பர ரகசியம் என்ற சொல், சிதம்பரத்தின் பெருமையைக் குறைப்பது போல் கேலிக் கூத்தாகச் சிலரால் ஆளப்படுவதுண்டு. ஆனால் ஸ்ரீசிதம்பர ரகஸ்ய நுணுக்கங்களைப் பத்தி அனுபவத்தோடு ஆய்வு செய்கையில் அதன் பெருமையும், நம் பாரத நாட்டின் சமய நுண் தத்துவங்களின் பெருமையும், நமது இந்து சமய நுண் தத்துவங்களின் பெருமையும், நமது நாட்டின் நீண்ட

தொன்மை மூல அறிவின் அறிவியல் பூர்வமான சமயக் கொள்கைகளின் மிக்குயர்ந்த சிறப்புக்களும் வெள்ளிடை மலையாகின்றன.

இந்து சைவ சமய உருவ வழிபாடு ஓர் உயர்நிலையது. இவ்வுயர் நிலையின் உச்ச நிலை ஸ்ரீ ஆனந்த நடராசராச வழிபாடு, சைவம் பரவிய இடமெல்லாம் பரவியது.

ஆய்வின் எல்லை :

டாக்டர் சிவராமமூர்த்தி அவர்களின், "கலை, சிந்தனை, இலக்கியங்களில் நடராசர்" என்ற நூலில் அதிக எண்ணிக்கையில் சிவதாண்டவ மூர்த்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சிவதாண்டவ மூர்த்தங்களின் உயர் தத்துவ நிலையான ஆனந்த தாண்டவம் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் முகிழ்க்கின்றது. இதனை எல்லையாக வைத்து, சிந்துவெளி நாகரிகக் காலம் தொடர்ந்து, கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை அமையும் கால எல்லையினை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்ய, அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கால எல்லைக்குள் அமைந்த, டாக்டர் சிவராமமூர்த்தி அவர்களின் நூலில் வெளியிடப்பட்டுள்ள சிற்பப் படங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை :

சமய உண்மைகள், மூன்றாவது கண், நான்காவது பரிமாணம் முதலிய தொலை நோக்குடைய, கால தூர எல்லைகளைக் கடந்த ஞானிகளால் தெய்வீக அனுபவங்களின் விளைவாக, வெளிப்படுத்தப்பட்டவை என்பதும், பௌதிகப் பகுப்பாய்வு எல்லைக்குள் அடங்காத பிரபஞ்ச இயல் நுணுக்கங்கள் அமைந்தவை என்பதும் சிவ தாண்டவ ஆய்வில் கருதத்தக்கன. சமய ஆன்மிக அறிவு, பௌதிக விஞ்ஞான அறிவுக்கு மேற்பட்ட ஆன்மிக பிரபஞ்ச இயல் விஞ்ஞானம் என்பது துணிவு.

இவண், சிவதாண்டவ மூர்த்தங்களின், ஆங்கிக நிலைகள், அவற்றின் பின்னணியான தத்துவங்களோடு, இணைத்து விளக்கப்படுகின்றன.

சிவதாண்டவத் திருவுருவங்களின் தோற்றமும் வளர்ச்சியும், தத்துவங்களின் வளர்ச்சியும், வரலாற்று முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

யோக தரிசன, அநாகத, சகஸ்ரார, ஒலி, ஒளி, நடன தரிசனங்கள், லயநிலைகள், பிரபஞ்ச இயல் தத்துவங்கள் முதலியன பகுத்தும் தொகுத்தும் விளக்கப்படுகின்றன.

திருக்கோவில்களில், சிற்பக் காட்சிகள், சிதம்பர நிலைகளான சித்சபை தத்துவம் முதலியன கள ஆய்வு முறையில் தலங்கள் பல சென்று ஞானியரைக் கண்டும், வழிபாடு செய்து கேட்டும் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வின் பகுப்பும் செய்தியும் :

ஆய்வு, 'அஷ்டாஷ்ட மூர்த்தங்களும், சிவதாண்டவ மூர்த்தங்களும்', நூற்றாண்டுகளில் சிவதாண்டவச் செய்தி வளர்ச்சி, 'சிவதாண்டவ மூர்த்தங்களின் தத்துவம்', 'சிவதாண்டவ வழிபாட்டு முறைகளின் தத்துவச் சிறப்புக்கள்' என்ற நான்கு கட்டுரைகளாக அமைகின்றது. திருவருட்பிரகாச வள்ளலாரின் அனுபவம் ஐந்தாவது கட்டுரையாக பிற்சேர்க்கையாக அமைகின்றது.

'அஷ்டாஷ்ட மூர்த்தங்களும் சிவதாண்டவ மூர்த்தங்களும்' என்ற கட்டுரையில், நவந்தரு பேத நிலையில், மூர்த்தங்கட்குரிய வளர்ச்சி, அவண் சிவதாண்டவத்துக்குரிய இடம், தாண்டவத் திருவுருவங்களின் பெயர்கள் முதலியன குறிப்பிடப்படுகின்றன.

சிவதாண்டவ மூர்த்தங்களின் தத்துவம் என்ற கட்டுரையில், ஆறாதார ஒலி வைபவம், த்வனி நிலை, மாயையை அகற்றும் மரபுகள், பரப்பிரம்ம உபநிடதத் தத்துவம், நவந்தரு பேத உருவ நிலையில் மூவகை நிலை, முப்பொருளாயும் ஐம்பூதங்களாகவும் நாற்பொருளாகவும், ஐந்தொழில் நிலைகளிலும் நடராசத் தத்துவம் செயற்படும் முறைகள், வேத நூல்கள் காட்டும் அட்ட மூர்த்த நிலைகள், புராணங்கள் போற்றும் அட்ட வீரட்ட மாயா சம்மார நிலைகள், யோகம் காட்டும் சந்தியா, ஆனந்த ஊர்த்துவதாண்டவத் தத்துவங்கள் சிவசக்தி, சிவ சீவ லய நிலைகள், பிரபஞ்ச இயல் சிருஷ்டி லயக்கிரமத் தத்துவங்கள், ஞான ஊன ஊர்த்துவ நடராச அம்சங்கள், ஆனந்த நிலை முதலியன ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

'சிவதாண்டவ வழிபாட்டு முறைகளின் தத்துவச் சிறப்புகள்' என்ற கட்டுரையில், சிவதாண்டவத்தின் யோக உட்கிடை யோக நெறியின் பகுதியான சிதம்பர தரிசனம் காணும் தகரவித்தை, வழிபாட்டின் போது, ஓதும் திருவைந்தெழுத்துக்கும் திருக்கூத்துக்கும், சைவ மரபுகட்கும் இடையே அமையும் நுண் தொடர்புகள், சிவதாண்டவச் சிறப்புத் தலமாய தில்லை, சிறப்புத் தானமாய சித்சபை முதலியவற்றின் தத்துவ நிலைகள், சிதம்பர ஸ்ரீரகஸ்யத்தானமே நடராச வைபவம் என்னும் தத்துவ நுண்மை, ஸ்ரீரகஸ்யத்தில் வரையப்பட்டிருக்கும் ஸ்ரீசக்கரத்துக்கும் தாண்டவ லயநிலைக்கும் அமைந்த தொடர்பு முதலியன சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. நடராச வழிபாட்டைப் பொருத்தவரை, தில்லைத்தானம், சிதம்பரத் தலம், சித்சபை, ஸ்ரீரகஸ்யம் முதலியன ஒன்றோடொன்று பிரியாத் தொடர்புடையவை.

'நூற்றாண்டுகளில் சிவதாண்டவச் செய்தி வளர்ச்சி' என்ற கட்டுரையில், இந்தியாவெங்கணும் சிவதாண்டவ உருவ வழிபாடும், தத்துவ வளர்ச்சியும், ஒவ்வொரு நூற்றாண்டிலும், வரலாற்று முறையில், வளர்ந்த செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. சிவதாண்டவ வழிபாட்டுக் கருவின் தொன்மையும், சிதம்பரவழிபாட்டின் தொன்மையும், ஆனந்த தாண்டவத் திருவுருவின் வளர்ச்சிக்கான கால எல்லையும், அனைத்திந்திய நிலையில் நடராச வழிபாட்டுக்குக் கிடைத்துள்ள முதன்மைத் தொடர்புகளும் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன. ஆனந்த தாண்டவத் திருவுரு, சகல தெய்வ உருவங்களின் சங்கம உயர்நிலை என்பது இவண் உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆய்வு முடிவுகள் :

சிவதாண்டவ மூர்த்தங்கள், அட்டமூர்த்தம், நடன வழிபாடு, அட்ட வீரட்டம் முதலிய தொடர்புகளோடு தொடங்கி, தாண்டவ மூர்த்தங்களாக ஒளிர்ந்துள்ளன. இத்தாண்டவ மூர்த்தங்கள், வீரட்டத் தாண்டவங்கள், பரத வகைத் தாண்டவங்கள், சகித வகை மங்கள மூர்த்தத் தாண்டவங்கள்

என்றெல்லாம் வளர்ந்து, சக்தி வழிபாடும், தாந்திரிக வழிபாடும் ஓங்கிய காலத்தில் ஆனந்த தாண்டவமாகவும், ஸ்ரீரகஸ்யமாகவும் லயமடைந்துள்ளன.

ஆனந்த தாண்டவ வழிபாடு முழுவதும் யோக வழிப்பட்டது. சித்சபை யோக வழிபாட்டு மையமாக அமைந்து, பிற்காலத்தில் வேத ஆகம வழிபாட்டுத் தலமாக வளர்ந்துள்ளது. இன்றும் சிதம்பரம் சித்சபை அமைப்பு யோக ஆறாதார வழிபாட்டுத் தன்மைக்கான சான்றுகளைக் கொண்டுள்ளது.

சிவதாண்டவ உருவங்கள் ஒரு இயக்க உருவ அமைப்புடையன. ஆனந்த தாண்டவத் திருவுரு நவந்தரு பேதத்துக்கு மேல், மேநிலையாக, பரதாண்டவ, கருத்தா, தன்மையுடையது. ஆனந்த தாண்டவத்துள்ளும், சித்சபை ஆனந்த தாண்டவர் நடராசராசர் என்ற உயர்தன்மைக்குரியவர், சைவ மரபில் கூறப்படும் இறைத் தத்துவம் பிரபஞ்ச இயல், சிவ சீவ ஐக்கியம் முதலிய அனைத்துத் தத்துவங்கட்கும், மாயா காரிய வெற்றிக்கும் ஒரு இயங்கு நிலை உருவமாக இது அமைகின்றது. உருத்திரனின் வீர வேகம், புத்த பகவானின் சாந்தம், திருமாலின் புன்முறுவல், முதலிய அனைத்தும் இயைந்த, சார்ந்த, இயக்க அனவரத தாண்டவ உருவம் இது. அடிக்கீழ் முயலகனையும் முறுவலிக்க வைத்து, திருவடிக்கண் அமுத்தி சாந்தமாக, வீரட்டம் காட்டும், சிறப்பு யோக மேநிலை, ஆனந்த நடராசரது என்பது முடிவு.

சான்றோர் கேண்மை

நூல்களைப் படித்த அளவில் தத்துவ ஐயங்கள் ஏற்பட்ட பொழுது திருப்பராய்த்துறை தவ முனிவர் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் நுணுக்கங்களை விளக்கி இடைவெளிகளைக் குறைத்தார்கள். யோக வைபவமும், நடராசத் தத்துவமும் பற்றி எழுந்த ஐயங்களை ரிஷிகேசம் ஸ்ரீ சிவானந்த ஆசிரமச் செயலர் பனிப்புலி சுவாமி கிருஷ்ணானந்த மகராஜ் அவர்கள் போக்கி வழிப்படுத்தினார்கள். உபநிடத மந்திரங்கட்கும் நடராசத் தத்துவத்துக்கும், உள்ள தொடர்பினைப் புரியமுடியாது தவித்து வேண்டி பிரசாந்தி நிலையம் சென்ற போது பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்களின் விஜயதசமிச் சொற்பொழிவு எனக்காகவே சொற்பொழிவு செய்தது போன்று அமைந்து ஐயங்கள் தெளிந்தன.

பேரறிஞர்கள் அமரர்கள் டாக்டர் தெ.பொ.மீ. அறிஞர் தண்டபாணி தேசிகர், அறிஞர் மு. அருணாசலம், பழனி பேராசிரியர் இராமச்சந்திரன் தில்லை முதியவர் இராமலிங்க தீட்சிதர், முதலியோரின் இனிய கருத்துக்கள் வழிகாட்டின. தில்லை மௌன சுவாமி மட அதிபர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பன்முறையும் திருக்கோயில் நிலைகட்கு அழைத்துசென்று நேரடி அறிவு பெற உதவினார்கள்.

திருவாரூர் திருக்கோவில் ஓவியத்தினை காந்தி மன்றப் பெரியவர் ஈ. முத்துராமலிங்கம் அவர்கள் படி எடுத்து அனுப்பினார்கள். ஆய்வுத் துறை சான்றோர் அறிஞர் சௌந்திரராசன் அவர்கள் தன் கருத்துக்களை நவின்றதோடு, தாந்திரிகக் குடும்பத்தை சேர்ந்த அதே துறை முதிய அதிகாரி டாக்டர் மிஸ்ரா அவர்களையும் ஆற்றுப்படுத்தினார்கள். திருச்சி தொல் பொருள் நிபுணர். திரு. கே.ஆர்.சீனிவாசன் அவர்கள் திருவாலீசுவரம் முதன்மை பற்றிக் கூறினார்கள். சென்னைப் பல்கலைக்கழகத் தொல்

பொருள் துறைப் பேராசிரியர் கே.வி. இராமன் அவர்கள் வரலாற்று அமைதிகள் பலவற்றிற்கு வழிகாட்டினார்கள்.

ஸ்ரீ நடராசத் தத்துவ ஆய்வுக்கு மனித முயற்சிக்கு மேல் தெய்வானுக்ரகத்தால் எதிர்பாராத வகையாக அரிய மிகப் பழைய நூல்கள் சில கிடைத்தன. தேவகோட்டை தொன்மை சைவ வளர்ச்சி சங்கச் செட்டியார் மரபினர் பௌஷ்கரபாஷ்யம், சைவ வேதாந்தம், தேவாரம் வேதசாரம், முதலிய மிக அரிய நூல்கள் உதவினார்கள்.

யோக உட்கிடையினை அறிவதற்குத் திருவாரூர் இல்லற யோகி ரத்தின சபாபதிப்பிள்ளையின் திருவாசகமும் சிவராஜ யோகமும் என்ற நூலும், ஸ்ரீசுந்தர மாணிக்க யோகீசுவரரின் திருவாசக உண்மை விளக்க உரையும், வடலூர், இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவும் துணை நின்றன. சோளங்கிபுரம், ஸ்ரீலஸ்ரீ. சிவ அருணகிரி முதலியார் அவர்களின் ப்ரணவ வித்யா பரிமளம் என்னும் ஓங்கார விளக்கம் என்ற நூல் திருவைந்தெழுத்தின் நுணுக்கங்களை அறிய உதவியது.

நேரிற் காணல் - களப்பணி

சிற்பங்களை நேரிற் காணவும், தத்துவ நுண்மைகளைக் கேட்டறியவும் ஏதேனும் குறிப்புகள் கிடைக்காதா என்று அலைந்த அலைச்சல் மிகுதி. ஐந்து சபைகள் அமைந்த தலங்களில் திருவாலங்காடு நீங்கலாகப் பிற நான்கிற்கும், உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறை, திருவாரூர், காஞ்சி ஆய தத்துவத் தலங்கட்கும், அனைத்து சப்த விடங்கத் தலங்கட்கும், வரலாற்றுச் சிறப்பமைந்த கோனேரி ராசபுரம் தஞ்சை, தருமபுரம், திருவாவடுதுறை, திருவாலீசுவரம, திருமுதுகுன்றம், தாராபுரம், மாமல்லபுரம், திருவண்ணாமலை, கங்கை கொண்ட சோழபுரம், பேரூர், போரூர், நல்லூர், ஆச்சாள்புரம், திருவான்மியூர், திருப்புத்தூர், திருவேடகம், திருவாரூர், சீர்காழி, வைத்தீசுவரன் கோவில், தரங்கம்பாடி, குளித்தலை, திருவையாறு, வேலூர் போன்ற பல தமிழகத் தலங்கட்கும், வடநாட்டுத் தலங்களுள் சிறப்பமைந்த உஜ்ஜயினி, திரியம்பகம், ஓம்காரேஸ்வரம், கொனாரக், புவனேஸ்வரம், முதலிய சைவத் தலங்கட்கும், தென்னகத்தின் காளத்தி, திருச்சூர், ஹளபேடு, பேலூர் முதலிய தொன்மைத் தலங்கட்கும் எலிபென்டா, எல்லோரா, குகைக் கோவில்கட்கும், தஞ்சைசரசுவதி மகால் நூலகம், புதுவை இந்தாலாஜி இன்ஸ்டியூட்டின் நூலகம், அண்ணாமலைப் பல்கலைக் கழக நூலகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம், மதுரை தமிழகச் செய்தித் துறை நூலகம், திருவாவடுதுரை ஆதீன நூலகம், திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்க நூலகம், தேவகோட்டை சைவ சித்தாந்த சபை செட்டியார் நூலகம், சென்னை, டில்லி, கல்கத்தா, பம்பாய் மாநில நூலகங்கட்கும், பொருட்காட்சிச் சாலைகட்கும் சென்று பல செய்திகளைச் சேகரம் செய்யும் அருள் வாய்ப்பு கிட்டியது.

ஓவிய விளக்கங்கள்

1908இல் திருப்பரங்குன்றம் செந்தில்நாதையர் அவர்கள், வைதீக சித்தாத்துவித, சைவ சித்தாந்த தத்துவப்பட வினாவிடை என்ற நூலினை வெளியிட்டார்கள்.

கொரடாச்சேரி, பஞ்சாட்சரபுரத்தில் திருமடம் நிறுவி தொண்டாற்றி வந்த தருமையாதீனத் தொடர்பு ஸ்ரீ வாலாயானந்த சுவாமிகள்

சைவசித்தாந்தத்தைப் படமாக வரைந்து 1930இல் இரு நூல்களாக வெளியிட்டார்கள். ஸ்ரீ வாலாயானந்த சுவாமிகள் தத்துவங்களனைத்தையும் வண்ண ஓவியங்களாக்கி, வண்ணச் சிலைடுகளாகக் காட்டி ஊர்தோறும் சமய தத்துவ விளக்கப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று வேணவா கொண்டிருந்தார்கள். அவர்களது திருவிருப்பம் நிறைவேறும் வண்ணம், ஸ்ரீ நடராசத் தத்துவத்தை மையமாகக் கொண்டு, அறுபத்து நான்கு வண்ண ஓவியங்களும், நான்கு வரை படங்களும் தயாரித்தேன். தத்துவத்தின் மிக இன்றியமையாத உயிர்த் தத்துவம், உயிர்களின் நிலை, மாயையின் செயல், இவற்றின் தொடர்புகளான குறிப்புக்களனைத்தையும் வரை ஓவியங்களாக்க சற்றேறக் குறைய முன்னூறு படங்கட்கான குறிப்புகள் எழுதி வைத்துள்ளேன். அவை யாவும் ஓவர் ஹெட் புரொஜக்டர் சிலைடுக்களாகக் கையால் எழுதப்பட்டு சில சொற்பொழிகளின் போது பயன்படுத்தி வருகின்றேன். இந்நூலில் சில வரை ஓவியங்கள் மட்டும் கருப்பு வெள்ளையில் வெளியிடப்பட்டுள்ளன. நிதி வசதி கிடைப்பின் புரவலர்கள் கிடைப்பின் இவ்வரிய பணியினை இறைவன் திருவடிப்பேறு பெறும் முன் செய்து முடிக்க இயலும்.

அவன் அருளால்

ஆருத்திரா தரிசனத்தன்று. தில்லை மூலட்டானேசுவரர் வடக்குத் திருச்சுற்றில் மேற்கு மூலையில் பதஞ்சலி லியாக்ரபாதர் இருந்து தவமியற்றியதாகக் கூறப்படும் இடத்தில் இருந்து சிலமணி நேரம் தியானம் செய்து தரிசனம் கண்டு ஸ்ரீ மௌன சுவாமி மடத்தில் அன்று நண்பகல் சிறப்பு வழிபாடு செய்து அவன் தாள் வணங்கி அவனருளால் ஆய்வுக் கட்டுரை எழுதத் தொடங்கப் பெற்றது.

ஆய்வுப் பட்டம்

என்னுடைய நீண்ட ஆய்வின் கருவான சில புதிய ஆய்வுகளை ஆய்வுப் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 27-12-1989 அன்று அளித்து 1991இல் பி.எச்.டி பட்டம் பெற்றேன். எனது ஒரு சாலைப் பேராசிரியரும், நண்பருமாய பேராசிரியர் டாக்டர். கோ. விஜயவேணு கோபால் அவர்கள் எனக்கு வழிகாட்டியாக உதவி வரலாற்று நோக்கில் என் ஆய்வினை வழிப்படுத்தினார்கள்.

ஆய்வுச் சொற்பொழிவு

ஸ்ரீ நடராஜத் தத்துவத்தை சிவனருள், நடராசத் தத்துவம், தத்துவ வளர்ச்சி, சிதம்பர ரகசியம் பரமாணுத் தத்துவம் என்ற ஐந்து தலைப்புகளில் திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் 1993 மார்ச் 26, 27, 28 மூன்று நாட்களில் சொற்பொழிவாற்ற ஏற்பாடாகியது.

தொண்டுகள் சில

நூல்களின் வரைந்த குறிப்புக்களைப் படி எடுப்பதிலும், தட்டச்சு செய்வதிலும் செல்வி கே. சுடர்வழி, செல்வி. பிரபா, செல்வி. சுப்புலட்சுமி, திருமதி. யோ. இளவரசி, திருமதி. சியாமளா கோபாலகிருட்டிணன், திருவாளர் வாலாந்தார் முதலியோர் உதவினர். அச்சுப்படி ஒத்துப் பார்க்கையில் செல்வி பெ. உமாமகேசுவரி அவர்களும் உதவினார்கள்.

புகைப்படங்கள் செப்பம் செய்வதில் பல்கலைக் கழக இளைஞர் நலத்துறை புகைப்படக் கலைஞர் திரு. ஜோதிவேல் அவர்களின் தொண்டு குறிப்பிடத்தக்கது. குடந்தை ஓவியக் கல்லூரி மாணவர்களான வலங்கைமான் திரு. இராசசேகர், சேலம் காவேரிப்பட்டி, திரு. விஜயகுமார் மதுரை திரு. நாகசுந்தரம், மதுரை கோவில் ஓவியர் செண்பகம் முதலியோர் உடனிருந்து வண்ண ஓவியங்கள் வரைந்து உதவினார்.

நூலில் வரலாறு வழிபாடு, தத்துவம் போன்ற தலைப்புகளில் கருத்துக்கள் வரும்போது, கருத்துத் தெளிவுக்காக சில அடிப்படைக் கருத்துக்கள் இடம் நோக்கி சிற்சில இடங்களில் அரிதாக மீண்டும் கூறப்படுகின்றன. கணிதம் போன்றும் அறிவியல் விளக்கம் போன்றும் அமையும் பகுதிகளை மீண்டும், மீண்டும் படிப்பது ஐயங்களைத் திரிபுகளைக் குறைக்க உதவும்.

செய்யத் தகு பணிகள்

ஸ்ரீ நடராசத் தத்துவம் பற்றி, ஐநூறுக்கு மேற்பட்ட நூல்களைப் படித்து நானூற்று நாற்பத்தேழு தலைப்புகளில் ஆய்ந்து எடுத்த குறிப்புக்களில் கால் பகுதிக்குக் குறைவாகத் தான் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நிதி வசதி கிடைத்தால் பிற பகுதிகளைக் கட்டுரைகளாக்க இயலும் அரிய கட்டுரைகள் நூல்களின் படிகள் சேகரித்து வைத்துள்ளேன். பெரும்பான்மையான சிவதாண்டவ மூர்த்தங்களின் சிற்பங்கள், ஓவியங்கள் கருப்பு, வெள்ளை சிலைடுகளாகச் செய்து வைத்துள்ளேன். இப்பொருள் பற்றிய நானூற்று தொண்ணூற்று ஒரு நூல்கள், கட்டுரைகள் பற்றிய பட்டியொன்று உள்ளது. திருமந்திரம் முக்கிய பகுதிகளின் பொருளடைவும், உரைவளமும் செப்பம் செய்து வைத்துள்ளேன்.

சமயத்துறையில் ஆய்வு செய்வது, எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு இலக்கணமாக ஆய்வு செய்து எல்லாக் குறிப்புகளும் சேகரித்து எதிர்கால மேலாய்வுக்காகச் சேமித்து வைத்துள்ளேன். சதுர்துரியம் ஆகமங்கள், உபநிடதங்கள் திருப்புகழ், தாயுமானவர் பாடல்கள், திருமுறைகள், திருவருட்பா, தாந்திரிக நூல்கள் முதலியனவற்றிலிருந்து சேகரிக்க் வேண்டியவை நிறைய உள. சம்ஸ்கிருத அறிவு, ஆய்வு உதவியாளர்கள் முதலியன அமையின் எவ்வளவோ அரிய தத்துவ ஞானங்களை வெளிக் கொணரலாம்.

புரவலர்கள் ஆய்வாளர்கள் கிடைப்பின் இவ்வரிய ஞானதானத்துக்கு வயதான நான் என்றும் சித்தமாகவுள்ளேன். சமஸ்கிருத மறைநூல்கள் திருமுறை, ஆகம சிற்ப சாத்திரங்கள் பௌத்த ஞானம் முதலியன அறிந்த புலவர்கள் ஒன்றாக அமர்ந்து ஆய்வு செய்ய நிறைய செய்திகள் உள.

திருச்சிற்றம்பலம்

'தமிழகம்',
வெள்ளைப் பிள்ளையார் கோவில் தெரு,
சோமசுந்தரம் குடியிருப்பு
மதுரை - 625 016.

வை. தட்சிணாமூர்த்தி,
25-8-94

உ


திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ நடராசத் தத்துவம்

சிவ தாண்டவ மூர்த்தங்களின் வளர்ச்சியும் தத்துவமும்

உள்ளுறை

HS - 1



A rare sculpture depicting Lord Nataraja balancing on his left leg. This variation from his usual form of dancing was performed at the Velliambalam at Madurai temple to please his devotee, King Rajasekara.

நூலாசிரியர் நன்றியுரை

"ஸ்ரீ நடராசத் தத்துவம்" ஆய்வு நூலினை, எம்மானின் முடியில் வாழும் கங்கையாகிய வான் நதியின் திருப்பெயரினைத் தாங்கிய வானதி பதிப்பக உரிமையாளர், தொண்டாலும், உள்ளத்தாலும் உயர்ந்தோங்கியவரும் ஸ்ரீ காஞ்சி மகானின் நல்லாசியினைப் பன்முறையும் பெற்றவருமான உயர்திரு வானதி திருநாவுக்கரசு அவர்கள் அழகுற அச்சேற்றி வெளியிட்டுள்ளமைக்கு எனது நன்றி.

அணிந்துரை அருளிய சான்றோார், அழகப்பரும், முனிவர் மூவர் மற்றும் இந்நூலில் ஆர்வம் காட்டிய ஸ்ரீ மீனாட்சி நாடி சோதிடர் பேராசிரியர் குருந்தப்ப தேசிக சுவாமிகள் முதலியோர்க்கும் நன்றி.

அமரர் கோ. வரதராசப் பிள்ளை வெளியிட்ட திருவம்பலச் சக்கரம் இருநூற்று அறுபத்து மூன்றாம் பக்கத்திலும் திருவாவடுதுறை ஆதீனத் திருவம்பலச் சக்கரம் இருநூற்று அறுபத்து ஒன்பதாம் பக்கத்திலும் வெளியிடப் பட்டுள்ளது.

எனக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானம் நூல் வெளியீட்டுக்காக 15,000 வெண் பொற்காசுகள் மான்யமாக வழங்கியுள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாக ஒத்துழைத்த அனைவர்க்கும் நன்றி.

வை. தட்சிணாமூர்த்தி

T.N. Bhaganathan ..



உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ நடராசத் தத்துவம்

1.00 அஷ்டாஷ்ட மூர்த்தங்களும் சிவதாண்டவ மூர்த்தங்களும்

.01 உலகு புகழ் உயர்நிலை

திருஉலகநாதன்

இந்திய நடராசச் சிற்பமும், போதி முனிவரின் சிற்பமும், உலகெங்கணும், போற்றப்படும், தத்துவக் கலைப் பொருள்களாக அமைந்து விட்டன. இது கலை அம்சம் மிஞ்சியதின் விளைவு. அக்கலை அம்சத்துக்குள்ளே, பன்னூறு ஆண்டுகள் வளர்ந்த இந்தியத் தத்துவங்கள் நுணுக்க மாய் அமைந்துள்ளன. இந்தியாவில், சமயநெறியும். தத்துவமும், சிற்பக்கலையும் அறிந்த. சிற்பிகளும் ரிஷிகளும், இருந்தனர். அவர்கள் ஆக்கிய உருவகச் சிற்பங்களில், ஞானமும், கலையும், பக்தி மரபும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.


.02 தெய்விக அகவுணர்வுகள்

தெய்வச் சிற்பங்களை வடிக்கையில் இந்தியச் சிற்பிகளும் ரிஷிகளும், தெய்விக அகவுணர்களை. பய பக்தியோடு ஆங்கிகாபிநயங்க ளாக்கிச் சிற்பங்களை வடித்து. அவற்றைத் திருக்கோவில்களில் விளங்கச் செய்தனர். தெய்வாம்சங்களாகிய தேவதரிசனக் கூறுகளை, அன்றைய சிற்பிகளும் சிற்ப ரிஷிகளும் பெற்றிருந்தனர். அவை அவர்களின் தியான பலத்தால் உதித்தன. சிற்பங்கள் மனித உருவில் அமைந்தாலும். அவற்றுள் தரிசனமாவது தெய்வத் தன்மையே; மனித உரு அன்று. சிற்பிகளின் கண்கள் தரிசித்த கலையுருக்கள், தெய்வீக உருவக அமைப்பில், புராண வரலாறுகளைப் போதிக்கும் வரலாற்று உறுப்புகளாக முகிழ்த்தன. இந்தியப் பக்தனுக்குத் தெய்வ தரிசனத்தைச் சிற்பக் கலை வழி காணும் உயர்நிலை கிடைத்துள்ளது.


.03 உருவ வழிபாட்டின் உட்கிடை, வழிபாட்டு இலக்கு

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஒரு நாமம் ஓர் உருவம் என்றில்லாதவர் இறைவர். விண்டுரைக்க இயலா வித்தகர் அவர். ஆண், பெண் அது எனும் பால்வகைப்படாதவர். இத்தகு இறைவர்க்கு திருக்கோயில் வழிப்பாட்டில், மக்கள் தியானத்திற்கும், வழிபாட்டிற்கும் எளிதில் ஓர் இலக்காக அமைய, திருவுருவங்கள் அமைக்கப்பெற்றன. பண்டை இருடிகள் தத்தம் தியானத்திற் கண்ட அனுபவ வாயிலான தத்துவங்களையும், புராணச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டே இத்திருவுருவங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு உருவத்துக்கும் பின்னணியாகச் சில புராணச் செய்திகள், தத்துவங்கள் அமைந்துள்ளன.

பொதுவாகத் தெய்வத் திருக்கோலங்கள் நின்ற கோலமாயினும், இருந்த கோலமாயினும் அவை ஒரு யோக அமைப்பில் முத்திரைகள் பெற்றுத் திகழ்வதைக் காணலாம். யோக ஆசனங்கள் அன்றி, நின்ற கோலங்களில் நடன பங்க அமைப்பையும். கரணத்தையும். ஒரோ வழி ஹஸ்த நிலைகளையும் காண இயல்கிறது. யோகம். தியானம், நடனம், ஆகம வழிபாடு, தந்திர வழிபாடு முதலியன ஒன்றற் கொன்று தொடர்புடையனவான முத்திரைகளைப் பெற்றுள்ளன. இம்மூர்த்தங்கள் தத்து வத்தில் யோக உட்கிடையையும், உருவத்தில் பரத, ஆகம முத்திரைகளையும் பெற்றுச் சிறக்கின்றன.



படம் எண் 1



படம் எண் 2

.04 அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் (வழிபாட்டு நிலை)

முழுமுதற் கடவுளாய சிவபெருமான் கொண்ட அறுபத்து நான்கு மூர்த்தங்களை, சிவபராக்கிரமம், அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் எனக் குறிப்பிடுகின்றது.[1] இம்மூர்த்தங்களை அனுக்ரக மூர்த்தங்கள், சம்கார மூர்த்தங்கள், தட்சிணா மூர்த்தங்கள், நிருத்த மூர்த்தங்கள் எனப் பிரிப்பதுண்டு.[2] வேக மூர்த்தம், போக மூர்த்தம் என இருவகையாக மட்டும் பகுப்பதும் உண்டு.[3]

தட்சிணா மூர்த்தி மூர்த்தங்கள். முழுவதும் யோகக் கோலம். அனுக்கிரக மூர்த்தங்களில் சோமாஸ்கந்தர், சுகாசன மூர்த்தி போன்ற இருந்த கோலங்கள் யோக நிலைகளோடு நடன அமைப்பும் உடையன. நின்ற கோலங்களிலும், சம்கார மூர்த்தங்களிலும் நடனப் பாங்குகள் தூக்கி நிற்கும். நிருத்த மூர்த்தங்கள் நடனக் கோலத்தில் யோகமும் தியானமும் இணைந்தவை.

இவண் சிவதாண்டவத் திருக்கோலத்தின் தத்துவத்தை ஆய்வுக்குக் கருதுகின்றமையால் நடன அமைப்புடைய தாண்டவ மூர்த்தங்களின் பின்னணியான தத்துவங்களை ஆராய்வோம்.

நமது ஆய்வுக்குச் சிவதாண்டவ மூர்த்தங்களாக அட்டவீரட்டம், ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் முதலிய மூர்த்தங்களை எடுத்துக் கொள்வோம். நடராசர் என்ற பெயரால் விளங்கும் சதுரம் முதலிய நடராச மூர்த்தங்களின் தத்துவம், ஆனந்த நடராசத் தத்துவத்துக்குள்ளேயே ஓரளவு அடங்குவன.

.05 ஆத்மக உருவம்

வழிபாட்டில் இருவகை உருவங்கள் தியானிக்கப்படும். தத்துவ, தத்துவாதீத, பரப் பிரம்ம விளக்கங்களாக, உருவக உருவங்களாக ஒலி, ஒளி வடிவில். தியானத்தில் தோன்றும் உருவங்களை ஆத்மக உருவம் என்பர்.[4]

.06 பெளதிக உருவம்

எளியோர் திருக்கோயில்களிலும், பூஜை மடங்களிலும், பூஜை அறைகளிலும், வணங்கும் புராண, அவதார மூர்த்தங்கள் எனப்படும் அஷ்டாஷ்ட மூர்த்தங்களின் உருவ உருவக உருவங்களைப் பெளதிக உருவம் என்பர்.[5]

.07 உருவக நிலை


ஆத்மக உருவமாயினும், பெளதிக உருவமாயினும் அவை ஒரு வகையில் உருவக உருவங்களே என்பது கருத்து. உருவகம் என்பதால் இல்லாதது என்று கருத வேண்டியதில்லை. மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றைக் காண, அறிய முயலும் முயற்சிக்கு உதவுவனவே இவை. சிவதாண்டவத் திருவுரு ஆத்மக பெளதிக உருவங்களின் இணைப்பாயமைந்ததாகும்.

பின்வரும் பட்டியில் உருவ உருவகச் சின்னங்கள், ஆத்மக, பெளதிக நிலைகளில் மலர்ந்து ஆனந்த தாண்டவத்தில் சங்கமிக்கும் நிலை பட்டியிட்டுக் காட்டப்படுகின்றது.

---

1. இரத்தினவேலு முதலியார். ஈக்காடு., சிவபராக்கிரம், சென்னை. 1895. ப:13
2. கோபிநாத ராவ். பி.ஏ., இந்து படிமக் கலையின் கூறுபாடுகள், தொகுதி 2, பகுதி 1., ப: உள்ளுறைப் பட்டிviii
3. வாய்மொழி வழக்கு
4. ஆத்மாவினால் அகப்படுத்தப்படும் உருவம்
5. உருவ அமைப்பில் உயர்வு காட்டும் தெய்வ உருவம்

.08 சமய உருவ, உருவகச் சின்னங்கள் (பட்டி எண் ஒன்று)



.09 நவந்தரு பேத நிலைகள்

இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருக்கும் ஊரும், பேரும், பால்வகையும் படாத, பரம்பொருள் ஆவான். உலகத்தின் தோற்றம், இயக்கம், இலயம் முதலியவற்றின் கருத்தா அவர். பிரபஞ்சத்தின் கருத்தாவாகவும், பிரபஞ்சமாகவும், பிரபஞ்ச இயக்க நுணுக்கமாகவும் அமைந்தவர் அவர். அசைவன அசையாதன யாவும் அவரே. இத்தகைய பரம்பொருளை, பரசிவத்தைச் சீவர்கள் தத்தம் பக்குவ நிலைக்கேற்ப உருவம், அருவுருவம், அருவம் என்ற மூன்று நிலைகளிலும் வழிபட்டு வருகின்றனர். இம்மூன்று நிலைகளையும் அருவத்தில், விந்து, நாதம், சக்தி, சிவம் என்ற நான்கு நிலைகளில் இலயசிவ வடிவாகவும், அருவுருவத்தில் அதிகார வடிவென்றும், சதாசிவ வடிவென்றும் கூறப்படுகின்ற சிவலிங்க வடிவாகவும், உருவத்தில் பிரம்மன், திருமால், உருத்திரன், மகேஸ்வரன் என்ற நான்கு தெய்வ வடிவங்களிலும், நவந்தரு பேதங்களாக வழிபடும் மரபினைத் திருமந்திரம் போற்றும்.[5அ]

.10 அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் (எண்ணிக்கை)

நவந்தரு பேத அமைப்பில், உருவங்களை, நான்கெனக் குறிப்பிடினும், அவற்றின் வளர் நிலையில் சிவமூர்த்தங்கள் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் என அறுபத்து நான்காகக் குறிப்பிடப்படும்.[6]

கேசி முனிவர் அவர்கள், ஸ்கந்த புராணத்தில் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் அறுபத்து நான்கென்பதைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிடுவர்.[7] ஈக்காடு இரத்

5. அ. திருமந்திரம், 2736
6. இரத்தின, ப:13
7. அரங்கசாமி. ப:195

தினவேலு முதலியார் அவர்கள், 1908 இல் தான் வெளியிட்டுள்ள நூலில் இவ்வறுபத்து நான்கு மூர்த்தங்களின் ஓவியங்களையும் அவை பற்றிய குறிப்புகளையும் தந்துள்ளார்கள்.[8]

இவ்வறுபத்து நான்கினில் சிறப்புக்குரியன இருபத்தைந்தென்பர்.[9] காரணாகமம், இருபத்தைந்து மூர்த்தங்களைக் குறிப்பிடும். சிற்ப சாத்திரங்கள், சரஸ்வதீய சித்ர கர்ம சாத்திரம், சகளாதிகாரம், மயமதம் முதலியன பதினாறு மூர்த்தங்களைக் குறிப்பிடும். சிற்பரத்தினம் பதினேழு மூர்த்தங்களைக் குறிப்பிடும்.

.11 சிவலிங்க நிலை

சிவபராக்கிரமம் என்னும் சிவமூர்த்தங்களுள், திருக்கோவில்களில் கருவறை வழிபாட்டினைப் பெறுவது சதாசிவம் என்று அழைக்கப்படும் சிவலிங்கமாகும். இது அருவுருவ நிலை. இச்சிவ லிங்கத்தினை உருவ மூர்த்தங்களுடன் சேர்ப்பதில்லை.

'விக்ரகோ ஜகதம் லிங்கம், அலிங்காதபவத் ஸ்வயம்' என, லிங்க புராணம் கூறும் என்பர்.[9அ] இதன் பொருள் 'உலகின் உருவங்கள், உருவமற்ற லிங்கத்தினின்று உற்பத்தியாயின' என்பது. உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமான பிருகிருதியாகவும், பிரபஞ்ச தோற்ற இயக்க லய மூல புருஷராகவும்[10] இலிங்கத்தை லிங்கபுராணம், கதோபநிடதம் முதலியன கூறும். ஸ்வேதாஸ்வதர உபநிடதம் புருஷனுக்கு ஓராயிரம் தலைகள், ஓராயிரம் கண்கள், ஓராயிரம் கால்கள் என்றெல்லாம் கூறி இவ்விலிங்கம் எல்லாப் பக்கங்களிலும் தலைகள், கால்கள், கைகள், செவிகள், கண்கள் உடையதாக விளங்கும் எனப்புகலும்.[11] லிங்கத்தின் சகஸ்ரலிங்க நிலை என்பது மூலபுருடக் கருத்தினை வெளிக்காட்ட அமைக்கப்பட்டது. சகஸ்ர லிங்கத்தின் ஆயிரத் தன்மையான தலை முதலியன ஆயிரம் கோடுகளால் காட்டப்பட்டிருக்கும். சிவலிங்கத் திருவுருவினைப் புற அளவில் கண்டு ஆண், பெண் குறிகளின் இணைப்பென விளக்குவது பொருத்தமானது போன்று தோன்றினாலும், உயர் தத்துவநிலையில் அவ்வாறு விளக்கப்பட்டதில்லை என்பது மனதில் வைக்க வேண்டிய ஒன்று.

அருவ நிலையிலான நாதம் விந்து என்பவற்றுள் பிரம பாகம் எனப்படும் கீழ்ப் பகுதியாகிய லிங்கம் நாதத்தின் அறிகுறி. அதனை அடுத்து, விஷ்ணுபாகம் என்றும் பெண் பாகம் என்றும் கூறப்படும் ஆவுடையார் எனப்படும் பகுதி விந்துவின் அறிகுறி. பூசாபாகம் எனப்படும் மேற்பகுதியினை உருத்திர பாகம் என்பர். சிவலிங்கத்தின், கீழ், நடு, மேல் பாகங்கள் மூன்றும் படைத்தல், காத்தல், அழித்தல் கடவுளர்களின் பெயரால் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என்றழைக்கப்படும்.[12] இவற்றினை ஆண், பெண், அலி என்ற அளவில் அவன், அவள், அது என்ற பால்வகை காட்டும் பண்போடு ஒப்பிடுவதும் உண்டு. சிவலிங்கத் தத்துவத்திற்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள பல்வகை விரிவுக் கருத்துக்களை

8. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு., சிவபராக்கிரமம்
9. அரங்கசாமி., ப:195
9. அ. நாராயண அய்யர், சி.வி., தென்னிந்தியாவில் சைவத்தின் தோற்றமும் தொன்மை வரலாறும் சென்னை 1936 ப:52
10. நாராயண அய்யர், சி.வி., தென்னிந்தியாவில் சைவத்தின் தோற்றமும், தொன்மை வரலாறும், சென்னை. 1936. ப:53
11. அஃதே, ப:52.
12. ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக மலர், திருவானைக்கா., 1970. ப:29

திருவைந்தெழுத்து பற்றிய பகுதியில் காணலாம். சிவபெருமான் முழுமுதற் கடவுள், மூல புருடன், அவரைச் சித்திரமாகவோ, சித்ராபாசமாகவோ, சிற்ப மாகவோ தான் காண வேண்டும் என்பது இல்லை. எனினும், சிவலிங்கமாக வழிபடுகையில் உருவத்தாலும், செய்யப்படு பொருளாலும் சிவலிங்கங்கள் பல வகைப்படும். அவற்றின் விரிவினைச் சிற்ப நூல்களில் காணலாம். உளிபடாது தானாக வளர்ந்துள்ள கற் சிவலிங்கத்தைச் சுயம்பு என்பர். இச்சுயம்பு லிங்கம் அசையாத சிவலிங்கம் எனப்படும். இந்தியாவில் அறுபத் தெட்டு தலங்களில் சுயம்பு லிங்கங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றுள் அறுபத்தெட்டு இடங்கள் வாமதேவாச் சாரியாரின் மகனான வியாக்ரபுரம் நிகமஞான தேவர் எழுதிய ஜீரணோத்தாரன தசக நூலின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் திரு கோபிநாதராவ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் கள்.[13]

மண்ணாற் செய்தவை, இரத்தினங்களாற் செய்தவை, மரத்தால் செய் தவை, கல்லாற் செய்தவை, அவ்வப் பொழுது செய்து பயன்படுத்தி உடன் விட்டுவிடும் க்ஷானிக லிங்கங்கள் எனப் பொருள் வகையால், லிங்கங்கள் பலவாகும்.[14] சித்தாந்த சாராவளி, மயமதம் போன்ற நூல்கள், உருவ அமைப்பு வகையால், அளவு வகையால், பல்வகை லிங்கங்களைக் குறிப்பி டுவனவாகும்.

.12 மனுஷ லிங்கங்கள்

தத்துவ ஆய்வு செய்கையில், மனுஷ லிங்கம் என்ற வகையில் அஷ் டோத்திர தச லிங்கம், சகஸ்ரலிங்கம், தாரலிங்கம் என்பனவும், முகலிங்கமும் சிந்திக்க வேண்டியவை. இறைவனின் அகண்டாகாரத் தன்மையினை, ஒரு லிங்கத்துக்குள், நூற்றெட்டு லிங்கங்கள் இருப்பதாக, பூசா பாகத்தில் வரை கோடுகள் செதுக்கி வழிபடுவது அஷ்டோத்திர தசலிங்கம் எனப்படும். அது போன்றே சகஸ்ரமாகிய ஆயிரத்தெட்டு வரை கோடுகளில் காண்பது சகஸ் ரலிங்கம். தாரலிங்கம் என்பது பூசா பாகத்தில் அறுபத்து நான்கு எண்ணிக்கை வரையிலான பட்டை செதுக்கி, தீட்டிய நிலையில் வழிபடுவ தாகும். இது இறைவனின் பல திசை நோக்கமை திவ்விய நிலையைச் சுட்டுவதெனலாம்.

சிவ மூர்த்தங்கள், அவற்றின் தத்துவங்கள், வழிபாட்டுப் பலன்கள், அனைத்திற்கும் மூலமாகவும், ஒடுங்கு நிலையாகவும், கருவறைச் சிவலிங்கமே அமைகின்றது. எனினும் உருவ வழிபாட்டில், மூர்த்தங்களின் வழி, எளிதாக, இறைவனை அறிந்து, பயன்பெற முன்னோடியாயமைந்தது முகலிங்கம் என் பது. முகலிங்கங்கள் கோயில் வாயில் எண்ணிக்கைக்கு ஏற்ப முகங்களின் எண்ணிக்கையை உடையன. ஒரு முகம் முதல் ஐந்து முகங்கள் வரை அமை வது மரபு. பூசாபாகத்தில் முகம் அமையும்[15]

ஐந்து முகங்களில், பூசாபாகத்தின், மேற்பாகத்தில், உச்சியில், அமைவது ஈசான முகம், இதுவே நடராசத் தத்துவக் கருவானது என்பதைப் பின் கட்டுரைகளில் காண்போம். கிழக்கு நோக்கிய முகம் தத்புருஷம் என்றும், தெற்கு நோக்கிய முகம் அகோரம் என்றும், மேற்கு நோக்கிய முகம் சத்தி யோசாதம் என்றும், வடக்கு நோக்கிய முகம் வாமதேவம் என்றும் அழைக்கப்படும்.[16] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குப்தர் காலத்தில் அமைந்த

13. ராவ், ப:82
14. அஃதே, ப:76,77
15. அஃதே, ப:97
16. அஃதே, ப:98

சிவ நடனச் சிற்பம் ஒன்றினை வாமதேவ சிவ நடனம் என்பர்.[17] ஈசானரே தாண்டவேசுவரர் என்பர். புருடத் தன்மை, ஐந்தொழில் சிறப்பு, பிரபஞ்ச இயல் ஆய நடராசத் தத்துவக் கருத்துக்கள் சிவலிங்கத்தினின்றே தோன்றியன என்று கருத வாய்ப்புண்டு.

.13 சிவ பராக்கிரம மூர்த்த வகைகள்

சிவபராக்கிரமங்கள் எனக் குறிக்கப்படும் சிவ மூர்த்தங்களை, வழிபடு பயன் கருதியும், கோல அமைப்புப் பற்றியும் வகைப் படுத்திக் கண்டுள்ளனர். போகம் வேண்டி வழிபடுபவர்கள், இருந்த கோலத்தில் அமைந்த சோமாஸ் கந்த மூர்த்தம், உமா சம்கித மூர்த்தி, சுகாசன மூர்த்தி, உமாமகேசுவர மூர்த்தி முதலியவற்றையே மிகுதியாக வழிபடுவர். இவற்றினைப் **போக மூர்த்தங்கள்** என்பர். வெற்றியை வேண்டுபவர் அட்ட வீரட்ட மூர்த்தங்களையும், உக்கிர மூர்த்தங்களையும், வழிபடுவர். இவற்றினை **வேக மூர்த்தங்கள்** என்பர். லிங்கோத்பவர், சந்திரசேகரர், பாசுபத மூர்த்தி, முதலியன **நின்ற கோலங்கள்** எனலாம். சுகாசன மூர்த்தி, உமாசம்கிதர், சோமாஸ்கந்தர், உமா மகேஸ்வரர் முதலிய அம்சங்கள் **இருந்த கோலம்** எனலாம். சம்கார மூர்த்தங்கள், அட்டவீரட்டம் முதலியன **வீரட்ட அம்சங்கள்** எனலாம். சந்திரசேகரர், சக்ராதனர், நந்தீ சானுக்தகர், விக்னேசுவர அனுக்ரகர், கிராதார்ஜுனர், இராவணானுக்ரகர் முதலியன **அனுக்கிரக மூர்த்திகள்**. தட்சிணா மூர்த்தங்கள், வியாக்யான, ஞான, யோக, வீணாதார என்ற சிறப்புக்களுடன் கூடிய **யோக மூர்த்தங்களா கும். கங்காளர், பிட்சாடனர், முதலியனவும் யோகத்தின் ஒருவகை என்பது பொருந்தும். சதாசிவ மூர்த்தி என்பது இறைவனின் அகண்டாகார, பேருயர் நிலையினைக் காட்டுவதாகும்.**

நிருத்த மூர்த்தங்கள் என்ற வகையில், பரத வகை, சகித வகை ஆனந்த தாண்டவம் என்பன அடங்கும். அட்ட வீரட்டங்களும் ஒரு வகை நிருத்தம் எனலாம். எனினும், அவை பரத, சகித, ஆனந்த நடனங்கட்கு ஈடாவதில்லை. எனவே சிவதாண்டவங்கள் என்ற எல்லைக்குள் நிருத்த மூர்த்தங்கள் அடங்கும் எனக் கொள்வது நன்று. **சிவதாண்டவங்கள், சிவலிங்கம் உட்பட்ட அனைத்து சிவமூர்த்தங்களின், லயநிலையாகவும், ஒரு இயங்கு நிலைத் தோற்றமய பிரபஞ்ச ஐந்தொழில் அனவரத தாண்டவக் கோலமாகவும் அமைகின்றன** என்பதனை ஆய்வில் காண முயல்வோம். சிவ மூர்த்தங்களின் அஷ்டாஷ்ட வைபவப்பட்டி ஈக்காடு முதலியார் தந்த நிலையிலும், அவற்றில் எவையெவை மற்ற சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் பின்வரும் பட்டிகளில் காணலாம்.

அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் சிவபராக்கிமம், சிற்பசாத்திரம், மயமதம், காரணாகமம் சிற்பரத்தினம், சகளாதிகாரம், சரஸ்வதீய சித்ரகர்மம் முதலிய ஆறு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் பட்டியல்கள் கீழே தரப்பட்டுள்ளன. எடுத்தாண்டுள்ள இந்நூல்களின் பட்டியல்களில் கண்ட 64, 25, 16 என்பனவான படிமங்களை ஒத்துப் பார்க்கையில் சந்திரசேகரர், இடபாரூடர், பிட்சாடனர், திருபுராந்தகர், ஹரிகரர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, நடராசர் என்பனவாய எட்டு மூர்த்தங்கள் பெரும்பான்மையும் எல்லா நூல்களிலும் இடம் பெறுகின்றன. கல்யாண சுந்தரர், காலாரி, கங்காளர், சண்டேசானுக்ரகர், சுகாசநர், லிங்கோத்பவர், கங்காதரர் போன்ற எட்டு

17. சிவராம ப:114

மூர்த்தங்கள் ஐந்து நூல்களில் மட்டும் இடம் பெற் றுள்ளன. கஜமுகானுக்ரகர் மூன்று நூல்களில் மட்டும் இடம் பெற்றுள்ளது. வைவாகிகர் இரண்டு நூல் களில் இடம் பெற்றுள்ளது. முகலிங்கம் இரண்டு நூல்களில் இடம் பெற்றுள்ளது.

நம் ஆய்வு, சிவதாண்டவ மூர்த்தங்களைப் பற்றியதாகையால், நடராச மூர்த்தத்தையும், நடனத்துக்கு ஈடான ஆகார்ய ஆங்கிக நிலைகளை உடைய அட்ட வீரட்ட மூர்த்தங்களையும் தத்துவ ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். நடராச மூர்த்தத்துள்ளும் ஆனந்த தாண்டவமே முழுமையான தத்துவப் பொக்கிஷம். ஆகையால் அதனை மையமாக வைத்து சிவதாண்டவங்களை ஆய்வோம்.

.14 அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்[18]

(பட்டி எண் இரண்டு) சிவபராக்கிரமம் நூல்வழி

1. இலிங்க மூர்த்தி
2. இலிங்கோத்பவமூர்த்தி
3. முகலிங்க மூர்த்தி
4. சதாசிவ மூர்த்தி
5. மகா சதாசிவ மூர்த்தி
6. உமா மகேச மூர்த்தி
7. சுகாசந மூர்த்தி
8. உமேச மூர்த்தி
9. சோமாஸ்கந்த மூர்த்தி
10. சந்திரசேகர மூர்த்தி
11. இடபாரூட மூர்த்தி
12. இரஷபாந்திக மூர்த்தி
13. புஜங்க லலித மூர்த்தி
14. புஜங்க திராச மூர்த்தி
15. சந்தியா நிருத்த மூர்த்தி
16. சதா நிருத்த மூர்த்தி
17. சண்ட தாண்டவ மூர்த்தி
18. கங்காதர மூர்த்தி
19. கங்கா விசர்ஜன மூர்த்தி
20. திரிபுராந்தக மூர்த்தி
21. கல்யாண சுந்தர மூர்த்தி
22. அர்த்த நாரீஸ்வர மூர்த்தி
23. கஜயுக்த மூர்த்தி
24. ஜ்வராபக்ந மூர்த்தி
25. சார்த்தூ லஹர மூர்த்தி கஜயுக்த மூர்த்தி
26. பாசுபத மூர்த்தி
27. கங்காள மூர்த்தி
28. கேசவார்த்த மூர்த்தி
29. பிட்சாடந மூர்த்தி
30. சிம்கக்ந மூர்த்தி
31. சண்டேசானுக்ரக மூர்த்தி
32. தட்சிணாமூர்த்தி
33. யோக தட்சிணாமூர்த்தி
34. வீணாதர தட்சிணாமூர்த்தி
35. காலாந்தக மூர்த்தி
36. காமதகன மூர்த்தி
37. லகுளேச்வர மூர்த்தி
38. பைரவ மூர்த்தி
39. ஆபதோத்தாரண மூர்த்தி
40. வடுக மூர்த்தி
41. க்ஷேத்திர பாலக மூர்த்தி
42. வீரபத்ர மூர்த்தி
43. அகோஹத்ர மூர்த்தி
44. தட்சயக்ஞஹத மூர்த்தி
45. கிராத மூர்த்தி
46. குரு மூர்த்தி
47. அசுவாரூட மூர்த்தி
48. கஜாந்திக மூர்த்தி
49. ஜலந்தரவத மூர்த்தி
50. ஏக பாதத்ரி மூர்த்தி
51. திரிபாதத்ரி மூர்த்தி
52. ஏகபாத மூர்த்தி
53. கௌரி வரப்த மூர்த்தி
54. சக்ரதாநஸ்வரூப மூர்த்தி
55. கௌரி லீலாசம்நவித மூர்த்தி
56. விஷபாஹரண மூர்த்தி
57. கருடாந்திக மூர்த்தி
58. பிரம்ம சிரச்சேத மூர்த்தி
59. கூர்ம சம்ஹார மூர்த்தி
60. மச்ச சம்ஹார மூர்த்தி
61. வராக சம்ஹார மூர்த்தி
62. ப்ரார்த்தனா மூர்த்தி
63. ரக்ஷ பிக்ஷாப்பிரதாந மூர்த்தி
64. சிக்ஷய பாவு மூர்த்தி.

18. இரத்தின.

15 திரு. கோபிநாதராவ் அவர்கள் நூலில் தரப்பட்ட சிவமூர்த்தங்கள்.[19]
(பட்டி எண் மூன்று)

அ. சிவம்

ஆ. லிங்கம்

இ. நின்ற கோலம்
1. லிங்கோத்பவ மூர்த்தி
2. சந்திரசேகர மூர்த்தி
3. பாசுபத மூர்த்தி

ஈ. இருந்த கோலம்
1. சுகாசன மூர்த்தி
2. உமா சகித மூர்த்தி
3. சோமாஸ்கந்த மூர்த்தி
4. உமா மகேஸ்வர மூர்த்தி

உ. சம்கார மூர்த்திகள்
1. காமாந்தக மூர்த்தி
2. கஜாசுர சம்கார மூர்த்தி
3. காலாரி மூர்த்தி
4. திரிபுராந்தக மூர்த்தி
5. சரபேச மூர்த்தி
6. பிரம்ம சிரச்சேத மூர்த்தி
   i) பைரவ
   ii) வாதுள பைரவ
   iii) ஸ்வர்ண கர்ஷன பைரவ
   iv) அறுபத்து நான்கு பைரவர்கள்
7. வீரபத்ர மூர்த்தி
8. ஜலந்தர ஹர மூர்த்தி
9. மல்லாரி சிவ மூர்த்தி
10. அந்தகாசுர வத மூர்த்தி

ஊ. பிற உக்கிர மூர்த்திகள்
1. அகோர மூர்த்தி
2. தசபுஜ அகோர மூர்த்தி
3. மகா காளர் மற்றும் மகாகாளி

எ. அனுக்ரக மூர்த்திகள்
1. சண்டேசானுக்ரக மூர்த்தி
2. விஷ்ணுவனுக்ரக மூர்த்தி
3. நந்தீசானுக்ரக மூர்த்தி
4. விக்னேஸ்வரானுக்ரக மூர்த்தி
5. கிராதார்ஜுன மூர்த்தி
6. இராவணானுக்கிரக மூர்த்தி

ஏ. நிருத்த மூர்த்திகள்

ஐ. தட்சிணா மூர்த்திகள்
1. வியாக்யான தட்சிணா மூர்த்தி
2. ஞான தட்சிணா மூர்த்தி
3. யோக தச்சிணா மூர்த்தி
4. வீணாதர தட்சிணா மூர்த்தி

ஒ. கங்காளமூர்த்தி மற்றும் பிட்சாடன மூர்த்தி

ஓ. சிவனின் பிறவகை அம்சங்கள்
1. சதாசிவ மூர்த்தி மற்றும் மகா சதாசிவ மூர்த்தி
2. பஞ்சப் பிரம்மர்கள் அல்லது ஈசானாதயா
3. மகேச மூர்த்தி
4. ஏகாதச ருத்ரர்கள்
5. வித்யேஸ்வரர்கள்
6. மூர்த்தியாஷ்டகா மற்றும் சில.

---

19. ராவ்; ப:உள்ளுறை. viii

16. சிற்ப ஆகமச் சாத்திரங்களில் சிவ மூர்த்தங்கள்[20]

(பட்டி எண் நான்கு)

அ. சிற்ப சாத்திரம்

1. சுகாசனர்
2. வைவாகிகர்
3. உமா சகிதர்
4. இடபாரூடர்
5. திரிபுராந்தகர்
6. நடராசர்
7. சந்திரசேகரர்
8. அர்த்தநாரி
9. உறிகரர்
10. சண்டேஸ்வரர்
11. காமாரி
12. கன்னிநேசர்
13. தட்சிணாமூர்த்தி
14. பிட்சாடனர்
15. சதாசிவர்
16. லிங்கோத்பவர்

ஆ. மயமதம்

1. சுகாசனர்
2. வைவாகிகர்
3. உமா ஸ்கந்தர்
4. இடபாரூடர்
5. திரிபுராந்தகர்
6. நடராசர்
7. சந்திரசேகரர்
8. அர்த்தநாரி
9. உறிகரர்
10. சண்டேசானுக்ரகர்
11. காமாரி
12. கன்னிநேசர்
13. தட்சிணாமூர்த்தி
14. பிட்சாடனர்
15. முகலிங்கம்
16. லிங்கோத்பவர்

இ. காரணாகமம்

1. நடராசர்
2. சண்டேசானுக்ரகர்
3. உமா மகேசர்
4. இடபாரூடர்
5. கல்யாண சுந்தரர்
6. பிட்சாடனர்
7. காமாரி
8. காலாரி
9. திரிபுராரி
10. ஜலந்தராரி
11. மதங்காரி
12. வீரபத்ரர்
13. ஹரிஹரர்
14. அர்த்தநாரி
15. கிராதர்
16. கங்காளர்
17. சண்டேசானுக்ரகர்
18. நீலகண்டன்
19. சக்ரப்பிரதா
20. கஜமுகானுக்ரகர்
21. ஏகபாகர்
22. சோமாஸ்கந்தர்
23. சுகாசனர்
24. தட்சிணாமூர்த்தி
25. லிங்கோத்பவர்

---

20. அரங்கசாமி; ப:194

ஈ) சிற்ப ரத்தினம்

1. சுகாசனர்
2. சோமாஸ்கந்தர்
3. சந்திரசேகர்
4. இடபாரூடர்
5. நிருத்தமூர்த்தி (9 வகை)
6. கங்காதரர்
7. திரிபுராந்தகர் (8 வகை)
8. கல்யாண சுந்தரர்
9. அர்த்தநாரீஸ்வரர்
10. கஜகா
11. பாசுபத மூர்த்தி
12. கங்காளர்
13. உறரிகரர்
14. பிட்சாடனர்
15. சண்டேசர்
16. தட்சிணாமூர்த்தி
17. காலாந்தகர்

உ) சகளாதிகாரம்

1. சோமசுந்தரர்
2. சந்திரசேகரர்
3. இடபாரூடர்
4. நடேசர்
5. கங்காதரர்
6. திரிபுராந்தகர்
7. கல்யாண சுந்தரர்
8. அர்த்தநாரீஸ்வரர்
9. பாசுபத மூர்த்தி
10. கங்காள மூர்த்தி
11. கேசவார்த்தர்
12. பிட்சாடனர்
13. சண்டேசானுக் கிரகர்
14. தட்சிணாமூர்த்தி
15. காலசம்மாரர்
16. லிங்கோத்பவர்

ஊ) சரசுவதீய சித்ரகர்மம்

1. சோமாஸ்கந்தர்
2. சந்திரசேகரர்
3. நடராசர்
4. லிங்கோத்பவர்
5. தட்சிணாமூர்த்தி
6. காமதகனர்
7. கல்யாண சுந்தரர்
8. இடபாரூடர்
9. திரிபுராந்தகர்
10. அர்த்த நாரீஸ்வரர்
11. கங்காளர்
12. பிட்சாடனர்
13. காலசம்மாரர்
14. கேசவார்த்தர்
15. சுகாசனர்
16. கங்காதரர்

.17 சிவதாண்டவ மூர்த்தங்கள் எண்ணிக்கை மரபுகள்

சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் நூற்றெட்டென்பது மரபு. நூற்றெட்டென்பது, நூற்றெட்டுக் கரணங்கள், நூற்றெட்டு அஷ்டோத்திரம் போன்ற வழி முறை சுப எண்ணிக்கை மரபில் வந்ததாகவும் இருக்கலாம். நூற்றெட்டுக் கரணங்களை நூற்றெட்டுத் தாண்டவங்கள் என்று கொள்வது இல்லை. நூற்றெட்டுத் தாண்டவங்களின் பெயர்கள் கிடைக்கவில்லை எனினும் கூத்த நூல் உரைகாரர் நூற்றெட்டு தாண்டவங்கட்கு, ஒரு கணக்கு, தருகின்றார். சிவனார், தாமாக ஆடியவை நாற்பத் தெட்டு, உமையோடு ஆடியவை முப்பத்தாறு, மாயனோடு ஆடியவை ஒன்பது, முருகனுக்காக ஆடியவை மூன்று மற்றை வானவர்க்காக ஆடியவை பன்னிரண்டு, ஆக நூற்றெட்டென்பது அவர் கூற்று. இதற்கு ஆதாரம் 'அகத்தியல் பரதம்' என்ற நூல் என்பார்.[21] நூற்றெட்டு என்ற எண்ணிக்கையை மிஞ்சி ஆயிரத்தெட்டு என்னும் மரபும் உண்டு.[22] இவற்றுள் ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், சுத்த தாண்டவம், சிருங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முனி தாண்டவம், சம்கார தாண்டவம், பிரளய தாண்டவம், பூத தாண்டவம், உச்சி தாண்டவம், புஜங்க தாண்டவம் என்ற பன்னிரண்டும் சிறந்தவை என்பது ஒரு மரபு.[23] இவற்றை வேறு படுத்திப் பார்த்தல் கடினம். இந்தப் பன்னிரண்டோடு, அட்டாட்ட மூர்த்தங்களில் சேர்ந்த சண்ட தாண்டவம், அர்த்த நாரீஸ்வர தாண்டவம், கேசவார்த்த தாண்டவம், கங்காள தாண்டவம் முதலியவற்றோடு, கோர தாண்டவத்தையும் அகோர தாண்டவத்தையும் சேர்த்துப் பதினெட்டு என்பாரும் உளர்.[24] இருந்த கோலத்தில் அமைந்த தட்சிணாமூர்த்தியையும் சித்தன் என்ற பெயரில் ஒரு நடமாகக் குறிப்பதும் உண்டு.[25] சைவ ஆகமங்கள் காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சிருங்கார தாண்டவம், சம்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்ற ஏழையும் சுட்டி எழுவகைத் தாண்டவம் என்பதும் உண்டு.[26] பல்வேறு ஆகமங்கள், சிற்ப நூல்கள் ஒன்றுக்கு ஒன்று வேறுபடும் பட்டிகளைத் தருகின்றன. எண்ணிக்கைகளும் அவற்றின் பின்னணியான தத்துவங்களும் ஆய்வுக் குரியன எனினும், தத்துவ ஆய்வு அடிப்படையில் காண்கையில் ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், அட்ட வீரட்டங்கள் முதலியனவே சிறப்பிடம் பெறுவன.

.18 திருப் பெயர்கள்

இலிங்க மகாபுராணத்தில் இறைவன், நிருத்தப் பிரியன், நித்ய நிருத்யன், நர்த்தனன், சர்வ சாதகன் என்ற பெயர்களால் புகழப்படுகிறான்.[27] வாயு புராணத்தில் நிருத்ய சீலன், வாத்ய நிருத்யப் பிரியன், கீத சீலாயன், நர்த்தன சீலன் என்றெல்லாம் இறைவன் புகழப்படுகிறான்.[28] டாக்காவுக்கருகிலுள்ள பாரெல்லா என்ற இடத்திலுள்ள பாலர் கலையமைப்புள்ள சிலையொன்றின் பீடத்தில் உள்ள குறிப்பில் நர்த்தேஸ்வரன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[29] வங்கத்தில் திப்பெரா மாவட்டத்தில் உள்ள நட்கர் என்ற ஊரில் உள்ள நடராசரும், நர்த்தேஸ்வரன் என அழைக்கப்படுகிறார்.[30]

---

21. சாத்தனார், கூத்த நூல், சென்னை 1968. ப:152,166.
22. அக்தே, ப:171
23. அக்தே, ப:171
24. அக்தே, ப:171-172
25. அக்தே, ப:172
26. அக்தே, ப:171
27. அக்தே, ப:1,65,74.
28. அக்தே, ப:24,142-43
29. சிவராம, ப:143
30. அக்தே, ப:143

கம்போடியாவில் உள்ள ஈசானவர்ம மன்னனின் சாம்பா பிரேகுக் கல்வெட்டொன்றில் இறைவன் நிருத்தேஸ்வரர் என்று போற்றப் படுகின்றார்.

இன்னொரு கல்வெட்டு நாடகேஸ்வரன் என்றும் குறிப்பிடுகின்றது[31] சோழ மன்னர் நடராச மூர்த்தியை ஆடல் வல்லான் என்றழைத்து, நெல் அளக்கும் மரக் காலுக்கும் ஆடல்வல்லான் என்று பெயர் சூட்டினர். சோழ மன்னன் ஒரு மாவட்டத்துக்கு நித்ய விநோதம் எனவும் பெயரிட்டுள்ளான். நட்டேஸ்வரத் தாழ்வார், கூத்தப் பெருமானடிகள், ஆடல்வல்லான், நடராசர், நடேசர், நடராசராசர் என்ற பெயர்களும் வழக்கில் உண்டு. நடராசர் என்ற சொல் ஆனந்த தாண்டவத்தையும், நடராசராசர் என்பது சிதம்பரத்தில் அமைந்த சித்சபை ஆனந்த தாண்டவ மூர்த்தியையும், நடேசர் என்பது பிற தாண்டவ மூர்த்திகளையும் குறிப்பன என்று கருத இடமுள்ளது.

.19 ஆகம பரதப் பெயர் வேறுபாடுகள்

அன்னிமேரி கேஸ்டன் அவர்கள் தனது நூலில், சிவ தாண்டவச் சிற்பங்களில், நடன வகைகள் சிலவவற்றைப் பட்டியிட்டு ஆகமப் பெயர்கட்கும், பரத கரணப் பெயர்கட்கும் இடையே உள்ள வேறுபாடுகளைச் சுட்டியுள்ளார்கள்.[32] நம்முடைய பரத ஆகம சாத்திரப் புலமையின் தாரதம்மியம், சிற்பங்கள் பரத சாத்திரக் கரணங்கட்கு முதன்மை தரவில்லை என்பது, ஆகமக் கருத்துக்கள் முறையாகப் பின்பற்றப்படாத அளவு கட்டுக் கோப்பு மிஞ்சிய நிலை, முதலியன சில வேறுபாடுகளுக்குக் காரணமாகலாம். எடுத்துக் காட்டாகப் புஜங்காஞ்சித கரணத்துக்கு, அம்சுபபேதாகமத்தில் புஜங் கலலிதம் என்றும், உத்தரகாமிகாமத்தில் புஜங்க திராசமென்றும், காரணாகமத்தில் சபாபதி என்றும், பொது மக்களிடம் (சமயவாதி) ஆனந்த தாண்டவம் என்றும், நாதாந்தமென்றும், கௌரி தாண்டவமென்றும், ஆடவல் லானென்றும், மயமதத்தில் சந்தியா தாண்டவமென்றும், சிற்பரத்தினத்தில் ஐந்து ஆறாவது நடனம் எனப்படும். திரிபுர தாண்டவம் என்றும் பெயர் கூறப் பட்டுள்ளது எனக் குறித்துள்ளார்கள்.[33]

இது போன்று லலாடதிலகம், தலசம் போதிதம், ஊர்த்துவ ஜானு, சதுரம், கடிஸ்மம், லலிதம், அலிதம் முதலியவற்றிற்கும் பெயர் வேறுபாட்டுக் குறிப்புகள் உள. இதற்கான சிறப்பான காரணம் தனித்தனியே, இணைந்தும், விரிந்தும் வளர்ந்த சிற்ப, ஆகம, தத்துவ, சடங்கு, சமய நெறிகளின் வளர்ச்சியேயாகும். இக்கருத்துக்கள் மேலும் ஆய்வுக்குரியன.

.20 சிவதாண்டவ மூர்த்தங்கள் - சிற்ப சாத்திரக் குறிப்புகள் (பட்டி எண் ஐந்து)

அ) ஸ்ரீதத்துவநிதி கூறும் எழுவகைத் தாண்டவங்கள்

(நூல்: துரை, அரங்கனார், பக்:452 தேசிகர், பக்:50)

1. ஆனந்த தாண்டவம்

அ) நாட்டிய சாத்திர புஜங்க திராசம் என்னும் கரணம்

ஆ) நான்கு கைகள் **2. சந்தியா தாண்டவம்**

அ) முயலகன் இல்லை, நானகு கைகள்

ஆ) கதா சரித சாகரம், பிரதோஷ தோத்திரம்,

31. அஃதே, ப:143
32. கேஸ்டன்: ப:24
33. அரங்கசாமி, ப:452-58.

இ) காரணாகமம் முதலியவற்றில் குறிப்பிடப்படுகின்றது.
ஈ) மயமதம் புஜங்க, புஜங்க திராசம் என்றும் குறிப்பிடும்.
உ) இதனை லலிதம் என்பதும் உண்டு.
ஊ) மயமதமும் சிற்ப சங்கிரகமும் ஆலமரத்தின் கீழ் ஆடியதாகக் கூறுவன.
எ) சமுத்ர மந்தானத்துக்குப் பிறகு விடமுண்டகண்டர் ஏகாதசி கழிந்த துவாதசி அன்று ஆடியது பிரதோஷ நடனம் எனத் தமிழ் ஆகமத் திரட்டு புகலும்.

3. உமா தாண்டவம்

அ) இடப்புறம் உமை இருப்பார்.
ஆ) ஆறு கைகள்
இ) பூர்வ காரணாகமம் உமா தாண்டவத்துக்குப் பதிலாக முனி தாண்டவம் சேர்க்கும்.

4. கௌரி தாண்டவம்

அ) நந்தி வலமும் கௌரி இடமும் இருப்பர்.
ஆ) மயமதம் இதனை புஜங்க லலிதம் என்று கூறும்.
இ) மயமதம் கௌரி இடத்தில் விஷ்ணு இருப்பதாகக் கூறும்.

5. காளிகா தாண்டவம்

அ) எண் கைகள், இரு கண்கள் மட்டும், இடக்கால் ஊர்த்துவம்.
ஆ) இது ஊர்த்துவ தாண்டவம் எனப்படுவதுமுண்டு.
இ) இது காரைக்காலம்மையார் காலத்துக்கு முந்தியது.

6. திரிபுர தாண்டவம்

அ) பதினாறு கைகள்
ஆ) அன்னை இடப்புறம்
இ) சிற்பரத்தினப்படி கந்தன் இருப்பார்.

7. சம்கார தாண்டவம்

அ) எண் கைகள் முக்கண்கள் வலக்கால் ஊர்த்துவம்.
ஆ) பரத சூடாமணி கூறும் பஞ்ச கிருத்திய தாண்டவங்கள்.
(சுவை வகை போன்று. நூல்: தேசிகர், பக்:54)

1. அகோர தாண்டவம்
2. ஊர்த்துவ தாண்டவம்
3. ஆச்சர்ய தாண்டவம்
4. ஆனந்த தாண்டவம்
5. சௌந்தர்ய தாண்டவம்

இ) பரதசார சங்கிரகம் கூறும் ஐவகைத் தாண்டவங்கள்.
(சுவை வகை போன்றுள)

1. அற்புத தாண்டவம்
2. அநவரத தாண்டவம்
3. ஆனந்த தாண்டவம்
4. பிரளய தாண்டவம்
5. சங்கார தாண்டவம்

ஈ) சிற்பரத்தினம் கூறும் வரிசை எண் மட்டும் குறித்துக்கூறும் ஒன்பது வகைத் தாண்டவங்களும் அவற்றுக்கு இசைந்த பெயர்களும். (நூல்: தேசிகர், பக்:47)

முதல் வகை	-	ஆனந்த தாண்டவம்
இரண்டாம் வகை	-	கங்காவிசர்ஜன நடனம்
மூன்றாம் வகை	-	கால் மாறி ஆடிய நடனம்
நான்காம் வகை	-	—
ஐந்தாம் வகை	-	-
ஆறாம் வகை	-	ஊர்த்துவ தாண்டவம்
ஏழாம் வகை	-	—
எட்டாம் வகை	-	—
ஒன்பதாம் வகை	-	—

உ) பூர்வ காரணாகமம் கூறும் எண் மட்டும் குறிப்பிடும் ஏழுவகைத் தாண்டவங்கள்.
(நூல்: துரை, அரங்கனார், பக்: 454, 55)

1. முதல் வகை
2. இரண்டாம் வகை
3. முனி தாண்டவம், மூன்றாம் வகை
4. நான்காம் வகை
5. ஐந்தாம் வகை
6. ஆறாம் வகை
7. ஏழாம் வகை

ஊ) சபை நடராசர்கள் ஐவர் (நூல்: துரை அரங்கனார், பக்: 441)
திருவாலங்காட்டு, அரதன சபையில் இரத்தின சபாபதி
தில்லை கனகசபையில் கனக சபாபதி
திருநெல்வேலி தாமிர சபையில் தாமிர சபாபதி
மதுரை வெள்ளியம்பலத்தில் இரசத சபாபதி
குற்றாலம் சித்திரசபையில் சித்திர சபாபதி

எ) திருப்புத்தூர்ப் புராணக் கருத்துக் கிசை அறுவகைத் தாண்டவங்கள்.
(நூல்: துரை, அரங்கனார், பக்: 442)

1. சிதம்பரம் கனகசபையில் ஆனந்த தாண்டவம்
2. மதுரை இரசத சபையில் சந்தியா தாண்டவம்
3. திருப்புத்தூர் சித்சபையில் கௌரி தாண்டவம்
4. திருக்குற்றாலம் சித்திர சபையில் திரிபுர தாண்டவம்.
5. திருவாலங்காட்டு இரத்தின சபையில் காளிகா தாண்டவம்
6. திருநெல்வேலி தாமிர சபையில் முனி தாண்டவம்.


ஏ) தாண்டவப் பெயர் ஒற்றுமைகள்
(நூல்: துரை அரங்கனார், பக்: 449)

தாண்டவப் பெயர் தொடர்புகள் (பட்டி எண் 5 அ)

ஆகமப் பெயர்	பரதப் பெயர்	தொழில்
காளிகா தாண்டவம்	சதுரம், கடிஸ்மம்	தோற்றம்
கௌரி தாண்டவம் இரட்சா தாண்டவம் லட்சுமி தாண்டவம் சந்தியா தாண்டவம்	ஊர்த்துவ ஜானு புஜங்க திராசிதம் லலிதம்	காத்தல்
சங்கார தாண்டவம்	தலசம்போதிதம்	
திரிபுர தாண்டவம் காளி தாண்டவம்	ஊர்த்துவ தாண்டவம்	அழித்தல்
ஊர்த்துவ தாண்டவம் காளி தாண்டவம் சண்ட தாண்டவம் அனுக்ரக தாண்டவம்		அருளல்

ஐ. நடராசரின் பிற பெயர் வகைகள்
(நூல்: டாக்டர். சிவராமமூர்த்தி, பக்: 150-161)

1. ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த சிற்பப் பிரகாசம் என்ற நூல் கர்பக சங்கர நிருத்தமூர்த்தி, சௌம்ய நட்டம்பரர், நந்தி மேல் நடமிடும் நட்டம்பரர் என்ற மூன்று வகைகளைக் கூறும்.
2. மத்ஸ்யபுராணம் புஜதாருவனம் எனப்படும் பதினாறு கைகளையுடைய திரிபுர தாண்டவத்தை விளக்கும்.
3. விஷ்ணு தர்மோத்திரம் நர்த்தேஸ்வரர் என நடராசரைக் குறிக்கும்.
4. கூர்ம புராணத்து வரும் சிவகீதையில் நடராசர் யோகீஸ்வரராக வருணிக்கப்படுகின்றார்.
5. சிவகௌரி தோத்திரத்தில் தேவி முன் நடராசர், பிச்சைபுகும் கோலத்தில் இருப்பார் எனக் குறிக்கப்படுகின்றது.
6. சிவமகாபுராணம் இமவான் மனைவி மேனா முன் சிவன் சுனர்த்தகனாக நடமிடுவதைக் கூறும்.



922-வது திருமந்திரவிளக்கம்

2.00 சிவ தாண்டவ மூர்த்தங்களின் தத்துவங்கள்

.001 வளர்ச்சிக் கூறுகள்

இன்றளவில் இந்து சமயம் எனப்படுவது சனாதன சமயம் எனப்படுகின்ற வேத நெறிப்பட்ட சைவ, வைணவ, சாக்த சமயங்கள், பௌத்த, சமண சமயங்கள் முதலிய அனைத்து இந்தியச் சமயங்களையும் உள்ளடக்கிய ஒன்று. இவற்றுள் சைவம், வைணவம், சாக்தம் முதலியன ஒருமையுடன் திகழ்வன. வேத நெறியின் வளர்ச்சியாக, அமைந்த பௌத்த சமண சமயங்கட்கும் கூட, வேத நெறி அடிப்படையாக இருந்தது இயற்கை. வளர்ச்சிக் காலத்தில் பௌத்த சமண சமயங்களில் அறநெறிக் கொள்கைகள் மேம்பட்டன. பிற்காலத்தில், அறநெறிக் கொள்கைகள், மூலச் சமயமான, வைதிக நெறிக்குள்ளும் ஒளிரத் தொடங்கின. இவை சமயக் கொள்கைகளின் வளர்ச்சி வட்டத்தின் சுழற்சிக் கூறுகள். வேத நெறிக்கு முன் சிந்து வெளி நாகரிகத்தின் பல உயர் கூறுகளான, யோக நெறி, பசுபதி வழிபாடு, ஆலமர் தெய்வ முன்னோடி நிலை, நடன வழிபாடு முதலிய உயர் அம்சங்கள் இருந்துள்ளன. சிந்து வெளிச் சிறப்புகட்கு, அதற்கு முந்தைய திராவிட மூல இந்தியக் கூறுகள் காரணமாகலாம் என்ற கருத்து உள்ளது.

.002 வளர்ச்சிக் கரு

சிவதாண்ட வழிபாட்டின் வளர்ச்சிக் கரு, திராவிடக் கூறுகளில் இருந்து, சிந்து வெளியில் முகிழ்த்து, வேத நெறியில் தழைத்து, சைவத்தில் மலர்ந்து தில்லையில், சைவ மறுமலர்ச்சியாகக் கனிந்திருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

.003 இந்தியா எங்கணும் நடராசர்

தமிழகத்தில் தென்னகத்தில் மார்கழித் திருவாதிரையில் தரிசனம் தரும் தாண்டவ மூர்த்தி, வடநாட்டுத் தலங்களிலும் வளர்ந்து, வழிகாட்டி வருவது, சிற்ப வரலாறு காட்டும் உண்மை. குப்தப் பேரரசு ஓங்கிய காலத்தில் இந்து சமய மறுமலர்ச்சியின் போது நடராச வளர்ச்சியும் இடம் பெற்றுள்ளது. இந்தியாவின் வடபகுதியில் இலக்குமாண்டல், ஜாகேசுவர், நீலகண்டேசுவர், குவாலியர், புந்தி, சிட்டோகர், நாக்டா, அபு, உதயபுரி, அர்த்தனா, குவாலியர், நச்சன குதாரா, தியோகர், உதயபுரி, புமாரா, முதலிய தலங்களிலும், கிழக்கிந்தியாவில், சிர்புர், புவனேசுவர், முகலிங்கம், கொனாரக், கிச்சிங் முதலிய தலங்களிலும், தட்சிணத்தில் அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா, பாலம் பேட்டை, ஆலம்பூர், ஐகோளே, பட்டடக்கல், பாதாமி, பேலூர், ஹளேபேடு முதலிய தலங்களிலும், ஆந்திரத்தில் முகலிராசபுரம் முதலிய தலங்களிலும், தமிழகத்தில், காஞ்சிபுரம், சீயமங்கலம், சிதம்பரம், கங்கை கொண்ட சோழபுரம், கோனேரி ராசபுரம், தஞ்சாவூர், திருவாலீசுவரம், விருத்தாசலம், திருவாலங்காடு, நல்லூர், முதலிய தலங்களிலும், மற்றும் பல்வேறு திருத்தலங்களிலும், சிவ தாண்டவம், சிலை வடிவில் காணப்படுகின்றது. இந்தியாவிற்கு வெளியிலும் ஜாவா(பாலி), கம்போடியா, சம்பா, இந்தோனேசியா, தாய்லாந்து, நேபாளம், இலங்கை முதலிய நாடுகளிலும் சிவதாண்டவ வழிபாடு வளர்ந்துள்ளது. சைவத்தின் தலைமையிடம் சிவன் உறையும் சந்தியா நடமிடும் கைலாயம் என்னும் வெள்ளியங்கிரி. கைலாயம் தொடங்கிப் புவனேசுவரம், நெல்லை, சுசீந்திரம் வரை எல்லாத் தலங்களிலும் சிவ

தாண்டவ வழிபாடு உள்ளது. கிடைத்துள்ள பழம் பொருள் ஆய்வு அடிப்படையில், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய குப்தர் காலத்தில் உத்திரப் பிரதேச புமாரா, தொன்மை கட்டுமானச் சிவன் கோவிலிலும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைய நச்சன குதாரா சிவன் கோவிலிலும், பின்னர் மத்தியப் பிரதேச சிர்பூரிலும், எலிபெண்டா குகையிலும், அஜந்தா, எல்லோரா குகைகளிலும் நடராசத் திருவுருவங்களைக் காண்கிறோம். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஆந்திர முகலிராசபுரத்திலும், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழக வட ஆற்காடு மாவட்ட சீயமங்கலத்திலும் ஆனந்த நடராசருக்கு முன்னோடி எனத்தகு சிற்பங்களையும் காண்கிறோம்.

.004 முதல் ஆனந்த தாண்டவச் சிற்பங்கள்

கி.பி. ஆறு எட்டாம் நூற்றாண்டுகளில் ஐகோளே, பாதாமி, பட்டடக்கல் முதலிய தக்காணப் பகுதியில் உருவாகி முகலிராசபுரம், சீயமங்கலம் முதலிய இடங்களில் வளர்ந்து, தில்லையில் ஆனந்த நடம் ஒளிர்ந்திருக்கின்றது., தில்லையில் ஆனந்த நடம் முழு உருப்பெற்ற காலம் செம்பியன் மாதேவியார் காலத்துக்கு முந்தியதாகலாம், கல்லில் செதுக்கப்பட்ட முதல் ஆனந்த தாண்டவச் சிற்பம் கோனேரிராசபுரத்தது. கிடைப்பவற்றுள் முதல் ஆனந்த தாண்டவச் செப்புச் சிற்பம் பத்தாம் நூற்றாண்டைய ஒக்கூர் ஆனந்த நடராசரும், பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலை ஆனந்த நடராசருமாகலாம். கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஆனந்த தாண்டவ ஓவியங்களும் சுதைச் சிற்பங்களும் இருந்திருக்கலாம்.

.005 முதல் சிவதாண்டவச் சிற்பம்

ஆனந்த தாண்டவத்துக்கு முன் சிவதாண்டவம் என்ற பொதுநிலைக் கற்சிற்பம் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே உத்திரப் பிரதேச புமாரா, நச்சன குதாரா முதலிய இடங்களில் இடம் பெற்றுள்ளது.

.006 வழிபாட்டு வளர்ச்சி

சிவதாண்டவ வழிபாட்டு முறை தமிழில், சிலப்பதிகாரத்திலும், கலித்தொகையிலும் இடம் பெற்றுள்ளன. சிந்துவெளியில் நடனக் கோல, நடன வழிபாட்டு முத்திரைகளைக் காண்கிறோம், இரிக் வேதத்தில் நிருத்தி என்ற சொல் வருகின்றது. சிவ தாண்டவத்தின் அடிப்படையாகிய அட்ட மூர்த்த நடனம், சிவபெருமானின் அட்ட வீரட்டம் முதலிய நிலைகட்கான சான்றுகள் வேதத்தில் உள.[1] ஆனந்த தாண்டவ சித்சபை வழிபாட்டு முறையான தகர வித்தை உபநிடதங்களில் போற்றப்படுகின்றது. பரப் பிரம்ம நிலை உபநிடதங்களின் சாரம்.[2] சிதம்பர, மூல, ஆனந்த நடனம் கண்ட பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய யோகிகள் கி.மு.150 காலத்தவராகலாம். பதஞ்சலி, வியாக்ரபாதர் கண்ட ஆனந்த தாண்டவச் சித்சபை, யோகச் சித்சபை, ஞான வழிபாட்டுத் தலம். இன்றைய அபிடேக ஆராதனைகள் பிற்கால வழக்கு. பதஞ்சலி வியாக்ரபாதர் காலத்துத் தில்லை வாழ் அந்தணர், யோகிகள்; சாதி நெறிப்பட்டவரல்லர், அவர்கள் யோக நெறி தீக்கை பெற்றவர்கள். சமய வழிபாட்டு நெறிகளில் சரியையும் கிரியையும் உலக வழிப்பட்டன. யோகமும், ஞானமும் பதி நிலைச் சார்புடையன. ஆனந்த நடராச வழிபாட்டுத் தத்துவத்தின் வளர் நிலைகளைத் தத்துவ வளர்ச்சி நிலைகளில் வழிப்ப

1. குர்யே, ஜி.எஸ்., வேத இந்தியா, பம்பாய் 1979. ப:237
2. உபநிடத் தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள், இராமகிருஷ்ண மடம்.

டுத்திக் காண முயல்வோம். சைவநெறி என்பது திராவிடச் சமயக் கூறுகள், சிந்து வெளி நாகரிகக் கூறுகள், வேத நெறிக் கூறுகள் முதலியனவற்றின் சங்கமத்தில் உருவாகிய சிவநெறி, என்பதை முன்பே கண்டோம்.

.007 பக்தனின் அகத்தே வளர் நிலை

சமஸ்கிருத மொழியிலும், தமிழ் மொழியிலும் இருந்து, மறைந்த, இருந்து கிடைக்கும் சாத்திர, தோத்திர நூல்களை குருவருளால் உணர்ந்த சீடன், பக்தனாகிறான். குரு வழிகாட்டியருள்கிறார். இப்பக்தன், மந்திரம், சடங்கு, கோயில் வழிபாடு, தனி வழிபாடு முதலியனவற்றில் குருவருளால் பயிற்சி பெற்று தியான பலமும், யோக பலமும் எய்துகிறான். தியான யோக பலங்கள் பக்தனிடத்தில் தெய்வத அகக் காட்சியை ஏற்படுத்துகின்றன. இத்தெய்வ அகக் காட்சி, அவரவர் தியான பலத்துக்கும், குருவருளுக்கும், ஞானத்துக்கும் வாழ்வு நிலைக்கும் ஏற்ப, உருவம், அருவம், அருவுருவம் என்ற நிலைகளில் ஏற்படுகின்றது. தெய்வ மூர்த்தங்களின் உருவங்கள் யாவும் இத்தகைய அகக் காட்சிகளில் முகிழ்த்து, பிற்காலத்தில், எழுத்திலும், சிற்பத்திலும் வடிக்கப்பட்டனவே. அகக் காட்சியில், பக்தன் காணும் தெய்வ உருவங்களை, நூலோர், நவந்தரு பேதம் என்பர். நவந்தரு பேதத்தில் உருவ வழிபாட்டில், வழிபாட்டு இலக்குகளாக, தூல உருவில் சிவன், திருமால், பிரம்மா, மகேசு வரன் என்ற நான்கு உருவ வகையும், அருவ முறையில் தத்துவ உருவக நிலைகளாக, அதிசூட்சும நிலையில் நாதம், விந்து, சக்தி, சிவம் என்ற நான்கும், அருவுருவம் எனப்படும் சூட்சும நிலையில் பிரபஞ்ச இயலின் சிவசக்தி ஐக்கிய அம்சக் கருவாக இலிங்கம் எனப்படும் சதாசிவ லிங்கமும் அமைதல் இயல்பு.

.008 ஆனந்த நடராசர் தரிசனம்

உருவ வழிபாட்டின் சூட்சும நிலைகளாக எந்திர, சக்கர, மந்திர உரு வங்கள் அமைவதுமுண்டு. இக்கருத்தை, வழிபாட்டை ஆய்கையில், முழுவதும் காணலாம். அருவ வழிபாட்டு, சிவலிங்கப் பிரபஞ்ச இயல், உருவ வழி பாட்டின் யோக அம்சம், இயற்கை வழிபாட்டு நிலையான அட்டமூர்த்தம், உருவ வழிபாட்டின் கிரியா வழிபாட்டு முறைக்குதவும் வெற்றி வழிபாட்டு உருவங்களான அட்ட வீரட்டங்கள், மங்கள வழி பாட்டு நிலைகளான சகித வகை போக மூர்த்தங்கள், கலைவழிபாட்டு அம்சங்களான சதுரம், லலாட திலகம், புஜங்க நடனங்கள் முதலிய பரதக்கலை அம்சங்கள் முதலிய அனைத் தையும் இணைத்த அளவில் யோகியர் தம் யோகக் காட்சியில், அநாகதத்தில் கண்ட, ஒளியை, ஒளி நடனத்தை, ஆக்ஞையில் விளைந்த நாத நடனத்தை, சகஸ்ராரத்தில் கண்டு அனுபவித்த ஒலி, ஒளி சங்கம நாதாந்த போதாந்த சகஸ்ரார நடனத்தை இறுதியில் ஆனந்த நடராசராகக் கண்டனர். யோகக் காட்சியே உருவ வழிபாட்டுக்கு வழி வகுத்தது.

.009 ஆகாயப் பேறு

தில்லை மூலட்டானத்தில் சதாசிவ லிங்கத்தை வழிபடும் யோகி, இறை வனின் பிரபஞ்ச இயக்க வைபவங்களை நினைவு கூர்கிறான். ஐந்தொழில்கள், அகத்தும் புறத்தும் இயல்கின்றன. ஞான சபையாகிய சித்சபையின் முன் யோகத் தமர்கிறான். ஐந்தொழில் நடனக் காட்சியை ஆனந்த நடமாக உருவத்தில் காண்கிறான். யோக நிலையில், புறவுணர்வுகள், மறைய மறைய, அகவுணர்வுகள், மேம்பட மேம்பட, பிரபஞ்ச இயல் உருவ நடனம்

சிறிது சிறிதாக மறைகின்றது. அநாகதத்தில் உருவம் மறைந்து ஒளி உருவ நடனம் காண்கிறான். ஆக்ஞாவுக்கு வருகையில், ஒளி மறைந்து ஒலி உருவில் ஆனந்த நடம் காண்கிறான். சகஸ்ராரத்திற்கு ஏறுகையில் ஒலி, ஒளி இரண்டும் சங்கமமாகி, மறைந்து, மௌன நடனம் காண்கிறான். அதன்பின் அவனே தில்லை வெளியிலே கலக்கின்றான். இஃது ஆகாயப் பேறு, சமாதி நிலை, தாள்தலைப் பேறு, என்றெல்லாம் குறிக்கப்படுவது.

.010 இயக்க உருவம்

சிவலிங்க உருவம், சிவபெருமானின் சிவ சக்தி பிரபஞ்ச இயக்க அம்சம். சிவ பராக்கிரமங்களாய அட்ட வீரட்ட உருவங்கள் வெற்றித் திருவுருவங்கள். பிற கலை வகை நடன மூர்த்தங்கள் சிவபெருமானைக் கலைஞராகக் கண்டவை. ஆனந்த நடராச உருவம் ஐந்தொழிலை இயற்றிக் காட்டும் அனவரத தாண்டவ இயக்க உருவம்.

0.11 உயிர் ஒருமிப்பு

இதன் சிறப்பு, இயங்கா நிலையான உற்சவ உருவங்களை, ஒரு இயக்க உருவுடையதாக ஆக்கி, அதன் பேருயிர்த் தெய்வத்தன்மைகளை, அதன் உறுப்புகளில் ஐந்தொழிற் கருவிகளாக ஆக்கி, நவந்தரு பேத, உருவ, அருவ, அருவுருவ அமைப்புக்கள் அத்தனையின் அம்சங்களின் சங்கம இயக்கமாக அமைத்து, பிரபஞ்ச இயல், இயங்கு நடமாக, முப்பொருள், நாற்பொருள், ஐந்தொழில் வைபவமாக இயக்கி, வேத, ஆகம, சாத்திர, தோத்திர ஞான நெறி இயக்கமாகக் காட்டி இறையுடன் உயிரை ஒருமிக்கச் செய்யும் சித்சபா இரகசியத்துள் செலுத்துவதேயாகும்.

.012 சிவதாண்டவத் தத்துவப் பின்னணி

நடராசத் தத்துவத்தின் பின்னணியாகிய யோக தரிசனமும், நடன வழிபாடும் சிந்துவெளி அகழ்வாய்வின், அமர்ந்த இரட்டைக் கொம்பு யோகி முத்திரை, மற்றும் சில முத்திரைகளில் காணக்கிடக்கின்றன. இந்த யோக நெறி பதஞ்சலியார் காலத்தில் நூலாகவும் தில்லை தரிசனமாகவும் வளர்கின்றது. சிவபெருமானை நடராசராக வழிபட்ட மரபு மாபாரதத்தும், தைத்ரிய சம்கிதையிலும் தொடங்கிவிடுகின்றது.

.013 அசைதல் - நடனம்

அங்கிங்கெனாதபடி எங்கும் எப்பொழுதும் உள்ள இறைவனின் திருவருட் செயல்களை உணர்தலையே நம் சான்றோர் தரிசனம் என்றனர். அத்தகு இறைவனின் செயல் உருவையே, உள்ளீடாகிய ஸ்வரூபம் என்பர். இத்தகு ஸ்வரூபம் என்பது ஐந்தொழில் நடனக் கோலம். தாண்டவம் என்பது அசைதல். இறைவன் அசையாத பொருள். இவ்வசையா இறைவன் சிவா பின்ன சக்தியோடு சேர்ந்து அசைகின்றது.[3] சக்திகள் ஐவகையாகி ஐவகைத் தொழில்களைச் செய்வன.

.014 ஒளி வைபவம்


தேவர்களை ஒளியுடம்பினர் என்பது மரபு. அவர் தம் உடம்பு, அன்னமய கோசத்தாலான ஊனுடம்பு அன்று. தேவர்கட்கு, மக்கட்கு உள்ளது போல் கோசங்களும் இல்லை. தேவ தேவனான பரமேஸ்வரன் ஒளிமயமானவர். யோகிகளின் தியானத்தில் ஒளியாகப் பரிணமிப்பவர், அவரது திருமுகத்தில் மந்தஹாசத்தோடு கூடிய முக காந்தி, புதிய தாமரை மலர்களைப் போன்ற கைகளின் மத்தியில் உண்டாகும் ஒளி, வாம பாகத்தில் உள்ள

3. அய்யர், ப.15

அன்னையின் உடலில் அமைந்த காந்தி முதலியவற்றிற்கு இடையே புதிய மேக வரிசைகட்கிடையே. பல ஆகாய சூரியர்களுடைய ஒளியுடன் திகழ்ந்து இறைவன் தாண்டவம் செய்கிறார் எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் போற்றும்.[4] இதே செய்தியினை, குஞ்சிதாங்கிரிஸ்தவம், இதயத்தில் எப்பொழுதும் ஞான ஸ்வ ரூபதரராகவும், ஊனக் கண்ணினால் பார்க்க முடியாதவராகவும், தீபத்தின் ஜ்வாலாக்கினி போல் அமைபவருமான ஆனந்த நடன விலாசர் எனப் போற்றும்.[5] அந்தத் தீபத்தின் நிறம் வெண்மை எனவும் சுட்டும்.

பட்டி எண்.6

ஆனந்த தாண்டவத் தத்துவ வளர்ச்சி நிலைகள்



4. குஞ்சிதாங்கிரிஸ்தவம், பாட்டெண் 220
5. அஃதே, பாட்டெண் 272

.015 அலாத சக்கரம்.

இறைவன் பேரொளியானவர். சுபசித்தரத்தினகோசம் என்ற சமஸ்கிருத நூலில் இறைவன் திரு நடனத்தின் போது, விண்மீன்களினால் ஆன ஒரழகிய சக்கரம், அவருடைய புயல்வேக அசைவுடைய கைகள் சுழல, நிலம் மூழ்க, சுடர்களும் மலைகளும் துள்ளி எழ, கிரீடத்தில் உள்ள இளம்பிறை ஒளிர, ஒளி துள்ளி அசைய, கங்கையின் ஓசையுடன் பிரவாகம் வழிய, ஒரு தீச்சக்கரம் சுழல்வது போன்று அலாத சக்கரமாகத் தோற்றியது என்று போற்றப்படுகின்றது.[6] இவ்வலாத சக்கரம் உடையவர், பாசத்தளைகளிலிருந்து விடுதலை நல்கும் கலங்கரை விளக்கம் ஆகவும், மாயையைச் சங்கரிப்பவராகவும், சபாநாயகராகவும் உள்ளார். இவ்விறைவனை வணங்கும், அதே நேரத்தில், புன்மை நிறைந்த என் உடலிலிருந்து, ஆணவத்தை உதறுகிறேன் என்ற கருத்துப்பட வருகின்றது.[7]

.016 நாதாந்த அனுபவம்

நாதாந்தம் பற்றி, திருமந்திரம் மற்றும் பல நூல்களில் காண்கிறோம். அந்த நாதாந்த போதத்தை, சிவ போகத்தை அனுபவித்து அதன் விளைவுகளைப் பாடிய பெருமை வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்கட்கும் உண்டு. அறிஞர் வன்மீகநாதன் அவர்கள் 'ஜோதி வழியில் வள்ளலார்' என்ற நூலில் ஆனந்தாதீதம் என்பது நாதாந்த இறை அனுபவம் என்பார்கள்.[8] ஆனந்தம் என்பதைச் சிவசக்தி ஐக்கிய நிலை என்றும் சீவ சிவ ஐக்கிய நிலை என்றும் கூறுவது மரபு. உயிர் சீவ போதத்தை விட்டு சிவபோதம் நாடிச் செல்லும் வழியில் ஏற்படும் மென்மையான மனவுணர்வுகளே திருவருட்பாவின் பல பகுதிகளும்.

.017 தாண்டவ, இலாஸ்ய நடனங்களின் பொருள்

சிவ நடனத்தில், வேக நடனமாய தாண்டவமும், பெண்மை நடனமாய லாஸ்யமும் உண்டு. சிவனின் உருவமே சிவன் சக்தி; ஆண்மை, பெண்மை ஐக்கியமாக அர்த்த நாரீஸ்வர உருவம். சிவனின் அம்சமான தாண்டவ நடனம் பிரபஞ்ச இயக்கத்தையும், லாஸ்யமாகிய சக்தி அம்ச நடனம் இறைவனின் அருளுருவாகிய பசுபதித் தன்மையும் விளக்குவதாகக் காதம்பரி போற்றுகிறது.[9]

.018 சூக்கும நிலை

சூரியன் முன் பயிர்கள் வளர்வது போலச் சிவ சந்நிதியில் அவரது சக்தியால் கலக்குண்ட விந்து நாதங்களால் தத்துவ தாத்துவிகமான உலகங்கள், உண்டாகின்றன என்று கூறப்படுவதால் பரசிவத்துடைய சூக்கும நடனம் சிவ தத்துவங்களின் விளக்கத்திற்காகவே என ஸ்ரீமத்பராக்யத்தில் கூறப்பட்டுள்ளது.[10]

.019 படைத்தல் நிலை

பரம்சிவம் சண்ட, தாண்டவ மூர்த்தியாக, உலகத்தை அவ்வவற்றின் காரணத்தில் ஒடுக்கி, காரணங்களை மாயையில் ஒடுக்கி, மாயையைச் சக்தியில் ஒடுக்கி, சங்கரிக்கின்றார். அவரே, மீளவும் உண்டாக்க, உளம் கொண்ட போது, ஆனந்த தாண்டவ மூர்த்தியாய், நாதாதி பஞ்ச தத்துவங்களைப் படைக்கின்றார், என்னும் பொருள்பட சிதம்பர மான்மியம் உரைக்கும்.[11]

6. சிவராம. ப:110
7. அஃதே. ப:134
8. பகீரதன், இராமலிங்கம், மு., ஜோதி வழியில் வள்ளலார், சென்னை. ப:315.
9. சிவராம. ப:90,102
10. தேசிகர். ப:142
11. அஃதே.

.020 ஆலமரச் சிறப்பு

சிவபெருமான் ஆலமரத்தடியில் ஆடியதாகக் கூறுவது மரபு. திருவாலங் காட்டு நடனம் ஆலமரத்தடியில் நடந்தது. ஆலமர் செல்வராய தட்சிணாமூர்த்தி கோலமும் கல்லாலின் நிழலில் தென்திசை அமர்ந்தது. தேவருலகில் கல்லாலலின் கீழ் அமர்ந்தவர் பூவுலகில் ஆலமரத்தின் கீழ் ஆடினார். கல்லால் பூவுலகில் உயிர்ப்பெய்துகிறது போலும்.

.021 மூவர் - ஐவராதல்

சிவன், திருமால், நான்முகன் என்ற மூவரும் மும்மூர்த்திகள் என்ற பெயரால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்கட்கும், முதல்வராகப் போற்றப்படுவது யாரும் அறிந்தது. இம்மூன்று தொழில்களுக்கு மேல், மறைத்தல் என்னும் திரோதனம் என்ற தொழிலுக்குச் சதாசிவரும், அருளல் தொழிலுக்கு மகேசுவரரும் முதல்வராவர் என்று சேர்த்து ஐந் தொழில் என்ற மரபு பிற்கால வளர்ச்சி உயர் நிலையாகலாம். ஆனால் இவ்வளர்ச்சி பயனும் சிறப்பும் உடையது. இது மாயா தத்துவ வளர்ச்சியின் கூறாகலாம்.

.022 ஐம்பொருள்

சைவமரபில் மெய்ப்பொருள்கள் சிவன், சக்தி, சீவன், என மூன்றாக வும், சக்தியை அருள் என்று கூறி, சிவன் அருள் சீவன் என மூன்றாகவும், பதி, பசு, பாசம் என மூன்றாகவும் கூறுவது மரபு. இவை மூன்றும் பொருளில் மிக்க வேறுபாடுடையன அன்று. ஆனால் பிரம்மத்தின் உயர்நிலை, மாயா வாதம் முதலியன சிறப்புற்ற உபநிடத மரபில், மெய்ப் பொருட்கள் மூன்றென்பது ஐந்தென மாறியிருக்கலாம், திருமந்திரம், உண்மை விளக்கம் முதலிய நூல்களும் ஐம் பொருள்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன.[12] இவண் ஐம்பொருள்களில் பதி, பசு, பாசம், என்ற மூன்றுடன் திரோதம் (மறைப்பு) மலமாயை என்ற இரண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

.023 நான்கு உறுதிப் பொருள்கள்

உறுதிப் பொருட்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கென்பர், குஞ்சிஸ்தாங்கிரிஸ்தவம் நடராசர் தமருக ஓசையினால் உலகுக்கு அறத்தை யும், அக்னியினாலே பொருளையும், அபயத்தினாலே இன்பத்தையும், திருவடியினாலே வீடு பேற்றையும் அளித்துக் காக்கின்றார் என்று போற்று கின்றது.[13]

.024 வேதாந்த அடிப்படை

குஞ்சிதாங்கிரிஸ்தவம் தகரவித்தை, பிரம்மம், ஒளி உருவம், ஞான நடனம் முதலியவற்றைத் தொடர்புபடுத்தி நிருத்த மூர்த்தி உபநிடத வேதாந்த அடிப்படையில் உருவகமானவர் என்பதைக் குறிக்கின்றது.[14]

.025 ஞான நடனம்

ஆடவல்ல எம்பிரானின் நடனங்கள் நடனக் கோலங்களே. அவ னுடைய சூட்சுமமான ஞான நடனம் அண்ட சராசரங்களை ஆட்டிப்படைக்கும் அனவரத தாண்டவமேயன்றி, மானிடர் ஊனக் கண்

12. திருமந்திரம், 2710,2711 உண்மை விளக்கம் 41
13. குஞ்சிதாங்கிரிஸ்தவம் பாட்டு 272 பக் 139
14. அஃதே

ணால் அரங்கில் காணத்தகு பரத நடமன்று. சித்சபையில் காணும் ஆனந்த நடனத் திருவுரு, இறைவனது ஞான நடனத்தை ஊனக் கண்ணிற்குக் காட்டும் உருவத்திருமேனியாம்.

.026 ஊர்த்துவ தாண்டவம்

சுவாமி சித்பவானந்தர், ஊர்த்துவ தாண்டவம், யோக நெறியில் இறுதி நிலை என்பார். சீவன் ஆறாதாரங்களாகிய ஞான பூமிகளைக் கடந்து, சகஸ்ராரம் என்னும் ஏழாவது பூமிக்குச் செல்கையில் அவனுக்குச் சீவ போதம் மீதம் இருப்பதில்லை; வியக்திசென்று, ஐக்கியம் ஏற்பட்டுவிடுகிறது. சிவ சக்தி அம்சத்தில், சக்தி தன் இயல்பை இழந்துவிடுகின்றாள். இதுவே ஊர்த்துவ தாண்டவம் என்பதன் பொருள் என்பார்.[15]

.027 மேலேறுதல்

ஆனந்த தாண்டவத்தைப் பார்த்தால் இடக்கால் தூக்கி ஆடுகின்றது. உயிர்கட்கு வாழ்க்கை ஆரம்ப நிலையில் இருக்கும் போது அது சக்தியினுடைய பராமரிப்பில் உள்ளது, எனவே தேவியின் திருநடமாகத் தொடங்கி, யோக பலம் பெற்ற போது வலக்கால் மேலே எழும்புகின்றது. வாசி நிலையிலும் வலப்பக்க வாசியாகிய பிங்கலை சற்று சூடுள்ளது. பிங்கலை மேலேறுகின்ற போது அமிர்ததாரகையும் ஒளி அனுபவமும் மிகுவது இயல்பு.

.028 ஞான மார்க்கம்

ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகங்களில், திருச்சிற்றம்பலம் மேய பெருமானின் பெருமைகள் போற்றப்படும் போது, பசு வேட்டல், எரியோம்பல், நறு நெய்யொடு பால் தயிர் அபிடேகம் செய்தல் முதலியன, கற்றோரால் தில்லையில் இயற்றப் பட்டன என்பது குறிப்பிடப்படுகின்றது. இறைவனுடைய ஆடை திருவடி முதலியன குறிப்பிடப்படுவதால் திருச்சிற்றம்பலத்தில் நடராசர் உருவம் இருந்துள்ளது. இவண் மறையோர், தில்லை நல்லவர் பிரியாத சிற்றம்பலம், சிட்டர் வாழ் தில்லை, அந்தணர் பிரியாத சிற்றம்பலம், தில்லையார், கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலம் என்றெல்லாம், பதிகங்களில் வருவன தில்லையில் வாழ்ந்து அவ்வூரையும் இறைவனையும் பிரியாத ஞான மார்க்கச் சைவர் தில்லையில் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

.29 தில்லையில் குரு சீடப் பரம்பரை

நாவுக்கரசர் அவர்கள் 'செஞ்சடை' எனத் தொடங்கும் திருநேரிசை கொல்லிப் பண் பதிகத்தில் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் எரியாடுமாறே என்று சொல்கிறார். அரவமாடல், எரியாடல் இரண்டும் கூறப்படுகின்றன. ஆடல் காண, நிருத்தம் காண கூத்து காண, ஆடும் ஆறு காண, சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் என்கிறார் திருஞானசம்மந்தர். அதுபோன்றே நாவுக்கரசரும் சிட்டர் வாழ் தில்லை என்கிறார். மேலும் தில்லை வட்டம் என்றும் கூறுகின்றார். தில்லையில் குரு சீடப் பரம்பரை ஒன்றிருந்தது என்பதை இது சுட்டுகின்றது. ஞான மார்க்கத்துக்கு குரு இன்றியமையாதவர். அரவமாடல், எரியாடல் இரண்டும் பழைய கிராமிய வளர்நிலை.

---

15. சித்பவானந்தர், ப:151

.030 ஒடுக்கம், விரிவு, இயக்கம்

சிவம் விரிந்து பல்வகை திருச் செயல்கட்குரிய நிலை எய்துகையில் சதாசிவம் எனப்படும், ஒடுங்குகையில் அர்த்த நாரீஸ்வரநிலை. ஆனந்த நடராசத் திருவுருவில் ஒடுங்கியும் விரிந்தும் செயல்படும் இயக்க நிலை.

.031 துவந்த சமம், இருமை ஒருமை

கூத்தப் பெருமானின் திருமுடியில், நஞ்சுமிழும், அஞ்சத்தகு, நாகம் ஒன்று படமெடுத்து நம்மை வரவேற்று நிற்கின்றது. அதன் அருகே, எல் லோரும் விரும்பும், தண்ணிலவுமிழும், இளம்பிறையும் அழகுற்று நிற்கின்றது. சாவுக்கு வழி வகுக்கும் நஞ்சுமிழும் நாகம் ஒருபுறம், சாவாமை அருளும் அமிர்தம் பொழியும் இளம்பிறை ஒருபுறம்; அவரோ எனின் அண்ட சராசரங்களும் தேவ உலகங்களும் அவரைச் சுற்றிச்சுழன்று வருகையில் சுடுகாட்டில் நடமிடுகின்றார். அவரது நடனத்தால் மயான பூமி சுவர்க்கமா கின்றது. நெற்றிக்கண்ணிலிருந்து எழும் தீ காமனையும் எரித்த வன்மையுடையதாக இருக்க, அவர் முடிக்கண் தண்மையும் தூய்மையும் மிக்க கங்கை பொங்கி வருகின்றது. அவரது அருளால் அனைவர்க்கும் சுபிட்சத் திற்கான உத்திரவாதம் கிடைக்கையில் அவர் கையேந்தி பிட்சாடனர் வேடத்தில் பிச்சை எடுக்கிறார். இறைவனின் இவ்விருமைப் பண்புகளை, வைத்தியநாதர் தனது சதுக்திகர்ணாமிர்தத்தில் புகழ்கின்றார். உயிர்களின் பிறவிச் சூழலில் தளைகளை அறுப்பவராகிய அரன், நித்தியத்தன்மையில் தன் காலத்தைக் கழிக்கிறார். சுபிட்சத்தின் உச்சம், பிச்சைப் புகுதலின் ஆழம், அமிர்தத்தோடு, தொடர்பு கொண்ட போதே, நஞ்சையும் உணவாகக் கொள் ளுதல், விண்ணுலக வாசம் போன்றே, மயானத்து வாசம், குளிர் நீராகிய கங்கையைக் கொண்டது போலவே, தீயையும் கொள்ளுதல் என்பனவாகிய வேறுபாடு கொண்ட இருமைகளை ஒருமைச் சமமாகக் கொண்டவர் இறை வன் என்கிறார்.[16]

.032 லய நிலை

சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியம் செய்யும் தாண்டவேசுரர், சதாசிவர்க்கு இருப்பிடமாகிய சிவ தத்துவமானது காரியமனைத்தும் தனக்குள்ளே லயித்து அடங்கிய போது லயத்துவம் எனப் பெயர் பெறுகின்றது.[17] இவண் ஆனந்த நடராசர் சிருஷ்டியாதி, பஞ்ச கிருத்தியங்களை, பஞ்ச கிருத்திய காரிய கர்த் தாக்களாகிய புத்திரர் ஐவர் எனப்படும், சதாசிவர் (அருளல்) மகேஸ்வரர் (மறைத்தல்), உருத்திரர் (சங்காரம்), விஷ்ணு(காத்தல்) பிரம்மா (படைத்தல்) என்ற ஐவர் வழியாகச் செய்கின்றார். இவர்கள் ஐவரும் தாண்டவேசுவரரி டம், லயமாகின்றனர் என்பது குறிப்பு.[18] தாண்டவேசுவரர் பஞ்ச கிருத்தியங்களைச் செய்ய, ஒவ்வொரு கிருத்தியத்துக்கும் ஒரு வகை நடனம் ஆடினார். என்பதும், ஒவ்வொரு கிருத்தியத்துக்குத் தனித் தனி தாண்டவ மூர்த்தங்கள் இருக்குமா என்பதும் ஆய்வுக்குரியன.

.033 மாயா தத்துவம்

மாயா தத்துவம் இந்தியத் தத்துவச் சிந்தனையில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளது. பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், இப்பிறவி, மறுபிறவி, புண்ணியம், பாவம் முதலிய செயல்முறை நிகழ் தத்துவங்கட்கு அரிய

16. சிவராம, ப:36
17. செந்தில் நாதய்யர், ப:74,96,100
18. அஃதே, ப:72

விளக்கமாக அமைவது மாயா தத்துவம். மறைப்பு என்னும் திரோதம் என்பது மாயா தத்துவத்தின் கேடயம் என்றும் சொல்லலாம். மாயா காரியமாய் அமையும் ஆணவம் கன்மம் மாயை என்ற மாயைகள் சிவதாண்டவ மூர்த்தங்களில் முயலகனாகக் காட்டப்பட்டுள்ளன. மாயையை அழிக்காது வெற்றி கொள்வதே முயலகனை வதம் செய்யாது அடக்கிய நிலை.

.034 பதி நிலை

பதி நிலை, பசு நிலை இரண்டின் வேறுபாடு, பதியால் யாவும் இயல்கின்றன என்பதும், பசுவின் நிலை அவன் அருளால் தான் இயங்க இயலும் என்பதுமே. இவண் அபயகரம் பதிநிலை; அருட் செயலைக் காட்டுவதாகும்.

.035 திரோதனம்

வாழ்வில் நல்வினை, தீ வினைகட்கு இடையே உழலும், இயலும் உயிர், அறியவொண்ணா நிலையாகிய மறைப்பை இறையருளால் பெற்றுள்ளது. மறைப்பு மிக மிக இன்றியமையாதது. மிக்குயர்ந்த முமூட்சுகட்கு, யோகிகட்கு, தெளிந்த ஞானம் ஏற்படுகையில் மறைப்பு குறைவாகலாம். ஆனால் எளிய மக்கட்கு மறைப்பு திரோதனம், வீட்டின் அறைகளின் சுவர் மறைப்புக்கள் போல், இன்றியமையாதது. அறிதொரும் அறியாமை இன்றேல், உலக வாழ்வு சுகிக்காது. உலகியலாகிய செயல் நடைபெறாது. ஐந்தொழிலின் சிறப்பு, படைத்தல், அழித்தல், காத்தலுக்கு மேலாக உள்ள மறைத்தல், அருளல் இரண்டுமே. இவண் திரோதனமே மறைத்தல். இது ஐந்தொழில்களில் ஒன்று.

.036 புருஷம் - பிருகிருதி

ஆடவல்ல பிரானின் இடக்காதில் மாதொரு பாகரின் சின்னமாகிய குழையும், வலக் காதில் புருஷச் சின்னமாகக் குண்டலமும் காண்கிறோம். பிருகிருதியாகிய சக்தியும், எல்லாம் வல்ல புருடனாகிய எம்பிரானும் இணைந்த அர்த்தநாரீஸ்வரத் திருக்கோலம் இது, குலணர்வதந்திரம். இதனைப் போற்றுகின்றது.[19] இதனைச் சிவ சக்தி இணைப்பின் சின்னம் என வாயுசம்கிதை போற்றும். இது சக்தி பிருகிருதி அம்சம்.

.037 பிரம்மம்

பிரம்மம் என்ற தெய்வ நிலை, உபநிடதங்களில் குறிக்கப்படுகின்றது. உபநிடதங்கள் வேதாந்த நூல்கள் எனப்படும். நடராசத் தத்துவத்தை விளக்குகையில் பரப்பிரம்ம நிலையை முன் வைத்து சைவ சித்தாந்த வேதாந்தம் என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம். மேலை நாடுகளில் தத்துவங்கள், சமயம், விஞ்ஞானம் என்ற மூன்றும் ஒன்றாகக் குறிப்பிடப்படுவதில்லை. இவண் நடராசத் தத்துவத்தில் சமய உண்மைகள், தத்துவம், பிரபஞ்ச இயல் விஞ்ஞானக் கொள்கை முதலியன ஒருமை எய்திய நிலையைக் காண முடிகின்றது. இது பிரம்ம தத்துவம்.

.038 மூவகை நடராச மூர்த்தங்கள்

நடராச மூர்த்தங்கள் தம் செயலால் மூவகைப்படும். தாண்டவேசுவரர், ஸ்ரீகண்டருத்திரர், மகேஸ்வர நடராசர் என்பன அவை.

.039 தாண்டவேசுவரர் - ஆனந்த நடராசர்

ஐந்தொழிற் கருத்தாவாகிய பர சிவ தாண்டவேசுவரர், ஆனந்த நடராச மூர்த்தி. இவர் சித்சபா நாயகர்; பரம வியோம வாசி; ஆகாயத் தத்துவர்; அங்குஷ்ட பிரமாண தகராகாசத் தெய்வம்; முத்தான்மாக்களை நோக்கி

19: சித்பவானந்தர் உரையாடல்

அருள்பவர்; அவரது நடனம் பரமுத்தித் தானம், இவரை சம்பு பட்சத்து அதி தெய்வ நடராசர் என்றும், தாண்டவேசுவரர் என்றும் நூலோர் போற்றுவர். இவர் சதாசிவ உருவின் ஈசான மூர்த்தி; அனவரத தாண்டவம் செய்பவர்.[20]

.040 ஸ்ரீ கண்ட ருத்திரர்

ஐந்தொழில்களுள் ஒன்றான அழித்தல் தொழிலை இயற்றும் அழித்தல் காரிய கர்த்தாவாகிய ஸ்ரீ கண்ட ருத்ர நடராசர் பெத்தான்மாக்களை நோக்கி அழித்தல் தொழிலைச் செய்பவர். குண தத்துவ நிலையர். அழிப்புக் காலத் தில் மட்டும் இயங்குவார்; திருக் கோயிலில் இவருக்குப் பரிவாரத்தானம்.

.041 மகேஸ்வர நடராசர்

மகேஸ்வர மூர்த்தங்களுள் ஒன்றாகக் கருதப்படும் நடன அழகு பொருந்திய பரத நிலைக் கரணங்களைக் கொண்ட லலிதம், லலாட திலகம், புஜங்கம், சதுரம் முதலிய நடராச மூர்த்தங்கள் பொது நிலையன. அவை ஈஸ்வர தத்துவ காரிய நிலை உடையன. சுத்த மாயா காரியத் தன்மையன. அவை பரிவாரத்தானம் உடையவை. பர சிவத்திடம் லயமடைவன. இவை ஸ்ரீகண்ட ருத்ர நடராசரின் அம்சங்கள் எனினும் தகும். பொதுவில் மூவரில் ஒருவராய சிவன் எனலாம்.

.042 கருத்தா

மீண்டும் இவண் வலியுறுத்த வேண்டியது பரசிவ தாண்டவேசுவரராய ஆனந்த நடராச மூர்த்தி, தானே லயத் தானம்; அவர் நவந்தரு பேதத்துக்கு மேலானவர்; அவர் அனைத்துக்கும் கருத்தா. எனவே அவர் பிற இருவகை மூர்த்திகட்கும் வேறானவர் என்பதைத் துணிதல் சால்பு. கைலாச சம்கிதை என்ற நூல் 'ஆகாசாதிபதிப் பிரபுவாகிய சதாசிவரே (தாண்டவேசுவரரே) சமஷ்டியாகக் கொள்ளப்படுகிறார். அவருடைய வியஷ்டியை அடைந்தவர் மகேசுவரர் முதலிய நால்வருமாம்' எனப் போற்றுகிறது. இதன் பொருள் ஆனந்த நடராசத் தாண்டவேசுவரர், கருத்தா என்பதும் பிற நடராச மூர்த்த நிலைகள் பரிவாரத் தானங்கள் என்பதும் ஆகும்.[21]

.043 ஞான அம்சம்

திருக்கோவில்களில் வீதியுலா வரும் தெய்வப்படிமம் உற்சவர் எனப்படும். இவண் சித்சபையில் நடைபெறும் ஆனந்த நடராசர் ஐம்பொற் படிமமாயினும் உற்சவர் அன்று. மூலட்டானர், இரகஸ்யம், ஸ்படிக லிங்கம், இரத்தின சபாபதி ஆய அத்தனை அம்சங்களின் சங்கம உருவத்திரு ஞான அம்சம். இத்திருவுரு ஆனித் திருமஞ்சனம். மார்கழித் திருவாதிரை நாட்களில் மட்டுமே, ஆண்டில் இரு நாட்கள் தான், சபை வலம் வருகின்றது, ஆண்டில் நான்கு நாட்கள் சித்சபையிலிருந்து கனக சபைக்கு வருகின்றது.[22] முயல கனைப் பிருகிருதியின் பிரதிநிதியாகவும், முக்குணங்களின் அம்சமாகவும், மும்மலங்களின் அம்சமாகவும் குறிப்பிடுவர். 'முக்குணமாயுள்ள மாயைக்கு அடிமைப்படாதே, பிருகிருதியின் ஆதிக்கத்தைப் புறக்கணித்து ஞான வாழ்க் கைக்குத் தயார் செய்துகொள்' என்ற கோட்பாட்டை முயலகனைச் சாய்க்கும் ஊன்றிய திருவடியின் அமைப் பால் காட்டுகிறார் என்பர்.[23]

---

20. சிவ அருணயோகி, ஸ்ரீ பஞ்சாட்சர, அஷ்டாட்சர மந்திரார்த்த சங்கிரக விளக்கம், திருப்பனந்தாள் 1944 ப:26-27
21. செந்தில் நாதய்யர், ப.26
22. சேது தீட்சிதர் ப:59
23. சித்பவானந்தர். ப:147

.044 கோசங்களும் ஆனந்த நடராசத் தத்துவமும்

பிரம்மம் என்பது ஆனந்த மயமானது அதுவே ஆனந்த நடராசர். தைத்திரியோபநிடதத்தில் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என்று ஐந்து கோசங்கள் பற்றிக் குறிப்பிடப் படுகின்றது. அவற்றுள் ஆனந்தம் பரப்பிரம்ம சிவபெருமானுக்கு உள்ளது என்று பிரம்ம சூத்திர சைவ பாஷ்யத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வைந்தனுள், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் என்பவற்றுள் மயம் மிகுதிப் பொருட்டாம் என்றும், விஞ்ஞான மயம் அறிவு மிகுதியுடைய ஆன்மாவின் மேற்றாம் என்றும், ஆனந்த மயம் என்றது ஆனந்த மிகுதியுடைய பிரம்மத்தின் மேற்றாம் என்றும் அறியப்படுகின்றது. உயிரும் பிரம்மத்தின் அம்சமே எனினும், ஏகான்வாதக் கருத்துப்படியும், சீவான்மா என்னும் உயிருக்கு ஆனந்தமில்லை என்ற கருத்தை சர்வ சாரோப உபநிடதம் கூறுகின்றது என்பர்.[24] மேற்கண்டவாறு தைத்திரியோபநிடதத்திலும், வேதாந்திர சூத்திரத்திலும், கூறியவாறு தாண்டவேசுர சதாசிவப் பெருமானுக்கு ஆனந்தம் உள்ளது, எனவே அவரே ஆனந்த நடராசர் என்பது பெற்றாம்.

.045 புராணங்கள் கூறும் தாண்டவப் பின்னணி

ஐந்தாம் வேதம்

இந்து சமய வரலாற்றில், தெய்வங்களின் சிறப்பு பற்றியும், சமயக் கொள்கைகளில், தத்துவங்களின் வளர்ச்சி பற்றியும் அறிய உதவும் அரிய நூல்கள் புராணங்கள். புராணங்களை உபநிடதங்கள், ஐந்தாம் வேதம் என்றழைக்கும் மரபு உண்டு.[25]

.046 வரலாற்று அமைதி

குப்தர் காலம் தொடங்கி, அதற்கு முற்பட்ட கி.மு. ஆயிரம் வரை நடைபெற்ற பல நிகழ்ச்சிகளின் வரலாற்றுத் தொகுப்பு போல் புராணங்களில் அமைகின்றன.[26] புராணச் செய்திகள் யாவும், பல்வேறு இந்து மரபுகளின் வளர்ச்சி அலைகளின், வளர் சான்றுகளாகும்.

.047 புராணங்களின் காலம்

இப்பொழுது கிடைத்திருக்கும், வடமொழிப் புராணங்கள் பெரும்பான்மையும் கி.பி. நான்கு முதல் ஆறாம் நூற்றாண்டுக்குள் குப்தப் பேரரசர்களால் தொகுக்கப் பெற்றவையாகும்.[27] ஆனால் தமிழில் புராணங்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வாக்கில் தான் வெளி வந்தன. மற்றும் சமஸ்கிருதத்தில் காணும் மூல புராணங்கள் பெரும்பான்மையும் தமிழில் வரவில்லை.

.048 புராணங்களின் பொருண்மை

பொதுவில் புராணங்கள் உலகின் மூலத்தோற்றம், உலகின் மறு தோற்றம், காலக்கிரமஅழிவு அல்லது பிரளயம், மன்னர் மற்றும் இருடிகளின் பரம்பரை, அவர்களின் வரலாறு பற்றிய கதைகள் முதலிய ஐந்து பொருள்களைக் கூறும் மரபின.[28] புராணக் கடல்களில் கிடைக்கும் நல்முத்துக்கள் வரலாற்று முறையில் சமய வளர்ச்சியை அறியத் துணை நிற்பன.

---

24. செந்தில் நாதய்யர் ப:26
25. கார்னிலியா டிம்மிட் வாஸ், ஜே.ஏ.பி., இலக்கிய உறிந்து பௌராணிகம். ப:3
26. அஃதே. ப:6
27. அஃதே. ப:8
28. அஃதே. ப:9

.049 புராணம் பற்றிய ஐயங்கள்

புராணங்கள் பொய்க் கதைகள், அவை கற்பனைக் கதைகள் என்பன தவிர ஒன்றுமில்லை என்ற கருத்து சமய ஆய்வுக்கு ஏற்றதன்று. இந்து சமயம் மிகவும் தொன்மையானது. தொகுக்க முடியாது விடுபட்டு விலகும் வெகு நீண்ட கால இடைவெளிகள் ஆயிரம் பல நூறுகள் என எண்ணில் அடங்கா ஆண்டுகளைக் கடக்கின்றன. பல்வேறு கால புராண புருஷர்களைக் கால வேறுபாடுகளை மறந்து, ஒரே புராணத்தில் பின்னப்பட்ட நிலைகள் இருக்க லாம். எனவே புராணங்கள் சமய வரலாற்றுப் புருஷர்கள், நிகழ்ச்சிகள், தத்துவங்கள் முதலியன, வளர்ச்சியைத் தொட்டுச் செல்வதைக் கண்டு பிடித்து, பயன்படுத்திக் கொள்வது, பொருண்மை பொதிந்த ஆய்வு நெறியா கும். புராணச் செய்திகளில் தோன்றுகின்ற சில இடைவெளிகள், காலமயக்கம், செய்தி மயக்கம் முதலியன, கர்ணபரம்பரையாக நெடுங்காலம் வந்து, பிற்காலத்தில் ஏட்டில் இடம் பெற்ற போது விடுபட்ட விண்டுரைக்க இயலா விந்தைகள் எனலாம். சமஸ்கிருத மூல புராணங்கட்கும் தமிழ்ப் புராணங்கட்குமிடையே கூட சற்றேறக்குறைய ஐந்து முதல் ஏழு நூற்றாண்டு இடை வெளிகள் உள. நடராசத் தத்துவத்தை அறியப் புராண ஞானம் இன்றியமையாதது. வல்லார் மேலும் ஆய்ந்து பொருள் சேர்க்க வழிகள் உள.

.050 உருத்திரனின் தத்துவப் பின்னணி

சிவபெருமான் வேதகாலத்தில் ருத்திரன் என்றழைக்கப்பட்டுள்ளார். சிவனுக்கு ருத்திரன் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்று கூர்ம புரா ணத்தில் கூறப்படுகிறது. 'பெருங்குரலில் கூவியதால் நீ ருத்திரன் என அழைக்கப்படுவாய்' என பிரம்மா கூறியதாக வருகின்றது. மேலும், பிரம்மா, ருத்திரனுக்கு பவா, சர்வா, ஈசான, பசுபதி, பீம, உக்கிரச, மகா தேவன் முதலிய ஏழு பெயர்களையும், சுவர்கசா, உமா, வைகேசி, சிவா, ஸ்வாக, திசா, தீட்சா, ரோகினி என்ற எட்டு மனைவியரையும், சுவர்கசா, புனஸ்கரா, சுக்ரா, லோகிதங்கா, மனோஜவா, ஸ்கந்தா, சர்கா, சந்தானா, புத்தா என்ற எட்டு மக்களையும், சூரியன், நீர், பூமி, அக்னி, வாயு, ஆகாயம், இயமானர், சந்திரன் முதலிய எட்டு உருவங்களையும் தருவதாக வருகின்றது.[29] இவண் மேற்கண்ட பெயர்களில் பல நடராசத் தத்துவத்தின் உள்ளீடான பஞ்சப் பிரம்ம நிலை, அட்ட மூர்த்த நிலை, பஞ்சபூத நிலை முதலிய தத்துவங்களைக் குறிப்பிடப் பயன்படும் பெயர்கள் உள. மேலும் சிவ நடராசரின் உறுப்புக்க ளாகிய சடைமுடி, நீலகண்டம், பினாகம், திரிசூலம், நந்தி, செந்நிறம், எங்கும் நிறை தன்மை முதலியனவும் கூர்ம புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன. ருத்திரன், பைரவர் போன்ற நிலைகள் நடராசருக்கு முந்தைய வீரட்ட நிலைகள்.

.051 பிரபஞ்ச முட்டை - புருடன் - உற்பத்தி

சிவதத்துவம் - நடராசத்தத்துவம், இவற்றின் அடிப்படைப் பின்னணி பிரபஞ்ச உற்பத்தியும் இயக்கமும். இப்பிரபஞ்ச இயல் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. பல்லாயிரம் யுகங்கள், பிரபஞ்ச முட்டை நீரில் மிதந்து கொண் டிருந்தது. காலத்தின் விளைவால் பிருகிருதியில் இணைவதற்காக புருஷன் உயிரற்ற பொருள்களிடை உயிர்ப் பொருள்களை உற்பத்தி செய்கிறான். பிரபஞ்ச முட்டை உடைகிறது. அதன் உள்ளிருந்து ஆயிரம் தொடைகள்,

29. அஃதே. ப:15

கைகள், கண்கள், முகங்கள், தலைகள் உடையவனவாக புருடன் உதிக்கின்றான். இப்புருடனின் ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் ஒவ்வொரு வகை சாதியும் பொருள்களும் உண்டாகின்றன. இந்தச் செய்தி மார்க்கண்டேய புராணத்தில் வருகின்றது. [30] உலகோற்பத்தி காலத்தில், உற்பத்திக்குரிய உதய காலத்தில் ஆக்கற் கருத்தா, பிருகிருதி புருஷன் இரண்டனுக்குள்ளும் புகுகின்றார். உற்பத்திக்கால யோக முறையில் அவற்றைக் கலக்குகின்றார். அவண் அனைத்தும் உற்பத்தியாகின்றன.

.052 பிரபஞ்ச இயக்க மூல யோக நடனம்

பிரபஞ்ச இயக்கமே சிவதாண்டவம். இதனைப் புராணங்கள் புகழ்கின்றன. யோகிகளுடன் உரையாடிய இறைவன், அதன்பின், தனது உயர் தெய்வ இயற்கையைக் காட்டுவதற்காக, மேகங்கள் அற்ற ஆகாயத்தில் விஷ்ணுவோடு சேர்ந்து நடமாடுகின்றார். யோக நெறி அறிந்த யோகிகள் யோகமறிந்த அகக் கண்ணால் அந் நடனத்தைக் கண்டனர். [31] அந்நடனத்தின் போது மக்களை வினை வீடு செய்தற்காக, மக்களின் அறியாமையைப் போக்குவதற்காக, ஆகாயத்தில் ஆயிரம் தலைகள், ஆயிரம் கால்கள், ஆயிரம் கைகள், சடை முடியுடைய ஆயிரம் உருவங்களுடன், சூல பாணியாக, பல்வேறு கருவிகளோடு, அங்காந்த வாயுடன், சந்திர சூரிய அக்கினி ஆகிய முத்தீக்களையும், தன் பெருமையாகக் கொண்டு, புலியுரி தரித்து கோடி சூரியப் பிரகாசத்தோடு ஹிரண்ய கர்ப முட்டையின் உள்ளும் புறமுமாக நின்று ஆடினார். பிரசேதர்கள், முனிவர்கள் அணுவிற் கணுவாய அசையாப் பொருளாய், தன்னுள் இருக்கும் இறைவனை, புனித பிரம்மக் கருவை, தங்க நிறக் கருவை, உயர் யோக முனிவரை, உயர்வுக்கு உயர்வாய் அப்பாலாய் இருப்பவரைப் புகழ்ந்து பாடினர். தேவர்கள் பிரபஞ்ச மூலகாரணராய், விராட் புருடனாய், வேத காரணனாய், வேத ஒடுக்க புருஷராய், பிரம்ம சக்கர சுழற்சிக்குக் காரணராய், உலக க்ஷேம கருத்தாவாய், நிறை மாயா சாரியாய் இருக்கும் தெய்வத்திடம் புகலிடம் கேட்டுப் போற்றினர், கபாலியாய இறைவன் அகங்குளிர்ந்து அருளினார். இந்த யோக நடனம் கூர்ம புராணத்தில் குறிக்கப்பட்டது. ஹிர்ண்ய கர்ப்பமாய பொன் முட்டையில் ஆடுவதும், பொன்னம்பலத்தில் ஆடுவதும் ஒன்றென்க.

.053 மாய விடுதலை

மாய விடுதலை, சிவதாண்டவத்தின் பயன்களுள் ஒன்று, தாருக வன முனிவர்களின் செருக் கடக்கிய பிட்சாடன நடனம், சிவ கோடி ருத்ர புராணத்தில் வருகின்றது. சிவனைக் கண்டு ரிஷி பத்தினிகளும், விஷ்ணு மோகினியைக் கண்டு ரிஷிகளும், மயங்கி நிறை இழந்தனர். இறைவனின் ஊர்த்துவ லிங்கம் கீழே விழுந்து தீப்பிழம்பாக அண்ட சராசரங்களை எல்லாம் எரித்து நிற்கின்றது. பிரம்மனின் அறிவுரைப்படி முனிவர்கள் வேண்ட, அன்னை பார்வதி, யோனியாக உருவெடுக்க, சிவசக்தி ஐக்கியம் நடைபெறுகின்றது. மூவுலகங்களையும் படைத்து, அழித்து, இயக்கும் சிவ சக்திகளின் மாயத் தன்மையையும், மாயா விடுதலைக்கு இறைவன் உதவுவதையும், இந்நடனத்தால் பெற்றோம். [32] கோயிற் புராணத்தில் அபிசார ஹோமம் வழி இறைவற்கு ஏதம் விளைவிக்க முயலகன் உட்பட அனுப்பிய

30. அஃதே, ப:32
31. அஃதே, ப:202-03
32. அஃதே, ப:203-04

கருவிகளை அவர் அணிகலன்களாகக் கொண்டார். இறைவனின் உட்பொருள் அமைந்த, அக நடனத்தைத் திருமால் அசைபோட, அதை அறிந்த, ஆதிசேடன் அனுமதி பெற்று, பதஞ்சலியாக மீண்டும் அந்நடனத்தைக் காணத் தில்லை வந்து தவமியற்றுகின்றார். கோயிற் புராணம் பதினான்காம் நூற்றாண்டைய உமாபதி சிவாச்சாரியாரால் எழுதப்பட்டது. கோயிற் புராணச் செய்திகள், கந்த புராணத்தில் முன்னரே, குறிக்கப்பட்டுள்ளன.

.054 தாண்டவ - யோக நடனம்

தாருகாட்சன் என்ற அரக்கன் ஒரு பெண்ணால் மட்டுமே கொல்லப்பட முடியும் என்று வரம் பெற்றவன். அவனுடைய கொடுமை தாங்காத தேவர்கள் சிவனை நாடுகின்றனர். சிவன் பார்வதியை நோக்கு கின்றார். பார்வதி மாய சக்தியால் இறைவனின் உடம்பில் புகுகின்றாள். இறைவன் நீலகண்ட நஞ்சிலிருந்து இன்னொரு உடம்பெடுக்கின்றார். இதனைத் தனது மூன்றாவது கண்ணினால் உணர்ந்த இறைவன், கருநிற கண்டமுடைய காளியைத் தன் மூன்றாவது கண்வழி தோற்றுவிக்கின்றார்.[33] காளியின் வீராவேசம் அரக்கனை அழித்தது. ஆனால் தணிய வில்லை. இறைவன் ஒரு குழந்தை வடிவெடுக்கின்றான். இம் மாயக் குழந்தை, பேய்கள் நிறைந்த மயானத்தில் ஓலமிடுகின்றது. காளி தன் மார்பகங்களால் பால் கொடுக்கிறாள். காளியின் வெறியைக் குழந்தை உறிஞ்சி விடுகின்றது. சந்தியா நேரத்தில் காளியை மகிழ்விக்கத் தன் பூத கணங்களோடு வேக தாண்டவமாடுகிறார். மாயையின் செயல்கள் பல. இத்தாண்டவத்தினைத் தேவர்களும் முனிவர்களும் யோக சக்தியால் யோக இன்பமாகக் கண்டனர். இது லிங்க புராணத்தில் வருகின்றது. சந்தியா காலம், யோகம், மயானம், காளியை அடக்கல் என்ற நான்கும் இவண் சிந்தனைக் குரியன.

.055 ஊர்த்துவ யோகம்

திருவாலங்காட்டுப் புராணம், ஆனந்த முனிவரும், கார்க்கோடகன் என்னும் பாம்பரசனும் இறைவன் காளியோடாடிய நடனம் காணத் தவம் இயற்றியதாகக் கூறும். சும்பன், நிசும்பன் என்ற அசுரர்கள் காளியால் கொல்லப்படுகின்றனர். காளிக்கும் இறைவற்கும் நிருத்த யுத்தம், அதன் விளைவு ஊர்த்துவ தாண்டவம். காளி காலைத் தூக்க இயலாது தலை குனிகிறாள். இது ஆலமரக் காட்டில் நிகழ்கின்றது. ஆலங்காடு ஞானத்தின் பிறப்பிடம். கால் என்பது மூச்சு. யோக நெறியில் மூச்சைப் பிராணாயாமத்தால் ஊர்த்துவ நிலைக்குக் கொண்டு செல்வதே இந்த யோக நடனம். திருவிக்ரம நிலை என்பதும் ஒக்கும். கூர்ம புராண, ஊர்த்துவ யோக நடனத்துடன் இது தொடர்புடையதாகலாம்.

.056 சந்தியா தாண்டவம்

சிவபெருமான் சமுத்ரமந்தானம் என்னும் அமிர்தம் கடைந்த பின், ஆலகால விஷத்தினை அருந்தி ஓர் கணப் பொழுது ஒன்றும் புரியாமலிருக்கிறார். தேவர்கள் அது கண்டு அர்ச்சனை செய்தனர். அங்ஙனம் அர்ச்சனை செய்த திதி ஏகாதசி. அடுத்த நாளாகிய திரியோதசியில் சிவபெருமான், உமாதேவியாரை இருக்கையில் அமர்த்தி, ஓர் யாமப் பொழுது கையில் சூலத்தைச் சுழற்றிக் கொண்டு நடந்தார். அதுவே பிரதோஷ நடனம் என ஆகமத்திரட்டு கூறும்.[34] சோம தேவரின் கதாசந்தசாகரத்திலும், பிரதோஷ

33. அஃதே, ப:200-01

34. தேசிகர், ப:135

ஸ்தோத்திரத்திலும், சந்தியா தாண்டவ வருணனை பின் வருமாறு வருகின்றது. வைர மணிகள் இழைக்கப் பெற்ற, பொன் சிம்மாசனத்தில், மூவுலகங்கட்கும் தாயாய தேவியை இருத்தி, திருக்கைலாயத்தின் உச்சியில் சூலபாணி ஆடுகின்றான். அமரர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கின்றனர். கலைமகள் வீணை இசைக் கின்றாள் இந்திரன் குழலூதுகின்றான். திருமகள் ஒரு பாடலைத் தொடங்குகின்றாள் திருமால் முழவு இசைக்கின்றார்.[35] அந்தி வேளையில், இத் தெய்வத் திருநடனத்தைக் கண்டு களிக்கவும், ஒருங்கே சேர்ந்தொலிக்கும் பல்லிய இசையைச் செவிமடுத்தின்புறவும், கந்தர்வர்கள், யட்சர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், அமரர்கள், அப்சரசுகள், இன்னும் மூவுலகவாசிகளும் வந்து கூடுகின்றனர். சந்தியா நடனத்தின் போது சூலபாணி யான தேவி வீற்றிருக்கும் காட்சி, நடனத்தில் வல்லவர் முன் வல்லமை குறைந்தவர் இயலாது உட்கார்ந்து விட்டது போல் உள்ளது. மாலைக் காலக் கதிரவன் பொழியும் செந்நிறம் தேவியின் உடல் சிவந்தமை போலத் தோன்றுகிறது என ஓரிடத்தில் பாணகவி பாடுகிறார்.[36] இரத்னாகரர் இயற்றிய சுபாஷித ரத்ன கோஷத்தில் வரும் சோமனாத பிராஸ்திதியில் சந்தியா தாண்டவத்தின் போது இறைவனது திருக்கைகள் சுழல்கையில் மலைகளும், காற்றும், கடல்களும் சுழன்று, புயல் வீசும் சூழல் ஏற்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.[37] காளிதாசர் மேகதூதத்தில் உஜ்ஜயினி மகாகாளர் திருக்கோவிலில் நிகழும் சந்தியா தாண்டவத்தை விளக்குகிறார்.[38] காளிதாசர் மகாகாளரராய சிவனின் சந்தியா தாண்டவத்தைப் பாடுகையில் புஜ தாருவனம் என்னும் பல் கைப் பாணியைக் காட்டுகின்றார்.[39] சந்தியா தாண்டமூர்த்தியின் கீழ் முயலகன் இல்லை. எட்டு, பத்து, பன்னிரெண்டு கைகள் அமைப்பதுண்டு. பாம்பைத் திருவரையில் அணிந்து கொண்டும் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்தும் ஆடுவதுண்டு.[40] எட்டாம் நூற்றாண்டில் எல்லோரா கைலாச நாதர் கோவில் சிற்பம் ஒன்றையும் திருப்பரங்குன்றத்தில் அமைந்த எட்டாம் நூற்றாண்டைய லலித நடனத்தையும் சந்தியா தாண்டவம் என்ப துண்டு. இவண் திருப்பரங்குன்றத்தில் முயலகன் உள்ளது. மதுரை வெள்ளியம்பல, கால் மாறிய நடனத்தையும் சந்தியா தாண்டவம் என்பதுண்டு. இங்கும் முயலகன் உண்டு. திருப்பரங்குன்றம், வெள்ளியம்பலம் நடராசர் சந்தியா தாண்டவம் இல்லை என்பதும் உண்டு. உத்பிரேக்ஷ வல்லபர் என்ற கவிஞர், பிட்சாடன காவியத்தில் 'பினாக பாணியான இறைவன், சந்தியாவைக் கண்டவுடனேயே, தன் எதிரே தேவி இருப்பதையு ம் மறந்து, சடைமுடிகளைத் தளர்த்திவிட்டு ஆடத் தொடங்கி விடுவார்' எனப்பாடுகிறார்.[41] காளிதாசர், இன்னோரிடத்தில், மாலைநேரத்தில், மகாகாளரராய இறைவன், ஜாபகுசும மலர்கள் அலர்ந்து வீழும் வேளையில் ஆடுவதாகக் குறிப்பிடுகின்றார்.[42] ஏழாம் நூற்றாண்டைய பானமலை ஓவியத்துள்ள லலாட திலகம் ஊர்த்துவ தாண்டவம் என்பர்.[43] எட்டாம் நூற்றாண்டையது எனப்படும், திருப்பரங்குன்றம் குடவரையில், ஓர் இனிய சந்தியா தாண்டவச் சிற்பம் உள்ளது.[44] வங்கத்தைச் சேர்ந்த சேன மன்னர்களில் ஒருவரான பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த வல்லாள சேனரின் நைக்தி செப்புப் பட்டயம் சந்தியா தாண்டவ வழிபாட்டுடன் தொடங்குகின்றது.[45] பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீசைலம் கோவிலில்

35. கமலய்யா, க.சி., ஆனந்த மாநடம், சென்னை 1978, ப:106
36. அஃதே, ப:176
37. சிவராம, ப:100
38. அஃதே, ப:101
39. அஃதே, ப:103
40. அஃதே, ப:104
41. அஃதே, ப:93
42. அஃதே, ப:103
43. அஃதே, ப:221
44. அஃதே, ப:208
45. அஃதே, ப:300

அமைந்த ரெட்டி வம்சத்தார் அமைத்த சிற்பத்தில் சந்தியா தாண்டவம் அமைந்துள்ளது. இவண் நடனப் பாங்கு ஆனந்த தாண்டவம் போன்றேயுள் ளது. அதே கோயிலில் இன்னொரு சிற்பத்தில் முயலகன் உள்ளது.[46]

சாளுக்கியரின் சந்தியா தாண்டவச் சிற்பத்தில் முயலகன் அமைவ தில்லை. ஸ்ரீ தத்துவ நிதியில் சந்தியா தாண்டவத்துக்கு நான்கு கைகள், மூன்று, கண்கள், ஜடாமகுடம், வல அபயகரம், வலத் துடி, இடக் கரம் ஒன்று மயிலறகு பிடித்தும்இன்னொரு இடக் கரம் அல பல்லவமாக வியப்புக்குரி காட்டியும் இருக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. இருகால்களும் சிறிது குஞ்சிதமாகவும் இருக்கும்.[46]

.057 சுனர்த்தக நடனத்தில் குழலும் துடியும்

சிவபெருமான், தவமியற்றிவரும் இமவான் புதல்வியை, மணப்பதற் காக, சுனர்த்தகனாக வந்து நடமிட்ட செய்தி சதுருத்ரத்தில் குறிப்பிடப் படுகின்றது. பார்வதிக்குத் தந்த வரப்படி, பர்வதகுமாரியைத் தனது மனை வியாக இரந்து கேட்க, இறைவன் இமவானின் மனைவியான மேனாவின் முன் இடக்கரத்தே ஊது குழலும், வலக்கரத்தே துடியும் ஏந்தி நடமிடுகின்றார். இது சிவனை நடனக் கலைஞராகக் கண்ட காட்சி.[47] புராண மூல நூல் களைப் படித்தால், புராணங்களில், அரிய செய்திகள் நிறைய கிடைக்க இயலும்.

.058 அட்ட மூர்த்தங்களும் ஆனந்த தாண்டவமும்

வேதகால முனிவர் கண்ட அட்டமூர்த்த நடனங்கள்

வேதகால முனிவர்கள் இயற்கையைத் தரிசித்து வழிபட்டு வாழ்ந்தவர் கள். உஷத் காலக் காலைக் கதிரொளியின் மெல் நடனம், மாலை சந்தியாகால பொன்னொளிர் கதிரவ நடனம், அமிர்த ஒளி திகழ் சந்தி ரனின் வளர்ச்சியும் தாழ்ச்சியும், மண்ணகத்தும், விண்ணகத்தும் நீரின் பிரவாகத்தையும், மழையையும், நிலத்தின் பயிர்வகை உயிர்ப்பையும், பூகம்ப வெடிப்பையும், வனங்களில் தீயின் செந்நாவின் தீவிரத்தையும் காட்டும், ஆகாயத்து எழும் வண்ண ஜால எழில் நடனங்கள், தென்றலாயும் புயலாயும், வரும் காற்றின் களி நடனம், இவை அனைத்தையும் பிரபஞ்ச காரியத்துக்காக அர்ப்பணிக்கும் யாக புருடனான, எஜமானனின் உயர் தன்மை போன்றவற் றுள்ளும் இயற்கையின் நடனங்களை, எங்குமாய், எல்லாமாய் இருக்கும் இறைவனின் அட்டமூர்த்த நடமாகக் கண்டனர்.

.059 அட்டமூர்த்தங்கள் இலக்கிய-விளக்கங்கள்

எம்பிரானின் அட்ட மூர்த்த நிலைகள், தமிழ்த் திருமுறைகள், சமஸ்கிரு தக் கல்வெட்டுக்கள், இலக்கியங்களில் பலவிடங்களில் பாராட்டப்படினும் மகாகவி காளிதாசரின் அபிஞான சாகுந்தலத்தில் வரும் நந்தி ஸ்லோகத்தில் பன்முறையும் குறிப்பிடப்படுகிறது.[48]

எங்கும் நிறைந்த ஆகாயம், ஒளி விளக்காம் சூரியன், மகிழ்வூட்டும் சந்திரன், வேறுபட்ட சுவைகட்குக் காரணமான நீர், மணமுள்ள நிலம், பலிதருவோன், வெம்மையான தீ, உணரமட்டும் முடிந்து காண முடியாத காற்று, இயமானன் இவை யாவும் சிவனின் அட்ட மூர்த்தங்கள் என

---

46. அஃதே, ப:273,151
47. கார்னிலியா டிம்மிட்., வாஸ் ஜே.ஏ.பி., இலக்கிய உறிந்து பௌராணிகம். ப:198
48. சிவராம, ப:31

பெகிராகத்தில் உள்ள கல்வெட்டு கூறுகின்றது.[49] சுயாதர்னரின் கால தூரி கல்வெட்டில், கல்வெட்டுக் கவிஞர், இறைவனை, மூவுலகையும் படைக்கும் சிற்பியாகவும், வேதக் கவியாகவும், அட்ட மூர்த்தமாகவும், நித்திய கர்மியா கவும், அறிவாகவும், சங்கற்பியாகவும் கூறுகிறார்.[50] திருமூலர் இறைவன் திருநடம் புரியும் போது ஆடும் பிறவற்றை பற்றிக் குறிப்பிடுகையில், ' ஐம்பூத காரிய அணுக்களின் அறிவு ஆட' என்பார்.[51] அது போன்ற பல்வேறு கூத்துக்களைப் பற்றிக் கூறும் போதும் நடம் எட்டு என்று கூறி அட்டமூர்த் தத்திலும் ஆடும் கூத்தினைக் குறிப்பிடுகின்றார்.[52] திருநாவுக்கரசர் 'இருநிலனாய்' எனும் திருப்பாட்டில் அட்டமூர்த்த நிலையைக் குறிப்பிட்டு, ஆணாய் பெண்ணாய், பிறராய், தாமாய், தெருநலாய், இன்றாய், நாளையாய், என்றும் ' இறைவன் நிமிர்ப்புண்டு ஆடுவதைக் குறிப்பிடுகின்றார்.

.060 பரரூபம் அட்டமூர்த்தமே

ரிக்வேத ஸ்லோகங்களில் சதுர்துரியத்தில் இறைவனைப் பரரூபம் எனக் குறிப்பிடப்படுகிறது. சாயனர் அவர்கள் இது இறைவனின் அட்டமூர்த் தத்தைக் குறிக்கும் என்பார்.[53] அட்டமூர்த்த விளக்கம், சாங்கியத்தின், நுட்ப நிலைகளில் ஒன்று என்பாரும் உளர்.[54]

.061 பஞ்சபூத நாட்டிய மூர்த்திகள்

பரதமுனி அவர்கள் நாட்டிய சாத்திரத்தில் அட்ட மூர்த்தங்களின் நட னத்தை ஜலமய மூர்த்தி, தேஜோமய மூர்த்தி, ஆகாய மூர்த்தி என்றெல்லாம் குறிப்பிடுவதாகக் குறிப்பிடப்படுகிறது.[55]

.062 பஞ்சபூத அபிநயங்கள்

வாழ்க்கை என்பது செயல்; செயல் ஒரு ஒத்திகை ; ஒழுங்கான இயக்கம். எல்லாச் செயல் இயக்கங்களும் பஞ்ச பூத ஆற்றல்களால் அமைந்தன. இறை வனின் பல்வேறு உறுப்புக்களைக் காட்டும், அபிநயங்கள், அசைவுகள், வழியாக இச்செயலியக்கங்கள் வெளிப் படுகின்றன.[56] விருப்பு வெறுப் பின்றி சிந்திக்கையில் வாழ்வு முழுவதுமே ஒரு நடனத் தோற்றமாக அமைவது விளங்கும்.

பஞ்சபூத பஞ்ச கிருத்தியம்

இத்தகு பஞ்சபூத ஆற்றல்கள் அகமுக நோக்கில் கலையுருவில், சமயத் தத்துவ அமைப்பில், ஐந்தொழில்களாக ஆனந்தத் தாண்டவத்தின் வழி நுணுக்கமாக அமைவுறுகின்றன எனில் மிகையாகாது. திருமந்திரம், கூறுவது[57] போல் அவன் ஆட காரணம், காரியம், பயன் முதலிய யாவும் ஆடுகின்றன.

.063 அட்ட மூர்த்த ஆகார்ய நிலை

ஜாஜல்லதேவரின் கல்வெட்டொன்றில், சூரியன், சந்திரன், தீ ஆகிய மூன்றும் இறைவனது, மூன்று கண்களாகவும், அவருடைய சுவாசம் ஆகாய மாகவும், அவருடைய உடல் நிலமாகவும், அவருடைய தலையில் நீரும், அவருடைய செவிகள் ஆகாயமாகவும், அவர் பரமானந்த ரூபமாகவும்', விளங் குவதாக இறைவன் அட்டமூர்த்தியாக இருக்கும் நிலை விளக்கப்படுகிறது.[58]

49. அஃதே. ப:32
50. அஃதே. ப:32
51. திருமந்திரம். 2729
52. திருமந்திரம். 2733
53. சா.மு. ப:11.
54. அஃதே. ப:11
55. சிவராம ப:82
56. திருமந்திரம்.2730
57. அஃதே.
58. சிவராம. ப:32

.064 சந்தியா நடனத்தில் அட்டமூர்த்த நிலை

சுழற் காற்றின் சுந்தர நடம், தீச்சுடரின் நெளியும் ஒளி நடம், நிலத்தின் பூகம்ப வெடிப்போசை, கடல் அலைகளின் நடம், ஒளிகளின் நடம், சூரிய சந்திரர்களின் நடம், இவையாவும் இறைவனின் நடம். ஹர்ஷர், தனது நைஷ தியா சரிதத்தில் சந்தியா நடனத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், அட்ட மூர்த்தங்களில் ஒன்றாகிய நிலமும் இறைவனுடன் நடமிடுவதாகவும், சந்தியா அந்திச் செங்கதிர் மழை, குருதிச் சிவப்பில் திகழ, மன்னன் ஒருத்தனின் படை வலிக்குக் கீழ்நடுங்குவதை யொத்து நிலம் நடுங்க எழு புழுதிச் சாம்பல் இறைவனின் திருநீறாய்த் திகழ, நடனம் இயன்றது என்பார்.[59]

.065 கங்கை ஜலமய மூர்த்தி

மகாகவி காளிதாசர் குமார சம்பவத்தில், இறைவனின் சடைமுடியில் நடனமாடும் கங்கையை இறைவனின் நீர்மய உருவம் என்று கூறுகிறார். கங்கையினை ஜலமய மூர்த்தி என்பதும் உண்டு. காளிதாசர் அபிஞான சாகுந்தலத்தின் நந்தி சுலோகத்திலும் இறைவனின் அட்ட மூர்த்தங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

.066 அஷ்ட புஷ்பங்களும் அட்டமூர்த்தங்களும்

பாண கவி, தனது உறர்ஷ சரிதத்தில், இறைவனுக்கு அணிவிக்கப்படும் எட்டுவகை மலர்கள் அட்ட மூர்த்தத்தைக் குறிப்பிடுவன என்பார்.[60] இறைவனது சடைமுடியில் சிறப்பிடம் பெறும் ஊமத்த மலர் இந்த எட்டு மலர்களையும் காட்டும் உருவகம் என்ற கருத்துள்ளது. புவனேஸ்வர், லிங்கேஸ்வர் கோவிலில் சிவலிங்கத்துக்கு ஊமத்த மலர் சூடுதல் சிறப்புக்குரிய வழிபாடாகும்.

.067 அருவ நிலை அட்டமூர்த்தம்

அட்டமூர்த்ததில் அருவ நிலை ஆகாயபூதம். அவ்வாகாயங்கள் பஞ்சபூத நிலைக்கு அப்பாற் பட்டு பூதாகாயம், குணமய ஆகாயம், குணரகித ஆகாயம், சூரியாகாயம், சிதாகாயம் என்பனவாகத் திகழும் என உரையாசிரியர் கூறுவர். இவ்வைந்து ஆகாயங்களிலும் இறைவன் நடிப்பதாகத் திருமந்திரம் கூறும்.[61] அட்ட மூர்த்த நிலை பிரிதோரிடத்தில் முத்திகள் எட்டும் என்று சுட்டி அட்ட மூர்த்தங்கள் இலயமடையும் நிலைகளைக் குறிப்பிடுகின்றார்.[62] இன்னுமோரிடத்தில் ஐம்பூத ஒளி அணுக் களிலும் இறைவனின் நட்டம் நடைபெறும் என்பார் திருமூலர். இதுவும் லய நிலைக்கு அணித்தான நிலையே.[63]

.068 அட்ட மூர்த்த புலனுணர்வுப் பரவல்

பெராகத் கல்வெட்டில, கல்வெட்டுக் கவிஞர் எட்டு மூர்த்தங்களைச் சுட்டியதோடு நில்லாது அவை சீவனுடன் கொள்ளும் புலனுக்குரிய உணர்வுத் தொடர்புகளையும் சுட்டுகிறார்.[64]

.069 அட்டமூர்த்தமே இறைவனின் உயிரும் உடம்பும்

கோவலன் மகளான மணிமேகலை, சைவர் ஒருவரிடம் சென்று, உன் கடவுள் எத்தகையது என வினவுகையில், அவர் 'என் இறைவன் இருசுடர்,

59. அதே. ப:33
60. அதே. ப:94
61. திருமந்திரம். 2749
62. திருமந்திரம். 2737
63. திருமந்திரம். 2766,-67
64. சிவராம. ப:32

இயமானன், ஐம்பூதம் என்ற எட்டினையும் உயிராகவும் உடம்பாகவும் உடையவன்' என்றெல்லாம் கூறுகிறான். இது ஐம்பூதத்து இறைவன் ஐந்தொழிற்படும் நிலைக்கு அடிப்படை என்பது மணிமேகலை சிலம்பு காலத்திலேயேயும் எடுத்துக் காட்டப்பட்டது என்பதைச் சுட்டும்.[65]

.070 பிரபஞ்ச இயலின் கருப்பொருள்

பிரபஞ்ச இயலின் கருப்பொருளாய், காரணமாய், காரியமாய், அடிப்படைப் பொருளாய், இறையருளால் அமைந்த அடிப்படைப் பொருள்களாவன பஞ்சபூதங்கள் என்பது நமது சமயத்தின் அடிப்படைக் கருத்து. இதனைத் திருநாவுக்கரசர் ' எட்டு மூர்த்தியாய் நின்றியலும் தொழில் என்றும், அவ்வெட்டு மூர்த்தங்களும் பெருமானுள் அடங்குவன என்பதையும் குறிப்பிடுகின்றார்.

.071 அட்டமூர்த்த வழியே பிரபஞ்சம்

' பிரபஞ்சத்தை, அட்ட மூர்த்தங்கள் மூலம் தான், இறைவன் நின்று நிலைக்கச் செய்து காட்டுகின்றார். மகாநடர் ஆகிய அவருக்கு இதனால் எவ்வகை ஆணவமோ, கர்வமோ, இல்லை என்ற கருத்தை, பாண கவி குட்டனிமாதாவில் குறிப்பிடுகிறார்.[66]

.072 பஞ்சபூத இயக்கம் பிரபஞ்ச இயக்கம்

இறைவனது திருநடத்தை படிமத்தில் ஊனக் கண்ணால் செப்பு உருவத்தில் காண்கிறோம். அதைவிட உலக, பிரபஞ்ச இயக்கத்தில் இந்நடத்தைக் காண இயலும் பஞ்சபூத இயக்கமே பிரபஞ்ச இயக்கம் பிரபஞ்ச இயக்கமே ஆனந்த நடராச இயக்கம்.

.073 கருத்தா

தண்டி, தனது, அனமய தோத்திரம், நான்காவது சுலோகத்தில், இறைவன் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவரன்று; அவரது, எங்கும், எதிலும் நிறை ஆற்றலை நிரப்பினாலன்றி எதுவும் இல்லை. கருந்தாவாக அவன் விளங்கவில்லை என்றால், படைப்புக்கான காரணமோ காரியமோ இல்லை', என மொழிகின்றார்.

.074 அவனே காரணம்

பஞ்சபூதங்கள் அவனுடைய உறுப்புகளாகத் தம் இருப்பிற்கு இயக்கத்துக்கு அவனையே காரணமாக உடையன' என்பர்.[67]

.075 காரணம்

ஜாஜல்ல தேவரின் கல்வெட்டுஒன்று, இறைவன் அட்டமூர்த்தங்களை எடுப்பதன் காரணம் பிரபஞ்சத்தை ஐந்தொழிற்படுத்துவதற் காகவே' என்பதைக் குறிப்பிடுகின்றது.[68]

.076 அரைக்கால் மூர்த்தம்

அட்டமூர்த்தங்களின் ஒன்றான நிலம் பூமிதேவி எனப்படும். பூமிதேவி திருமாலின் துணைவியார். உறரிஉறர மூர்த்தத்தில், திருமால் சிவ பெருமானின் மூர்த்தங்களில் சரிபாதியாக அமையினும், அச்சரிபாதி அட்ட

65. இராசமாணிக்கனார் மா., சைவ சமய வளர்ச்சி ப:17
66. சிவராம, ப:106
67. அஃதே, ப:127
68. அஃதே, ப:33

மூர்த்தங்களில் ஒன்றில் எட்டுப் பகுதிகளில் ஒன்றாகக் கருதப்பட்டு இறைவனின் உருவில் அரைக் கால் பகுதி எனக் குறிப்பிடுவர். விருப்டாட்சி செப்பேட்டில் இச் செய்தி பாராட்டப்படுகின்றது.[69]

.077 இதயங்களில் அட்ட மூர்த்த நடனம்

குஞ்சிதாங்கிரிஸ்தவம், தனது எண்பத்தாறாவது சுலோகத்தில், ' அட்ட மூர்த்தியாகவுள்ள, ஆத்ம ஸ்வரூபியான, ஆனந்த நடராசரே, சமஸ்த பிராணிகளின் இதயங்களில் விளங்குபவர்' என்று கூறுகின்றது. இறைவனின், பஞ்ச கிருத்தியம் ஒவ்வொரு பக்தனின் இதயத்திலும் நிகழ்கிறது எனினும், இறைவன் தனது சங்கற்பம், செயல் முதலியவற்றை, பல்வேறு படிமப் பொருண்மையின், வழி, அட்ட மூர்த்தங்களாக எங்கும் நிறையுருவாய் உருவகித்துக் காட்டுகிறார் என்பது உண்மை.[70]

.078 சீவனிடமும், சிவனிடமும் பஞ்சபூதங்கள்

நடராசத் தோத்திரத்தில், ஒரு ஸ்லோகத்தில் இறைவனைக் குறுப்பிட்டு, 'நடராசரே நீங்கள் தான் ஆடுகின்றீர்களா? அல்லது பஞ்சபூத உடையில் உள்ள என்னை ஆட வைக்கின்றீர்களா? என்று வினாவும் நிலையைக் காண்கின்றோம்.[71] அத்தோத்திரம் மேலும் சீவனுக்கும், சிவனுக்கும் உள்ள இயற்கை நிலை ஒற்றுமையையும் கூறுகின்றது. இறைவனும் பஞ்சபூதங்களை உடையாகக் கொள்கிறான். பிரபஞ்ச உறுப்புக்களும் பஞ்சபூதங்களை உடையாக அல்லது அடிப்படையாகக் கொண் டுள்ளன. அவன் ஆடும் ஆட்டத்தில் யாவும், ஆடுகின்றன.[72] மூர்த்தத்தின் உத்தமாங்கம் என்னும் தலையிலிலேயே அட்ட மூர்த்தங்களையும் குறிக்கும் அமைப்புக்கள் உள என்பர். முச்சுடரும் மூன்று கண்களாகவும், கங்கை நீராகவும், ஆகாயம் உடலாகவும், திருநீறு நிலமாகவும், பெருமானே எஜமானனாகவும், கைகள் காற்று வீசும் திசைகளாகவும் அட்ட மூர்த்த நிலைகளில் அமைந்தன எனில் பொருந்தும். காலசேரி கல்வெட்டுக்களில் அட்டமூர்த்த நிலை குறிப்பிடப்படுகின்றது.[73] இது போன்று வினாய நகரக் கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

.079 அட்ட வீரட்ட தாண்டவ மூர்த்தங்களின் தத்துவ உட்கிடை மூர்த்தங்கள்

உருவ வழிபாடென்பது சமய வழிபாட்டு அறிவின் உயர்நிலைகளில் ஒன்று. உருவ அமைப்புக்கள் புராண வளர்ச்சிக் காலத்தில் முழுமை எய்தியிருக்க வேண்டும். இது குப்தப் பேரரசின் காலமாகலாம். ஆகம வளர்ச்சிக் காலத்தில் உருவப் பூசனை முறைகள் நெறிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். வளர்ச்சி எவ்வாறமையினும் சமயக் கலைகள் அனைத்தும் தியான பலம், யோக பலம் முதலியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும். உபநிடத காலத்தில் திரட்சி எய்திய மாயைபிரம்மம் என்ற கருத்துக்களே பெரும்பான்மை வளர்ச்சி நிலைகளின் கருப்பொருளாக அமைவதும் உண்டு. நீண்ட கால வளர்ச்சியில் அமைந்த வைதிக சமயக் கொள்கைகள் பல்வேறு காலக் கருத்துக்களின் சங்கமம் என்பது அடிப்படையான ஒன்று.

.080 அட்ட வீரட்டங்கள்

சிவனின் உருவ அமைப்புக்களுள் பல, சிவபெருமானின் பராக்கிரமங்களைக் குறிப்பதற்காகவே அமைக்கப்பட்டவை. அவற்றுள் எட்டினை அட்ட

---

69. அஃதே, ப:33
70. குஞ்சிதாங்கிரிஸ்தவம். பாட்டு 86
71. சிவராம, ப:134
72. அஃதே, ப:134
73. அஃதே, ப:36

வீரட்டம் என்பர். இவ்வீரட்ட உருவங்கள் தாண்டவ உருவத்தில் அமைந் தவை. இவ்வெட்டு வீரட்ட உருவங்களும் பாரதம் முழுவதும் பல்வேறிடங்களிலும் அமைந்திருப்பினும், தமிழகத்தில் எட்டு திருத்தலங் களில் வழிபாட்டுச் சிறப்புடன் விளங்குகின்றன. அவற்றின்

பட்டி எண்.7 அட்ட வீரட்டங்கள்

1. திரிபுர சம்மாரம்–திருவதிகை
   (மலபரிபாகம், அட்டயோக சாதனை)
2. கண்டியூர்–பிரமன்சிரச்சேதம்
   (விந்து ஜெயம், மூலாக்கினி எழுப்புதல்)
3. திருக் கொறுக்கை –காம தகனம்
   (விந்து ஜெயம், சிவதிருஷ்டி பெறல், ஞானக் கண் நிலை)
4. திருவழுவூர் –கஜமுகாசுர வதம்
   (முத்தீச் சிறப்பு, சிவவொளி விளக்கம்)
5. திருக்கோவலூர்–அந்தகாசுர வதம்
   (அஞ்ஞான அழிப்பு)
6. திருப்பறியலூர் –தக்கன் வேள்வி தகர்த்தல்
   (சிவராச யோகம், அக்கினி காரியம், பசித்துவ நீக்க அகவேள்வி)
7. திருவிற்குடி–சலந்தர சம்மாரம்
   (வாயு யோக சாதனை–மூலாதாரம்)
8. திருக்கடவூர்–கால சம்மாரம்
   (அங்கியோகம், மூலநாடி சுழுமுனை வைபவம்)

.081 வீரட்டச் சிறப்பு

மன்னர் பெற்ற வெற்றிகட்குப் பரணி பாடுவது போன்றும், சிலம்பு கோவலனின் கருணை மறத்தைப் பாடியது போன்றும், கண்ணப்பர் அருள் நெறிப்பட்டு மறங்காட்டிய மரபு போன்றும், இறைவன் இயற்றிய பல நல்லறங்கள், மறங்கள் ஆயவற்றின் நினைவுக் குறிப்புக்களாக இவ்வீரட் டங்கள் அமைவன.

வீரட்ட உட்கிடை

இவ்வீரச் செயல்களின் உட்கிடையாக, ஆத்மா, பிரம்மம், மாயை, கால தகனம் முதலிய உபநிடத வேதாந்தப் பொருண்மை பொலிவதும் வீரட்ட புராணச் செய்திகள் விரவித் திகழ்வதும், அவ்வீரத் திருவுருவங்கள் ஆகம வழிபாட்டு நெறிக்குள் அடங்குவதும், பல்வேறு, ஞான நெறிகளின், சங்கம மாகத் திகழ்கின்றது. சமய தத்துவம் என்பது பிரபஞ்ச, அண்ட பிண்ட நிலைகள் பலவற்றையும் விளக்குவதாகும். இவ்வீரட்டக் கோலங்கள் ஒவ் வொன்றும் இவ்வகையில் ஒரு அடிப்படைத் தத்துவத்தை விளக்கும் பராக்கிரமமாக விளங்குகின்றது. பராக்கிரமம் இறைவனுடையது. அதன் பலன்கள் ஆத்மாக்கட்கு, சீவர்கட்கு என்பது நுண்மை. சமய நூல்கள் பல இவ்வீரட்டங்களின் நுண்மைப் பொருண்மைகளைப் போற்றியுள்ளன எனி னும், திருமந்திர வழி மிகச் சில குறிப்புக்களை மட்டும் கண்டு செல்வோம். இக்கட்டுரைச் செய்திகள் வளர்நிலையின் ஒரு சிறிய பகுதியேயாகும். ஒவ் வொரு வீரட்டம் பற்றிய புராணச் செய்திகளையும் அதன் உட்கிடையின் ஊகத்தையும் மட்டும் கண்டு செல்வோம்.[74]

74. கந்த புராண வசனம், அரு. இராமநாதன் பதிப்பு சென்னை. 1984

.082 திரிபுர சம்மாரம்

புராணச் செய்தி

தாரகாசுரனின் மக்களாகிய, தாரகாட்சன், கமலாட்சன், விந்யுண்மாலி என்ற மூவரும், பிரமனை நோக்கி, நெடும் தவம் செய்து, இறவா வரம் வேண்டினர். அவர் பெற்ற வரங்களின் சிறப்பால், பொன் வெள்ளி இரும் பாலாய மதில்களைக் கொண்ட கோட்டைகளைக் கொண்டு, பூமி, அந்தரம், சுவர்க்கம் என்னும் மூவுலகங்களிலும் வாழ்ந்துகொண்டு, தேவர்களையும் இருடிகளையும், பிறரையும் வென்று, தொல்லைப்படுத்தி வந்தனர். பிரம்மன் தான் ஈந்த வரத்தின்படி, இம்மூன்று எயில்களும் ஒன்றாக ஒன்றுபட்டபொழுது, சிவபெருமானின் கணையாலன்றி, வேறெவராலும் அழிவு வராது என்பது விதி. இம்மூன்று அரக்கர்களும் அரக்க குலப்பண்புகள் காரணமாக, தேவர் இருடிகட்குத் துன்பம் தந்து வரினும், சிவவழிபாட்டு நெறி குன்றாது, வாழ்ந்து வந்தவர்கள். தேவர் இருடிகளின் தவ வேண்டுதல்கட்கேற்ப, சிவ பெருமான் முப்புரம் எரிக்க இசைந்து அதற்கேற்ற தேர் முதலியவற்றைச் செப்பம் செய்யப் பணித்தார். தேவலோக தெய்வீகப் பொருள்களும், தேவர் களும் தேரின் ஒவ்வொரு பாகமாக அமைய, மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், திருமாலைப் பாணமாகவும், சரசுவதியை வில்லிற் கட்டிய மணியாகவும், அக்கினி தேவனை அம்பின் கூர்மையாகவும், வாயுவை அம்பிற் கட்டிய இறகாகவும் எல்லாம் அமைத்து இறைவனை வேண்டினர். சிவபெருமானைத் தாங்க இயலாது தேரின் அச்சு முறிந்தது. வில்லில் நாண்பூட்டி எய்தால், அந்தரர் முதலியோர் அந்தமிலாத் துன்பம் எய்துவர் என்று கருதிய கருணைப்பெருமான், அன்னையைக் கடைக் கண் ணால் கண்டு, தான் புன்னகை செய்ய, அப்புரங்கள் மூன்றும், புன்னகை தந்த பொறிகளால் எரிந்து சாம்பலாயின. அவ்வசுரர்கள் இறைவனின் தாள் பணிந்தனர். முப்புரம் எரிந்தது. முப்புரத்தை ஆண்டோர் முன்னரும் பின் னரும் சிவபக்தராயிருந்தமையால் அடைக்கலம் பெற்றனர். இறைவன் தாள்தலை வைத்த அரக்கர்கள், இறைவனின் அந்தப்புரத்துத் துவாரபாலகர் களாகப் பணிபுரியும் அணுக்க நிலை பெற்றனர்.

யோக உட்கிடை

இதனைத் திருமந்திரம் 'முப்புரமாவது மும்மல காரியம்' எனக் கூறும்.[75] மும்மலங்களின் வலியை அழித்தலே திரிபுர சம்மாரத்தின் தத்துவம். மூன்று அரக்கர்களும் முன்னரும் பின்னரும் சிவநெறி போற்றியவர்கள். இடையே வந்த பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகள் வைணவ மாயை யால் அமைந்தவை. ஆணவம் கன்மம் மாயை என்று மும்மல இயல்பினால் பதி நிலை மறந்து புறம்போயினர். இறைவனது அருட்புன்னகையின் வலி யால் மீண்டவர் என்பதே நுண் பொருள். சிவ சீவ ஐக்கியம் ஏற்படுகையில், திருவருளால் மலம் கெடும் என்பது யோக நெறி. தவாக்கினியில், மலம், தானே பொசுங்கும். திரிபுரம் எரித்த வைபவம் திருவதிகை தலத்தில் வழி பாட்டுச் சிறப்புப் பெற்றுள்ளது.

.083 நான்முகன் சிரசைக் கொய்தல்

புராணச் செய்தி

முழுமுதற் கடவுளர் மூவருள், பிற இருவராய பிரம்மனும், திருமாலும் தனித்தனியே தாமே பெரியவர் என்ற மோகம் கொண்டு செயல் பட்டனர். இவ்விருவரின் இறுமாப்பொழியவும், மற்றைய வானவர் மதர்ப்பு நீங்கவும்,

75. திருமந்திரம், 343

சிவபெருமான், தன் அம்சமான, பைரவரை ஏவி, பிரம்மனின் ஐந்து தலைகளில் சிவபெருமானின் முதன்மையினை இகழ்ந்து பேசிய நடுச்சிரத்தினைக் கொய்து வரப் பணித்தார். பைரவர் பிரம்மனின் சிரசினைக் கொய்தவுடன், பிரம்மன் வணங்கிவேண்டியபடி அந்தக் கபாலத்தினை சிவபெருமான் தன் பிச்சைப் பாத்திரமாகப் பயன்படுத்த இசைந்தார். பைரவர், பாற்கடலில் தேவியரோடு அமர்ந்திருந்த திருமாலின் நெற்றியிலிருந்து குருதியை வெளிவரச்செய்து அதனை இந்தப் பிரம்ம கபாலத்தில் ஏந்துகிறார். முடிவில் இவ்விரு கடவுளர்க்கும் இறைவனின் அருள் கிடைக்கிறது. அவர்கள் இருவரும் தன் மாயையாகிய அறியாமையிலிருந்து விடுபட்டு சிவனது முதன்மையினை ஏற்று, தம் தொழில் திறம்படச் செய்துவருவாராயினர்.

யோக உட்கிடை

யோக நெறியில், விந்து ஜெயம் என்பது சிறப்புக்குரிய ஒன்று. ஆறாதாரங்களில் பூமித் தலமாகிய சுவாதிட்டானச் சக்கரத்தில், விந்து நாசம் நடந்து கொண்டிருக்கின்றது. இச்சக்கரத்துக்கு அதிபதி பிரம்மன்.[76] கடல் தலமாகிய மணிபூரகத்தானத்திலிருந்து, திருமால் சீவர்கட்கு உலக போகத்தில் கவர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். விந்து நாசம் உற்பத்திக்கு உதவுவது. இது பிரம்மனின் தொழில். சீவர்கள் விந்து ஜெயம் பெற, ஒளி விளங்கித் திகழ வேண்டி, பிரம்மனது சேட்டையைக் கெடுத்து, திருமாலினது கவர்ச்சியினின்று விடுவிப்பதே இப்புராணச் செய்தி எனத் திருமந்திரம் கூறும். மூலாதாரத்தில் தோன்றும் மூலாக்கினியை மேலுற எழுப்பி, விந்து நாசம் ஏற்படாது, விந்து ஜெயம் செய்வித்தலை பிரம்ம சிரச்சேதம் என யோக நெறியிற் கூறுவதுண்டு. பக்குவப்பட்ட சீவர்களை பிரம்மனின் ஆட்சியினின்று விடுவிக்கும் பிரம்ம சிரச்சேத வைபவம் கண்டியூரில் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது.

.084 காம தகனம்

புராணச் செய்தி

சனகாதி முனிவர்க்கு ஞானம் புகட்டுவதற்காகச் சிவபெருமான் கல்லாலின் நிழலமர்ந்து யோகம் இயற்றுகிறார். பார்வதி இமவானின் புதல்வியாக இமாலயத்து இறைவனை அடையத் தவம் செய்து வருகிறார். முழுமுதற் கடவுளாய இறைவன் செயலற்று இருப்பதாலும், சிவசக்தி ஐக்கியம் இன்மையாலும் ஐந்தொழில்கள் நடை பெறவில்லை. தேவராதியர்கட்குப் பல யுகங்கள் இவ்வெறுமையில் கழிகின்றது. உலக இயக்கம் பொருட்டு, சிவ சக்தி ஐக்கியம் ஏற்படுத்தவும், சூரபத்மனை வெல்ல, சிவ சக்தி வழி ஒரு குமாரனைப் பெறவும், பிரம்ம இந்திராதி தேவர்கள் மன்மதனை வேண்டி, இறைவன் மீது காமக் கணைவிட வேண்டுகின்றனர். இறைவன் மீது கணை விடுதல் தன் இறுதிக்கே வழி வகுப்ப தாயினும் அனைவரின் வேண்டுதலைத் தடுக்க இயலாது, காமன் மேற்றிசை வாயில் வழிச் சென்று, இறைவன் மீது மலர்கணை ஏவி, அவர் தன், நெற்றிக்கண் பொறிபட்டுச் சாம்பலாயினன். முடிவில் பருவதவர்த்தினி பரமன் திருமணம் நிகழ்கிறது. குமரன் பிறக்கிறான். காமன், இரதிக்கு மட்டும் தெரியுமளவில் கிடைக்கிறான். இந்தப் பராக்கிரமம், திருக்கொறுக்கை தலத்தில் வழிபாடு பெறுகின்றது.

---

76. திருமந்திரம், 340,341

கொறுக்கை சொற்பொருள்

'கை' என்றால் சுழுமுனை என்று பொருள். 'கொறு' என்பது கன்று பால் குடிக்காவாறு முகத்திற்கட்டும் சிறு கூடை. பரியங்க யோகத்தில் விந்து செயம் பெறும் முறையினை இவ்வீரட்டம் குறிப்பிட்டதென்பர்.[77]

பால் சுரக்கும் பசுவிடம், பாலினைக் கன்று உண்ணாதவாறு கொறு கட்டி தடுப்பது போல, போகம் செய்கையில் விந்து கீழே சென்று விந்து நாசம் ஆகாது, யோக பலத்தால் நாடி பலத்தால், வாசியோக மேன்மையால் குண்டலினியை மேலெழுப்பி விந்து மேலெழச் செய்து மேனிலைப் பலன்கள் எய்தும் யோக முறையைச் சுட்டுவது இது என்பார் திருமூலர்.

உட்கிடை

காமனுடைய செயலுக்கு வெற்றி கிட்ட தேவர் செய்த செயல், காமத்தின் தகனத்துக்கு, காமனின் தகனத்துக்கு வழி செய்தது. விரும்பியவாறு சிவ சக்தி திருமணம் இயன்றது. குமரனும் பிறந்தான். இவண், காரணமாயமைந்தது சிவன் செயல்; காமன் செயல் அன்று. காமன் இரதிக்குக் கிடைத்தான். காமன் செயலும் இயல்பே நடக்க ஏற்பட்டது. சூரபத்மன் வெற்றி கொள்ளப்பட்டான். அனைத்திற்கும் காரணம் காமதகன விந்து செயமும், சிவதிருஷ்டியுமே என்பது உட்கிடை.

.085 கஜமுகாசுர சம்மாரம்

புராணச் செய்தி

கஜாசுரன் என்ற ஓர் அசுரன் பிரம்மாவை நோக்கித் தவம் செய்து, பரம சிவனைத் தவிரத் தனக்கு வேறு யாராலும் அழிவு ஏற்படக் கூடாது என்றும், தனக்கு நீண்ட, ஆயுள், பலம், சௌகரியம், பராக்கிரமம் இன்னும் இவை போன்ற பிற அனேக வரங்களைப் பெற்றுக் கொண்டான். தேவர்கட்கும் இருடியர்க்கும் அவன் கொடுத்த தொல்லைகள் மிகுதி. இந்திரனின் ஐராவதத்தை வாலைச் சுழற்றித் தூக்கி எறிந்தான். மண்ணுலகிலும் அவனது கொடுமையால் துன்பப்பட்ட முனிவர்கள் மணிகர்ணிகை கட்டத்தை அடைந்து விசுவநாதப் பெருமானை வேண்டி, கோவிலுக்குள் அடைக்கலம் புகுந்தனர். அக்கோலிலினுள் நுழைந்து முனிவர்களைக் கொன்று குவிக்க முயல்கையில், இறைவன், கோடி சூரியப் பிரகாச திவ்விய வடிவத்துடன் வந்து, கஜாசுரனின் தலையில் அடியெடுத்து வைத்து உதைத்தார். கஜாசுரன் இறந்தவுடன் அவனது கரியுரியைப் போர்த்து, இறைவன் காட்சி தந்தார்.

உட்கிடை

அக்கினி காரியம் என்பது காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்ற மூன்று தீக்களையும் வேள்வியின் வழி, புறத்தே வளர்த்து, நாதத்தை வெளிப்படுத்துதல் ஆகும். இவ்வேள்வியின் போது, இருள் கிழித்து, பேரொளியாக இறைவன் தோன்றுவார். சிவபெருமானின் பேரொளி தோன்றுகின்ற பொழுது, குணம் குறி முதலியவற்றை உடைய தேவர்களின் தோற்றம் மறைந்தொழியும். சிவபெருமானின் பெருமை ஒன்றே நிலைத்து நிற்கும். யோக நெறியின் போது, அகத்தேயுள்ள அக்கினியை, சிரசின் மேல் எழுப்பி வளர்த்தலை, அக்கினிகாரியம் என்பர். ஆறாதாரத் தானங்களில் இருக்கும் தேவதைகளின் அருள்நிலைகள் மறைந்து, சகஸ்ராரத்தில் அக்

77. திருமந்திரம் 346

கினிதோன்றுதல், யானைத் தோலுரித்து அதனிடையே விளங்கொளியாய்த் திகழ்தல் போன்றதாகும். யானை போன்ற பெரிய காரிருளைக் கிழித்து, இறைவன் பேரொளியாய் நிற்றல், சிவ ஒளியின் முன் பிற ஒளிகள் விளங்காது மறைகின்றன என்பதொக்கும்,[78] இவ்வைபவம் வழுவூரில் வழி பாடு பெற்று வருகின்றது.

.086 அந்தகாசுர சம்மாரம்

புராணச் செய்தி

அந்தகாசுரன் என்னும் அசுரன் அரிய தவமியற்றிப் பெற்ற பெரும்பலத்தினால், சகல உலகங்கட்கும் தீராத இன்னல்களை இழைத்து வந்தான். மூவுலகங்களையும், விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்களையும் வென்றிருந்தான். அஞ்சிய தேவர்கள் பெண்களின் உருவம் தரித்து பத்துத் திசைகளிலும் அலைந்து திரிந்தார். ஆண் வடிவில் திரிந்த தேவர்கள் அனைவரையும் சிறை செய்த அசுரன், பெண் வடிவில் திரிந்தோரையும் கொடுமைப் படுத்தினான். இறுதியில் அனைவரும் மந்தர மலையில் இருந்த உமாநாதரை அணுகி வணங்கி, பார்வதி தேவியின் பணிப்பெண்களாக மறைந்து வாழ்ந்தனர். அங்கும் அந்தகாசுரன் தொடர்ந்து வர, சிவபெருமான் அசுரனை அழிக்க பைரவரை ஏவுகிறார். பைரவர் போரிடும் போது இறந்த அசுரர் சேனையெல்லாம் அசுரர் குல குரு சுக்கிராச்சாரியர் ஓதிய மிருத்யுஞ்சய மந்திரத்தின் சக்தியால் மீண்டும் உயிர் பெற்றுப் போராடினர். பைரவர் சுக்ராச்சாரியரையே விழுங்கி விடுகிறார். ருத்ர சேனை வெற்றி பெறுகின்றது. பைரவர் கோபாவேசத்தோடு அந்தகாசுரனைத் தன் சூலாயுதத்தின் கூர் முனையில் குத்தி எடுத்துக் கொண்டு சந்நிதிக்கு வருகின்றார். அசுரர் சூலாயுதத்தின் நுனியில் தொங்கிக் கொண்டிருந்தாலும், இறைவனின் பார்வை அவன் மேல் பட்டதால் பூர்வ ஜன்ம பாபங்கள் நீங்கி இறைவனைத் துதிக்கலானான். அவனுக்குச் சிவபெருமான் கணாதிபத்யத்தன்மை அருளினார். பைரவ மூர்த்தி விழுங்கியிருந்த சுக்கிராச்சாரியாரை வயிற்றிலிருந்து வெளியே கக்கினார். அவரும் இறைவனை வணங்கித் தம் உலகம் சென்றார். பெண் வடிவில் இருந்த தேவர்கள் தம் வடிவெய்தித் தேவர் உலகம் எய்தினர்.

உட்கிடை

முதுகெலும்பின் முடிவிடமான பகுதி கழுத்தெலும்புகட்கு மேல் உள்ளது, அதனைக் குருத்து என்றும் குருந்தகம் என்றும் வழங்குவர். அதன் மேல் சோமவொளி, சூரிய ஒளி, ஆன்மவொளி என்று கூறும் மூன்று ஒளிகளும் உள்ளன. அம்மூன்று ஒளிகளிலும் அமைந்த பகுதியினைக் குருத்துயர் சூலம் என்பர்.[79] சீவனின் கருத்திலே செயல்படும் அறியாமையாகிய இருளைப் போக்க சிவன் மேற்கண்ட மூன்று ஒளிகளையும் அருள்கின்றார். யோகப் பயிற்சியின் வழி அந்தகமாய, அறியாமை நீங்கி, சுழுமுனையில் ஆன்ம ஒளிகாணவே இப்பைரவரின் சூலமுனையில் உழன்ற அந்தகாசுரன் இறைவன் அருட்பார்வையில் புண்ணியம் பெற்றது எனத் திருமந்திரம் கூறும். ஞானமாய சூலம் கொண்டு, அறியாமையை அழித்து, அறிவொளி காட்டிய அருமை இது என்பர். குருவுக்கும், அசுர சீடனுக்கும் ஆன்ம ஒளி காட்டிய அருட் செயலாய அந்தகாசுர வரம், திருக்கோவலூர் தலத்தில் வழிபாடு பெறுகின்றது.

78. திருமந்திரம், 344   79. திருமந்திரம், 339

.087 தக்கன் வேள்வி தகர்த்தல்

புராணச் செய்தி

குண்டலினி யோகமாய அக வேள்வியிலும், புற வேள்வியாகிய யாகத்திலும், சிவபெருமானே வேள்வித் தலைவன் என்பதை, 'கண் சுட ரோன், உலகேழும் கடந்த அந்தண் சுடரோன் ஓமத் தலைவன்' என்பது விதி. பிரம்ம தேவனின் பத்து மைந்தர்கள் பிரஜாபதிகள் என அழைக்கப்படுவர். மூத்தவரான தட்சப் பிரஜாபதி, சிவபெருமானின் முழுமுதற்றன்மையை உணர்ந்தவரில்லை. பிரம்ம தேவர் எடுத்துக் கூறியும் அதனை உணராத தட்சப்பிரஜாபதி, படைத்தல், காத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மன், விஷ்ணு இருவருமே முதன்மைக்குரியவர், என்ற கருத்துடையவராயிருந்தார். எனினும் பிரம்மாவின் அறிவுரையின்படி பரமசிவனை வேண்டி இருபத் தோராயிரம் ஆண்டுகள் தவம் செய்து, பூலோகம், அந்தரிஷம், சுவர்க்கம், பாதாளம், பிரம்ம விஷ்ணு உலகங்கள் முதலியன அனைத்திற்கும் தானே அதிபதியாகவும், தன் மகளாகப் பிறக்கப் போகும் கௌரியைப் பெருமான் மணந்து கொள்ளவும் வரம் பெற்றார். நியாயம் தவறாது நடந்து வரும் வரை, இவ்வரங்கள் பலிக்கும் எனப் பரமன் அருளினார். பிரம்மதேவன் பரமசிவ னுக்கு அவிர்ப்பாகம் அளித்து யாகம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். தட்சன் பரமசிவனுக்கு அவிர்ப் பாகம் அளிக்கக் கூடாது என்று வற்புறுத்தியதால் பல்லாண்டுகள் யாகமே நடைபெறவில்லை. இறு தியாக பரமசிவனையும், பார்வதியையும் அழைக்காது, மதியாது, தட்சன் ஒரு வேள்வி இயற்றுகிறான். தட்சனின் வேள்வி இறைவனால் தகர்க்கப்படுகின் றது. வேள்வி அழிவு நடைபெற்று முடிந்தவுடன் தட்சனின் உடலைக் கொண்டு வரச் செய்து இறைவன் அவனை உயிர்ப்பிக்கின்றார். உயிர்த்தெ ழுந்த தட்சன் இறைவனை வணங்கி மீண்டும் அருள் பெறுகின்றான்.

உட்கிடை

திருமூலர், யோக நெறியில், தக்கன் வேள்வி நிலை பற்றி ஒன்பது பாடல்களில் விளக்குகின்றார். தக்கன் வேள்வி பற்றிய புராணச் செய்தி சிவபெருமானின் ஐந்தொழிற் கருத்தா தன்மையினை நிலை நிறுத்திக் காட் டுவது என்பதுண்டு.

தக்க வேள்வியின் தத்துவம்

சிவ சக்தி ஐக்கியம், ஆண், பெண் அம்சக் கூட்டுறவு முதலியன வேள்வி எனப்படும். எதனைச் செய்யினும் முழுமுதற் கடவுளை நினைந்து அவருக்கு அர்ப்பணமாகச் செய்வதே பலன் தரும் செயலாகும். தக்கன் இறைவனை நினையாமல் செய்த வேள்வி தகர்க்கப்பட்டது. இதன் பொருள் இறைவன் அருள் இன்றி யோகத்து விந்து[80] செயம் கிட்டலும், யாகத்து இறை அருள் கிட்டலும் இயலாது என்பதாகும்.

வேள்வி முதல்வனின் அருள் தன்மை

தக்கன் வேள்வித் தலைமைக் குரியவராக அரி, பிரம்மன் ஏகாதச ருத்திரர்கள் மற்றைய தேவர்களைக் கருதிய போது, அவர்களும், பந்தம் செய் பாசத்தால், அதுவும் சரி என்று செயல்படினும், இறுதியில் சிவபெருமான் தவம் செய்வார்க்கு, தவறுகளை மன்னித்து, அணுவுக்குள் அணுவாய் இருந்து பிரமனாதியர்க்கு உதவும் பெற்றி, ஆகாய பூத நாயகனான சிவபெருமானின்

80. திருமந்திரம், 353

அருள் தன்மையாகும்.[81] பிரமனாதியர் சிவவொளியில் நிலை பெற்றிருப்பதை, சீவர்கள் உணர்ந்தபோது சீவர்கட்கெல்லாம் விளங்கியருளும் சிறப்பு சிவபெருமானது என்பர்.[82]

ஆறாதாரப் பெருவழி

சிவ சீவ ஐக்கியப் பேரொளியாய சிவபெருமான் மூலாதாரத்துள்ள அக்கினி கலையாக இருந்து சுழுமுனை வழியாக மேலெழ, இச் செவ்வொளி சகஸ்ரதளத்தில் தேவர்க்கு வெளிப்பட்டுத் தோன்றும். இம்மேநெறியே வேள்வி. சிவனை மறந்து வேள்வி இயற்றினால் வெற்றியன்றி தோல்வியே நிகழும்.[83]

இழந்து பின் நல்லோராதல்

அரி, பிரமன், தக்கன், சூரியன், சந்திரன், நாமகள், அக்கினி, இந்திரன், ஆகியோர் தக்கனுடன் சேர்ந்து தருக்கிய நிலையில் செயல் தடுமாறிய போது சிரம், மூக்கு, கை, தோள் ஆகியவற்றை இழந்தனர். அவரே மீண்டும் சிவனது பெருமையையுணர்ந்து, வணங்கிய போது, இழந்தவை பெற்று நல்லோராயினர். இறைவனது அருள், தருக்கினை நீக்கித் தூய்மை தருவது என்பதை இது உணர்த்தும்.[84]

பிரணவத் தியானச் சிறப்பு

செவிக்குக் கேட்கும் படியாக அவிசொறிந்து வேள்வி இயற்றுதல், மூலாதாரத்துக் கனலோங்குரச் செய்து பிரணவ மந்திரமோதி, ஆக்ஞாவில் நாதம் எழச் செய்து சகஸ்ராரத்தில் நாதம் ஒளியாகும்படி செய்யும் பிரணவம் ஓதும் அகவேள்வி என்பன இரண்டுள்ளும் பிரணவத் தியான அகவேள்வி உயர்ந்தது என்பதாம்.[85]

நவத்துவார இன்பம்

நல்லார் தம் உடம்பில் கண் முதலிய நவ துவாரங்களும் பிரணவ மந்திரம் செபிப்பதால் மல நீக்கம் எய்தி இன்பம் எய்தும் இயல்பின. மந்திரம் செபித்து நவ குண்ட வேள்வி செய்வதும், நவதுவார நலன் பெற பிரணவம் ஓதி அக வேள்வி செய்தலும் மல மாயையாகிய பொல்லா அசுரர்களை ஒழிக்கும் இயன்பினது என்பது பொருள்.[86]

அன்பே அமையும் வழி

தக்கன் வேள்வியின் போது முதலிற் சினந்து அழித்த நாத சொரூபியான சிவபெருமான், தன்னை நினையாது வேள்வி செய்த போது கடிந்தனர் எனினும், மீண்டும் நினைந்து வணங்கியபோது அனைவர்க்கும் அருள் செய்த தன்மை, சீவன் அகங்காரம் விட்டு சிவனை நினைந்து அன்பு வேள்வி செய்தால் அருள் கிடைபபது எளிது என்பதாகும்.[87] தக்கன் வேள்வி தகர்த்த வைபவம் திருக்கருப்பறியலூரில் வழிபடப்படுகின்றது. யோகம், சடங்கு வேள்வி, பிரம்ம முதன்மை, மாயை வீடு முதலிய அனைத்தின் ஒருங்கிணைந்த உண்மையினைக் காட்டும் உயர் வைபவம் இது.

.088 சலந்தர சம்மாரம்

புராணச் செய்தி

தேவேந்திரன், கர்வம், பிடித்த மனதோடு, கைலை செல்கையில், அம்மையப்பரே தலைமைக் கண வடிவில் காவலராக நின்றிருந்ததை அறியாது,

---

81. திருமந்திரம், 355
82. திருமந்திரம், 356
83. திருமந்திரம், 357
84. திருமந்திரம், 358
85. திருமந்திரம், 359
86. திருமந்திரம், 360
87. திருமந்திரம், 361

வஜ்ராயுதத்தால் போரிடுகின்றான். இறைவனின் கோபாக்கினுக்கு முன், இந்திரனின் வஜ்ராயுதம் பொடிப் பொடியாகியது. இந்திரனும் இறைவனின் அருள் மேனோக்கால் மன்னிக்கப்படுகிறான். இறைவன் தன் கோபாக்கினியைக் கடலில் போட்டுவிட்டுக் கைலை செல்கிறார். கோபாக்கினி குழந்தையாக மாறி, வருணனின் மாளிகையில் வளர்கிறது.

பெரியவனானவுடன். இச் சலந்தரன் என்னும் அரசன், தேவர்களையும் மூவுலகங்களையும் வென்றுவிட்டு, இறுதியில் பரமேஸ்வரனை வெல்லக் கைலை செல்கின்றான். கண்ணுதற் கடவுள் ஒரு அந்தணன் வடிவில் சலந்தரனைச் சந்தித்துச் சிவபெருமானை அவன் வெல்ல முடியாது என்பதை விளக்குகிறார். சலந்திரன் உணரவில்லை. அந்தணப் பெருந்தகை தன் கால் கட்டை விரலால் பூமியில் ஒரு சக்கரம் எழுதி அதனை இரு கைகளாலும் தூக்கித் தலையில் வைத்துத் தன் பலத்தைக் காட்டுமாறு வேண்டுகிறார். சலந்தரன் மிகுந்த சிரமத்துடன் அச்சக்கரத்தைத் தூக்கி, தன் மார்புப் பகுதியில் பிடித்துக் கொண்டு மேலே தூக்க முயல்கிறான். அச்சக்கரம் அவனை இரண்டு துண்டங்களாகத் துண்டித்து விடுகின்றது. சலந்தரனைத் துண்டித்த சக்கரம் பின்னர் திருமாலின் சக்கரமாகின்றது. த.ந.உலகநாதன்.

உட்கிடை

- தேவேந்திரனின் அறியாமையால் வஜ்ராயுதம் பொடியாகியது. சலந்தரனின் அறியாமை அவன் சக்கரத்தால் இரண்டாக்கப்பட்டான். சலந்தரன் நீரில் பிறந்தான். நீரை முகமாகவுடையவன் என்பர். யோகத்தின் போது பிராணன் அபானன் என்ற இரண்டனுள் கீழ் நோக்கும் இயல்புடைய அபானனை மேல் நோக்கிப் பிராணனோடு கலக்கச் செய்யும் யோக முறையை 'விரல் குறித்து ஆழி செய்தல்' என்பர். இதற்குச் சண்முக முத்திரை அல்லது யோனி முத்திரையினை இயற்றுதல் வேண்டும். இதனை அங்குலி யோகம் என்பதும் உண்டு. கீழ் நோக்கும் அபானனைச் சலந்தரன் என்பர்.[88] அங்குலி யோகத்தின் போது, குரு காட்டியருளும் முத்திரையின் பயனாக அபானன் மேலேறி பிராணனுடன் கலந்து சகஸ்ரதளத்தில் இறைப் பேரொளி கிட்டும் இதனைச் சலந்தர யோகம் எனத் திருமந்திரம் கூறும். சலந்தர சம்மார வைபவம் திருவிற் குடியில் வழிபாடு பெறுகின்றது.

.089 கால சம்மாரம்

புராணச் செய்தி

மிருகண்டு முனிவர், முற்கல முனிவரின் தவப் புதல்வியாகிய மருத்துவதியை மணந்து நெடுங்காலமாகியும் மகப்பேறில்லை. மிருகண்டு முனிவர் காசித் தலம் அடைந்து மணிகர்ணிகையில் நீராடி, புத்திரப் பேற்றுக்காகத் தவம் இயற்றுகின்றார். தவத்தின் பயனாய்ப் பிரசன்னமாகிய சிவபெருமான் முனிவரை நோக்கி 'தீக்குணம், அங்கீனங்கள், பிணி, அறியாமை முதலியவற்றுடன் நூறு வயது வாழும் புத்திரன் வேண்டுமா? அன்பு அறிவு பக்தியுடன் கூடிப் பதினாறு வயது மட்டும் வாழும் புத்திரன் தேவையா? என்று கேட்க, முனிவர் பதினாறு வயது வரை புத்தியுடைய புத்திரனே போதும் என வேண்டி வரம் பெற்று, மகனைப் பெற்றார். முறையே வளர்ந்த குழந்தைக்கு வயது பதினாறானதும் கவலை மேலிட்டது. பெற்றோரின் கவலையை அறிந்த புத்திரனாகிய மார்க்கண்டேயர், பதினாறு வயதில்,

88. திருமந்திரம், 342

காசிநகர் மணிகர்ணிகை சென்று தவமியற்றி 'இயம பயம் நீங்கும்' வரம் பெற்றார். பதினாறாண்டு காலம் முடிவடைந்தவுடன், எமதூதனொருவன் வந்து, அவரின் பூஜா பலனின் காரணமாக, அவரை அணுக இயலாது, எமனிடம் சென்று முறையிடுகிறான். இயமனே மகிஷ வாகனத்தில் தன் பரிவாரங்களுடன் வந்து, மார்க்கண்டேயரின் கழுத்தில் பாசக்கயிறு போட்டு இழுத்துப் பார்த்தும், மார்க்கண்டேயர் அசையாது சிவலிங்கத்தைக் கட்டித் தழுவி நின்றார்.[89] இறைவன் தோன்றி அஞ்சற்க என விளித்து, மார்க்கண் டேயருக்கு 'என்றும் பதினாறென்னும். சிரஞ்சீவிப்பதம்' அருளினார். அச்சிவலிங்கத்தினின்று தோன்றிய சிவபெருமான் இயமனைத் தன் இடது காலால் உதைக்க அவன் உயிரிழந்தான். பின்னர், பூதேவி போன்றோர் குறையிரப்ப இயமதர்மருக்கு இறைவன் அருளால் மீண்டும் உயிர் வருகின் றது. காலனை அடக்கிய காலாந்த மூர்த்த வைபவ வழிபாடு திருக்கடையூரில் இயல்கின்றது.

உட்கிடை

மூலக் கனலை, சுழுமுனை வழியாக, சகஸ்ராரத்துக்கு எழுப்பும் போது, காலம் என்னும் எமபயம் ஒழியும். பிரமரந்திரப் பேரொளி கண்டு லயமெய்தி சாகாதிருத்தலை அங்கி யோகம் என்பர். அக நெறியில் மூலாக்கினியை மேலேற்றலை அக்கினி காரியம் என்பர். பிரமரந்திரமாய மேல் துவாரத்தில், ஊர்துவ திருஷ்டியால் பார்த்து, சகஸ்ர தளத்தில் சிவ சீவ, சக்தி சிவ ஐக்கியப் பேரொளியில் லயிக்கையில், எழும் ஆயிரம் இதழ்ப்பேரொளி வைபவமா கிய, கால சம்மார வைபவம், திருக்கடையூரில் வழிபாடு பெறுகின்றது.[90]

.090 அட்ட வீரட்டங்களும் ஆனந்த தாண்டவமும்

சிவ தாண்டவ மூர்த்தங்களில் நடராச மூர்த்தங்கட்குத் தரும் பூசனைச் சிறப்புகள் யாவும் இவ்வீரட்ட மூர்த்தங்கட்குக் கிடைப்பதில்லை. அட்ட வீரட்டத் தலங்களெனப் போற்றப்படும், தமிழக எட்டு ஊர்களில் மட்டும், இவை உற்சவச் சிறப்புடையன. பொதுவில் இம்மூர்த்தங்களின் தத்துவங்கள், மாயை, காலம்-காலன் என்ற அடிப்படையில் அமைவதால் இவை ஆனந்த நடராச மூர்த்தங்கட்கு முன் ஏற்பட்டனவாக அமையலாம். இம்மூர்த்தங்களின் அம்சங்கள் ஆனந்த நடராச மூர்த்தத்தில் இடம் பெற்று ஒருமை எய்துகின்றன.

.091 ஐந்தொழில்களும் ஆனந்த தாண்டவமும்

மாதவச் சிவஞான யோகிகள் அருளிய சிவஞான மாபாடியம் பழைய கழகப் பதிப்பொன்றில் பிரமாண இயல் இரண்டாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தின் அடிக் குறிப்பில், மிருகேந்திர ஆகமத்தின் ஞான பாதத்தின் நான்காம் படலச் இறுதிச் செய்யுளில் ஐந்தொழில் பற்றிக் குறிப்பிடப்படுவது குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஆகமச் சுலோகம், வைஷம்மிய நைர்க்கிருண்ணி யாதிபரணம் என்ற நூலின், இறுதியில், சிவார்க்கமணி தீபகையிலும் காட்டப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

.092 மூவகை ஐந்தொழில்

தூல ஐந்தொழில்

ஊர்த்துவ சைவர்கள் உபாசித்து உய்ய, உருவத்திருமேனி தாங்கிய பரம சிவம், ஐந்தொழில் இயற்ற ஆனந்த நடராச வடிவு தாங்குகிறது. அந்த

89. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு. சிவபராக்கிரமம். ப:113
90. திருமந்திரம். 345

T.N. Ganganathan

ஐந்தொழில் தூலம், சூட்சுமம், பரம் என்று வகையால், மூன்றாகும்.[91] தூல பஞ்ச கிருத்தியமாவது, சதாசிவ தத்துவங்களுக்கு அதிபதியான சதாசிவ ருத்திரன் உருமேனி தாங்கி, அதிகார அவஸ்தையிலிருக்கும், உருவாருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனி கொண்டு, சாதாக்கியம் முதல் சுத்த வித்தை ஈறான தத்துவங்களில் வதியும் அனந்தாதியர் பொருட்டாக அதோ மாயையில் மண்ணீறான தத்துவங்களைத் தோற்றுவிப்பது என வாதுள சுத்தாக்கியம் என்னும் ஆகமம் கூறும்.[92] இதே கருத்தைச் சிந்தாந்தத் தெளி வியல் என்னும் நூல், ஐந்தொழில்களில் இறைவன் உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருளுவது தூல ஐந்தொழில் எனப் புகலும்.[93] ஐந்தொழிற்கும் வினைமுதலாதல் முதல்வனுக்கு இலக்கணம் என்பர்.[94] இவ்வைந்தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்பனவாம். இவ்வைந்தனுள், தூலமாகிய படைத்தலாகிய தோற்றமும், அழித்தலாய இறுதியும் பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் என்பது வெளிப்படை. மறைப்பு அருள் என்பன பந்தமும் வீடுமென்று உணர்க.[95] இவண் காத்தல் என்னும் நிலைத்தல் என்பது, வினை வேறு பாட்டால் முதல்வன் ஆணையின்படி வாழ்தலாகும். இவ்வைந்தும், பிண்டமாகிய சரீரத் துக்கும், அண்டமாகிய பிரபஞ்சத்துக்கும், ஆய இரண்டற்கும் உரியன. மேற்கண்ட தோற்ற நிலையிலமைந்த படைத்தல் முதலியனவற்றைத் தூல ஐந்தொழில் என்பர்.

.093 சூக்கும ஐந்தொழில்

சூக்கும பஞ்ச கிருத்தியம் என்பது, போகாவஸ்தையில், கூத்தனுருவம் தாங்கிய பரசிவம், சிவம், சக்தி, நாதம், பிந்து, வைந்தவம் ஆயவற்றைப் பொருளாகக் கொண்டு நடிப்பது என மிருகேந்திரம் அருள்கின்றது.[96] உலக முழுவதையும் அழித்த பின்னர், மீளவும் தோற்றுவிப்பதற்காக ஆவன செய் தல் சூக்கும ஐந்தொழில் என சித்தாந்தத் தெளிவியல் கூறும்.[97]

.094 அதி சூக்கும ஐந்தொழில் - பிரபஞ்ச கிருத்தியம்

உயிர்கள் தம் உடம்பைக் கொண்டு, பொருள்களை அறிந்து அனுபவிக் குங்கால், இறைவன், அவற்றின் அறிவுக்கு அறிவாய் நின்று, அவற்றை அறிவித்து நிற்றல், அதிசூக்கும ஐந்தொழில் எனப்படும்.[98] பிரபஞ்ச கிருத்தி யத்தை, அருவமாயும், பராபரமாயும் உள்ள நிஷ்கள சிவம், லயாவஸ்தையில் தானாகவே செய்கிறார் என மிருகேந்திரம் கூறும்.[99] சிந்தாந்தத் தெளிவி யல், உயிர்கள் தம் உடம்பைக் கொண்டு, பொருள்களை அறிந்து அனுபவிக்குங்கால், அவ்ற்றின் அறிவுக்கு அறிவாய் நின்று, அவற்றை அறிவித்து நிற்றல், அதிசூக்கும ஐந்தொழில் என்று கூறும்.[100]

பரநடனம்

பொது வகையால், பெத்த காலத்தில், சிவசூரியனார், ஆன்மாவின், ஞான இச்சாக் கிரியைகளைச் செலுத்தி, அறிவித்து நிற்றல், அதிசூக்கும

---

91. தேசிகர், ப:142
92. அஃதே, ப:147
93. அஃதே, ப:112
94. சிவஞான மாபாடியம், ச.வே.சு. பதிப்பு, சென்னை, 1986. ப:106
95. அஃதே,
96. தேசிகர், ப:142
97. அஃதே, ப:112
98. அருணை வடிவேலுமுதலியார், சித்தாந்தத் தெளிவியல், தருமபுரம் 1968, ப:112
99. தேசிகர் ப:142
100. அஃதே, ப:112. திருமந்திரம்., உண்மை விளக்கம், திருவாவடுதுறை, 1954., ப:20

பஞ்ச கிருத்தியம் ஆகும். சிறப்பு வகையால், முத்திக் காலத்தில், சிவசூரியன் ஆன்மாவின் ஞான இச்சாக்கிரியைகளை, புறத்தே மற்றொன் றிலும் செல்ல வொட்டாது தடுத்து, ஞேயப் பொருளாகிய தம்மை உணருமாறு செலுத்தி, தாமும் அங்ஙனம் சென்று உணருங்கால், ஆன்ம சிற்சக்தியினிடத்துத் தாம் ஏகமாய் விட்டு நீங்காதவராய், அந்த ஞேய விஷயத்தை உணர்வோராவர். இங்ஙனம் சிவபிரான் ஆன்மாவுக்குச் செய்யும் உபகாரம், அதிசூக்கும நடனம் எனவும், பரநடனம், எனவும் கூறப்படும். ஆன்மா எனப்படும் மன்றிலே சிவபிரான் பரநடனம் செய்கின்றார் என்க.[101]

.095 முத்தொழில் சேர்ந்த ஐந்தொழில்

இந்து சமயத்தில் பொதுவாக முத்தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டு வருகையில், சைவ உலகில் ஐந்தொழில்களைப் பற்றிய விளக்கம் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றதது.[102] மிருகேந்திர உபாகமத்தில், ஞான பாதத்தின் நான்காம் படல இறுதிச் செய்யுளில் ஐந்தொழில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள் ளது. இந்த ஆகமச் சுலோகம் வைஷம்மிய நைர்க் கிருண்ணியாதிகரணம் என்ற நூலின், இறுதியில், சிவார்க்கமணி தீ பிகையிலும் காட்டப்பட்டுள்ளது.[103] சிதம்பர சுவாமிகள் எழுதிய பஞ்சாதிகார விளக்கம் என்னும் நூல் ஐந்தொழிற் சிறப்பைக் கூறுவதற்காகவே இயற்றப் பெற்றுள்ளது.[104] இந் நூலில் சிருஷ்டி, திதி, சங்காரம் முதலிய மூன்றும் சடத்திலும், மறைத்தல் அருளல் இரண்டும் உயிரிலும் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.[105] இதே கருத்தை முதல் மூன்றும் மலத்திலும் பின்னிரண்டும் உயிரிலும் நடைபெறு வதாகக் கூறுவதும் உண்டு.[106] மறைத்தல் என்னும் மாயத்திரை அகற்றலும், அருளலும் முத்தொழில்கட்கு மேற்பட்ட இரு தொழில்கள் என்பர். இவண் ஐந்தொழில்களுள் முதன்மை முத்தொழில்கள் சேர்ந்தன என்பது பெற்றாம்.

.096 நித்திய, மகா, பஞ்ச கிருத்தியங்கள் இரு வகை

ஐந்தொழில், நித்திய பஞ்ச கிருத்தியம், மகா பஞ்ச கிருத்தியம் என இரு வகைப்படும் என்பதும் உண்டு.[107]

நித்திய பஞ்ச கிருத்தியம்

இவண் பூத பரிணாமமாகிய, தூல உடம்பைக் கொடுத்தலும், (படைத்தல்) பிராரத்த கன்மம் புசித்துத் தீரும் வரை, தூல உடம்பை நிறுத்து தலும் (காத்தல்) தூல உடம்புகளைச் சங்கரித்தலும், (அழித்தல்) கர்மத்தை உருசிப்பித்து, ஆணவ வலியை அடக்கலும், (மறைத்தல்) தனது, திருவடி நிழலில் இருந்து, பேரின்பத்தைத் துய்க்கச் செய்தலும் (அருளல்) நித்திய பஞ்ச கிருத்தியமாகும்.

மகாபஞ்ச கிருத்தியம்

மாயையிலிருந்து தநு, கரண, புவன போகங்களைத் தோற்றுவித்தலும், தோற்றுவிக்கப்பட்டவைகளைப் புசிப்புக் காலம் வரை, நிலை நிறுத்தலும், (காத்தல்) அவற்றைத் தத்தம் காரணத்தில் ஒடுக்கலும், (அழித் தல்) பக்குவம்

---

101. செந்தில் ப:26-28
102. அருணாசலம். ப., திருமந்திரக் கோட்பாடு. சென்னை, 1982, ப:69
103. அருணாசலம். மு., சைவாகமங்கள், சென்னை, 1983
104. சிதம்பர சுவாமிகள், பஞ்சாதிகார விளக்கம்
105. வேங்கடசாமி, மயிலை, சீனி., இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள். ப:42
106. அஃதே, ப:19
107. திருக்குவளைத் தல வரலாறு. திருக்குவளை, தருமபுரம், ப:24

வரும் அளவும் கன்மங்களைப் புசிப்பித்தலும், (மறைத்தல்) பக்குவ ஆன்மாக்கட்குத் தீட்சை செய்து பாசத்தை அழித்துத் திருவடி நிழலிற் சேர்த்தலும் முறையே மகா பஞ்ச கிருத்தியங்களாகும். சிவாலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகளும் திருவிழாக்களும் இவ்விருவகைப் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவனவாகும்.

.097 தோற்றக் கிரம தூல - சூக்குமப் படைப்பு நிலைகள்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் பஞ்ச கிருத்தியங்களும், மண், நீர், அனல், வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், நிரல் நிரையாக ஒன்றினோடொன்று தொடர்புற்று நிற்பன. இவற்றுள் ஆகாயம் அருவுருவபூதம். அருவுருவமாய ஆகாய பூதத்தினின்று மண், நீர், அனல், வாயு என்னும் உருவ பூதங்கள் தோன்றின. இது தூல நிலை. இது போன்றே நிஷ்கள, சகள வடிவினராகிய சதாசிவ மூர்த்தியிடத்தினின்று, மகேஸ்வரர், உருத்திரர், விஷ்ணு, பிரம்மா என்னும் சகள மூர்த்திகள் நால் வரும் முறையே தோன்றுவர். பிருதிவி (மண்) தத்துவத்தினுள், வியாபித்து நின்ற நிவர்த்தி கலையை அதிட்டித்த பிரம்ம தேவர் உலகங்களைப் படைப்பார். நாராயணர் (நீரில் தோன்றிய) உலகங்களைக் காப்பார். அக்கினி நிறத்தினராய், அக்கினி புவனத்திலிருக்கும் உருத்திரர் அழித்தல் தொழிலைச் செய்வார். வாயு புவனத்தில் நின்ற மகேசுவரர் மறைத்தல் தொழிலைச் செய்வார். ஆகாய புவனத்தில் வசிக்கும் சதாசிவர் அருளல் தொழிலைச் செய்வார். இவை சூக்கும நிலை.[108]

.098 அபிடேக ஆராதனைகளில் ஐந்தொழில் தத்துவம்

நடராசப் பெருமானுக்கு உற்சவ காலங்களில் நிகழ்த்தும் அபிடேக ஆராதனைகளில் ஐந்தொழில் தத்துவம் அடங்கியுள்ளது என நூலோர் மொழிவர்.[109]

.099 தூல சூக்குமத் தன்மை படைப்பு நிலை

பட்டி எண்.8 தூல நிலை

மண்	நீர்	ஆகாயம்	அனல்	வாயு
படைத்தல்	காத்தல்	அருளல்	அழித்தல்	மறைத்தல்
(மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு)	(இருவினை போகங்களை உண்பிக்க)	மலத்தை நீக்கி அத்வைத சிவம் தூலத்தை அழித்தல் பொருட்டு	இணைப்பை ஒழிக்க	அவ்வினை போகங்களை அழுத்தல்
பிரம்மா	நாராயணர்	சதாசிவர்	ருத்திரர்	மகேஸ்வரர் சூக்குமநிலை

.100 நித்திய பஞ்சகிருத்தியம்

இக்கருத்தே நித்திய மகா பஞ்ச கிருத்தியங்கள் என முன் குறிக்கப்பெற்றது. கீழ்க் காணும்பட்டி மகாபஞ்ச கிருத்தியம் எனும் திருவிழா நிகழ்ச்சிகளில் பஞ்ச கிருத்திய நிலை எனச் சுட்டப்படும் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும்.[110]

108. சோம. லெ. கோயில், சிதம்பரம் கும்பாபிஷேக மலர், சிதம்பரம். ப:468
109. நஜன், சிதம்பர இரகசியம், சென்னை ப:25
110. சோம: லெ. கோயில், ப:26 சுப்பிரமணிய அய்யர், சிதம்பர ரகசியமும் நடராசத் தத்துவமும். ப:56 நஜன், சிதம்பர இரகசியம், ப:25

நடராசப் பெருமான் சிற்சபையினின்று அபிடேக மண்டபத்துக்கு எழுந்தருளல்	ஐந்தொழில் படைத்தல்	நடராசப் பெருமானை பீடத்திலிருந்து எழுந்தருளச் செய்வது
நடராசப் பெருமானின் அபய ஹஸ்தத்தில் கங்கணம் சாத்துதல்	காத்தல்	திருமஞ்சனம்
நடராசப் பெருமானுக்குத் திருச் சாந்து சாத்துதல்	அழித்தல்	கறுப்புச் சாந்து அணிதல்
பச்சைக் கற்பூரம் சாத்துதல் (வெள்ளை சாத்துபடி வைபவம்)	மறைத்தல்	வெள்ளை ஆடை அணிவித்தல்
தரிசனம்	அருளல்	பவனி வருதல்

.101 சிருஷ்டி - லய ஐந்தொழில்

"படங்கொடு நின்ற இப்பல்லுயிர்க்கெல்லாம் அடங்கலும் தானாய்" நின்றவன் இறைவன் எனத் திருமந்திரம் கூறும்.[111] இவண் அடங்கலும் என்பது சிருஷ்டி - லயம் என்ற இரண்டனுள் அடங்கும் ஐந்தொழில்களுமாம். ஐந்தொழிற்படு பொருள்களாகவும், செயல்களாகவும், சக்திகளாகவும், இவ்வடங்கலும் ஆன இறைவன் திகழ்கிறான் என்பது கருத்து.

.102 ஐந்தொழிற் காரணம்

இறைவன் ஐந்தொழில் நடனம் ஆடுவதற்கான காரணங்களைக் கூற வந்த உண்மை விளக்கம் நான்கு காரணங்களைக் கூறுகின்றது.[112] அவற்றுள் முதலாவது மாயையினை உதறுதல், இரண்டாவது வல்வினையைச் சுடுதல், மூன்றாவது மலம் சாய அமுக்குதல், நான்காவது அருள்கொண்டு நேயத்தால் உயிரினை ஆனந்த வாரியில் அழுத்துதல் என்பனவாம். இவையனைத்தையும் இயற்றுவது எந்தையர் பதம்தான் என உண்மை விளக்கம் கூறும். போற்றிப் பஃறொடை நிருத்தத்தின் நிலையினைப் போற்றுகையில், மண்ணுள் நிறைந்து, பிறவி வழக்கறுத்து நிற்பதே நிருத்த நிலை எனப் போற்றும்.[113] சிவப்பிரகாசம் இமையோர் நிருத்தம் செய்யும் இறைவனைத் துதி செய்வது "நீங்கள் அரும் பவத் தொடர்ச்சி நீங்க" எனப்புகலும்.[114] தத்துவப்பிரகாசம், வினா விடையாக ஐந்தொழில் நடனக் காரணங்களைக் கூறுகின்றது.[115] இறைவன் கருணையால் ஐந்தொழில் இயற்றுங்கால், உயிர்களை மாயா உடலில் இடுவதற்குக் காரணம் அவன் உயிர்கட்கு அறியாமையாகிய மலத்தினை நீக்குதல் ஆகும். திதியாகிய காத்தல் செய்தற்குக் காரணம் அவரவர் செய்வினையைத் துய்ப்பித்து நீக்குதற்காம். சங்காரம் செய்வது மாயையினால் மொத்துண்டு திரியும் இளைப்பினை மாற வைப்பதற்காம். மறைத்தலாகிய திரோதனம் செய்தல், செல்லும் வினையைத் துய்த்தலாகிய தொடர்ச்சியின் போது, வினை தொலையுமளவும் செய்த காவலாம். அருள் செய்தல் என்பது திருவடிப்பேறு எய்துவித்ததலாம் என்கின்றது.[116] இதே கருத்துக்களை காஞ்சிபுரம் வித்துவான் சபாபதிப்பிள்ளை, தனது நடேசர் துதியில், "உயிர்களை முத்தியில் விடவேண்டுமென்று, நிறைந்த கடல் போன்ற பெரிய கருணையாகிய திருமேனி கொண்டு, சொல்லுதற்கரிய, ஆணவ மலத்தினால்

111. திருமந்திரம் 2768
112. உண்மை விளக்கம்.36
113. போற்றிப் பஃறொடை
114. சிவப்பிரகாசம், பாட்டு ஓங்கொளியா
115. தத்துவப் பிரகாசம்
116. சைவ மரபு

மறைப்பட்டிருந்த உயிர்களை அதனின்றெடுத்து, பெரிய புகழ் சேர்ந்த விஞ் ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூன்று வகையாகத் தொகுத்து, தனு, கரண, புவன போகங்களைக் கொடுத்தருளி, அம்மூவகை உயிர்களுள், ஆண வம் கன்மம் மாயை என்ற மும்மலங்களுடன் தோன்றிய சகலர்க்கு நல்வினை, தீவினை என்றும் இரு வினைகளைச் சமப்படுத்தி, மலபரிபாகம் வருவித்துத் தமது திருவடியின் கீழ் வைத்திருந்தருள்வது ஐந்தொழிற் காரணம் என் பார்.[117] பரசிவம் ஐந்தொழில்களையும், திருவருளின் விளையாட்டாகவும், சீவாத்மாக்களின் துன்பகரமான ஜனன மரண சாகரத்தினின்றும், அவர்களை எடுத்து அருள் புரிவதற்காகவும், செய்கின்றார்.[118] இவண் அழித்தல் ஆன்மாக்களின் இணைப்பை ஒழிப்பதற்கும், படைத்தல் மலபரி பாகம் வருவித்தற் பொருட்டும், காத்தல் இருவினைப் போகங்களை உண்பித்து அவ்வினைகளை ஒழித்தற் பொருட்டும், அருளல் மலத்தை நீக்கி அத்வைத சிவத்துவத்தை அளித்தற் பொருட்டுமாம்.[119] இவ்வைந் தொழில் களும் அருளலைப் போலவே அவருக்குத் துணையாயுள்ளமையால் அருட்டொழில்கள் எனப்படும்.

.103 ஐந்தொழிலில் பதி நிலை

பதியேயான நடராசப் பெருமான் ஐந்தொழிலைச் செய்யினும் அவர் விகாரப்படுவதில்லை. இது அவர் பதி நிலை.[120] ஆகாயத்தில் விளங்கும் கதிரவனின் சந்நிதியில் தாமரைகளில் ஒன்று அலரும்; ஒன்று அலர்தற்குப் பக்குவமான மொட்டாயிருக்கும், மற்றொன்று வாடி உலரும்; இங்ஙனம் அலர் தல், அரும்புதல், உலர்தல் என்ற முத்தொழிலும் கதிரவனின் சந்நிதான விசேஷத்தால் நிகழினும், கதிரவன் விகாரப்படாதது போல, பதியின் சந் நிதான விசேடத்தால், சடசேதனப் பிரபஞ்சமெல்லாம் ஐந்தொழிலிற்படிந்தும், சிவம் நிர்விகாரியாகவே இருப்பார். இதனைத் தாயு மான சுவாமிகள், 'ஆக்கியழித்துத் துடைக்குந் தொழிலத்தனை வைத்தும் எள்ளத்தனையேனும் தாக்கற நிற்குஞ் சமத்தன் என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்.[121]

.104 ஏக நாயகர்

பௌஷ்கர பாஷ்யகாரர், பஞ்சகிருத்தியம் செய்பவர்களாக ஐந்து கடவு ளர்களும் அமையினும், அவர்கள் காரணேஸ்வரர்களேயன்றி, கருத்தாக்களன்று என்று புகல்வார். அவர்கள் தாம் தத்தமக்கமைந்த கிருத்தி யங்களில் உண்முகர்களாயிருந்து தத்தம் கால எல்லையில், ஒடுக்கமும், தோற்றமும் உடைய காரிய கோடியில் வைத்தெண்ணப்பட்டு அவாம்தர காரணேசுவரர்களாய், நிற்பர் அவ்வைந்தொழிலும் தன் தொழிலெனக் கொண்ட ஏகநாயகனாகிய, பரம காரணேசுவரன் பால் பராதீனர்களா தலால் அவர்கள் கருத்தாக்களாக மாட்டார்கள் என்று புகலும்.[122] இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கையில் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு நடனம் என்ற கருத்து பிற்காலத்தது என்பது பெறப்படும்.

117. சிதம்பர சுவாமிகள், பஞ்சாதிகார விளக்கம், பா:5
118. சோம. லெ., கோயில் ப:259
119. அய்யர், ப:53
120. அஃதே, ப:54
121. தாயுமானவர் பாடல், ஆனந்தக் களிப்பு பாட்டு 19.
122. செந்தில் நாதய்யர், பௌஷ்கர பாஷ்ய உபோற்காதம், ப:4

.105 ஐந்தொழிற் கருத்தா

சிவலிங்கம் என்னும் சதாசிவ மூர்த்தத்திற்கு ஐந்து முகங்கள். இவை பஞ்ச பிரம்ம நிலை எனப்படும். சிற்பங்களில் இவை நான்கு திசைகட்கு ஒன்றாகவும், உச்சியில் ஒன்றாகவும் என ஐந்து தலைகளாகக் காட்டப்படும். இப்பிரம்மங்களே சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், பிரமன் என்ற ஐந்து நிலைகளிலும் வெளிப்பட்டு, ஐந்தொழில்களைச் செய்கின்றன. இதனைத் திருமூலர், புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி என்ற திருப்பாட்டில் புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர் எனினும் படைப்பவன் புண்ணியன் தானே என்பார். இது இறைவனின் ஐந்தொழிற் கருத்தா நிலை குறிப்பதாகும்.

பஞ்சப் பிரம்ம சொரூபர்

கிருஷ்ண யசுர் வேத பஞ்சப் பிரம்மோபநிடதத்தில் சிருஷ்டி முதலிய பஞ்ச கிருத்திய நியமனகர்த்தர் என்று சிவபெருமானைக் குறிப்பிட்டு, பெரிய சொரூபமுடையவரும், பஞ்ச பிரம்மங்களாகிய பிரமன் முதலிய பஞ்ச கர்த்தாக்களைத் தம்மிடத்தில் உபசம்ஹாரம் செய்து உறுதியாயிருப்பவருமான பஞ்ச பிரம்ம சொரூபர் என்று கூறும். எனவே நவந்தரு பேத நிலைகட்கு மேலான பரசிவமாய தாண்டவமூர்த்தி பஞ்ச பிரம்ம, சொரூபர் என்பது புலனாகும்.[123]

.106 ஐந்தொழிற் கருத்தாக்கள்


ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றிற்கு, முறையே பிரம்மன், திருமால், உருத்திரன், சதாசிவம், மகேசுவரன் என்பவர்களே காரிய கருத்தாக்கள் எனப்பட்டது. இவர்களுள் தெய்வத் தன்மையின் வலி உயர்வு கருதியோ, அன்றி வேறு நற்காரணங்கள் கொண்டோ, பிரம்மா படைத்தல் தொழிலுக்கும், திருமால் படைத்தல், காத்தல் என்ற இரு தொழில்கட்கும், உருத்திரன் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்கட்கும் மகேஸ்வரர், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்ற நான்கு தொழில்கட்கும், சதாசிவர் ஐந்துதொழில்கட்கும் கருத்தாக்களாக ஆவதாகக் கூறும் மரபும் உண்டு.[124] மகேஸ்வர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள் கல்யாண சுந்தரர்-ஆக்கல் தொழிலுக்கும், காமாரி-அழித்தல் தொழிலுக்கும், இடபாரூடர்-காத்தல் தொழிலுக்கும் சோமாஸ்கந்தர்-அருளல் தொழிலுக்கும், மற்றும் தாண்டவேஸ்வரர்-மறைத்தல் தொழிலுக்கும் அதிபதி என்னும் மரபும் உண்டு.[125] ஐந்தொழிலியற்றும் ஐவரும் சிவனே என்பதும், சிவனே ஐந்து மூர்த்திகளாக வந்து, தனித்தனியே ஐந்தொழில்கள் இயல்வதற்கு மூல கருத்தாவாகிறார் என்பது இதன் வழியும் உறுதிப்படும்.

.107 ஐந்தொழிற் கருத்தாக்களைப் படைத்தல்


ஆத்ம ஸ்வரூபியாகவுள்ள பரமேஸ்வரன் கல்பாரம்ப காலத்தில், உலகங்களின் படைத்தலை முன்னிட்டு, ஐந்து தொழில்களைச் செய்வதற்காக ஐந்து மூர்த்திகளையும் சிருஷ்டித்து அவர்களிடம் அந்தந்த தொழிலை ஒப்புவித்து தான் அதில் சம்பந்தப் படாமல் சபையில் ஆனந்த தாண்டவம் செய்கிறார் எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும். இவண் கருத்தாக்களாக இவரைப் படைப்பதும் மூல கருத்தாவாக நடராசப் பெருமான் நடமாடுவதும் பெறப்படும்.

123. பண்டார சாத்திரம், திருவாவடுதுறை ப:80
124. விபுலானந்த அடிகள், நடராஜ வடிவம், ப:11
125. சிவகாமி மலர், சிவமூர்த்தங்கள் ப:35-39

தென்திசை உகப்பு



படம் எண் 3



பஞ்சப் பிரம்ம நிலைகள்

படம் எண் 4

.108 பஞ்ச மந்திர பிரம்ம நிலையும் ஐந்தொழில்களும்

ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் எனும் ஐந்து மந்திரங்களைக் கொண்ட, மந்திர உடலே சிவனுடைய உடல் என மிரு கேந்திர ஆகமம் கூறுகிறது. இவை ஐந்தும் சிவலிங்கம் என்னும் சதாசிவ உருவின் ஐந்து தலைகளாக அமைவன. இம் மந்திர உடலில் ஐந்துவித சக்திகள் உள. இவ்வைந்து வித சக்திகளைக் கொண்டே ஈசன் ஐந்தொழில் களைச் செய்கிறார். ஈசானர், படைத்தல், தொழிலை, கிரியா சக்தி வாயிலாகவும், பிரம்மாவை அதிட்டித்தும், தத்புருடர், காத்தல் தொழிலை, ஞான சக்தியின் வாயிலாகத் திருமாலை அதிட்டித்தும், அகோரர், அழித்தல் தொழிலை, இச்சா சக்தியின் வாயிலாக ஸ்ரீ ருத்ரரை அதிட்டித்தும், வாமதே வர், மறைத்தல் தொழிலை, ஆதிசக்தியின் வாயிலாக, சதாசிவரை அதிட்டித்தும் சத்யோசாதர், அருளல் தொழிலை, பராசக்தியின் வாயிலாக, மகேசுவரரை அதிட்டித்தும் செய்கின்றார் என்பர். ஐந்தொழில்களில் ஆக்கல், அழித்தல், காத்தல் என்னும் மூன்றும் மலத்தினிடத்தே நிகழும். மறைத்தல், அருளல் என்ற இரண்டும் உயிர்களிடத்தில் நிகழும்.[138]

.109 ஐந்தெழுத்தும், ஐந்தொழிலும்

பஞ்சப் பிரம்ம நிலைகளுள் பஞ்சபூதங்களின், இயக்கங்கள் பஞ்ச கிருத் தியங்கள் முதலியவற்றை, பஞ்ச மந்திரம் என்னும் திருவைந்தெழுத்தின் வழி இயற்றுவதாகவும் கூறப்படும். மகுடாகமத்தும் திருமந்திரத்தும் இது பற்றிக் காணலாம். பட்டி காண்க. இவண் பஞ்சப் பிரம்ம நிலைகள் பஞ்ச கிருத்தி யங்கட்குத் தொடர்புடைய கருத்தாக்களாகக் காட்டப்பட்டுள்ளன. பிரம்மத்தின் சிறப்புக்கள் உபநிடதங்களில் மிகுதியும் விளக்கப்பட்டுள்ளன என்பது கருதத் தக்கது. இவண் சிவபெருமான் மூல கருத்தாவாக நின்று, ஐந்தொழிற் கருத் தாக்களாய் ஐவர் வழி ஐந்தொழில்கள் நடைபெறும் என்பது மரபு.

.110 திருவைந்தெழுத்தின் ஐந்தொழில் நிலைகள்

திருவைந்தெழுத்தின் ஐந்தொழில் நிலைகள்
பட்டி எண்.9

திரு ஐந்தெழுத்து நிலை	திசைகள்	பஞ்ச பிரம்ம நிலைகள்	பூதங்கள்	தொழில்கள்	கருத்தாக்கள்	சக்திகள் பேதம்	ஐந்தொழில் செயற்படும் இடம்	[illegible]தாண்டவ உருவத்தில் செயற்படும் கருவி
ந	மேற்கு	சத்தி யோ சாதம்	மண்	படைத் தல்	பிரம்மா	கிரியா சக்தி	மலம்	துடி
ம	கிழக்கு	தத் புருடம்	வாயு	காத்தல்	திரு மால்	ஞான சக்தி	மலம்	அமைந்த கரம்
சி	தெற்கு	அ கோரம்	தீ	அழித்தல்	உருத் திரன்	இச்சா சக்தி	மலம்	தீ
வா	வடக்கு	வாம தேவம்	நீர்	மறைத் தல்	சதா சிவம்	ஆதி சக்தி	உயிர்	ஸ்தித பாதம்
ய	உச்சி	ஈசா னம்	ஆகா யம்	அரு ளல்	மகே சுவரர்	பரா சக்தி	உயிர்	குஞ்சித பாதம்

உண்மை விளக்கம் : ப 35 மகுடம் :
திருமந்திரம் 2753 சிற்பச் செந்நூல் : ப 165

126. - 137 விடுதல்
138. இராமலிங்கம், கி. சைவசமய சொற்பொழிவுகள் ப : 146

.111 உள்ளும் அப்பாலும்

எனவே பஞ்சக் கிருத்தியங்களையும் தன்னுள் அடக்கி, அவற்றுக்கு அப்பாலாகவும் நிற்பது முதல்வனது தன்மை. ஆனந்த நடராசரது திருவுருவம், பஞ்ச கிருத்தியங்களைக் காட்டுவதோடு, ஞானமயமான சிதாகாசத்தின் இயல் பையும் அறிவுறுத்துவதனால் நடராச மூர்த்தம், ஏனை மூர்த்தங்களையும் விடச் சிறப்புடையதாகும் என்பர்.[139]

.112 காரணப் பிரம்மம்

சுவேதாசுவதர உபநிடதம், பிரம்மவாதிகள் கூறுவதாக, பரம சிவத்தினை பிரபஞ்சத்துக்குக் காரணப் பிரம்மம் என்று கூறும்.[140]

.113 மகா தாண்டவேசுவரர்

தில்லை ஆனந்த நடராசப் பெருமானை சித்சபை வழிபாட்டின் போது நடராசராச ராசர் வருகிறார் என்று கட்டியம் கூறுவதுண்டு. இதே பொருட்பட ஆனந்த நடராசரை மகாசதாசிவ தாண்டவேசுவரர் என்று அழைப்பது மரபு. சைவ தத்துவ மரபில் முப்பத்து நான்காவது தத்துவத்தினராகிய சதாசிவ நாயனாருக்குமேல் தாண்டவேசுவரரை நியசிக்க என மகுடாகமம் கூறும்.[141]

மகுடாமத்தில், ' முப்பத்து நான்காம் தத்துவத்தினராகிய சதாசிவ நாய னாருக்கு மேல், தாண்டவேசுவரரை நியசிக்க என்று தொடங்கி,

'பிரம்மாவுக்கு மேல் விஷ்ணு
அவருக்கு மேல் உருத்திரர்
அவருக்கு மேல் சதாசிவர்
அவருக்கு மேல் விந்து
அவருக்கு மேல் நாதம்
அவருக்கு மேல் சக்தி

அதற்கு மேல் பஞ்ச கிருத்தியத்தியத்துக்குக் காரணமும், தேவ நாயகரும், ஞான மூர்த்தியுமாகிய, (சிவதத்துவ) தாண்டவேசுவரர். அவரை சாதாக்கியத் தத்துவத்துச் சதாசிவத்தில் ஆவாகனம் செய்க' என வருகின்றது. இது மகா தாண்டவேசுவர நியாசம். இஃது ஆனந்த நடராசரின் மேன்மையினை விளக் கும்.[142]


.114 சதாசிவரே தாண்டவேசுரர்

சர்வ ஞானோத்தரம் என்ற நூல், 'பதியாவார் சதாசிவர், இவர் மந்திர வடிவினரும், சர்வ மந்திரங்கட்கும் அதிபரும், சிருஷ்டி, சங்கார மென்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவருமாயுள்ளார்' எனக் கூறுகின்றது. எனவே ஆனந்த தாண்டவப் பெருமான் சதாசிவரே என்பது பெறப்படும்.[143]

.115 ஈசானரே தாண்டவேசுவரர்

சதாசிவம் எனப்படுகின்ற, சிவலிங்கமாகிய, அதிகாரவடிவாகிய, அரு வுருவ நிலைக்கு, பஞ்ச பிரம்ம நிலைகள் என்ற அளவில் ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் ஆகாயத் திசையில், அமைந்த உச்சி முகத்தை ஈசானர்

139. வேங்கடசாமி, ப : 19/139, இருபது சில்லரைக் கட்டடம்.
140. செந்தில் நாதய்யர், தேவாரம் வேத சாரம், திருப்பரங்குன்றம், ப : 52
141. தேசிகர், ப : 411
142. செந்தில் நாதய்யர், சைவ வேதாந்தம், திருப்பரங்குன்றம், 1920, ப: 72
143. அஃதே, ப : 57


அண்ட சராசரங்கள்
பஞ்சபூதங்கள்
உயிர் வர்க்கம்
பிரபஞ்சஇயல்
பரநிருத்தமூர்த்தி
சபாபதி
நிருத்தமூர்த்தி
போகவடிவங்கள்
உருவ நிலை
தூல நிலை
சிவன்
விஷ்ணு
அருவுரு
மகேஸ்வரன்
அதிகாரவடிவம்
பிரம்மா
நவந்தரு பேத நிலைகள்
மகுடாகமக
மகாதாண்டவேஸ்வர நியாசம்
சிவன் சக்தி
நாதம்
பிந்து
சூக்கும நிலை
" சுக நிலை
லயசிவம்-அருவம்

படம் எண் 5

என்பர். இது ஆகாயத் தத்துவக் குறிப்பினது. பரம வியோமம் என்பதும் ஆகாயத் தத்துவம் என்பதும் சிதம்பர நிலை. தகாராகாசத்தில், இதயத் தாமரையில், தாண்டவேசுரர் அங்குஷ்டப் பிரமாணத்தில் உள்ளார் என்பது உபநிடதங்களின் கூற்றும், யோக அனுபவமுமாகும்.அதர்வசிரோபநிடதம், ஈசான சப்தத்துக்குப் பொருள் கூறும்போது, பரப்பிருகிருதிக்கு அப்பாற்பட்ட ஈசானர், இதயத்தின் கண்ணே, அங்குஷ்டப் பிரமாணத்தினராய் இருக்கின்றார் என்றும், அவர் ஈசானர் என்றும் பொருள் கூறும். தாண்டவேசுரப் பிரானை ஈசாவாசியம், பிருகதாரணியம் சுவேதாசுவதரம், கடவல்லி, மைத்திராணியம், மகாநாராயணம், அதர்வ சிரசு, முண்டகம் முதலிய முக்கிய உபநிடதங்கள் ஈசானர் எனச் சுட்டியுள்ளன.[144]

.116 மகேஸ்வர மூர்த்தமும் தாண்டவேசுர நிலையும்

சிவபெருமானின் பல்வேறு திருவுருவத் திருமேனிகளும் மகேஸ்வர மூர்த்தங்கள் எனப்படும். நடராசத் திருமேனியும் மகேஸ்வர மூர்த்தங்களுள் ஒன்று. நடனத் திருக்கோலத்துள்ள நடராசர் உருவங்கள் பல. அவற்றுள் ஆனந்த நடராசர் உருவுக்கு, சிற்சபாநாதர், சபாபதி, தாண்டவேசுரர் போன்ற பல சிறப்புக்கள் உண்டு. இது நிலைபேறுடைய பரமசிவம் அணுவினுக்கணுவாய் தன் இடைவிடா இயக்க நிலையினைச் சுட்டும் உருவம். சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்கள் செய்யும், தாண்டவேசுவரராகிய, நடராசர், பிற நடனத் திருக்கோலங்களினின்று வேறானவர்.

.117 பர லய வடிவம்

பிற நடராச உருவங்கள், போக வடிவங்கள் எனக் கூறப்படும். போக வடிவம் என்பது உபாசகர்கட்குப் போகங்களைத் தருவதற்காக சுபமாக மங்கள உருவில் அமைந்த தெய்வ வடிவம். இவண் தாண்டவேஸ்வர ஆனந்த நடராசர் நவந்தரு பேதங்கட்கு மேற்பட்ட லயதத்துவம். அருவநிலை லய வடிவுக்கு மேல் ஒரு சிறப்புக்குரிய உருவக நிலை. பரலய வடிவம்.

.118 நவந்தரு பேதம்

சிவபெருமான் ஆன்மாக்களின் பக்குவத்துக்கேற்ப, அவர்கட்கு உதவுதற்காக நவந்தரு பேதமாக உருவநிலைகளைக் கொண்டுள்ளார் என்பது மரபு. சிவன், சக்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேஸ்வரம், ருத்திரன், விஷ்ணு, பிரமன் என்பது நவந்தரு பேதம். இவற்றுள் சிவன் முதல் விந்துவரை, நான்கும், லயவடிவாகிய அருவ நிலை. சதாசிவம் அதிகாரவடிவாகிய அருவுருவ நிலை, மகேஸ்வரன், திருமால், ருத்திரன், பிரமன் முதலியன போக வடிவாகிய உருவநிலை.

.119 நவந்தரு பேதத்துக்கு மேல்நிலை

சிவ தத்துவ வளர்ச்சி நிலைகளில், நவந்தரு பேதங்கள் பற்றிய சிந்தனை வழங்கிய காலத்துக்குப் பின், வளர்ச்சி நிலையாக, பரசிவ நிலை-தாண்டேசுவர நிலை சிந்திக்கப்பட்டு, அது நவந்தரு பேதத்துக்கு மேல் நிலை எனப் போற்றப்பட்டுள்ளது. ஞானானந்த பரிபாஷையில் 'எந்த நடராச மூர்த்திக்கு சதாசிவ மூர்த்தி ஆசனமாக அமைகிறாரோ, அவரே நவந்தரு பேதத்துக்கு மேலானவர். இந்த நவந்தரு பேதங்களும் எவனிடத்தில் ஒடுங்குகின்றவோ அவனே துவாத சாந்தப் பெருவெளி யில் பரமானந்தத்

144. அஃதே, ப : 73

தாண்டவம் புரிபவன். ஆதலால் தாண்டவ மூர்த்தியே மிக மேலானவர் என்பதில் ஐயமின்று. ஆகவே ஞானி ஏனைய மூர்த்தி பேதங்களைவிட்டுத் தாண்டவ மூர்த்தியையே இம்மை மறுமை இன்பங்கட்காகத் தியானிக்கக் கடவன்; அம்மூர்த்தி அருட் சோதிப் பெருமான்; பஞ்ச கிருத்தியத் தாண்டவம் புரிபவர் என்று மகுடாகமத்திலும், வாதுளோத்திரத்திலும் கூறப்பட்டுள்ளது என்ற சொல்லப் பட்டுள்ளது' என்பர்.[145] நவந்தருபேதத் தத்துவ நிலையுள், சதாசிவமூர்த்தி உயர்நிலை. இவண் தாண்டவேசுவரர் சதாசிவமூர்த்திக்கு மேலானவர் என்பது குறிப்பு. ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப பரசிவம் நவந்தரு பேதம் தாங்கியது போன்றே, ஈண்டும் பரசிவம் தாண்டவ வடிவம் தாங்கியது. இதனை உண்மையாக உணர்ந்து உபாசிக்கக் கூடியவர்கள் ஊர்த்துவ சைவர்களே ஆவர் என மகுடாகமம் கூறுவதாகக் கூறப்பட்டுகின் றது.


.120 தாண்டவேசுவரர் சிறப்புக்கள்

தாண்டவேசுவரரின் சிறப்புக்களைச் செந்தில் நாதய்யர் அவர்கள் சைவ வேதாந்தம் என்னும் நூலில் தாண்டவேசுவர சிவபரத்துவம் என்ற தலைப்பில் அழகுறத் தொகுத்துக் கூறியுள்ளார்கள்.[146] காரணாகமத்தில் பஞ்சமந்திரான்மகபரராகிய ஈசனாரைத் தாண்டவேசுவரர் என்பர் என்றும், பிரம்மரந்திரத்திலே, சாதாக்கியத் தத்துவத்திலே சிவன் உளராயி னார். அவர்க்கு மேலுள்ள சமஷ்டி ரூப சதாசிவஅம்சமே தாண்டவேசுவரர் என் றும், துவாதசாந்தத்துக்கு மேலுள்ளவராகலின் அவர் அதி சூக்கும வடிவினர் என்றும், நேரே தேவ தேவரும், ஜகத்குருவுமாக நிருத்த மூர்த்தியாம், தாண்ட வேசுவரர் அமைகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. இரிக் வேதத்தில் பரமாகாயத்து அத்தியட்சர் என்றும், சூக்கும வடிவினராகிய சமஷ்டி ரூப மகாசதாசிவ தாண்டவேசுரர் என்றும் இவர் கூறப் படுகிறார். இவர் முப்பத் தாறாம் தத்துவத்தினர். காரணாகமும் மகுடாகமும் ஒருங்கு சதாசிவ தாண்டவேசுவரையே முப்பத்தாறாம் தத்துவ முடிவிலுள்ள பரமாகாய அத் தியட்சர் என்று கூறுகின்றன. மகுடாகமத்தில், முப்பத்து நான்காம் தத்துவத்தினராகிய, சதாசிவ நாயனார்க்கு மேல் தாண்டவேசுவரரை நிய சிக்க என்று வருகிறது. அவன், மேலும், அனைத்துக்கும் (ஐந்தொழில்) காரணரும், தேவநாயகரும், ஞான மூர்த்தியுமாகிய தாண்டவேசுவரரை சுகா சனத்திலிருந்து புஷ்பத்தைக் கையிற் கொண்டு (சதாக்கியத் தத்துவத்துச் சதாசிவரில்) ஆவாகனம் செய்க என்று வருகின் றது. சர்வஞானோத்தரம் என்னும் நூல், தாண்டவேசுவர சதாசிவரை, பதியாவார் சதாசசிவர்; இவர் மந்திரான்மாவும். மந்திர வடிவினரும் சர்வ மந்திரங்கட்கும் அதிபரும், சிருஷ்டி சங்காரம் என்னும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவருமாயுள்ளார்' என்பதாக குறிப்பிடுகிறது.[147]

.121 நடனத்தில் சக்தி அம்சம்

சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இறைவனின் திருநடனத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது சக்தி அம்சமும் சிவ அம்சமும் செயற்படும் விதத்தைக் குறிப்பிடுகிறார். உயிர்களுக்கு வாழ்க்கை ஆரம்பநிலையில் இருக்கும் பொழுது அது சக்தியினுடைய பரிபாலிப்பில் அடங்குகிறது. சிவபோதம்

145. அஃதே. ப : 140
146. அஃதே. ப : 72-73
147. அஃதே. ப : 57



திருவைந்தெழுத்தின் தெய்வதத் தானங்கள்

திருஐந் தெழுத்து	சத்தி நிலை	ஐந் தொழில்	ஐம் பொருள்	அருளிச் செயல்	யோகச் சக்கரம்	சதாசிவ லிங்கம் பாதாதி	திருமேனி பாதாதி
ந	கிரியா	படைத்தல் (பிரம்மா)	பிந்து திரோதம்	கருமச் சிதைவு	சுவாதிட்டானம்	கீழ்ப்பீடம் (பிரம்ம பாகம்)	திருவடிகள் ஊன்றிய பதம்
ம	ஞான	காத்தல் (விஷ்ணு)	வைந்தவம் மலமாயை	மலமகற்றல்வ ட்ளித் தல்	மணி பூரகம்	நடுக் கண்டம்	வயிறு
சி	இச்சா	அழித்தல் (ருத்திரன்)	சிவம்	மாயை நீக்கம்	அநாகதம்	மேற்பீடம்	இரு தோள்கள் இதயம்
வா	ஆதி	மறைத்தல் (மகேஸ் வரன்)	சத்தி அருள்	அருளுடம் பிந்து போகத் தழுத்தல்	விசுத்தி	கலவ பாத்திரம் (விஷ்ணு பாகம்)	வாய், முகம்
ய	பரா	அருளல் (சதா சிவம்)	நாதம் ஆன்மா	ஆனந்தத் தழுத்தல் இளைப் பாற்றல்	ஆக்ஞை	பூசாங்கம் (ருத்திர பாகம்)	இரு கண்கள், சிரம், முடி
	மகுடம் (சிவப் 92)	உவி 35 மகுடம்	உவி 41 திரு 2710-11	உவி 33	திரு 2713	திரு 969	சிவவா97 உவி 32 மகுடம்

படம் எண் 6

அப்பொழுது பின்னணியில் மறைந்து கிடக்கிறது. பல பிறவிகளில் உயிர்கள் பண்பாடு அடைந்து வருகின்றன. ஞானத்துறையில் ஜீவர்கள் மேலே போகப்போக இக்காட்சி மாறியமைகிறது. சிவசொரூபம், முன்னணிக்கு வரவர, சக்தியின் செயல் சிறிது சிறிதாகப் பின்னணிக்குப் போகிறது. கடைசியாக, சிவ சொரூபத்தில் சக்தியின் ஆதிக்கம் மறைந்து விடுகிறது. சிவ போதத்தின் தலை எடுப்பு அங்கே தாண்டவமாடுகிறது. தேவியின் திரு நடனமாகத் துவங்கிய வாழ்க்கை முறை, அம்பலக் கூத்தனுடைய திருநடனமாக முற்றுப் பெறுகிறது. முற்பகுதியில் ஆடும் தெய்வமாக இருந்தவள் அம்பிகை. பிற்பகுதியில் ஆடும் தெய்வமாக இருப்பவன் ஈசன்.[148]

.122 ஐந்தொழில்களும் சிற்சக்தியின் வியாபக நிலையும்

ஐந்தொழில் நடனம் பரசிவத்தின் அபின்னா சக்தியான சிற்சக்தியின் வியாபகத்தால் இயல்வது. இச் சிவாபின்ன சிற்சக்தி தான் செய்யும் தொழிலுக்கிணங்க, பராசக்தி என்றும், ஆதி சக்தி என்றும், இச்சா சக்தி என்றும், ஞானசக்தி என்றும், கிரியா சக்தி என்றும் ஐவகையாகக் கூறப்படும். "சிவமெனும் பொருளும் ஆதி சக்தியொடு சேரின், எத்தொழிலும் வல்லதாகும்" எனச் சௌந்தரிய லகரி போற்றுவது அறிதற்குரியது. இதே கருத்து "பரந்த பரையாதி" எனத் தொடங்கும் சிவப் பிரகாசப் பாடலிலும் விளக்கப்படுகின்றது. இதனைத் திருமந்திரம் " தத்துவம் ஆட, சதாசிவம் தானாட, சித்தமும் ஆட, சிவசக்தி, தானாட" என்று போற்றுகின்றது.[149]

அ. பராசக்தி

இவற்றுள் பராசக்தி என்பது, பரமசிவம் போல் எங்கும் வியாபித்து, பக்குவமான சீவர்கட்கு அருள் செய்வது. இதுவே அருளல் தொழிலைச் செய்யும் அருட்சக்தியாகும். இது அருளல் தாண்டவம்.

ஆ. ஆதிசக்தி

ஆதிசக்தி என்பது திரோதனமாய மறைத்தல் சக்தியாகும். இது சொரூபத்தை மறைப்பதாகும். இது ஆணவ மலம் பக்குவமாகும்படி போகத்தைத் தந்து மறைத்தல் செய்து, இறுதியில் அருளலுக்கு வழி வகுப்பதாகும். இது மறைத்தல் தொழிலாகும்.

இ. இச்சா சக்தி

இச்சா சக்தி என்பது சங்கார சக்தி எனப்படும். உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவானுபவம் தரும் பொருட்டு ஏற்படுவதே, சங்காரம். சங்காரம் என்பது கருணையின்வடிவாகும். இது சங்கார தாண்டவம்.

ஈ. ஞான சக்தி

ஞான சக்தி என்பது ஸ்திதி என்னும் காத்தல், தொழிலைச் செய்யும் சக்தியாம். உயிர்களின் மலத்தை நீக்கி, அவர்கள் சிவானுபவத்தைப் பெறும் பொருட்டுச் செய்ய வேண்டிய உபாயங்களை நல்கும் சக்தி இது. இது காத்தல் தாண்டவம்.

உ. கிரியா சக்தி

கிரியா சக்தி என்பது கன்மத்துக்கு ஈடாக ஆன்மாக்கட்கு தேகாதிகளான, தனு, கரண, புவன போகங்களை உண்டாக்கும் சிருஷ்டி சக்தியாகும். இது படைத்தல் தொழில். இதுவே படைத்தல் தாண்டவம். இவ்வைவகைத் தாண்டவங்களும் ஐந்தொழில் தாண்டவத்தின் பகுதிகளே.

---

148. சித்பவானந்தர், ப : 146   149. திருமந்திரம் 2789

.123 மூவகை உருவும் ஐவகைச் சக்தியும்

சச்சிதானந்த சொரூப, இலக்கணமுடைய பரசிவம் ஐவகைச் சக்திகளோடு சேர்ந்து, நிஷ்களம், நிஷ்கள சகளம், சகளம் என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொண்டருள்வர். இம்மூவகைத் திருமேனிகளும் பரமசிவனது தடத்த லட்சணங்களாம்.

அ. அருவத் திருமேனி

சிவம் ஞான சக்தியைப் பொருந்திய போது, அருவத்திருமேனி என்னும் நிஷ்களத் திருமேனி தோன்றும். இது லயத் தானம் என்றும், சிவத்துவம் என்றும் கூறப்படும். இச்சிவம் நிஷ்கள சிவம் எனப்படும். ஞான சக்தியோடு சேர்ந்த சுத்த சிவம் என்னும் நிஷ்கள சிவம் சுத்த மாயையைப் பொருந்துதலால் நாதமும் தோன்றும்.

ஆ. அருவுருவத் திருமேனி

சிவம் ஞான சக்தியையும், கிரியா சக்தியையும் சமமாய்ப் பொருந்திய பொழுது அருவுருவத்திருமேனி என்னும் நிஷ்கள சகளத் திருமேனி தோன்றும். இது போகத் தான மென்றும், சாதாக்கிய தத்துவம் என்றும் கூறப்படும். இச்சிவம் சதாசிவமெனப்படும். இதுவே சிவலிங்கம். ஞான சக்தியோடு சேர்ந்த சுத்தசிவம், சுத்த மாயையைப் பொருந்துதலால், நாதம் உண்டாதல் போன்றே. கிரியா சக்தியோடு சேர்ந்த சிவம், அச்சுத்த மாயையைப் பொருந்துதலால், விந்து தோன்றும்.[150]

இ. உருவத் திருமேனி

ஞான சக்தி குறைந்தும் கிரியா சக்தி மிகுந்தும் இருக்கும் நிலையில் சகளத் திருமேனி என்னும் உருவத் திருமேனி தோன்றும். இச்சிவம் மகேஸ்வரன் எனப்படும். உருவத் திருமேனிகள் அனைத்தும் மகேஸ்வர மூர்த்தங்கள்.

.124 அம்பிகை லயம்

சுத்த சைதன்யமாகிய முழுமுதற் பொருளாய, இறைவன் எங்கும் வியாபகமாயுள்ள இயற்கை என்னும் சக்தியோடு தத்துவம் கடந்த ஈஸ்வரத்தோடு, லய நிலையில் ஆடுவதே நடராசம். இது மாயையை ஆட்படுத்திய நிலை. மாயையாகிய சக்தி அதீதத்தில் இறைவனிடத்தில் ஒடுங்கி விடுகிறது. பிரபஞ்ச இயக்கத்தில் அம்பிகையும் சிவனும் பொது. அதீதத்தில் அம்பிகைக்கு இடமில்லை. அம்பிகை லயமாகிவிடுகின்றார்.

.125 இயற்கையின் இயக்கம்

இறைவனது திருநடனம் இயற்கையின் செயல்களைச் சமன்படுத்தி இயக்குவது. இடையறாத இயற்கையின் இயக்க நிலையே தாண்டவம்.[151]

.126 ஒருமை நடனம்

பிரபஞ்ச இயக்கத்தில் இயக்க சக்தி பராசக்தி. பிரபஞ்ச விராட்டுரு இறைவன். பிரபஞ்ச இயக்கம் நடராசர். ஆனந்த நடராசத் திருவுருவில் எல்லாத் தெய்வங்களும், ஐந்தொழிற் கருத்தாக்களாக, நடராசர் திருவுருவில் அமைந்த ஐந்து இயங்கு சின்னங்கள் வாயிலாக, ஐந்தொழில் நடனம் ஆடுகின்றனர். பிரதோஷ நடனம் எனும் சந்தியா நடன ஓவியங்களில்,

150. அய்யர்., ப : 50
151. சித்பவானந்தர் உரையாடல், திருவேடகம்

அனைத்து, தெய்வங்களும், தேவர்களும் தத்தம் தேவியரோடு கருவிகள் கொண்டு ஆடிப்பாடிப் பங்கு பெறும் அருமையைக் காணலாம். இது வேறுபாடற்ற தெய்வங்களின் ஒருமை நடனம்.

.127 முத்தொழில்களில் சக்தி நிலை

படைத்தல், காத்தல், அழித்தல் என்பன மூன்றும், மேனாட்டார் காரணம், வியாபக இடம், காலம், என்று கூறுகின்ற மூன்று கூறுகட்குச் சமம். படைத்தல் காரணம் குறித்தது. காத்தல் உலக இடத்தில் வாழ்தல். அழித்தல் காலப் பிரமாணம். நான்காவதாகிய மறைத்தல் என்பது மாயா காரியம். இது சக்தியின் பாற்பட்டது. ஐந்தாவதாகிய அருளல் சிவன் பாற்பட்டது. பின்னிரண்டும் மேனாட்டார் கூறும் மூன்றுக்கும் மேற்பட்டது. நம் தத்துவச் சிறப்பு. பொதுவாக முதல் மூன்று தொழில்களும் மாயையில் நிகழ்வது என்பர். பின்னிரண்டும் உயிரிடம் நிகழ்வன என்பர். பிறந்து வளர்ந்து திருவடி சேர்தற்கு சக்தியின் உதவி தேவை.

.128 மாயைகளில் பஞ்ச கிருத்தியம்

மாயை சுத்தமாயை என்றும், அசுத்த மாயை என்றும், பிருகிருதி மாயை என்றும் மூவகைப்படும்.[152] இம்மூவகை மாயைகளிலும் பஞ்ச கிருத்தியங்கள் நடைபெறுகின்றன. சுத்த மாயையில் பஞ்ச கிருத்தியத்தைப் பதியே, சிற்சத்தியோடு சேர்ந்து செய்தருளுகின்றார். அசுத்த மாயையின்கண், ஐந்தொழில், பதி, தமது கிரியா சக்தியால், அனந்தேஸ்வரரை அதிட்டித்து, அவர் வாயிலாகச் செய்தருள்வார்.

இச்சீகண்ட ருத்திரரிடத்தில் ஜெனனி, ரோதாயித்ரி, ஆரணி என்னும் மூன்று சிவ சக்திகள் பதிந்து நின்று, ஐந்தொழிலையும் செய்யும். இச்சக்திகளுள், ஜெனனி நான்முகப் பிரம்மனிடத்து நின்று சிருஷ்டித் தொழிலைப் புரியும், ரோதாயித்திரி மகாவிஷ்ணுவிடத்து நின்று திதித் தொழிலையும், திரோதனத் தொழிலையும் புரியும். ஆரணி, உருத்திர மூர்த்தியின் வழி சங்காரத் தொழிலையும் அனுக்கிரகத் தொழிலையும் புரியும். பிருகிருதி மாயையில் இவை நடைபெறுவதால் இவை பிராகிருத பஞ்சகிருத்தியம் எனப்படும்.

.129 சச்சிதானந்த நிலைக்கான சாதனம்

மாயா மலத்தினாலுண்டான கர்மபாசத்தாற் கட்டுண்டு. சுக துக்காதிகளால் மொத்துண்டு உழலும் ஜீவர்கள் தங்கட்கு இயல்பாயுள்ள சச்சிதானந்த நிலையை அடைய பரமசிவத்தின் ஆனந்த தாண்டவ தரிசனம் சிறந்த சாதனம்.[153] ஆனந்த தாண்டவம் என்பது ஐந்தொழில்களும் அடங்கிய நடனமே. இவ்வைந்தொழிலின் இயல்பினைச் செவ்வனே உணர்ந்தார்க்கு, சச்சிதானந்த நிலை கூடுதல் இயல்பு.

.130 அந்திப் பொழுதும் மாயத் திரையும்

சிவபெருமான் நடமிடும் நேரம் அந்திப் பொழுது. நள்ளிருளில் நட்டம் நடைபெறுகின்றது. இந்நள்ளிருள் நட்டத்துக்கு ஒளி தருவன சடைமுடியில் தரித்த பிறை, அவற்றைச் சுற்றியுள்ள விண்மீன்கள், அவர்தம் கையகத்துள்ள தீ, அணிகலன்களாகிய அரவங்களின் முடிமேல் அமைந்த நாகரத்தினங்கள் முதலியன.[154] இராமபத்திர தீட்சிதர், தனது பதஞ்சலி சரிதத்தில், தேவர்கள் அனைவரும் இத்தெய்வ நடத்துக்கு இசைக் கருவிகள் முழங்குவதைக் குறிப்

152. அய்யர்., ப : 50-51
153. அஃதே.
154. சிவராம. ப : 1

பிட்டு விட்டு, இந்நடனத்தைக் காண இயலாத சாதாரண மனிதக் கண்கட்கு இறைவன் தெய்வக் கண்ணொளியும் தருகிறான் என்று போற்றுகிறார்.[155] தெய்வ நடனம் நுண்பொருள் அமைந்தது. பருவுலகக் கண்ணால் அறிய வொண்ணாதது. அது இரகசியம். சிதம்பர இரகசியத்துக்குத் திரை உண்டு. அது மாயத்திரை இராமபத்திர தீட்சிதர் பதஞ்சலி சரிதத்தில் பிரிதோரிடத்தில் இறைவன் பிரபஞ்ச நடனத்தின் போது, சம்பர மாயை போன்று மாயத்திரை ஒன்றினைத் தொங்க விடுகின்றார் என மொழிகின்றார்.[156]

.131 சிவ தாண்டவங்களின் அடிப்படை

பரத வகை நடனங்கள், ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ் தாண்டவம் ஆய அனைத்து நடனங்களின் அடிப்படைச் செயல், அண்ட சராசங்களாய பிரபஞ்ச இயக்கத்தின் நுண்அடிப்படையான அணுவியல் இயக்கமே. ஆனந்த நடனத்தின் முன்னோடிகளாகிய அட்ட வீரட்ட நடனங்களின் அடிப்படை உயிர்கள் மாயையினின்றும் துன்பங்களின்றும் விடுதலை பெறுவதற்கான அருளிச் செயல்களாகும். ஊர்த்துவ தாண்டவம் யோக நெறியில், கால்கொண்டு கட்டி, சகஸ்ராரத்துக்கு ஏற்றினால், ஒளி உருவ ஆனந்த நடனம் காணலாம் என்ற யோக நெறி விளக்கமாகும். இவை அனைத்திற்கும் அடிப்படை இடமாக அமைவது இதயத்தில்லையில் இயலும் தகர உபாசனை. தகர உபாசனையின் போதும், பிற யோக, அக, தவ, தியான வழிபாடுகளின் போதும், தூல நடராசரின் ஊன நடனம் கண்டு அதன் வழி ஞான நடனம் கண்டு, தூலத்திலிருந்து, சூட்சுமம், அதி சூட்சுமம் என்றெல்லாம் சென்று, பிரபஞ்ச இயக்க இரகஸ்யத்தை, அகத்தும் புறத்தும் காணலாம். வழிபாட்டின் போது, ஓம் என்ற பிரணவத்தும், திருவைந்தெழுத்திலும் எழும் மந்திராட்சர ஓசைகளில், அவ்வோசைகள் காட்டும் மனவெளி ஒளி தரிசனத்தின் போதும், படிப்படியாக, ஊன ஞான நடனங்களையும், பிரபஞ்ச தத்துவங்களையும், தரிசித்து இரகஸ்யத்து இரகஸ்யமாகக் கலப்பதே சிதம்பர நெறி. ஞான நடனத்தும் ஊன நடனத்தும் ஐந்தொழில் தரிசனமாகும் போது, உயிரிடத்தே பக்தனிடத்து அகத்தேயும் ஐந்தொழில் இயலும். அவன், அவள், அது என்ற சுட்டு நிலைகள் அகன்று குஞ்சித பாத ஐக்கியம் கிட்டும் மலங்கள், தானே அழியும். நாதாந்த ஒலியில் ஏற்படும் தோற்றக் கிரமமும், அங்கியில் அகப்படும் சங்காரமும், சுட்டு நிலை, அகன்று, மல மொழிந்து குஞ்சித பாத ஐக்கியத்தின் போது ஆனந்த மயமாகி, தோற்றம் அழிவு உட்பட்ட அனைத்து ஐந்தும் அனவரத நிலைகளாகின்றன. வேறுபட்ட, நாமமும், தோற்றமும், செயல்களும், காட்டிய தெய்வ அருள் நிலைகள் யாவும் ஒலியில், ஒளியில் சங்கமமாகின்றன. அவை பக்தனின் உள்ளக் கிழியில் திருக்கூத்தாக ஒளிர்கின்றன.

.132 ஆனந்த நடராசரின் ஆனந்தம்

ஆனந்த மூர்த்தியாகவுள்ள தாண்டவேசுவரர் ஆனந்த நடராசர் எனப் படுவார். ஆனந்தம் இவண் தெய்வத்தின் மேற்றா, தியானிப்பவன் மேற்றா என்றால் இருவர் மேற்றாம். தியானிப்பவனின் யோக நிலை அனுபவ நிலை.[157] தெய்வத்தின் நிலை இறை இயல்பு, பரப்பிரம்ம நிலை, பிரம்ம சூத்திர, பாஷ்யகாரர், தைத்திரீய உபநிடதத்தில் கூறப்பட்ட அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என்ற ஐந்த

155. அஃதே., ப : 2, 66, 67
156. அஃதே, ப : 70, 73
157. செந்தில் நாதய்யர், சைவ வேதாந்தம்., ப : 26

னுள்ளே, ஆனந்தம் பரப்பிரம்ம சிவபெருமானுக்கு உள்ளது" என்று குறிப்பிடுகின்றார். இதுவே உயர் நிலை.

.133 உயிர் நிலை

விஞ்ஞான மயம் ஆனந்த மயம் என்பவற்றுள், விஞ்ஞான மயம் அறிவு மிகுதியுடைய ஆன்மாவின் மேற்றாம் என்றும், ஆனந்த மயம் என்றது ஆனந்த மிகுதியுடைய பிரம்மத்தின் மேற்றாம் என்றும் அறியப்படுகின்றது என்பர் நூலோர்.[158] இவண் இரண்டுக்கும் ஆனந்தமுண்டு, எனினும் இறைவன் மேற்றே மிகுதி என்பது துணிபு இக்கருத்து தைத்ரியோபடநிடதத் தும், வேதாந்த சூத்திரத்தும் கூறப்பட்டுள்ளது என்பர்.

.134 ஆனந்த ரூபம்

அருவம் உருவம் அருவுருவம் என்பன மூன்று உருவ நிலைகள், தில்லை சித் சபையில் ஆனந்த நடராசர் ஆடும் இடத்தில் அனைத்து உருவங்கட்கும், அதற்கு மேலாக இரகஸ்ய அமைப்புக்கும் வழிபாடு இயல்கின்றது. அவண் அமைந்த ஆனந்த நடராசர் என்னும் பரதாண்டவரின் சிறப்பக் கோலத்துக்கு ஆனந்த ரூபம் என்று பெயர்.[159] ஆனந்த ரூபம் அரு, உரு, அருவுரு என்ற மூன்றுக்கும் மேற்பட்டது.

.135 ஆனந்த தாண்டவர் நிஷ்களமா? சகளமா?


பிரம்மம் என்பது தெய்வத்தின் ஆனந்த நிலை. பிரமத்துக்கு தியா னத்தின் பொருட்டு கொடுக்கப்பட்ட உருவநிலையே ஆனந்த தாண்டவமூர்த்தம். இது உண்மையில், உருவநிலை அன்று. அருவமற்ற, முழுஉருவமுமற்ற, அருவுருவமுமற்ற பரநிலை; சோதி நிலை. சித்சபையில் உள்ள இரகசியம் என்னும் பர லய நிலையே தாண்டவேசுவரர்.

.136 நான்காவது நிலை

மகுடாகமத்தில் "விந்துவின் நடுவில் நாதமும், நாத நடுவில் ஒளியும், அதைக் கடந்து மேலானவற்றிற்கெல்லாம் மேலான சிவமும் விளங்குகின் றன. அச்சிவமானது அளவிடற்கரியது; ஒப்பற்றது; குற்றமற்றது; அழியாதது; நுட்பமானது; எல்லாவற்றிலும் கலந்தது; தூய்மை யானது; அதனால் எல்லா வற்றிலும் உயர்ந்தது; பெரியவற்றின் பெரிதாதலின் பிரமம் என்று அழைக்கப்படுவது; அதுவே நடேச மூர்த்தம்", என்று வருகின்றது. மேலும் ".... மன்றில் வசிப்பது, என்றும் ஆடுவது; ஒளிமயமானது; அம்மையோடு கூடியது; ஆனந்த வடிவானது; அனைத்திற்கும் மூலமானது; ஐந்தொழிலையும் ஒரே சமயத்தில் ஆற்றுவது"[160] என்று வருகின்றது.


மற்றும், இது பிந்து சக்தியினின்று என்றும் ஆடிக் கொண்டிருப்பதால், சகளத் திருமேனிகட்கெல்லாம் அப்பாற்பட்ட செயலற்ற, உருவற்ற, குறித்துணர முடியாத அருவம், அருவுருவம் உருவம் இம்மூன்றையும் கடந்த நான்காவதான நிஷ்களத் திருமேனியுடையது" என்று வருகின்றது. எனவே இந்த நான்காவதான நிஷ்களத் திருமேனி வந்தித்து வாழ்த்திப் பூசிக்க பாவிக்கப்படுவதாகிய தாண்டவ மூர்த்தி வடிவைக் கொண்டது. பிரமம் பரப்பிரம்மம், சிற்றம்பலநாதன் என்றெல்லாம் அழைக்கப்படுவதாகிய பர சிவமூர்த்தியே என்பது துணிபு. இந்த நான்காவது நிலையே ஆனந்த தாண்

158. அகூதே., ப : 26
159. தேசிகர் 140, 141
160. தேசிகர் ப : 140



படம் எண் 7

அண்ட சராசர உற்பத்தி



படம் எண் 8

டவம். உருவத்தில் காணினும், உருவமற்ற நிஷ்களா நிலையில் தியானம் செய்தல் வேண்டும்.

.137 தியான உபாயம் : - சாதாக்கிய நிலை

இப்பரசிவமூர்த்தியை தியான உருவில் தான் வழிபட வேண்டும். சித் சபை யோகக் கோயில் என்பதும் அறியத் தக்கது. புற அபிடேக ஆராதனைகள் இவ்வுயர் தெய்வ வழிபாட்டிற்கு வேண்டுவதில்லை. இன்று சித்சபையில் வழிபாட்டு முறை சித்சபை அமைக்கப்பட்ட குறிக்கோள்கட்குப் புறம்பாக அபிடேக ஆராதனைகட்காக என்பது போல் மாற்றம் எய்தி விட்டது. நிஷ்கள சிவம், சகளமாக உருவம் தாங்கும் போது அது சாதாக்கியம் எனப் படும். எனவே இது சாதாக்கிய நிலை. நிஷ் களத்துக்குச் சகள உருவம் ஏன்?

இவண், ஊர்த்துவ சைவர்கள் உபாசிப்பதற்காக, சாதாக்கிய நிலையில் நிஷ்கள பரசிவ தாண்டவேசுவரர்க்கு சோதி மலை வீட்டில் வழிபடு வதற்கு தொடக்க நிலை உபாயமாக தாண்டவ உருவம் அமைந்தது என்க. எனவே தாண்டவேசுவரரின் உருவம் சோதியே.[161]

.138 ஐந்தொழில்கட்கும் தனித்தனி நடனம்

படைத்தல்

ஐந்தொழில்கட்கும் ஐந்து தனித்தனித் தாண்டவங்கள் இருப்பதாகக் கூறும் மரபுள்ளது.[162] காளிகா தாண்டவம், முனிதாண்டவம் படைத்தல் தொழிலுக்கு உரியன என்பர். பாதாமியில் அமைந்த ஆறாம் நூற் றாண்டைய சதுர தாண்டவம், ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த நல்லூர் ஊர்த்துவ ஜானு, கிளக்காடு நடராசர், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவரங்குளம் சதுர தாண்டவம் முதலியன படைத்தல் தாண்டவம் எனப் படுகிறது.

காத்தல்

கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், கால்மாறியாடியது, புஜங்க திராசம், இரட்சா தாண்டவம், இலக்குமி தாண்டவம் என்பதெல்லாம் காத்தல் தாண்டவம் என்பர். ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திரு மலைப்புரம் சதுரம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்பரங்குன்றம் சதுரம், திருமழ்பாடி, ஆவணி முதலிய ஊர்களில் அமைந்த ஊர்த்துவ ஜானு, ஒன்பதாம் நூற் றாண்டைச் சார்ந்த கூரம் ஊர்த்துவ ஜானு முதலியன காத்தல் தாண்டவம் என்பர். மதுரை வெள்ளியம் பலத்துள்ள கால்மாறியாடிய நடனத்தைச் சந் தியா தாண்டவம் காத்தல் தாண்டவம் என்றும் கூறுகின்றனர். தாண்டவத்துக்குரியதாகக் கதாசாகரம், சிவப் பிரதோஷ தோத்திரம் முத லியன கூறும் விளக்கங்கட்கு இது ஒப்ப வில்லை.

அழித்தல்

அழித்தல் தாண்டவத்துக்கு எடுத்துக் காட்டாக திருச்செங்காட்டன்குடி நடராசரை அழித்தல் நடனம் என்பர். இதனை நள்ளிரவு நட்டம் என்பதும் உண்டு.

மறைத்தல்

அட்டவீரட்டங்களுள் ஒன்றான திரிபுர தாண்டவத்தை மறைத்தல் தாண் டவம் என்பர். மும்மலமாய கோட்டைகளை அழித்தலை எண்ணி இதனை மறைத்தல் செயலுக்குரிய தாண்டவம் என்றனர் போலும். இது நிற்க

161. செந்தில் நாதய்யர், சைவ வேதாந்தம், ப : 26-27
162. கமில்., ப : 4., தேசிகர், ப : 125, வேங்கட., ப : 45

நூலோர் எடுத்துக் காட்டு காட்டுகையில், பத்தாம் நூற்றாண்டைய திருவரங்குளம் சதுர தாண்டவத்தையும், கொடுமுடி லலித தாண்டவத்தையும், பன்னிரண்டாம் நூற்றாண்டைய திருவக்கூர் ஊர்த்துவ ஜானுவை யும் மறைத்தல் தாண்டவத்துக்கு எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றனர். அட்டவீரட்டத் தொகுப்பில் உள்ள சிறந்த முதல் நடனமான திரிபுர சம்காரம் ஒரு முடிந்த செயல். அதனை என்றும் இயலும் மறைத்தலுக்குக் காரணம் காட்டியது புரியவில்லை. ஒரு வேளை மும்மல காரியமாகையால் கூறியிருக்கலாம்.

அருளல்

ஊர்த்துவ தாண்டவம், லலாட திலகம், உமா தாண்டவம் என்பன அருளல் செயற்குரியன என்பர். ஊர்த்துவ தாண்டவம் திருவாலங்காட்டு இரத்தின சபையில் இயல்வது. திருவாலங்காட்டு ஊர்த்துவ தாண்டவச் சிற்பம் பதினோராம் நூற்றாண்டது என்பர்.

ஐந்தொழில்

ஐந்தொழில்கட்கும் உரியது ஆனந்த தாண்டவம். இதில் ஐயத்திற்கிடமில்லை. அனவரத தாண்டவம், நாதாந்த நடனம் என்பதும் இதுவே. ஐந்தொழிலும் ஆனந்த தாண்டவர் அனவரதமும், சதாநிருத்தமாகச் செய்கிறார். அதனை யோக நோக்கில் காண இயலும். புறக்கண்ணுக்குத் தெரியாது என்பர். ஐந்தொழில் ஆனந்த தாண்டவத்தில், அட்ட வீரட்டம், அட்ட மூர்த்தம், பஞ்ச பிரம்மத்தன்மை, பரப்பிரம்ம நிலை, ஐந்தொழிற் கருத்தாக்கள் முதலிய தத்துவங்கள் யாவும், சங்கமமான பிறகு ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தாண்டவம் இருக்குமா என்ற கருத்து ஆய்வுக்குரியதே.

பிற நடனங்கள்

பரத நடன வகைகள் எனப்படும் லலிதம், சதுரம், ஊர்த்துவ ஜானு, லலாட திலகம் முதலியனவற்றை தனித்தனி ஐந்தொழில் நடனங்களாகக் காட்டுவது செயற்கை போன்றுள்ளது. மேலும் ஆய்ந்தால் புரிய இயலலாம். அட்டவீரட்டங்கள் சில பராக்கிரம நிலைகள். இவற்றிற்கும் பிரபஞ்ச இயக்க நடனத்துக்கும் முழுத் தொடர்பு காட்டுவது அரிது. பிரபஞ்ச இயக்க நாதாந்த யோக நடனமாய ஆனந்த தாண்டவம் ஒன்றே ஐந்தொழிற் கருத்துடையது என்பது பெறப்படுகிறது.

.139 நடராசத் திருவுருவின் தத்துவ விளக்க உருவகச் சின்னங்கள்

சமயச் சின்னம்

சமய உண்மைகள், தத்துவங்கள், தெய்வ நிலைகள், முதலியன விண்டுரைக்க இயலா, அனுபவ ஞானத்தால் பரியாயமாகப் புரிந்து கொள்ளத் தக்கவை. அவற்றைப் புரிந்து கொள்ள, விளக்க, சமயக் கலையுலகு, நுட்பமும் திட்பமும் மிக்க சின்னங்களைக் கையாள்கின்றது. இது காரணமாகவே சமய நம்பிக்கைகளும் உண்மைகளும் சமயக் கலைகளின் வழியே தக்க விளக்கங்களும், பொருண்மையும் பெறுகின்றன. இது போன்றே, முழு முதல் உண்மையான பிரம்ம நிலை, தெய்வ நிலை, மற்றும் ஆன்மிக உண்மைகளை விளக்க, சைவ சமயம், தனக்கே உரித்தான உருவகங்கள், சின்னங்கள் முதலியவற்றைக் கொண்டுள்ளது.[162அ]

162. அ. சிவானந்தர்., ப : 25

உருவகச் சின்னங்களின் சிறப்பு

இத்தகைய உருவகங்களும், சின்னங்களும் சமயக் கலைகட்கும், சமயத்தைக் கடைப் பிடிக்கும் மக்களினத்துக்கும் இடையே புகுந்து, தொடர்பினை ஏற்படுத்தும், வழிமுறைகளாக, வாழையடி வாழையாக வளர்ந்துள்ளன. அவை சமயத்தைச் சேர்ந்த மக்களாலும், சமய அறிஞர்களாலும், ஏற்றுக் கொள்ளப்பட்டனவாகவும் உள்ளன.[163] இத்தகைய பாரம்பரிய நெறியில் வழங்கி வரும் சமயத் தத்துவக்கலைகள் வழங்கும், சின்னங்கள், உருவகங்கள், உவமைகள் முதலியவற்றின், அடிப்படையான, பொருள் பொதிந்த, உண்மைகளை அறிய, அச்சின்னங்கள், உருவகங்கள், உவமைகள் முதலியவற்றின் அடிப்படைத் தன்மையையும், அவற்றிற்குரிய தத்துவ விளக்கத்துக்கும் அது தொடர்பான புராண நிகழ்ச்சிக்கும் உள்ள தொடர்பினையும் புரிந்து கொள்ளல் வேண்டும். இந்தப் பிரபஞ்சமே முழுமுதற் கடவுளின் அகண்ட விராட்டுருவத்தின் ஒரே சின்னமாகும். இதனைச் சிந்தித்து வந்திக்கும் மனிதன் கூட, அநதப் பேரருளாய முழுமுதற் கடவுளின் சின்னம் தான். இது இந்து சமயத்தின் அடிப்படை; அதுவே சிதம்பரத் தத்துவம். அதுவே திருக்கூத்துத் தரிசனம். புலன்களுக்கு எட்டாத் தெய்வத நிலைகளை உணர, சமய, தத்துவ அறிவு மட்டுமின்றி ஓரளவு புராண அறிவும் இன்றியமையததாகின்றது.[164]

தெய்வ உருவங்கள்

இறைவனை வேதம் தியான ரூபமாகவும், ஆகமங்கள், அதனை விரித்து திருவுருவத் திருமேனிகளில் அடியவர்கள் வழிபடும் பொருட்டு, கிரியா ரூபமாகவும், புராணங்கள் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறுகளைக் கதாரூபமாகவும் கூறுவன.[165] இம்மூவகை மட்டுமின்றி மந்திரம் எந்திரம் முதலிய உருவங்களும் தெய்வத்துக்கு உண்டு. இவ்வண்டத்துள்ள எல்லா அழியும் பொருட்களும், அழியாப் பொருளாய பரப்பிரம்மத்தின் சின்னங்களே எனக் கொள்வது இந்து சமயத்தின் ஒரு சிறப்பு.[166]

உருவகச் சின்னங்கள்

உருவகச் சின்னங்கள் ஒலியளவிலும், ஒளியளவிலும் இருவகையாகின்றன. திருவைந்தெழுத்து, பிரணவம், பீஜ மந்திரங்கள் போன்ற மந்திரங்கள் ஒலி உருவ உருவகச் சின்னங்கள். தெய்வ உருவம், உறுப்புகள், தெய்வச் சின்னங்கள், கருவிகள் சமயச் சின்னங்கள் உருவ அமைப்புகள் முதலியன ஒளி உருவ உருவகச் சின்னங்கள்.

ஆத்மக பெளதிகச் சின்னங்கள்

ஒலி உருவ உருவகங்கள், ஒளி உருவ உருவகச் சின்னங்கள் என்ற இருவகை போன்றே, உருவும் பெயரும் அற்ற பரப்பிரம்ம நிலையினைக் குறிப்பிடும் சின்னங்களாகவும், தத்துவச் சிந்தனைகளைக் குறிப்பிடும் சின்னங்களாகவும் மேலும் இருவகைப்படுவதும் உண்டு.[167] பரமாத்மாவை ஒளியாகக் காணல், ஆத்மாவை வான்வெளியில் ஒரு பறவையாகக் காணல், மீனாகக் காணல், கலசமாகக் காணல், முதலியன தத்துவச் சிந்தனைச்

---

163. பிரொஜேஷ் பானர்ஜி., நடமிடும் கடவுள் நடராசர், ப : 7
164. சிவானந்தர்., ப : 25
165. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு, சிவபராக்கிரமம்., ப : 9
166. சிவானந்தர்., ப : 7
167. அஃதே., ப : 14

சின்னங்கள். புராணங்களில் குறிப்பிடப்படும் அவதாரக் கடவுள்கள், கடவுளின் பல்வேறு திருவுருவ நிலைகள் போன்றன, பருவுலகத் தோற்றத்தைக் காட்டும் உருவ உருவகச் சின்னங்களாயமையும். இக்கருத்தை வைத்தே தத்துவச் சின்னங்களை அத்யாத்மகச் சின்னம் என்றும், உருவச் சின்னங்களை அதிபௌதிகச் சின்னம் என்றும் கூறுதல் மரபு.[168]

சின்னங்களின் லயம்

சின்னங்கள் கற்பிக்கப்பட்ட பின், உருவங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வுருவங்களின் உறுப்புக்கள் மேலும் பற்பல சின்னங்களால் அணி செய்யப்பட்டன. மனித உருவில் தெய்வம் கற்பிக்கப்படுகிறது. பின் மனித உருவில் அமைந்த பல்வேறு உருவச் சின்னங்களைப் பெற்று, தெய்வம் பேராற்றலின் நிலைக்களன் என்ற பொருண்மை பெறுகின்றது. உருவிலும் சின்னங்களிலும் உலவிய தத்துவப் பொருண்மை, உருவத்தமையும் கரணங்களிலும், அபிநயங்களிலும், மந்திரங்களோடமைந்த எண்ணிக்கைகளிலும் ஊற்றெடுத்துப் பெருகுகின்றது. இறுதியில் அவை எல்லாமாய் ஒருங்கிணைந்து அக நோக்கில் அருள் வடிவாய், ஒலியாய் ஒளியாய் லயமடைகின்றன.

.140 அபிநயத்துள் நடராசர்

நடனக் கலையின் இன்றியமையாத பகுதி அபிநயம். நர்த்தனம் என்பது அபிநயம். தோன்றிய கீதப் பிரபந்தங்களின் குறிப்பின் சாரத்தைச் சபையோர்க்கெல்லாம் பார்க்கும் போதே மகிழ்ச்சியுண்டாகும்படி, பாத்திரமானவன், பிரியத்துடன், தாளத்துக்கு ஒத்தபடி அபிநயித்துக் காட்டும் சிறப்பே அபிநயமாகும்.[169] இவ்வபிநயங்கள் ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்விகம் என நால்வகைப்படும். இந்நால்வகை அபிநயப் பான்மைகள், இவ்வபிநயங்களுள் சரீரத்தால் செய்யப்படும் ஆங்கிகம் சாயி என்றும், வாக்கினால் செய்யப்படும் வாசிகம் சஞ்சாயி என்றும், அலங்காரங்களால் செய்யப்படும் ஆகாரியம் அநுசாயி என்றும், நடன பாவ லயங்களினால் செய்யப்படும் சாத்விகம் விபசாயி என்றும் கூறப்படும்.[170] பரத சாத்திரம் அபிநயதர்ப்பணம் போன்ற நாட்டிய சாத்திரங்களிற் கண்ட நால்வகை அபிநய நிலைகளை, இயங்கும் நடனக் கலை நிகழ்ச்சியில் காண முயலலாம், ஆனால் இவண் நடராசத் திருவுரு நிலையான படிமமாக இருப்பதாலும், இது முழுவதும் சமயக் கருத்துக்களையே காட்ட வந்த தெய்வத் திருவுருவாகலாலும் நாட்டிய சாத்திர நுட்பங்களை முழுவதும் இத்திருவுருவில் காண இயல்வதில்லை. எனினும் ஆங்கிகம் என்னும் உறுப்புக்கள், ஆகாரியம் என்னும் அலங்காரங்கள் சாத்விகம் என்னும் நடன பாவம் முதலியன உருவகங்களாயமைந்து சமய உண்மைகளை தத்துவங்களை விளக்கும் சின்னங்களாகின்றன. அத்தகைய ஆங்கிக ஆகார்ய உறுப்புக்களின் பின்னணியான தத்துவங்களை அறிய முயல்வோம்.

.141 தந்திர நெறியும் உருவகச் சின்னங்களும்

எல்லாச் சமயங்களிலும் உருவகச் சின்னங்கள் இடம் பெறுவது இயல்பு. இந்தியாவில் பௌத்தம், சாக்தம் முதலிய சமய நெறிகளில், தந்திர சாத்திரங்கள் மலிந்த போது சின்னங்களின் எண்ணிக்கை மிகுந்தது. தெய்வ

168. அஃதே., ப : 15
169. அபிநயதர்ப்பணம், சென்னை, ப : 40
170. அஃதே., ப : 42

உருவங்களுக்கு மேற்பட்டு, வழிபாட்டு நியாச முத்திரைகள், யந்திரங்கள், சக்கரங்கள், மந்திரங்கள் என்ற பல நிலைகளில் இவை பெருகுகின்றன. சாதகத்துக்கு உதவும் நிலையில் அவை தெய்வ அம்சங்களாகப் போற்றப்படுவன. ஆனந்த நடராசர் உருவத்தைப் பொருத்தவரை, ஓரளவு தந்திர சாத்திரச் செல்வாக்கு, சில நிலைகளில் சிறிது புகுத்தப்பட்டிருக்கலாம் என்ற சிந்தனையும் உள்ளது.

.142 புராணச் சிறப்பு

புராண நிகழ்ச்சிகள், பக்தர்கள், தனி மனிதர்களாகவும், ஒரு சமுதாய இனமாகவும், சேர்ந்து கண்ட வரலாற்றின் தெய்வீகக் கனவுகள் என்பர்.[171] புராண வழி, பெற்ற தெய்வீக சமயச் சின்னங்கள், வழி வழி வந்த புனிதத் தன்மையும், பழமையும், பொருட் பொதிவும் வாழ்வோடு இயைந்த பயன் பாடும் உடையன. அவற்றுள், நுண், மறை பொருளும், தெளிந்த தத்துவ வெளிப்பாடும் உள.

.143 சமய உருவகச் சின்னங்களின் பயன்

முழுப்பொருளையும் உணர்த்த இச்சின்னங்கள் சாதகர்க்கு ஆன்மிகவுணர்வையும், அக நோக்கையும், தெய்வ அருளினையும், பெற்றுத் தரும் இயல்பின. இதன் விளைவாகச் சாதகர்கள் ஆன்மிக ஏணியின் மேற்படிக்கு ஏறி, தெய்வ தரிசனம் பெறும் வாய்ப்பு பெருகும். பரப்பிரம்மானுபவம் சித்திக்கும். இவ்வுருவகச் சின்னங்கள் எழுத்தால், பேச்சால், சிந்தனையால் முழுவதும் புரிந்து கொள்ள இயலாத தெய்வ நிலைகளை விளக்குவன. தியானத்தில் இறைவனை அடைய முதல் நிலைக் குறியீடாகவும், தெய்வதச் சிறப்புக்களை உணரும் வாயிலாகவும் இவை உதவுகின்றன. இந்து சமயத்தின் முக்கிய குறிக்கோள் சிவ சீவ ஐக்கியமே. குறியீடற்ற பிரம்மத்தை அடைய இவ்வுருவகச் சின்னங்கள் வழிகாட்டிகளாக உயர் சிந்தனைகளை வளர்ப்பதாக, அமைவதன்றி அவையே முழுமுதல் தெய்வமென்பதில்லை. இனி இறைவனின் குஞ்சிதபாதம் முதல் திருவாசி வரை அமைந்த உறுப்புக்களின் உருவகப் பொருண்மைத் தத்துவத்தினை அறிய முயல்வோம்.

குஞ்சிதபாதம்

நடராசப் பெருமானின் இடப்பாகம் அம்மையுடையது. அவரது இடது திருப்பாதம் குஞ்சிதபாதம் என்றும், தண்டபாதம் என்றும், அனுக்கிரக பாதம் என்றும், தூக்கிய திருவடி என்றும் பல பெயர்களால் அழைக்கப்பெறும். நடராசப் பெருமானின் குஞ்சித பாதத்தின் திருப்புகழை குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்ற சமஸ்கிருத நூலில் உமாபதி சிவம் அவர்கள் முன்னூறு பாடல்களில் பாடியுள்ளார். இந்த எடுத்த பொற்பாதமாகிய குஞ்சித பாதத்தின் அமைப்பும், அதனைச் சுட்டும் கஜ ஹஸ்தத்தின் சுட்டு விரலும் நடராசத் தத்துவத்தின் நுண்பொருள்கள். சிதம்பரம் சித்சபை பூஜையின் போது இத் தூக்கிய திருவடிக்கு ஒரு சிறிய மாலையிட்டு அதில் ஒரு சிறு துளி நீரினை அபிடேகம் செய்தல் மிகச் சிறந்த வழிபாடாகக் கருதப்படும்.[172] இக்குஞ்சிதபாதத் திட்ட மாலை குஞ்சிதபாதம் என்ற பெயர் பெற்று, நாளுக்கு ஒரு பக்தர்க்கு மட்டும், பிரசாதமாக வழங்கப்பெறும். நடனத்தின் போது, ஒரு திருவடி தூக்கியும், ஒரு திருவடி தரையில் ஊன்றியிருக்கும் போதும், அவை மாறி, மாறி நடமியலும் போதும், பிரபஞ்சம் தோன்றுவதையும், மறைவதை

171. சிவானந்தர், ப : 2
172. சாமு எஸ்.வி., தெய்விக நடராசர், மைசூர்., ப : 97

யும், பிரம்மாவின் இரவையும், பகலையும் கல்ப பிரளயத்தையும் குறிக்கும்.[173] இது ஒரு வகையில் யோக உச்வாச நிச்வாசத்தையும் குறிக்கும். இரு திருவடிகளும் தரையில் அமரும்போது பிரபஞ்சமெல்லாம் இறைவனிடம் ஒடுங்கிச் சிவன் யோக நித்திரை கொள்வான். அது போது பஞ்ச கிருத்தியம் நடைபெறாது. ஸ்ரீ காந்த சரிதத்தில், கவிஞர் மங்கா அவர்கள் • இறைவனுடைய திருநடனத் திருவிழாவில், தண்ட பாதம் என்னும் இது, விண்ணகத்தையும் மண்ணகத்தையும் இணைக்கும் ஒரு அதிசயப் பாலமாக அமைகின்றது.[174] விண்ணுக்கும், மண்ணுக்கும் இடைப்பட்ட தூரத்தைக் கடக்கும் போது ஏற்பட்ட அயர்வால் விண்மீன்கள் வியர்க்கின்றன என்று, விளக்குகின்றார். தில்லைத் திருவம் பலத்தின் பஞ்சாட்சரப் படிகளை வேதம் படியும் திருப்படிகள் என்பர்.[175] அவை தொண்டர் மனத்தில் இடம் பெற்றவை. அதைவிடச் சிறப்புடையவை இறைவனது திருவடிகள். அவை பக்தர்களின் இதயத்தில் இடம் கொண்டு உய்விப்பவை, என்பர். சீவர்கள் நாள்தோறும் அனுபவிக்கும் அவஸ்தைகளான சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்பனவாய மூன்றும் முப்பாழ் எனப்படும். இவற்றை விழிப்பு, கனவு, உறக்கம் என்பர். இந்நிலைக்கு மேலுள்ள நிலையை துரியநிலை என்பர்.[176] துரியநிலை இம்மூன்று அவஸ்தைகட்கும் பொதுவாகவும், அப்பாற்பட்டதாகவும் உள்ளது. இத்துரிய நிலையை உணர்பவனே ஞான வாழ்க்கைக்குத் தகுதி உடையவனாகின்றான். அப்பொழுது ஆனந்தத் தாண்டவம் அவனுக்குத் துவங்குகிறது. இக்கோட்பாட்டை விளக்குவதே குஞ்சிதபாதம். இக்குஞ்சித பாதம் மேலே தூக்கப்பட்டு துரிய நிலையைக் காட்டும் போது அதன் பின்னே மனம், மாயை, உலகம் முதலியன, விடப்பட்டு, பின் தங்குகின்றன.[177] குஞ்சிதபாத தரிசனம் பக்தனது மனதைச் சிவ சாந்நித்தியத்தில் நிலைக்கச் செய்து அதற்கேற்றபடி ஆத்ம பரிபாகத்தில் பக்தன் விரைந்து மேலோங்கி வளர வழிவகுப்பது.[178] சித்தர்பட்டினத்துப் பிள்ளையார் குஞ்சித பாதத்தை, திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே என்றுரைத்து திருவடியையே நெடுங்கரையாகச் சொல்வார்.[179] தூக்கிய திருவடி இடப்பாகத்துக் குரியது. அது சக்தி நிலை.[180] வீசியகரம் உட்புறமாக வளைந்து, சுட்டு விரலால், அருளலைக் குறிக்கும் தூக்கிய திருவடியைச் சுட்டும். கை உட்புறமாக இருப்பது சக்தியை அந்தர் முகமாக தியானித்து வழிபட வேண்டும் என்பதை உணர்த்துவது. ஊன்றிய பாதம் திரோதனத் திருவடி எனப்படும் திரோதனத் திருவடி யான் என தென்னும் இருவகைப் பற்றையும் ஒழிப்பது.[181]

தூக்கிய திருவடியே பற்று விட்டுப் பற்றற்றான் திருவருளைப் பற்றிய உயிர்தனைப் பேரின்ப நிலையில் இருத்துவது. குஞ்சிதபாதத்தின் தொழில் அருளல். இது சிவ தத்துவத்தில் சதாசிவரின் தொழில்.[182] அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம் கொடுப்பது முதல்வ நின் குஞ்சித பதமே என்று குமர குருபர் சிதம்பர மும்மணிக் கோவையில் குஞ்சித பாதம்

---

173. கோவிந்தசாமி, பொன், திருசிற்றம்பலம் என்ற சிற்சபை, கடலூர், ப : 64, 65
174. சிவராம, ப : 5, 18
175. சோம.லெ., கோயில்., ப : 478
176. சித்பவானந்தர், ப : 147
177. அஃதே
178. சித்பவானந்தர், அம்பலவாணனின் ஆடல் தத்துவம், திருப்பராய்த்துறை, ப : 9
179. தேசிகர், ப : 103
180. நஜன், சிதம்பர ரகசியம், ப : 29
181. தேசிகர், ப : 97
182. இராமலிங்கம், சமஸ்கிருத இலக்கியத்தில் சிதம்பரமும், சிதம்பரம் கோவிலும், (ஆய்வுக் கட்டுரை அசிடப்படாதது) சிதம்பரம், 1965, ப : 105

ஸ்ரீ நடராசப் பெருமானின் ஆங்கிகாபிநயத் தத்துவங்கள்

இளம் பிறை
தக்கன் சாப வீடு (பு)
காம தகனம் (பு)
உயிர் வளர்ச்சி(பி)
காலச் சின்னம் (பி)
ஓஷதி நாதன்

மயிலிறகு
கிராதார்ஜுனியம் (பு)
மேற்செல் உயிர் (பி)

கொக்கிறகு
குண்டாசுர வதம் (பு)
அரசத்தன்மை

இடக்கண்
சந்திர மண்டலம்
இடநாடி (யோ)
இச்சா சக்தி

வலக்கண்
சூரிய மண்டலம்
பிங்கலை நாடி (யோ)
ஞான சக்தி

நுதல் விழி
விஸ்வதாட்சம் (பி)
சகஸ்ராட்சம் (ஆ)
அக்கினி அம்சம் (ப)
நடு நாடி (யோ)
சுழுமுனை (யோ)
காம தகனம் (பு)
கிரியா சக்தி

7. திருநீறு
பிருதிவித் தன்மை (ப)
லய சிருஷ்டி (பி)
திரிபுரமெரித்தல் (பு)
திரிசத்யம்
சுடலையாடல்

காபாலம்
பிரம்ம சிரச்சேதம் (பு)
பிட்சாடனர் (பு)

9. ஊமத்த மலர்
அட்ட மூர்த்தம்
யோகி (யோ)

10. கங்கை
உமைய மூர்த்தம் (ப)
கங்காதரர் (பு)
சகஸ்ரார அமுதம் (யோ)
பாப விமோசனம் (ஆ)
ஆதிப் பெருந்திரு

11. நுண் சிகை
தட்சிணா மூர்த்தம் (பு)
ஞானம் (யோ)
குருத்துவம்

12. கொன்றை மலர்
கற்பகவல்லி (பு)
சாரோப, சாமீப, சாயுச்யம் (ஆ)

13. துடி
தோற்றம் (ஐ)
துடியாடல் (கி)

14. தீயகல்
சங்காரம் (ஐ)
தீ (ப)
எரியாடல் (கி)

15. குழை
சக்தி அம்சம்
பிருகிருதி (பி)
அர்த்தநாரீஸ்வரம் (பு)

16. தோடு
சிவ அம்சம்

17. நீல கண்டம்
அமிர்தம் கடைதல் (பு)
சமன்பாட்டு நிலை (பி)
தீதகற்றல்
அமரத்வம்

18. காபால மாலை
பிரம்மகர்ப்பக் கழிவு (பி)
யுகாந்தரம் (பி)

19. ஆதிவராகக் கொம்பு
வராகாவதாரம் (பு)
பிரபஞ்ச சமநிலை (பி)

20. ஆமை ஓடு
விஷ்ணு அம்சம் (பு)
கூர்மாவதாரம் (பு)
பிரபஞ்சக் காவல் (பி)

21. நரசிம்மரின் குருதித் தோல்
நரசிம்மவதாரம் (பு)
சரபமூர்த்தம் (பு)

22. அபயகரம்
காத்தல் (ஐ)
சுபமூர்த்தம் (ஆ)

23. அரவணி
நாக சக்தி
சிவாத்மா (ஆ)
குண்டலினி (யோ)

24. கைகள்
விராட்புருடத்தன்மை (பு) (பி)
வீர செயற்பாடு மிகுதி

25. தோள்கள்
திரிவிக்ரம நிலை (பு)
திசைகள் (பி)
காற்று (ப)

26. பூநூல
நாயகத் தன்மை (ஆ)
வேதாந்தம்

27. உதர பந்தம்
வேக மூர்த்தம் (ஆ)

28. சஜஹஸ்தம்
வீசுகரம்
திருவடி சுட்டல்
இன்ப வழிகாட்டி



(பு) = புராணம்
(யோ) = யோகம்
(ஆ) = ஆகமம்
(ப) = பஞ்ச பூதம்
(ஐ) = ஐந்தொழில்
(பி) = பிரபஞ்ச இயல்



படம் எண் 9

29. உடல்
ஆகாயம் (ப)

30. புலி உரி
தாருக வனம் (பு)
பிட்சாடனர் (பு)

31. யானை உரி
கஜசம்மாரம் (பு)
மாயாமலம் (ஆ)

32. ஊர்த்துவ மேரு
உலகோற்பத்தி (பி)
பிட்சாடனர் (பு)
துறவு

33. கோவணம்
தூய ஞானம்

34. குஞ்சிதபாதம்
சிதம்பர மகாத்மிய
அருளல் (ஐ)

35. சிலம்பு
வேதங்கள்
கேளா ஒலி (யோ)

36. கழல்
வீரட்டம்
பிறப்பறுத்தல்
பதிநிலை
புருடன்

37. வீர கண்டாமணி
வீரம் (கி)
மந்திரத் திருவுரு
வெற்றி
திறன்

38. ஸ்தித பாதம்
ஊன்றிய திருவடி
காலாந்தகர் (பு)
மறைத்தல் (ஐ)
பதிநிலை
நிலம் (ப)
வினைப்பயன் ஊட்

39. முயலகன்
கோயிற் புராணம் (
தாருகவனம் (பு)
மும்மலம்

40. திருவாசி
இரண்ய கர்ப்பம் (பி)
பிரபஞ்சம் (பி)
பூரணத்துவம்

41. திருவாசி சுடர்
த்வனி (யோ)
பீஜ மந்திரங்கள் (ஆ)

42. கமலபீடம்
தகராலயம் (யோ)
இதயக் கமலம் (யோ)
சகஸ்ராரம் (யோ)

உயிர்கட்குப் பேரின்பம், நல்கும் என்பதைக் குறித்தார். அடிமுடி காண இயலாது அயனும் மாலும் தவித்தனர். அதே ஆண்டவன், பக்தர்கட்குத் தில்லையில், தன் திருவடியைத் தூக்கி, ஒரு கையால் அதனைச் சுட்டிக் காட்டி, இதனைச் சிக்கெனப் பிடித்துக் கொள் என்பது, அவர் தம் அருள் தன் மையைக் காட்டுவதுபோல் உள்ளது என்பர்.[183] மக்களுள் ஒரு வகையோர் இக போகத்தை விரும்புவர்.[184] சற்றுயர்ந்தோர், வீடு பேற்றினை விரும்புவர். சித்சபேசரின் இக்குஞ்சிதபாதம் சரணடைந்தோர்க்கு போகம், மோட்சம் என்ற இரண்டினையும் தரவல்லது எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் போற்றும். குஞ்சிதபாதம் இருக்கும் நிலையில் காலைத் தூக்கி வைத்திருத்தல் நடனக் கரணத்தில் சற்று கடினமானது. பக்தர்கள் மேல் உள்ள கருணையால், இறை வன் கடினமான இடது காலை, சிறிது உயரத் தூக்கி, குறுக்காக வளைத்து ஆனந்த நடனம் புரிகிறார், என்பது குஞ்சிதாங்கிரிஸ்தவம்.[185] இணையார் திருவடிகள் என் தலைமேல் வைத்தலுமே, மனிதர்க்கு ஆன்மிக உயர்வளிப்பதாகவும், அகவுணர்வில் வழிபாட்டுக்கு வழி காட்டுவதாகவும் உள்ளதென்பர்.[186] தூக்கிய திருவடி மலம் நீங்கிய ஆன்மாவைக் குறிக்கும் என்பதுமுண்டு. குஞ்சிதபாதத்தில் 'அருளல்' நடைபெறுகின்றதென்பதைத் திருமந்திரம் " அரனடி தன்னில் அனுக்கிரகம் தானே " என்று கூறும். ஆன்மாவை ஆனந்தவாரியில் அழுத்துவது எந்தையார் பாதம் என உண்மை விளக்கம் புகழும். இத்தூக்கிய திருவடியாகிய நான்ற மலர்ப்பதம் அரு ளலாகிய தொழிலைச் செய்வது என்பது உண்மை விளக்கம். இத்தூக்கிய திருவடியை வீசுகரம் சுட்டிக் காட்டல் " தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை " என்ப தொத்தது என்பர்.[187] தூக்கிய திருவடி அருளலைக் குறிக்குமாதலின் அதனை அடைவதே உயிர்களின் குறிக்கோள் என்பதை வீசியகரத்தின் சுட்டுவிரல் சுட்டும். மற்றை நடு, அணி, சிறு விரல்கள் மூன்றும் முயலகனைச் சுட்டி உயிர்கள் மும்மலம் அற வேண்டும் என்பதை உணர்த்தும் எனச் சிற்பச் செந்நூல் புகலும்.[188]

ஊன்றிய திருவடி

தாண்டவ மூர்த்தியின் ஊன்றிய திருவடி ஸ்திதபாதம் எனப்படும். இவ்வூன்றிய பாதம் " ஈட்டிய வினைப் பயன் அனைத்தையும் மறைத்து நின்று ஊட்டுவதாகும் " எனக் குமரகுருபரஅடிகள் சிதம்பர மும்மணிக் கோவையில் கூறுகிறார். " அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி" எனத் திருமந்திரம் கூறும். உயிர்கள் மாட்டு வைத்த அன்பினால் இறைவன் மறைத்தல் தொழி லைச் செய்கிறார். சென்ற கால வருங்காலப் பிறப்புக்களையும், நல்வினை தீவினையின் நிலைகளையும் உயிர் அறிய வொட்டாமல் மறைத்து இரு வினை யொப்புக்கும் இத்திரோதம் என்னும், மறைத்தல் தொழில் உதவும். இவ்வூன்றிய திருவடி முயலகனைத் தீண்டியும் தீண்டாதது போல மிதித்து நிற்கின்றது. ஒளி, இருளில் தோயாது அதன் வியாபகத்தை அடக்கி நிற்பது போல் உள்ளது இது.[189] மறைப்பாற்றல் இன்றேல், உயிர், தன் வினையில் அழுந்தி அனுபவிக்க மாட்டாது. ஆகையால் இவண் மறைத்தலாகிய ஐந்

183. நஞன், ப : 6
184. உமாபதிசிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப : 28
185. அஃதே, ப : 24
186. சாமு, ப : 97
187. சுவாமி சித்பவானந்தர், அம்பலவாணனின் ஆடல் தத்துவம், ப : 14
188. கணபதி ஸ்தபதி., வை., சிற்ப செந்நூல், சென்னை, ப : 68
189. தேசிகர், ப : 103

தொழில் ஒன்று நடைபெறுகின்றது. முயலகன் மாயையின் சின்னம். நிலையாக ஊன்றிய வலது திருவடி இறைவனுடையது. இடது திருவடி சக்தியுடையது. இவ்வலது ஊன்றிய திருவடியைத் திருமந்திரம் "குருவின் மிதித்த கமலப்பதமென்று போற்றும். உண்மை விளக்கம் இதனை "ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதம்" என்று புகழும். இது மலம் சாய அமிழ்த்தல் எனவும் புகலும்.[190]

கஜ ஹஸ்தம்

தண்ட ஹஸ்தம்

"சீ யென்றுதறிய கை" எனக் குறிப்பிடப்படுகின்ற இடது திருக் கையினை வீசுகரம் என்பர். நான்ற மலர்ப்பதமாகிய தூக்கிய திருவடியினைச் சுட்டியவாறு இதன் ஒரு விரல் இருக்கும். குமரகுருபரர் இச்செயலினை "ஒரு கால் காட்டிக் கை அமைத்து நாதனார் செய்யும் நடம்" என்பர். ஒரு கால்(முறை) இறைவன் திருவடியினை வழிபட்டாலே போதும் என்ற குறிப்பை இது காட்டும்.[191] இத்திருக்கை திரிபதாகை முத்திரையோடு தூக்கிய திருவடியைக் குறித்து நீண்டு நிற்கிறது. இதுவே ஆனந்த நடனத்தில் வரத ஹஸ்தமுமாம். இது பரிபாக முற்ற ஆன்மாக்களை நோக்கி, இது தான் நீ அமையக் கூடிய இன்ப மயமான இடம் எனச் சுட்டுகிறது என்பர்.[192] இத் திருக்கரம் எப்போதும் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கிறது. தூக்கிய பாதம் உயிர் மலத்தினின்று விடுபட்ட நிலையைக் காட்டுகிறது. ஆகவே அதனுள் பொருந்தியுள்ள வீசியகரம் உயிர் பேரின்ப நிலை அடைகிற செய்தியைக் குறிக்கின்றது போலும் என்பாரும் உண்டு.[193]

அபய கரம்

அம்பலத்து ஆடுகின்ற இறைவற்கு நான்கு கைகள். வலக்கரம் ஒன்று துடி ஏந்தி படைத்தலைக் குறிக்கும். இடக் கஜ ஹஸ்தம் எனப்படும் இன்னொரு இடக் கரம் தீ யகல் ஏந்தி அழித்தலைச் சுட்டும். இன்னொரு வலக்கரம் அபய முத்திரை ஏந்தி அபயஹஸ்தமாக அருள்புரியும். சிவபக்தன் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்னும் அஞ்சாமை வரப் பெற்றவனாதல் வேண்டும் என்ற வலி பெற உதவுவது இது. பயத்திற்கு எதிரிடை அபயம். பயமாகிய அச்சம் தவிர்க்க இறைவன் ஒரு கரத்தால் கஜ ஹஸ்தத்தால் தன் திருவடியைச் சரணடையுமாறு சுட்டிக் காட்டி இன்னொரு வலக்கரத்தால் அஞ்சேலென்று அபயம் காட்டுகிறார். இவ்வமைந்த கரம் அருந்தவத்தாரைத் தன் திருவடி சேர வா வென்றழைத்து அணைத்துக் கொண்ட பொருந்து மறையது. இவ்வாறு அஞ்சலிக் கையின் அமைத்தல் திதியாம் எனச் சுட்டித் திருமந்திரனார் இத்திருக்கை காத்தல் தொழிலுக்குரித் தென்பார். இதனை உண்மை விளக்கமும் "திதி அமைப்பில்" எனச் சாற்றும். "தனித்தனி வகுத்த சராசரப் பகுதி அனைத்தையும் காப்பது அமைந்த பொற்கரமே" என்பார் குமரகுருபரர். அபய கரமானது உலகைக் காக்கும் சக்தியாகும் என்பது காமிகம்.[194]

190. உண்மை விளக்கம், 35, 36
191. பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1973, ப : 30
192. தேசிகர், ப : 102
193. வேங்கடசாமி, மயிலை, சீனி., இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள், ப: 35
194. அஃதே

துடி

சிவ பெருமானின் வலக்கையில் துடி என்னும் உடுக்கை அமைந்துள்ளது. "உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே" என்னும் சாத்தனாரின் கூத்த நூல்.[195] உடுக்கையில் எழும் ஓங்கார ஓசையாகிய நாதப் பிரம்மமே தோற்றத்திற்கு முழுமுதல்.[196] இதனையே. "தோற்றம் துடியதனில்" என உண்மை விளக்கம் விளம்பும். திருவைந் தெழுந்து முறையில், உடுக்கை சிகரமாகவும், சிருஷ்டியின் அதிபதியான சிவத்தைக் குறிக்கும். இதனைச் "சேர்க்கும் துடி சிகரம்" என்பார்.[197] தந்திர சாரம், "உடுக்கை பிந்து நாத சமன்வய சிருட்டியின் அறிகுறி" என்று சுட்டும். இவ்வுடுக்கை அகர, உகார, மகாரங்களில் உகாரத்தின் நிலை என்பர். அகரமாகிய பரத்தையும் மகரமாகிய மாயையையும் உகரமான உடுக்கை பிணிக்கின்றதென்பர். உடுக்கையின் இருபக்க வட்டத் தோற்பரப்புக்கு இரு பாலுமாய்க் கொண்டு, உகரமாகிய தண்டம் என்னும் தட்டும் பகுதி தட்டும் போது எழுப்பும் சுழல் வட்ட ஓசை அலைகளே நாதப் பிரம்ம ஒலிகள் என்பர். படைப்பின் உதய கால நிகழ்ச்சிக்குத் துணையாவது அத்துடியோசை. துடி ஒரு தாள வாத்தியம். காலப் பிரமாணத்தின் இயக்கம். இறைவனின் படைப்புகள் அனைத்தும் காலப் பிரமாணத்தில் இயங்கி வருவதை இது காட்டுகின்றது. துடியினை நடராசப் பெருமான் தனது வலக் கரத்து ஏந்தி நிற்பது, தோற்றக் காரணம், இறைவனது, தன் கையகத்தில் என்பதைக் காட்டுவது.[198] நாதம் விந்துவின் நிலையைப் பெற்றுள்ளது. விந்துவில் அடங்கியுள்ள தோற்ற வித்துக்களை நாத ஒலி தட்டியெழுப்புகிறது.[199] நாதம் நின்றால் பிரபஞ்சம் ஒடுங்கி விடும். நாதத்தின் வழி சீவன் உயிர்ப்புறுகின்றது. உடுக்கையும் தீயகலும் பிரம்ம பகல் இரவின் சின்னம் என்பதும் உண்டு.[200] அண்ட சராசரங்கள், அவண் இயங்கும் சீவன்கள் அனைத்தும் துடியோசைக்கேற்ப இயங்கி நடமிடுகின்றன. இறைவன் தனது துடியொலியால் உலகனைத்தையும் அழைத்து தனது இடது காலைத் தூக்கி அபயம் அளித்து ஆனந்த நடனம் செய்கிறான்.[201] உடுக்கை சிவசின்னங்களுள் ஒன்று. வட இந்தியத் திருக் கோவில்களில் திரி சூலத்தோடு உடுக்கை கட்டிய அமைப்புகளைக் காண இயலும். சிவபக்தர்கள், பைராகிகளாகத் திரிவார், கையில் திரிசூலமும் உடுக்கையும் ஏந்தியிருப்பர். சமஸ்கிருத மகேச சூத்திரத்து நந்திகேஸ்வரரது காசிகையில் நர்த்தனம் தீர்ந்ததும் நடனத்தின் இராசராசராகிய சிவன் சனகாதி சித்தர்காணும் பொருட்டுத் தன் கையிலுள்ள உடுக்கையைப் பதினான்கு முறை தட்ட அதிலிருந்து பதினான்கு சிவசூத்திரங்கள் தோன்றின" எனக் கூறப்படுகின்றது.[202] இதனைக் கூத்த நூலும் கூறுகின்றது. இந்தச் சிவ சூத்திரங்களில் வரும் அட்சரங்களே ஸ்ரீ சக்கரத்தின் நாற்பத்து மூன்று கோணங்களில் விளங்குகின்றன என்பாரும் உளர். இது தாந்திரிக மயம்.[203] இறைவனது துடியோசையில் சப்தஸ்வரங்களாகிய இசை யோசைகளும் எழுந்தன.[204] திருப்

195. சாத்தனார், கூத்தநூல், சென்னை 1968, ப : 16, 17
196. சுவாமி சுவாகானந்தர் ப : 26
197. உண்மை விளக்கம். 33
198. சுவாமி சுவாகானந்தர் : ப :27
199. சித்பவானந்தர், ப : 149
200. ராவ், ப : 44
201. இராமலிங்கம், ப : 104
202. சாத்தனார், கூத்த நூல். ப : 30 நஜன், சிதம்பர ரகசியம், ப : 23
203. நஜன், சிதம்பர ரகசியம், ப : 24
204. தேசிகர், ப : 101

புத்தூர்ப் புராணம் இந்த ஸ்வரங்களின் அமைதியில் ஆடற் தலங்களை அமைத்துக் காட்டும். நாதம் என்பது சூட்சும ஒலி. அது கேளா ஒலி. விந்து என்பது தூல நுண்மை. நாதம் விந்தினைத் தூண்ட பால்வகைச் சேர்க்கையாலாய சேதனா சேதனப் பிரபஞ்சம் உருவாகின்றது.[205] துடி ஆகாயத் தத்துவத்தின் சின்னம் என்றும், அதனின்றே அதன் ஓசையினின்றே பிற நான்கு பூதங்களும் தோன்றின என்பதும் உண்டு.[206] தோற்றம் ஆகாயத்தில், ஓசையில் உதிக்கின்றது, என்பதே இதன் உட்கிடை.

தீயகல்

இறைவன் வேள்வி உருவினன். வேள்வி நடுவில் உள்ள அக்கினி உருவினன் என்பர்.[207] இறைவன் தனது இடக் கரத்தில் நெஞ்சுக்கு நேரே தீச்சுடரை ஏந்தி நிற்கிறார். "அங்கி தன்னில் அறையிற் சங்காரம்" என்பது திருமந்திரம். "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" என உண்மை விளக்கமும் கூறுகின்றது.[208] இறைவன் திருக்கரத்துள்ள சங்கார சக்தியான தீச்சுடரானது, மகா மாயையின் மேல் இருக்கின்ற பொருள்களை வெளிப்படுத்துவதாகவும், பாசங்களை எரித்து நீராக்குவதாயும், இருக்கிறது எனக் காமிகம் கூறுகின்றது.[209] இறைவனாய குருவின் திருக்கரத்தில் ஒளிரும் தீ, இறைவனாய குருவினால் உணர்த்தப்பட்டு அனுபவிக்கத் தக்க ஆத்ம ஒளி என்பதும் உண்டு.[210] தீக்கனல் ஞானத்தின் சின்னம். சிவஞானமாக அக்கினி, கர்மத்தையும் கர்மத்திலிருந்து வந்துள்ள உலக வாழ்க்கையையும் எரிக்க வல்லது என்றும் புகல்வர்.[211] இதனை மெய்யுணர்வுத் தீ எனத் திருமந்திரம் கூறும்.[212] எரியாடல் என்பது பண்டு தொட்டு சிவ, சக்தி வழிபாட்டில் தக்க இடம் பெற்ற ஒன்று. இத் தீ பழமை எரியாடலின் சின்னம். யோக நெறியில் மூலாதாரத்து எழும் மூலாக்கினியே சகஸ்ரார ஒளிக்கு அடிப்படையாயமைவது. இத் தீ மூலாக்கினியின் அம்சமாகும். இதயமாகிய அநாகதத்து இறைவன் நுண்ணொளியாய் நுண் தீயாய் இருப்பதை உபநிடதங்கள் உரைக்கின்றன. இது அநாக்த உயிர் பேருயிர். ஒளி உருவின்தன்மையைக் குறிப்பதாகும், திரிபுரம், தென்னிலங்கை முதலிய தீமைகளை அழித்த தீயே இந்த அங்கியும். யோகிகள் புகிர் முகமாகவும், அந்தர் முகமாகவும் பூசிக்கும் அக்னி ஸ்வரூபம் "சிதக்னி" எனப்படும். இந்த அங்கி சிதக்னியுமாம்.[213] சகல உயிரினங்களிலும் தீயே உடலைக் காப்பதால் தீயினை "தநுதப்த்ரு" என்பர். பஞ்சாக்கினி வித்தையின் உண்மையினை சுவானுபவத்தால் உய்த்துணராதவர்கள் இறைவனின் சிதாக்கினி ஸ்வரூபத்தை அறிவர் எனச் சாந்தோக்ய உபநிடதம் கூறும்.[214] கஜ சம்காரம், அர்த்த நாரீஸ்வரர், சங்கர நாராயணர், நிருத்த மூர்த்தி போன்ற படிமங்களில் தீயகல் அமைந்துள்ளது.[215] அடிமுடி தேடிய படலத்தில் திரு அண்ணாமலைத் தெய்வமாக இறைவன் அக்கினிப் பிழம்பாகவே காட்சியளித்தான் என்பர். தீயகல்

205. கோவிந்தசாமி பொன், திருசிற்றம்பலம் என்ற சிற்சபை, ப : 62
206. குப்தா, ஆர்.எஸ்., இந்து, பௌத்த, சமண படிமக்கலை, பம்பாய், ப: 36
207. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப : 210
208. பழனி மலர், ப : 196 உண்மை விளக்கம் 35
209. வேங்கடசாமி; ப : 32, 33
210. சுவாகனந்தர், ப : 27
211. சித்பவானந்தர், ப : 150 சுவாமி சித்பவானந்தர், அம்பலவாணரின் ஆடல் தத்துவம், ப: 7
212. பழனி மலர், ப : 196
213. நஜுன், குண்டலினி சக்தி, சென்னை, ப : 78
214. அஃதே, ப : 77
215. அரங்கசாமி, ப : 555 216. இராமலிங்கம், ப : 107

ஏந்திய கை அஞ்ஞான நிவர்த்தியைக் காட்டும் என்பாரும் உண்டு.[216] தீ சிவபெருமானின் ருத்திர அம்சத்தின் சின்னமாக அமைந்துள்ளது என்று கருத இடமுள்ளது.[217] வேள்வித் தீ யில் சத்யப் பிரமாணம் செய்தல் கற்பூரம் எரித்து சத்தியப்பிரமாணம் செய்தல் போன்ற இத்தீ யகல் இறைவன் திருவடி நீழல் அணுகுவார்க்கு எய்தும் சத்தியப் பிரமாணத்தின் சின்னம் என்று கருதுதல் உண்டு.[218] தீ யகலில் அமைந்த தீச்சுடர் சங்காரத்துக்கு இயலும், தீ யினைத் தோற்றுவித்தற்கான அடையாளம் என்ற கருத்தும் உள்ளது.[219]

முயலகன்

ஆனந்த தாண்டவ மூர்த்தியின் ஊன்றிய திருவடியின் கீழ், தலையினை, படிமத்தின் வலப்பறம் வைத்து, ஒரு கையில் ஒரு பாம்புடன் முயலகன் படுத்துள்ளான். முயலகனை அபஸ்மாரம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. அவன் ஆணவ மலத்தின் அடையாளம். ஆணவ மலம் தலையெடுப்பதனாலேயே உயிர்கள் அனு என்னும் பெயரைத் தாங்கி, வினைக் கீடாக அவதிப்படுகின்றன. அதன் வலியொடுக்க இறைவனாலன்றி ஆன்மாக்களால் இயலாது. அதனை அடக்கினால் உயிர்கள் வீடு பேறு பெறுவன என்ற தத்துவத்தை, உணர்த்துவன, ஊன்றிய திருவடியும் அதன் கீழ் முரலும் மூயலகனும்.[230] இம்முயலகனைக்,,கரு என்றும், குறள் என்றும் கூறுவதுண்டு. கருவின் மிதித்த கமலப்பாதம் என்பது திருமந்திரம். ,,காருடல் பெற்ற தீவிழிக் குறள் என்பது கல்லாடம். மூடாய முயலகன் என்பார் சுந்தர மூர்த்திகள்.[231] முயலகன் கருநிறமும், விகார உருவமும் உள்ளவன். முயலகன் உரு பாசத்துடன் கூடிய ஆன்மாவைக் குறிக்கும் என்பர். நடராச மூர்த்தத்தின் திருவடியின் கீழும், தட்சிணாமூர்த்தியின் கீழும் முயலகன் முரலப் பார்க்கிறோம். அடுத்ததாக இரண்டாவது நூற்றாண்டது எனப்படுகின்ற குடிமல்லம் லிங்கத்தின் கீழும் முயலகன் உள்ளது. உமாசம்கித மூர்த்திக்குக் கீழும் முயலகன் அமர்ந்திருப்பது மரபு. ஐகோளேகருங்கற் சிற்பம் ஒன்றில் சுகாசனத்திருக்கும் உமாசம்கித மூர்த்தியின் இரு கால்கட்குக் கீழும், காலுக்கு ஒன்றாக இரு முயலகன் உள. இவண் பிருங்கி முனிவரும் உள்ளார். முயலகன், கையிலுள்ள,, படம் கொண்ட பாம்பு, ஆணவ மலம் கொண்ட உயிர்கள் என்ற பொருளை படங்கொ,,டு நின்ற இப்பல் லுயிர்கெல்லாம் அடங்கலும் தானாய் நின்றாடுகின்றானே எனத் திருமந்திரம் புகலும்.[232] சிற்பச் செந்நூல் முயலகன் தனது இடக்கையில் பாம்பைப் பிடித்துக் கொண்டும் வலக்கரத்தில் அரிவாளைக் கொண்டிருப்பதாகவும் அமைக்கப்படலாம் என்று கூறும். அதன் வண்ணம் சியாமள வண்ணம் அல்லது பச்சை வண்ணம் என்பது சிற்பச் செந் நூல். மனிதன் எண்ணுவது, பேசுவது எல்லாம், ஆகாயத் தத்துவ அடிப்படையில் உள்ளது. மனிதனுடைய எண்ணக் குவியலே மனிதனைப் பிறவிக்கு விடுவது. அத்தகைய எண்ணக் குவியலூடே கூத்தபெருமானை நிறுத்தி பிறவிக்குக் காரணமான ஆணவ வல்லிருள் கீழ்ப்படுத்தப்படும் என்பதையே முயலகனாக, ஒரு குறுவடிவம் அமைத்துக் காட்டினர் என்பர் சிவராஜ யோகியார்.[233] ஆணவத்தைக் குறிக்கும் முயலகன் கையில் அகப்படுகிற அரவம் கட்டுண்டு கிடக்கும் சீவ சக்தியைக் குறிக்கும். இச் சீவன்

217. அஃதே, 105
218. அஃதே, 107
219. குப்தா, ஆர்.எஸ். இந்து, பௌத்த, சமய, படிமக்கலை பம்பாய், ப : 45
220. - 229 எண்ணிக்கை விடுதல்
230. தேசிகர், ப : 104
231. வேங்கடசாமி, ப : 36
232. அஃதே, ப : 37 திருமந்திரம்
233. இரத்தின ப : 7

விடுதலை பெற்ற பின் ஆனந்த நிலையை அடையும்.[234] தட்சிணாமூர்த்தியின் திருவுருவில் இறைவன் யோக நிலையில் இருந்து, மூல அவித்தையைக் குறிக்கும், அபஸ்மாரத்தை வலது காலால் அடக்குவது போன்றே நடராசப் பெருமானும் ஆடும்பொழுது அபஸ்மாரத்தை ஒடுக்குகின்றார்.[235] வடநாட்டில் தேவி தாண்டவக்கோலத்தில் பிருகிருதித் தாயாகக் கட்புலனாக நடமாடுகின்றாள். தேவியின் திருவடிகட்குக் கீழ், அறிவுச் சொரூபமாய இறைவன் தூவெண் நிறத்தில் அசையாது சவம் போல் கிடக்கிறார். அறிவுச் சொரூபம் அவண் அசைவற்றிருக்கிறது. அசைவு வடிவினளாய சக்தி ஆடுகிறாள்.

தில்லைக் கூத்து ஆத்ம தத்துவ விளக்கமாகையால் ஞானக் கண் கொண்டு தான் சிதம்பரத் தரிசனம் காண இயலும். இவண் முயலகனின் அறியாமை அசைந்து கிடக்கின்றது.[236] முயலகன் மேல் இறைவன் திருநடம் புரிவது நிராலம்ப நிலை. இக்கூத்து வியக்தமாக முயலகன் மேல் நடைபெறுகின்றது. இது, விசுவபேத தாண்டவம். ஆடும் சுமையினாலும் வேகத்தினாலும் காலின் கீழ் கிடக்கும் முயலகனுக்கு எவ்வித சேதமும் இல்லை.[237] முயலகனை அடக்குவது அவித்யா நாசம் செய்வது, இறைவனை அண்டியவர்கட்கு அறியாமை அழியும் என்பதனை இது அறிவிக்கின்றது.[238] இறைவனது ஊன்றிய திருவடி முயலகன் மீது பட்டும் படாமலும், அமைந்திருப்பது ஆத்ம சாதகன் அகங்காரத்தை அறவே வெல்லுதல் வேண்டும் என்பதைக் குறிக்கும் என்பதும் உண்டு.[239] அபஸ்மாரம் தன் இடது கையில் ஒரு பாம்பினைக் கொண்டிருப்பதோடு வலது கையில் சர்ப்ப சிரஹஸ்த முத்திரையையும் கொண்டிருக்க வேண்டும் எனச் சிற்பரத்தினமும், சகளாதிகாரமும் கூறுகின்றன.[240] முயலகனோடு பல பாம்புகள் இருப்பதுண்டு எனக் காமிகம் செப்பும்.[241] முயலகன் என்ற சொல்லின் கொச்சை வடிவம் முசலகன். முசலகன் என்ற சொல், தஞ்சை, கல்வெட்டொன்றில் உளது. அறியாமை வயப்பட்டு பிரக்ஞை இழந்த நிலையினை அபஸ்மாரம் என்பதும் உண்டு. முயல் போன்று மூச்சுத் திணறும் காக்கை வலிப்பு போன்ற நோய்க்கு முயல்வலி என்று ஒரு பெயர். முயலகன் என்பது அறியாமை காரணமாக வழி தவறும் உயிர் நிலை எனவும் கொள்ளலாம்.[242] தாருக வன யோகியர் அனுப்பிய புலி, பாம்பு முதலியனவற்றை அணிந்து கொண்ட இறைவன், இறுதியாக வந்த முயலகனை வதைக்காது தன்னருளால் திருத்துகிறான். முயலகனை உலகத்துத் தீமை அனைத்திற்கும் ஓர் ஒருமித்த உருவமாகக் கொண்டு இறைவன் வீடளிக்கும் விரகினைக் காட்ட அமைந்த அமைப்பெனலாம்.[243]

தாருக வன முனிவர் இறைவனை அழிக்க வல்லதாக அனுப்பிய முயலகனின் சிறிய உருவத்திற்கும், ஆடும் இறைவனின் பெருவுருவிற்கும் உள்ள வேற்றுமை இறைவனது பிரம்மாண்ட நிலையினைக் காட்டுவதாகும்.

234. நஜுன், சிதம்பர ரகசியம், ப : 2
235. அஃதே, ப : 6
236. நாகசாமி. இரா., தென்னிந்திய தாந்திரிக வழிபாடு, ப : 46
237. சித்பவானந்தர் உரையாடல் ப : 291
238. சேது தீட்சிதர், சோம., நடராஜர் கோயில் சரித்திரம், ப : 59
239. சித்பவானந்தர், அம்பலவாணரின் ஆடல் தத்துவம், ப : 10
240. பத்மா சுப்பிரமணியம், பரதரின் கலை, சென்னை, ப : 55
241. அஃதே
242. அரங்கசாமி, ப : 530
243. சாஜு, ப : 95

மிகப் பெரிய அரக்கனான முயலகன் திருவடிக் கீழ் சிறிதாகத் தோற்று கின்றான் எனின் இறைவனின் உருவம் எவ்வளவு பெரிது. அரங்கனது அரிதுயிலும், ஆடவல்லானின் திருநடமும் யோக வழிப்பட்டவை. முயலகன் மீது இறைவன் திருநடம் புரியும் நிலையைக் காணில் முயலகனின் முதுகந் தண்டாகிய வீணாத் தண்டின் மேல் ஆடுவது போல் தோன்றுகிறது. முயலகனின் முகத்தில் கொடுமை இல்லை. சில படிமங்களில் குழந்தை அழகும் காண்கிறோம். சத்வ நிலையாகிய தலைப்பகுதியில் இறைவன் தாள் பட்ட புண்ணியத்தின் பயனை முயலகனின் முகத்தில் காண்கிறோம். பட்டினத்துப் பிள்ளையார் தனது திருக்கழுமல மும்மணிக் கோவையில் முயலகனை, "யோகத் தபோதனர் ஆன பேருழவர் மானமோடாக்கிய முயலகன் என்னும் இயல் பெருங்கரும்பு" என்பார்.[244] இக் கரும்பாகிய முயலகனைச் சாறொழுக சுந்தரப் பதமாகிய திருவடிகளாகிய எந்திர ஆலையிலிட்டு அரைத்து சர்க்கரை நல்குவதாக அமைகிறது கருத்து. இவண் முயலகனைப் பற்றிய உயர் கருத்து வெளிப்படுகிறது. திருமந்திரத்தில் இறைவனது உடலை ஆகாயம் என்று குறிப்பிட்டு அவ்வாகாய வெளியிலுள்ள இருளாகிய கார் இருளே முயலகன் எனக் குறிப்பிடப்படுகிறது.[245] கார் முயலகன் என்பதற்கு உரையாசிரியர் சீவர்களிடத்து இருளைப் பெருக்கும் மும்மலம் என்று பொருள் கூறுவார். பிறிதொரு உரையாசிரியர் நான்மையின் முயல்வும் நல்லாரை முயலவொட்டாது தடுக்கும் ஆணவம் என்பார். ஆணவச் சார்பான மருள், பிறப்புறுவார்கட்குக் கரும்பு போன்று இனிக்கும். அதனை அரைத்து அடிக்கீழ் அமுக்குவது ஆண்டவன் அருட் செயல் என்பார்.

நுண் சிகை

நடராசப் பெருமானின் சடைமுடியினைப் பற்றி, திருமந்திரம் "நுண் சிகை ஞானமாம்" எனச் செப்பும். இந்நுண்சிகை குவி சடையாய் பல்லவர் சிற்பம் போன்றமையின் ஒன்றுபட்ட ஞானம் என்றும், விரி சடையாயின் ஆன்மாக்கட்கு ஞானமூட்டும் நிலை என்றும்,[246] சடாபாரமாயின் மேலிருந்து வரும் சிவசக்தி என்றும்,[247] திரிசடையாயின் முத்தொழில், மும்மூர்த்தி, பற்றற்ற பரமயோகி என்றும் போற்றும் மரபுகள் உண்டு.[248] குவி சடையாயின் அதனை அந்தில் என்றும் புற்று என்றும், கருதி, திருவாரூர் புற்றிடங்கொண்ட பெம்மானை நினைவு கூர்வதும் உண்டு. இவ்வந்திலைச் சிவலிங்கம் என்பது போல் இறைவனது திருமுடியினைச் சிவலிங்க அடையாளம் என்பதுண்டு.[249] இறைவன் ஆடும் கூத்து யோக நடம். தவத்தின் மேலாம் யோக நடமாகையால் திருமுடியைத் தவாக்கினியாகக் காண்பதும் உண்டு. 'கோபுரத்தைத் தரிசிக்க மோட்சம்' என்பது போல் ஆடவல்ல எம் பெருமானின் திருமுடி தரிசனமே மோட்சம் தர வல்லது என்பர்.[250] அது கலங்கரை விளக்கம் போன்று, கோபுர விளக்குப் போன்று தரிசன மோட்சம் தரவல்லது. யாகம் போன்ற கிரியைகளில் அனைத்து மந்திர சக்திகளும் பலன்களும் மங்கலக் கலசத்தில் அடங்கும். இவண் இறைவனது திருமுடியை

244. பட்டினத்தார், திருக்கழுமல மும்மணிக்கோவை பாட்டு 25
245. திருமந்திரம், 2774
246. நஜன், ப : 28
247. கோவிந்தசாமி, பொன்., திருச்சிற்றம்பலம் என்ற சிற்சபை, ப : 64
248. பழனி மலர், ப : 195
249. சிவராம ப : 98
250. அகிதே. ப : 97

மங்கலக் கலசம் என்பர்.[251] கங்கையும், இளவெண் திங்களும் குளிர்ச்சி யூட்டும் இத் திருமுடியைப் பனித்த சடை என்பர். பொன் வண்ணத் தந்தாதி இறைவனை உயர் குளிர்நிலையோன் எனப் போற்றும். பிரளய காலத்தில் இச் சடை மின்னல் போல் செந்நிறத்ததாகும் எனக் கல்வெட்டொன்று கூறும். இதனை, மின்னார் செஞ்சடை என்பர். நச்சரவு, இளம்பிறை இவை பகைப் பொருள்கள். பாம்பொடு திங்கள் பகை தீர்த்து ஒன்றாயிருக்கும் நிலை பரமனின் திருச்சடையில் உண்டு. அனைத்தையும் தாங்கி ஏந்தி அருளும் தன்மை நோக்கி இச்சடை ஜடாபாரம் எனப்படும். ஜடாபாரம், ஜடா மண்டலம், ஜடாபந்தம், ஜடா மகுடம் போன்ற சடைமுடி பற்றிய சொற்கள் தத்துவப் பொருள் பொதிந்தவை. பொன் வண்ணத் தந்தாதி இறைவனையே கரும்பாகக் குறிப்பிட்டு, அவர்தம் சடையினைக் கரும்புத் தோகையாகக் குறிப்பிடுவதுமுண்டு. இறைவனது தலைக்கு முன்னே நாகம் இருக்கும். அவரின் பின் சடையினை, பின்னாகம் என்பர். அர்த்த நாரீஸ்வர அம்சச் சிறப்பு இப்பின்னழகு. இவ்வழகினைத் தில்லையில் காணலாம்.

இறைவனது திருச்சடையினைக் கபர்த சடை எனக் கல்வெட்டொன்று கூறும்.[252] சடைமுடித் தொகை அனைத்தும் மேகத் திரள்களாகத் தோன்றுகின்றன. அவண் அசைந்திலங்கும் பாம்புகளின் தலைகளில் அமைந்த நாகரத்தினங்களின் மின்னொளி மின்னலையொத்த இளம் பிறையையொட்டி ஒரு வானவில், தேவ நதியாய கங்கையின் குளிர்ச்சி. மற்றும் கொக்கிறகு தலையில் அழகு செய்வதால் வெள்ளை மண்டையோட்டு மாலைக்கு நடுவே வெண்ணிறக் கைகளுடன் கொக்குகள் அமர்ந்திருப்பது போன்ற கோலம். ஞானத்தைப் பீறிடச் செய்தற்காகத் தியான யோகத்தில் உச்வாச நிச்வாசத்தால் ஏற்பட்ட காற்று மேகத்திரளொத்த சடைத் தொகுதியினைப்புடைத்து மேலெழுந்து தள்ளுகின்றது. இதன் விளைவாகப் பிறப்பு இறப்பின் துன்பங்கள் களையப்படுகின்றன என அக் கல்வெட்டு போற்றுகிறது. இறைவன் ஆடுவது அந்தி நடம். தீரநாகரின் சுபசிரத்ன கோசத்தில், இறைவனின் குவிசடை பழுத்த தவத்தின் விளைவான தவாக்கினி போன்று மேனோக்கிய சுடருடன் திகழ்கிறது. பாம்புப் புற்றிலிருந்து நெளிந்து பாம்பு வருவது போல், சடைமுடியிலிருந்து, கங்கை அரவனைய அலைகளோடு வெளி வருகின்றது. அந்திப் பொழுது போல் கங்கைக் கரையில் இளம் பிறை தோன்றியிருப்பது தாமரை நூலிழை போன்றும், சூரியச் செக்கர் போன்றும் அந்தி வண்ணம் காட்டுகிறது[253] என்பனவாய வர்ணனைகள் தத்துவப் பின்னணியைக் கொண்டுள்ளன.

கங்கை

புண்ணியப் பெருக்கு

தாண்டவமூர்த்தி முயலகன் மீது நளினமாக ஆடுகிறார். அவண் உடுக்கை, பாம்புகள், புலித்தோல், தீயகல் முதலிய கடுமை வாய்ந்த பொருள்கள் இயங்குகின்றன. ஆனால் அவ்விறைவனின் பாதி உடலாக இடப்பாகத்தே அன்னை பராசக்தி அருளாட்சி நடத்துகின்றாள். இறைவனது திருமுடியில் அன்னை கங்கா தேவி ஒரு அழகிய அருள் நடனத்தை இயற்றுகிறாள். கங்கை வளப்பம் அருளும் அருளரசி. அவளது உருவம், கீழ்ப்பகுதி

251. அஃதே, ப : 97
252. அஃதே, ப : 18
253. அஃதே, ப : 110

ஒரு மீன் போன்றது. மேல் பகுதி அழகிய மங்கை. சடை அலைகட்கிடையே இந்நீர்மங்கை ஆடும் ஆட்டம் மிக மிக நளினமானது. கங்கையின் தூநீர் பட்டால் பாவம் தீரும், புண்ணியம் பெருகும். கங்கைத் துளிகள் பட்டு பிரம்ம கபாலங்கள் உயிர்பெற்று நகைக்கின்றன. தேய்ந்து வந்த இளமதி வளரத் தொடங்குகிறது. இக்கங்கையின் ஆட்டம் இறைவன் நமது இதயக் கமலத்தில் ஆடும் ஆட்டத்தை யொத்தது என்பார் நூலோர்.[254]

புண்ணிய வித்துக்கள்

இறைவனின் வேகமான ஆட்டத்தின் போது தலையில் இருக்கும் பேராற்றல் மிக்க கங்கையின் ஆட்டம் நீர்ப்பெருக்கு இறைவனையே மூழ்க டித்து விடுமோ என விண்ணோர் அஞ்சும்படி அமைந்தது. கங்கை நீர்த் திவலைகள் அல்லி மலர் மாலைகளோ, சந்திரனின் ஒளிக் கற்றைகளோ, புண்ணிய வித்துக்களின் முளைகளோ, பாம்பு உரிகளோ, திருநீற்றுப் பொடி களோ, என ஐயுறும்படி இருந்தன எனக் கல்வெட்டுக்கள் புகழ்கின்றன.[255]

அளவில் ஆற்றல்

இறைவனுடைய எண் குணங்களுள் "அளவில் ஆற்றல்" என்பதனைக் கங்கை குறிக்கின்றதென்பர். கூப்பிய கையொடு இறைவனது சடைக்குள் சிக்கிய கங்கை அளவில் ஆற்றலோடு நாடு முழுவதற்கும் நீர்வளம் தருகின் றாள். இறைவனும் வானதிர, மண்ணதிர, மலைஅதிர வரும் பேராற்றல் மிக்க கங்கையைத் தன் ஒரு மயிர்க்காலில் கட்ட வல்ல வல்லமையாய அளவில் ஆற்றலுடையவராகிறார்.[256] இந்தியாவின் நீர்வளம், கங்கையாயினும், காவி ரியாயினும் வேறெந்த நீராயினும் கங்கையென்றே நாம் போற்றுவதும் குறிக்கத் தக்கது.

ஆதிப் பெருந்திரு

விழுப்புனலாகிய கங்கையினைப் "படைத்தற்காம் ஆதிப் பெருந்திரு" எனத் திருமந்திரம் புகழும்.[257] இறைவன் திருமுடிக்கண் நிலைத்திருக்கும் நிலை யாற்றல் என்பதுமுண்டு.

அறிவூற்று

சடைக் கண்ணுள்ள கங்கை தெளிந்த அறிவூற்றையும், அதன் எதிர் அமைந்த இளம்பிறை அறிவின் பயனாய் வளர்ந்தோங்கும் இன்பப் பெருக் கையும் உணர்த்துகின்றன என்பதும் உண்டு.[258] இக்கங்கை தண்மையினையும் புத்துணர்வினையும் நல்கும் இறை அறிவைக் குறிப்பது என்பதும் உண்டு.[259]

சகஸ்ரார அமுதம்

கங்கையினை யோக நெறியில் சகஸ்ரார அமுதம் எனக் குறிப்பது முண்டு.[260]

மாலதி மலர்மாலை

இறைவன் பேரழகன். அவரது சடைமீது நடமிடும் கங்கை பிறங் கொளிப் பிம்பமான மாலதி மலர்மாலை போன்று இறைவனது திருமுடிக்கு அழகேற்றுகிறார், ஹர்ஷ சரிதத்தில் பாண கவி கங்கையினை மாலதி மாலை என்கிறார்.[261]

---

254. அஃதே, ப : 99
255. அஃதே.
256. தேசிகர், ப : 99
257. பழனி மலர், ப : 194; திருமந்திரம் 410 (கழகப் பதிப்பு)
258. நஜன், சிதம்பர ரகசியம், ப : 20
259. சுவாகானந்தர் : 27
260. அஃதே, ப : 26
261. சிவராம, ப : 94

சுபிட்சமும், அருட் குணமும், மங்கலமும்

கங்கையின் இருப்பு, இறைவன் சுபிட்சமும், அருளும் தருவார் என்பதன் சின்னம் என்பார் உண்டு. கங்கை மங்கலச் சின்னம் எனத் தசபோதம் கூறும்.[262]

பாப விமோசனம்

காளிதாசர் குமார சம்பவத்தில் கங்கை மூவுலகையும், புண்ணிய மயமாக்கும் திரிபாதகா என்று போற்றுவார். இறைவன் திருவடியில் உரையும் கங்கையின் உருவம் மண்ணுலக மங்கை, பாதாளவுலக மீனம், விண்ணுலக மங்கை இம்மூன்றினையும் இணைத்த ஒன்றாகவுள்ளது என்பர்.[263]

அட்டமூர்த்த நீர் உரு

இறைவனது அட்டமூர்த்தத் தத்துவத்தில் கங்கை நீர் உருவாகும்.[264]

கங்கைக்கு உயர் இடம்

இறைவன், காபாலம், என்பு, பாம்பு முதலியவற்றை அணிந்திருந்தாலும் அவர் தூயவர் என்பதோடு, இளகிய இதயம் உடையவர் என்பதைக் காட்டுவது அவர் தலையில் கங்கைக்கு உயர் இடம் தந்துள்ளது என்பர்.[265]

தூவெண்மதி

கருணைத் திறம்

திருநடம் புரியும் இறைவன் கோலத்தில் எடுப்பும் எழிலும் மிக்கது இளம்பிறை. இறைவனைப் பிறை சூடிய பெம்மான் என்பது இது பற்றிய சிறப்பு. ஆலகால விடத்தைக் கண்டத்தில் அடக்கிய பெருமான் அமிர்த மழை பொழியும் இளம்பிறையினைத் தன் முடியின் சிகரமாக அமைத்திருப்பது அவரது கருணைத் திறத்தினைக் காட்டும். உடம்பெல்லாம் பாம்புகள் புகுந்து விளையாடித் திரியும் போது தண்ணிலவால் குளிர்ச்சியூட்டும் இளம்பிறையின் செயல் ஒன்றை ஒன்று நிறைவு செய்வதாகின்றது. காலனையும் காமனையும் வென்ற இறைவனின் தலையில் இளம்பிறை காலத்தை உயிர்ப்பிக்கும் குளிர் நிலவாகவும் திகழ்வது, இறைவன் தன் கருணையால் அழிப்பது போல் அழித்து புத்துயிரூட்டும் பெருமையைச் சுட்டும் என பிரிதிவீத ஐய விஜய மகா காவ்யம் கூறும்.[266]

அட்ட மூர்த்தச் சின்னம்

இளம் பிறை அட்ட மூர்த்தச் சின்னமாகவும் அமையும்.

அளவில்லா ஞானம்

இறைவனது திருமுடிக்கண் ஒளிரும் பிறைமதி இறைவனுடைய அளவிலா ஞானத்தை அறிவிப்பது என்று காமிகாமம் கூறுகிறது என்பர். இதனைப் பட்டினத்தடிகள் தூமதி சடைமிசைச் சூடுதல் தூமதி என அமைத்தவாறே[267] என்பர்.

வினை வீடளித்தல்

தக்கனது சாபமேற்றுத் தேய்மதியாகிச் சந்திரன் இறைவனது திருவடியை அடைந்த போது, அதனைத் திருமுடியில் வைத்து வளர்மதியாக்கிய புராணச் செய்தி இறைவனது வினை கெடுத்து உயர்வளிக்கும் குறிப்பை உணர்த்துவது. எனவே இவ்விளம் பிறை இறைவனது வினை வீடளிக்கும்

262. சோமசுந்தரம் ப : 27
263. சிவராம, ப : 99
264. அஃதே, ப : 33
265. அஃதே, ப : 34
266. அஃதே, ப : 34
267. தேசிகர், ப : 99

கருணையைக் காட்டுவது எனலாம்.

ஆருயிர்

திருமூலர் பாதிமதியினை ஆருயிர் என்பார்.[268]

காலச் சின்னம்

வளர்ந்தும் தேய்ந்தும் அமையும் சந்திரன் காலத்தின் அறிகுறி.

மங்களத் தன்மை

சந்திரன் இறைவனின் அழியாப் பேரொளியையும், மங்களத் தன்மை யையும் காட்டும் என்பர்.[269]

லய அறிகுறி

சந்திரன் லயத் தன்மையின் அறிகுறி என்பதும் உண்டு.[280] சடைமுடிக்கண் சந்திரன் கிளர்ந்தெழுவது அறிவு வெளிப்பாட்டினைக் காட்டுவது என்பதும் உண்டு.[281] தலைப்பகுதியை யோக நெறியில் சந்திரமண்டலம் என்பர். அவண் பன்னிற ஒளி அசைவுகளும், வெண்ணிறமாய் மின்னி அசையும். அதன் அறிகுறி சடைமுடியில் சந்திரன் என்பதும் உண்டு.[282]

உயிர் வளர்ச்சியின் சின்னம்

உயிரினங்களும், பயிரினங்களும் சந்திர ஒளியில் தளிர்க்கின்றன என்ற கருத்து வேத காலம் தொட்டு இருந்து வருவது. இதுபற்றி சந்திரனை ஒஷதி நாதன் என்றும் அழைப்பர். எனவே சந்திரனை உயிர் வளர்ச்சியின் சின்னம் என்பர்.[283]

சக்தி பாகம்

இறைவன் இளம்பிறையினைத் தன் இடப்பாகத்தில் தலை முடியில் அணிந்துள்ளார். இது அம்மையின் சக்திபாகம். சக்தியின் அருள் தன் மையினை இது காட்டும்.

இடை இட

அபானன், உபானன் என்னும் வாயுக்களுள் அபானன் இடப்பகுதியில் அமைந்து கீழ் நோக்கி வருவதாக யோக நூலோர் நுவல்வர். அபானன் கீழ் நோக்கி வருதல் உலகியல் இன்ப துன்பத் துய்ப்பு நிலையாகும். சந்திரன் இடப்பாகத் தமைந்தமை உலகியல் இன்ப துன்ப நிலையாகவும் இம்மை மறுமை இயல்புக்கான அறிகுறியாகவும் அமையும் என்பதும் ஒன்று. இது புராணச் செய்திகட்கும் ஒக்கும்.[284]

உயிர்ப்புச் சக்தி

இறைவனது திருமுடிக்கண் உறையும் இளம்பிறை உமிழும் அமிர்தமும், கங்கையின் நீர்த் திவலைகளும் பட்டு இறைவன் அணிந்திருக்கும் பிரம்ம கபால மாலையிலுள்ள பிரம்மாவின் கபாலங்கள் உயிர்த்தெழுவன என இலக்கியங்கள் புகழ்வதுண்டு. இவண் அமிர்த தாரகை உயிர்ப்புச் சக்திக்கு அறிகுறி எனலாம்.

காம வெற்றி

இளம்பிறை காமதேவனின் கருவி. காமனைத் தன் நுதல்விழியால் எரித்த இறைவன், காமனை வென்றமையின் அறிகுறியாக, இளம்பிறை யினைத் தன் முடிக்கண் அணிந்து வழிகாட்டுகிறார் என்பதும் ஒக்கும்.[285]

---

268. பழனி மலர், ப : 197
269. சுவாகானந்தர் ப : 27
270. -279 எண் விடுதல்
280. சுவாகானந்தர் ப : 25
281. அஃதே, ப : 25
282. அஃதே, ப : 26
283. சாமு ப : 93
284. அஃதே, ப : 93-94
285. சிவராம, ப : 98

அரு மருந்து

ஆந்திரக் கல்வெட்டொன்றில் இறைவனின் திருமுடிக்கண்ணுள்ள சந்திரன் முப்பத்து மூன்று கோடி தேவ உலகினர்க்கும் மருந்தாகும் என்றும், கற்பக மலரின் இதழ் ஒன்றின் நடுவே கங்கையின் அலைகட்கிடையே இளம்பிறை இறைவனின் முடியினை அழகு செய்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.[286]

வானுலகின் அருள் மலர்

பில்காரி கல்வெட்டு சேதி ஒன்று சந்திரனை இறைவனது சடைக் காட்டை அழகு செய்யும் மலர் என்று போற்றும். குவலயானந்தம் சந்திரனை புஷ்கரம், புஷ்பவதி எனப் போற்றும். சந்திரன் வானுலகின் அருள் மலர். வானுலகப் பயன்களை எல்லாம் காட்டும் அருட்சின்னம் என்பதும் பொருந்தும்.[287]

அருட் சின்னம்

கைலைபதியான இறைவனைச் சந்திரசேகரர் என்பர். போக மூர்த்தங்களுள் இது ஒன்று. திருமாலுக்குக் கௌஸ்துப மணியும், மார்பகத்தில் திருமகள் சின்னமும் அமைந்தது போன்றும், வானுலகுக்கு பாரிஜாத மரம் போன்றும், சிவனுக்கு இளம் பிறை என்பாரும் உண்டு. இது அருட் சின்னம்.[288]

ஒளிர்வு

நளசம்புவில், திருவிக்ரமகவி, சந்திரன் இறைவனின் வளரும் ஒளிர்வு நிலையினைக் காட்டும் என்பர். யோக தியான நெறிகளில் அவனருளால் ஒளிர்வு அதிகம் பெற வாய்ப்புண்டு என்பதே இதன் பொருள்.[289]

திருமுடி காட்டும் அருளபயம்

அபயஹஸ்தம் அஞ்சேல் என அருளும் அபிநயம். கருவறைக்குச் செல்லுமுன் கோபுர தரிசன அருட்காட்சி போன்று, சந்திரன் திருமுடிக்கண் உள்ளது. கல்வெட்டொன்று இச் சந்திரன் மரணத்தையும் அச்சத்தையும் போக்கும் அருள் நிலை என்று போற்றும்.[290]

கற்பகவல்லி

இன்னொரு கல்வெட்டு இறைவனது திருமுடியில் கங்கை நீரின் வளத்தால் வளர்ந்து வரும் கற்பக வல்லிக் கொடி போன்றது இச் சந்திரன் எனச் செப்புகின்றது. கற்பக வல்லி என்பது விரும்பியதையெல்லாம் நல்கும் தெய்வீக வானுலக அருட்கொடி.

முக்கண்கள்

இறைவனுடைய மூன்று கண்களும் புறச் சோதிகளாய சூரியன், சந்திரன், தீயாகிய முச்சுடர்களைக் குறிப்பன. உணர்ச்சியை ஊட்ட வல்ல புறச் சோதிகளாகிய சூரியன் சந்திரன் தீயாகிய முச்சுடர்களை மூன்று கண்களாகக் கொண்டு இறைவன் விசுவரூபனாக விளங்குகிறான்.[291] அன்றியும் இச்சா, ஞானக் கிரியைகளாக, இறைவனது திருக்கண்கள் விளங்குகின்றன என்று காமிகம் கூறுகின்றது. இதே கருத்தினை அகோர சிவாச் சாரியார்

---

286. அஃதே, ப : 98
287. அஃதே, ப : 99
288. அஃதே, ப : 96
289. அஃதே, ப : 94
290. சிவராம, ப : 193 சாமு அபயஹஸ்தம்
291. தேசிகர், ப : 97-98

தனது குறிப்பில் கூறுகின்றார். முக்கண்களும் "முக்கணன் என்பது முத்தீ வேள்வியில், தொக்கது எண்ணிடை என்பது ஓர் சுருக்கே" என்ற பட்டினத்து அடிகளின் அருள் வாக்கு ஆகவணீயம், காருக பத்தியம் என்ற மூன்று வேள்வித் தீயினைக் குறிக்கும் எனச் சுட்டுகின்றது. இம்முக்கண் களும் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலத்தைக் குறிப்பன என்பாரும் உண்டு.[292] இம்முக்கண்களை "மோகாய முக்கண் மூன்றொளி" எனச் செப்பும் திருமந்திரம்.[293] நெற்றிக் கண்ணாகிய மூன்றாவது கண் புருவங் கட்கிடையே அமையும். இது அறிவுக்கண். புத்தர் பிரானின் திருவுருவிலும் இது உண்டு. ஞானிகட்கு மட்டும் இந்நெற்றிக் கண் திறந்திருக்கும். பிறருக்கு மூடியிருக்கும். புருவமத்தித் திறப்பு என்று யோகம் இதனைக் குறிக்கும். இதனை இந்துக்கள் திலகக் குறியால் கொள்வர்.[294] புருவ மத்தியாகிய லலாடத்தானத்தில் அசைந்த நுதல்விழியை இட பிங்கலை சுழுமுனை நாடி களின் சங்கமத் தானம் என்பர்.[295] சிவப்பாதாதி கேச நட்வர்ணாஸ்துதியில் சங்கரர், மூன்றாவது கண், திலகம் போன்றும், நில வினும் இனிதாகவும், ஒளிர்ந்து நடமிடுவதாகப் போற்றுவார்.[296]

நுதல் விழி தீயின் அம்சம், செந்நிறக் கதிர்களை வீசுவது. இதனை ஹரவிஜயத்தில் நுதல் விழி சிந்தும் செந்நிறக் கதிர்கள் நடமிடும் இறை வனின் அபிநய விரல் நுனிகளில் பட்டு, இவை அசைகையில், விரல்கள் தாமரை மலரின் இதழ்கள் போன்று தோற்றமளிக்கச் செய்கின்றது எனப் போற்றப்படுகிறது.[297] இந்நுதல்விழி, ஒளி உமிழும் தன்மையது எனினும் மூடியே இருக்கும். முடிவுக் காலத்தில் மட்டும் திறந்து செயல்படும். வெண்மை நிறத்தில் தாமரைமுகை போன்று உயர வாட்டத்தில் அமைந்திருக்கும். இரா சராசன் இராசேந்திரன் ஆய சோழ மன்னர்கள் தில்லை கூத்தப்பிரான் படிமத்திலும், திருவாரூர் சோமாஸ்கந்தர் உருவத்திலும் நுதல் விழியிருக்குமிடத்தில் மரகதக் கல்லினைப் பதித்ததாக வரலாறு புகலும்.[298] குஷானர் காலத்துச் சிற்பங்களில் நுதல் விழி மேல் கீழாக இன்றி இயல்பான பிற கண்கள் போன்றே அமைக்கப்பட்டுள்ளது.[299] நுதல் விழியினை இறை வன் எல்லாவற்றையும் அறிவதற்கேற்ப இரண்டுக்கு மேற்பட்ட நூறென்றும் ஆயிரம் என்றும் சொல்லத் தக்க அளவு எண்ணிறந்த கண்களை உடையவர் என்ற பொருளில் கொள்வதுமுண்டு. இது சகஸ்ரலிங்கத் தத்துவம் போன்றது.[300] இதனை சகஸ்ராட்சம் என்றும், விஸ்வதசாட்சம் என்றும் போற்றுவர். இறைவனது திருக்கண்கள் இரண்டும் சோம சூரியராக உலகுக்கு ஒளியூட்டு பவை. மலைமகள் விளையாட்டாக இறைவனது திருக்கண்களைத் தன் கைகளால் மூட, பிரபஞ்சமே இருளில் மூழ்கியது. உலகை இருளினின்று காக்க இறைவன் நுதல் விழியைத் தோற்றுவித்து ஒளியூட்டினார் என்பதைச் சுந்தரர் "ஒற்றைக் கண் படைத்துகந்த உத்தமன்" என்று பாடுவார்.[301]

ஊமத்த மலர்.

அட்ட புஷ்பச் சின்னம்

இறைவனது திருமுடியை அழகு செய்யும் பொருட்களுள் ஊமத்த மலர் என்பது ஒன்று. இவற்றுடன் அஷ்டபுஷ்பங்கள் என்றழைக்கப்படும், பாகா, துரோனா, ஊமத்தை, சுமானா, பாடலம், பத்மம், உத்பாலம், கோதூர்யா

292. சோமசுந்தரம் - ப : 30
293. வேங்கடசாமி, ப : 31, 32
294. சோமசுந்தரம், ப : 31
295. சுவாகானந்தர், ப : 26
296. சிவராம ப : 31
297. அஃதே, ப : 110
298. அஃதே, ப : 88
299. அஃதே, ப : 87
300. அஃதே, ப : 83
301. பாட்டெண், 7:6:4

முதலிய எட்டு மலர்கள் இறைவனதுதிருமுடியை அலங்கரிப்பதுண்டு. இவ்வெட்டு மலர்களும் இறைவனது அட்ட மூர்த்தத் தன்மையினைக் காட்டுவன. செப்புச் சிலைகளில், இவ்வெட்டில், ஊமத்த மலரை மட்டும் எடுப்பாகக் காட்டுவதுண்டு.[302] எனவே இவ்வூமத்த மலர் அட்ட மூர்த்தச்சின்னம் என்பர்.[303] திருமந்திர உரை ஆசிரியர் உன்மத்தம் என்ற சொல்லுக்கு சீவர்கள் செயலற்று ஆட என்று பொருள் கூறுவார். உன்மத்தம் என்றால் பெருங்களிப்பு.[304] யோகிகள் எளிதில் சமாதி எய்த உன்மத்த மலரினைப் போதைப்பொருளாகப் பயன்படுத்துதல் உண்டு. ஊமத்த மலர் விருப்பு வெறுப்பற்ற தன்மையைக் குறிக்கும் என்பது முண்டு.[305] சுடலையாடியாய இறைவன் யாரும் விரும்பா எலும்பு, கபாலம் பாம்பு முதலியவற்றையே அணிகலன்களாகக் கொண்டவர். அது போன்றே யாரும் விரும்பா ஊமத்த மலர் அவர் சூடும் மலராகின்றது.

மயிலிறகு

இறைவனது திருமுடியில் அழகுற விசிறி போன்ற மயிலிறகு அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். அதே திருமுடியிலும் உடல்முழுவதும் பாம்புகள் விரவியுள்ளன. பாம்பிற்கு மயிலைக் கண்டால் அச்சம். இறைவனது திருமுடியில், மயிலிறகும், பாம்பும், இரண்டும் இடம் பெற்றன. பண்டைக் காலத்து இறந்தோரது தாழியில் சேர்த்துப் புதைக்கப்பட்ட பாத்திரங்களில் மேற்செல்லும் உயிருக்கு அடையாளமாக மயில் படம் வரைதல் மரபு. யோகத்தின் முடிவில் உயிர் ஒளியாக மேற்செல்லலை மயிலிறகு குறிப்பதாகவும் இருக்கலாம். அழகு செய்ய மலர்களைப் பயன்படுத்துவது செல்வர் நிலை. வேடர் போன்ற மக்கள் மயிலிறகைப் பயன்படுத்துவதுண்டு. எரியாடல், வெறியாடல், சுடலையாடல் போன்ற நிலையில் உள்ள இறைவர்க்குத் தொன்மை நாட்டுப்புற வழக்கில் மயிலிறகு அணியும் மரபு ஏற்பட்டிருக்க வேண்டும். இறைவன் மயிலிறகைச் சூடியிருத்தல் அர்ச்சுனனை வெல்ல சிவன் கிராதனாக வந்த வேடத்தின் சின்னம் எனக் கருதப்படுவது முண்டு.[306]

சோம, சூரிய, அக்கினி என்ற மூன்று ஒளிப் பொருட்களை இறைவன் திருமுடியில் சூடியதாகக் கொண்டு அர்க்க மலரைச் சூரியனாகவும், மயிலிறகை அக்கினியாகவும் கொள்ளலாம் என்ற கருத்தும் உள்ளது.[307] மயிலிறகும் கொக்கிறகும் மன்னர்களின் முடிகளில் இடம்பெறும் அழகுப் பொருள்கள். மயிலிறகு கிராதனாக வந்த சிவ பெருமான் அணிந்தது. வேடர் சின்னம். நாட்டிய வகையில் தேசி என்னும் கிராமிய நடனக் கோல ஒப்பனைப் பொருள்களுள் ஒன்று.[308] சோம, சூரிய, அக்கினி என்ற மூன்றனுள் மயிலிறகு சூரியனைக் குறிக்கும் என்ற கருத்தும் உண்டு.[309]

கொக்கிறகு

குண்டாசுரன் என்னும் ஓரசுரன் கொக்கு உருவாயிருந்து அண்டமனைத்தையும் கொறித்துக், கொறித்து, தேவர்களை வருத்தி வந்தமையால் சிவபெருமான் அவனைச் சம்காரம் செய்து அவனது இறகை அணிந்திருந்தருளினார் எனச் சித்தாந்த சைவ வினாவிடை புகல்கின்றது.[310] கொக்கிறகு மன்னர்களின் மகுடங்களில் இடம்பெறும், அழகிய பொருள். கொக்கிறகினை

---

302. சிவராம, ப : 94
303. திருமந்திரம் 2751
304. அஃதே
305. தேசிகர், ப : 99
306. சிவராம, ப : 94
307. சாமு ப : 91
308. சிவராம, ப : 94
309. சாமு ப : 91

இறைவனின் முடியில் வரிசையாக விசிறி போல் அமைக்க வேண்டும் எனச் சிற்பச் செந்நூல் செப்பும்

கொன்றை மலர்

சிவனுக்கு உகந்த மலர்களில் கொன்றை மலர் ஒன்று. சிவனாரின் சடைக்கற்றைகட்கிடையே அழகுடன் பரவலாக அமைக்கப்பட்டிருப்பது கொன்றை மலர், சிதம்பர இரகசியத் தானத்தில் தங்கத் தளங்களாகத் தொங் குவனவற்றை வில்வதளம் என்றும், கொன்றை மலர் என்றும் கூறுவர். நடராசப் பெருமானின் தரிசனத்தின் போதும், தேர் பவனியின் போதும் பின்னழகிலும் இவ்வினிய மலரமைப்பு தோன்றும். இம்மலரை இறைவ னுக்குச் சாத்துபவர்கள் சாலோக சாமீப சாரூப சாயுச்ய பதவிகளை அடைவர் எனப் புஷ்ப பலன் கூறும்.

நீறு

லய சிருஷ்டிக் குறி

திருநீறு சைவ சமயத்தின் சிறப்புப் பிரசாதம். இது சமயத்தின் சிருஷ்டி லயக் கிரமத் தத்துவங்கட்கும், முப்பொருள் உண்மைக்கும் அறிகுறியாயமை வது, எல்லாவற்றிற்கும் மேலாக ஒப்புயர்வற்ற சிவ சின்னம். ஐந்தொழில் நடமிடும் ஐயற்கு மேனியை அழகு படுத்தும் சுன்னமும் வண்ணமுமாகத் திகழ்வது இத்திருநீறே.

பாராவணம்

இறைவன் தன் உடலில் ஒரு பாதியை இறைவிக்கு அளித்தார். அவர் தம் உடல் முழுவதும் நீறு பூசிப் பொடியாடியுள்ளார். சம்மந்தர் இதனைப் "பாரவணமாவது நீறு" என்பார். இப்பொடி யாடிய நீறு அர்த்த நாரியான இறைவி இறைவனின் உடல் முழுவதையும் ஆக்கிரமித்துள்ள அழகினைக் காட்டுவது எனலாம். இது பராசக்தியின் வியாபக நிலை.

பாப விமோசனம்

நடனத்தின் தொடக்கத்தில், உடல் ஆடத் தொடங்கியவுடன் இறைவனது உறுப்புகலினின்று திருநீறு மேகங்களாகப் பரவிச் சிதறி, தேவருலகப் பெருமை வாய்ந்த கங்கை தூநீர்த் திவலைகளுடன் எல்லாத் திசைகளிலும் தெளிக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சி மூவுலகங்களும் தன் உருவைப் பெறுவ தற்கு முன்பே அவற்றின் இடுக்கண்களைக் களைவதற்கு இறைவன் எடுத்த ஆயத்தம் போன்றுள்ளது என சமஸ்கிருதக் கவிஞர் மங்கா அவர்கள் ஸ்ரீகாந்த சரிதத்தில் குறிப்பிடுகின்றார்கள்.[311] கவியரசன் காளிதாசன் இன் னும் ஒருபடி மிஞ்சி இத்திருநீறு நன்காட்டிலிருந்து வந்ததாயிருப்பினும் மங்கலத் தூய்மையுடையதாகையால் தேவர்களும் தங்கள் பாவத்தைப் போக் கிக் கொண்டு தூய்மை பெற பக்தி சிரத்தையோடு இதனைத் தம் சிரசில் அணிகின்றார்கள் எனக் குமார சம்பவத்தில் குறிப்பிடுகிறார்.[312]

உற்பத்தித் திட்டம்

இறைவனது திருநடனத்தின் போது, ஆங்கிக அசைவுகளின் போது அவரது திருக்கரங்களிலிருந்து திருநீறு சிதறிப் பலவிடங்களிலும் விழுவது இப்பிரபஞ்சத்தின் உற்பத்திக்குத் திட்டமிட்டு இறைவன் வரை கோடுகள் அமைப்பது போன்று அமைகிறது எனத் திலக மஞ்சரி எனும் சமஸ்கிருத

310. சித்தாந்த சைவ வினா விடை, ப : 98 311. சிவராம, ப : 107

நூல் நவில்கின்றது.[313]

வெற்றிக் கொடி

பாணகவி தமது ஹர சரிதத்தில் இறைவனது நுதலில் விளங்கும் மூன்று கோடுகளாகத் திகழும் திரிபுண்டரம், தவ வலியாலும், துறவுத் தூய்மையாலும், மூவுலகையும் சிவன் வென்ற வெற்றிகளைக் குறிக்கும் மூன்று வெற்றிக் கொடிகளை ஒக்கும் என்பார்.[314]

புனிதக் கொடை

தத்வார்யஸ்தவம் என்ற சிதம்பரத் தோத்திர நூல் ஒன்றில், இறைவன் திருநடனத்தின் போது இடப்பாகச் சிவகாம வல்லியின் மார்பகத்திருக்கும் குங்குமமும், இறைவன் வலப்பாகத்துள்ள திருநீறும் இரண்டும் தன் மீது விழுந்து தன்னைப் புனிதப் படுத்துவதாகப் புகழப்படுகின்றது.[315]

திரிசத்யம்

திரிபுரண்டரத் தானம் விளக்கமாக அமைய வேண்டும் எனச் சிற்ப நூல்கள் கூறுவன. காதம்பரியில் கவிஞர் மூன்று விரல்களால் இடப்படும் இத்திரு நீற்றின் மூன்று கோடுகளும் சிந்தனை, சொல் செயல் என்ற திரிசத்யங்களைக் கூறுதல் என்று குறிப்பிடுகின்றார்.[316]

முப்பொருள்

பசுவின் மலத்தையும், உணவாம் நெல்லின் உமிக் கருவையும் நந்நாளில் புடம் போட்டு எடுப்பது திரு நீறு. பசுவாகிய உயிரின் மலமாகிய பாசத்தையும் நல்வினை தீவினைகளின் கருவையும் போக்குவது என்ற பொருளில் 'பாசமும் அங்கது கழியப் பண்ணும்' என்பர் கோயிற்புராண ஆசிரியர், முப்பொருள் உண்மையின் சின்னமாக அமைவதால் இதனைத் திரிபுண்டரம் என்பர்.[317]

நித்தியத் தன்மை

இறைவனைச் சுடலையாடி என்பர். சுருக்கம் என்னும் லயமும், பெருக்கம் என்னும் சிருஷ்டியும் நன்காட்டில் அமைவனவே. மும்மலக் கோட்டைகளை நுதல் விழியால் எரித்த பாண்டரங்கத்துக் கிடைத்ததும் இத்திருநீறே. மலங்களை எரித்தவுடன் எஞ்சுவது சுட்ட சாம்பலே. இத்திரு நீற்றை மேலும் சுடினும் அதன் தன்மை நிறம் மாறுவதில்லை. இறைவன் தானும் தன்னைச் சார்ந்த பொருளும் அநாதி நித்தியமானவை என்னும் பொருளை இத்திருநீறு சுட்டுவதென்பதும் உண்டு.[318]

தூய்மை நிலை

ஐம்பூதப் புணர்ப்பினாலாய பருப் பொருட்கள், பெருக்கச் சுருக்கத் தன்மை உடையன. எரித்த பின் எல்லாப் பொருளும் சாம்பலாகின்றன. நீறாகின்றன. அது தூய்மை நிலை.[319]

அக்குமணி

அனைத்துயிர்கள் மாட்டும் வைக்கும் கண்ணோட்டத்தின் அடையாளமாகத் திகழ்வது அக்குமணி என்னும் சிவமணி. இது சிவ சின்னம். இதனைக் கண்மணி மாலை திரு அடையாள மாலை என்றெல்லாம் மொழிவர்.[320]

312. அஃதே. ப : 107
313. அஃதே. ப : 36.
314. அஃதே. ப : 94
315. அஃதே. ப : 131
316. அஃதே. ப : 72, 94
317. வேங்கடசாமி ப : 14, 31
318. வேங்கடசாமி, ப : 14 தேசிகர் ப : 100
319. பழனி மலர், ப : 196

ஞான சம்மந்த அடிகள் "நெக்குளார்வங் கொடு அக்குமாலை கொண்டங் கையில் எண்ணுவார் தக்க வானவராய்த் தருவிப்பது" என்பார். அக்குமாலை இறைவன் தன் பக்தர்கள் மீது வைத்த கருணையால் அவர்கட்கு எதிரிகள் கொடுக்கும் துன்பத்தை நினைந்து வடித்த கண்ணீரின் தொகுப்பு, திரவ நிலையிலிருந்து, திடமான அமைப்பாய், அக்குமணி ஆன தென்பர்.[321]

நீலகண்டம்

பாற்கடலைக் கடையும் போது எழுந்த அமுதத்தைத் தேவர்கள் பகிர்ந்து கொண்டனர். ஆலகால நஞ்சினை யாரும் கொள்ளாமையால் தானே கொண்டு, அதனை, உண்டு கண்டத்தில் வைத்தார். அமுதம் உண்டு அமரரான தேவர்கள் இருக்க, நஞ்சை உண்டு நலியாது முழுமுதற் கடவுளாக இருக்கும் பெருமை நஞ்சுண்ட கண்டர்க்குரியது. இறைவன் அந் நஞ்சினை உண்டிலனேல், அதன் கொடுமையைத் தாங்க வல்லாரில்லை. தேவர்க்கும் அசுரர்க்கும் யாவர்க்கும் அருள் புரியும் அருளாற்றலை நீலகண்டம் குறிக்கும்.

கபாலம் - கபாலமாலை

பிரம்ம உலகு

இறைவனது திருமுடியில் ஒரு பிரம்ம கபாலம் பல்லிழந்த நிலையில் உள்ளது. அவரது கழுத்தினை முப்பத்திரண்டு பிரம்ம கபாலங்களை உடைய மாலை ஒன்று அழகு செய்கின்றது. இறைவன் பிச்சை புகுகையில் கபாலம் ஒன்றினை, பிச்சைப் பாத்திரமாக ஏற்பார். இறைவன் கழுத்து மாலையில் உள்ள பிரம்ம கபாலங்களின் எண்ணிக்கையை இருபத்தொன்று என்றும் முப்பத்திரண்டென்றும் இருவகையாகக் கூறுவர். இப்பிரம்ம கபால மாலையில் ஆதி வராகக் கொம்பும், கலந்திருக்கும். இப்பிரம்ம கபாலங்களைக் கட்டிக் கோர்த்து வைக்க, பாம்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. நம் நடராசப் பெருமான் விசித்திர சித்திரன். ஆகையால் அவருடைய முக்கிய அணியே விசித்திரமாக உள்ளது. இறைவனது திருமுடிக்கண் உள்ள சந்திரன் அமிர்த தாரகைகளை உமிழ்கிறது. பல்வேறு பிரம்ம யுகங்களில் செயல்பட்ட பிரம்மனது கபாலங்கள் இவ்வமிர்த தாரகைகள் பட்டு உயிர் பெற்று விடுகின்றன. இம் மாலையினைக் கட்டியுள்ள பாம்பு நெருக்குகின்றது. பிரம்ம கபாலங்கள் துயர் மறக்க இரிக் சாம வேதங்களைப் பாடத் தொடங்குகின்றன. வேத கோஷம் விண்ணதிர்கின்றது. இறைவனது நடன வேகத்திடையே இப்பிரம்ம கபாலங்கள் ஒரு தனி உலகாக அமைந்து அவண் நித்ய கருமங்ளை செய்யத் தொடங்குகின்றன. வேதம் பாடுபவர்கள் கங்கையின் நீர்த்துளிகளில் நீராடிக் கடன் இயற்றுகின்றனர். இதனை "நதியதனயலே நகுதலை மாலை நான் மதிச் சடைமிசை அணிந்து" எனத் திருஞானசம்பந்தர் பாடுவார். உறர விஜயம், சதுக்திகர்ணாமிர்தம் முதலிய சம்ஸ்கிருத நூல்களும் இவ்வாறே புகல்கின்றன.[322] பிரம்ம கபாலங்களும், ஆதிவராகக் கொம்பும், பிரம்மாக்களும், ஆதிவராக மூர்த்திகளும் கருத்தாக்கள் அன்று கருவிகளே என்பதைச் சுட்டுவதோடு, எண்ணற்ற பிரம்ம கற்பங்களையும், ஆதிவராகக் கற்பங்களையும் ஆய காலங்களைக் கடந்து நித்தியமான, ஆதிகருத்தாவாகவும், காரிய கர்த்தாக்களாகிய பிரமனாதியரைப் படைத்து அளித்துச் செயல்படுத்தும் இவனே மூலகர்த்தா என்பதையும் குறிப்பன என்பதை குஞ்சிதாங்கிரி ஸ்தவமும் பிற நூல்களும் குறிப்பிடுகின்றன.[323]

320. அக்தே. ப : 197 321. சோமசுந்தரம். ப : 35 322. சிவராம. ப : 108

காபாலம் இறைவன் விருப்பு, வெறுப்பு அற்றவர் என்பதற்கு அடையாளம் என்பதும் உண்டு.[324] கற்பக் கழிவு, வேத கோஷம், அமிர்த தாரகையின் உயிர்ப்பு என்பன மிக்குயர்ந்த தத்துவப் பின்னணிகள்.. சிதம்பரம் சிற்சபையில் ஆனந்த நடராசப் பெருமான் தங்கத்திலான[325] கபாலங்களுடைய அழகிய மாலை அணிந்து ஆடுகின்றார். இறைவனின் சிகை சக்கரத்தில் அமைந்துள்ள நான்முகன் மண்டையோடு, அழிப்பும் மாயாகாரியப் பொருட்களும் சிவபெருமான் கையதேல் அவை அழிவினை எய்தாதென்னும் பெற்றி காட்டும் சின்னமாகவும், படைத்தல் தொழில் செய்யும் பிரம்மனுக்கும் இறுதியுண்டென்பதையும் காட்டுவது என்பர்.[325]

பூணூல்

வேதாந்தம்

இறைவனுடைய திருமார்பில் குறுக்காக உந்தி வரை பூணூல் ஒளிரும்.[326] நூலது வேதாந்தம் எனத் திருமந்திரம் கூறும். வேதாந்தத்தின் முடிவாகிய பிரணவ காயத்திரியை இது குறிப்பதாகக் குறிப்பதும் உண்டு.[327]

குண்டலினி

மூலாதாரத்துக்கு மேலாக எழுந்து நாபிக்கு மேலாகக் கிளர்ந்தெழும் குண்டலினியைக் குறிப்பது என்பதும் உண்டு.[328]

நாயகத் தன்மை

எந்தச் சடங்காயினும் எச்சாதியினராயினும் சைவர்கள் சடங்கு களின் போது பூணூல் அணிதல் மரபு. இது நாயகத் தன்மைக்காக.[329] பூணூலில் முப்புரி அமைவதும் உண்டு. தொண்ணூற்றாறு நூற்பிரிகள் அமைவதும் உண்டு. தொண்ணூற்றாறு தத்துவத்தைத் தொண்ணூற்றாறு நூற்புரிகள் குறிப்பன என்பர்.

திருக்கைகள்

சிவபெருமானின் திருக்கோலங்களுள் தத்துவப் பொருட்பொதிவும் அழகும் மிக்கது ஆனந்த தாண்டவக் கோலம். ஆனந்த தாண்டவக் கோலத்துக்கு முன் அட்ட வீரட்டத் திருக்கோலங்களும், பிற நடனக் கோலங்களும் கூட அமைந்துள்ளன. ஆனந்த தாண்டவக் கோலத்துக்கு நான்கு திருக்கைகள். செப்புப் படிமம் வளரும் காலத்தில் கைகளின் எண்ணிக்கை நான்குக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நான்கு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினான்கு, பதினாறு, பதினெட்டு கைகளை உடைய நடனச் சிற்பங்கள் பல உள. இறைவனுக்கு இரண்டுக்கு மேற்பட்ட திருக்கைகளை அமைப்பது அவரது பராக்கிரமத்தைப் பக்தர்க்கு உணர்த்துவதற்கு என்பர்.

புஜ தாரு வனம்

கவியரசர் காளிதாசர் இறைவனது திருக்கையின் எண்ணிக்கை மிகு தியைவைத்து மகாகாளரின் சந்தியா நடனத்தை வருணிக்கையில் சிவனது கைகள் ஒரு வனம் போன்று அமைந்துள்ளன என்பர்.[330] சமஸ்கிருத இலக்கிய மரபில் இறைவனது திருக்கைகளை புஜ தாரு வனம் என்னும் மரபுண்டு. இரத்னாகரர் தமது ஹர விஜயத்தில் புஜ தாரு வனம் போன்ற

323. தேசிகர், ப : 104
324. அஃதே, ப : 105
325. திருமந்திரம் 357 (கழகப் பதிப்பு)
326. தேசிகர், ப : 102
327. அஃதே, ப : 102-03
328. அஃதே, ப : 102-03
329. நாட்டு வழக்கு

கைகளில், கரும் பாம்புகள் கங்கணங்களாய் அமைய, அப்பாம்புகளின் படங் களில் அமைந்த நவரத்தினங்களின் செவ்வொளி, யுக முடிவுக் காலத்தில் கிளம்பும் புகையும், தீயொளியும் போன்று சிகப்பாகத் தோன்றின என்பார்.[331] நள சம்புவில் கைகள் சுழலும் போது, அந்த இசைச் சீருக்கு ஏற்ப அவை அசைய அவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பன ஏதும் புரியவில்லை. கண்ணில் சிகப்பு, வெள்ளை கருப்பு ஒளிக் கீற்றுக்களும், நஞ்சுண்ட கண் டத்தின் நீலநிறமும் மட்டும் தான் தெரிந்தும் தெரியாமலும் தெரிந்தன" என்பார்.[332] ஹர விஜயம், "சிவனின், விபூதி பூசிய, கைகள், வானத்தில், அலைகள் போன்று அசையும் போது, பாற்கடலில் பொங்கிப் பெருகும் பல கங்கைகளின் நீரோட்டங்கள் இணைந்தன போன்றிருந்தது" என்று போற் றும்.[333] சாரங்கதர பத்ததியில், பேரிபங்காரர் இயற்றியதாகக் குறிக்கப் பெறும் பாடலொன்றில் சிவனுடைய வேக நடனத்தின் வருணனையொன்று வருகின்றது. தாண்டவ அசைவுகளின் போது ஓசையுடனமைந்த கைகளின் விளையாட்டான அசைவில் மலை முகடுகள் வெடிபட்டன. கடல் நீர் பொங் கிப் பெருகியமை இறைவனது தலை முடியில் வான் நதியான கங்கையின் சங்கமம் நடைபெறுவது போன்றிருந்தது. ஆயிரக் கணக்கான விண்மீன்கள் இறைவனது சடைக் கற்றைகளில் உராய்வது மலர் மழை பொழிவது போன் றி ருந்தது, என்று வளர்கிறது வருணனை.[334] இவண் கைகளின் வேக அசைவால் மலை, கடல், வானம் முதலியவற்றின் அசைவுகளைக் காட்டி விராட்புருடத் தன்மையை விளக்குவர். இது போன்ற வருணனைகள் ஹர விஜயத்திலும் வருகின்றன.[335]

விதைப் பாண்டம்

சிவனின் தாமரை மலர் போன்ற உள்ளங்கைகளை உடைய கைகள், பிரபஞ்ச மாகிய தாமரையின் இதழ்களைப் போன்று சுழல்கின்றன. நட னத்தின் இடமாயமைந்த பொன்னிறமான மேரு மலை பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமான விதைப் பாண்டம் போன்று தோன்றுகிறது என ஹர விஜயம் கூறும்.[336] இவண் பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமான செயல்களில், இறைவனது திருக்கரங்கட்கு உள்ள செயற்பாடு குறிக்கப் பட் டது. பாதாமி, ஐகோளே பட்டடக்கல், புவனேஸ்வர் போன்ற இடங்களில் உள்ள நடராசர் சிற்பங்களில் எண்ணிக்கையில் மிகுந்த கைகளைக் காண் கிறோம்.

திசைகள்

நற்றிணை கடவுள் வாழ்த்துப் பாடலில் பெருந்தேவனார், விசும்பினை இறைவனது திருமேனியாகவும், திசைகளை அவருடைய கைகளாகவும் கூறு கின்றார்.

" திசை தோள்" என்பார் சேரமான் பெருமாள் நாயனார்.[337]

" எண்டிசை எண்தோள் " என்றார் பட்டினத்தடிகள்.[338]

" திசைகள் எட்டும் திருக்கைகள் " என்பது திருமந்திரம்.

" பத்துத் திசைகளும் பத்துக் கைகளாகும் " என்பது காமிகம்.[339]

330. சிவராம, ப : 103
331. சிவராம, ப : 103
332. சிவராம, ப : 104-05
333. சிவராம, ப : 110
334. சிவராம, ப : 100
335. சிவராம, ப : 100
336. சிவராம, ப : 112
337. பொன் வண்ணத்தந்தாதி
338. ஒருபா ஒரு பஃது

எண் திசைகட்கு மேல் பத்து என்றது மேல் கீழ் என்ற வானம், பூமியைச் சேர்த்ததாகும். சிவனாரது எட்டுக் கைகள் ஒரு சக்கரத்தின் ஆரைக் கால்கள் போன்றமைகின்றன என்ற கருத்து உபநிடதம் ஒன்றில் காணப்படுகின்றது. இது ஒழுங்கான இயக்கத்தின் சின்னம்.

அரவணி

எல்லாம் பாம்பு மயம்

தாயுமான அடிகள் இறைவன் "மெய்யில் அணிவதும் பாம்பு, மலை வில்லினில் நாணாய் விசிப்பதும் பாம்பு, கையில் பிடிப்பதும் பாம்பு. அவர் காட்டின நடனம் காண்பதும் பதஞ்சலியாகிய பாம்பு " எனப்பாடுவார். சிவபெருமானின் அழகு, அணி, செயல் யாவற்றிலும் பாம்பிற்குச் சிறப் பிடம் உண்டு. குஞ்சிதாங்கிரிஸ்தவம் பாம்பணிகள் உமிழும் நாகரத்தினங்களின் ஒளியினால் இறைவனுடைய இயற்கை காந்தி இரட்டிப் பாகின்றது என்று போற்றும்.

நாக சக்தி

கம்பீர வடிவான நாகசக்தியானது யாவற்றையும் நியமிப்பது என்னும் கருத்தைக் காமிகாகமம் கூறுகிறது.[340]

காத்தல் சக்தி

திருநாவுக்கரசர், இறைவன் பொறி வாயரவம் சேர்ப்பது வானத் திரை கடல் சூழுலகம் இதனைக் காப்பது காரணமாக என்பார். அரவம் காத்தல் சக்தி, இவண் இது குண்டலினி சக்தியினைக் குறிக்கும்.[341]

குண்டலினி சக்தி

இறைவனது திருக்கைகளிலும், அரையிலும், தலை முடியிலும், சடை இடையேயும், முயலகன் வசமும் எங்கும் நாக மயமாக இருப்பது எங்கும் பரவியுள்ள குண்டலினி சக்தியைக் குறிப்பதே.

சீவாத்மா

பரமாத்மாவாய ஈசன் மேல் சீவாத்மா தவழ்வதாகக் குறிப்பிட்டு பாம் பினைச் சீவாத்மா என்பதும் உண்டு.[342] "அரை மிசை அஞ்சு போலரை யார்த் தீன்றத்துவம்" எனப் புகன்றார் அப்பர். உயிர் தூலவுடம்பினை விடுத்து மேற் செல்லலைப் பாம்பு தன் சட்டையினைக் கழற்றுவதற்குக் காட்டாகக் கூறி பாம்பு சீவன் என்பது முண்டு.[343]

நாக சக்தி

காமிகம் அர்ச்சனா விதிப்படலத்தில் இறைவன் அணிந்துள்ள நாக சக்தி அனைத்துலகையும் நியமிக்கிறது என்று கூறுகின்றது.[344]

அடியவர்க்கெளியன்

யோகிகள், நோன்பிகள் காற்றையே உணவாகக் கொண்டு வாழ்வார். நாகமும் காற்றை உணவாகக் கொள்வது. பாம்பணி கொண்ட பரமன் அடியவர்க்கு அளியன், எளியன், என்பதனை இது காட்டும் என்பர்.[345] இறைவனது கண்டத்தில் அரவின் நஞ்சுள்ளதால் நஞ்சுண்ட கண்டன் என் போம். ஆலகால விடத்தையே உண்டவர், பிட்சாடனத் திருவுருவில் இடைக்

339. அர்சனா விதிப்படலம்
340. வேங்கடசாமி, ப : 36
341. அஃதே, ப : 36
342. பழனி மலர், ப : 197
343. அஃதே, ப : 14
344. வேங்கடசாமி ப : 36

கச்சையாகப் பாம்பணிந்தார். பல்வேறு அணிகளாக அரவு இடம் கொண்டதன்றி சில சிற்பங்களில் கையில் படைக் கருவியாக அரவு பிடித்த நிலையையும் பார்க்கிறோம்.

அமிர்தப் பொழிவு

யோக நெறியில் குண்டலினி சக்தியைச் சுருண்ட பாம்பு வளையம் எனக் குறிப்பர். அரவு சீறுவது போன்று குண்டலினி சக்தி சீறி ஆறாதாரங்களில் எழும். ஆக்ஞாவுக்கு மேல் குண்டலினி சக்தி ஏறுகையில் உள்நாக்கு வழியாகவும், மேலன்னம் வழியாகவும், பிரமரந்திர வழியாகவும், அமிர்தம் சொட்டும் என்பர். இவண் பாம்புகளைக் குண்டலினி சக்தியாகக் கொள்வர்.[346] இதனைப் பிரபஞ்சப் பேராற்றல் என்பாரும் உண்டு.

மேல்பிடித்த பாம்பு

புவனேஸ்வரில் உள்ள முக்தேசுவரர் திருக்கோயில், ஆந்திராவில் உள்ள முகலிங்கம் ஊரில் உள்ள முக்தேசுவரர் திருக்கோயில், பாதாமி குகைக் கோயில், ஐகோளே குகைக் கோயில், பட்டடைக்கல் விருப்பாட்ச கோயில், இராஜஸ்தானத்து அர்துனம் கோயில், இராஜஸ்தானத்து புந்தியிலுள்ள சுகுமகான் திருக் கோயில், குவாலியர் பொருட்காட்சிச் சாலை, உத்தரப் பிரதேச லக்க மாண்டல், ஆந்திராவில் உள்ள ஆலம்பூர் சுவர்க ஆலயம், காஞ்சி முக்தேஸ்வரர் கோயில், முதலிய கோயில்களில் உள்ள நடராசச் சிலைகள் தம் தலைக்கு மேல் இருகைகளாலும் ஒரு பாம்பைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளன. ஒடிசி நடன முறையில் நடராசர் தலைக்கு மேல் பாம்பினைப் பிடித்திருப்பதை அபிநயிப்பதுண்டு.[347] திருமந்திரம் பாம்பு ஒன்று, அதன் படங்கள் ஐந்து, அது துய்ப்பது நான்கு, அது புழையில் இரண்டாக இருக்கும் எனக் கூறுவது காரண சூக்கும சரீரங்களைக் குறிக்கும்.[348]

புலியுரி

யோகச் சின்னம்

பீதாம்பரதாரியாகப் பேரழகுடன் நிகழும் திருமால் நமது காத்தற் கடவுள். மூலப் பொருளாய் முழுமுதலாய்த் திகழும் நமது சிவபெருமானின் ஆடைகள் புலித்தோல், சிங்கத் தோல், யானைத் தோல் முதலியன. வங்கத்தில் ஊர்த்துவ சிவனாக ஆடையன்றி திகம்பர சிவத்தையும் வழிபடுகிறோம், பிட்சாடனர் திருக்கோலம் ஒரு பேரழகுத் திருக்கோலம். இமயம் தொட்டு குமரிவரை உள்ள துறவிகள், யோகிகள் கோவணம், புலித்தோல், மான்தோல் முதலியவற்றோடு தொடர்புடையவர்கள்.

ஆணவ அகற்றல்

தாருக வனத்து முனிவர்கள் ஏவிய புலி இறைவனது அரைக்கச்சைக்குத் தோல் உதவியது. தாருக வனத்து ரிஷி பத்தினிகள் நிறை அழிந்தனர். தபோதனர் பொறையும், நிறையும், அறிவும் இழந்தனர். முடிவில் ஆனந்த நடனம். தாருக வன முனிவர்கள் மல பரிபாகம் இன்றி, உண்மை ஞானம் உணராமல், கருமங்களில் மட்டும் நம்பிக்கை வைத்தனர். அபிசார ஓமம் செய்து பிட்சாடான உருவில் வந்த இறைவனைக் கொல்ல புலி, முயலகன் போன்ற பலவற்றை ஏவினர். இவண் புலி வேகமழிந்து இறை

345. தேசிகர், ப : 105
346. சானு, ப : 95
347. கேஸ்டன், ப : 118

வனை அலங்கரிக்கும் அரை ஆடை ஆயது. முனிவர்களின் ஆணவப் புலியின் வலியும் வேகமும் இறைவனது கருணை மறத்தின் முன் ஆற்றல் இழந்தன. தூய்மை பெற்றன. புலி குரோதத்தைக் குறித்ததெனின் புலித் தோலாடை குரோதமின்மையைக் குறித்தது. முனிவர்கள் ஆணவம் அழிந்து வழிபட்ட போது சிவஸ்வரூபம் தாண்டவக் கோலம் காட்டியது ஆணவம் அகன்ற உயிர் இறையருள் பெறுவதைக் குறிக்கும்.

கர்ம மலம்

யானை உரி மாயா மலத்தையும், புலியுரி கர்ம மலத்தையும் குறிக்கும் என்பர். ஆகாமியவினை முளைக்காதிருக்க கர்ம பலத்தை வறுத்த விதை போல் ஆக்க வேண்டும் என்பர். இவண் புலி வேகமழிந்து ஆடையாகி ஆகாம்யம் இழந்தது எனலாம்.[349]

அகங்கார அகற்றல்

அகங்காரம் புலியைப் போல் கொடியது. முனிவர்களில் அகங்காரமே அபிசார ஹோமப்புலி. அகங்காரத்தைக் கொன்று அரைக்கசைத்த நிலையே புலித் தோலாடை என்பர்.[350]

மணி

திறன் அறிகுறி

இறைவன் பாதங்களில், கெண்டைக் காலில் மணிகளைக் கட்டிக் கொண்டுள்ளார். கிராமிய நடனக் கலைஞர்கள் இவ்வாறு மணி அணிந்திருப்பர். இம்மணி கிராமிய நடனக் கலைஞர்களின் திறனுக்கு அறிகுறி. பெருவீரர்களும் காலில் மணி அணிவதுண்டு.

மந்திர உரு

இறைவனை எட்டுக்கு மேற்கொண்ட திருக்கரங்களோடு படைத்த கோலங்களில் ஒரு கையில் மணி இருப்பதைப் பார்க்கிறோம். கைமணி பூசைக்குரியது. மகிழ்வைக் குறிக்க ஒலிப்பது உண்டு. அகோர நடனம் வெற்றி நடனம் முதலியவற்றின் போது கைமணி ஓசையின் பொருள் வேறாகலாம். நாத ரூபமான மணி ஏந்தி நிற்பது இறைவனின் மந்திர உருவைக் குறிக்கும் எனக் காமிகம் கூறும் என்பர்.[351] நாத தத்துவத்திற்குத் தலைவர் தாம் என்பதை உணர்த்துவது இறைவன் மணியை ஏந்தியிருப்பது என்பதும் உண்டு.[352] மணி ஓங்கார ஒலியுடையது. அதனைத் தாங்கி அவ் வோசையை எழுப்பி உயிர்கட்கு எப்போதும் பிரணவ நாத ஒலியைக் கேட்பித்து ஆடும் அருளாற்றலை இது விளக்கும் என்பதும் உண்டு.[353]

மறைச் சிலம்பு

கேளா ஒலி

யோக தியானத்தின் போது இறைவனின் திருவருட் கருணையினால் சங்கோசை, சிலம்போசை, மணியோசை முதலிய ஓசைகள் கேளா ஒலிகளாக, அநாகதம், விசுக்தி,ஆக்ஞா முதலிய நிலைகளில் கேட்பதுண்டு. அன்றும் இன்றும் தில்லை கூத்தப் பிரானின் திருவடிகளை வணங்கும் பக்தர்கள் பூசையின் போதும், தியானத்தின் போதும், வேண்டுதல் காலத்தும் சிலம்போசை கேட்டு வருவது இயல்பு.

---

348. திருமந்திரம் 1621
349. கோவிந்தசாமி, பொன்., திருசிற்றம்பலம் என்ற சிற்சபை, ப : 64
350. சித்பவானந்தர், ப : 148 சிவானந்தர், ப : 27 நஜுன், ப : 29
351. வேங்கடசாமி, ப : 341 : அர்சனா விதிப்படலம்
352. அஃதே

மறைகளின் ஒலி

சேக்கிழார் பெருமான் 'மறைச் சிலம்பார்ப்ப' என்பார்கள்.[354] திருமூலர் நான் மறைகளும் சிலம்பாக நின்றொலிப்பதாக நவின்றார்.[355] சிலம்பொலியின் விரிவே திருமுறைப் பாடல்களும் திருநடனங்களும், திருவடிப் பேறெய்த பக்தனை அழைக்கும் நல்வரவொலியே இச் சிலம்பொலி என்பர்.[356]

திருவடிச் சிறப்பு

சிதம்பரஸ்தவம் என்ற சமஸ்கிருத தோத்திரத்தில் சந்திர சூடியாக, சடாதரனாகவுள்ள சிதம்பரேஸ்வரர் அறிவாகாயத்தினைத் தன் சிலம்பின் அழகினால் ஒளிமயமாக்குகிறார். முராரியின் திருக்கண்கள் சிலம்பணிந்த திருவடிகளிற் பதிந்து நின்றது எனப் போற்றும். இது திருவடிச் சிறப்பு. சிதம்பரஸ்தவத்தின் இன்னொரு பாடலில் இறைவனது ஆனந்த நிருத்த சமயத்தில் அவரது பாதார விந்தங்களிலிருந்து வரும் இனிய மணியணி சிலம்போசை மனத்தளவில் பேரானந்தம் தந்து உன்மத்தமாக்கி, வியப்படையச் செய்து விடுகிறது. கண்ணுக்கு விருந்தாக இத் தரிசனம் நிறைவு செய்வதைவிடச் சிலம்பொலி வழி மேலான நிறைவைச் செய்வது என்பர்.[357] நடேசாஷ்டகம் இறைவனது குஞ்சிதபாதத்தின் இனிய சிலம்போசை மூவுலகிலுள்ள உயிர்த் தொகுதிகளையும் வீடுபேறெய்துவதற்காக அழைக்கின்றது எனப் போற்றும்.[358] திருவடிப் பேற்றுக்குச் சிலம்போசை அறிகுறியாவது இக்குறிப்பு.

கழல்

போற்றிப் பஃறொடை" கள்ள வினை வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக் கழல்" எனப் போற்றும். திருவடியின் ஒரு பகுதியே கழல் அணியும் விரல். எனவே இதுவும் திருவடிப் பேற்றையே சுட்டுவது எனினும், சிலம்பு ஓசையால் ஈர்த்தது. இது வெற்றி உறுதி எனக் காட்டுவது போலும். வீரக்கழல் வலக்கால் விரலில் அணியப்படுவது. முப்புரம் வென்ற முனிவனல்லவா நம் இறைவன். வீரன் கழல் காட்டி வீடு பேறளிக்க அழைக்கிறார் எனக் கொள்ளலாம்.

கமல பீடங்கள்

நடராசப் பெருமானின் வழிபாட்டில் மூன்று கமலங்கள் இடம் பெறுகின்றன. தகராகாச வழிபாட்டின் இடமாய இதயக் கமலம் முதலாவது. இதுவே அநாகதத்தானம். தில்லை கோவிந்தராசனையும் தில்லை நடராசரையும் ஒரே இடத்தில் நின்று வழிபடும் இடமாகிய சித்சபைக்கு எதிரேயுள்ள கமல பீடம் இரண்டாவது. தில்லை நடராசரின் திருவுருவப்படிமத்தின் அடிப் பகுதியில் அமைந்துள்ள தாமரைப் பீடம் மூன்றாவது. இப்பீடத்தின் மேல் முயலகனின் மீது நடனம் இயலுகின்றது. இம்மூன்று தாமரைப் பீடங்களுமே இதயக்கமலத்தை, தகராலயத்தைக் குறிப்பிடுவனவே. தகராகாசப் பெருவெளி இத்தகராகாய உள்ளீடு.

திருவாசி

அழகுத் தோற்றம்

ஆனந்த நடராச மூர்த்தியின் செப்புத் திருமேனியைக் காண்கையில் திருவாசி என்னும் அழகிய வட்டத்தினுள் இறைவன் கைகளையும் கால்க

353. தேசிகர், ப : 106
354. அஃதே, ப : 103
355. திருமந்திரம் 2735 (கழகப் பதிப்பு)
356. பழனிமலர், ப : 198
357. சிவராம 131

ளையும் அசைத்து, சடைமுடிக் கற்றைகள் பரந்தசைய, உதரபந்தம் உயர்ந்தாட ஓர் இயக்க நிலையில் பெருமான் சுற்றிச் சுழன்றாடுவது போன்ற தோற்றம் அமைவது இயற்கை. இத் திருவாசியின் மேல் தீச்சுடர்கள் ஒளிர்கின்றன. இரு அடிப்பகுதியிலும் மகரவாய்ப் பகுப்புக்கள் அழகுற அமைந்திருக்கின் றன.

மந்திரத் திருவுரு

குஞ்சிதாங்கிரிஸ்தவம், உண்மை விளக்கம் முதலிய நூல்கள், திருவாசி ஓங்கார உருவுடையது என்பன. திருவாசியில் அமைந்துள்ள தீச்சுடர்கள் த்வனி மந்திரங்களால் ஆயவை எனவும் குஞ்சிதாங்கிரிஸ்தவம் குறிக்கும். "ஓங்காரமே நல் திருவாசி உற்றதனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம்" என்பது உண்மை விளக்கம். ஓங்காரத்தின் விரிவே திருஐந்தெழுத்து. திரு வைந்தெழுத்தின் சமஷ்டியே ஓங்காரம். இவண் ஓங்காரமாகிய திருவாசிக்குள் திருஐந்தெழுத்து வடிவில் கூத்தப்பிரான் இயங்குகின்றார் என்பதே பொருள். ஓங்காரமாய நாத வடிவத்துக்குள் ஒளிவடிவாகியதிரு வைந்தெழுத்தாக இறைவன் இயங்குகிறான் என்பது கருத்து. நாதத்துக்கும், சோதிக்கும் உள்ள ஒற்றுமையை இது காட்டும். இறைவனது துடிக்கண் எழும் ஓங்கார ஓசை தோற்றமாகிய படைத்தலை இயக்குவது. படைக்கப்பட்ட உயிர் கட்கு இறைவனது தோற்றத்தைக் காண வழியாக மந்திரங்களாய ஓங்காரமும் திருவைந்தெழுத்தும் துணை புரிவது இயற்கை. இம் மந்திரங்கள் இவண் தோற்றத்திலும் இறைவனைக் காட்டுவன. இறைவனது ஐந்தொழிலுக்கு உத வுங்கால், துடியில் ஒலித்த ஓங்காரம், இவண் தியானத்தின் போது ஒலியாகவும், ஒளியாகவும் இறையுருவை உபாசகனுக்குக் காட்டுகிறது. அது தெய்வப் படிம நிலையிலும் பொருந்துகிறது.

திருவாசி மாயையின் உரு

திருவருட்பயன் "இறை சக்தி பாசம் எழில் மாயை ஆவி உற நிற்கும் ஓங்காரத்துள்" என்று குறிப்பிடுகையில் திருவைந்தெழுத்தின் நுண்ணிய நிலையாய ஓங்காரத்துள் இறை, சக்தி இரண்டோடு பாசம், மாயை, உயிர் என்ற மூன்றும் கூட வேற்றுமையின்றி உற நிற்கும் என்றார்.[359] இதனை வைத்து, இத்திருவாசி மாயையைக் குறிக்கும் என்பதும் உண்டு. ஆதி சங்கரர் அவர்கள் சுவர்ணமாலை தோத்திரத்தில் திருவாசியினை மாயை எனக் குறிப்பார்.[360] இம்மாயை, பிரணவத்தின் வழி, மறைப்பை நல்கி ஆனந்த நெறியில் பக்தனை வீடுபெற வழிப்படுத்தும் என்பார். ஓங்காரம் மாயை முதலியன ஒன்றுக்கொன்று காரண காரிய நெறிகளில் தொடர்புடைய னவே.

ஹிரண்ய கர்ப்பம்

ஹிரண்ய கர்ப்பம் என்ற தங்கமயமான முட்டை அண்டத்தைக் குறிக் கும். இத் தங்க முட்டையிலிருந்து பிரபஞ்சம் பிறக்கிறது என்பர். இத்தங்க முட்டையுள் இருந்து இறைவன் ஆடுவதாகக் காட்டுவதே திருவாசி என்பதும் உண்டு. திருவாசி சில சிற்பங்களில் முட்டை வடிவில் அமைவதுமுண்டு.[361]

பிருகிருதி

திருவாசி பிருகிருதியை உணர்த்தும் அடையாளம் என்றும் அதனுள் சிவனாரின் தலை, கால், கை முதலியவற்றைப் பரந்து ஒட்டியிருக்குமாறு அமைத்து, அதன்மூலம் பிருகிருதி முழுவதும் பரவியிருக்கும் புருஷனாக

358. சிவராம 133
359. பாட்டெண் சிதம்பரம் பதிப்பு 1965
360. சிவராம ப : 126, 182

இறைவன் உருவகிக்கப் பட்டுள்ளான் என்பதும் உண்டு.[362] பிருகிருதி என்பதை மாயை. சக்தி என்றெல்லாம் கொள்வதும் உண்டு.

ரவி மண்டலம்

இறைவனைச் சிவ சூரியன் என்பதும் உண்டு. இவண் சூரியன் என்பது பேரொளிப் பிழம்பு என்ற பொருளில். திருவாசியின் மேல் அமைந்த சுடர்கள் முதலியவற்றையும் மனதில் கொண்டு இத்திருவாசியினை ரவி மண்டலம் என்பாரும் உளர்.[363] திருவாசியின் சுடர்கள் தீச்சுடர்கள் போன்றமைந்ததுமுண்டு.

பிரபஞ்சக் குறி

இப்பிரபஞ்சத்தின் இயக்கமே நடராசத் திருக்கூத்து எனத் திருமந்திரம் முதலியன கூறுவதைக் காரணமாகக் கொண்டு. இத்திருவாசி பிரபஞ்சத்தின் சின்னம் என்பதும் உண்டு.[364] திருவாசி இறைவனைச் சுற்றியுள்ளதோ, இறைவன் பிரபஞ்சத்தைச் சுற்றிநிறைவு செய்கின் றாரோ எவ்வாறு கொள்ளினும், திருநடனம் எல்லாவற்றையும் ஒழுங்குற நிறுத்தி, இயக்கி ஐந்தொழிலியற்றும் அருளுடையது என்பதில் ஐயமில்லை.

சர்வ சம்பூர்ணம்

இறைவனது தலையணியாகவுள்ள இளம்பிறை நிறைவற்றது. அவர் கை ஆயுதமான கோடரி கைப்பிடி முறிந்தது, அவரது பிச்சைப் பாத்திரம் பிரம்மனின் அரைக் கபாலம், அவரது பூதகணங்களோ குள்ளமானவை, அழகற்றவை, அரை குறையானவை. ஆனால் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு நம்மிறைவன் சர்வ சம்பூர்ணவான் என்பதைக் காட்டுவதாயமைந்தது.[365] இறைவனைச் சுற்றியமையும் திருவாசி, சுடர் என ஹாலாயுத ஸ்தோத்திரம் நவில்கிறது என்பர்.[366] திருவாசியில் உள்ள சுடரின் எண்ணிக்கையைப் பற்றி இருபத்தொரு சுடர்கள் இருபத்தொரு த்வணிமந்திர எழுத்துக்களால் ஜ்வாலைகளுடன் திகழுவதாக குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும்.[367] பழைய ஆங்கில நூல் ஒன்று இருபத்தொன்பது சுடர்கள் எனக் கூறும். படிமத்துக்குப்படிமம் சுடர் எண்ணிக்கை வேறுபடுவதைக் காண்கிறோம். பதின்மூன்று சுடர் முதல் ஐம்பது சுடர்கள் வரை உள்ள சிலைகளைக் காணமுடிகின்றது. சிலையின் அளவுக்கு ஏற்ப சுடர்களின் எண்ணிக்கை மாறுவதாகக் கொள்ளலாம்.[368] பொதுவாக நடராசப் பெருமானின் திருவுருவை திருவாசி இல்லாத போதும். அருகில் சிவகாமி இல்லாத போதும் தரிசிப்பதில் பலன் இல்லை என்பது மரபு.[369] செப்புச் சிலைகளில் ஸ்திர அமைப்பிற்கும், தெய்விகத் தத்துவப் பெருமைக்கும், தியான பலன் மேம்பாட்டுக்கும் திருவாசி இன்றியமையாதது என்பது மறுக்க இயலாத ஒன்று.

இதுகாறும் சிவதாண்டவ மூர்த்தங்களில் விளங்கும் ஆங்கிக, ஆகார்ய உறுப்புக்கள் சிலவற்றின் நுண்மைத் தத்துவங்களைக் கண்டோம். சமய இலக்கியக் கடல்கட்குள் புகின் தத்துவ நிலை மேலும் விரியும் என்று கூறி முடிக்குதும்.

---

361. கோவிந்தசாமி, பொன்., திருசிற்றம்பலம் என்னும் சிற்சபை, ப : 64
362. கணபதி ஸ்தபதி, வை., சிற்ப செந்நூல், ப:17
363. நடராஜன், பி., பிரபஞ்ச நடனத் தலம், ப : 85
364. சோமசுந்தரம்., ப : 7-8
365. அஃதே, ப : 127
366. அஃதே, ப : 127
367. உமாபதிசிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம் ப:4 குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:4 பாட்டெண் 9
368. தர்ஸ்டன், எட்கர், ஹேடவே, எ.எஸ்., தென்னிந்திய செம்பு பித்தளை சிற்பங்கள், சென்னை, 1913 ப : 70-71

.144 சிவதாண்டமும் பிரபஞ்ச இயலும்

பிரபஞ்ச இயக்க அடிப்படை

நடராசத் தத்துவத்தின் உட்கிடையான பிரபஞ்ச இயக்கத்தின் விஞ்ஞான விளக்க, ஒற்றுமைகளை ரஸ்தம் மேதா, குபில், இராஜ்கமால் முகர்ஜி, மைக்கேல் மெய்ஸ்டர், பிரோஜேஷ் பானர்ஜி போன்ற அறிஞர்கள் தம் நூல்களில் பொதுப்படையாக விளக்கியுள்ளார்கள். இந்தியாவின் தொன்மை வாய்ந்த வேதம், உபநிடதங்கள், ஆகமங்கள், பிற சமய சாத்திரங்கள் முதலியவற்றின் உட்கிடை விஞ்ஞான ரீதியான பிரபஞ்ச இயக்கக் கருத்துக்கு ஒத்தவையே என்பதை இவர்கள் விளக்கியுள்ளார்கள்.

பிரபஞ்ச அணு இயக்கம்

நாவுக்கரசர் பெரிய திருத்தாண்டகத்தில், இறைவனை அரிதானவன், அந்தணர் தம் சிந்தையான், அரு மறையின் அகத்தான், என்றெல்லாம் கூறிவிட்டு அணுவை ஆர்க்கும் நுண்மையான தத்துவன் என்பார். இன்னொரு பாட்டில் மண், விண், கடல்கள், தாரகைகள், திசைகள், விரிசுடர்கள், யாவும் புலியூரான் புகழ்பாடுவன என்கின்றார். திருமந்திரத்தில் இறைவனின் திருநடனம் அண்ட சராசரங்கள் அனைத்திலும் நிகழ்வது நன்கு விளக்கப் பட்டுள்ளது.

பிரம்ம ராத்திரி

"உலகம் லயமடையும் பிரளய காலத்தில் சந்தியா காலம் வருகிறது. இதனை பிரம்ம ராத்திரி என்பர். அது இரவு பகல் அற்ற நிலை. அவண் ஐந்தொழிற் கருத்தா தெய்வீக அரங்கில் அடியெடுத்து வைக்கிறார். பிரபஞ்சத்தைத் தன் உடலாகவும், பிரபஞ்ச இயக்கத்தை ஆற்றலாகவும் உடைய இறைவன் சுழன்றாடும் அழகிய இயக்கத்தால் படைத்தல் நிகழ்கிறது. இறைவனது புகழைப் போலவே பிரபஞ்சமும் உருவாகி எழுகிறது" என்ற கருத்து நாட்டிய சாத்திரத்துக்கு அபிநய குப்தர் எழுதிய உரையில் கூறப்படுகிறது.[370]

நடராசரும் பிரபஞ்ச இயக்கமும்

பிறப்பு, இறப்பு, இறப்புக்குப் பின் உயிர் நிலை, பிறப்புக்குக் காரணமான நல்வினை தீவினை, மாயையின் இயல்பு, பிரபஞ்ச இயக்கம், பிரபஞ்ச நிலையில் உயிர்களின் நிலை, பிரபஞ்சத்தின் முறை தவறாத இயக்கம், அவற்றின் மூலகாரணமான அணுவின் இயக்கத் தோற்றம், ஒடுக்கம் முதலியனவற்றை நுண் தத்துவங்கள் விளக்குவன. சைவ சமயத்தின் இந்த நுண் தத்துவங்களை ஓவியத்தும், காவியத்தும், படிமத்தும் உருவகித்துக் காட்ட ஆனந்த நடராசர் திருவுருவினை விடச் சிறந்த ஒன்று அமைய இயலாது என்ற கருத்தைப் பலரும் பாராட்டுகின்றனர்.[371] பிரோஜேஷ் பானர்ஜி தனது நூலில் உலகில் உள்ள பிரபஞ்ச இயக்கத் தத்துவங்கள் பலவற்றோடு நடராசத் தத்துவத்தை ஒப்பிட்டு இதன் உயர்வை நூல் முழுவதும் நுணுக்கமாக விளக்கியுள்ளார்.[372] பிரபஞ்ச இயக்கத்துக்கான மூலாதார சக்தி, நடராசத் தத்துவத்தில் அடங்கியுள்ளது.[373] ஒவ்வொரு புரோட்டானிலும் இந்த ஐந்தொழில் நடனம் நடைபெறுகின்றது. ஆண்டவன் ஆட ஆட்டுவிக்க அணுக்கள் சுழல்கின்றன. அணுக்கள் அசைய, அண்டங்கள் அசைகின்றன. அண்டங்கள் அசைய, பிறத்தல், காத்தல், இறத்தல்,

369. நஜன், ப : 29
370. சாணு, ப : 103
371 அருணாசலம், மு., சைவ வரையறைகளின் தொகுப்பு, ப : 33
372. பிரொஜேஷ் பானர்ஜி, நடனத் தெய்வம் நடராசர்.

மறைப்பு, அருள்சக்தி முதலியன இடம் பெறுகின்றன. இம்மூல சக்தி ஒலியாயும், ஒளியாயும், சூன்ய வெளியாயும், பரம ரகஸ்யமாக, பஞ்சபூதம் முதலிய எண் கூறுகள் வழி (அட்ட மூர்த்தம்) இயங்குகின்றது. பரத நடனம் போல், தாளம், இசை, கரணங்கள் போன்ற கட்டுப்பாட்டுக்குள் இப்பிரபஞ்ச இயக்கம் ஒழுங்காக நடைபெறுகின்றது. இவ்வியக்கம் அகப்புற ஒருமையுடன் சிவ சக்தி மயமானது. காலம், இடம், முடிவு, தொடக்கம் என்பன இன்றி அனவரதமும் நடைபெறுவது இது. நன்று தீது பிறப்பு, இறப்பு என்ற வேற்றுமைகள் இன்றி, ஒத்திசைவில் ஆனந்தம் ஒன்றே பயனாகக் கொண்டு இயல்வது இவ்வியக்கத்தின்அசைவு, அண்டத்தும், பிண்டத்தும், அங்கிங்கெனாதபடி எங்கும், விறகினில், தீயாய், நீரினில் தண்மையாய் நீக்கமற இயல்வது. பேரண்டத்தின் இதயமான இறைவனை, தன் இதயத்து அமைத்து வழிபடுவோர், வினை வீடு பெற்று தத்தம் பக்குவத்திற்கேற்ப இம்மை, மறுமை, வீடு பேறு ஆய பலன்களைப் பெறுவர். காரைக்காலம்மையார் உடலை உதிர்த்து உயிரால் ஞான தரிசனம் கண்டார். பிருங்கி முனிவர் சிவ சக்திகளைப் பிரிக்க முயலுமா என முயன்று அர்த்தநாரியைக் கண்டு ஆனந்த நடனம் துய்த்தார் மூல அணு பிரிக்க இயலாதது.

சிவ சீவ ஐக்கியம், பஞ்சப் பிரம்ம ஐக்கியம், ஐந்தொழில் மூலம், சிவ சக்தி ஐக்கியம், திரிமூர்த்திகள் ஐக்கியம், வேத, உபநிடத, ஆகம, திருமுறைக் கொள்கைகளின் ஐக்கியம், உருவ வழிபாட்டுத் தத்துவங்களின் ஐக்கியம், நாடு, மொழி, இனம் சமயங்கட்கப் பாற்பட்ட உயர் தத்துவங்களின் ஐக்கியம், மெய்யறிவு கலை அறிவு விஞ்ஞான அறிவுகளின் ஐக்கியம் முதலிய ஐக்கியங்கள், விரிவுகளின் இயக்கமாகவே பிரபஞ்ச இயலின் நுணுக்கமாகச் சிவ தாண்டவம் இயல்கின்றது.

திருவாசி பிரபஞ்ச அடையாளம்

பிரபஞ்சத்தின் இயக்கத்துக்குக் காரணமாக, தவறாத ஒத்த தாள லயத் திற்கிடையே இயலுவது அனவரத தாண்டவம். இவண் திருவாசி பிரபஞ்சத்தின் அடையாளம், கல்வெட்டுக்களில் காப்பியங்களில் பிரபஞ்ச இயக்கக் கரு விளக்கப்பட்டுள்ளது.

திரு நடனத்தின் வேகத்தையும், இறைவனின் வேக தாண்டவ ஆங்கிகாபி நயங்களால், திசைகளும், மலைகளும், சேஷநாகமும், திசை யானைகளும், கூர்மமும் அலைக் கழிக்கப்படும். வீர வேக வைபவங்களையும் பாரதத் தொடர்புடைய உத்தர பாரதக் கல்வெட்டுக்கள் பலவும், அண்டை ஆசிய நாட்டுக் கல்வெட்டுக்களும் சமஸ்கிருத தமிழ், நூல்கள் பலவும் பலப் படப் புகழ்ந்துள்ளன. இக்கருத்துக்கள் ஆனந்த தாண்டவ மூர்த்தத்தின் கருவான பிரபஞ்ச இயக்க அடிப்படைக் கருத்தினை வலியுறுத்துவனாக உள.

ஊர்த்துவ மேரு - பிரபஞ்ச உற்பத்தி அம்சம்

பிரபஞ்ச உற்பத்தியின் சின்னமாக அமைவது சிவலிங்கம். மூர்த்தங்களில், வங்கம் போன்ற பகுதிகளில் காணப்படும் ஊர்த்துவ மேரு, அம்சங்களான இறைவன் லிங்க உறுப்பு தோன்ற அமைந்த காட்சி, இறைவன் பிரபஞ்ச உற்பத்தி காரணன் என்பதைக் காட்டுவதே. யோக நெறியில் இந்து மரபிலும், சமண மரபிலும், புலனடக்கம் கைவரப் பெற்ற ஞானிகள் நிர்வாணமாகவே வாழ்தல் இயல்பு. இறைவன் தனக்கென ஏதும் இன்றி உலகோற்பத்தி, பிரபஞ்ச இயக்கம் இவற்றிற்குக் காரணம் என்று கண்ட நிலை ஊர்த்துவ மேரு. வங்கப் பகுதிகளில் குப்தர் சிற்பங்களில் ஊர்த்துவ

மேரு நடராசர்களைக் காண்கிறோம்.

பிரபஞ்ச நடன இயல்புகள்

அசையாது அசைதல் : காரைக்கால் அம்மையார் அவர்களின் திருவுருவம் தாண்டவக் கோலத்தில் அடிப்பாகத்தில் அசையாது இடம் பெறுவதைப் பார்க்கலாம். ஊனை உதிர்த்து, உயிர்மயமாக இறைவனோடு பத முக்தி அடையும் நிலையில் அமைந்த காட்சி இது. அவர்கள் இறைவனது நடனத்தின் இயல்பைக் கூறும் போது, "பிரபஞ்சமாகிய அரங்கத்தில் நீ ஆடுகையில், உன் அடி பெயர்ந்தால் பாதாளம் பேரும், அடிகளை மாற்றும் போது, மலை முகடுகள் பேரும். கை அபிநயம் மாற்றுகையில் வான் திசைகள் பேரும், ஆனால் பிரபஞ்சத்துக்கு எவ்வித சேதமுமின்றி, நீ அசையாது அனைத்தையும் அசைய வைத்து ஆடும், சூட்சும நடனம் ஆடுகின்றனை" என்ற பொருள்பட பாடுகின்றார்.

பிரபஞ்சமே அம்பலம்

அம்பலமாகிய அரங்கைக் குறிப்பிடுகையில் கபில தேவர் வானம் மணி முகடா மால்வரையே தூணாக என்பார். இதுவும் பிரபஞ்சக் காட்சி.

பிரபஞ்சப் பரப்பும் இறைவன் அடிமுடியும்

லிங்கோத்பவ வைபவத்தில் அடிமுடி தேட இயலா நிலை பிரபஞ்சப் பரப்பைக் குறிப்பது. வில்லிபுத்துராழ்வார் "பலயோனிகளாகியும் அடிமுடி தேட இயலா அம்பலத்திறைவன்" என்ற பொருள்பட பாடுவார். இதுவும் பிரபஞ்ச இயலாகும்.

சேஷ நாக அசைவு

ஆறாவது திரிபுவனமல்ல விக்ரமாதித்தியன் என்னும் மேலைச் சாளுக்கிய, மன்னனின் முனிராபாத் கல்வெட்டொன்றில் "சிவன் கைதட்டினால் சூரிய சந்திர மண்டலங்கள் அதிர்ந்து, இவ்வுலகைச் சுமந்து நிற்கும் சேஷ நாகம் சுமை தாங்காது துடிக்க, கடல் வேகமாக அலை வீசிப் பொங்குகின்றது." என்ற செய்தி குறிப்பிடப்படுகின்றது.[374]

பிரப்ஞ்சச் சுழற்சி

காலசூரிக் கல்வெட்டொன்றில், சிவதாண்டவத்தின் போது, "உலகமாகிய பாத்திரம் சுழல்கையில், அதனைச் சுமக்கும் நாகராசனின் படமும் தாழ்கிறது. அஷ்ட திக்கு கஜங்கள் நடராசரின் அசைவின் போது அஞ்சி ஓடுகின்றன. தண்டம் போன்று நீண்ட கைகள் வீசும் போது பிரபஞ்சத்தின் முகடு சுழல்கின்றது" என்ற கருத்து குறிப்பிடப் படுகின்றது.[375]

பிரபஞ்ச இயல் மாற்றம்

ஹர்ஷரின் கல்வெட்டொன்றில் "வேகமான சிவதாண்டவத்தின் போது பிரபஞ்சத்தின் பௌதிக அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. பூமி தாழ்வதும் திசைகள் மேலெழுவதுமாக அமைகின்றன எனப்படுகின்றது.[376]

கூர்மத்தின் அசைவு

இரானோதி கல்வெட்டொன்றில் சிவனின் நடனத் திருவடியின் வேகம் தாங்காது. பூமியைச் சுமந்து நிற்கும் கூர்மம் கடலில் அமிழ்வதாகவும்,

373. அஃதே ப : 24
374. சிவராம ப : 147
375. அஃதே. ப : 145
376. அஃதே. ப : 143

ஓங்கார ஓசையின் இயல்பால் உலகம் மூழ்காது அமைவதாகவும் குறிப்பிடப் படுகின்றது.[377]

பிரபஞ்ச நடனமும் கோள்களும்

பிரபஞ்சத்தின் இயக்கத்தில், கிரகங்கட்கு உரிய இடம் உண்டு. மிகப் பெரிய கிரகங்களை ஒன்பதாகப் பிரித்து நவக்கிரகம் என்பது மரபு. நவக்கிரகக் கருத்து பழமையதாயினும் விஞ்ஞானம் தரு கோள்களின் பெயர்களோடும், செயல்களோடும் இதனை ஒப்பு நோக்குதல் நுண் கருத்துக்களை நல்க வல்லது. வரலாற்று ரீதியில் கால வேறுபாடு உடையதாயினும் சிவகங்கை தீர்த்தத்திற்கு வடபுறத்தே நவலிங்கம் கோவில் உள்ளது. சூரியனை ஆதியாக உடைய கிரகங்கள் ஒன்பதையும், வழிபடுவதையும், தாண்டவ இருதய வழிபாட்டையும் ஒரே பாட்டில் குஞ்சிதாங்கிரிஸ்தவம் குறிப்பிடுகிறது.[378] பிரபஞ்ச நடனத்துக்கும் கோள்கட்கும் உள்ள தொடர்பினை இது சுட்டுகிறது.

அண்ட பிண்ட தகரம்

பிரபஞ்சத்துக்கு அண்டங்கள் விரிவு நிலை. பிண்டம் பிரபஞ்சத்தின் ஒரு கூறு. பிண்டமாகிய உடலில் இதயத்தைத் தகரத் தாமரையாகச் சுட்டுவது போலவே விராட்புருடனுக்கு இதயமாகச் சிதம்பரத்தை குஞ்சிதாங்கிரிஸ் தவம் குறிப்பிடுகின்றது.[379] இது பிரபஞ்சத்தின் இயக்கத்தின் அகம் புறம் இரண்டின் இதய இயக்கத்தினைக் காட்டுவதாகும்.

ஆனந்த நடனச் சிறப்பு

இமவானின் மகளைப் பெற ஆடிய நடனம் இறைவனின் கலைத் திறமையினைக் காட்டுவது. பிரதோஷ நடனத்தின் போது சிவன், சக்தி மகிழ ஆடுகின்றான். காளியோடு நர்த்தன யுத்தம் நடத்தும் போது அது ஒரு போட்டியாகத் திகழ்கின்றது. அட்ட வீரட்ட நடனங்கள் தீயவற்றை, மாயா மலத்தினை, அசுரர்களை, அறத்துக்கு அப்பாற்பட்டவைகளை அழிப்பதாகும். நாதாந்த நடனம், ஆனந்த நடனம், பிரபஞ்ச நடனம் என்பதனில் சிவனும் சக்தியும் வேறுபாடற்று, இணைந்த அர்த்தநாரீஸ்வர வடிவாக, பிரமனாதிய ஐந்தொழில் தெய்வங்கள் ஒன்றாகிய ஆனந்த நடராச ஐந்தொழில் மூல கருத்தாவாக, பஞ்ச பூதங்கள் மூன்று ஒளிப் பொருள்கள் உள்ளிட்ட அட்ட மூர்த்தியாக, பொருளும் சக்தியுமாக, இயக்கமும், அசையாத் தன்மையுமாக ஓங்கார நாதமும் பல்லியங்களின் தாள ஒத்தும் இயைய பிரபஞ்ச இயக்கத்தின் மூலாதார இறை சக்தியாக ஒருவனேயாகிய இறைவன் ஒருவனாகவே ஆடும் நடனமாகும். அவனன்றி, பிரபஞ்சத்தின் ஓரணுவும் அசையாது என்னும் தத்துவத்தின்உட்பொருளே ஆனந்த நடனம். பேரண்டப் பிரபஞ்சத்தும் நுண் அண்டப் பிரபஞ்சமாய மனிதன், மனிதனைப் பற்றிய பிறவற்றும் இந்நடனம் இயல்கின்றது. திருமாலின் இராசலீலை நடனத்தின் போது மனிதக் கோபியர்கள் சுழல்கின்றனர். இவண் மனித வாசனையே இன்றி ஒரு தேவராட்டம் இயல்கின்றது. தேவ ஆட்டத்துள்ளும் பரம் பொருளின் பரம நடனம். அது பரம ரகஸ்ய தாண்டவம். சமய பரிபாடை மறந்து, விஞ்ஞான நோக்கில் கூறப்புகின் பிரபஞ்சப் பேராற்றல் ஆடுகின்றது. ஆட்டுவிக்கின்றது. அணுவுக்கணுவான நுண்பொருள் இயக்கம் இது. எல்லோரும்

377. அக்தே. ப : 444
378. குஞ்சிதாங்கிரிஸ்தவம் ப : 56 பாட்டெண் 119
379. அக்தே. ப : 39 பாட்டெண் 84

அறிய மனித உரு, யோகிகள் அறிய ஒலி, ஒளி உரு, பருவுலக விஞ்ஞானிகள் அறிய பிரபஞ்ச இயக்கக் கருவாகிய பேராற்றல் இவை யாவும் ஒன்றேயாய பரசிவத்தின் ஆட்டமே. இத்தெய்வப் பேராற்றல் மனித உருவில் அமைந்துள் ளது.அதற்குத் திருவுருவம் சிவலிங்க உருவம்; ஒலி உருவம் ஓங்காரம்; அதன் விரிவு திரு ஐந்தெழுத்து; ஒளி உருவம் சகஸ்ராரப் பேரொளி, அருவம் இரகஸ்மாய் கண்ணாற் காண இயலாச் சத்தியாய ஞான உரு. இறைவனின் திருவுருவில் அமைந்த அனைத்து உறுப்புக்களும், கருவிகளும், உயிரினங்க ளும், ஆடை அணிகலன்களும் பிரபஞ்ச காரண காரியங்களின் உருவகமாக ஒளிர்கின்றன. பிரபஞ்சத்தின் அக, புற இயக்கத்தையும் அதன் விதிகளையும் பல பெரும் சிந்தனையாளர்கள் விளக்க முயன்றுள்ளனர். இவண் நடராச தத்துவம் நெடுங்காலமாகப் பலர் சிந்தித்து, காட்டிய தத்துவங்களின் சிறப்புக் களின் உயர் நுண் சங்கம நிலையாகவுள்ளது.[380]

.145 ஆனந்த நடராசக் கோல வளர்ச்சியில் சங்கம நிலை

வளர்ச்சி நிலை

நடராசத் திருவுரு, பல்வேறு காலங்களில் அவ்வக்காலத்தின் நற்கூறு களைப் பெற்று ஆனந்த நடராசக் கோலமாக முகிழ்த்துள்ளது. பழமைக் கால வீர நடனம், சாத்திர அமைப்பமைந்த பரதக் கூறு, பல்வேறு சிவமூர்த்தங்களின் சிறப்பம்சங்கள், யோகச் சிற்பியின் மெருகேறிய கைவண்ணம், பிரம்ம ஞானி கள் கண்ட தத்துவம், யோகிகள் கண்ட ஒளியுரு, தாந்திரீகர்கள் கண்டமந்திர எந்திர அமைப்புக்கள் முதலியன யாவும் ஒருங்கிணைந்து ஒரு ஞான, ஊன, யோக, புராண, மெருகுகள் ஏறிய திருவுருவாக அமைந்தது ஆனந்த நடராசத் திருவுருவம். சிவ மூர்த்தங்களின் வளர்ச்சியை வரலாற்று நோக்கில் கணக் கிடப் போதிய சான்றுகள் அமையவில்லை எனினும், ஒரு செம்மையான வளர்ச்சி நோக்கு தெரிகின்றது. காலத்தில், ஏதோ ஒரு கட்டத்தில், ஒன் றன்பின் ஒன்றான வளர்ச்சி நிலைகளையும், சங்கம நிலைகளையும் காண்கிறோம்.

யோக வீரட்ட ஐக்கியம்

சிந்து வெளி யோக முத்திரையில், கொம்பு வீரத்தையும், சுற்றியுள்ள விலங்குகள் பசுபதித் தன்மையையும் காட்டுகின்றன.

அருளும் வீரமும்

மானும் மழுவுமேந்தி, புலியுடை உடுத்தி, நீறு பூசிய நிலையை, அனுக் கிரக மூர்த்திகளிடமும் காண்கிறோம்.

அர்த்த நாரீஸ்வரத் தத்துவம்

தாண்டவ மூர்த்தி அர்த்த நாரீஸ்வரர் என்பது வெளிப்படை, குழையும் மகர குண்டலமும் இதனைக் காட்டுவன. அர்த்த நாரீஸ்வர, தத்துவம் பர மாத்மா, பராசக்தியின் ஒருமைத் தன்மையைக் குறிப்பது. இதனைத் தந்திர நூல்கள், தாரநாத வித்யாரத்னம் முதலிய நூல்களும் திருமந்திரம் போன்ற னவும் குறிக்கின்றன.[381] இருமை ஒருமை எய்தல், ஒருமை இருமையாகி இயங்குதல் ஆய இரண்டும் இதனுள் அடங்கும். வங்கத்தில் சக்தி தாண்ட வத்தில் அசையாப் பொருளாய இறைவன் மீது காளி தாண்டவமாடுவாள். இவண் ஆனந்த தாண்டவத்தில், அசையாப் பொருளாய இறைவன் அசை

---

380. குபில், எல்.என்., சிதம்பரம் ப : 451 381. கேஸ்டன், ப : 234, ப : 139

யும் சக்தியையும் தன்னகத்துக் காட்டி, அசையாது ஆடி, அண்ட சராச ரங்களை ஆட்டிப் படைக்கும் காட்சியைத் தரிசனம் செய்கிறோம். இது சக்தி வழிபாட்டுக்கு மேற்பட்ட வளர்ச்சியாகலாம். எனவே அர்த்த நாரீஸ்வரர் லயத் தத்துவம், ஒடுக்க நிலை. அதுவே சிருஷ்டியின் கருவும் ஆகும். ஆத்ம தரிசனத்தில், இதயத் தானத்தில், தகராகாசத்தில், தகரவித்தை வழி, இறை வனை, லயநிலையில் காணும், பஞ்ச கிருத்தியக் காட்சி அர்த்த நாரீஸ்வர நடனம். இதுவே ஆனந்த தாண்டவம்.

பைரவ-ஆனந்த வளர்நிலைகள்

பைரவக் கோலம் இறைவனின் தாமச இயல்பு குறித்தது என்பர். சிவபெருமானை அழித்தல் தொழில் புரியும் வீரக் கடவுளாகப் பதினாறு கைகளுடன் போர்க் கோலத்தில் உருத்திரராகக் காணும் பெருமை சிவபராக் கிரமத்தின் பெரு வீரத் தோற்றமாகத் திகழ்கின்றது. வீரம் தாமசத் தன்மை.

பைரவ நிலை

சரபர், பைரவர், வீரபத்திரர் முதலிய பரமேஸ்வர ஆவிற்பவங்களாய, தெய்வங்கள், பல்வேறு கற்பங்களில் திருமால், பிரம்மா முதலிய தேவர் களின் செயல்களை அடக்குவதற்காக ஏற்பட்ட வைபவங்கள்.[382] இவை அசுரர்கள், எமன் போன்றவர்களை சம்மாரம் செய்ய ஏற்பட்ட சிவபராக்கி ரமங்கள் ஆகும். சிவனாரின் அம்சமான வெவ்வேறு இறை வெளிப்பாடுகளும் திருவிளையாடல்கள் போன்றவை. மண்ணுலகில் நடை பெற்றால் திருவிளையாடல், விண்ணுலகில் இயலும் போது வீரட்டம். பைரவ அம்சங்களாக சிவபராக்கிரமங்கள் அத்தனையையும் அடக்கிய உயர் நிலையே ஆனந்த தாண்டவம். பைரவ அம்சங்கள் பல்வேறு உறுப்புக்களாக ஆனந்த தாண்டவத்துள் அடங்குகையில், முக்குணங்களில் சத்துவம் உயர் கின்றது. எனவே ஆனந்த தாண்டவ மூர்த்தி, சத்துவ குண போதகராகின்றார். புன்சிரிப்பால், மூன்று மாய மலக் கோட்டைகளை எரித்த திரிபுர சம்மாரியே, இவண் தன் குனித்த புருவத்தால், குமின் சிரிப்பால் பிரபஞ்சத்தை இயக்குகிறார்.

கோர உருவங்கள்

பைரவக் கோலங்களில் கோரைப் பற்களுடன், எண்ணிறந்த கைகள், ஆயுதங்கள், அஞ்சத்தகு புலியரை, வீர ஓசை காட்டும் மணிகள் முதலியன வற்றோடு திகழ்கிறார். அட்ட வீரட்ட கோலங்கள் பைரவக் கோலங்களின் வளர்ச்சியே. சம்கார உருவங்கள் காலில் யானை, எமன், அந்தகாசுரன் முதலியவற்றின் மேல் ஸ்தித பாதம் அமைத்து வீர வெற்றிக் கோலங்களாக, சிறிது கோரத் தன்மை குறைந்து தோன்றுகின்றன. அந்தகாசுர வதம், கஜ காசுர வதம் போன்ற நிலைகளில் வீரச் செயலின், அதன் விளைவினை நேரடியாகக் காணும் வாய்ப்பு கிட்டுகின்றது. கால சம்மாரத்தில் காலகா லனான எமனையே சிவ பக்தனை, அணுகாது தவிர்த்து சம்மாரம் செய்யும் நிலை சற்று உயர்வான தத்துவப் பாங்கு. காலனைச் சம்மரித்த கரங்கள், காமனைச் சங்கரித்து தத்துவ வாழ்வின் உள் நுழைந்து பணி செய்யும், மனித மன வாழ்வு மேம்பாட்டு நெறிக்கு வழிகாட்டும் அற நெறியாக உயர்கின்றது. காலனை, காமனைத் தடித்த நிலைக்கு மேலே திரிபுர சம்மாரத்தில் மூன்று மலங்களை, மூன்று கோட்டைகளாகக் காட்டிய பெருமை, தத்துவ வளர்ச்சி.

382. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப : 108 பாட் 203

பராக்கிரமங்கள் மிகுந்த மூன்று அரக்கர்களை அவர்களது கோட்டைகளைத் தகர்க்க தேவர்களெல்லாம் தேராகவும், வில்லாகவும், அம்பாகவும் என வலுவாக, நேர்ந்து, நிற்கையில், தீ கக்கும் அம்புக்கு வேலையின்றி, புன்மு றுவலால் எரித்த, திரிபுர சம்மாரப் பெருமை அருள் தன்மையின் பெருவளர்ச்சி நிலை. இது சத்துவ நிலை. திரிபுர சம்மாரம், புன்னகையால் மூவுலகை எரித்து, மூவரும், யாவரும், இணைந்த பேரழுகுக் கோலம். மும்ம லங்களை ஒரே மாயையாகக் கொண்டு, அம்மாயத் திரையினை விலக்க ஒரு மூர்த்தமாக அமைந்தமை தத்துவப் பின்னணியின் மே நிலை. இது சத்துவ நிலை. கஜ சம்மார மூர்த்தி, தோலை உரித்து போர்த்துக் காட்டிய நிலையில், விரிந்த மாயை விடுதலைக் கருத்தைக் குறிப்பதாக உயர்கிறது. காலனைக் கடிந்து, காமனைக் கடிந்து,கடு மாயத் திரையினை விலக்கிய நிலைக்குமேல், கல்லாலின் நிழலமலர்ந்து, குமரக் கோலத்தில், முதிய நால்வர்க்கு போதிக்கும் யோக தட்சிணாமூர்த்தி நிலை எல்லாக் கிருத்தியங்கட்கும் உள்ளீடான ஒரு யோக, பிரபஞ்ச இயக்க நுணுக்க ஆதாரத் தத்துவ மூர்த்தமாகின்றது. இது சத்துவ நிலையின் வளர்ச்சி. ஆனந்த தாண்டவம் முழு சத்துவத்தின் வளர் நிலையாகும். கங்காளர், பிட்சாடனர் போன்ற மூர்த்தங்கள், தட்சிணா மூர்த்திக்கு முந்திய நிலைகளாகலாம்.

ஆடிய கோலங்கள் பற்பல

சதுரமாக, லலிதமாக, லலாடதிலகமாக, தலசம்போதிதமாக, ஊர்த்துவ ஜானுவாக, அட்ட வீரட்டங்களாக இறுதியில் ஆனந்த தாண்டவமாகத் தாண் டவக் கோலங்கள் வளர்ந்தன. சுடலையில் ஆடி, கைலையில் ஆடி, ஐந்து சபைகளில் ஆடி, இறுதியில் இரகசியத்தில் சித்தாகிய ஞான சபையில், பக்தர்களின இதய தகரத்தில் புறக் கண்ணுக்குத் தெரியாது சூட்சுமமாக ஆடர்து ஆடி அண்ட சராசரங்களின் இயக்கத்தின் கருவாக, ஐந்தொழிற் கருத்தாவாக பரதாண்டவம் ஆடும் நிலை சைவ நெறியின் உயர்நிலை. பிரபஞ்சத்தின் மூலப் பொருட்களால் அமைந்த பஞ்சபூதங்கள் உள்ளிட்ட அட்ட மூர்த்தங்களாகி, அட்டமூர்த்தங்களையும் ஐந்தொழில்களையும் இயற்ற் பஞ்ச பிரம்மங்களாகி, பஞ்சப் பிரம்ம நிலைக்கு மேலாகிய பரப்பிரம்ம நிலையில், ஏக நாயகனாக, அரிகரனாக, அர்த்த நாரியாக எல்லாத் தெய்வ நிலைகளையும் தன் தோற்றத்தில் அணிகலன்களாய், கருவிகளால் அமைத்துக் காட்டிய ஒருமை அஞ்சற்கை நாயகனாய், அறிவூட்ட சுட்டுக்கை ஆசானாய், தஞ்சம் அளிக்கும் குஞ்சித பாதனாய், உயர்ந்து காட்டும் தில்லைப் பொது நடம் அரிதினும் பெரிது. கோர பைரவர், புன்முறுவல் பூத்த திரிபுராந் தரானார். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் சடைமுடி தரித்த யோகியானார். யோகத் தமர்ந்து தென்திசையுகந்த ஆலமர் செல்வர் எல்லாம் ஆனந்த மயமாக்க குனித்த புருவத்தே, முறுவலித்து அன்பர்கட்குத் தில் லையில் அருள் செய்ய ஆடுகிறார். இவை சிறப்பு-தத்துவ வளர்ச்சி நிலைகளாகும்.

அபயஹஸ்த அனுக்கிரக மூர்த்தங்கள்

சுகாசன மூர்த்திகள் அனுக்கிரக மூர்த்திகளுள் சிறப்புக்குரியவர்கள். இது அபய ஹஸ்த முதன்மை. அனுக்கிரக மூர்த்திகள் பேரறிஞும் பேரா சானுமான இராவணானுக் கிரகம், கங்கையைக் கொணர முயன்ற பசி, தணிக்கும் கங்கைக்கும் அனுக்கிரகம், சண்டேசானுக்கிரகம் என வளர்கின்

றனை.

.146 சங்கமச் செய்தி

சிவநடனத்தின், இடம், பொருள், இயல்பு, தத்துவம், முதலியன யாவும் ஒன்றோடொன்று இயைந்த அரிய சங்கமம். இதன் நுணுக்கத்தைக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் பாடலொன்று விளக்குகிறது.[383] அப்பாடலில்

ஐம்பது கோடி யோசனை தூரமுள்ள பூமியென, விராட்புருடனென்ன
இவ்விருவர்க்கும் ஒன்றான இருதய கமலத்தில் உள்ள,
ஸ்வர்ணமயமான யந்திரத்தின் நடுவில் நடனம் செய்பவருமே,
சித்சபைக்குப் பதியும், இச்சா ஞான கிரியா என்கிற மூன்று சக்திகளால்
எப்பொழுதும் சேவிக்கப்படுகின்ற வரும் நாதாந்தத்தில் விளங்குபவரும்,
ஒன்பது விதமான நடனத்தையுடையவருமான குஞ்சிதாங்கிரிம்
என வருகின்றது.

திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகையில் எல்லா மூர்த்தங்களின் சங்கம மூர்த்தமாக நடராசர் இருப்பதை "அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனை" என்று சுட்டுகின்றார்.

நடராச மூர்த்தத்தில் அமைந்த ஐக்கிய அம்சங்கள்

சிவதாண்டவ மூர்த்தங்களில் முழு முதற் கடவுளரான மூவரின் அம்சங்களும், பிற சிவ மூர்த்தங்களின் விசேட அம்சங்களும் ஐக்கியமடைந்துள்ளன. மூர்த்த விசேடங்களின் நடராசருக்கு உள்ள சிறப்பு இது. பிரம்மாவின் கல்பங்கள் அமைந்த பிரம்ம சிரசுகளின் கபாலங்களை நடராசர் பிரம்ம கபால மாலையாக அணிந்துள்ளார். சிதம்பரம் ஆனந்த நடராசர் தங்கத் தாலான பிரம்ம கபால மாலை அணிந்துள்ளார். இது பிரம்ம சிரச்சேத மூர்த்தியின் அம்சம். குஞ்சிதாங்கிரிஸ்தவத்தில் சிவ தாண்டவ மூர்த்தி, மச்சாவதாரத்தின் ஆமையின் பெருத்த தோல், கூர்மாவதாரத்தின் பன்றிப்பல், வாமனரின் எலும்புகள், நரசிம்மரின் குருதி தோய்ந்த தோல், திருமாலின் திருக்கண்களாகிய தாமரைகள், பிரம்மாவின் முகங்கள், சூரியனின் பற்கள், முதலிய பலவற்றைத் தன் உடலில் அணிகலன்களில் அணிந்திருப்பதாகப் போற்றப்படுகின்றது.[384] வைணவ மூர்த்தங்களின் அம்சங்களை நடராசர் ஏற்ற நிலை இது. இறைவனின் திருமுடியில், நடமிட்டு பிரம்ம கபாலங்கட்கு, தன் தூநீரால் உயிரூட்டும் கங்கா தேவி கங்காதர மூர்த்தத்தின் அம்சம். கங்கையினைத் தாங்கியிருக்கும் சடைமுடி, நெடுங்காலம் தவமியற்றும், யோக தவ அம்சம்; தட்சிணா மூர்த்தியின் சிறப்பம்சம். ஐம்பூத ஜல நிலை. சடைமுடிக்கு அழகூட்டுவதாக, அட்டமித்திங்கள் தன் தண்ணிய கிரணங்களால் அமுத மழை பொழியும் சிறப்பு சந்திரசேகர அம்சம் என்றும் தட்சனின் சாபம் பெற்ற சந்திரனுக்கு அனுக்கிரகம் செய்த அவசரம் என்றும் கூறலாம். இடக் காதில் குழையும், வலக் காதில் மகர குண்டலமும் அமைந்த நிலை அர்த்த நாரீசுவர வைபவம். திருமுடியில் மயிற்பீலி அணிந்த அழகு அர்ச்சுனனுக்குப் பாசுபதம் ஈந்த கிராதார்ச் சுன வைபவம், பிரம்ம கபால மாலை அணிந்தமை, பிரம்ம சிரச்சேத மூர்த்தி அம்சத்தோடு, காலத்தில் யுக அம்சங்களின் தேவன் சிவன் என்பதையும் காட்டுவது. வலக் கரத்தே ஏந்திய துடி ஓங்கார ஒலியின் மூல நிலை. பழங்கால கிராமியத் துடியாடலின் பழமை நினைவுச் சின்னம். நாதாந்த

383. அஃதே. ப : 2 பாட்டெண் 3 384. அஃதே. ப : 87 பாட்டெண் 174

பிரபஞ்சோற்பத்தியின் இயக்க நிலை என்றும் கூறலாம். தோற்றம் துடியதனில் என்பர். இடக் கரத்தே ஏந்திய தீயகல் சங்கார சக்தி. கிராமிய எரியாடலின் நினைவு அறிகுறி. வேத வேள்வியின் உயரம்சம்அங்கியிலே சங்காரம் என்பர். அக்னி தேவ நிலை. ஐம்பூத அக்னி நிலை. அபய ஹஸ்தம் அனுக்கிரக மூர்த்திகளின் அம்சம். கஜ, கால, அந்தகாசுர, முயலகன் முதலியவை வீரட்ட மூர்த்தங்களின் அம்சம். ஸ்திதபாதம் பதி நிலை, ஸ்திதபாதம் சம்மார சக்தியின் பதி நிலையாக முதற் காலத்தில் ஊர்துவ ஜானுவில் இடப்பாதம் ஸ்திக பாதமாயமைந்தது. வலப்பாதம் ஸ்தித பாதமாக ஆனந்த நடராச மூர்த்தத்தில் அமைவது அர்த்த நாரீஸ்வரத்தில் வலப் பாகம் இறைவன் அம்சமாக இருப்பதை அமைத்த நிலையாகலாம். குஞ்சித பாதம் அருள் தன்மையின் சின்னம். அருளல் இறைவியின் செயலாதலின் ஆனந்த தாண்டவத்தில் இடப்பாகமாக அமைக்கப்பெற்றதெனலாம். பெருமை இறைவனதாகையால் அதற்கு வழிபாடு. கரி ஹஸ்தம், கஜ ஹஸ்தம் என்பன சுட்டு நிலை. இடப்பாகத் தமைந்த இடக் கரம் கரிஹஸ்தமாயமைந்து பராசக்தி சுட்டுகிறார் என்பது. இறைவனுடைய திருமுக விலாசத்தில் அமைந்த கொவ்வைச் செவ்வாயில் அமைந்த குமிண் சிரிப்பு, மாயாவுலகுகளை அழித்து, தேவர்கட்கு அருள் செய்த, திரிபுர சம்மார மூர்த்தி என்பதன் அம்சம், உடலெங்கும் கங்கணமாகவும், பிறவுமாகவும், பாம்பணிகள் அமைவது நாக வழி பாட்டு அம்சம், குண்டலினி யோக அம்சமுமாம்.

.147 இறுதி உருவம் (சிவனார்)

அ. அனைத்தையும் துறந்த துறவியாக, - பிட்சாடனராக
ஆ. குடும்பத்தின் தலைவராக - சோமாஸ்கந்தராக
இ. ஒத்த தலைவன், தலைவியாக - சுகாசன மூர்த்தியாக,
ஈ. பல்வேறு தேவர்கட்கு அனுக்கிரகம் செய்த அனுக்கிரக மூர்த்தியாக
உ. கண்டவர் அஞ்சும் பைரவராக
ஊ. வீரங்காட்டி வெற்றி கண்ட நிலையில் அட்ட வீரட்டங்களாக
எ. யோக நெறி நின்று ஞானமும் கலைகளும் கற்பிக்கும் தட்சிணாமூர்த்தியாக
ஏ. இனிய சதுரம், லலிதம், திராசங்கள், போன்ற நடனங்கள் இயற்றும் நடனக் கலைஞராக, நர்த்தேஸ்வரராக
ஐ. இறுதியில் பிரம்மத்தின் ஸ்வரூபமாக, ஹிருதய புண்டரிகவாச தகராகாயத் தெய்வமாக, அண்ட, பிண்ட பிரபஞ்ச இயக்கக் கருத்தாவாக, ஐந்தொழில் மூலமாக, யோக நெறிக் கண்ட இயங்கு பேரொளியாக, சச்சிதானந்த ஸ்வரூபமாக, ஆனந்த நடராசராக விளங்குகிறார் என்பது கருத்து.

.148 வழிபாட்டு முறைகளின் ஐக்கியம்

துடியோசை எழுப்பி எரியாடும் தன்மையில் கிராமியத் தன்மையின் பழமையைக் காண்கிறோம். யாக குண்டத்தில் எரிந்த அழலை, கையகத்தே எடுத்தாடும் நிலையில் வேத நெறி காண்கிறோம். துடியோசையே ஓங்கார ஒலியெனும் பொழுது வைதிக நாத தத்துவம் ஓங்குகின்றது. சடைமுடியில் யோகச் சிறப்பைக் காண்கிறோம்.

பிட்சாடனக் கோலத்தில் முழுத்துறவையும், பற்றற்ற நிலையையும் எங்கும் எப்பொழுதும் உலவும் சுதந்திரச் சலன அமைப்பையும் காண்கிறோம்.

கங்காள அமைப்பில் யுகங்களை, பிறப்புக்களை வளர்ச்சியின் சின்னமாக காட்டும் திருநீற்று நெறியைப் பார்க்கிறோம். மேற்கண்ட வளர்ச்சி நிலைகள் சிவ தாண்டவக் கோலத்தின் முறையான வளர்ச்சிப் போக்கினைக் காட்டு கின்றன என்பதை அறிய உதவின.

.149 அம்பல-சபை நடனங்களின் உட்கிடை


பொன்னம்பல நடனம்

சிவன் தாண்டவமிடும் முதன்மைச் சபைகள் ஐந்து அவற்றுள் முதன் மையானது தில்லை. தில்லைத் திருநடனம் பதஞ்சலி வியாக்ரபாதர் முதலிய முனிவர்கட்காக ஆடிய ஆனந்த தாண்டவம். அனவரத தாண்டவம். பிரபஞ்ச இயக்க நடனம். அண்டபிண்ட அணுவியல் இயக்கக்கரு. தெய்வத நிலை களின் தன்மை அனைத்தையும் ஏந்திய மேநிலை, எனலாம். சிவ தாண்டவத்துக்குக் குறிக்கப்படும். அனைத்துத் தத்துவங்கட்கும் உறைவிட மானது தில்லைத் திரு நடமே. இது அண்டத்தும், பிண்டத்தும் இதயத் தான மாகையால் கனக சபை பொன்னம்பலம் எனப்படும். இதயமும் ஞானமும் பொன் எனப்படுவன. பொன்னம்பல சித் சபை நடனம் தத்துவக் கருத்துக்கள் மிகுந்தது.


வெள்ளியம்பல நடனம்

மதுரை வெள்ளியம்பலத்தில் ஆனந்த நடராசர் கால்மாறியாடிய நிலை யில் பத்துக் கைகளுடன் நடமிடுகின்றார். வெள்ளியம்பலம் இரசத சபை எனப்படும். மதுரை மீனாட்சி திருக்கல்யாணத்திற்கு வந்திருந்த பதஞ்சலி வியாக்ர பாதர் போன்ற முனிவர்கள் தில்லை திருநடம் காணாது உண்ப தில்லை என்ற படியால் மணமகனான சிவ பெருமானே விருந்துக்கு முன் ஆடிக்காட்டிய நடனம் இது. தில்லையை விராட்புருட இதயம் என்பது போல் மதுரையினைத் துவாத சாந்த ஸ்தானம் என்பர். தில்லையில் ஆடிய அதே நடனம், அதே பின்னணி இசைகளோடு மதுரை வெள்ளியம்பலத்தில் நடை பெறுகின்றது. சோழ மன்னனான இராச சேகரப் பாண்டியன், தான் நடனக் கலையினைக் கற்கையில் கால் வலிப்பதை உணர்ந்து, இறைவன் ஒரே காலில் நின்று ஆடுவதால் கால்வலிக்கும் என்று வருந்தி, இறைவனை வேண்ட இறைவன், கால் மாறி ஆடியதாகப் பரஞ்சோதி முனிவர் திரு விளையாடல் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

வெள்ளியம்பலத்தில் பெரிய உருவில் கல்லாலாய கால் மாரி ஆடிய நடனச் சிற்பம் ஒன்றும், சிறிய ஐம்பொன் சிலை ஒன்றும் உள. இவ்விரண் டிற்கும் பத்து கைகள் உள. அபயஹஸ்தம் இருக்க வேண்டிய, முன் வலக் கரத்தில், சிறிய சூலம் ஒன்றுள்ளது. ஆனந்த தாண்டவத்தின், கால்மாறி ஆடிய நிலை என்றால் கைகள் நான்கு மட்டும் தான் இருக்க வேண்டும். ஆனந்த தாண்டவத்தில் அபய ஹஸ்தம் உண்டு. ஆலவாய் நடனத்தில், பைரவ நிலை போன்று, பத்துக் கைகள் உள. குஞ்சித ஸ்தித பாதங்கள், இடம் வலம் மாறியுள்ளன. இது வீரட்ட ஆனந்த சங்கமம் அல்லது வளர் நிலையாகலாம். வெள்ளியம்பலம், சிலப்பதிகாரக் காலத்திலேயே அமைந்தது என்பது நினைவு கூறத் தக்கது. சிலப்பதிகாரத்தில் ஆனந்த நடம் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே இது ஆனந்த தாண்டவத்தை விடக் காலத்தால் முந்தியதாக இருக்கலாம் என்பது சிந்திக்கத்தக்கது.



படம் எண் 10



படம் எண் 11

அரதன சபை நடனம்

திருவாலங்காட்டில் இரத்தின சபையில் ஊர்த்துவ தாண்டவம் இயல்கிறது. மூர்த்திக்கு இரத்தின சபாபதி என்று பெயர். சபை இரத்தினங்களால் அழகு செய்யப்பட்டதால் இப்பெயர் வந்தது என்றும், இரத்தினத்தால் ஆன சபாபதி உருவம் ஒன்று இருந்ததால் இப்பெயர் வந்தது என்றும் கூறுவதுண்டு. திருவாலங்காட்டுப் புராணத்தின்படி, இவண் சுனந்தன் என்ற முனிவரும், கார்க்கோடகன் என்ற பாம்பரசனும் தாண்டவ தரிசனம் காணத் தவம் இயற்றுகின்றனர். நிம்பன், சும்பன் என்ற இரு அசுரர்களும் தவவலியால் தாம் பெற்ற வலி கொண்டு, தேவர்கட்கும், இருடியர்க்கும், விலங்கினங்கட்கும், பறவைகட்கும் துன்பம் விளைவிக்கின்றனர். அனைவரும் பராசக்தியான தேவியை வழிபடுகின்றனர். தேவி தனது அருள் நோக்கில், இமைகளின் கரிய ஓரங்களிலிருந்து கரிய நிறமுடைய வலி பொருந்திய காளியைத் தோன்றுவிக்கிறார். காளி தனது கணங்களோடு திருவாலங்காடு வந்து அசுரர்களைக் கொல்கிறாள்: காளியின் வெற்றி வெறி அடங்காமையால் காளியின் அட்டகாசம் அதிகமாகின்றது. சுனந்த முனிவரும், கார்க்கோடகனும் கூட மகிழ்வாக இல்லை. இறுதியில் இறைவன் பரமார்த்த கணங்களோடு திருவாலங்காட்டில், ஆலமரத்தடியில் நடமிடுகின்றார். காளியுடன் நிருத்த யுத்தம்-போட்டி நடனம் நடைபெறுகின்றது. சிவபெருமான் காலைத் தூக்கி ஊர்த்துவராக ஆடுகின்றார். காளியால் காலைத் தூக்கி ஆட இயலாது பெண்மை தடுக்கின்றது. தில்லைக் காளியுடனும் இது போன்ற போட்டி நடனம் ஆட, காளி கால் தூக்க முடியாது தோற்றதை நூல்கள் நுவலும். காளி இறைவனின் சிறப்பையும், சிவன் காளியின் சிறப்பையும் ஏற்றுக் கொள்கின்றனர். இன்னொரு முறை காரைக் காலம்மையாருக்கு, இதே தாண்டவ தரிசனம் திருவாலங்காட்டில் கிடைக்கின்றது. இத் தாண்டவத்திற்கு ஊர்த்துவ தாண்டவம், சண்ட தாண்டவம் லலாடதிலகம் என்ற பெயர்கள் உண்டு. வலக்காலை உடலோடு ஒட்டி உச்சந்தலைவரை தூக்கிநின்றாடுவது இது. இவ்வுருவம் பல்வேறு இடங்களிலும் நான்கு, எட்டு, பத்து என்ற அளவில் கைகளையுடையதாகவுள்ளது. தென் காசியில் நான்கு கையும் உண்டு, எட்டுக் கையும் உண்டு. சிதம்பரம் நிருத்த சபையில் நான்கு கை மூர்த்தி உள்ளது. சில தலங்களில் வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நின்றாடும் ஊர்த்துவ தாண்டவ மூர்த்திகளும் உண்டு. எந்தக் காலைத் ஊன்றினாலும், ஊன்றியபாதம் திரோபவமும், தூக்கிய பாதம் அனுக்கிரகமும் ஆகும் என்பதும் உண்டு என்பர்.[385] ஆயினும் இடக் காலைத் தூக்கியமூர்த்தி உலக போகங்களையும், சுவர்க்காதி இன்பங்களையும் அளிப்பது என்றும், வலது காலைத் தூக்கிய மூர்த்தி இம்மை, மறுமை இன்பங்களையும் மோட்சத்தையும் அளிப்பது என்றும் மகுடாகமம் கூறும் என்பர்.[386] திருவாலங்காட்டுப் புராணம், இத்தாண்டவம் "வீறுபாசம் மாற்றி அருள்புரிந்து ஈசன் மலரடிக்குக் கீழ் பேரின்ப வாழ்வு சேர்க்கும்" என்று கூறும். கால் என்பதை இட பிங்கலை என்றவாறு கொண்டு மூச்சேற்றுதலை ஊர்த்துவம் என்பதும் உண்டு. இது ஒரு யோக நிலை எனத் திருமந்திரம் கூறும்.

தாமிர சபை நடனம்

திருநெல்வேலியில், தாமிரபரணி ஆற்றங்கரையில், இறைவன் தாமிர சபையில் தாண்டவமாடுகின்றார். நெல்லைத் தலம் மூங்கிற் காடாகிய வேணு வனம் எனப்படும். நெல்லை திருக்கோவில் தாமிர சபையில் கொலுவீற்று

385. தேசிகர், ப : 139
386. அஃதே

நடம்புரியும் நடராசர் ஆனந்த நடராசர். தமிழகத்து தில்லை, திருவாலங்காடு, மதுரை, நெல்லை, திருக்குற்றாலம் ஆய ஐந்து தலச் சபைகளிலும் திருவாலங்காடு தவிர பிற அனைத்திலும் ஆனந்தத் தாண்ட உருவமே நடமிடுகின்றது.

சித்திர சபை நடனம்

திருக்குற்றாலம் சித்திர சபையில் சிவபெருமான் ஆனந்த நடம் புரியும் ஓவியம் எழுதப்பட்டுள்ளது. முப்புரங்களை வெல்ல தேவர்கள் இயற்றிய வில்லின் நாணாகவும், மந்திர மலையைக் கடலிற் பிணித்து அமுதம் எடுக்கக் கடைகையில் கயிறாகவும் பயன்பட்ட நாகத் தலைவன் வாசுகி என்பான் தில்லையில் தன் துணைவனான அனந்தன் என்பான் அரிய தவமியற்றி, தில்லை நடராசத் தரிசனம் கண்டது போன்றே தானும் தவம் செய்து கூத்துத் தரிசனம் காண விழைகின்றான்.[387] இறைவன் ஆடிய திருக்கூத்து பரம ரகசியக் கூத்து.[388] இக்கூத்தினைக் காண நாகத் தலைவன் வாசுகி விரும்பி, அயன் மால் மற்றும் தேவர்களுடன் திரிகூட மலைப் பகுதியில் சித்திர நதியின் கரையில் தவம் இயற்றுகின்றான்.[389] தேவர், முனிவர், வாசுகி அனைவர்க்கும் திருக்கூத்துத் தரிசனம் கிட்டுகிறது. சிவபெருமான் திருக்கயிலையை விட்டு திருக்குற்றாலம் வந்த காரணத்தைத் திருமால் வினவ" ஒடுக்கத்திற்கும் சிருஷ்டிக்கும் கடைக்காலத்தே பராசக்தி தங்கும் இடம் திருக்குற்றாலம்" எனச் சிவன் மொழிந்தார்.[390]

திருக்குற்றாலத்து, சித்திர சபையில் நடனம் இயல்கிறது. தாமிரபரணி ஆற்றங்கரையில் தாமிர சபை அமைந்தது போல், சித்திர நதிக் கரையில் சித்திர சபை அமைந்தது எனக் கொள்ள இயலுமா என்று சிந்திக்கலாம். திருக்குற்றாலத்துச் சித்சபை நடனம் ஆதிபராசக்திக்கு அன்றிப் பிறர்க்கும் காட்சிப் படாதிருந்து தேவர், இருடிகள் முதலானோர் பலகாலம் தவம் புரிந்து கண்டனர். அதனால் அயன் திருக்குற்றாலச் சிற்சபையில் பராசக்தி எந்திரத்தையும், சிவபெருமான் எந்திரத்தையும் எழுதி அமைத்தான். வியாசர் முதலானோர் அக்காரணம் பற்றிச் சித்திர சபை என்ற திருப்பெயரை இம்மன்றிற்கு இட்டனர் எனத் திருக்குற்றால புராணம் கூறும்.[391] திருக்குற்றால புராணம் கி.பி.1716 வாக்கில் அரங்கேறியது. குற்றாலம் சித்சபையில் சற்றேறக்குறைய மூன்றடி உயரத்தில் பதஞ்சலி வியாக்ரபாதர், மாணிக்க வாசகர், காரைக்கால் அம்மையார் சமேத ஆனந்த தாண்டவ ஓவியம் எழுதப்பட்டுள்ளது. அவற்றின் வலப் பக்கத்தில் ஸ்ரீ சக்கரம் வரையப்பட்டுள்ளது. சித்சபையில், இடக்காலுக்குப் பதிலாக வலக் காலைத் தூக்கி ஆடும் ஊர்த்துவ தாண்டவ உருவம் ஒன்றும் எழுதப் பட்டுள்ளது. சித்சபை என்பது புராணம் கூறும் பெயர். இது சிதம்பர சித்சபை வைபவத்தைப் பிற்காலத்தில் மீண்டும் திருக்குற்றாலத்தில் சிறப்பு செய்த அமைப்பாகவும் இருக்கலாம். சித்திர சபை என்ற பெயர் சித்திரத் தொடர்புடையதாகலாம். நடராசரைச் செம்பிலும், கல்லிலும், சுதையிலும் காண்பதற்கு முன்னோ பின்னோ சித்திரமாக அமைந்த நிலையாகவும் இருக்கலாம். தில்லையில்

---

387. திரிகூடராசப்பக் கவிராயர், திருக்குற்றாலத் தல புராணம், திருவாவடுதுறை 1973. பாட்டெண் 8,9 பக்கம் 414, 415 வாசுகிதவம் புரிந்த சருக்கம்.
388. அஃதே, பாட்டெண் 17, ப : 417
389. அஃதே, 20 பக் 417
390. அஃதே, 26 பக் 429 திருநடன சுருக்கம்
391. அஃதே, 39 பக் 433

பதஞ்சலி முனிவர் ஆதி சேடனான நாகத்தின் அவதாரம். இவண் வாசுகி நாகத் தலைவன். திருக்கூத்து பரமரகஸ்யம். யாவும் குண்டலினி யோகத் தொடர்புடையனவாகத் தோன்றுகின்றன. யோகத்து, உள்ளக் கிழியில் கண்டதை இவண் ஓவியத்தில் வரைந்தனர் போலும்.

பிற சபை நடனங்கள்

அத்ரி சபை நடனம்

ஐந்து சபைக்கு மேல் அத்ரி சபை, ஆதி சபை போன்ற பல சபைகளிலும் இறைவன் ஆடுகிறான். சிவபெருமானின் தலைமை உறைவிடம் கைலாயம். அவருக்குக் கைலாசபதி என்ற ஒரு பெயர் உண்டு. சிவபெருமான் நடமிடும் தலைமை இடம் கைலாயம். பன்னிரண்டாம் நூற்றாண்டைய கவிஞர் மங்கா அவர்கள் தனது ஸ்ரீ காந்த சரிதத்தில் கைலாயத்தில் இறைவன் நடமாடும் இடத்தினை அத்ரி சபை என்றும் இறைவனை அத்ரி சபாபதி என்றும் அழைப்பார். சிவப்பிரதோஷ நடனம் இவ்வத்திரி சபையில் தான் நடைபெறுகின்றது.[392]

ஆதி சித்சபையில் நடனம்

திருவெண்காடு சுவேதாரண்யர் திருக்கோவிலில் உள்ள நடன சபை ஆதி சித்சபை எனப்படும். இவண் இறைவன் சுவாதகேது என்ற மன்னனாகிய பக்தனுக்காக நவ தாண்டவங்களை ஆடியதாகக் கூறுவர். இவ்வூரினை ஆதிச் சிதம்பரம் என்பதுமுண்டு.[393] இந்த ஊரைச் சேர்ந்த ஸ்ரீபரமசிவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்பார் தகர வித்யா பிரகாசிகை என்ற தகரவித்தை பற்றிய நூலை இயற்றியுள்ளார். இக்கோவிலின் நடராசர் சபைக்குப் பின் இரகசியத் திரை உண்டு. இச்சித்சபையில் தினம் ஸ்படிக லிங்கத்துக்கு நான்கு அபிடேகம் உண்டு.[394] இவண் நடராசருக்கு ஆடல் வல்லான் என்று பெயர். இவர் காலில் பதினான்கு புவனங்களைக் குறிக்கும் பதினான்கு சதங்கைகள், எண்பத்தோரு பத மந்திரங்களைக் குறிக்கும் எண்பத்தோரு சங்கிலி வளையங்கள் சேர்ந்த அறை ஞாண், இருபத்தெட்டு ஆகமங்களைக் குறிக்கும், இருபத்தெட்டு எலும்புகள் கட்டிய ஆரம், பதினாறு கலைகளைக் குறிக்கப் பதினாறு சடைகள், முதலியன தத்துவங்களாக அமைந்துள்ளன. சிதம்பரத் தலத்தில் இருப்பது போன்றே சபைக்கு அருகே திருமாலின் சந்நிதி இருக்கின்றது.

இச்சபை சிதம்பரத்துக்கு முந்தியது என மொழியப்பட்டாலும் தில்லையின் சிறப்புக்கள் முழுமையும் இதற்கில்லை.

பாண்டி நாட்டு உத்தர கோச மங்கையில் ஒரு மரகத நடராசர் உள்ளார். இவர் சந்தனக் காப்பில் இருப்பார். கோவை மாவட்டப் பேரூர் மேலைச் சிதம்பரம் எனப்படும். தில்லை நடராச வழிபாடு சிறப்புப் பெற்றது. அடுத்து பல ஊர்க்கோவில்களிலும் நடராச சபைகள் எழுந்தன. நடராச வழிபாடு சிவன் கோவில்களில் சிறப்பிடம் பெற்றது.

அஜபா நடன சபைகள்

வாயால் ஒலி எழுப்பாது மனத் தியானம் செய்வதை அசபை எனத் திருமந்திரம் கூறும். தகர வித்தையில் தியாகராசரைத் திருமால் தன் மார்பில்

392. சிவராம, ப : 377
393. அகர முதல்வன். திருவெண்காட்டுத்தல வரலாறு. திருவெண்காடு ப : 8
394. அஃதே. ப : 8

இருத்தி தியானம் செய்கிறார். இவ்வசபை தியானத்தின் போது, தியாகேசர் அசைகிறார். இவ்வசைவு அசபா நடனம் எனப்படும். தகர வித்தையில் திருமாலின் மார்பில் இருக்கும் தியாகேசரை வணங்குவது மரபு. திருவாரூர் தியாகப் பெருமானை வணங்கி தெற்கு வாயில்வழி வரும்போது தென்னந் திருவாயில் ஓரத்தில் தியாகப் பெருமான் திருமாலின் மார்பில் வீற்றிருக்கும் வண்ண ஓவியம் தீட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

தியாகப்பெருமான் கொலுவீற்றிருக்கும் சந்நிதிக்குப் பின்புறச் சுவற்றில் திருமாலின் நின்றகோலம் இருக்கும். சிவலிங்கக் கருவறைக்குப் பின் லிங்கோத்பவர் இருப்பது போல் இவண் திருமால் இருக்கிறார். தில்லை கோவிந்தராசரை ஒத்த நிலை இது. தில்லையில் சிவலிங்கச் சந்நிதியை மூலட்டானம் என்பது போல் திருவாரூரிலும் சிவலிங்கச் சந்நிதி மூலட்டானம் எனப்படும். தில்லை சித்சபையில் ஆடல் வல்லார் நடமிடுகின்றார். திருவாரூரில் ஆடகேசர் இரத்தின சிம்மானத்தில் அமர்ந்திருக்கின்றார். அசையாதசையும் ஆடல். சித்சபையில், பெட்டியில், ஸ்படிகலிங்கம் இருப்பது போல், திருவாரூர் தியாகராசரின் வலப்புறம், ஒரு பீடத்தில், ஒரு பெட்டகத்தில், மரகத லிங்கம் உள்ளது. இதற்கு அபிடேகங்கள் உண்டு. சித்சபை இரகசியத்தானத்தில் திருவைந் தெழுத்தாகிய இரகசியம் உண்டு. அதற்குத் திரை உண்டு. திருவாரூரில் இறைவனது திருமார்பில் பீஜாட்சர மந்திரம் எழுதி ஒரு தகட்டால் மூடப்பட்டு ஆடை அணிகலன்களால் மூடப்பட்டிருக்கும் இரகசியம் உண்டு. தியாகேசர் முகத்தை மட்டுமே பார்க்கலாம். அபிடேகத்தின் போது மட்டும் திருக்கரத்தின் ஒரு பகுதியைக் காணலாம். மார்கழித் திருவாதிரையின் போது இடது பாதத்தையும், பங்குனி உத்திரத்தின் போது வலப் பாதத்தையும் காணலாம். பிற யாவும் மூடு மந்திரம். திருவாரூர் திருக்கோவிலில் யோக மரபுகள் மிகுதி. சிதம்பரத்து யோகநெறியின் வளர்ச்சியாக அமைந்தது இது. திருவாரூர் ஆடகேசர் பங்குனி உத்திர, ருத்திர பாதத் திருவிழாவின் போது ஆடிவரும் திரு நடனப் பாங்கை ஆகாய நடனம் என்பர். முசுகுந்த சோழனால் இந்திரனிடமிருந்து கொண்டுவரப்பட்ட ஏழு தியாகராசர் உருவங்களும் சப்தவிடங்கத் தலங்கள் என்னும் திருவாரூர், நாகை, திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காறாயில், திருக்கோவில், திருவாய்மூர் முதலிய ஏழு தலங்களிலும் நிறுவப்பட்டன. இவ்வேழு தலங்கட்கும் திருவாரூர் மணிமுடி, இவ்வேழு தலங்களிலும் அசபா நடனம், நடனப் பாங்கிற்கேற்ப வெவ்வேறு பெயர் பெறுகின்றது அதற்கேற்ப விடங்கர் பெயரும் விளங்கும்.

திருவாரூர் வீதிவிடங்கர்- அசபா நடனம்

திருநள்ளாறு- நகவிடங்கர்- உன்மத்த நடனம்

திருநாகை - சுந்தரவிடங்கர்- வராதரங்க நடனம்


திருக்காறாயில்- ஆதிவிடங்கர்- குக்குட நடனம்

திருக்கோளிலி- அவனிவிடங்கர்- பிருங்க நடனம்

திருவாய்மூர்- நீல விடங்கர்- கமல நடனம்


திருமறைக்காடு- புவனிவிடங்கர்- ஹம்சபாத நடனம்

இறைவனை இருந்த கோலத்தில் குடும்பத்தோடு வழிபட வேண்டும் என்ற வேணவா, நடராச அம்சத்தை தியாகராச சோமாஸ்கந்த அமைப்பில் வழிபட இயற்றிய மங்கள நிலையாகவும் யோக பரிபாலன முறையாகவும்



திருவாரூர் ஆடகேசுவரச் சபையின், தெற்குச் சுவரில் வரையப்பட்டுள்ள, திருமால், தகரோபாசனையில், தியாகேசரை வழிபடும் ஓவியம்

படம் எண் 12



திருவாரூர் தெற்குப் பார்த்த தியாகேசர் சந்நிதியின்,
தியாகேசரின் முதுகுப்புறச் சுவரின் வெளிப்பகுதியில், தியாகேசருக்குப் பின்புறமாக
மேற்குப் பார்த்தமைந்த தகரோபாசனத் திருமாலின் நின்ற கோலம்

படம் எண் 13

திருவாரூரில் அமைந்துள்ளது.

சப்த விடங்கத் தலங்கள் ஏழும் சிவன் அசபா நடனமிடும் தலங்கள். தில்லையைப் போன்றே எல்லா வகையிலும் சிறப்புப் பெற்ற தலம் திருவாரூர். இது காறும் புராணங்களில் போற்றப்படும் சிவநடன அடிப்படைச் செய்திகள் சிலவற்றைக் கண்டோம். மூல புராண ஆய்வு மேலும் செய்யத் தக்கது. செய்திகள் மிகுதியும் கிடைக்கும்.[395]

.150 புராணங்கள் புகலும் திருக்கூத்துகள்

திருப்புத்தூர்ப் புராணம் திருவாலங்காடு, தில்லை, கூடல், நெல்லை, குற்றாலம் என்ற ஐந்து பேரூர்கட்கு மேல் ஆறாவது இடமாகப் பாண்டி நாட்டுத் திருப்புத்தூர் திருக்கோயிலின் சித்சபையாகிய ஞான சபையிலும் இறைவன் உண்மை அறிவுவடிவாக நடம் புரிந்தான் எனக் குறிப்பிடுகின்றது. இப்புராணம் இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. திருப்புத்தூர்ப் புராணக் குறிப்புப்படி தில்லைக் கனக சபையில் ஆனந்த தாண்டவமும், மதுரை இரசத சபையில் சந்தியா தாண்டவமும், திருப்புத்தூர் சித்சபையில் கௌரி தாண்டவமும், திருக்குற்றாலச் சித்திர சபையில் திரிபுர தாண்டவமும், திருவாலங்காட்டு இரத்தினசபையுள் காளிகா தாண்டவமும், நெல்லைத் தாமிரச்சபையுள் முனிதாண்டவமும் ஆடப்பட்டதாகக் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு மேற்கண்ட பேரூர்களின் தல புராணங்கள் கூறும் குறிப்புக்களோடு இவற்றை ஒத்துப்பார்ப்பது சாலும்.

திருப்புத்தூர்ப் புராணத்தின் தாருக வனச் சருக்கத்தில் இருடிகள், தேவர் களோடு இறைவனை வழிபட நெல்லை செல்கின்றனர். வழிபட்ட நல்லோரை வாழ்த்தியவுடன் அயன்மால் இருவரின் வேண்டுகோட்கிணங்க, தாமிர சபையில், கங்காள நடனம் ஆடுகின்றார். முயலகன் எழ முயலும் பொழுதெல்லாம் கூத்தப்பிரானின் திருவடி, முனைப்பை அழுத்துகின்றது. அண்டங்களிலும் மற்றனைவோரும் ஆடுகின்றனர். நாரதர், அகத்தியர் மற்றும் இருடிகள் கூத்தினை நிறுத்துமாறு இறைவனை இறைஞ்சுகின்றனர். இவண் இறைவன் கங்காளமாய மண்டையோட்டினை ஏந்தி ஆடும் இக்கூத்து கங்காள நடமா, முனிதாண்டவமா என்பதை எளிதில் முடிவுகட்ட இயல வில்லை. நெல்லை தலபுராணத்தில் முனி தாண்டவம் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை.

திருப்புத்தூர்ப் புராணத்தில் நூற்றுப் பதின்மூன்றாவது சருக்கத்தில் உமையன்னை இறைவரது திருநடம் காண விழைகின்றார். தாமிர சபையுள் நடம் நடைபெறுகின்றது. அடுத்த சருக்கத்தில் தேவர்கள் விழை கின்றனர். ஆண்டவன் ஆடிய அகோர தாண்டவத்தை அஞ்சிய தேவர்கள் தம் எளிய கண்களால் நடத்தைக் காண இயலவில்லை. இறைவன் அருளிய ஞானக் கண்ணால், அகோர தாண்டவம் கண்டு, தேவர்களின் இதயங்கள் பூரித்தன.

நூற்றுப் பதினைந்தாவது சருக்கத்தில் இறைவிக்கும், இறைவர்க்கும் சிவம் பெரிதா சக்திபெரிதா என்ற வினாவின் விளைவாக நடனப் போட்டி நடைபெறுகின்றது. அன்னை காளியாகிறாள். ஊர்த்துவ தாண்டவராக இறைவன் வலது திருவடியை உயர்த்துகிறார். அன்னையால் இயல வில்லை. தலைகவிழ்ந்த அன்னையை மகிழ்விக்க இறைவன், இறைவியை ஆனந்த

395. அறிவொளி. அ. திருவாரூர், சிதம்பரம் 1983 தண்டபானித் தேசிகர். ச., திருவாரூர்த் தலவரலாறு திருவாரூர். 1983.

சபைக்குக் கொணர்கிறார். அடுத்த சருக்கத்தில் ஆனந்த சௌந்தர்ய நடனம் இயல்கிறது.

அடுத்த சருக்கத்தில் "இருடிகட்காக எழில் மன்றில் ஆச்சரிய நடம் பயின்ற நடம்" குறிக்கப்படுகின்றது. மானூரிலே தாருகவன முனிவர்கள் பணிந்து விழைந்தமைக்காக இவ்வாச்சரிய நடம் இயல்கிறது. ஒரு வேளை இது முனி தாண்டவமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

திருப்புத்தூர்ப் புராண கௌரி தாண்டவச் சருக்கத்தில் சிவபெருமானின் திருவடிப் பேற்றினை எய்த வாசுகி, காகோடகம் முதலிய பாம்புகள் தவம் செய்தமை குறிக்கப்படுகிறது. திருவாலாங்காட்டுப் புராணத்தில் கார்கோடனைச் சபிக்கின்றார். சாபம் பெற்ற கார்கோடகன் திருவாலங்காட்டில் திருநடம் காணத் தவம் செய்கிறான். இந் நடனத்தில் பாம்புகள் இடம் பெறுகின்றன என்பது உறுதி.

அன்னையின் வேட்கைக்கிணங்க, தவம்புரிந்த அன்னைக்குத் திருப் புத்தூரிலே இறைவர் கௌரி தாண்டவக் காட்சி தருகின்றார். கோடித் திங்கள் ஒளியோடு, வியத்தகு பத்துக் கைகளோடு வலக் கைகளில் முத்தலைவேல், மழு, துடி, அம்பு, வாள் முதலிய பொலிய, இடக் கைகளில் தீ, பாசக் கயிறு, கேடயம், வில், அஞ்சலிக்கை முதலியவற்றோடு திருநடம் இயல்கின்றது. சுபன்னம் என்ற பறவை ஒன்றும் ஒரு கையில் இருந்ததாகக் குறிக்கப்படு கின்றது. கரிக்குருவிக்கு அருளிய படலத்தில் தவிர பிறவாய்ப்புக்களில் இப்பறவை காட்சி காண்பரிது. கங்கை, வளர்மதி, வலக்காதில் ஆணணியும் காதணி இடக்காதில் பெண்ணணியும் காதணி, தோலாடை, ஒலிக்கும் மறைச்சிலம்புகள், வளைந்த இடக்காலில் அனந்தன், இடது தொடையில் கார்கோடகன், முப்புரிநூல் வலது தூக்கிய திருவடியில் வாசுகி, முதலிய வற்றோடு பிற இடங்களிலும் பாம்புகள் அணி செய்ய இறைவன் ஆடுகின்றார். மற்றும் இலக்குமி தாண்டவச் சருக்கத்தில் மாலும் திருமகளும் வேண்ட தாண்டவம் இயல்கின்றது.

திருவாலங்காட்டுப் புராணம் தலப் பெருமையினைப் புகல்கையில் சுநந்த முனிவரும், கார்கோடகனும் செய்யும் தவத்திற்காகக் காளியின் திருமுன் நடம்புரியப் போவதாகத் திருமால், ஆதி சேடனுக்குரைப்பதாக உரைக்கின்றது. சும்பன், நிசும்பன் என்ற அசுரர்களைக் கொன்று அவர்தம் குருதியைக் குடித்த காளி, குருதி குடித்த மயக்கத்தால் ஆலங்காட்டில் அழிவை ஏற்படுத்துகிறாள். நாரத முனி செய்தியை நம்பர்க்கு நவில்கின்றார். பிறைசூடிய பெம்மான் காள ருத்ர பைரவராகி, பூதகணங்கள் சூழ, வந்து காளியோடு கூத்துப் போரியற்றுகின்றார். இறைவன் கொடுகொட்டியில் மெல்லசைவுகள் காட்ட, காளி இறைவன் சோர்ந்து விட்டதாக நினைக் கிறாள். வென்ற வெற்றி வெறியில் காளி தன் எட்டுக் கைகளையும் விரைந்து வீசிச் சுழன்று சுழன்றாடுகிறாள். பரமன் இறுதிச் சங்காரம் செய்யும் சண்ட தாண்டவம் எனப்படும் பாண்டரங்கம் ஆடுகையில் வலக்கால் மேலேழு கின்றது. தீ, துடி, முத்தலைவேல், அபயகரம், முதலிய ஏந்திய கைகள் நாற்றிசைகளையும் எட்டின. பாம்புகளும் மறைச் சிலம்புகளும் ஒலித்தன. கங்கையும் பிறையும் மட்டும் கூத்தில் குளிர்த்து அடங்கின.

திருப்புத்தூர்ப் புராணத்தின் நிருத்த யுத்த சருக்கத்தின்படி இறைவன் ஆலங்காட்டிற்கு எட்டுக் கைகளில், மண்டையோடு, முத்தலைவேல், அங்குசம்,

பாசக்கயிறு, வாள், கேடயம், வஜ்ராயுதம், மணி முதலிய ஏந்தி வருகிறார். இறைவன் ஆடிய விரைவால் அடிபணிந்த காளியுட்பட அனைவரும் மயக் கமுற்றனர். இறுதியில் இறைவர் அமைதியுற்றார் என்பது பெறப்படுகினறது.

சிவப்பிரகாசர் இயற்றிய திருக்கூவபுராணம் சற்று மாறுபட்ட கூற்றினைத் தருகின்றது. தாருகாசுரனைக் கொன்ற காளி வெறி கொண்டார். தேவர்களின் வேண்டுகோட்கிணங்க வந்த இறைவனைக் காளி கூத்துப் போருக்கழைக்கிறாள். சிவபெருமான் முன் காளி தலை குனிகிறாள். இரக் கமெய்தி இறைவர் காத்தல் நடனமாய இரட்ச தாண்டவம் காணக் கூவபுரம் வருக என அருளுகின்றார். இதனால் காளி தாருகமாதா என அழைக்கப்படு கிறாள்.

திருக்கயிலையில் சந்தியா தாண்டவமும், பொன்னம்பலத்தில் ஆனந்த தாண்டவமும் ஆலங்காட்டில் சண்ட தாண்டவமும், கூவபுரத்தில் தாருகமாதா வுக்காக நாள்தோறும் இரட்ச தாண்டவமும் ஆடப்பெற்றன.

கோயில் புராணத்தில் ஆனந்த தாண்டவம் விளக்கப்படுகிறது. தாருகவன முனிவர்கள் இறைவர்க்கெதிராக புலி, தீ, பாம்பு, முயலகன் முதலியவற்றை ஏவுகின்றனர். அருட்செல்வராய இறைவர் பொய்மை யாளராய முனிவர்கள் அனுப்பிய பொருட்களைத் தமது விளையாட்டுக் குரிய பொருட்களாக்கிக் கொண்டு முயலகன் மீது நடம்புரியத் தலைப்படு கின்றார். பேரண்டத்தின் மையமாய திருத்தில்லையில் ஆதிசேடனின் வேண்டுதற்காகப் பதஞ்சலியும், வியாக்ரபாதரும் காணுமளவில் இறைவனது திருநடம் மீண்டும் இயல்கின்றது.

மதுரைப் புராணங்கள் ஏதும் திருப்புத்தூர்ப் புராணம் கூறியவாறு மதுரையில் சந்தியா தாண்டவம் நடைபெற்றதாகக் கூறவில்லை. ஆனால் கால்மாறி ஆடிய நடம் குறிப்பிடப்படுகின்றது. மயிலேறும் பெருமாள் பிள்ளையவர்கள் தம் கல்லாட உரையில் கல்லாடம் கழலும் மதுரைத் திருந டனத்தை விளக்குகிறார். தேவதேவனாய மதுரை இறைவன் தேன்பிலிற்றும் திருக்குரளாரொடு வெள்ளியம்பலத்தில் பேரானந்தத்தோடு அன்பு நடம் புரிகின்றார். பார்வதி தழுவியாடும் நடத்திற்கு இலாஸ்யம் என்றும் சித்திர குண்டலி என்றும் பெயர். இலாஸ்யம் என்பது அமைதியாக ஆடுவது. ஆடுவோர் அமர்ந்து அபிநயம் செய்வதை இலாஸ்யம் என்றும் நின்று ஆடுவதைத் தாண்டவம் என்றும் நூல்கள் நவிலும். ஒரு வேளை அன்னையும் அருளாளரும் இணைந்தாடுவதால் இதனை இலாஸ்யம் என்று வகுத்திருக் கலாம். இதனை நோக்குழி சந்தியாதாண்டவம் மதுரையில் ஆடப்படவில்லை என்று கருத இடமுள்ளது.

இவ்விலாஸ்யமே, சந்தியா தாண்டவம் என்று கருதினால் மட்டுமே இக்கோயிற்புராணச் செய்தியும் திருப்புத்தூர்ப் புராணச் செய்தியும் இணைய இயலும்.

திருக்குற்றாலத் தலபுராணம் திருக்குற்றாலத்தில் இறைவன் மகாபரம ரகஸ்ய நடனம் ஆடியதாகக் கூறுகின்றது. ஆனால் திருப்புத்தூர்ப் புராணம் திரிபுரா தாண்டவம் ஆடியதாகக் மட்டும் கூறுகின்றது. திருகுற்றாலப் புராணப்படி அருள்வடிவாய இறைவன் யாருமறியா வண்ணம் அன்னைக்கு மட்டும் கட்புலனாகு வண்ணம் வெளியாகிய நடத்தில் தூய அறிவு வடிவாக நடம்புரிகின்றார். நடம் இயலும் போது இறுதித் தன்னியக்கத்தின் இயல்பாக

எல்லாம் மறைகின்றன. தேவர்களும் இருடிகளும் நடங்காண விழைகின்றனர். வாசுகி என்னும் பாம்பு திருக் கயிலை வந்து நடனக்காட்சி நல்க வேண்டுகிறது. தில்லைக்கு வந்து ஆனந்த நடம் காண அருளுகின்றார் இறைவன். காளியின் ஆணவத்தைப் பணியவைத்து பொன்னம்பலத்தில் ஆடிய பாண்டரங்கத்துக்குப் பூதங்கள் பாட்டுப்பாடின. முயலகன் நசுக்கப்பட்டான்.

பாண்டரங்கம் முதலிய நடனங்கள் எல்லோர் கண்கட்கும் தெரிவன. ஆனால் அண்டமெல்லாம் ஆடிப்படி கொண்ட அழகிய மறைவான நடனத்தை என் துணைவியான உமை மட்டுமே காண இயலும் என்பதை இறைவனே தெரிவிக்கின்றார்.

தென்மதுரையில் வெள்ளியம்பலம், வெற்று வெளியாகிய தில்லைப் பொன்னம்பலம், ஆலங்காட்டு மணிமன்றம், தூய்மைக்கிடமான நெல்லைத் தாமிர சபை முதலியன எல்லோர் அறிவுக்கும் எட்டுவன ஆகையால் யாரும் காணலாம்.

ஆனால் திருக்குற்றால சித்திரைசபை என்பது மறைவுக்கெல்லாம் மறைவாகிய பரம ரகஸ்யம். வாசுகியின் தவத்திற்குப்பின் வாசுகிக்கும் பிறருக்கும் இம்மறை நடனத்தை இறைவன் திருக்குற்றாலத்தில் பரமன் ஓவியமாக எழுதிக் காட்டுகின்றார். எனவே சித்சபை என்பது சித்திரசபை எனப்பட்டது.

திருப்புத்தூர்ப் புராணம் திருப்புத்தூர் அவையைச் சித்சபை எனப்புகல்கின்றது. இத்திருக்குற்றால அவையின் பெயர் சித்சபையாகவும் இருக்கலாம். மற்றும் இத்திருக்குற்றால புராணம் திரிபுர தாண்டவத்தைக் குறிப்பிடவும் இல்லை.

திருப்புத்தூர்ப் புராணத்தின் செய்திகள் பிற தலபுராணங்களின் செய்திகளோடு இயைவில்லையாகையால் ஊர்கட்கேற்ற கூத்துக்களைத் திருப்புத்தூர்ப் புராண வழி முடிவு செய்ய இயலாது என்பது துணிவு.



Patanjali (Courtesy—Ananda Vikatan)



Vyaghrapada (Courtesy—Ananda Vikatan)

3.00 சிவதாண்டவ மூர்த்தங்களின் வழிபாட்டு முறைகளின் தத்துவச் சிறப்புக்கள்.

.001 மூர்த்தங்களும் வழிபாடும்

தெய்வ மூர்த்தங்கள் தியானத்துக்கும், யோகத்துக்கும், வழிபாட்டுக்கும் இலக்காக அமைவன. சைவ மரபில் கருவறைத் தானம் சிவலிங்கத்துக்கே உரியது. யாதொரு மூர்த்தத்தினை வழிபடினும் அதன் பலனும் பிறவும் சிவலிங்கத்துக்கே போய்ச் சேர்வன.

சிவ தாண்டவ மூர்த்தங்கள் சற்று மேநிலை உடையன. தோற்றத்தால் தத்துவத்தை விளக்கும் ஆகார்ய ஆங்கிக நிலைகளை உடையனவாக மாயா பிரம்ம தத்துவ மேனோக்கோடு சீவ சிவ உறவை வெளிக் காட்டுவன.

அவற்றின் வழிபாடும் பல்வகைப்படுவன. அட்டவீரட்ட அனுக்கிரக நிலை, வழிபடுவோர்க்கு தாள்தலை முத்திக்கு வழிகாட்டுவன. நடேசர் திரு வுருவங்கள் தாள் தலை முத்திக்கு மேல் பிரபஞ்ச இயல் விளக்க நோக்குடையன. ஆனந்த நடராசர் இவ்விரண்டுக்கு மேல் சகல சிவபராக்கிரமங்களையும் தேவ நிலைகளையும் லயம் செய்து கொண்டு தரிசனம் தரும் ஊர்த்துவ நிலையாகும். ஆனந்த தாண்டவர் யோக வழிபாட்டுக்குரியவர். நடேசர்கள் எல்லா வழிபாடுகளோடும் நடன வழி பாட்டையும் பெறுபவர். ஆடவல்லார் மட்டும் அன்றி, ஆட்ட வல்லார் மற்றும் ஆடக விரும்பி நடராச ராசராசர் என்னும் சித்சபா மூர்த்தியாக இரகசியத் தானத்து சிதம்பர சக்கரத்தில் லயமும் சிருஷ்டியுமாக யோகப் பலனாக இருக்கும் இறைவர்.

இறைவர் மூர்த்தமாகவும், வழிபாட்டு முறையாகவும், வழிபாட்டு மந்திரமாய திருவைந்தெழுத்தாகவும் உள்ளார். இவையனைத்துக்கும் மேல் நடமிடும் தில்லைக் காடாகவும், சிதம்பரமாகவும், சித்சபையாகவும், சித்சபையின் ஆத்மக பௌதிக உறுப்புக்களர்கவும் சாத்திரங்களாகவும் பக்தனாகவும் அனைத்தாகவும் உள்ளார்.

வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள், வழிபடு நிலைகள், வழிபடு மந்திரங்கள் வழிபடு தலம், வழிபடு கோவில் முதலியன யாவும் ஒன்றை யொன்று பின்னிப் பிணைந்து நடராச மூர்த்தத்தினைச் சுற்றி வருவதைப் பின்வரும் பகுதிகளில் காண்போம்.

ஆடல்வல்லார்க்கு நடன வழிபாடு

ஆடல்வல்ல எம்பிரானை நடனமாடி வழிபடும், நடன வழிபாட்டு மரபு சிந்துவெளியிலேயே தொடங்கியது எனலாம். இவ்வழிபாட்டு முறை நாட்டிய வேதத்தும், இலக்கியத்தும், கல்வெட்டுக்களிலும், அன்றாட பக்தி வாழ்வின் நடை முறையிலும் தக்க இடம் பெற்றுள்ளது. நடன வழிபாட்டு முறை பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

.002 நாட்டிய மரபில் வழிபாட்டு நெறி

ஒடிசி, பரதம், குச்சுப்பிடி ஆகிய நடனங்கள் இன்றளவும் பெரும்பான்மையும் இறைவனுக்கு அர்ப்பணமாகவே ஆடப்பட்டு வருகின்றன. நாட்டிய சாத்திரத்தில், நந்தியை விளிக்கையில், சூத்திரதாரி, நாட்டியத்தை தேவதைகட்கு மகிழ்வினையுண்டாக்கக் காணிக்கையாக்குவதாகக் குறிப்பிடுவதும் இதனை உணர்த்தும். நாட்டிய சாத்திரத்தின் காலம், கி.பி. நான்காம், ஐந்தாம்

நூற்றாண் டென்பர்.[1] டாக்டர் சிவராமமூர்த்தி அவர்களும், அன்னிமேரி கேஸ்டன் அவர்களும் நடன வழிபாடு, தொடக்க காலம் முதல் நம் நாட்டில் இருந்து வந்ததைப் பல கல்வெட்டு, காவிய எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி யுள்ளனர்.

.003 பக்தி வாழ்வில் நடன வழிபாடு

ஜாட் இனத்தைச் சேர்ந்த வட இந்திய மக்கள் இன்றும் சிவதாண்டவம் ஆடிவருவதாக ஆனந்த மார்க்கத் துறவி ஒருவர் நவின்றார். இன்றைய அளவில் வைணவர்கள் பிருந்தாவன நடன வழிபாட்டினை ஒவ்வொரு கோவிலிலும் பஜனை மடங்களிலும் செய்து வருகின்றார்கள். ஆனந்த மார்க்கம் நெறியைச் சேர்ந்த சாதகர்கள், பழைய சிவதாண்டவ வழிபாட்டு முறையினைப் பின்பற்றி நாள்தோறும், இரண்டு அல்லது மூன்று வேளை களில் ஆண் சாதகர்கள் தாண்டவத்தையும், பெண் சாதகர்கள், கைசிகி நடனத்தையும் வழிபாட்டு நெறியாக ஆடி வருகின்றனர். அதிவிசேட நாட் களில் நள்ளிரவில் நன்காட்டில் நடனமாடும் சடங்கினையும் அவர்கள் இன்றும் பின்பற்றி வருகின்றார்கள். ஆனந்த மார்க்கத்தின் பக்தர்கள் விரும்பி அழைத்தால் இல்லங்களிலும் நடமாடி வழிபடுவர். இது மட்டுமின்றி, இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் அடிக்கடி பாவனா நிலையில் ஆடிச் சமாதி எய்தியமையினை அவர்கள் தம் வரலாற்றில் படிக்கிறோம். துக்கா ராம், பண்டரிநாதர், முதலியோர் பாடி பாவனா நிலையில் ஆடிவந்துள்ளதை நாடகங்களில் காண்கிறோம். தளியிலார் நடன வழிபாட்டு வைபவங்களைக் கண்டு லயித்தவர்கள் ஆடி வழிபட்டிருக்கலாம். சிவன் மேற்றாய ஆனந்தம் சீவன் மேல் எய்த, ஆடலும் பாடலும் நல்ல வழிபாட்டு நெறிகளே என்பதில் ஐயமிருக்க வாய்ப்பில்லை. கூத்தப்பிரான் ஆடல் வல்லவர். அவருக்கு இயற் றப்படும் வழிபாட்டு முறைகளில் ஆடுதலும் ஒன்று.

.004 இலக்கியத்தில் நடன வழிபாட்டுக் குறிப்புக்கள்

சிலப்பதிகாரத்தில் நடுகற் காதையில், கூத்தச் சாக்கையர், திரிபுர தகன புராண வரலாற்று அடிப்படையில் அமைந்த கொடுகொட்டி, பாண்டரங்கம் என்ற நடனங்களை ஆடி வழிபட்ட நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் எனக் கொள்ளலாம். கலித்தொகை வாழ்த்துப் பாடலில் கொடு கொட்டி பாண்டரங்கம் காபாலம் முதலிய கூத் துக்கள் பற்றிய செய்திகள் வருகின்றன. கலித்தொகையின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு. நாட்டியம் என்பது ஐந்தாவது வேதம் என்பர். பிரம்மன் இரிக் வேதத்திலிருந்து சொற்பொருள்களையும், சாம வேதத்தி னின்று இசையையும், யஜூர் வேதத்திலிருந்து அபிநயம் முதலிய முத்திரைகளையும், அதர்வண வேதத்திலிருந்து ரசபாவ சுவைகளையும், நாட் டிய வேதத்திலிருந்து சிந்தனை, செயல், தர்மம், கலைகள் முதலிய அனைத்தையும் எடுத்துக் கொண்டதாக நாட்டிய சாத்திரம் புகலும். நாட்டிய சாத்திரத்தின் காலம் கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டென்பர்.[2] காளிதாசன் தனது மேகதூதத்தில் உஜ்ஜயினி மகாகாளர் கோவிலில் தேவ தாசிகள் கைகளால் சாமரம் வீசி இன்னோசைகட்கிடையே நடமாடி வழிபட்ட செய்தியைக் கூறுகின்றார்.[3] காளிதாசரும், மாளவி காக்னி மித்திரத்தில் நடனம் கடவு ளர்க்கு மகிழ்வு தரும் காணிக்கையாக இயற்றப்படுவதைக் குறிப்பிடுகின்றார். காளிதாசரின்காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டென்பர்.[4] இராஜதரங்கி

1. கேஸ்டன், ப : 14, சிவராம, ப : 21
2. அக்தே
3. கேஸ்டன், ப : 9, 10
4. கெய்த், ப : 9

னியில் லலிதாதித்ய முக்தபீடன் காலத்தில் நடன மங்கையர் கோவில்களில் பரம்பரையாக நடன வழிபாடு நடத்திய நிகழ்ச்சி குறிப்பிடப்படுகின்றது.[5] இராஜதரங்கினியின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

.005 கல்வெட்டுக்களில் தளியிலார் செய்திகள்

பிரபூதவர்ஷரின் கல்வெட்டொன்றில், கண்ணேஸ்வரர் கோவிலில், மதிமுக மங்கையர் பலர் தீபதூப காலங்களில் நாட்டிய முத்திரைகளால் வழிபாடியற்றிய செய்தி போற்றப்படுகின்றது.[6] விஜயசேன மன்னரின் தேயோபரக் கல்வெட்டொன்றிலும் மதிமுக மங்கையரின் நடனம் சிவபெருமானுக்குக் காணிக்கையாக்கப்படும் செய்தி நவிலப்படுகின்றது.[7] புவனேஸ்வரத்தில் அமைந்த கீழைக் கங்க மன்னரான அணியங்க பீமனின் கல்வெட்டொன்றில், ஸ்வப்பனேஸ்வரர் கோயிலில் நிருத்த அரம்பையர் மூவுலகங்களின் அசைவையும் அழகுற இறைவன் சந்நிதியில் ஆடிய செய்தி கூறப்பட்டுள்ளது.[8] தஞ்சை இராச இராசேசுவரம் திருக்கோயிலில் இராசராச சோழன் ஏற்பாடு செய்த நானூறு தேவதாசியர் நடனமாடி வழிபாடியற்றியுள்ளார்கள். இராசராசன் காலம் கி.பி.பத்தாம் நூற்றாண்டு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் நானூறு நடனமகளிரை பிரகதீசுவரர் கோவிலுக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளான்.[9] இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் திருக்கோயில் வழிபாட்டின் போதும், திருவீதியுலாவின் போதும், திருத் தேரின் மீதிருந்தும் நாட்டிய அஞ்சலி நடைபெற்று வந்தது நாமறிந்தது.

சிற்பங்களில் நடனக் கரணங்கள்

தஞ்சை, விருத்தாசலம், குடந்தை, தாராசுரம், திருவண்ணாமலை கோவில்களில் பரத நடனச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சிவதாண்டவத்தின் உட்கிடை

பெருமானது யோகக் கோலம்

நின்ற திருக்கோலமாயினும், இருந்த கோலமாயினும், நடனக் கோலமாயினும், சிவபெருமானது கோலம் முழுமையும் யோக அம்சங்கள் நிறைந்த ஒரு மோனஞான யோகியின் திருக்கோலமாகவே அமைந்துள்ளமை கண்கூடு. ஆலமர் கடவுளாய தட்சிணா மூர்த்தியின் திருக்கோலம் முழுமையான யோகக் கோலம். நடராசக் கோலம் ஓர் இயக்க அமைப்புள்ள யோகக் கோலம் எனலாம். பெருமான் அணிந்துள்ள திருநீறு, அக்குமணி மாலை, புலித்தோல், அரவணி, முதலியனவும், அவரது நன்காட்டு விருப்பம், பிச்சை புகு நிலை, ஊமத்த மலர் தொடர்பு முதலியனவும் யோகத் தொடர்புடையன. சிந்துவெளி அகழ்வாய்வில் கண்ட இருந்த கோலக் கொம்புடைய தெய்வக் கோல அமைப்பும் யோகத் தெய்வக் குறிப்பேயாகும். சிவபெருமானை வழிபட ஓதும் பிரணவ மந்திரமும், திருவைந்தெழுத்தும் யோக அனுபவ நுண்மை காட்டுவன.

திருமந்திரமும் திருக் கூத்தும்

கூத்தப் பிரானின் தத்துவங்களையும், சைவ சித்தாந்தத்தின் உட்கிடையினையும், அறியக் கிடைத்துள்ள பழைய தமிழ் நூல்களுள் பழமையானவற்றுள் ஒன்றும், சிறந்ததும் திருமூலரின் திருமந்திரமாகும். திருமந்திரத்தின் பாயிரத்தில், திருமூலர், தான் தென் திசைக்கு வந்ததன் காரணத்தைக் கூறும் போது "நீல நிறமான திருமேனியையும், நேர்மையான அணிகளையுமுடைய சகஸ்ராரம் முடிய நடித்தருளும் ஐந்தொழிற் கூத்தினது,

5. சிவராம, ப : 9, கேஸ்டன், ப : 13
6. அஃதே ப : 9
7. அஃதே. ப : 4, 5
8. அஃதே. ப : 5
9. அஃதே. ப : 4
10. திருமந்திரம் 77

இயல்பினை விளக்கும் வேதத்தை உலகினுக்குச் சொல்ல வந்தேன்" என்பார்.[10] வேதப் பொருளின் உட்கிடையே திருக் கூத்து என்பதும் இதன் பொருள். திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்தில் எண்பத்திரண்டு பாடல்களில் திருக்கூத்துத் தரிசனம் விளக்கப்படுகின்றது. மற்றும் ஐந்தாம் தந்திரம் தவிர பிற தந்திரங்கள் அனைத்தினும் அம்பலவாணர் நினைவூட்டப்படுகின்றார். இத்திருக் கூத்துத் தரிசனம், திருமூலர் தாம் யோக வழி நின்று, பிரணவத்திற் புகுந்து, திருவைந்தெழுத்தில் விரிந்து கண்ட, சிவ நடன தரிசனமாய அகவழிபாட்டின் நுண் பொருளாகவே திகழ்கின்றது. திருமந்திரத்தின் துணை கொண்டு, திருவாசகத்தையும், திருவருட்பாவையும் நினைவில் கொண்டு திருக் கூத்தின் யோக உட்கிடையை அறிவது நன்மை பயப்பதாகும்.

யோகம் - சித்த விருத்தி நிரோதம்

யோகம் என்பது அறிவுக்கலையின் முழுமையான அனுபவ முறை. கர்மேந்திரிய ஞானேந்திரியங்களை அதனதன் விஷயங்களிலிருந்து திருப்பி, மனத்தை ஒரு முகமாக ஆத்மத் தியானம் செய்யும்படி தூண்டுவது யோகத்தின் செயலான பதஞ்சலி முனிவர் கூறும் "சித்த விருத்தி நிரோதம்".[11]

ஆனந்த நடராச நெறி

"சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று சேர்வதே யோகம்" என்பார் யாக்ஞவல்யர்.[12] சிவ சீவ ஐக்கியம் எய்திக் கடவுளோடு வாழும் யோகம், நிலை பேறுடைய ஆனந்தத்தைத் தருவது. ஆனந்தத்தைத் தரும் இறைவன் ஆனந்தசாகரமாவார். இக் கடவுளே ஆனந்த நடராசர்.

குண்டலினி யோக அடிப்படைகள்

குண்டலினி யோகத்தில், நாடிகள் ஆதாரச் சக்கரங்கள் என்பன அடிப் படைக் கூறுகள். நாடிகள் பிராணன் சஞ்சாரம் செய்யும் சூட்சும தேகத்தின் நாடிகள் போன்றவை. ஆறாதாரச் சக்கரங்கள் அல்லது பத்மங்கள் என்பவை ஆத்ம சக்தியின் மத்திய ஸ்தானங்கள்.[12அ] மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும், இவ்வாறுக்கும் மேலான ஆயிரம் இதழ்த் தாமரை என்னும் சகஸ்ர நிலையையும் சேர்த்து ஏழாதாரங்கள் எனலாம்.[13] மூலாதாரம் முதல் சகஸ்ராரம் வரையான சக்கர, பத்ம இட நிலைகள் பிற்சேர்க்கை ஓவியத்தில் காட்டப் பட்டுள்ளன.

நாடிகளின் இயக்கம் - நடன இயக்கம்

யோகத்தின் நுண் அடிப்படை நாடிகளின் இயக்கம். இந்நாடிகள் சூட்சும தேகத்தில் உள்ளவை. இந்நாடிகளும், சக்கரங்களும் கட்புலனாகா நுண் சீவ ஆற்றல் இயக்கமுடையவை. இடை, பிங்கலை, சுழுமுனை என்று கூறப்படும் மூன்று நாடிகளும் முறையே சந்திரன், சூரியன், அக்கினி ஆகியவற்றின் சக்திகளைக் கொண்டவை. எனவே இடை நாடியைச் சந்திரநாடி என்பர். இடை நாடியுள் உள்ள காற்று குளிர்ச்சியானது. பிங்கலை நாடியைச் சூரிய நாடி என்பர். சுழுமுனையை அக்கினி என்பர். இடை நாடி மெல்லிய கோடு போன்றும், பிங்கலை நாடி தடித்த கோடுபோன்றும் காட்டப்படும். இதனைப்

11. விவேகானந்தர், இராஜயோகம், கல்கத்தா, 1982, ப : 115
12. சுவாமி சிவானந்தர், சமாதி யோகம், ராசிபுரம், 1984 ப : 26,.
12. அ. குண்டலினிசக்தி
13. யோக மரபு

பரை என்றும், சாம்பவி சக்தி என்றும் கூறுவதுண்டு. வீணாத்தண்டென்னும் முதுகந் தண்டின் இடப்பகுதியில் இடநாடியும், வலப்பகுதியில் பிங்கலையும், முதுகந்தண்டின் உள்ளே சுழுமுனையும் இயங்குவன. இடபிங்கலை நாடிகள், நாபியிலுள்ள, விளம்பினி நாடியில் சேர்க்கப்பட்டனவாக மூக்கின் நுனி வரை செல்கின்றன.

சந்தியா காலம்

இடை, பிங்கலை நாடிகளின் இயக்கம் உயிரின் இயக்கம். சுழுமுனை என்பது உயிர்நிலை.[14] சுழுமுனை நாடிக்குள்ளேயுள்ள அக்னி மூலாதாரத்திலிருந்து தலை உச்சி வரை செல்கின்றது.[15] போதாயன வழிபாட்டு முறையில் சுழுமுனையை வில்வ மரமாகக் குறிப்பிடுவர்.[16] அனாகதச் சக்கரம் தில்லைவனமாகக் குறிக்கப்படும். ஒரு முகூர்த்த நேரம் அல்லது நாற்பத்தெட்டு மணித் துளிகளில், அபானன் இடை நாடியிலும் பிராணன் பிங்கலை நாடியிலும் அசையும். இவ்விரு நாடிகளிலும் மாறி மாறி வரும் உச்வாச நிச்வாசங்கட்கிடையே, சிறிது நேரம் சுழுமுனை நாடி துடிப்பாக இருக்கும். இந்நேரங்களில் சோம சூரிய அக்கினி சக்திகள் சந்திக்கும். இந்நேரம் யோக நிலையில் ஒரு சிறப்புக்குரிய உயர் நிலையாகும். இந்நேரம் சந்தியா காலம் எனப்படும். சிவபெருமான் சந்தியா காலத்தில் நடமிடுவதாகக் கூறப்படுகின்றது.[17]

திரிவேணி

கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று நதிகள் கூடுமிடத்தைத் திருவேணி சங்கமம் என்பது போன்றே, யோகத்தில் இடை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளும் கூடுமிடத்தைத் திரிவேணி என்பர்.[18] யோகிகள் புருவ மத்தியில் ஆக்ஞாவில், இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் கூடுமிடமான திருவேணியில் ஒரு மின்வெட்டு ஒளியை உணர்ந்தனர். இம் மின்வெட்டு, சகஸ்ராரத்தில் முட்டினால் அங்கிருந்து அமுதப் பிரவாகம் சகல நாடிகளிலும் தெரியும்.[19]

சுழுமுனை நடனம்

சுழுமுனை நாடியாகிய மூல நாடியின் உச்சியில், சோதி பெற்று, அருள், பொங்கி எழுந்து சுரக்கையில், யோகியின் மனம் புறம் போதலை விட்டு அடங்கியிருக்கும். அவண் சங்கரன், அங்குசம் போன்று எழுகின்ற நாத சம்மியத்தில், சிவ போத மாய அறிவில் பொருந்திய தொம், தீ ம் எனத் தட்டும் தாள ஒத்தினில், திரு நடம் புரிவது ஆன்மாவால் உணரப்படும்.[20]

நடன தரிசனப் பலன்

மூல நாடியில் எழும் யோகக் காட்சியாய பேரொளியைக் (நடனத்தை) கண்டவுடன், பாலனாகவும், பரப்பிரம்மாகவும் வாழும் பயன் கிட்டும் எனச் சிவ வாக்கியர் மொழிவார்.[21]

அவனேயாதல்

வாசியோகத்தில், இதயத் தானத்தும், சுழுமுனை தாண்டவத்தாடும், சகஸ்ராரத்துள் சென்று, கும்பக நெறியால், இரவி, மதியாகிய இடை, பிங்

---

14. நஜன், குண்டலினி சக்தி, சென்னை, ப : 145
15. அஃதே, ப : 144-45
16. சுவாகானந்தர் ப : 34
17. சாமு, ப : 92
18. அஃதே, ப : 110, 2, சுவாமி சிவானந்தர், சமாதி யோகம், ப : 239
19. நஜன், வாக்வாகினி, சென்னை ப : 94
20. திருமந்திரம் 2735
21. நஜன், குண்டலினி சக்தி, சென்னை, ப : 102

கலை தாண்டி நெற்றிக்கு நேரான முக்கண்ணையும் கொண்டு (புருவமத்தி) குண்டலினி சக்தியைத் தலைக்கோயிலாம், பரமவியோமப் பராபரத்து சகஸ்ராரத்துச் செலுத்தி, ஆண்டவனோடு ஒன்றாகி, அவனாகவே அணையலாம்.[22]

சராசர அசைவு

சிவனாகிய நாதன் சீவர்கள் மூலநாடியில் நடிக்கும் நடிப்பில் அண்ட சராசரங்கள் அசைகின்றன. அண்ட சராசரங்களும் இயங்கி, உலகமும் அண்டங்களும் இயங்க இந்நடனம் தேவை. இவண் சிவன், சீவர்களாய பசுக்களின் அறியாமையைப் போக்க விரும்பி நடம் புரிகின்றான்.[23]

நவந்தருபேத நட்டம் .

மூல நாடியில், சோதி நடனம் இயன்ற நிலையில், சீவர்கள் இறை அறிவு பெற்ற பின், அச் சீவர்கள் அவரவர் தம் நிலைக் கேற்ப, இறைவன், அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று என்று கூறப்படும், விந்து, நாதம், சக்தி, சிவம், பிரமன், திருமால், ருக்திரன், மகேஸ்வரன், சதாசிவம் என்னும் சிவலிங்கம் ஆய நவந்தரு பேதங்களாக, ஒன்பது வகையாகப் பொருந்தி ஆடுகின்றான்.[24] நவந்தரு பேதங்களாக ஆடும் நட்டம், ஐந்தொழில் கூத்தின் வளர்நிலைப் பெருக்கமே.[25]

நன்காடு

அறிவுப் பெருக்க நிலையில் ஆட்டம் நிகழ்வது. அறிவு குறைந்த அஞ்ஞானமான மன நிலையை மயானம் என்பர். ஒடுங்கியும், தோற்றியும், அமையும் இயல்புக்கு இடம் தரும் யோகியின் மனத்தைப் பேரொடுக்கப் பெருங்காடென்பர். அவண் ஆட்டம் வலுவடைகின்றது.

நாடித் தலங்கள்

பூத அண்டத்தில், கைலை, தில்லை, இலங்கை ஆய மூவிடங்களும், சிவபெருமான் உறையும் நடமிடும் புண்ணியத் தலங்கள் ஆகும்.[26] இறைவனது திருநடனம், பூதாண்டத்தும், சீவனின் பிண்டத்தும் ஒருங்கே இயல்கின்றது. பூதாண்டத்தில் வடபாலமைந்த இமயமும், தென்பாலமைந்த இலங்கையும், நடுவண் அமைந்த தில்லையும், சீவனின் பிண்டத்து முறையே இடைநாடியாகவும், பிங்கலை நாடியாகவும், சுழுமுனை நாடியாகவும் அமைகின்றன. சகஸ்ராரத் தலமான சிரசின் இடப்புறம், பனிப்படலம் போன்று இடைநாடிப் பகுதி இமயமாகவும், வலப்புறம் தீவு போல் பிங்கலை பகுதி தெக்கணம் என்னும் இலங்கைத் தீவாகவும், சுழுமுனைப் பகுதியாய சகஸ்ராரமையம் பரவெளியாகிய மேருவாகவும், இவை அனைத்திற்கும் வேராக இருதயாகாசம் என்னும் அநாகதம் அமையும் என்றும் குறிக்கப்படும் இடம் தில்லையாகவும் அமைவதாகத் திருமந்திரம் கூறும்.[27] தில்லையைச் சுழுமுனை என்பதும் உண்டு.[28]

கைலையும், தில்லையும்

புராணங்கள் போற்றும், சூலபாணியாக, இறைவன் சந்தியா தாண்டவம் இயற்றிய இடம் கைலை. கைலை இறைவனின் தொன்மைத் திருவிடம்.[29] யோக நெறியில், குரு உணர்த்த, இடகலை வழியாகச் சந்திர

22. அஃதே, ப : 145
23. திருமந்திரம் 2736
24. „ 2736
25. „ 2736, 2777
26. „ 2754
27. „ 2754, 2748
28. „ 2748, 2754
29. „ 2750

மண்டல ஒளியாய் மேலான ஆனந்தம் பெருகும். இது உயிரனுபவம். இடப்பால் சந்திரகலையில் விளங்கும் சிவன், வலப்பால்சூரிய கலையை அடையும் போது, உடம்பில், அவன் உள்ளத்தில் இன்பம் பெருகுகின்றது. இவண் நாடி மாற்றத்தின் போது வாசியோக சிவசக்தியின் நித்திய ஆனந்த நடம் இயல்கின்றது. இந்நாடி மாற்றம் கைலாயக் கடவுள், தென்னகத்துத் தில்லைத் திருக்கோவிலில் நடத்தும் ஆனந்த நடனத்தை ஒப்பது என்பார் திருமூலர்.[30]

நாடித் திருவடிகள்

இடை பிங்கலை என்னும் நாடிகள் நரம்புகள் பற்றித் தொழில் புரிவன அல்ல. இவை ஆகாயக் கூறால் ஆயவை. சூட்சும தேகத்தின் செயல்கள். உலகங்களையும் உடம்புகளையும் இணைப்பவை. இவை அண்ட சராச ரங்கள் அனைத்திலும் ஆனந்த நடம் புரியும் அருளாளராய இறைவனின் திருவடிகள் என்பர் திருமூலர். இவற்றைச் சந்திர சூரியர் என்பர். இவ்விட பிங்கலை திருவடிகள் கொண்டு, சீவனின் உடலின் கண் அமைந்த, சகஸ்ரம் உள்ளிட்ட ஏழாதாரங்களிலும், இக்கருத்துகட்குச் சாதகமாகவுள்ள சமயங்கள் அனைத்திலும், நாதம், நாதாந்தம், நடனம், நடனாந்தம் என்ற நாற் கூறுக ளையும் கொண்டு, இறைவனை, அவர் தம் இடப்பால் இடம் கொண்ட சிவ சக்தி ஆடி இயக்குகின்றாள் என்பது திரு மந்திரம்.[31] யோக, ஒலி-ஒளி,நடத்தின் போது அசைவு தான் தெரியும். அவ்வனுபவத்தை யாவ ரும் அறிய சித்ராபாசமாக, சிற்பமாக ஆக்குகையில், இடைநாடியைத் தூக்கிய திருவடியாகவும், பிங்கலையை ஊன்றிய திருவடியாகவும் காட்டினர். இடை நாடி தூக்கிய திருவடியானது, இவ்விடை நாடியில் உதிக்கும் நாதம், மறைச் சிலம்பொலியானது. யோக பலனாகக் கேட்கும் தசநாதங்கள் திருமுறைப் பாடல்களாகின்றன. யோக தரிசனம் தெய்வத் திருவுருவின் பல்வேறு நடனக் கோலங்களில் காணப்படும் பலவித நட்டங்களாகின்றன. இவண் நடம் இயலும் அம்பலம் சீவனின் உள்ளம். பொருந்திய மந்திர ஒலிகளுடன், ஒளிமயமான சிவன் சீவனின் உள்ளத்தில் நட்டமிடுவதை அகதரிசனமாகக்[32] கண்டவுடன் அஞ்ஞானம் அகல்கின்றது. சிவ, சீவ போதம் உயர்கின்றது.

மூலாதார மூல நடனம்

மூலாதாரத்தில் குண்டலினி சக்தி, முதுகெலும்பின் அடியிலுள்ள மூலா தாரச் சக்கரத்தில், மூன்றரைச் சுற்றுக்களுள்ள, ஒரு மண்டலமிட்ட சர்ப்பம் போன்ற உருவத்தில் செயலற்றுக் கிடக்கின்றது.[33] மூலாதாரத்தில் இப் பிராண சக்தி செவ்வொளியுடன் கூடியது. இதனைக் காமாக்கினி என்பர். மூலாதாரத்தைத் திருவாலங்காட்டு மணிமன்று என்பது உண்டு.[34] மூலாதா ரத்தில் உள்ள ஒளி வேத சொரூபமானது. வேத சொரூபமான, மூலாதார ஒளி ஆட, அச்சிவ நடனத்தால், சகல தத்துவங்களும் ஆட, பிரமனாதியர்க்கு மேலாகவுள்ள சதாசிவ மூர்த்தியுமாட, எல்லா வாசனைகளும் பொருந்தி யிருக்கும், சித்த மண்டலம் ஆட, சிவத்தின் சக்தியும் ஆட, இவை பொருந்தும்படி வைத்த, அசைவன அசையாதனவாகிய எல்லாம் ஆட, அத் தனாகிய சிவன் ஆனந்தக் கூத்தாடுகிறான் என்பார் திருமூலர்.[35] இவண் சந்திரகலை, விந்து ரூபமாக இருக்கும். இறைவன் உலக முகப்படுத்துபவனாக.

30. " 2750
31. " 2753
32. " 2760
33. சுவாமி சிவானந்தர், சமாதி யோகம், ப : 354
34. திருமந்திரம் 2761
35. " 2789

இருப்பான். விந்துவைச் சக்தி என்றும், நாதத்தைச் சிவன் என்றும் மொழி வர்.[36] மூலாதாரத்தில் குலம் திரிந்து, குண்டலினி சக்தி எழுந்து, தொடங்கும் நடனம், இருதயத்தில் அனாகதத்தில், தில்லைத் திருக்கூத்தாக மேலெழுந்து, விளங்கி, உடம்பெல்லாம் ஒளியுருவாய் நின்றும், உடலைக் கடந்தும் விளங்கும் என்பர்.[37]


சுவாதிட்டான நேதத்துவம்

சந்திரகலை, மூலாதாரத்தில் விந்து ரூபமாக இருந்தபோது, இறைவன் உலகமுகப் படுத்துபவனாக இருந்தான். நாத தத்துவம் கடந்த இறைவன், குண்டலினி சக்தி, உந்திக்கமலத்தமைந்த, சுவாதிட்டான மலரை அடையும் போது, சீவர்கள் அங்குப் பொருந்தி உலக இன்பத்தை அனுபவிக்கச் செய் கிறான்.[38] சிவன் சீவனோடுதான் உள்ளான் எனினும், இவண் ஒருமையான நாத தத்துவமும், பிரிக்கப்பட வேண்டிய தத்துவங்களினின்று சீவனைப் பிரிக்கும் நேதத்துவம் என்னும் பிரிக்கும் நிலையிலும் இறைவன் பின்னிப் பிணைந்து உயிரைச் செயல்படுத்துகிறான். இவண் போகமும் தந்து, அவற் றினின்றும் பிரிக்கவும் செய்யும் உயர்நிலை எழுகின்றது. இவண் சுவாதிட்டான மலரில் விந்துவாகவும் அகன்று உயரும் ஒளியாகவும். போக தத்துவ வேறுபாடுணர்த்துபவனாகவும் இறைவன் செயல்படுகிறார் என் பர்.[39] இது மூலாதார மூலநிலையினின்று விரியும் நிலை.


அனாகதத்தில் அங்குஷ்ட அளவில் ஈசானர் நடனம்

இறைவன் உறையும் ஆதாரங்களில், அனாகதமும், சகஸ்ரதளமும் சிறப் புக்குரியன.[40] இடை, பிங்கலை ஆய இரு நாடிகளும் இருதயக் குகையாகிய, அனாகதத் தானத்தை வளைத்துக் கொண்டுள்ளன. இதனைத் தில்லை வனம் என்பர். இவ்விதயத் தானத்தில் இறைவனை வைத்து வழிபடும் முறை, கிரியை முறை எனப்படும். இத் தில்லைத் தானத்தில் இருந்து அசைவாகிய நடனத்தைச் செய்து கொண்டிருப்பவர் ஈசானர்.[41] மனிதனுடைய இதயத் தானம் பந்தத்துக்குள்ளாக்கும் தில்லைவனம். **அவ்விதயத்தில் ஆனந்தக் கூத் தனை நிலைபெறச் செய்துவிட்டால், இதயம் மாசற்ற ஆகாயமாய், பூமிதத்துவ சம்மந்தமான ஆசைகளை விட்டு நிற்கும் என்பதே நடராசத் தத்துவம். இத னையே இரகசியம் என்பர்.**[42] இதயத்தில், அங்குஷ்ட அளவிடத்தில் குடியிருக்கும் இறைவன், ஆத்மாவாகவும், ஆத்ம லிங்கமாகவும் உள்ளான். இதன் சிறப்புக்களையும் நுணுக்கங்களையும் தகரவித்தைக் குறிப்புக்களில் மிகுதியும் காணலாம். நெஞ்சத் தாமரையாகிய அறிவு வெளியிலும், புறத்தே எண்ணிறந்த உலகங்கட்கெல்லாம் களைகண்ணாம் அருள்வெளியிலும், பொது நின்று, ஆனந்த நடம் புரியும் இறைவனை யோகப் பயிற்சியில் கண்டு அறிவார்க்கு, எல்லா அறிவும் எல்லா இன்பங்களும் ஒருங்கெழுந்து பெரு கும்.[43] இதயத்துள்ள ஆகாயத்தினையே உபநிடதங்கள், திரு மந்திரம் முதலியன தகராகாயம் எனப் போற்றும்.[44] திருக் கோயில்களில் நாதஸ்வ ரம், முழவு, வீணை முதலிய இன்னோசைகள் ஒலிக்கின்றன. கருவறையில் ஓங்காரம் திருவைந்தெழுத்து, திருமுறைகள் முதலிய இறையோசைகள் முழங் கப்படுகின்றன. கல்லால், மண்ணால் ஆகிய கோயில்களில் ஓசைகள் கேட்பது போலவே, பிண்டமாகிய கோயிலில் அனாகதமான இருதய கம

36. .. 2795
37. .. 2761
38. .. 2795
39. .. 2795
40. .. 2747
41. அஃதே
42. இரத்தின, ப : 6
43. மறைமலையடிகள், சைவ சித்தாந்த ஞான போதம், சென்னை ப : 304
44. திருமந்திரம் 2754



படம் எண் 14



படம் எண் 15

லத்துள் "த்வனி" என்றழைக்கப்படும் அதி நுண்ணிய ஓசை ஒன்று கேட்கும். அந்நுண்ணிய ஓசைக்குள் ஒரு நுண்ணிய சோதி தோன்றும். அந் நுண்ணிய சோதிக்குள் மிக நுண்ணிய தேஜோமனம் உள்ளது. இத்தேஜோ மனம் தேஜஸ்மயமானது; தூய்மையானது. இம்மனம் இறைவனிடம் லயமடைகிறது. இது புலன்கட்கெட்டா அக அனுபவம்.[45] தேஜோ மனம் தொடர்புடைய த்வனி கேளா ஒலி.

ஆக்ஞா நிலை

பொன் தில்லைக் கூத்து

குண்டலினி ஆறாதாரச் சக்கரங்களில் ஆறாவதாக மேநிலையில் அமைவது ஆக்ஞா சக்கரம். யோக சாதனையில் இது சிறப்பிடம். ஆறாதாரங்களில் அமைந்துள்ள ஒளிகள், ஒன்றாகச் சேர்ந்து, நெற்றிக்கு நேரே யமைந்த, ஆக்ஞா என்னும் புருவமத்தியில் பொன்னொளியாக விளங்கும். இதனைப் பொன் தில்லைக் கூத்து என்பர்.[46] புருவமத்தியில் காணும் சோதிப் பொருள் தினையின் கூறு போன்று சிறிதாக அமையும் என்பர்.[47] ஆக்ஞா சக்கரத்தில் தோன்றும் இவ்வொளி சோம சூரிய அக்னி ஒளி. இது கண்ணுக்கு எட்டாதது. விளங்க வைக்க முடியாதது. இது சகுண நிர்க்குண சக்தி வடிவான பிரகாசமுடையது என ஆனந்தலகரி கூறும்.[48] புருவ நடுவில் உள்ள இச் சக்கரத்தில், திருச் சிலம்போசை கேட்கும். இது ஞானரீதியில் யோகியர்க்கு மட்டும் கேட்கும். புலன்கட்குக் கேட்கும், ஓசை அற்ற நிலையில், இவ்வோசை கேட்கும். இவ்வோசை வழிச் சென்று, அம்பலத்தானுடன் லயமடைய வேண்டும். இதுவும் கேளா ஒலி. உயிரானது மூலாதாரத்திலிருந்து, எழுந்து, பிற ஆதாரங்களைக் கடந்து, ஆக்ஞையை அடையும் போது, ஒரு மெல்லொளி கேட்கும். அவண் ஒரு மின்னல் தோன்றி உடன் மறையும். அம்மின்னல் மூல மூர்த்தியாகிய கூத்தப்பிரான்.[49] இவ்வொளி பச்சைக் கல்லின் மேல் சிகப்புக் கல்லைப் பொருத்தினால் மற்றோர் ஒளிவருவது போன்றிருக்கும்.[50] சீவனும் ஒளிமயம், சிவனும் ஒளிமயம். குருவின் உதவி கொண்டு, இவ்வுண்மையை அறிந்து, ஒளி பெருகும் முறையை அறிந்து, நெற்றிக்குநேரே புருவ மத்தியில், ஆக்ஞா நிலையில், நோக்கும் போது, சீவனது ஒளிக்குப் பற்றான பரமனது சிவ ஒளி பொருந்தி, சீவ ஒளி நாளுக்கு நாள் பெருகும். இந்த ஒளியே இறைவன் நடமிடும் திருச்சிற்றம்பலம், சிதாகாசம், சிதம்பரம் என்பன. சூக்கும, திருவைந்தெழுத்தாகிய சிவாய நம என்பதை உச்சரித்து சாதனை செய்கையில் இது நிகழும்.[51] இவ்வொளியின் உள்ளாகத் தியானிக்கையில், அவ்வுருவம் மறைந்து அருவமாவ துடன், அங்குப் பொருந்தி ஞான நெறியில் செல்வார்க்கு அருட்சக்தி பதிதலும் இயல்பு.[52]

இறைவன் நடிக்கும் ஆகாய மண்டலமாகிய புருவ மத்தியில் மனம் பதிந்தவர், இறைவன் நடிக்கும் இடமாய ஆகாயமாகவே ஆகி அருளுடையோ ராவர்.[53] புருவமத்தியே ஞான சபை, திருச்சிற்றம்பலம் எனப்படுவதற்கேற்ப, மிக நுண்ணிய நிலையில் அறிவு, சிரசில் பழகுவதால். அவண் விஞ்ஞானமய கோசம் இயல்பாக நிலைபெற்றியங்கத் தொடங்கும். தாரணையின் விளைவாக இது நிகழும்.[54] ஆனந்த நடராசர் தன் புருவ நடு இருந்த நிலையை

45. நஜன், குண்டலினி சக்தி, ப : 76
46. திருமந்திரம், 2749
47. வரதராசன் ஜி., திருமந்திரம் விரிவுரை; உபநிடதக் கருத்து.
48. இரத்தின, ப : 95
49. இரத்தின சபாபதி, வை., வீரசைவம், ப:167, 68 சோம.லெ., கோயில்மலர் ப:25, 165
50. திருமந்திரம் 2670
51. ,, 2770
52. ,, 2763
53. ,, 2763

இராமலிங்க அடிகளார் திருவருட்பாவில் "கையறவிலாது நடுக்கண் புருவப் பூட்டு கண்டு களி" கொண்டதாகப் பாடுகின்றார்.[55] சகஸ்ராரத்தின் முதல் திறப்பு நிலை புருவமத்தி.[56] புருவமத்தித் திறப்பென்பதை, குரு மண்டல விழிப்பென்பர். சிவ நடனம் காண புருவமத்தித் திறப்பு இன்றியமையாதது. இது குருவால் இயலும் ஒன்று. சீடனின் சிரசில், குரு, தன் கரத்தை, சிவஹஸ்தமாக வைத்து, இரு விழிகளையும் நெறித்து, புருவப் பூட்டுத் திறப்பைச் செய்வார். இது போது, சாலனபந்த முத்திரை பயன்படுத்தப்படும்.[57] அதிகாலை யில் புருவப் பூட்டுத் திறப்பு செய்கையில், மந்திரம் செபித்து, மனக் கண்ணால் ஒளி கண்டவுடன், மந்திரத்தை நிறுத்தி, ஒளியில், ஒன்றி, ஆனந்தம் துய்ப்பர். இதனைப் பரை யோகம் என்பதும் உண்டு.[58]

சகஸ்ரார லய நடனம்

சிரசின் மேல் பன்னிரண்டங்குல உயரத்தில், சகஸ்ராரம் எனப்படும் ஆயிரம் இதழ்களையுடைய தாமரையாகிய, துவாத சாந்த வெளியுள்ளது.[59] இத்துவாத சாந்த வெளியில், கீழ்ச் செல்லும் பிராணன் மேற்செல்லுமாறு இறைவனைத் தியானம் செய்கையில், இதற்கு முந்தைய சக்கரமாகிய ஆக்ஞையில் ஒலித்த நாதம் ஒடுங்கி நாதாந்த நிலை ஏற்படும்.[60] நாதாந்த நிலையில் சிவபெருமான் நடிக்கும் சகஸ்ரதள இடத்தைத் திருவம்பலம் என்பர். மேலும் இதனைத் திருக்கைலாயம் என்றும்,[61] செம்பொன் மன்றென்றும் செப்புவதும் உண்டு.[62] ஆக்ஞை நிலையில் திருச்சிற்றம்பலம் என்பர். சிலபோழ்து, பிண்டத்தில் சூக்கும தேகத்தில் இறைவன் திருக்கூத்தியற்றும் ஏழு சக்கரங்களாகிய ஆதார நிலைகளையுமே பொன்னம்பலம் என்பதும் உண்டு.[63] சகஸ்ராரத்தைக் கடவுள் உலகைக் காண அமைந்த சாளரம் என்பர்.[64] குண்டலினி தியானத்தில் சக்தியை வேண்டுகையில் "சுழுமுனை நாடியைத் திறக்க வைத்து, ஆறாதாரங்களையும் தாண்டி, சகஸ்ராரம் சென்று, நீ உன் பதியுடன் இணையும் போது என்னையும் உன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்" என வருவதாகப் புகல்வர். இது லய நிலை.[65] பௌதிக உலகில் இறைவன் கைலாயத்தில் உறைவது போன்று பிண்டத்தில் சகஸ்ராரத்தில் உறைகின்றார்.[66] இதனை இராமலிங்கர் "சோதி மலைவீடு" என்பார்.[67] சகஸ்ரார தளம் கவிழ்ந்த தாமரை போன்றது.[68] இவண் சந்திர, சூரிய, அக்கினிக் கலைகள் மூன்றினுள்ளும் இறைவன் சோதியாகக் கலந்து, பாய்ந்து, சுடரொளியைப் பெருக்கி நிற்பான். அவ்வொளி தரிசனமாகும் போது தேகம் கனவில் கண்ட காட்சி போல் இல்லாதாகி விடும். தேகப் பிரக்ஞை ஒழியும். இந்நிலையினைச் சச்சிதானந்தம் என்பர். ஐந்தொழில்

---

54. ,, 2770
55. திருவருட்பா 5258, 6, 121
56. திருமந்திரம் 2770
57. ஸ்ரீ பரஹம்ச சசிதானந்த யோகீவரர், கடம்பை, ஜீவப் பிரம்ம ஐக்கிய வேதாந்த ரஹஸ்யம், சென்னை, 1984 ப: 583
58. நஜன், குண்டலினி சக்தி, ப : 152 ஸ்ரீ பரஹம்ஸ சசிதானந்த யோகீவரர், ப :583
59. திருமந்திரம், 2764
60. ,, 2764
61. ,, 2742
62. ,, 2764
63. ,, 2749
64. சாமு, ப : 35
65. நஜன், குண்டலினி சக்தி, ப : 19
66. சுவாகானந்தர் ப : 26
67. சோதிமலை வீடு – சோதி வழியில் வள்ளலார் நூல்.
68. அருணாசலம், திருமந்திரக் கோட்பாடு, ப : 286

நடனம் என்னும் ஆனந்த தாண்டவ நிலை இதுவே.[69] ஆறாதாரங்களில் சஞ்சரிக்கையில் படிப்படியாகப் பிரகாசம் எய்தி வரும் சீவன், சகஸ்ராரத்தில் பிரகாசத்தோடு பிரகாசமாகக் கலக்கிறது. அசைவுகள் குறைந்து மேலெழுந்து சகஸ்ராரத் திருவம்பலத்தில் நாதாந்தப் பெருமானின் திருவடிகளில் லயமடைகையில் ஆடவல்ல எம்பெருமான் சீவனின் ஆட்டத்தை நிறுத்தி, பேரின்பம் நல்கி ஆடாத ஆட்டமாய சோதிமய ஆனந்த மய ஆட்டம் ஆடுகிறான். இச்சோதிமலை வீட்டை அடைந்தவர் உடலில், சோதி உண்டாகி, "விருத் தரும் பாலராவர், மேனியும் சிவந்திடும்" என்பர் சிவவாக்கியர்.[70]

உருவ அருவ நிலைகள்

இருதயத்தில் நடராசரைத் தரிசிப்பது உருவத் தியானம்.[71] சகஸ்ராரத் தியானம் உருவமற்ற நிலை. சகஸ்ராரத் தியானம் உருவமற்ற நிலை எனினும் உருவத்தின் தத்துவம் இங்கும் இடம் பெறும். தத்துவம் பொது. மூன்றுமே நடராச வழிபாடாகும்.,

ஊர்த்துவ நிலை - ஊர்த்துவ தாண்டவம்

ஆறாதாரங்களில் யோகப் பயிற்சியின் போது, ஆத்ம சக்தி தங்கி, மேலெழும் போது, சிருஷ்டிக் கிரமம் பின்னோக்கும், லயக் கிரமம் முன்னோக்கும். இதனை யோகிகள் இயல்பாக உணர்வர். ஆத்ம சக்தி மேலெழ, மேலெழ, பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலான, ஞானேந்திரிய, கன்மேந்திரிய விடயங்களின் தன்மைகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கரைந்து வருவதையும் யோகிகள் உணர்வர். இது ஊர்த்துவ நிலை எனப்படும். பரமானந்த தாண்டவத்துக்கு முந்திய நிலை. இதுவே ஊர்த்துவ தாண்டவ மூர்த்தத்தின் யோக அடிப்படை

சச்சிதானந்த நிலை

ஏழாவது சக்கரமாகிய சகஸ்ராரத்தில், பிரமரந்திரத்தில் தோற்றத்துக்குக் காரணமான சக்திகள் முழு முதலோடு லயமடைந்து விடுகின்றன. சக்தி சிவ ஐக்கியமாகிய லயம் ஏற்பட்டவுடன், தேகப் பிரக்ஞை மறைந்து சச்சிதானந்த நிலை ஏற்படும். இது ஊர்த்துவ நிலையின் இறுதி உயர் நிலை.

தரிசனப் பலன்

இருதயத் தானத்தில் இறைவனை உருவத்தில் கண்டு வணங்கும் போதும் பயன் உண்டு. அது இவ்வுலக இயல் அமைந்தது.[72] அனாகத, சிதம்பர இரகசியமுணர்ந்து, ஞான மண்டலம் கடந்து, துவாத சாந்த வெளியாகிய, பிரமரந்திரம் வரும்போது, ஞான முயற்சியின் காரணமாகச் சீவன் லயத்துக்குக் தகுதி பெறுகின்றது. இது பிரமரந்திரப் பேரானந்த நடனம். சீவனின் இயங்கும் சக்தி, தேவி-ஸ்ரீ வித்யை சிவனுடன் ஐக்கியமாகும்போது, சாதகனாகிய சீவன் சர்வ சக்தியுடையவனா கின்றான். இது ஆனந்த நடன தரிசனப் பலன்.

சிதம்பர நிலை

சகஸ்ராரத்தில் எல்லா உருவங்களும் அருவங்களாகத் தோற்றும். அனாகதத்தில் உருவமாக இருந்தது, ஆக்ஞாவில் ஒலியாகவும், ஒளியாகவும் வளர்கிறது. சகஸ்ராரத்தில் ஒலியோடு ஒளியாகக் கலந்து அருவமாகின்றது. இது ஞான அனுபவ முதிர்ச்சியின் அறிகுறி. சகஸ்ராரா நடனம் எங்கும் எல்லாம் சிதம்பரமாகும் நிலை.[73]

---

69. அஃதே, ப : 5
70. நஜன்-குண்டலினி சக்தி ப : 19
71. இரத்தின ப : 151
72. அஃதே, குண்டலினி சக்தி
73. திருமந்திரம் 2762.

அமுத வாரி

சகஸ்ராரத்தில் லயம் ஏற்பட்டவுடன், குண்டலினி சக்தி, வந்து சேர்ந்தவுடன் தலைப் பகுதியில் உள்ள அமுத நிலை என்ற பகுதியில் அமிர்தம் பெருகும். இதனை இராமலிங்க அடிகள் மேற்பாலமுதம் என்பார்.[74] இவ்வுயிரை அழியாமல் காப்பாற்றும் சஞ்சீவியாகிய அமுதம் யோகிகளின் நெற்றிக்கு நேரேயுள்ள புருவமத்தியிலும் சுரக்கின்றது. இவண் சுரந்த அமுதம் மேல் அன்னத்தைக் கடந்து, தொண்டை வழியாகச் சொட்டு சொட்டாக இறங்கி வயிற்றுக்குள் செல்கிறது. இவ்வமுதத் துளியை அருந்திய யோகிகள் உண்ணாது உற்சாகத்துடன் வாழும் திறம் பெறுவர். இவ்வமுதத்தினைத் திருமூலர் கங்கைக்கு ஒப்பிடுவார். கங்கை நடராசரின் தலையில் இடம் பெறுகின்றது.

ஒளி அனுபவ நிலைகள்

சீவ சக்தி என்பது ஒளி மயமானது. அது மூலாதாரத்திலும், சுவாதிட்டானத்திலும், செவ்வொளியாக இருக்கும். செவ்வொளியை மாணிக்க நிறத்தது என்பர். இவ்விரு சக்கரங்களையும் மணி மன்று என்பர். சிவனும் சக்தியும் பிரிக்கலாகாப் பொதுமை உடையவர். சக்தியின் செல்வாக்கு மிக்கிருக்கையில் செவ்வொளி. சக்திக்குப் பன்னிற ஒளிகள் உண்டு. சக்தியைக் கோமளக் கண்ணினள் என்று கூறும் பொழுது அவளது நிறம் பச்சை ஒளி. அதனை மரகத ஒளி என்பர். எல்லாம் வல்ல சிவபெருமானின் ஒளி வெண்ணிறம். மூலாதாரத்தில் எழுந்த காமாக்கினியாகிய செவ்வொளியும், பல்வேறு நிலைகளில், பல்வேறு நிறங்களில் ஒளிர்ந்த பராசக்தியின் நல்லொளிகளும், பேரொடுக்கப் பெருங்காடாகிய சகஸ்ரதளத்தில், சிவபெருமானின் பேரொளியாய வெண்ணொளியில் கலந்து லயிக்க, அவண் சூக்குமமாய், சூக்குமத்தின் பெருவிரிவாய், இடைவிடாது நடம் புரியும் திருக் கூத்தைக் தரிசிப்பதே சகஸ்ரதள அனுபவம்.[75]

பிண்டத்தில் நடன சபைகள்

சந்தியா தாண்டவம் நடைபெறும் இடம் கைலை. பிண்டத்தில் சகஸ்ரதளத்தைக் திருக்கைலாயம் என்பர்.[76] ஆறாதாரங்களும் மூலாதாரத்திலும், சுவாதிட்டானத்திலும் சீவ ஒளியாகிய காமாக்கினி செவ்வொளியுடனிருக்கும். இதனை மாணிக்க நிறத்தது என்பர். அவ்விரு சக்கரங்களிலும் நடமிடும் கூத்தனை மாணிக்கக் கூத்தன் என்பர். அவற்றை மாணிக்க மன்றென்பதும் உண்டு. அஞ்ஞானமயமான பிரபஞ்சக் கருத்துக்கள் நிறைந்த உலகியல் வாழ்வில், இருதயத் தானத்தில் அனாகதத்தில் இறைவனின் உருவத்திரு நடத்தை வழிபடுமிடத்தை "வன் தில்லை" என்றும் தில்லைப் பொது என்றும் போற்றுவர்.[77] துவாத சாந்த நிலையை, சகஸ்ரதளத்தில் நடமிடும் சபையைப் பொன் மன்றென்பதும் உண்டு. சிவ சீவ லய நிலையை வைத்து, சகஸ்ரதள நிலையைத் திருவம்பலம் என்பதும் உண்டு.[78] சிவபெருமான் நடம்புரிதல் எத்தலத்தில் அமையிலும், எவ்வாதார நிலையில் எவ்வொளியாய் அமையினும் பொதுவாகத் திருச்சிற்றம்பலம் என்பர். இவண் சிற்றம்பலம் என்பது ஒளிக்கு உள்ளாக அமைந்த சூட்சும இடம்.[79] திருச்சிற்றம்பலத்தில் உருவத்

---

74. பகீரதன், இராமலிங்கம் மு. , ஜோதி வழியில் வள்ளலார். ப : 50
75. திருமந்திரம் 2723
76. திருமந்திரம் 2742
77. திருமந்திரம் 2743
78. திருமந்திரம் 2743
79. திருமந்திரம் 2763 - 64

தோற்றம் மறைந்து, ஸ்பந்த அசைவும் மறைந்து, எல்லாம், ஆகாயமாகி கற்பூ ரமாய்க் கரைகின்ற அருவ நிலை தோற்றுகின்ற பொழுது அவ்வம்பலம் ஆகாய மண்டலம் எனப்படும்.[80]

சந்திர, சூரிய கலைகள்

சகஸ்ராரத்தில் - சிரசில் ஒளி நடனம் காண்பதைச் சோமவட்டம் என்றும், சந்திர கலை என்றும் கூறுவர்.[81] ஆக்ஞாவில் - புருவ மத்தியில் ஒளி நடனம் காண்பதைச் சூரிய கலை என்பர். வலக் கண்ணுக்கு மேலே, ஒளியை ஆத்ம சொரூபமாக அறிதலே சூரிய கலை. இவ்வாத்ம சொரூபமே சகஸ்ராரத்தில் லயமடைகின்றது.

ஆடும் கூத்தன்

தேகத்தைச் சூழவுள்ள அண்ட ஆகாயத்தில் இறைவன் ஒளியாகத் திகழ்கிறான். இவ்விறைவன் தத்துவங்களைக் கடந்த நிலையில் பிண்டத்தின் உச்சியிலும் நுண் சுடராகத் திகழ்கிறான். அந்நுண் சுடர்தான் ஆடும் கூத்தன். இம்பரிடையேயும், உம்பரிடையேயும், ஆருயிரின் அகத்திடையேயும், அறிவி டையேயும் அவண் சுடராக ஆடுகிறான்.[82]

யோக வழி உருவக் கற்பனை

யோக நெறியில் திரு நட்டம் கண்ட நல்லோர், உருவ வழிபாட்டிற்காக உருவம் கற்பிக்கும்போது, ஆகாயம் கூத்தப் பெருமானது உடலானது. ஆகாய வெளியில் உள்ள காரிருள் முயல்கன் ஆகின்றது. மேலாடை போன்று காணப்படும் எண் திசைகளும் எம்பெருமானின் கைகளாகின்றன. சோம சூரிய அக்கினி ஆய மூன்றும் சீவர்கட்கு அருள் காட்டும் இறைவனது முக்கண்களாகின்றன.[83] இடை நாடியைத் தூக்கிய திருவடியாகவும், பிங் கலை நாடியினை ஊன்றிய திருவடியாகவும் திருமூலர் பிரிதோரிடத்துக் கூறுகின்றார்.[84]

சிருஷ்டிக் கிரமம்

லய நிலையில், சிரசின் மேல், ஐந்தொழில்களாய தூலச் செயல்கள் ஒடுங்கி சிவத்திடம் ஒன்றாகும் போது, சிரசின் மேல் வேதஸ்வரூபமான நாதம் முழங்கும். தூல ஐந்தொழில்களைச் செய்யும் கருத்தாக்கள், சூட்சுமமான காரண கருத்தாவிடம் ஒடுங்கும் போது, முப்பத்தாறு தத்துவங்களும் சிவத்தோடு லயமாகி, இவ் வேதஸ்வரூப நாதம் எழுவது லயத்துக்குப் பின் சிருஷ்டி தொடங்குவதின் அறிகுறி.[85]

நடனத்தில் சக்தி நிலை

சீவனது அறிவில், சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும், சச்சிதா னந்தமாகவும் நிலைபெற்ற ஆனந்தம் உமையம்மையின் திருமேனியாகும்.[86] சக்தியினது வடிவு, சீவர்களிடத்து விளங்கி, சீவனும் சிவனும் கலப்பதில் உண்டாகும் ஆனந்தமே நடனமாகும். லய நிலையின் போது, சீவனே சிவ னுக்குச் சக்தியாகிவிடும். சக்தி சீவனின் ஆனந்தத்துக்குக் காரணமாகும். சீவனோடு சக்தி முதலில் லயமடைகின்றது. சீவனும் சக்தியும் ஒன்றாகிய பின்னரே, சீவனும் சிவனும் ஒன்றாக லயமாகின்றன. இவ்வகையில் சீவ னுக்கும், சிவனுக்கும் தொடர்பினை உண்டாக்குவது சக்தி.[87] சக்தி

80. திருமந்திரம் 2762
81. திருமந்திரம் 2777
82. திருமந்திரம் 2766
83. திருமந்திரம் 2774
84. திருமந்திரம் 2753
85. திருமந்திரம் 2800 ,,
86. திருமந்திரம் 2767
87. திருமந்திரம் 2802, 03

சீவனிடத்தில், இச்சா, ஞான, கிரியா சக்திகளாகப் பொருந்தி, பக்குவப்ப டுத்தி, அருள்மயமாகிய பின்னரே, சீவன் சிவனிடத்தில் அன்பினால் ஒன்றி அறிவுருவாகும். இஞ்ஞானம் வந்த பின்னரே லயம் உருவாகின்றது. மூலா தாரச் சக்கரத்தில் எழும், குண்டலினி சக்தியாகிய மூலாதார சக்தியே திருக்கூத்துக்கு முதற்கட்டம் என்பதனை முன்னரே கண்டோம்.[88] யோக சிட்சை என்ற நூல் "பெருமைக்குரிய பிரம்மரந்திரத்தில் எல்லாம் வல்ல சிவன் உறைகின்றார். ஆக்ஞாவில் வல்லமை மிக்க சித் சக்தி உறைகின்றார். சித் சக்தி என்பது இறைவனது அருட்பாகமாகிய சக்தி. நுதலின் உச்சிப் பகுதியில், சகஸ்ரார கமலத்தில், ஆக்க ஆற்றலாகிய மாயா சக்தி உறைகின் றாள். நுதலின் மையப் பகுதியில், உயராற்றல் மிக்க பராசக்தி உறைகின்றது. விந்துவின் மையத்தில் சீவாத்மா நுண்ணுருவில் வாழ்கிறான்" எனக் குறிப் பிடுகின்றது.[89]

கோச நிலைகள்

ஞான நெறி என்பது பந்தப் படுத்தாத விஞ்ஞானமய கோசம் செயல் படும் நிலை.[90] ரூபம் என்பது கண்ணுக்குப் புலப்படும் நிலை. அது அன்னமய கோசம். சொரூபம் என்பது அகக் கண்ணுக்கு மட்டும் புலப்படுபவது. விஞ் ஞானமய கோசமே மனிதனின் சொரூபமாகும். மனோமய கோசமும், பிராணமய கோசமும், அன்னமய கோசமும், பந்தப்படுத்துவன. விஞ்ஞா னமய கோசம், அறிவு தேகத்தில் காரண நிலையாகையால், ஒளி அறிவைப் பெறும் சிறப்புத் தன்மை பெற்றது. ஒளி அறிவைப் பெறுவதற்கு, யோக நெறியில் தியானம் செய்கையில் பிரணவ மந்திரத்தைத் தொடர்ந்து உச்ச ரிப்பர். ஆக்ஞை நிலை தாண்டி பிரமரந்திரம் சேரும் வரை பிரணவ தியானம் என்னும் பிரணவயோகம் நடைபெற வேண்டும். பிரணவ தியானத்தில் பயனாகத் திருக் கூத்தின் பயனான ஆனந்த நிலையைத் துய்க்கும் மனித கோசம் ஆனந்தமய கோசம் என்னும் உயர் கோசமாகும்.

நெறி

சகஸ்ரார லய நிலையில் நடன தரிசனம் காணும் நிலையை அடைதற்கு முன்னர் இருந்திருக்க வேண்டிய சில நெறி முறைகளைத் திருமந்திரம் கூறும். பயிற்சி செய்ய விரும்புவோர், நூல்வழியும், வல்ல குரு வழியும் அறிதல் நன்று.[91]


சிதம்பரமும் வடலூரும்

சிதம்பரம், வடலூர், திருப்பெருந்துறை கோயில்களில் அருவ சிவ வழிபாடு இயல்கின்றது. திருப் பெருந்துறை, திருவாரூர், சிதம்பரம், வடலூர் முதலிய திருக்கோயில்கள் யோக வழிபாட்டுக் கோவில்கள். இவற்றுள் சிதம்பரம் சித்சபை வழிபாடு, யோக நெறியில் அனாகதத் தானத்து ஆனந்த நடம்புரியும் தில்லைக் கூத்தனைத் தகரவித்தையால் வழிபடும் நிலையது. இவண் உருவ வழிபாடும் உண்டு. உத்தர சிதம்பரம் என்னும், வடலூர், ஆனந்த நடராசரை அருவ ஆகாயத்தில் சகஸ்ரார நிலையில் லயமடையும் ஈசான மூர்த்தியால் உணர்த்தப்பட்ட ஒளி நிலையில் வழிபடும் நிலையதென் பர்.[92]


பிரணவ அனுபவம்

ஓங்காரத்தைப் பிரணவம் என்பர். பிரணவம் ஒளியாகவும், ஒலியா கவும் பரிணமிக்கும். பிரணவ ஒலியைக் கேட்டல், நாதாந்த அனுபவம்

88. திருமந்திரம் 2749
89. சாமு, ப : 11-2
90. இரத்தின, ப : 20 - (முன்னுரை)
91. திருமந்திரம் 2779
92. இரத்தின, ப : 8



படம் எண் 16



படம் எண் 17

எனப்படும். இது அநாகதத்து நிகழும். பிரணவ ஒளியைக் காணல் சகஸ்ரார அனுபவம்.[93] ஓங்காரமே இறைவன். ஓங்காரமே வழி, ஓங்காரமே நாதம், ஓங்காரமே ஒளி, ஓங்காரமே விந்து. எனவே ஆறாதார உயிர்ப்புக்கு ஓங்காரம் இன்றியமையாதது.

திரிபுர சம்மாரம்

சிதாகாய மண்டலம், சிதாகாய வெளி என்றெல்லாம் அழைக்கப்படும் சகஸ்ராரத்தில் செவ்வொளி முதலிய பன்னிற ஒளிகள் மறைந்து வெண்ணொளி பிரகாசிக்கும் நிலையை மும்மல காரியம் கெட்டு லயமடையும் நிலை என்பர். இதனைத் திரிபுர சம்மாரம் என்னும் பாண்டரங்கக் கூத்தென்பர்.[94]

நாதாந்தம்

நாதாந்த நடனம் என்பது ஒலி, ஒளியாகி, ஒளி அருவமாகும் நிலை. திருமந்திர உரையாசிரியர் நாதம், நாதாந்தம், நடனம், நடனாந்தம் என்பர். இந்நான்கின் முடிவும் சிவசக்தி சீவ சிவ லயமேயாகும். இவ்வுயர்நிலையினைப் புண்டரிகப் புரானந்தம் என்பதும் உண்டு. இதுவே சிவ நடனம்.[95] இவண் நாத அறிவைச் சிவன் என்றும், விந்தினைச் சக்தி என்றும் கூறுவர்.[96]

சிவ நடனம் அகக் காட்சியே

சகஸ்ரார லய நிலையில் ஒளி நடனத்தை யோகிகள் கண்டனர்.[97] "சிவ நடனத்தைப் புறக் கண்களால் கண்டவர் யாருமிலர். அவ்வாறிருக்கப் புற நடனம் இறைவன் புரிந்தான் என்பவர் ஞானம் குறைந்தவர் என்றும், ஞானிகள் அருட் சக்தியே சீவனுக்குத் துணை புரிந்து லய ஒளி நடன அகக் காட்சியினைக் காண அருள்கின்றது" என்றும் திருமூலர் கூறுவார். இதனை "ஆதி நடமறிதல்" என்பதுண்டு. இதயத் தானத்தில் ஆன்ம சொருபத்தில் சிவசொரூபம் காணலை "உள்ளொளி காணல்" என்பதுமுண்டு.[98]
இதுகாறும் திருமூலர் வழி நின்று, திருவாசகம், திருவருட்பா முதலியவற்றில் கூறியுள்ள யோக, அக, நடனக் காட்சிகளின் தத்துவத்தை அறிய முயன்றோம்.

தகர வித்தை

உபநிடதங்கள்

உபநிடதங்கள், சமய நெறிகளுள் ஞான மார்க்கம் புகட்டும் முன்னோடி இலக்கியங்கள். உபநிடதங்கள் கிரியை, நெறிகட்கு அப்பாற்பட்டு, ஆத்மாவின் இயல்பையும், இறைத் தன்மையையும் ஆய்வு செய்கின்றன. மனிதனை இறைத் தன்மைக்குள் ஒருமிக்கச் செய்யும் ஞான நெறி, உபநிடதங்களின் உட்கிடை நூற்றெட்டுக்கு மேற்பட்ட உபநிடதங்களில், ஈச, கேன, கட, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, ஐத்ரேய, தைத்திரீய, சாந்தோக்ய, பிரகதாரண்யக, ஸ்வேதாஸ்வதர முதலிய பதினொரு உபநிடதங்கட்குச் சங்கரர் விளக்கவுரை எழுதியுள்ளார்.[99]

கௌஸ்தகி, ஐத்ரேயம், சாந்தோக்ய, கேன, தைத்ரீய, பிருகதாரண்யக, ஈச, கட முதலிய உபநிடதங்கள் கி.மு. 8-7 நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்பர். இவ்வுபநிடதங்கள் உலகின் அச்சாணி காலமாகிய கி.மு.800-300 ஆண்டுகளைச் சார்ந்தவை என அறிஞர் கார்ல் ஜாஸ்பர் குறிப்பிடுவார்.[100]

93. திருமந்திரம் 2779
94. திருமந்திரம் 2776
95. திருமந்திரம் 2753, 2750
96. திருமந்திரம் 2762
97. திருமந்திரம் 2787
98. நஜுன், குண்டலினி சக்தி, ப : 85
99. உபநிடதங்கள் – இராமகிருஷ்ண மடம்
100. அஃதே, ப : 22

உபநிடதங்களில் தகரவித்தை

தகரவித்தை என்பது யோகப் பயிற்சிகளில் ஊர்த்துவ யோகத்தில் நான்காமிடத்தில் இதயமாய அனாகதத்தில் இறைவனை உருவமாகவும், ஒளியாகவும் காண்பதற்கான சிறப்புப் பயிற்சி நெறி. சிதம்பர நடராச வழிபாட்டுத் தத்துவத்தின் சிறப்பு சிவசீவ ஐக்கியம். இதனை அடைவிக்கும் யோக வழிபாட்டு நெறிக்குத் தகரவித்தை என்று பெயர். இத்தகரவித்தை, சித்சபை, சிதம்பர ரகசியம், திருச்சிற்றம்பலம், சிதாகாசம், இதயக் கோவில், புண்டரீகபுரம், தில்லைவனம், ஆகாய நெறி போன்றவற்றிற்கு விளக்கம் தரும் வித்தையாக அமைகின்றது. சாந்தோக்ய உபநிடதம், பிருஹதாரண்யக உபநிடதம், மஹாநாராயண உபநிடதம் போன்ற உபநிடதங்களில் இதன் விளக்கம் அமைந்துள்ளது. மற்றும் கைவல்ய உபநிடதம், பிரம்ம சூத்திரம், சூத சம்ஹிதை, யோக யாக்ஞ வல்யம், சுருதி சூக்தி மாலை முதலிய நூல்களிலும், தகரவித்யா பிரகாசிகை என்ற நூலிலும் தகரவித்தை பற்றிய நுணுக்கங்களைக் காணலாம்.[101] தகரவித்தை வருணனால் பிருகு வாருணிக்கு உபதேசிக்கப்பட்டது. இது பரம வியோமத்தில் (திருச் சிற்றம்பலத்தில்) நிறுத்தப்பட்டது என, தைத்ரீய உபநிடதம் கூறுகின்றது.[102]

ஆத்மாவும் பிரம்மமும்

யோக நெறியில் ஆறாதாரங்களில் நான்காவது ஸ்தானம் அனாகதம் என்னும் இதயஸ்தானம். இவ்விதயஸ்தானத்தில், ஆத்மாவே, பிரம்மமாகக் குடி கொண்டிருப்பதை, உபநிடதங்கள் கூறுகின்றன. சாந்தோக்ய உபநிடதம். "என் ஆத்மாவாகிய இது நெல்லினும், யவத்தினும், கடுகினும், தினையரிசியினும் நுண்ணியதாய் என் இருதயத்தினுள் விளங்குவதாம். என் ஆத்மாவாகிய இதுவே பூமியிலும் பெரியதாயும், வானுலகினும் பெரியதாயும், அந்தரிஷத்தினும் பெரியதாயும், இவ்வுலகங்க ளெல்லாவற்றினும் பெரியதாயும் என் இருதயத்தினுள் விளங்குவதாம்.[103] "எல்லாக் கருமங்களும், எல்லா ஆசைகளும், எல்லா வாசனைகளும், எல்லா ருசிகளும் தானேயாகி, இவ்வுலகனைத்தையும் வியாபித்து நிற்பதாயும், வாக்கு (முதலிய இந்திரியங்கள்) இல்லாததாயும் (அடையாத ஒன்றை அடைந்ததாலுண்டாகும்) பூரிப்பு இல்லாததாயும், உள்ள அந்தப் பிரம்மமே என் இருதயத்தினுள் விளங்கும் எனது ஆத்மா. இச்சரீரத்தை விட்டு இந்தப் பிரம்மத்தையே அடைவேன்" எனக் கூறுகின்றது.[104] இது சாண்டில்யர் வாக்காகக் கூறப்படுவதால் சாண்டிலய வித்தை எனப்படும். "இருதயத்து முடிச்சுக்கள் எல்லாம் அவிழ்ந்து போகும் போது, சாகும் இயல்புடைய மனிதன், சாகாதவனாகின்றான்" எனக் கூட உபநிடதம் நவிலும்.[105]

உருவ வழிபாட்டின் வளர்ச்சி நிலை

நம் நாட்டில் தோன்றிய ஞானிகள் பலரும், மிக உயர்ந்த குறிக்கோள் உடையவர்கள். அவர்கள் ஆலயங்களில் கடவுளின் திருவுருங்களை நிறுவி, அந்த மூர்த்தங்களில் மனதை ஒருமைப்படுத்தி தியானம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். நாளாக, நாளாக இந்தத் தியானப் பயிற்சியின் வளர்ச்சியானது பெயரும், உருவமும் இல்லாத அறிவாகாய வெளியை வணங்கும்

101. சோம. சேது தீட்சிதர், சிதம்பரம் நடராஜர் கோயில் சரித்திரம், ப : 61, 62
102. செந்தில் நாதய்யர், சைவ வேதாந்தம் ப : 74
103. இராமகிருஷ்ணமடம் சாந்தோக்ய உபநிடதம் 14.3
104. அஃதே, 14.4
105. அஃதே, 6.15

உன்னத நிலைக்கு மக்களை உயர்த்தும் என்பதைக் கண்டார்கள்.[106] அவ்வளர்ச்சியின் ஒரு நிலையே தகர வித்தை. சிதம்பர பூஜா சூத்திரம் எனப்படும் பாதஞ்சல சாஸ்திரத்தில், தகரவித்தை பற்றிக் கூறமிடத்து "காயத்தால் வழிபடுதலாகிய சரியையின் பொருட்டு, காயசுத்திக்காக, ஆயுர்வேதானுசானமும், வாக்கினால் வழிபடுதலாகிய கிரியையின் பொருட்டு வாக்கு சுத்திக்காக, சப்தானுசாசனமும், அந்தக் கரணத்தால் வழிபடுதலாகிய யோகத்தின் பொருட்டு அந்தக்கரண சுத்திக்காக யோகானுசானமும், ஆத்மாவினால் வழிபடுதலாகிய ஞானத்தின் பொருட்டு, ஆத்ம சுத்திக்காக தகரவித்யானுசாசனமும் வகுக்கப்பட்டுள்ளன" என்று கூறப்பட்டுள்ளது.

தகர வித்தை

"நிர்க்குணமாய் இரண்டற்றதாய், திக்கு தேசம் காலம் வர்த்தமானம் முதலிய வேறுபாடுகளற்றதாய் உள்ள பிரம்மம், சாதாரண ஜனங்களுக்குச் சூன்யம் போல் தோன்றுவதை, அவர்களுக்கு ஸ்தூலமாக விளங்கும்படி ஒரு உபாசனா மார்க்கத்தைக் காட்டினால் அதன் மூலம் அவர்கள் பின்பு உண்மையை உணர்ந்து கொள்வார்கள் என்று" தகர வித்தை தொடங்கப்பட்டது என்பார் சங்க்ரர். இருதயத் தாமரையாகிய வீட்டில் கருவி கரணங்களை அடக்கி, வைராக்கியம், பிரம்மச்சரியம், சத்தியம் முதலிய சாதனங்களுடன் கூடி தியானம் செய்வதே இது.[107] தகர என்றால் சிறிய என்று பொருள்படும். தகராகாசம் என்பது இருதயத்தினுள் உள்ள சிறிய இடம். இதனுள் ஒடுங்கியது போன்றிருப்பது ஒரு அந்தராகாசம். இது ஆகாயத்தைப் போல் உருவில்லாததாயும், சூட்சுமமாயும் எங்கும் வியாபித்திருப்பதால் ஆகாயம் எனப்பட்டது.[108] ஆனால் இது ஆகாயமன்று. இதனைப் பரமவியோமம் என்பார் சேக்கிழார்.[109] இப்பரமவியோமம் எனும் ஆகாயம், பூத ஆகாயத்தைக் குறிக்காமல், சிதாகாசம் எனப்படும் திருவருளாகிய, ஞான ஆகாயத்தைக் குறிக்கும் என்றும், இதனையே தமிழில் திருச் சிற்றம்பலம் என்றும், சிற்பர வியோமம் என்றும், சிதம்பரம் என்றும், நூலோர் நுவல்வர். யோக நெறியில் தியானத்தின் வழி, இறைவனை இதயத்தில் காண இயலும் முறையே தகரவித்தை.

அண்டத்திலும், பிண்டத்திலும் இதயத் தானம்

சிவம் எங்கும் வியாபகமாயிருக்கும். அது விளங்கும் ஸ்தானங்கள் இரண்டு. அண்டத்தில் விளங்குவது விராட் ஸ்வரூபம். பிண்டத்தில் ஆன்ம சிவம். மனித இருதயம் இலிங்க சரீரம். இவ்விதயம் தூல சரீரத்தின் மையத்தில் தாமரை மலர் போல் உள்ளது. அண்ட வடிவ தூல விராட்டின் இதயத்தானம் சிதம்பரம் என்னும் புண்டரிகபுரம்.[110] இவ்விரு இடங்களிலும் இறைவன் விளங்குகிறான். மனித இதயத்துள் சிவன் விளங்கும் இடம் தகராகாசம் எனப்படும். இத்தகராகாசத்தின் உள்ளீடாக சிதாகாசம் உள்ளது. இச்சிதாகாசத்தைச் சரீரமாக உடையவன் பரமாத்மா.

அண்ட விராட்டினுள் சிதம்பரத் தலம் இதயப் புண்டரிகம் எனும் இதயத் தாமரை. கனக சபை என்பது தகராகாசம். கனக சபையுள் விளங்கும் சித் சபையாகிய சிதம்பர ரகசியம் அடங்கிய பகுதியே சிதாகாசம். சிதம்பர ரகசியம் என்பதே ஆன்ம சிவ ஐக்கியம். சிதம்பரத் தலத்தில் சித்சபையில் இறைவனை வழிபடுவது அண்டத்தில் செய்யும் தகர உபாசனை.[111]

---

106. பகீரதன், இராமலிங்கம் மு., ஜோதி வழியில் வள்ளலார் ப:254
107. உபநிஷத் சாரம், இராமகிருஷ்ண மடப் பதிப்பு ப:97
108. சோம, லெ., (பதிப்பு) கோயில், ப:376
109. அகிதே.
110. நஜன், ப:13,14
111. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:18 (முன்னுரையில்)

தகராகாசம்

சாந்தோக்ய உபநிதம், எட்டாவது அத்தியாத்தில், தகரவித்தை விளக்கப்படுகிறது. "இந்த பிரம்மபுரத்தில் (சரீரத்தில்) தாமரை போன்ற சின்னஞ்சிறு மாளிகை உண்டு; அதனுள் சிற்றம்பலம்; அதில் உள்ள தெதுவோ அந்தைத் தேட வேண்டும்: ஆராய்த்தறிந்து கொள்ள வேண்டும்.[112] இந்தப் பிரம்மபுரத்தில் தாமரை போன்ற சின்னஞ்சிறு மாளிகையில் உள்ள சிற்றம்பலத்தில், அங்குத் தேட வேண்டியதாய், ஆராய்ந்தறியக் கூடியதாய் என்ன இருக்கக் கூடும்[113] என்று கேட்டால் அவர் (குரு) கூறுவதாவது: இவ்வாகாயம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியது இருதயத்திலுள்ள ஆகாயமும். வானுலகும் பூவுலகும் இதனுள்ளடங்கும். அக்கினியும், வாயுவும், சூரியனும், சந்திரனும், மின்னலும் நட்சத்திரங்களும் இன்னும் இங்கு எதெது இவனுக்கு உண்டோ ஏதெது இல்லையோ அது எல்லாம் இதனுள்ளடங்கும்.[114] இவனுடைய மூப்பால், இது மூப்படைவதில்லை, இவனுடைய சாவால் இது சாவதில்லை. இது தான் அழியாத பிரம்மபுரம். இதில் எல்லா ஆசைகளும் அடங்கும். இவ்வாத்மா பாவமற்றது. மூப்பற்றது, என வருகின்றது.

ஆகாயம்

'லிங்கம் என்பது எங்கும் பரவியுள்ள தெய்விகத் தன்மையைக குறிப்பது, நடராசர் திருவுருவமோ அத்தெய்வத உண்மையின் செயலைக் குறிப்பதாகும். "கடவுளின் உண்மை வடிவம் என்பது ஆகாயம்.[115] தியானப் பயிற்சியின் வளர்ச்சியின் போது படிப்படியாக உயர்ந்து உருவமற்ற அறிவாகாய வெளியை வணங்கும் உன்னத நிலை ஏற்படும்.[116] ஆகாயத்தையே ஊடுருவிப் பார்க்கும் நந்தனாகிய பக்தன் அங்கு" தூக்கிய பாதம் கண்டவுடன் ஜோதி கண்டேன். சுத்த வெளிக்கு உள்ளே ஒரு கூத்து கண்டேன்" என்பான்.[117] அம்பலமாவது ஆகாசம் உற்றுப்பார். அருளில்லை, பொருளில்லை கண்டு தேறு" என்பன வேதியர் வாக்கு. இறைவன் உறையும் திருவிடங்களில் ஆகாயமும் ஒன்று என்ற உண்மையை விளக்கும் திருத்தலம் சிதம்பரம்.[118]

மூவகை நடன சேவை

ஆகாயமானது, பூதாகாயமென்றும், மனாகாயமென்றும், சிதாகாயமென்றும் மூன்று வகைப்படும். இம்மூன்றாகாயங்களிலும் சச்சிதானந்தப் பரம்பொருள் நடித்து சீவர்கட்கு இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் அருளிச் செய்கின்றான் என்பது வேதாகமங்களின் உள்ளீடான சித்தாந்தமாம்.[119] இம்மூவகை ஆகாயங்களின் இயல்புகட்கேற்ப நடன சேவைகளும் மூவகைப்படும். பூதாகாய நடன சேவையாவது, ஆங்காங்குள்ள சிவத்தலங்கள் பலவற்றுள்ளுஞ் சென்று, குறிப்பிட்ட நாட்களில், ஆகம விதிப்படி, ஸ்ரீ நடராசப் பெருமானது திருக்கூத்தைத் தரிசித்தலாகும். மனாகாய நடன சேவையாவது பஞ்சாட்சர வடிவமாய் விளங்கும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை, மனத்தால் நன்கு தியானித்தலேயாகும். இது ஒரு முகப்பட்ட மனத்துக்குச் சாத்தியமாகும். இப்பஞ்சாட்சரமே சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம் ஆகிய மூவகை மூர்த்தங்களுக்கும் திருமேனியாம்.[120] சிதாகாய நடன சேவையாவது

112. உபநிஷத் சாரம், சாந்தோக்ய உபநிடச்தம்,1.1. ப:97
113. அஃதே, 1.2 ப:98
114. அஃதே, 1.3 ப:99
115. பகீரதன், இராமலிங்கம் மு., ஜோதி வழியில் வள்ளலார், ப:255
116. அஃதே, ப:254
117. நஜன், ப:20
118. ஜோதி வழியில் வள்ளலார், ப:353
119. ஐயர் ப:33
120. அஃதே, ப:33

"பஞ்சாட்சரத்தின் வாக்கியார்த்தமாகிய சிவமே நான்" என்று சோகம் பாவனை செய்வதாம். இதுவே சிவயோக மெனப்படும்.[121] பூதாகாய நடன சேவையால் இம்மைப் பயனும், மனாகாய நடன சேவையால் மறுமைப் பயனும், சிதாகாய நடன சேவையால் வீடும் சித்திக்கின்றன.[122] இவண் சிதாகாய நடன சேவையே தகரவித்தை. சிதாகாசம் என்பது தத்துவாதீத ஸ்வரூபம்.[123]

ஆகாயமும் பஞ்சபூதங்களும்

தூலப் பிருகிருதியினுள் சூக்குமப் பிருகிருதியும், சூக்குமப் பிருகிருதியினுள் மகா மாயையும், வியாபித்து நிற்பது போலப் பூத ஆகாசத்தினுள் சிதாகாசமும், சிதாகாசத்தினுள், தகராகாசமும் வியாபித்து நிற்பன. எனவே சிதாகாசம் அனைத்துக்கும் ஆதாரமானது. ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவுனினின்று அப்புவும், அப்புவினின்று பிருதிவியும் தோன்றுவன என்பது சமய நூல் கண்ட முடிவு. பரம்பொருளாகிய பிரபஞ்சத்தோற்றமாக நம் கண் முன்னே மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும் அருவுருவ வடிவமாக, . பூதாகாசத்தினின்று தோன்றின என்பது புலப்படுகின்றது.[124] எல்லாப் பொருள்களும் ஆகாயத்தில் தோன்றி ஆகாயத்திலேயே ஒடுங்குகின்றன எனச் சாந்தோக்ய உபநிடதம் புகலும்.[125] ஆகாயத் தரிசனமாகிய திருக்கூத்துத் தரிசனத்தின் பின் பரவெளியனுவத்தில் அச்சோதியைப் பணிந்து பேரின்பம் திளைத்தலை-அமுதம் பருகுதலைத் திருமூலர் ஆகாயப்பேறு என்பார்.

பஞ்சபூதங்களில் தீயில் வித்யா கலையையும், நீரில் பிரதிஷ்டா கலையையும், பூமியில் நிவர்த்தி கலையையும், வாயுவில் சாந்தி கலையையும், ஆகாயத்தில் சாந்தியாதீத கலையையும் சேர்த்து வைத்து இறைவன், இவ்வாகாயத்தில் ஊகிக்கப்படாதவராய், மிகவும் சிறியதாக தகரகுகரம் என்றும், புண்டரீகம் என்றும் அழைக்கப்படும் வீட்டின் உட்புறத்தில் ஞானஸ்வருபமான நடனத்தைச் செய்கிறார் எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும்.[126]

சிதாகாசம்

சிதாகாசம் என்பது தத்துவாதீத ஸ்வரூபம்.[127] மனமானது கண நேரத்திற்குள்ளே ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்கு ஓடிக் கொண்டிருக்கும். அவ்வாறு ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்கு ஓடிக் கொண்டிருக்கும் போது, இவ்விரண்டிற்கும் இடையில் எந்த ஞானம், நடுநிலையிலிருக்கின்றதோ, இவ்விரண்டிற்கும் இடையே இமை கொட்டுமளவு நேரம் எது வெளியாய் இருக்கின்றதோ அவ்வெளியே சிதாகாசம். இச்சிதாகாசமே நீயென்றறிந்து அந்த உருவமாகவே ஆதலே சிதாகாசப் பயன்.[128] அத்தகைய சிதாகாசத்தில் (வெளியில்) சகல எண்ணங்களும் அடங்கித் தானே தானாய் இருப்பானாகில் சர்வத்திற்கும் மேற்பட்டதும், பரம சாந்தமாயிருப்பதுமாகிய பிரம்ம சொரூபத்தில் ஐக்கியமாகிவிடுவான். இதனை நிர்விகல்ப சமாதி என்பதுமுண்டு.[129] ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்குச் செல்லும் போது, அதன் மத்தியில் சித்த சலனமில்லாதிருக்கும் இந்நிலையை, உனது சொரூபம் எனச் சொல்வர்.[130]

---

121. நஜன் ப:49
122. நஜன் ப:469
123. அய்யர், என்., ப:16
124. சோம, லெ., (பதிப்பு), கோயில், ப:468
125. கோபால் செட்டி டி., சிதம்பர ரகசிய வெளிப்பாடு சென்னைப:33
126. குஞ்சிதாங்கிரிஸ்தவம் பா.273 ப:139
127. அய்யர், ப:16
128. ஸ்ரீ பரமஹம்ஸ சசிதானந்த யோகீஸ்ச்வரர், கடம்பை, ஜீவப்பிரம்ம ஐக்கிய வேதாந்த ரஹஸ்யம். ப:531
129. அஃதே, ப:532
130. அஃதே, ப:532

வியோமம்

வியோமம் என்பது ஆகாயம், யோகிகளுடைய அழியாத ஸ்தானம் வியோமம் எனப்படும். இதனை ஆகாயமாகிய பரமபதம் என்பர். இதுவே ஷடாத்துவாதீதாயத்துரியம் எனப் பெயரிய முத்தி ஸ்தானம்.[131]

பரம வியோமம்

சாந்தி கலைக்கு மேல் அத்துவாவின் முடிவிலே, சாந்தியாதீத கலையினால் தூய்மை உண்டாகிறது. அச்சாந்தியாதீத கலை (வியோமம்) பரப்பிருகிருதியோடு இயைந்திருத்தலால் அதனைப் பரம வியோமம் என்பர். இப்பரம வியோமமே பிரகாச பேதத்தையுடைய பிரம்மத்தின் ஆகாய சரீரம். இப்பிரமம் அறிவரி. இவ்வுலக அதிபதி. இதுவே திருச்சிற்றம்பலம். இதுவே சிற்பரவியோமம். இதுவே சிதம்பரம்.

குகை, வனம்

இவ்வாகாயம் ஆனந்த ரூபமுடையது.[132] இதனையே 'ஆகாசமாமுடல்' எனத் திருமந்திரமும், 'விசும்பே உடம்பென்று' பட்டினத் தடிகளும் மொழிந்தனர். இப்பரம வியோமம் சப்தமடங்கிய இரகஸ்யமாதலால் சப்தமடங்கி யோகிக்கு உதவும், இடமாகிய குகை, வனம் என்றும் கூறப்படும்.[133] குகை, வனம் முதலியன யோக தியான தரிசனத்தின் போது ஏற்படும் அனுபவக் காட்சிகள்.

சூக்கும பூதம்

"ஆகாயம் என்னும் சூக்கும பூதம் காற்று, தீ, நீர், மண் ஆகிய நான்கு தூல பூதங்களிடை நீக்கமற நிறைந்திருக்கின்றது".[134] 'பரம் பொருளாகிய பிரபஞ்சத்தோற்றமாக நம் கண் முன்னே தெரியும் இந் நான்கு பூதங்களும் அருவுருவ வடிவமான பூதாகாசத்தினின்று தோன்றின என்பது புலப்படுகின்றது'. 'எல்லாப் பொருட்களும் ஆகாயத்தில் தோன்றி ஆகாயத்தில் ஒடுங்குகின்றன' எனச் சாந்தோக்ய உபநிடதம் புகலும்.[135]


ஆகாயம் பராசக்தியே

சமஸ்த அண்டங்களின் தொகுதியாகிய, குமிழிக் கூட்டங்கள் தோன்ற, பெரும் இரத்தினாகரமாகிய பரப்பிருக்ருதி ரூப பராசக்தியே சிதம்பரம் (திருச்சிற்றம்பலம்) எனப்படும்.[136] இந்தப் பிரகாசத்தையுடைய பிரம்மம் ஆகாச சரீரம் என்று சைவ பாஷ்யகாரர் கூறியிருக் கின்றார்.[137] சிதம்பர சக்தி சரீரத்தில் பரப்பிரம்ம சிவ பெருமான் என்று தைத்திரிய சுருதியும், எவருக்கும் பரம தேவியாகிய சக்தி உளரே, அவரே ஆகாயம் எனப்படுவர் என்று உபப் பிருங்கணமும் கூறுகின்றன. இதனால் ஆகாயம் பராசக்தியின் மேலாயவாறு தெளியப்படும். இதனைத்


"தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே"

எனத் திருமந்திரம் குறிக்கும்.[138]

131. அஃதே.
132. சோம லெ., (பதிப்) கோயில், ப:376 ஆனந்த ரூபம்
133. செந்தில் நாதய்யர், ப:83
134. தயானந்தன் பிரான்சிஸ் தி., தமிழ் சைவம், ப:15 (மதுரை)
135. கோபால் செட்டி டி., சிதம்பர ரகசியவெளிப்பாடு ப:33
136. செந்தில் நாதய்யர், சைவ வேதாந்தம்.
137. அஃதே.
138. திருமந்திரம் 1361



படம் எண் 18



படம் எண் 19

"எவருக்கு யாதொரு பரம சக்தியுண்டோ, அந்தச் சக்தியார் ஆகாசம் எனப்படுவர்" எனக் கூர்மபுராணம் கூறும்.[139]

மூவகை

ஆதிபௌதிகம், ஆதியாத்மிகம், ஆதி தைவிதம் எனத் தகரவித்தை மூவகைப்படும்.

ஆதிபௌதிகம்

புராணங்களும், இதிகாசங்களும், தலமான்மியங்களும் கூறுகின்ற தகர வித்தை ஆதி பௌதிகம் எனப்படும். "பிரபஞ்சத்தை விராட் புருடனுடைய உருவமாகப் பாவித்து, அதில் ஸ்ரீ பர்வதம் தலையாகவும், கேதாரம் நெற்றியாகவும் வாரணாசி இரு புருவங்களின் மத்தியாகவும், குருக்ஷேத்திரம் குசஸ்தானமாகவும் பிரயாகை இருதய ஸ்தானமாகவும், கமலாலயம் ஆதாரஸ்தானமாகவும் சிதம்பரம் ஹிருதய மத்திய ஸ்தானமாகவும் கூறுவர்.[140] மனித உடலில் இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் இயங்குவது போலே விராட் புருடனின் சரீரமாகிய பூமியில் இடை என்ற பெரிய நாடி எப்பொழுதும் இலங்கையை அடைகின்றது. பிங்கலை இமயமலையை அடைகின்றது. நடு நாடியாகிய சுழுமுனை விராட்புருஷனின் இதயத்தானமாகிய சிதம்பரத்தை அடைகின்றது. இவ்விருதயத்தானமே ஆதி பௌதிகத் தகரவித்யாலயம் எனச் சிதம்பர மகாத்மியம் புகலும்.[141]

அத்தகைய சிதம்பரத்தில் சித் சபையில் வீற்றிருப்பவரை தியானம் செய்வது ஆதி பௌதிக உபாசனமாகும். என ஜாபால தரிசன உபநிடதம் கூறுகின்றது. அண்ட வடிவ தூல விராட்டின் ஹிருதய மத்திய ஸ்தானமாய சிதம்பரம் ஆதிபௌதிகத் தகர வித்யாலயம் எனப்படும். பிருதிவியாகிய பூதத்தோடு தாக்குற்று நிற்றலால் இது ஆதி பௌதிகச் சிதம்பரம் எனப்பட்டது.[142] இந்த க்ஷேத்திரத்தில் இறைவனை வழிபடுவதே அண்டத்தில் செய்யும் தகரோபாசனம்.[143] இது தகராகாச க்ஷேத்திரமாகும்.

ஆதிதைவிதத் தகரோபாசனை

ஆதிதைவித தகரோபாசனை என்பது "நமது உள்ளத்தில் விஷ்ணுவை உபாசனத்தில் இருத்தி, அவரது உள்ளத்தில் நடராச மூர்த்தி இருப்பதாக உபாசிப்பது.[144] சிதம்பரம் திருக்கோவில் சிற்சபையில், தகரவித்தை சித்சபையின் அடைப்பு, சிதம்பர இரகசியத் தானம் முதலியன வழி உருவகிக்கப்பட்டுள்ளது. சித்சபையின் அண்மையில், கோவிந்தராசப் பெருமான் பள்ளி கொண்டுள்ளார். திருவாரூர் திருக்கோவிலில் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரமன் தனது இருதயத்தில் அம்பிகையுடனும், கந்தருடனும் கூடிய சோமாஸ்கந்த மூர்த்தியை, பக்தியோடு பூசை செய்து சோகம் பாவனை செய்வதாகவும், அச் சோகம் பாவனையின் சுவாச வேறுபாட்டால் வரும் தாழ்வு உயர்வே வீதி விடங்கப் பெருமானின் திருநடனம் என்றும் பகர்வர்.[145] பள்ளி கொண்ட திருமால் இயற்றும் உபாசனை தகரோபாசனையாகும். காஞ்சிப் புராணத்தில் வேள்விச் சாலையைப் பற்றிக் கூறும்

139. செந்தில் நாதய்யர், தேவாரம் வேத சாரம் ப:27
140. சேது தீட்சிதர் சோம, நடராஜர் கோவில் சரித்திரம். ப:61
141. இராமலிங்கம், ப:12
142. செந்தில் நாதய்யர், ப:91
143. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:18
144. சேது தீட்சிதர் சோம, நடராஜர் கோவில் சரித்திரம், ப:61
145. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:67-68 பாட்டு.136

போது தகர வித்தையைப் பற்றிச் சிவஞான சுவாமிகள் குறிப்பிடுகின்றார். வேள்விச் சாலையில் எழுகின்ற சுடர் சிகையில், முதல்வனை ஆவாகித்து, அவிசு முதலியவற்றைத் தருதல் இயல்பு. வேள்விச் சாலையை நாராயண னுடைய உடம்பாகவும், அதில் நிறைந்துள்ள புகைப்படலத்தை அவர் தம் நீலமேக உருவமாகவும், அழற்பிழம்பை இதயச் சுடராகவும் அதன் உச்சியில் விளங்கும் பரமான்மாவைச் சிவ பெருமானாகவும் சுவாமிகள் குறிக்கின் றார்.[146] மகா நாராயண உபநிடதத்தில் கூறப்படும் தகரவித்தையில் உபாசிக்கப்படுவோன் சிவபெருமான். உபாசகனாகவிருப்பது திருமால். திரு மாலாகிய சிறந்த புருடனே உபாசகனாகிய இருடியாதலால் அவ்வுபநிடதம் மகாநாராயண உபநிடதம் எனப்பட்டது. இந்நிலை திருவாரூர் திருக் கோவி லில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.[147]

ஆதிபௌதிகத் தகரோபாசனை

அண்டவுலகான விராட்டின் இதயத் தானம் சிதம்பரம். இச் சிதம்பரத் தலத்தில் சித்சபை இத்திருக்கோவிலின் இதயத்தானம். இவ்விதயக் கோவி லில் ஸ்ரீ நடராச மூர்த்தியைக் கண்களால் தரிசித்த எல்லா உயிரினங்கட்கும் யோகிகள் இயற்றும் தகரோபாசனம் என்ற பெரிய யோகத்தின் மகாபலன் எளிதாகக் கிடைக்கும் என்பர்.[148]

"தில்லைத் தலத்து லிங்கம் ஆகாய லிங்கம் என்பதும், சிதம்பரம் ஆகா யத்தலம் என்பதும் இப்பொருளை உள்ளடக்கியன".[149] விராட் புருடனாகிய பிரம்மாவினது பிரம்மாண்ட சரீரத்தின் ஹிருதய கமலமாகிய தில்லையிலே நாடொறும் விதிப்படி அன்போடு தரிசித்துக் கொண்டு வந்தவர் அந்நடேசப் பெருமானைத் தமது பிண்ட சரீரத்தினது ஹிருதய கமலமாகிய தகரத்திலே தரிசித்து, பாசம் நீங்கி முத்தியடைவர். கூத்தர் திருவுரு இறைவனுக்குரிய இலக்கணங்களின் விளக்கத்துக்கு இடமாயுள்ளது.[150] இத்தில்லைத் தலம் இப் பூமண்டலத்தில், பூலோகக் கைலாயம் எனப் புகழ்ப்பெற்ற விராட்புருஷ ஹிருதயத் தானம்.[151] இது தகாராகாச க்ஷேத்திரமாகையால் இரவு அர்த்த ஜாம காலத்தில் இந்த இரகஸ்யத் தானத்தில் மற்றேனைத் தலங்களிலும் உள்ள தேவதைகள் ஒடுங்குகின்றன என்றும், காலை உஷத் கால பூசையில் இரவு ஒடுங்கியுள்ள தேவதைகளெல்லாம் தத்தம் இருப்பிடத்திற்குச் செல் கின்றன என்றும் கூறப்படுகின்றது. எவ்வாறு தூக்கத்தில் ஐம்புலன்களுள் இருதயத் தானத்தில் ஒடுங்கி, விழித்த பின் அதனதன் இடங்கட்கு செல்கின் றனவோ அஃதொப்பது இவ்வாதி பௌதிகத் தகராலய நிலை. தில்லைக் கூத்தப்பிரானுடன் இயைவித்துக் கூறும் ஆகாய நிலை ஆகாயத்தலம் என் பன போன்றே இவண் வழிபடப்படும் இலிங்கமும் ஆகாயலிங்கம் ஆகும்.[152]

சூக்கும உபாசனை

வேதங்களில் நவிலப்படும் அக்கினி உபாசனை தூல உபாசனை என்றும், தகராகாயத் திருச்சிற்றம்பலவரது உபாசனை, சூக்கும உபாசனை எனவும் கருதப்படும்.[153] பிரணவ ஜெப தியானத்தின் போது, இறைவன்

146. சேது தீட்சிதர் சோம, நடராஜர் கோவில் சரித்திரம் ப:61
147. சோம. லெ. (பதிப்) கோயில், ப:378
148. சேது தீட்சிதர் சோம, நடராசர் கோவில் சரித்திரம் ப:01
149. குஞ்சிதாங்கிரிஸ்தவம் ப:47 பா:100
150. சோம. லெ., (பதிப்) கோயில், ப:264
151. சேது தீட்சிதர் சோம, சிதம்பரம் ஸ்ரீ நடராச கோவில் சரித்திரம் 1976 ப:01
152. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:47 பா:101
153. செந்தில் நாதய்யர், தேவாரம் வேதசாரம், ப:35

எண்ணமாயிருந்து, பிரணவமாகிய மந்திரத்தைச் செபித்துக் கொண்டு வருகையில், ஒரு நிலையில் மந்திரம் தனக்குத் தானாய் நின்று விடும். அப்பொழுது தியானிப்பவன் எல்லாவற்றையும் சாட்சியாயிருந்து அறிவதாயும், நிர் மலமாயும், எல்லாமாயும், உபசாந்தமாயும் இராப்பகல் இல்லாததுமாய் இருக்கின்ற பிரம்ம சொரூபத்தில் சேர்ந்து விடுவான். அவண் ஆனந்தம் உண்டாகும், மனம் நசிந்து இல்லாதாகும் நிலையில், தியானிப்பவன் ஆனந்தத்தில் சொக்கியிருப்பான். நாதம் கடந்த நிலையில் தான் சிதாகாசப்பிரவேசம் நடைபெறும்.[154] இருதயாகாசத்தின் மத்தியில் உள்ள மிகச்சிறிய இடைவெளியில், தில்லைக் கூத்தப்பிரான் திருக் கூத்தியற்றுவதை, யோகிகளும் வேதாந்திகளும் அறிந்து கூறிய உபாசனை முறையே தகரோபாசனம்.[155]

தகரவித்தையின் சிறப்பு

உயர் ஆற்றல் மிக்க மாந்தர், இருமையற்ற உயர் தெய்வ நிலையை உணர்ந்து, மேல் செல்லுதல் இயலும். சற்றுக் குறைந்த பக்குவமுடைய மாந்தர்க்கு இறைவனை இதயத்தில் கண்டு வழிபடும் தகரவித்தை சிறந்தது.[156]

ஆகாயமும் சிதம்பர ரகசியமும்

ஆகாய மண்டலமே மனிதனை உள்ளும் புறமும் சூழ்ந்துள்ளது. இருதயத்தில் இருள் மயமான தத்துவங்களைக் கீழ்ப்படுத்தி ஒளி மயமான இறைவனை இடம் பெறச் செய் என்பதே சிதம்பர ரகசியமாகும். ஆகாயம் வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத இரகசியமாகும். திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்தில் கூறப்படும் ஞானசாதனம் இதுவே.[157] இந்த உலகம் விசாலமானது. நம் இதயமோ சிறியது. அந்தச் சிறிய இதயத்தில், உள்ள இடமோ உலகம் போல் விசாலமாக விரியும் தெய்வத் தன்மை உடையது. இந்த உலகில் உள்ள அனைத்துமே, நம் இதயத்தில் உள்ள சிறிய இடத்திலும் இருக்கிறது. நெருப்பும் தண்ணீரும், சூரியனும், சந்திரனும், இடியும், நட்சத்திரமும், வானமும், பூமியும் முதலிய எல்லாவற்றையும் நம் இதயத்துள் (இதயாகாசத்துள்) காணலாம் என்கிறது, சாந்தோக்ய உபநிடதம். இதுவே சிதம்பர இரகசியம்.[158] அண்டத்தில் சிதம்பரத்தலம் விராட்புருடனின் இருதயத் தானம். பிண்டத்தில் பூர்ண கிரிபீடம் எனப்படும் இருதயம் அனாகதத்தானம். பிண்டத்தின் அனாகதத்தானமான இருதயம் அவனை பந்தத்துக்குள்ளாக்கும் தில்லைவனமாகும். இவ்விதயத்தானத்தில் இருதயச் சக்கரம் என்னும் அனாகதத்தில் இறைவன் திருக் கூத்தியற்றுவதை, உலகுக்கு உணர்த்த அமைத்த மூர்த்தமே, சிதம்பரம் திருக்கோயிலில் உள்ள ஆனந்த நடராசர்.[159]

இருதயத்தில் இருள்மயமான தத்துவங்களைக் கீழ்ப்படுத்தி, ஒளிமயமான இறைவனை இடம் பெறச் செய் என்பதே சிதம்பர ரகசியம். இஞ்ஞான சாதனம் திருமந்திரம் ஒன்பதாம் தந்திரத்தில் விளக்கப்படுகிறது.[160]

---

154. ஸ்ரீ பரமஹம்ஸ் சசிதானந்த யோகீஸ்வரர், ப:583
155. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:17,18 (முன்னுரை)
156. உபநிடத சாரம், சாந்தோக்ய உபநிடதம் ப:549
157. இரத்தின ப:7,8
158. பகீரதன், இராமலிங்கம் மு., ஜோதி வழியில் வள்ளலார் ப:183
159. இரத்தின, ப:8
160. அஃதே, ப:7

ஒளிமயமான ஈசானர்

சிவலிங்க உருவில் இறைவனை வழிபடுகையில், சிவலிங்கத்துக்கு தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம், ஈசானம் என ஐந்து முகங்கள் இருப்பதாகக் கொள்வதுண்டு. அம்முகங்களை ஒவ்வொன்றும் பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றின் உருவமாகவும், சாந்தியாதீதம் முதலிய கலைகள் ஒவ்வொன்றின் உருவகமாகவும் குறிப்பிடுவதுண்டு. அவற்றுள் சிவலிங்கத்தின் உச்சியில் உள்ள முகமான ஈசானம் என்பதை ஆகாயக் கூறு என்பர். "எவர் வசீகரிப்பவரும், அனைத்துக்கும் அதிபதியும், அனைத்துக்கும் ஈசானமாயினார் அமர்கின்றார் என்று பிரகதாரண்யம் கூறுமாற்றால் பரம வியோமத்தினர் ஈசானர் எனப் பெறப்படுகின்றது.[161]

ஞானநெறியும் ஈசானரும்

ஆகாய வடிவில் உள்ள ஆத்மாவே தேகமாகவும், தத்துவங்களாகவும் விளங்குகின்றது. தேகம் தானில்லை, தத்துவங்கள் தானில்லை, என்ற ஞானம் தேகத்தை விட்டகலாது, தேகமே, தான் என்ற நிலையை விட்டு நின்ற போது, எவ்வகைச் சக்திகள் மேலிருந்து கீழிறங்கி சீவனைச் செயலுக்குட்படுத்தியதோ, அவைகளை ஆத்ம சொரூபமாகுமாறு இறைவனின் அருள் சக்தி துணை புரிகின்றது. இதை அறியவே ஞானிகளும் கிரியை வழியினரும் முயல்கின்றனர். தகுதி காரணமாகமுறை மாறுபடுகின்றது. கிரியை வழி நிற்போர் ஒவ்வொரு சத்திகளாக வழிபட்டு, மாற்றத்தை அடைய முயல்கின்றனர். ஞானியோ ஒளிமயமான ஈசானரை நாடினபோது இருளில் தொழில்படும் ஏனைய நான்கு முகங்களின் தொழில்களும் கெட்டன. ஈசானமுகத்தை அறிந்து உள்ளத்தைக் கோவிலாக்கி சீவனைச் சிவலிங்கமாக வழிபடும் வழிகளுள் ஒன்று இத்தகர வித்தை.[162]

தகராகாயத் தெய்வம்

"யார் இருதயமாகிய ஆகாயத்தில் உறைகிறாரோ அவரே எல்லாவற்றிற்கும் மேலானவர்" எனப் பிருகதாரண்ய உபநிடதம் புகலும்.[163] "இருதயத் தாமரை நடுவில் விளங்கும் ஒப்புயர்வற்ற இறைவன் சுசீந்தியன், அத்புதன், அநாதி எனப்படுவான்" எனக் கைவல்ய உபநிடதம் புகலும்.[164] உடலாகிய பிரம்புரத்தில் தகரமாக உள்ள (சிறியதாக) அது ஆகாசமாக விளங்குகிறது. அது தான் சிவன் என்றும், சச்சிதானந்தன் என்றும் விளங்குகிறது எனப் பஞ்சப் பிரம்ம உபநிடதம் புகலும்.[165] "இருதயத்துக்குள்ளேயுள்ள ஆகாசத்திலிருந்து ஞான நூலறியக் கூடிய புருஷனும் பொன்வண்ணனுமான அமிர்தனுள்ன்" என்று கூறி தகாராகாயத் தெய்வத்தின் நிறம் பொன்வண்ணமெனச் சாந்தோக்ய உபநிடதம் கூறும்.[166] இருதய கமலத்தில் பரஞ்சோதி ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஒளியின் மீது சம்சயம் செய்வதால், சூட்சுமமாயிருப்பவைகள், மறைந்திருப்பவை, எட்ட இருக்கும் வஸ்துக்களைக் காணும் ஞானம் அவனுக்கு வருகிறது.[167] இருதய மத்யஸ்தானம் அங்குஷ்ட(பெரு விரல்) அளவினது. அவ்விதயச் சிதம்பரத்தின் அளவு இது. அதனையே சோதி சுயம்புலிங்கம் என்பர்.[168] ஸ்ரீமந் நாராயண மூர்த்தி அவர்கள் இத் தெய்வத்தை சிவாய நம, சிவலிங்காய நம, ஆத்மாய

161. செந்தில் நாதய்யர், தேவாரம் வேத சாரம், ப:380
162. நஜன், சிவமூர்த்தங்கள், சென்னை ப:37
163. இராமலிங்கம், ப:84
164. அஃதே, ப:84
165. அஃதே, ப:97
166. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி முதலியார், ஓங்கார விளக்கம் ப:62
167. விவேகாநந்தர், இராஜயோக விளக்கம் சென்னை ப:62
168. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி முதலியார், ஓங்கார விளக்கம் ப:62

நம, ஆத்மலிங்காய நம, என்றெல்லாம் துதித்ததாகக்கூறப்படுகின்றது. இந்நாமாவளிகள் தகராலயத் தெய்வத்தின் இயல்புகளை அறிய உதவுகின்றன.[169] தகர வித்தையின்போது, இருதயத்தில் உள்ளொளி வீசும் போது ஆன்மஸ்வரூபம் தெரியும். இறைவனிடம் பற்று பெருகும்.[170] அவன், இறைவன் திவ்ய சோதி மயமாய் விளங்குகிறான். இத்திவ்ய ஜோதியில் உலகம் விளங்குகிறது. அது சித் ஸ்வருபமாக உள்ளது. உள்ளத் தாமரையில் உய்விக்கப்படுகிறது.[171] அறியாமையாகிய திரையை விலக்கி, உலக உயிர்களையெல்லாம், யோக மாயை செய்யும் சத்தியுள்ள தில்லை நடம்புரியும் சதாசிவனின் அனாகதமான இருதய கமலத்துள் கண்ணுக்குப் புலப்படாத அதி சூட்சும ஒலி ஒன்றிருக்கிறது. அதில் த்வனியாகிய ஒலி இருக்கின்றது. அந்த ஒலிக்குள் ஜோதி இருக்கின்றது. அதற்குள் சுத்த மனம் உள்ளது. அந்தச் சுத்த மனம் எதில் லயமடைகின்றதோ அதுவே விஷ்ணு, அதுவே மேலான பரமபதம். அதுவே ஆதி தைவிதத்தால் அடையும் லயநிலை.[172]

இந்தத் தேஜோ மனம் நாதஸ்வரூபமான த்வனிக்குள் இருக்கும். இத்தொனி கர்மேந்திரியமான காதுக்குப் புலனாகாதது. புலன் பொறிகட்கு அப்பாற்பட்ட இவ்வோங்கார ஓசையே இறைவன்.[173] அநாகதமாகிய இதயத்தில் ஒலியாகவும், ஒளியாகவும் அசையும் தெய்வமாக இருப்பவர் ஈசானர்.[174] தெய்வ நம்பிக்கை அற்றவன் எல்லையற்ற வான்வெளியைப் பாழ் என்றும் சூன்யம் என்றும் மொழிவான்.

ஆகாயத்தைக் காணும் பக்தன் தூக்கிய பாதத்தையும், ஜோதியையும், அதன் திருக் கூத்தையும் சுத்த வெளிக்குள்ளே காண்கிறான். இதுவே நந்தனார் கண்ட கூத்து.[175] அழுது முறையிட்டால் தன்னகத்துள்ளே இருக்கும் அம்பலத்துக்குள் கேட்பது லய நெறி.

திருவைந்தெழுத்தும் தாண்டவப் பத்தியும்

அத்துவாக்களுள் மந்திராத்துவா

உயிர்கள் முதல்வனை அடையப் படிவழி போல் இருப்பன அத்துவா எனப்படும்.

எழுத்து, சொல், மந்திரம் என்னும் உலகம் மூன்றும் , தத்துவம், புவனம், கலை என்னும் பொருள் வடிவ உலகம் மூன்றும் ஆக ஆறும் அத்துவா எனப்படும்.[176] அத்துவாக்களை முதல்வனுக்குரிய வடிவமாக வேதாகமங்கள் கூறுகின்றன. அத்துவா வடிவங்களுள்ளே மந்திர வடிவங்கள் சிறந்தன. சுத்த மாயையிலே தோன்றிய முதன்மையுடையனவாகலானும், சிவ சத்தி இவற்றை அதிட்டித்து நின்று, சாதகருக்குக் குறிப்பாக மோட்சங்களை அளித்தலாலும், ஏனைய அத்துவா வடிவங்களிலும் மந்திர வடிவங்கள் சிறப்பெய்தின. இம்மந்திரங்களுள் திருவைந்தெழுத்து உயிர்க்குறுதி பயக்கும் மகா மந்திரம் எனப்படும். "இதனைத் ' தாரகம் என்பர்."[177]

மந்திரத்தின் இயல்பு

மந்திரங்கள் குருவாயிலாக உபதேசிக்கப்படுபவை. அவற்றின் முழுப் பொருளையும், பயனையும், உபாசனா முறையையும் தக்க குருவழிதான் அறிய இயலும். நூற்கள் வழி படித்து அறிதல் சிறப்பாயமைவதில்லை.

---

169. நஜன், ப:12,13
170. நஜன், ப:85
171. இராமலிங்கம் ப:96
172. நஜன், குண்டலினி சக்தி ப:76
173. அஃதே, ப:76
174. இரத்தின சபாபதி ப:147
175. நஜன், சென்னை ப:20
176. சிவஞான மாபாடியம், ச.வே.சு. பதிப்பு சென்னை ப:501
177. நஜன், நமசிவாய வாழ்க, ப:19

மந்திரங்களில் அடங்கும் அட்சரங்கள் தனித் தனியாகப் பொருண்மையும், மோட்சப் பயனையும் தர வல்லனவாகும் போது பீஜாட்சரமாகும். மந்திரங்கள் தாமே வீடு பேற்றினைத் தருவனவாகவும், வீடு பேற்றைப் பெற வழியாகவும் இரு வகையாக அமையும் இயல்பின. மந்திர திருஷ்டாக்கள் எனப்படும் இருடிகள் தம் தியான மேம்பாட்டில் கண்டு உபதேசித்த இம் மந்திரங்கள் ஆற்றல் மிகுந்தவை.

தியானமும் தெய்வத் திருவுருவும்

சிற்ப நூல்களுள் தெய்வங்களின் திருவுருவங்களைச் சமைக்க வழி காட்டும் சூத்திரங்கட்குத் தியான சுலோகம் என்று பெயர். இறையுருவைச் சமைப்பதற்கு அடிப்படையாயமைவது தியானம் என்பதனை இது சுட்டும். சாதகர் தியானத்தில் இருக்கும் போது அவர் காணும் திருவுருவே தெய்வ உரு. பண்டை இருடிகள், தாம் யோகத்தில், தியானத்தில் கண்ட உருவங் களையே நமக்குத் தெய்வ உருவங்களாக வழங்கியுள்ளனர். ஊரும், பேரும், உருவும் இல்லா இறைவற்கு உருவம் கண்ட காரணம், சாதகர் தியானத் தின்போது எளிதாக இலக்கில் லயிப்பதற்கே.

தியானமும் மந்திரமும்

தியானம் செய்கையில் மந்திர ஜபம் இன்றியமையாதது. திருவைந்தெ ழுத்தினை மந்திரமாக ஜபிக்கையில், மந்திரத்தில் உள்ள எழுத்துக்கள், எழுத்துக்கள் குறிக்கும் பொருள்கள் தியானம் செய்வோரின் அகக் கண் முன் தோன்றுவன. இத் தோற்றம் சாதகரின் பக்குவத்திற்கேற்பவும், அவருக்கு குரு செய்துள்ள உபதேசத்திற்கேற்பவும் சிறிது வேறுபடும். சாதகரின் யோக தியான நிலை மேம்பாட்டுக்கேற்ப, உருவ, அருவுருவ, அருவ நிலைகள், ஒலி நிலை, ஒளி நிலை, லய நிலை முதலிய நிலைகளில் இறையுரு தோன்றும். **இவ்வருள் நிலை குருவாயிலாகக் கேட்டு, பயிற்சி பெற்று, சித்தித்த அனுப வத்தில் தான் கை கூடும்.**

தியானமும் தாண்டவ தரிசனமும்

திருமூலர், கூத்தப் பெருமான் யோக தியானத்தின்போது " சீவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப, ஆடுவதாகவும்,[178] அவன் ஆடும், அளவு எங்கள் சிந்தை அளவில்[179] என்றும், அவன் அன்புடையார் மனத்து ஆடி அருள் புரிவதாக வும்" விளக்குகின்றார்.[180] இதனை மேலும் வலியுறுத்து முகத்தான் திருமூலர், "ஆதி நடஞ் செய்தான் என்பர் ஆதர்கள்" என்ற திருமந்திரப்பாட்டில்,[181] அந்நடனம் ஆதியான சிவன் அவரவர் உள்ளத்தில் நடிப்பதை அறிவதற்கு அருட் சத்தியின் அருள் வேண்டும் என்றும் நவில்வார்.

தியான தரிசனங்கள்

திருவைந்தெழுத்தை, மந்திராத்மகமாய் உச்சரித்து தியானம் செய் கையில் மந்திராத்மக மந்திர விக்ரகமான சதாசிவ ரூப நினைப்பும், சகள சிவமாய் நினைத்து உச்சரிக்கும் போது, கூத்தப் பிரானின் திருவுருவும், சிவம் என்னும் பரம் பொருளை நினைத்து உச்சரிக்கும் போது, நிர்குண ரூபமாகவும் தோன்றும் என சர்வ ஞானோத்தர ஆகமம் குறிப்பிடுகின்றது என்பர்.[182]

சப்த பிரம்மம்

மந்திரங்களில் உள்ள அட்சரங்களைப் பரம நாதம் என்பர். இதனையே சப்த பிரம்மம் என்பர். இதனை இறைவனின் மந்திரத் திருவுருவம் என்பதும்

178. திருமந்திரம் 2784
179. திருமந்திரம் 2785-86
180. திருமந்திரம் 2785
181. திருமந்திரம் 2787
182. நஜுன், நால்வர் காட்டிய வழி, சென்னை, 1973, ப:71

தகும். ஆக்ஞா நிலையில் மந்திர உச்சாடனத்தின் போது ஒலி பிரம்மமாக நாத ருபத்தில் தோன்றுவது நாதப் பிரம்மம்.[183]

மந்திர தரிசனம்

இருடிகளின் மனன தரிசனமாகிய ஞான திருஷ்டியிலிருந்து தோன்றிய மந்திரங்கள் நாம ரூபாத்மக ஒலிவடிவாகி, பாஹ்யப் பிரபஞ்சமாக, மகேஸ்வர, மூர்த்தங்களையும், நாம ரூபமாயினும் மனநாதிகளால் சைதன்யம் பெற்ற மந்திரமய சிதாத்மக ஸ்வரூபமாய சதாசிவ வடிவத்தையும், ஸ்வரூபமான கேவல சாட்சாத்காரமாய பரசிவ வடிவத்தையும், உபசாகனின் தியானத்தில் தரிசிக்க வழி வகுப்பவை.[184] இருடிகளின் தியானத்தின் போது நடக்கும் ஆடல்வல்ல எம்பிரானின் தரிசனத்தின் போது அவர் கூத்தினின்றும் மந்திரங்கள் எழுந்தன என்பர். இதனைக் கூத்த நூல் "மோனத்து இருந்த முன்னோன் கூத்தில், உடுக்கையில் பிறந்தது ஒசையின் சுழலே" என்றுரைக்கும்.[185] மந்திரத்தினை வர்ணங்களற்ற விதமாக உபாசனை செய்கையில், சதாசிவ ரூபமும், அட்சர வர்ணாத்மக ரூபமாக உபாசனை செய்கையில், மகேஸ்வர உருவையும் தரிசிக்கும் இயல்புண்டு.[186] கிரியை, ஞானத்துக்கு வழியாகையால், மந்திரங்களை உபாசனை செய்யும் முறையையும், மந்திரப் பொருளையும் குருவழி அறிதல் வேண்டும். இறைவன் மந்திரத் திருமேனியுடையவர். மந்திரங்கள் அவனது கூத்தினின்றும், அதன் மனன தரிசனத்தினின்றும் உற்பத்தியாயின.[187]

திருவைந்தெழுத்தின் பொருள்

நமசிவாய எனப்படும் திருவைந்தெழுத்தின் சொற்பொருள் "சிவன் பொருட்டு நமஸ்காரம்" என்பது. சாமவேத சாரமாகிய சாந்தோக்ய உடநிடதத்தின் கண்ணுள்ள மகாவாக்கியமாகிய தத்துவமசி என்பதன் பொருளும், பிரணவமாகிய ஓங்காரத்தின் பொருளும், திருவைந்தெழுத்தின் பொருளும் சிவ, சீவ ஐக்கியமாகிய ஒன்றையே குறிப்பன. மொழி பேதமின்றி இம்மந்திரம் இறைத்தன்மையினைக் கொண்டது.

'நமசிவாய' என்பது சிவபெருமானுடைய நாமங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. நமசிவய, நமசிவாய என்பவற்றுள் வகரத்தை நெடிலாக வாய என்ற உச்சரிக்கும் திருவைந்தெழுத்தினை சக்தி பஞ்சாட்சரம் என்பதும் உண்டு.

திருவைந்தெழுத்தின் உபாசனைச் சிறப்பு

(அ) திருவைந்தெழுத்தினை ஓதி மூலாதாரம் தொடங்கி குண்டலினியை எழுப்பி, மந்திரங்களை நியசிக்கும் போது இதய கமலமாய அனாகதத்திலும் பிற உயர் தானங்களிலும் இறைவன் சீறுகின்ற அரவம் போல் வீறுடன் தோன்றி தரிசனம் தரும் நிலை கிட்டும்.

(ஆ) திருவைந்தெழுத்து உபாசனை முறையின், தனிச் சிறப்பு, அதனை அனைத்து வருணத்தவரும், அனைத்து ஆசிரமத்தவரும் சிவாகமங்கள் கூறிய படி ஜபித்துப் பயன் பெறலாம் என்பது.

(இ) திருவைந்தெழுத்தினை ஓதுவது தவஞ்செய்தலை ஒத்த பயனைத் தரும்.

(ஈ) சைவாகமவர்கள், நான் மறைகள் கலைநூல்கள் முதலியனவற்றின் கருத்துக்கள் திருவைந்தெழுத்தின் நுண்பொருள்களாகி விளங்குகின்றன.

---

183. சாத்தனார், கூத்த நூல் ப:32-33
184. அஃதே, ப:32
185. அஃதே, ப:33
186. அஃதே, ப:32
187. அஃதே, ப:33

திருவைந்தெழுத்தின் மூலச் சிறப்பு

திருவைந்தெழுத்து மந்திரங்களுள் சிறப்புகள் மிக்கது. வேதத்தின் இருதயப்பகுதியாகிய யஜூர் வேதத்தின் காண்டங்கள் ஏழனுள், நடுக்காண்டத்தின் மத்தியில், ஸ்ரீ ருத்திராத்தியாய மென்னும் சதுருத்ரியத்தின் மத்தியில் நமசிவாய என்னும், சிவபஞ்சாட்சரம் நாயகத் தன்மை பூண்டு ஒளியுறுகின்றது. இதனை "வேத நான்கினும் மெய்ப் பொருளாவது" என்பர். இது சிவ மூல மந்திரம் என்றும் சிவ வாசகம் என்றும் போற்றப்படுவது.

சிவாயநம என்னில் செம்பு பொன்னாகும் என்பர். சிவாயநம எனச் செபித்தால் பிறப்பில்லை. சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளுமில்லை. சிவாயநம என்று நீறணிந்தால் சிவகதி கிட்டும். சிவாயநம என்பது தவம் செய்தல் ஒக்கும். சிவாயநம என்னில் வினைப்பகை வீடும்.

திருவைந்தெழுத்தின் வகைகள்

அ) திருவைந்தெழுத்தது என்பது நமசிவாய என்பதே. இதனைக் குருவானவர் சீடர்களின் பக்குவத்திற்கேற்ப அவர்கள் வேண்டும் பயனுக்கேற்ப எழுத்துக்களை இடம் மாற்றி தியானத்தின் போது உச்சாடனம் செய்யச் செய்வதுண்டு. இவ்வகையான திருவைந்தெழுத்து ஐவகையாகக் காணப்படும்.

ஆ) நமசிவாய என நகாரத்தை முதன்மையாகக் கொண்டு ஒலிக்கும் முறையில் தூல திருவைந்தெழுத்தென்றும் ஸ்ரீ பஞ்சாட்சரம் என்றும் சிவாயநம என்று சிகாரத்தை முதன்மையாகக் கொண்டு ஒலிக்கும் முறையில் நுண்மைத் திருவைந்தெழுத்தென்றும்,

இ) சிவய சிவ என்று உச்சரிக்கும் முறையை நுண்மைத் திருவைந்தெழுத்தென்றும், காரணத் திருவைந்தெழுத்தென்றும், ஒரு தலை மாணிக்க மென்றும்,

ஈ) சிவ என்று ஈரெழுத்தால் உச்சாடனம் செய்யும் முறையை மகா காரண திருவைந்தெழுத்தென்றும் இருதலை மாணிக்கமென்றும்,


உ) சி என்னும் ஓரெழுத்தால் மட்டும் உச்சாடனம் செய்யும் முறையை மகாமனு, என்றும், நாயோட்டி மந்திரமென்றும், முத்தித் திருவைந்தெழுத்தென்றும், சான்றோர் பரிபாடையால் கூறுவர்.

திருவைந்தெழுத்துக்களை ஓதும் முறை


அ) இவற்றுள் தூலத் திருவைந்தெழுத்தென்றும் ஸ்ரீ பஞ்சாட்சரமென்றும் அழைக்கப்படும் நமசிவாய மந்திரம் பக்குவப்பட்ட ஆன்மாக்கட்கு, இம்மை மறுமைகளைப் பயப்பதற்காக, போதகாசிரியராலும், சாதகாசிரியராலும் உபதேசிக்கப்படுவதாகும். இதனைப் பந்த பஞ்சாட்சரம் என்றும் அழைப்பர். இதனை எல்லா வருணத்தினரும், தீட்சை பெறாதவர்களும் உபாசிக்கலாம்.

ஆ) நுண்மைத் திருவைந்தெழுத்தென்பது சிகார வகாரங்களை முதலிலும், யகாரத்தை இடையிலும், நகார மகாரங்களை இறுதியிலும் வைத்தோதும், சிவாய நம என்பது. இது நியமம் அனுஷ்டித்து, தீட்சை பெற்ற பரிபாடிக்கு முத்தியின் பொருட்டு உபதேசிக்கப்படுவது.

இ) குருவின் உபதேசப்படி நுண்மைத் திருவைந்தெழுத்தினை ஓதி தியானம் செய்கையில் மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமைப் பாடெய்தும். மனத்தால் திருவைந்தெழுத்தினை ஓதுகையில், அகக்கண் ஆனந்த நடராசத் திருவுருவினைக்



திருவைந்தெழுத்து வகைகள் படம் எண் 20



படம் எண் 21

கண்டு பயன் எய்தும். இது அநாகத நிலை. இந்நிலை முற்றி ஆக்ஞா சக்கர நிலைக்குமேல் செல்கையில் உருவம், ஒலி, ஒளி முதலியன மாறி சிதாகாச நடனமாய லயசேவை சித்திக்கும்.

ஈ) சிவய சிவ என்னும் மீநுண்மையாகிய காரண பஞ்சாட்சரம் சாமானியர்கட்கு உபதேசிக்கத் தக்கதன்று. அதிதீவிர பக்குவிக்கே உபதேசிக்கத் தக்கது. இதனை முத்தி பஞ்சாட்சரம் என்பதும் உண்டு.

உ) பிற இரண்டு திருவைந்தெழுத்துக்களின் நிலைகளும் குருவழி அறிதல் நன்று.

ஊ) திருவைந்தெழுத்தில் நமசிவாய என நகரம் முதலாவதாக ஓதுவது மறைவழக்கென்றும், சிகாரம் முதலாக ஓதுவது ஆகம வழக்கென்றும் கூறுவர்.

திருவைந்தெழுத்தும் பிராணாயாமமும், தியாகேசர் நடனங்களும்

நாசித் துவாரங்களில் சிவனை வலமாகவும், சத்தியினை இடமாகவும் யோக நூல் கூறும். பிராணாயாமத்தின் போது, மூச்சினை உள்ளிழுத்த லாகிய பூரகத்தின் போது, நம என்பதை உச்சரித்து, கும்பகமாகிய நிறுத்தலின் போது, ஓம் என்று பிரணவத்தை உச்சரித்து, வெளியிடுதலாகிய இரேசகத் தின்போது சிவ என்றும் மூச்சினை வெளியிடும் போது, 'ய' என்னும் இம்மந்திரத்தின் எழுத்து உயிர் நாடியாயமைந்து சுவாசத்தை நிறைவு செய் யும்.[188] இத்தகைய வாசியோகத்தின் போது, உச்வாச நிச்வாசங்கட்கிடையே, இறையருள் திருவுருவம், தகரமாய இருதயத் தானத்து நடமிடுதலையே ஹம்ச நடனம் என்பர். திருவாரூர் தியாகேசர் தத்துவம் இதுவே.

திருவைந்தெழுத்தும் பீஜங்களும்

திருவைந்தெழுத்தின் கண்ணுள்ள ஐந்தெழுத்துக்களும் நகராதியாக நின்று நிவர்த்தியாதி ஐந்து கலைகளைக் குறிக்கும் போது, ஒவ்வொரு எழுத்தும் அவ்வதன் கலைக்குப் பீஜ மந்திரமாகும். இது போன்றே, பஞ்சப் பிரம்ம நிலைகட்கும், பிற நிலைகட்கும் பீஜ மந்திரங்களாகும் இயல்பு. இவற்றின் விளக்கங்கள் இக்கட்டுரையின் இறுதியில் பட்டிகளாகத் தரப்பட் டுள்ளன.


தாண்டவப் பத்தி

திருவைந்தெழுத்தினை ஓதி தியானம் செய்து, யோக நெறியில், மூலா தாரத்தில் குண்டலினியை எழுப்பி, அது தகராகாசமாயமைந்த அநாகதத்தில் கிரியை நெறியில் ஆனந்த நடராசராய சகளத் திருமேனியின் தரிசனத்தை மனோகாய தரிசனமாகக் கண்டு, ஆக்ஞையில் நாதங்கள் முழங்க, அவண் ஒளி அடங்கி, ஒலி அனுபவமாக, ஒலியே அம்பலமாக, ஸ்பந்த அசைவு தோன்ற ஒளி தோன்றும் நிலையே உயர் தாண்டவ நிலை. இதனைத் திருமூலர் சங்காரத் தாண்டவப் பத்தி என்பார்.[189]

அக நடன சேவைகள்

திருவைந்தெழுத்தினை இடைவிடாது உச்சரிக்கையில் தியானம் கூடு கையில் மனம் ஒருமையெய்தி மனத்தால் நடன சேவையினை அகதரிசனமாகத் தரிசித்தல் மனோகாய நடன சேவை எனப்படும். தியான முதிர்வில் சிவயோக நிஷ்டையாகிய சமாதி சித்திக்கும் போது, சகஸ்ரா ரத்தில் காணும் லய நிலையாய தரிசனம் சிதாகாய நடன சேவை

188. நஜன், நமசிவாய வாழ்க, ப:20 189. திருமந்திரம் 893





ஊன ஞான நடனங்கள்		
ஊன		ஞான
தரிசனமேடையில் கற்பூரதரிசனம்	1	ஆக்ஞா, சகஸ்ரார ஒளி அனுபவம்
உயிர் பாசத்தோடு கூடி படைப்பு, காப்பு, மறைப்புகட்காட்பட்டு உழலல்	2	உயிர் சிவத்தின் அருள்பெற்று சிவத்துக்கும் சத்திக்கும் இடைப்பட்டு பிறப்பிறப்பற்று அழியா ஆனந்தம் எய்தல்
உடுக்கை ஒலியும் உயிரின் ஒலியும் முழங்குதல்	3	கோா ஒலிகள் ஆதாரங்களில் கேட்டல்
உருவத்திருமேனி காணல்	4	மேலாதார ஒளி நடன லய நிலை
நமசிவாய தூல நிலை	5	சிவாயநம – சூக்கும நிலை ஞான நெறி
கிரியை நெறி	6	யோக ஞான நெறி
ஆகம வழிபாட்டு உருவநிலை	7	மந்திர தியான நாதாந்த நடனம்
பிறப்பிறப்பு உழற்சி	8	பிறப்பற்ற சிவப்பேறு
புண்ணிய நிலைகள்	9	சிவ சிவ ஐக்கியம்

படம் எண் 22







மகேஸ்வர நடராசர்	ஸ்ரீகண்ட ருத்ர நடராசர்	சம்புபட்சத்துஅதி தெய்வ நடராசர்
நடனத்திருவுருக்கள் (சதுரம் முதலிய)	ருத்ர கோலம்	ஆனந்த நடனம்
சுத்த மாயா காரிய நிலையர்	குணதத்துவ நிலையர்	ஆகாயத்தத்துவர்
ஈசுவரதத்துவ நிலையர்	ஸ்ரீகண்டருத்ரர்	சிற்பர வியோம சிதம்பரர்
பொதுநிலை	அழித்தல்	ஐந்தொழில்
பொதுநிலை	அழிப்புக் காலம் பெத்தான் மாக்களை நோக்கி	அனவரததாண்டவம் முத்தான் மாக்களை நோக்கி
பரம சிவத்திடம் லயம்	பரமசிவத்திடம் லயம்	தானே பரசிவம்
பரிவாரத்தானம்	பரிவாரத்தானம்	பரமுத்தி தானம் சித்சபை

படம் எண் 23

திருவைந்தெழுத்தின் மூலச் சிறப்பு

திருவைந்தெழுத்து மந்திரங்களுள் சிறப்புகள் மிக்கது. வேதத்தின் இருதயப்பகுதியாகிய யஜுர் வேதத்தின் காண்டங்கள் ஏழனுள், நடுக்காண்டத்தின் மத்தியில், ஸ்ரீ ருத்திராத்தியாய மென்னும் சதுருத்ரியத்தின் மத்தியில் நமசிவாய என்னும், சிவபஞ்சாட்சரம் நாயகத் தன்மை பூண்டு ஒளியுறுகின்றது. இதனை "வேத நான்கினும் மெய்ப் பொருளாவது" என்பர். இது சிவ மூல மந்திரம் என்றும் சிவ வாசகம் என்றும் போற்றப்படுவது.

சிவாயநம என்னில் செம்பு பொன்னாகும் என்பர். சிவாயநம எனச் செபித்தால் பிறப்பில்லை. சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளுமில்லை. சிவாயநம என்று நீறணிந்தால் சிவகதி கிட்டும். சிவாயநம என்பது தவம் செய்தல் ஒக்கும். சிவாயநம என்னில் வினைப்பகை வீடும்.

திருவைந்தெழுத்தின் வகைகள்

அ) திருவைந்தெழுத்தது என்பது நமசிவாய என்பதே. இதனைக் குருவானவர் சீடர்களின் பக்குவத்திற்கேற்ப அவர்கள் வேண்டும் பயனுக்கேற்ப எழுத்துக்களை இடம் மாற்றி தியானத்தின் போது உச்சாடனம் செய்யச் செய்வதுண்டு. இவ்வகையான திருவைந்தெழுத்து ஐவகையாகக் காணப்படும்.

ஆ) நமசிவாய என நகாரத்தை முதன்மையாகக் கொண்டு ஒலிக்கும் முறையில் தூல திருவைந்தெழுத்தென்றும் ஸ்ரீ பஞ்சாட்சரம் என்றும் சிவாயநம என்று சிகாரத்தை முதன்மையாகக் கொண்டு ஒலிக்கும் முறையில் நுன்மைத் திருவைந்தெழுத்தென்றும்,

இ) சிவய சிவ என்று உச்சரிக்கும் முறையை நுண்மைத் திருவைந்தெழுத்தென்றும், காரணத் திருவைந்தெழுத்தென்றும், ஒரு தலை மாணிக்க மென்றும்,

ஈ) சிவ என்று ஈரெழுத்தால் உச்சாடனம் செய்யும் முறையை மகா காரண திருவைந்தெழுத்தென்றும் இருதலை மாணிக்கமென்றும்,


உ) சி என்னும் ஓரெழுத்தால் மட்டும் உச்சாடனம் செய்யும் முறையை மகாமனு, என்றும், நாயோட்டி மந்திரமென்றும், முத்தித் திருவைந்தெழுத்தென்றும், சான்றோர் பரிபாடையால் கூறுவர்.

திருவைந்தெழுத்துக்களை ஓதும் முறை


அ) இவற்றுள் தூலத் திருவைந்தெழுத்தென்றும் ஸ்ரீ பஞ்சாட்சரமென்றும் அழைக்கப்படும் நமசிவாய மந்திரம் பக்குவப்பட்ட ஆன்மாக்கட்கு, இம்மை மறுமைகளைப் பயப்பதற்காக, போதகாசிரியராலும், சாதகாசிரியராலும் உபதேசிக்கப்படுவதாகும். இதனைப் பந்த பஞ்சாட்சரம் என்றும் அழைப்பர். இதனை எல்லா வருணத்தினரும், தீட்சை பெறாதவர்களும் உபாசிக்கலாம்.

ஆ) நுண்மைத் திருவைந்தெழுத்தென்பது சிகார வகாரங்களை முதலிலும், யகாரத்தை இடையிலும், நகார மகாரங்களை இறுதியிலும் வைத்தோதும், சிவாய நம என்பது. இது நியமம் அனுஷ்டித்து, தீட்சை பெற்ற பரிபாடிக்கு முத்தியின் பொருட்டு உபதேசிக்கப்படுவது.

இ) குருவின் உபதேசப்படி நுண்மைத் திருவைந்தெழுத்தினை ஓதி தியானம் செய்கையில் மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமைப் பாடெய்தும். மனத்தால் திருவைந்தெழுத்தினை ஓதுகையில், அகக்கண் ஆனந்த நடராசத் திருவுருவினைக்



திருவைந்தெழுத்து வகைகள் படம் எண் 20



படம் எண் 21

கண்டு பயன் எய்தும். இது அநாகத நிலை. இந்நிலை முற்றி ஆக்ஞா சக்கர நிலைக்குமேல் செல்கையில் உருவம், ஒலி, ஒளி முதலியன மாறி சிதாகாச நடனமாய லயசேவை சித்திக்கும்.

ஈ) சிவய சிவ என்னும் மீநுண்மையாகிய காரண பஞ்சாட்சரம் சாமானியர்கட்கு உபதேசிக்கத் தக்கதன்று. அதிதீவிர பக்குவிக்கே உபதேசிக்கத் தக்கது. இதனை முத்தி பஞ்சாட்சரம் என்பதும் உண்டு.

உ) பிற இரண்டு திருவைந்தெழுத்துக்களின் நிலைகளும் குருவழி அறிதல் நன்று.

ஊ) திருவைந்தெழுத்தில் நமசிவாய என நகரம் முதலாவதாக ஓதுவது மறைவழக்கென்றும், சிகாரம் முதலாக ஓதுவது ஆகம வழக்கென்றும் கூறுவர்.

திருவைந்தெழுத்தும் பிராணாயாமமும், தியாகேசர் நடனங்களும்

நாசித் துவாரங்களில் சிவனை வலமாகவும், சத்தியினை இடமாகவும் யோக நூல் கூறும். பிராணாயாமத்தின் போது, மூச்சினை உள்ளிழுத்த லாகிய பூரகத்தின் போது, நம என்பதை உச்சரித்து, கும்பகமாகிய நிறுத்தலின் போது, ஓம் என்று பிரணவத்தை உச்சரித்து, வெளியிடுதலாகிய இரேசகத் தின்போது சிவ என்றும் மூச்சினை வெளியிடும் போது, 'ய' என்னும் இம்மந்திரத்தின் எழுத்து உயிர் நாடியாயமைந்து சுவாசத்தை நிறைவு செய்யும்.[188] இத்தகைய வாசியோகத்தின் போது, உச்வாச நிச்வாசங்கட்கிடையே, இறையருள் திருவுருவம், தகரமாய இருதயத் தானத்து நடமிடுதலையே ஹம்ச நடனம் என்பர். திருவாரூர் தியாகேசர் தத்துவம் இதுவே.

திருவைந்தெழுத்தும் பீஜங்களும்

திருவைந்தெழுத்தின் கண்ணுள்ள ஐந்தெழுத்துக்களும் நகராதியாக நின்று நிவர்த்தியாதி ஐந்து கலைகளைக் குறிக்கும் போது, ஒவ்வொரு எழுத்தும் அவ்வதன் கலைக்குப் பீஜ மந்திரமாகும். இது போன்றே, பஞ்சப் பிரம்ம நிலைகட்கும், பிற நிலைகட்கும் பீஜ மந்திரங்களாகும் இயல்பு. இவற்றின் விளக்கங்கள் இக்கட்டுரையின் இறுதியில் பட்டிகளாகத் தரப்பட்டுள்ளன.


தாண்டவப் பத்தி


திருவைந்தெழுத்தினை ஓதி தியானம் செய்து, யோக நெறியில், மூலா தாரத்தில் குண்டலினியை எழுப்பி, அது தகராகாசமாயமைந்த அநாகதத்தில் கிரியை நெறியில் ஆனந்த நடராசராய சகளத் திருமேனியின் தரிசனத்தை மனோகாய தரிசனமாகக் கண்டு, ஆக்ஞையில் நாதங்கள் முழங்க, அவண் ஒளி அடங்கி, ஒலி அனுபவமாக, ஒலியே அம்பலமாக, ஸ்பந்த அசைவு தோன்ற ஒளி தோன்றும் நிலையே உயர் தாண்டவ நிலை. இதனைத் திருமூலர் சங்காரத் தாண்டவப் பத்தி என்பார்.[189]

அக நடன சேவைகள்

திருவைந்தெழுத்தினை இடைவிடாது உச்சரிக்கையில் தியானம் கூடுகையில் மனம் ஒருமையெய்தி மனத்தால் நடன சேவையினை அகதரிசனமாகத் தரிசித்தல் மனோகாய நடன சேவை எனப்படும். தியான முதிர்வில் சிவயோக நிஷ்டையாகிய சமாதி சித்திக்கும் போது, சகஸ்ரா ரத்தில் காணும் லய நிலையாய தரிசனம் சிதாகாய நடன சேவை

188. நஜன், நமசிவாய வாழ்க, ப:20 189. திருமந்திரம் 893





ஊன ஞான நடனங்கள்		
ஊன		ஞான
தரிசனமேடையில் கற்பூரதரிசனம்	1	ஆக்ஞா, சகஸ்ரார ஒளி அநுபவம்
உயிர் பாசத்தோடு கூடி படைப்பு, காப்பு, மறைப்புகட்காட்பட்டு உழலல்	2	உயிர் சிவத்தின் அருள்பெற்று சிவத்துக்கும் சத்திக்கும் இடைப்பட்டு பிறப்பிறப்பற்று அழியா ஆனந்தம் எய்தல்
உடுக்கை ஒலியும் உயிரின் ஒலியும் முழங்குதல்	3	கோனா ஒலிகள் ஆதாரங்களில் கேட்டல்
உருவத்திருமேனி காணல்	4	மேலாதார ஒளி நடன லய நிலை
நமசிவாய தூல நிலை	5	சிவாயநம – சூக்கும நிலை ஞான நெறி
கிரியை நெறி	6	யோக ஞான நெறி
ஆகம வழிபாட்டு உருவநிலை	7	மந்திர தியான நாதாந்த நடனம்
பிறப்பிறப்பு உழற்சி	8	பிறப்பற்ற சிவப்பேறு
புண்ணிய நிலைகள்	9	சிவ சிவ ஐக்கியம்

படம் எண் 22







மகேஸ்வர நடராசர்	ஸ்ரீகண்ட ருத்ர நடராசர்	சம்புபட்சத்துஅதி தெய்வ நடராசர்
நடனத்திருவுருக்கள் (சதுரம் முதலிய)	ருத்ர கோலம்	ஆனந்த நடனம்
சுத்த மாயா காரிய நிலையர்	குணதத்துவ நிலையர்	ஆகாயத்தத்துவர்
ஈசுவரதத்துவ நிலையர்	ஸ்ரீகண்டருத்ரர்	சிற்பர வியோம சிதம்பரர்
பொதுநிலை	அழித்தல்	ஐந்தொழில்
பொதுநிலை	அழிப்புக் காலம் பெத்தாள் மாக்களை நோக்கி	அனவரததாண்டவம் முத்தான் மாக்களை நோக்கி
பரம சிவத்திடம் லயம்	பரமசிவத்திடம் லயம்	தானே பரசிவம்
பரிவாரத்தானம்	பரிவாரத்தானம்	பரமுத்தி தானம் சித்சபை

படம் எண் 23

எனப்படும்.[190] திருமந்திரத்தில் ஒன்பதாவது தந்திரம் குருமட தரிசனம், பிரணவ சமாதி, திருக்கூத்துத் தரிசனம் என்பனவாய தலைப்புக்களில் அமைந்திருப்பது அக, நடன சேவை காணும் அக நெறி விளக்கங்களாகும், ஞான நடனமும் ஊன நடனமாம்.

ஞான நடனமும் நுண்மைத் திருவைந்தெழுத்தும்

தில்லைப் பொதுமன்றின் எதிரே, தரிசன வேதியில் நிற்கும் போது, ஆனந்த நடராசப் பெருமானின் சகளத் திருவுரு கற்பூர தீபத்தின் ஒளியில் பொலிவுற்றுக் காட்சி தருகின்றது. அந்நடனத் திருத்தோற்றத்தின் உரு, மந்திரத் தியானத்தின் போது தூல திருவைந்தெழுத்து நிலையாகும். ஊன நடனம் என்று குறிக்கப்படும். உருவத் திருமேனியைத் தரிசித்த பக்தன், தன் முதிர் நிலையில், யோக தியானத்தின் போது, நுண்மைத் திருவைந்தெழுத்தினை ஓதி, சிவ ஒளி அனுபவம் பெறுகிறான். அவ்வொளிநடனத்தின் போது காணும், ஞான நடனம் நுண்மைத் திருவைந்தெழுத்தினை ஒளியுருவ உறுப்புக்களாக் கொண்டு ஒளிர்வது.

ஞான ஊன நடனங்களின் வேறுபாடு

அ) ஞான நடனம், ஊன நடனம், என்ற இருவகை நடனங்களையும் செய்தது, சிகரமாய சிவன். யகாரமாய உயிரினைப் பாசத்தோடு கூடி, படைப்பு, காப்பு, மறைப்பு என்ற தொழில்கட்குள் அகப்பட்டு பிறப்பிறப்புக ளுற்று உழலச் செய்வது, சிகாரத்தின் ஊன நடனம். சிகாரத்தின் அருள் பெற்ற, யகாரம், வகரமாகிய அருள் சிகாரமாகிய சிவன், இவற்றிற்கிடையுற்று பிறப்பிறப்பற்று பேரின்பமாகிய ஆனந்தம் நுகர்ந்து, அழியாப் பெருவாழ்வு எய்தச் செய்வது சிகாரத்தின் ஞான நடனம்.[191]

ஆ) ஊன நடனத்தே, உடுக்கை ஒலியில், மக்களின் செவிகள் கேட்கும் மொழியில் சொற்களின் பொருள் விளங்கி விளையும் என்பர்.[192]

இ) மந்திர தியானத்தின் போது நாதாந்த நடனம், என்னும் ஞான நடனத்தின் போது, ஞான-அறிவுக் கூறுகளை ஒழுங்குபடுத்தும் ஒலிகள், மூலாதாரத்தில் தொடங்கி ஆக்ஞாவில் முடியும். இவ்வெழுத்துக்கள் முறையே, நமசிவய என்றே இயலும் எனினும், ஆக்ஞாவில் ஒலிப்பேறாகவும், ஒளிப் பேறாகவும், சிறப்புறும். இவை காதுகள் கேட்க இயலா ஒலிகள்.

ஈ) சகளத் திருமேனியிற் காணும் ஊன நடன தரிசனம் தூலத் திருவைந் தெழுத்தால் அமைவது.

உ) யோக நெறியில் காணும் மேனிலை ஒளி நடன லய நிலை, நுண்மைத் திருவைந்தெழுத்தால் ஆகும் ஞான நடனமாகும்.

ஊ) இவண் இறைவனது திருநடனம் என்பது ஆன்மாக்களை பெத்த முத்திகளில் உய்த்து நடத்துதலாகும்.[193]

சித்சபையும், திருவைந்தெழுத்தும்

ஆடவல்லான் திருக்கோயில் கொண்டுள்ள, சிதம்பரம் திருக்கோவிலில் எம்பெருமான் ஆனந்த நடம்புரியும் சிற்சபையின் செப்பு ஓடுகள் ஒவ்வொன் றிலும் திருவைந்தெழுத்து வரையப்பட்டுள்ளது எனத் தில்லை உலா போற்றும். அண்மைக் காலத்து, சிற்சபையின் திருப்பணியின் போது இதனைக் கண்டவர் குறித்துள்ளனர். சிற் சபைக்குள் பூசகர் ஏறும் படிக்கட்டுப், பஞ்சாட்சரப்படிகள் என்று பெயர். சித்சபையின் இரகஸ்யத் தானத்தில்

190. அய்யர் ப:
191. நஜன், ப:26
192. இரத்தின சபாபதி வை. வீரசைவம் சென்னை ப:166-67
193. சிவ. அருணசிவயோகி. ஸ்ரீபஞ்சாட்சர அஷ்டாட்சர மந்தரார்த்த ஸங்கிரஹ விளக்கம். திருப்பனந்தாள்: 1944 ப:9

திருவைந்தெழுத்தாலயமைந்த சிதம்பர சம்மேளனச்சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது என்பர். ஆடவல்ல எம்பெருமானின் திருவுருவத்தின் திருவாசியுடனான அமைப்பு. பிரணவமாகவும், திருவுருவின் பூரண அமைப்பு திருவைந்தெழுத் தாகவும் அமைவதினை யோகக் காட்சியிலும், தியானக் காட்சியிலும் எண்ணிறந்த முத்தான்மாக்கள் கண்டுள்ளனர். சித்சபையில் இரகசியத் தானம் இருக்கும் திருச் சுற்றுக்கும் பீடத்திற்கும் பிரணவ பிரகாரம் என்று பெயர். பிரணவம் என்பது ஓங்காரத்தினைக் குறிக்கும் எனினும் ஓங்காரமும் திருவைந்தெழுத்தும் ஒரு பொருட்டன என்பது குறிப்பு. சித்சபை என்பது ஞானாகாயம். பிரணவ ஞானத்தாலும் நுண் ஆகாயக்கூறாலும் அக யோக நெறியில் அமைந்தது இது என்பர்.

ஐந்தெழுத்தருள் நிலைகள்

திருவைந்தெழுத்தே "ஆகமமும், அருமறையும், ஆதிபுராணங்களும், ஆனந்த தாண்டவமும், மோனானந்த முத்தியும்" என உண்மை விளக்கம் கூறுவது போல் திருவைந்தெழுத்தின் கண்ணுள்ள ஐந்தெழுத்துக்களும், தூல நிலை, நுண்மை நிலை என்ற இரு நிலைகளிலும், சைவசித்தாத்தத்தின் உட்கிடைகளையும், அதன் செயல் உருவான பர நிலைத்தாய ஆனந்த தாண்டவத்தின் தத்துவத்துத்தினையும் உருவமாகக் காட்டுவதைச் சித்தாந்த நூல்கள் செப்புகின்றன.[194]

இக்கருத்தின்படி, எழுத்துக்கள் காட்டும் அருள் நிலைகளை இருபத்தாறு அங்கமுடைய பட்டியாகப் பின் தரப்பட்டுள்ளது காண்க. சைவ நன்னெறியில் ஆனந்த தாண்டவ தரிசனம் எல்லாத் தத்துவங்களையும் உள்ளடக்கியது என்பதே குறிப்புக்கள் தரும் கருத்து. இதனைத் தாண்டவப் பத்தி என்பர்.

திருவைந்தெழுத்து விளக்கப்பட்டி

பட்டி எண்.10

அ) தூலத் திருவைந்தெழுத்தில் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தருள் நிலையில் பொருள் தலைப்புகள். (பட்டிக்கு விளக்கம்)

1. பிரணவத்துக்கும் திருவைந்தெழுத்துக்கும் வரி வடிவளவில் உள்ள இயைபு.
2. திருவைந்தெழுத்து பதி, பாசம், பசு என்னும் முப்பொருளாம் தன்மை
3. திருவைந்தெழுத்து பௌதிக உலகின் நுண்பொருள்களாய ஐம்பூதங்களாதல்.
4. அண்ட, பிண்ட சராசரங்களின் இயக்கத்துக்குக் காரணமான ஆனந்த தாண்டவ மூர்த்தியின் ஐந்தொழில்கட்கும் திருவைந்தெழுத்தருள் நிலை.
5. சிவ சீவ ஐக்கியத்தில் திருவைந்தெழுத்தின் பங்கு.
6. சகளநிஷ்கள நிலையாகிய சதாசிவமாகிய சிவலிங்க வழிபாட்டில் திருவைந்தெழுத்து சிவலிங்கத்தின் உறுப்புக்களாதல் (பாதாதிகேசம்)
7. பஞ்சப் பிரம்மம் என்றழைக்கப்படும் சிவலிங்க உருவின் ஐந்து திருமுகங்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள நிலை.
8. இறைவன் கொலுவீற்றிருக்கும் திருக்கோயிலின் அமைப்பில் பல்வேறு நிலைகட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு

194. உண்மை விளக்கம் 45 (ஐந்தெழுத்தே)

9&10. சகளத் திருமேனியில் இறைவன் ஆனந்த நடராசராகத் திருக் கூத்தி யற்றும் அவரது திருமேனி நிலைக்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு (தகாரகாச இருதய குகை ஊன நடனம்) பாதாதிகேசம்.

11. ஐந்தொழிலியற்றும் சிவத்தின் அருட் செயல்கட்கு அணி செய்யும் சிவ சக்திகட்கு, திருவைந்தெழுத்துகளில் உள்ள தொடர்பு.

12. சரியை கிரியை யோகம், ஞானம் என்பனவற்றில் யோக நெறியில் குண்டலினியை சகஸ்ராரத்துக்குக் கொண்டு செல்லும் நிலையில் மூலாதாரத்துக்கும், சகஸ்ராரத்துக்கும் இடையேயுள்ள ஐந்து யோகா தார சக்கர நிலைகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

13. சைவ நெறியில் உயர்வளர் நிலைகளாகிய ஐம்பாடுகள் எனப்படும் நனவு, கனவு முதலிய ஐம்பாடுகளுக்கும் திருவைந்தெழுத்தால் உள்ள தொடர்பு.

14. ஐந்தொழில்களுள் படைப்புத் தொழிலின் பல்வேறு நிலைகட்கும் திருவைந்தெழுத்துக்குமுள்ள தொடர்பு முதலியன.

15. ஐம்பூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தன் மாத்தி ரைகள், அந்தக் கரண பஞ்சகம், ஐங்கலைகள், சாதாக்கியங்களைந்து, சக்திகளைந்து பஞ்சப் பிரம்மங்கள், பஞ்ச கருத்தாக்கள், பஞ்ச கிருத் தியங்கள், பஞ்ச வர்ணங்கள்; பஞ்ச பட்சிகள் முதலியனவற்றிற்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்புகள்.

ஆ) நுண்மைத் திருவைந்தெழுத்தாகிய சிவாய நம என்னும் திருவைந்தெ ழுத்தில் அருள் நிலைகளின் பொருள் தலைப்புக்கள்.

16. திருவைந்தெழுத்தை ஓதுகையில் நாத ஒலி பரவும் முறை.

17. சிவனாதி மெய்ப் பொருளைந்துக்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

18. ஆனந்த தாண்டவ மூர்த்தியின் படைப்பாதி ஐந்தொழில்கட்கும் திரு வைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

19. ஆனந்த தாண்டவமூர்த்தியின் ஐந்தொழில் நாடகத்துக்குதவும் துடி முதல் திருவடியாகிய நாடக உறுப்புகட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

20. தில்லைத் திருக்கோயிலில் சகளத் திருமேனியில் பரசிவமாய தாண் டவ மூர்த்தி தரிசன உற்சவத்தின் போது கொள்ளும் உபசாரங்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

21. பிரானின் அருளிச் செயல்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

22. பிரானின் அருளிச் செயல்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

23. சகஸ்ராரத்தில் லயமடையும் லயசிவத்தின் நிலைக்கும் அதன்பஞ்ச பிரம்ம நிலைக்கும் திருவைந்தெழுத்துக்குமுள்ள தொடர்பு.

24. போகாவஸ்தையில் கூத்தப்பிரான் நடிப்பதற்குப் பொருளாகக் கொள்ளும் தத்துவ நிலைகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

25. அண்டத்தில் சகள உருவில் கூத்தப் பிரான் நடம் பயிலும் சபைகட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

26. சிவ சீவத் தொடர்பில் இயலும் சிறப்பு வனப்பாதி ஐம்பாடுகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

தூலத் திருவைந்தெழுத்தின் அருள்நிலைகள்

பட்டி எண்.11

திருவைந்தெழுத்து பிரணவத்தின் ஐந்துறுப்புகளாதல்		முப்பொருளாதல்		ஐம்பூதங்கள்		ஐந்தொழில்கள்		சிவ, சீவ ஐக்கிய நிலைகள்	
(1)		(2)		(3)		(4)		(5)	
கூத்த நூல் பக் 22-23 (காமிகாமக மேற்கோள்)		ஸ்ரீசிவ அருணயோகி பக் 18, 'சிவனருளாய' -திருமந்திரம் 2711.		'அஞ்செழுத்தா லைம்பூதம்' -திருமந்திரம் 966		தேசிகர் பக் 145 (மகுடாகமம்)			
ந	தாரகை	ந	பாசம்	ந	வாயு	ந	படைத்தல்	ந	ஜீவான்மா
ம	தண்டம்	ம	மலம்	ம	ஆகாயம்	ம	காத்தல்	ம	
சி	குண்டலம்	சி	பதி (சிவம்அருள்)	சி	அப்பு (நீர்)	சி	அழித்தல்	சி	பரமான்மா
வ	பிறை	வ		வ	தீ	வ	மறைத்தல்	வ	
ய	பிந்து	ய	பசு / ஆன்மா	ய	பிருதிவி (மண்)	ய	அருளல்	ய	ஐக்கியம்

குறிப்பு: உருவ அமைப்பு

வழிபாட்டு முறைகள்

9&10. சகளத் திருமேனியில் இறைவன் ஆனந்த நடராசராகத் திருக் கூத்தியற்றும் அவரது திருமேனி நிலைக்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு (தகாரகாச இருதய குகை ஊன நடனம்) பாதாதிகேசம்.

11. ஐந்தொழிலியற்றும் சிவத்தின் அருட் செயல்கட்கு அணி செய்யும் சிவ சக்திகட்கு, திருவைந்தெழுத்துகளில் உள்ள தொடர்பு.

12. சரியை கிரியை யோகம், ஞானம் என்பனவற்றில் யோக நெறியில் குண்டலினியை சகஸ்ராரத்துக்குக் கொண்டு செல்லும் நிலையில் மூலாதாரத்துக்கும், சகஸ்ராரத்துக்கும் இடையேயுள்ள ஐந்து யோகாதார சக்கர நிலைகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

13. சைவ நெறியில் உயர்வளர் நிலைகளாகிய ஐம்பாடுகள் எனப்படும் நனவு, கனவு முதலிய ஐம்பாடுகளுக்கும் திருவைந்தெழுத்தால் உள்ள தொடர்பு.

14. ஐந்தொழில்களுள் படைப்புத் தொழிலின் பல்வேறு நிலைகட்கும் திருவைந்தெழுத்துக்குமுள்ள தொடர்பு முதலியன.

15. ஐம்பூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தன் மாத்திரைகள், அந்தக் கரண பஞ்சகம், ஐங்கலைகள், சாதாக்கியங்களைந்து, சக்திகளைந்து பஞ்சப் பிரம்மங்கள், பஞ்ச கருத்தாக்கள், பஞ்ச கிருத்தியங்கள், பஞ்ச வர்ணங்கள்; பஞ்ச பட்சிகள் முதலியனவற்றிற்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்புகள்.

ஆ) நுண்மைத் திருவைந்தெழுத்தாகிய சிவாய நம என்னும் திருவைந்தெழுத்தில் அருள் நிலைகளின் பொருள் தலைப்புக்கள்.

16. திருவைந்தெழுத்தை ஓதுகையில் நாத ஒலி பரவும் முறை.

17. சிவனாதி மெய்ப் பொருளைந்துக்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

18. ஆனந்த தாண்டவ மூர்த்தியின் படைப்பாதி ஐந்தொழில்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

19. ஆனந்த தாண்டவமூர்த்தியின் ஐந்தொழில் நாடகத்துக்குதவும் துடி முதல் திருவடியாகிய நாடக உறுப்புகட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

20. தில்லைத் திருக்கோயிலில் சகளத் திருமேனியில் பரசிவமாய தாண்டவ மூர்த்தி தரிசன உற்சவத்தின் போது கொள்ளும் உபசாரங்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

21. பிரானின் அருளிச் செயல்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

22. பிரானின் அருளிச் செயல்கட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

23. சகஸ்ராரத்தில் லயமடையும் லயசிவத்தின் நிலைக்கும் அதன்பஞ்ச பிரம்ம நிலைக்கும் திருவைந்தெழுத்துக்குமுள்ள தொடர்பு.

24. போகாவஸ்தையில் கூத்தப்பிரான் நடிப்பதற்குப் பொருளாகக் கொள்ளும் தத்துவ நிலைகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

25. அண்டத்தில் சகள உருவில் கூத்தப் பிரான் நடம் பயிலும் சபைகட்கும் திருவைந்தெழுத்துக்கும் உள்ள தொடர்பு.

26. சிவ சீவத் தொடர்பில் இயலும் சிறப்பு வனப்பாதி ஐம்பாடுகட்கும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு.

தூலத் திருவைந்தெழுத்தின் அருள்நிலைகள்

பட்டி எண்.11

திருவைந்தெழுத்து பிரணவத்தின் ஐந்துறுப்புகளாதல்		முப்பொருளாதல்		ஐம்பூதங்கள்		ஐந்தொழில்கள்		சிவ, சீவ ஐக்கிய நிலைகள்	
(1)		(2)		(3)		(4)		(5)	
கூத்த நூல் பக் 22-23 (காமிகாமக மேற்கோள்)		ஸ்ரீசிவ அருணயோகி பக் 18, 'சிவனருளாய' -திருமந்திரம் 2711.		'அஞ்செழுத்தா லைம்பூதம்' -திருமந்திரம் 966		தேசிகர் பக் 145 (மகுடாகமம்)			
ந	தாரகை	ந	பாசம்	ந	வாயு	ந	படைத்தல்	ந	ஜீவான்மா
ம	தண்டம்	ம	மலம்	ம	ஆகாயம்	ம	காத்தல்	ம	
சி	குண்டலம்	சி	பதி (சிவம் அருள்)	சி	அப்பு (நீர்)	சி	அழித்தல்	சி	பரமான்மா
வ	பிறை	வ		வ	தீ	வ	மறைத்தல்	வ	
ய	பிந்து	ய	பசு / ஆன்மா	ய	பிருதிவி (மண்)	ய	அருளல்	ய	ஐக்கியம்

குறிப்பு: உருவ அமைப்பு

தூலத் திருவைந்தெழுத்தின் இறை நிலைகள் பட்டி எண்.12

சிவலிங்க உறுப்புகள் பாதாதி கேசம், சகள நிஷ்கள நிலை		சதாசிவமான சிவலிங்கத்தின் ஐந்து முகங்கள் பஞ்சபிரம்ம நிலை		திருக்கோயில் நிலைகள்		இறைவனது உறுப்புகள் சகளத் திருமேனி தகராகாச நடனம் பாதாதிகேசம்		இறைவனது திருமேனிநிலை	
(6)		(7)		(8)		(9)		(10)	
"ஐந்தின் பெருமையே" திருமந்திரம் 969, (கழக உரை)		தேசிகர் பக் 144-140 மகுடாகம மேற்கோள்		"ஐந்தின் பெருமையே" திருமந்திரம் 969 (திருமந்திரம் - கழக உரை) "ஆயபதிதான்"மந்திரம் 2411.		" நவ்விரண்டு " சிவ வாக்கியம் 97		"ஆடும்படி கேள்" உண்மை விளக்கம் 32 தேசிகர் பக் 144 (மகுடாகமமேற்கோள்)	
ந	கீழ்ப்பீடம் பிரம்மபாகம்	ந	சத்யோசாதம் (மேற்கு (அ) (சூட்சும நிலை)	ந	அம்பலவாணர் நிலை	ந	இரண்டு கால்கள்	ந	திருவடி (ஊன்றிய பதம்)
ம	நடுக்கண்டம்	ம	வாமதேவம் (வடக்கு) (உ)	ம	பலிபீடம் (பாசநிலை)	ம	வயிறு	ம	உதரம் (வயிறு)
சி	மேற்பீடம்	சி	அகோரம் (தெற்கு) (ம)	சி	கருவறை (பதிநிலை)	சி	இரு தோள்கள்	சி	வளர் தோள் (இதயம்)
வ	கலவ பாத்திரம்	வ	தத்புருஷம் (கிழக்கு) (பிந்து)	வ	அருத்த மண்டப மனோன்மணி நிலை	வ	வாய்	வ	திருமுகம் (முகம்)
ய	பூசாங்கம்	ய	ஈசானம் (உச்சி) (நாதம்)	ய	ஆனேற்றுநிலை (பசு நிலை)	ய	இரு கண்கள்	ய	முடி (சிரம்)

ஸ்ரீ நடராசத் தத்துவம்

குறிப்பு: ஹிருதய குகை தகராகாசம் ஊன நடனம்.

தூலத் திருவைந்தெழுத்தின் அருள்நிலைகள் பட்டி எண்.18

"சத்திகள்" தேசிகர் பக் 145 (மகுடாகம மேற்கோள்) (சிவப்பிரகாசம் 92)		யோகியின் ஆறாதாரங்கள் "நமாதி நனாதி" திருமந்திரம் 2713		நனவாதி ஐம்பாடுகள் "நமாதி நனாதி" திருமந்திரம் 2713		படைப்புச் செயல்கள் "அஞ்செழுத்தாலைம் பூதம்" திருமந்திரம் 966 உரைகள்	
(11)		(12)		(13)		(14)	
ந	கிரியா சக்தி (ஆதார பிரம்ம சக்தி)	ந	சுவாதிட்டானம்	ந	நனவு	ந	நகர அடையாளத்தால் உலகை இயைந்து இயங்கிக் காக்கும் நடுநிலைமை
ம	ஞானசக்தி (ஊகார விஷ்ணு சக்தி)	ம	மணிபூரகம்	ம	கனவு	ம	மகர அடையாளத்தால் ஐம்பூதங்களாலாய உலகைப் படைத்தல்
சி	இச்சா சத்தி (கோர உருத்திர சத்தி)	சி	அநாகதம்	சி	உறக்கம்	சி	சிகர வகர அடையாளங்களால் எல்லாம் வல்ல முழுமுதற்சிவத்தின் பெருந்தன்மை ஒளிரல்
வ	ஆதி சக்தி (விந்து மகேஸ்வர சக்தி)	வ	விசுத்தி	வ	பேருறக்கம்	வ	
ய	பராசக்தி (நாத சதா சிவ சக்தி)	ய	ஆக்ஞை	ய	உயிர்ப்படங்குதல்	ய	யகர அடையாளத்தால் உடலுடன் உயிரினை இணைத்தல்

குறிப்பு : மூலாதாரம் முதல் சோதியாக விளங்குவதில் சமாதியுற்றுச் சிவாய நம என எண்ணுவதில் சிவமானவர்.

தூலத் திருவைந்தெழுத்தின் இறை நிலைகள் பட்டி எண்.12

சிவலிங்க உறுப்புகள் பாதாதி கேசம், சகள நிஷ்கள நிலை		சதாசிவமான சிவலிங்கத்தின் ஐந்து முகங்கள் பஞ்சபிரம்ம நிலை		திருக்கோயில் நிலைகள்		இறைவனது உறுப்புகள் சகளத் திருமேனி தகராகாச நடனம் பாதாதிகேசம்		இறைவனது திருமேனி நிலை	
(6)		(7)		(8)		(9)		(10)	
"ஐந்தின் பெருமையே" திருமந்திரம் 969, (கழக உரை)		தேசிகர் பக் 144-140 மகுடாகம மேற்கோள்		"ஐந்தின் பெருமையே" திருமந்திரம் 969 (திருமந்திரம் - கழக உரை) "ஆயபதிதான்"மந்திரம் 2411.		" நவ்விரண்டு " சிவ வாக்கியம் 97		"ஆடும்படி கேள்" உண்மை விளக்கம் 32 தேசிகர் பக் 144 (மகுடாகமமேற்கோள்)	
ந	கீழ்ப்பீடம் பிரம்மபாகம்	ந	சத்யோசாதம் (மேற்கு (அ) (சூட்சும நிலை)	ந	அம்பலவாணர் நிலை	ந	இரண்டு கால்கள்	ந	திருவடி (ஊன்றிய பதம்)
ம	நடுக்கண்டம்	ம	வாமதேவம் (வடக்கு) (உ)	ம	பலிபீடம் (பாசநிலை)	ம	வயிறு	ம	உதரம் (வயிறு)
சி	மேற்பீடம்	சி	அகோரம் (தெற்கு) (ம)	சி	கருவறை (பதிநிலை)	சி	இரு தோள்கள்	சி	வளர் தோள் (இதயம்)
வ	கலவ பாத்திரம்	வ	தத்புருஷம் (கிழக்கு) (பிந்து)	வ	அருத்த மண்டப மனோன்மணி நிலை	வ	வாய்	வ	திருமுகம் (முகம்)
ய	பூசாங்கம்	ய	ஈசானம் (உச்சி) (நாதம்)	ய	ஆனேற்றுநிலை (பசு நிலை)	ய	இரு கண்கள்	ய	முடி (சிரம்)

ஸ்ரீ நடராசத் தத்துவம்

குறிப்பு: ஹிருதய குகை தகராகாசம் ஊன நடனம்.

தூலத் திருவைந்தெழுத்தின் அருள்நிலைகள் பட்டி எண்.13

"சத்திகள்" தேசிகர் பக் 145 (மகுடாகம மேற்கோள்) (சிவப்பிரகாசம் 92)		யோகியின் ஆறாதாரங்கள் "நமாதி நனாதி" திருமந்திரம் 2713		நனவாதி ஐம்பாடுகள் "நமாதி நனாதி" திருமந்திரம் 2713		படைப்புச் செயல்கள் "அஞ்செழுத்தாலைம் பூதம்" திருமந்திரம் 966 உரைகள்	
(11)		(12)		(13)		(14)	
ந	கிரியா சக்தி (ஆதார பிரம்ம சக்தி)	ந	சுவாதிட்டானம்	ந	நனவு	ந	நகர அடையாளத்தால் உலகை இயைந்து இயங்கிக் காக்கும் நடுநிலைமை
ம	ஞானசக்தி (ஊகார விஷ்ணு சக்தி)	ம	மணிபூரகம்	ம	கனவு	ம	மகர அடையாளத்தால் ஐம்பூதங்களாலாய உலகைப் படைத்தல்
சி	இச்சா சத்தி (கோர உருத்திர சத்தி)	சி	அநாகதம்	சி	உறக்கம்	சி	சிகர வகர அடையாளங்களால் எல்லாம் வல்ல முழுமுதற்சிவத்தின் பெருந்தன்மை ஒளிரல்
வ	ஆதி சக்தி (விந்து மகேஸ்வர சக்தி)	வ	விசுத்தி	வ	பேருறக்கம்	வ	
ய	பராசக்தி (நாத சதா சிவ சக்தி)	ய	ஆக்ஞை	ய	உயிர்ப்படங்குதல்	ய	யகர அடையாளத்தால் உடலுடன் உயிரினை இணைத்தல்
குறிப்பு : மூலாதாரம் முதல் சோதியாக விளங்குவதில் சமாதியுற்றுச் சிவாய நம என எண்ணுவதில் சிவமானவர்.							

தூலத் திருவைந்தெழுத்தின் பஞ்சக நிலைகள் பட்டி எண்.14

பொருள்/தலைப்பு	ந	ம	சி	வ	ய
பூஞ்ச பூதங்கள்	பிருதிவி	அப்பு	தேயு	வாயு	ஆகாயம்
ஞானேந்திரியங்கள்	சுரோத்திரம்	துவக்கு	சட்சு	ஜிங்குவை	ஆக்ரானம்
கன்மேந்திரியங்கள்	வாக்கு	பாதம்	பாணி	பாயுரு	உபஸ்தம்
தன் மாத்திரை	சப்தம்	ஸ்பரிசம்	ரூபம்	ரசம்	கந்தம்
அந்தக் கரணபஞ்சகம்	மனம்	அகங்காரம்	புத்தி	சித்தம்	உள்ளம்
கலைகள் ஐந்து	நிவர்த்தி	பிரதிஷ்டை	வித்தை	சாந்தி	சாந்தியாதீதை
சாதாக்கியங்களைந்து	கர்ம சதாக்கியம்	கர்த்துரு சாதாக்கியம்	மூர்த்தி சாதாக்கியம்	அமூர்த்தி சதாக்கியம்	சிவ சதாக்கியம்
சத்திகள் ஐந்து	கிரியா சத்தி	ஞானசக்தி	இச்சாசக்தி	ஆதிசக்தி	பராசக்தி
பஞ்சப் பிரம்மங்கள்	சத்தியோஜாதம்	வாம தேவம்	அகோரம்	தத்புருஷம்	ஈசானம்
பஞ்ச கர்த்தாக்கள்	பிரமன்	விஷ்ணு	ருத்திரன்	மகேஸ்வரன்	சதாசிவம்
பஞ்ச கிருத்தியங்கள்	சிருஷ்டி	ஸ்திதி	சம்காரம்	திரோபவம்	அனுக்கிரகம்
பஞ்ச வர்ணங்கள்	அகாரம்	உகாரம்	மகாரம்	நாதம்	விந்து
பஞ்ச பட்சிகள்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்

திருஐந்தெழுத்துக்கள் மேற்கண்டவற்றைத் தமக்குள் அந்தர்ப் பூதமாக்கிக் கொண்டு, சப்த நிஷ்டமாகிய பிரபஞ்சங்களுக்கெல்லாம் ஆதாரமாய் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

மந்திர பீஜப் பொருள் வேறுபாடுகளைக் குருவழி அறிக.

நூல் அருண ப 7, 8 : நூல் : ஐயர், திருமந்திரம் 966 : உ. வி. 44

சிவாயநம என்னும் நுண்மைத் திருவைந்தெழுத்தின் தெய்வத நிலைகள்

பட்டி எண்.15(அ)

திருவைந்தெழுத்தினை ஓதுகையில் ஒலிபரவும் முறை		மெய்ப் பொருளைந்து		ஐந்தொழில்கள்		நாடக உறுப்புகளும் கருவிகளும்		தரிசன உற்சவம்	
(16)		(17)		(18)		(19)		(20)	
வாயொடு கண்டம்' திருமந்திரம் - 2701		"சிவனருளாய" திருமந்திரம் 2711 "சிவனருளாவி" உவி 41 "சிவன் சக்தி சீவன்" திருமந்திரம் - 2710		"தோற்றம்துடி" உவி 35 "அரன்துடி தோற்றம்" திருமந்திரம் 2799 நூல் அருண பக்கம் 28		' திருந்துநற்' திருமந்திரம் 2797 'சேர்க்கும்துடி' உவி 33 " மருவு துடி" திருமந்திரம் - 2798		நூல் ஐயர் பக் - 33	
சி	வாய்	சி	சிவன்	சி	தோற்றம் துடியதனில் (மாயையை உதறுதல்)	சி	உடுக்கையை உதறியகை, துடி துடியுடைய கை	சி	அபிடேகம்
வா	கண்டம் (கழுத்து)	வா	அருள்	வா	அபய கரத்தில் காத்தல் (ஆனந்த வாரியில் அழுத்துதல்)	வா	அருந்தவர் அனைத்த மலர்க்கை, வீசுகரம் வீசுகரம்	வா	எழுந்தருளிக் காட்சி தருதல்
ய	இதயம்	ய	ஆன்மா	ய	அங்கியில் சங்காரம் (மாயையிற் கட்டுண்ட சஞ்சித கர்மங்களை எரித்தல்)	ய	ய அமைந்த பொற்கை அபய கரம், அமைந்த கரம்	ய	இரட்சாபந்தனம்
ந	உந்தி	ந	திரோதம்	ந	ஊன்றிய திருவடியில் மறைப்பு (திரோதம்) (மலத்தை மேலிடாது அழுத்துதல்)	ந	அக்கினியுடைய இடத்தே கை, அங்கி அனலுடை கரம்	ந	கறுப்புச் சாந்தணிதல்
ம	இலிங்கம்	ம	மலமாயை	ம	நான்ற மலர்ப்பாதம் அருளல் (ஆன்மா விடத்தில் அருளை மேலிடச் செய்தல்)	ம	ஊன்றிய திருவடி முயலகனார் (ஞான நடனத்திருக்காட்சி) திருக்கைகளும் திருவடிகளும்	ம	வெள்ளணி யணிந்து உற்சவம் கொள்ளல்
	கேசாதிபாதம்			முத்தி பஞ்சகிருத்தியம் திருவடியை மடித்து அருளானந்தத்தை ஆன்மாவிடம் நிலைபெறச் செய்தல்					

வழிபாட்டு முறைகள்

தூலத் திருவைந்தெழுத்தின் பஞ்சக நிலைகள் பட்டி எண்.14

பொருள்/தலைப்பு	ந	ம	சி	வ	ய
பஞ்ச பூதங்கள்	பிருதிவி	அப்பு	தேயு	வாயு	ஆகாயம்
ஞானேந்திரியங்கள்	சுரோத்திரம்	துவக்கு	சட்சு	ஜிங்குவை	ஆக்ரானம்
கன்மேந்திரியங்கள்	வாக்கு	பாதம்	பாணி	பாயுரு	உபஸ்தம்
தன் மாத்திரை	சப்தம்	ஸ்பரிசம்	ரூபம்	ரசம்	கந்தம்
அந்தக் கரணபஞ்சகம்	மனம்	அகங்காரம்	புத்தி	சித்தம்	உள்ளம்
கலைகள் ஐந்து	நிவர்த்தி	பிரதிஷ்டை	வித்தை	சாந்தி	சாந்தியாதிதை
சாதாக்கியங்களைந்து	கர்ம சதாக்கியம்	கர்த்துரு சாதாக்கியம்	மூர்த்தி சாதாக்கியம்	அமூர்த்தி சதாக்கியம்	சிவ சதாக்கியம்
சத்திகள் ஐந்து	கிரியா சத்தி	ஞானசக்தி	இச்சாசக்தி	ஆதிசக்தி	பராசக்தி
பஞ்சப் பிரம்மங்கள்	சத்தியோஜாதம்	வாம தேவம்	அகோரம்	தத்புருஷம்	ஈசானம்
பஞ்ச கர்த்தாக்கள்	பிரமன்	விஷ்ணு	ருத்திரன்	மகேஸ்வரன்	சதாசிவம்
பஞ்ச கிருத்தியங்கள்	சிருஷ்டி	ஸ்திதி	சம்காரம்	திரோபவம்	அனுக்கிரகம்
பஞ்ச வர்ணங்கள்	அகாரம்	உகாரம்	மகாரம்	நாதம்	விந்து
பஞ்ச பட்சிகள்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்

திருஐந்தெழுத்துக்கள் மேற்கண்டவற்றைத் தமக்குள் அந்தர்ப் பூதமாக்கிக் கொண்டு, சப்த நிஷ்டமாகிய பிரபஞ்சங்களுக்கெல்லாம் ஆதாரமாய் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

மந்திர பீஜப் பொருள் வேறுபாடுகளைக் குருவழி அறிக.

நூல் அருண ப 7, 8 : நூல் : ஐயர், திருமந்திரம் 966 : உ. வி. 44

சிவாயநம என்னும் நுண்மைத் திருவைந்தெழுத்தின் தெய்வத நிலைகள்

பட்டி எண்.15(அ)

திருவைந்தெழுத்தினை ஓதுகையில் ஒலிபரவும் முறை		மெய்ப் பொருளைந்து		ஐந்தொழில்கள்		நாடக உறுப்புகளும் கருவிகளும்		தரிசன உற்சவம்	
(16)		(17)		(18)		(19)		(20)	
வாயொடு கண்டம்' திருமந்திரம் - 2701		"சிவனருளாய" திருமந்திரம் 2711 "சிவனருளாவி" உவி 41 "சிவன் சக்தி சீவன்" திருமந்திரம் - 2710		"தோற்றம்துடி" உவி 35 "அரன்துடி தோற்றம்" திருமந்திரம் 2799 நூல் அருண பக்கம் 28		' திருந்துநற்' திருமந்திரம் 2797 'சேர்க்கும்துடி' உவி 33 " மருவு துடி" திருமந்திரம் - 2798		நூல் ஐயர் பக் - 33	
சி	வாய்	சி	சிவன்	சி	தோற்றம் துடியதனில் (மாயையை உதறுதல்)	சி	உடுக்கையை உதறியகை, துடி துடியுடைய கை	சி	அபிடேகம்
வா	கண்டம் (கழுத்து)	வா	அருள்	வா	அபய கரத்தில் காத்தல் (ஆனந்த வாரியில் அழுத்துதல்)	வா	அருந்தவர் அனைத்த மலர்க்கை, வீசுகரம் வீசுகரம்	வா	எழுந்தருளிக் காட்சி தருதல்
ய	இதயம்	ய	ஆன்மா	ய	அங்கியில் சங்காரம் (மாயையிற் கட்டுண்ட சஞ்சித கர்மங்களை எரித்தல்)	ய	ய அமைந்த பொற்கை அபய கரம், அமைந்த கரம்	ய	இரட்சாபந்தனம்
ந	உந்தி	ந	திரோதம்	ந	ஊன்றிய திருவடியில் மறைப்பு (திரோதம்) (மலத்தை மேலிடாது அழுத்துதல்)	ந	அக்கினியுடைய இடத்தே கை, அங்கி அனலுடை கரம்	ந	கறுப்புச் சாந்தணிதல்
ம	இலிங்கம்	ம	மலமாயை	ம	நான்ற மலர்ப்பாதம் அருளல் (ஆன்மா விடத்தில் அருளை மேலிடச் செய்தல்)	ம	ஊன்றிய திருவடி முயலகனார் (ஞான நடனத்திருக்காட்சி) திருக்கைகளும் திருவடிகளும்	ம	வெள்ளணி யணிந்து உற்சவம் கொள்ளல்
	கேசாதிபாதம்			முத்தி பஞ்சகிருத்தியம் திருவடியை மடித்து அருளானந்தத்தை ஆன்மாவிடம் நிலைபெறச் செய்தல்					

வழிபாட்டு முறைகள்

நுண்மைத் திருவைந்தெழுத்தின் தெய்வத நிலைகள்

பட்டி எண்.15(ஆ)

அருளிச் செயல்கள்	அருளிச் செயல்கள்	சமஷ்டிப் பிரணவ பஞ்சாட்சரம்	நடிப்பதற்கு பொருளாகக் கொண்டவை	கூத்து பயிலும் சபைகள்	ஐம்பாடுகள்
(21)	(22)	(23)	(24)	(25)	(26)
		மகுடாகம மேற்கோள் தேசிகர் பக்- 143, 144 லயசிவத்தில் அருள் மேனி	மகுடாகம மேற்கோள் தேசிகர் பக்- 142	திருமந்திரம் (கழகம்) 2713 உரை மேற்கோள் வெண்பா " மேலாம் சிவாய நம"	திருமந்திரம் 2710 உரை மேற்கோள் (க) வெண்பா "சிறப்பு வனப்பு"
சி உயிர்கள் மல மாயை நீக்கம்	சி மாயை நீக்கம்	சி அகரம், சத்யோஜாதம்.	சி சிவம்	சி மணிமன்றம் (திருவாலங்காடு)	சி சிறப்பு (சிவத்தைக் குறிப்பது)
வ உயிர்களை போகத் தழுத்தல்	வ அருளுடம்பு எடுத்தல்	வ உகரம், அகோரம்	வ சத்தி	வ பொன்னம்பலம் (தில்லை)	வ வனப்பு (அழகு)
ய நனமத்தை அழித்து இளைபாற்ற	ய ஆனந்தத் தழுத்தல்	ய மகரம், அகோரம்	ய நாதம்	ய வெள்ளியம்பலம் (மதுரை)	ய யாப்பு (பிணிப்பு)
ந மலம் அற அழுத்தல்	ந கருமச் சிதைவு	ந பிந்து தத்புருஷம்	ந பிந்து	ந தாமிரசபை (நெல்லை)	ந நடப்பு(உயிர்களை மலமாய கன்மங்களுடன் நடத்துதல்
ம அருளால் பேரின்ப வீடருளல்	ம மலம் அகற்றல்	ம நாதம் ஈசானம்	ம வைந்தவம்	ம ஓவிய சபை (திருக்குற்றாலம்)	ம மறைப்பு (மாயை)
o	(சூட்சும பஞ்ச கிருத்தியம் போகாவஸ்தையில் கூத்தனுருவம் தாங்கி நடைபெறுவது.)				

ஸ்ரீ நடராசத் தத்துவம்

தில்லை – தொன்மை

தில்லை என்ற தலம் ஒரு பெருமைக்குரிய நடராச வழிபாட்டுக்குரிய யோக வழிபாட்டுத் தலம். "ஆதியாய்க் கிடமாய சிற்றம்பலம்" என ஞான சம்மந்தர் மொழிவது, தில்லை நடராச வழிபாட்டு முறையின் ஆதித் தொன்மையைக் காட்டுகிறது. நாவுக்கரசர் "ஞாலமாம் தில்லை" என்பார். தில்லை வழிபாட்டு முறை, ஒரு வகை புனித உலகம் என்பதே கருத்து.

நாவுக்கரசர் எரியாடலை "செஞ்சடைகற்றை முற்றத்து" எனத் தொடங்கும் பதிகம் முழுவதும் இறுதி அடியில் "எரியாடு மாறே" என்பார். எரியாடல் தொன்மையான கிராமிய வழிபாட்டுச் சடங்கு என்பதாலும், பிரபஞ்ச இயக்கத்துக்கு அடிப்படை என்பதாலும், சங்காரமும் படைத்தலும் ஒரு சேர இயங்குதல் என்பதாலும், எரியாடலுக்கு முதன்மை தந்திருக்கலாம். இதுவும் தொன்மைக்கான அறிகுறி.

தில்லையின் சிறப்பு – தில்லை யோக பீடம்

தில்லைத் தலத்தில், கற்கோயில்கள் அமைந்திராத காலத்தில், பதஞ் சலியார் காலத்தில், வியாக்ரபாதர் காலத்தில், சபை அமைப்பில் அமைந்த கோயிலின் முன்னே சீடர்கள் அமர்ந்து பிராணாயாமம், யோகம், தியானம் முதலியன செய்து கொண்டிருக்க, அவர்கட்கு ஏகாக்கிரதை ஏற்படுத்துதற்கும், அவர்களுக்கு இறைவனின் இறையம்சம், பிரபஞ்ச இயக்க அனவரத தாண்டவ நிலை முதலியனவற்றை விளக்க அம்பலம் என்று அழைக்கப்படும் சித்சபை என்னும் ஞான சபை இருந்திருக்க வேண்டும். தில்லை வந்து கூடிய யோக பக்தர்கட்குத் தில்லைவாழ் அந்தணர் என்ற பெயர் அமைந்திருக்கலாம். தில்லை யோக பீடத்தில், பதஞ்சலியார் போன்ற யோகிகள், பக்தர்கட்கு உபதேசம் செய்து, யோகக் கலையில் அவர்களை மேம்படச் செய்து, ஆதார நிலைகளில் ஒளியுருவில் இறைவனைக் காணும் பயிற்சியினை அளித்திருக்க வேண்டும். ஊன நடனத்தை ஓவியத்தோ, சுதையிலோ காட்டி, ஞான நடனத்தைச் சிந்தையிலும், சிரசில் பிரம்மரந்தி ரத்தும், இதயத்தில் அநாகதத்தும், காண வைத்த நிலை அவண் நிச்சயமாக நடந்துள்ளது. திருவாசகத்தில் கூறியது போல "இந்திரிய வய மயங்கி இறப் பதற்கே காரணமாய், அரு நரகில் வீழ இருந்தவர்க்கு, சிந்தைதனைத் தெளிவித்து, சிவமாக்கி, இறைவனை ஆட்கொள்ள வைக்கும்" நிலைக்கு, குரு உபதேசம், வழி காட்டல், நிச்சயம் தேவை. எனவே தில்லைத் தானம் எனப்படும் கோயில் நிலை யோக குருகுலமாக இருந்திருக்க வேண்டும்.[195]

தில்லை, காடாயிருந்த நிலை, ஆலமரத்தின் கீழ் மூலட்டானம் இருந்தமை முதலியன இக்கருத்துக்கு அணி செய்வன. சித்சபை அமைப்பு சடங்கு பூசைக்கு அன்று. சபை என்பது ஒத்த ஞானியர் கூடும் இடம். அனைவரும் காணத்தகு வெளியில், கட்டிடங்கள் இல்லாது, சபைக்கு எதிரே அமர்ந்து, யோகம் செய்த நிலை இருந்திருக்க வேண்டும். தில்லைக்கு யோகியர் வந்து குழுமிய காரணமும் இதுவே. இரகசியத் தான வழிபாடு, தீக்கையின் இறுதிக் கட்டமாக இருந்திருக்க வேண்டும். எழுத்து வடிவில் சான்றுகள் குறைவாக இருப்பினும் யோகமுனி பதஞ்சலி, வியாக்கிர பாதர், உபமன்னியு, திருமூலர் போன்றவர்களின் பெயர்களின் தொடர்பு, திருமந்திரத்தில் கூறப்படும் யோக, நடராச நெறிகள், தகர வித்தையின் யோகாம்சம், ஆகாய வெளி

195. ஸ்ரீ சிவ. அருணசிவயோகி, ப:32

வழிபாட்டுத் தத்துவங்கள் முதலியன யாவும் யோக வழிபாட்டுக் கோயில் இருந்தமைக்கு, உறுதியான சான்று.

சிதம்பரத் தலத்தைக் குறிக்கும் சிதம்பரம் என்ற தத்துவக்குறியீட்டுச் சொல், நகரின் பெயராகவும் இருக்கலாம். தில்லை என்ற பெயர் தலவிருட்ச அடிப்படையில் அமைந்த சிறப்புக்குரிய பெயர். யோக நெறியில் இட, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகட்கும், தில்லை என்னும் அநாகதமே வேர் என்பர்.[196] அநாகதமாகிய இதயத்தையே தில்லை வனம் என்பதும் உண்டு. திரு மூலட்ட நாதரைப் புராண முனிவர்கள் தில்லை வனத்தில் தரிசித்ததாகப் புராணங்கள் போற்றுவன. அண்டத் தில்லையினை வனத் திலும், பிண்டத் தில்லையினை அநாகதத்திலும் தரிசித்திருக்கலாம்.

திருநாவுக்கரசர் பெரிய திருத்தாண்டகத்தில் ஆரூரும் புகுவானை, ஆரூர்ச் சுடர்க் கொழுந்தை என்னும் புக்க திருத்தாண்டகத்தில் திருவாரூர் திருமூலட்டானமேயார். புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் என்று பாடுவார்.[197] திருவாரூரும் தில்லையும் யோக வழிபாட்டுத் தலங்கள். தில்லையிலும் திருவா ரூரிலும் மந்திர எந்திர வழிபாடுகள் உண்டு. இதனை மந்திரமும், தந்திரமும் தாமே போலும் என்பார்கள்.

குரு சீடர் வாழ் நிலை

திருமந்திரம், ஞான அனுபவம் என்பது குருவருளால் தான் கிட்டும் என்பதைக் குருமடதரிசனம் எனக் கூறும். திருஞான சம்மந்தரும் திருநாவுக்க ரசரும் சிட்டர் வாழ்தில்லை என்பர். தில்லைச் சிற்றம்பலத்தில் சித்சபையில் குரு சீட மரபில் உபதேசம், வழிபாட்டுக்கு வழிகாட்டல் முதலியன ஏழாம் நூற்றாண்டில் இருந்துள்ளது என்பதை இது காட்டுகின்றது. நடராச வழிபாடு யோக நெறிப்பட்டது என்பதை அறிய இது உதவுகின்றது. தில்லையில் சிட்டர்வாழ் நிலை, ஓவா வேள்வி, பசு வேட்டல் அபிடேக ஆராதனைகள் முதலியன நிகழ்ந்துள்ளன, என்பது திருஞானசம்மந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்களில் குறிப்பிடப்படுகின்றன. மற்ற கோவில்கட்கு மேல் இவண் சபையில் சிட்டர் வாழ் நிலை மிகுதியாக அமைந்தது என்பதே கருத்து. இது சமண பௌத்த வரவினால் ஏற்பட்ட ஞான வேட்கை எழுச்சியாவுமாகலாம். "தில்லையார் தொழுதேத்து சிற்றம்பலம்" என்றும் "கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலம்" என்றும் ஞான சம்மந்தர் போற்றுகின்றார். இதனையே நாவுக் கரசர் "தில்லைவட்டம் திசை கைதொழ" என்பார். இவை யோக மேநிலைக் குறிப்புகளாகலாம்.

சபை-கருவறை

சிவன் கோவில்களுள் சிவலிங்கம், தேவி முதலியோர் கொலுவீற்றி ருக்கும் கோவிலுக்குக் கருவறை என்று பெயர். ஆடல்வல்லானாய நடராசர் கருவறைக்குள் இருப்பதில்லை. அவர் சபையில் ஆடுவார். இவர் கருவன்று. கருவுக்குத் கருத்தா. கருவறை என்பது ஒரு கலசம் உடையது. சபைக்கு ஏழு கலசங்கள் இருக்கும்.[198] கருவறைக்கு அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி என்ற ஆறு உறுப்புக்கள் உண்டு. சபைக்குக் கண்டம் தவிர்த்து பிற ஐந்து உறுப்புக்கள் மட்டுமே உண்டு. சபை என்பது அறிவு டையோர் கூடிக் கலந்துரையாடும் பொதுவிடம். இவண் குருசீடர், தலைவர்

---

196. திருமந்திரம் பா:2754
197. தேசிகர் ப.87
198. சத்தியமூர்த்தி டி., நடராஜர் கோவில், ப:16

உறுப்பினர்கள் எல்லாம் உண்டு. தில்லை ஞான சபை, முற்காலத்தில் தெய்விக அறிவியல் பயிற்சிக் களமான சபையாக இருந்திருக்க வேண்டும்.

நடராசப் பொது-சபை

உற்சவ நடராசர் செம்பாலனவர். சிவன் கோவில்களில் உற்சவ விக்கிரங்கள் வைத்திருக்கும் இடங்களில், நடராசரையும் உடன் வைப்பதில்லை. நடராசர் சிலை மட்டும் தெற்குப் பார்த்த அளவில் தனி மண்டபத்திலோ, மஞ்சத்திலோ, மாடத்திலோ வைக்கப் பட்டிருக்கும். மஞ்சம் சபையின் அடையாளமாகும். நடராச மூர்த்தம் வடக்குப் பிரகாரத்தில், தெற்குப் பார்த்த தனிச் சபைக் கோவிலில், தெற்குப் பிரகார கோபுரத்தில், தென்புற மகர தோரணத்தில், தெற்குப் பார்த்த அளவில் அமைவது மரபு. மதுரைக் கோயிலில் வெள்ளியம்பலத்தில் கற்சிலையான கால் மாறிய நடராசரும், முதல் பிரகாரச் சபையில் செப்பு நடராசரும், இரண்டாம் பிரகாரத்தில் கற்சிலை நடராசரும் இடம் பெற்றுள்ளனர். திருவாதவூரில் பிரகாரத்தில் சபை உள்ளது. மகா மண்டபத்துத் திண்ணையில் தனி மஞ்சத்தில் செப்பு நடராசர் இருக்கிறார். சபை அம்சம் சிற்பக் கலை ரீதியாகப் பின்பற்றாது மற்ற பரிவார தேவதைகட்குரிய கோயில் போன்றே அமைந்த நிலைகளையும் சில கோயில்களில் காண்கிறோம். பெரும்பான்மையும் கோவில்களில் நடராசர் இருக்கும் இடத்துக்குச் சபை என்ற பெயர் எழுதப்பட்டிருக்கும்.

கனகம்

கனக சபை, பொன்னம்பலம் என்பதில் வரும் கனகம், பொன் என்பன அறிவைச் சுட்டும் சொல் என்பார் சித்பவானந்தர்.[199] யோக தரிசனத்தின் போது, ஏற்படும் ஒளியையே பொன் என்பர். நடராச வழிபாடு விஞ்ஞானகலர் வகுத்த ஞானயோக வழிபாடு என்பதை இது குறிக்கும். கைலை மலை முகடுகள் காலை மாலைப் பொழுதுகளில் கனக மயமாகவும், நண்பகல் பொழுதில் வெள்ளி மயமாகவும் இருப்பது கைலாயம் சென்றோர் கூறும் உண்மைகள். இமயத்து யோகிகள் அட்ட மூர்த்த இயற்கை எழில் நடனங்களைக் கண்கொண்டும், நடராச நடனத்தை, கால் வழி-யோக வழி அகக் கண்கொண்டும் தரிசனம் செய்த போது அவ்விடத்தைப் பொன்னம் பலமாகவும், வெள்ளியம்பலமாகவும் கண்டு அஃதேபோல் தில்லையில் பொன்னம்பலத்தையும், மதுரையில் வெள்ளியம்பலத்தையும் நிறுவியிருக் கலாம். இமயம் வெள்ளியங்கிரி என அழைக்கப்படுவது மரபு. ஹிரண்யகர்ப முட்டையின் நிறம் பொன்னிறம். ஹிரண்ய கர்ப மூல இடமான இரகஸ்யத் தானத்தை பொன்னம்பலம் என அழைத்திருக்கலாம்.

சிதம்பரம், சித்சபை, தத்துவ விளக்கங்கள்

சிவதாண்டவப் பொருண்மை

சிவ தாண்டவத் தத்துவங்கள் சிதம்பரம், சித்சபை, சிதம்பர இரகஸ்யம், தகர வழிபாடு முதலியவற்றை உள்ளடக்கிய ஒன்று. இவை ஒன்றை ஒன்று பிரிக்க இயலாதவை. சிதம்பரம் திருக் கோவிலில் சித்சபையின், அமைப்பு, தத்துவம் முதலியன சகல சாத்திரங்களின் நுண்மைப் பொருண்மையின் பொதுவாக அமைந்துள்ளன. இவற்றின் பொருண்மை ஒன்றோடொன்று பின்னியன. எனவே சிதம்பரம் முதலியவற்றின் சிறப்புகளை அறிய முயல் வோம்.

---

199. உரையாடல்

சிதம்பரம் - தத்துவ விளக்கம்

சிதம்பரம் சொற்பொருள்

சிறு அம்பலம், சித் அம்பரம் சிதம்பரம் என்றாகும். அம்பரம் என்னும் சொல், ஆகாயம், வெளி எனப் பொருள்படும். அம்பரம் அம்பலம் என்றாகிச் சிதம்பரம் சிற்றம்பலம் என்றாகும். சிறு அம்பலம் சிற்றம்பலமாகி சிதம்பரம் ஆனது என்பாரும் உண்டு. சிதம்பரம் என்ற சொல் திருமந்திரத்துக்கு முன் நூல்களில் இடம்பெறவில்லை, எனினும் அச்சொல் தொன்மையானதாகத் தான் இருக்க வேண்டும்.

ஞானாகாயம்

சித்து அம்பரம் என்று கொள்ளும் பொழுது சித் என்பதற்கு ஞானம் என்று பொருள் கொண்டு சிதாகாயம், ஞானாகாயம். எனப் பொருள் கொள்வர். சிறு அம்பலம் என்று பொருள் கொள்ளும் பொழுது, சாந்தோக்ய உபநிடதம் முதலியவற்றுள் கூறியுள்ளபடி தகராகாயமாகிய இதயத்தா னத்தில், அநாகத நிலையில் இயங்கும், சிறு அம்பலம் என்று சிறப்புறும். தகராகாயச் சிறு அம்பலமும் ஆகாயமே. திருஐந்தெழுத்தோதி இறைவனைச் சோதி வடிவில் காணும் யோக நெறி, ஞான நெறியே ஆகையால், இவ்விரு பொருளும் ஏற்புடைத்தே. சிதம்பரம் என்ற சொல்லுக்குத் திருமந்திர உரையா சிரியர்கள், அறிவாகாயம், ஞானாகாயம், நுண்ணறிவு அம்பலம் எனப் பொருள் கூறுகின்றனர்.[200]

தத்துவ அடிப்படை

தகரவித்தை, ஆகாய நெறி, ஞானமார்க்கம், முதலியன அடிப்படையில் எழுந்ததே இப்பெயர் எனினும், "எங்கும் திருமேனி, எங்கும் சிவசக்தி, எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்" என்ற திருமந்திர அடிகளின் கருத்துக்கள் சிதம்பரம் ஆனந்த தாண்டவத்தத்துவத்தின் சிறப்புக்கு உயிர் நாடியாயமை கின்றது என்பதை நிலை நாட்டுகின்றது.

சிதம்பரத் தத்துவத்தின் பெயர்கள்

கூத்தப் பிரான் ஆனந்த தாண்டவமியற்றும் தலைமைத் திருத்தலத்தின் பெயர் சிதம்பரம். இத்தலத்திற்கு, புராணங்களிலும் உபநிடதங்களிலும் பல காரணப் பெயர்கள் குறிப்பிடப்பட்டாலும், அவற்றுள், சிறப்புக்குரிய, பெயர் களாக விளங்குவன, பெரும் பற்றப்புலியூர், வியாக்கிரபுரம், புண்டரிகபுரம், தில்லை என்பன. பிரம்மபுரம், திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம், கோயில் என்பனவும் அவற்றுள் அடங்குவன.[201] சத், பரம், நித்யம், இரண்மய கோசம், மகத், விவிக்தம், புண்டரிகம், குகை, பரிசுத்தம், அத்புதம், சத்யஸ்பதம், ஞான சுகம், பரமவியோமம், பரப்பிரம்மம், சபை, சக்தி, பரமாலயம், சிவாலயம், முதலியன பிற சில.[202] இவ்வனைத்துப் பெயர்களும் சிதம்பரத் தலத்துக்கும், சிதம்பரத் தத்துவத்துக்கும், சிற்றம்பல நாதராய நடராசரின் தத்துவத்திற்கும் உள்ள தத்துவத் தொடர்பினைச் சுட்டும் சொற்களாகவே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சிதம்பரம் என்ற சொல் முதன் முதலில் திருமந்தி ரத்தில் தான் குறிப்பிடப்படுகின்றது.

பெரும்பற்றப் புலியூர்

புலிக்கால் முனிவராய வியாக்கிரபாதர் பூசனைக்காக மலர் பரிக்க, மரத்தில் பற்றிப் பிடிக்க, புலிக்கால் பெற்றது புராணச் செய்தி. இம்முனிவர்

---

200. திருமந்திரம் 2722
201. நஜன், ப:47
202. சோம சுந்தரம், ஜே.எம், பல்கலைக் கழக குழல், ப:46

ஞானப் பற்றாய் நின்று ஞான சபை தெய்வத்தை வழிபடும் முறை பற்றி, பெரும் பற்றப் புலியூர் என்னும் பெயர் வந்ததென்பர். மலர் பரித்தல், மலர் பரிக்கும் காலால் - மூச்சால் இறைவனைப் பற்றுதல் என்றெல்லாம் விரிக்க இயலும்.[203] முதற் குலோத்துங்கனுக்கு முன்னர் காவிரிக்கு வடக்கிலும், தென்பெண்ணைக்குத் தெற்கிலுமுள்ள பகுதி, விருதராஜ பயங்கர வளநாடு என்று வழங்கலாயிற்று. இந்நாட்டில் அடங்கிய சிதம்பரம், புலியூர் என்ற பெயரில் அரசனின் நேர்ப் பார்வையில் ஆளப்பட்ட தனியூராக இருந்து வந்துள்ளது.[204] தில்லைப் பெரும்பற்றப் புலியூர் கோயில் தானத்தைச் சார்ந்த, மாகேசுவரர், வருவாய் குறைந்து, பூசை முட்டுப் பெற்ற கோயில்கட்கு உதவிகள் செய்து வந்துள்ளனர். எனவே பெரும்பற்றப் புலியூர் என்ற பெயர் சமயத்துறையில் சிறப்புக்குரிய ஒன்று என்பது நன்கு புலனாகும். புலிக் கொடி சோழர்களுடையது.

புண்டரிகபுரம்

புண்டரிகபுரம் என்பது இறைவன் ஆனந்த தாண்டவம் புரியும் பக்தனின் இதயக் கமலம். யோக நெறியில் கமலத் தானங்கள் அடிப் படையில் அநாகதமே இதயக் கமலம். அதுவே தகர வித்யா நிலை. உபநிடதங்கள் தகர வித்தை பற்றிக் குறிப்பிடுகையில், தகரம் என்பது புண்டரிகம் என்று குறிப்பிடப்படும்.[205] புண்டரிகம் என்பது அன்னமய கோசத்தாலாய தூல உடலின் இதயப் பகுதி என்றும், சிதம்பரத்தலம் என்றும் பொருள்படும்.[206] வேத பாதத்சவத்தில், ஜைமினி முனிவர் நடன சபேசரை புண்டரிகபுரத்தலமாகிய சிதம்பரத்தில் சந்தித்ததாகக் கூறப்படுகிறது.[207] எல்லாப் புண்ணியங்களும் தினமும் கிடைப்பதற்குரிய வாய்ப்பாக, தினமும் தாண்டவத்திற்குரிய, மிக்குயர்ந்த, குற்றமற்ற இடமாகப் பூவுலகில் புண்டரி கபுரம் கற்பிக்கப்பட்டது என்பர். இப்புண்டரிகபுரம் அக்கினிக்கு இணையாக பிரகாசமும், முனிவர்களால் வணங்கப்படுகின்ற தன்மையும் உடையதாக, இம்மைக்குரிய போகத்தையும், முத்தியையும் தரவல்லது என்பர்.[208] இதயக் கமலத்தில் போற்றப்படுகிற அது, கமலத்தானம் போன்று நகர் நடுவே இருப்பதால், அது முனிவர்களால் புண்டரிகபுரம் எனக் குறிக்கப்பட்டது என மகா சபாநாத மகாத்மியம் கூறும்.[209] புண்டரிகபுர மகாத்மியம் என்ற புராணம் பன்னிரண்டு பகுதிகளோடு அமைந்துள்ளது.

சிதம்பரத் தலச் சிறப்புக்கள்

கடவுளின் வடிவம்

கடவுளின் வடிவத்தில், சித் அம்பரமாக சிதம்பரமாக, - அறிவாகா யமாகக் கடவுளை வணங்குவதற்காக அமைக்கப்பட்ட சித்சபை அமைந்த திருத்தலம் சிதம்பரம்.[210]

உருவ வழிபாட்டுக்கு மேல்

கடவுளின் திருவுருவங்களை நிறுவி அம்மூர்த்தங்களில் மனதை ஒருமு கப்படுத்தி, தியானம் செய்யும் நெறிக்கு மேல், உயர்ந்ததாக பெயரும் உருவமும் இல்லாத அறிவாகாய வெளியை வணங்கும் உன்னத நிலைக்கு

---

203. உமாபதி சிவம், கோயிற் புராணம் ப:11
204. தண்டபாணி தேசிகர் ச., சிதம்பரம், தருமபுரம், 1949 ப:129
205. நஜுன், ஆலயங்களும், ஆகமங்களும், சென்னை ப:5
206. சோமசுந்தரம், ப:45
207. அஃதே, ப:45
208. இராமலிங்கம், ப:14
209. அஃதே, ப:85
210. பகீரதன், இராமலிங்கம் மு., ஜோதி வழியில் வள்ளலார், ப:254

மக்களை உயர்த்திய உயர் வழி பாட்டுத் தலம் இது. இவ்வெளியே நடராசரின் நுண்ணிய உரு.

தெய்வத் தன்மையின் செயல்

எங்கும் பரவியுள்ள தெய்விகத் தன்மையைக் குறிப்பது இலிங்கம். சித்சபை நடராசர் உருவம், அத் தெய்வத் தன்மையின் செயலைக் குறிக்கும், இத்தகைய உயர் வழிபாட்டினை வளர்ப்பது சிதம்பரம் சித்சபை.[211]

இரகசிய ஞான நிலை

இராமலிங்க அடிகளார் திருச்சிற்றம்பலத்தை, அற்புத சிதாகாச ஞான அம்பலம் என்றும், தெய்வ ரகசியங்கள் பொருந்திய ஞான அம்பலம் என்றும் ஆனந்த நடராசப் பதிகத்தில் போற்றியுள்ளார்[212]

கடந்த நிலை

"சிவமும் இயற்கையும் கலந்த நிலையை விளக்கும் கலை சிதம்பரக் கலை. அவண் அமைந்த உருவ, அருவுருவ, அருவமாகிய மூன்று நிலைகளில் ஒன்று ஞான சபை என்பது. அது சிவத்தின் கடந்த நிலையை அறிவுறுத் துவது. சிவகாமி வடிவம் இயற்கை அன்னையின் அறிகுறி. கடந்த சிவம், இயற்கை சிவகாமியிடம் கலந்துள்ள நிலையில் எழும் இயக்கத்தை உணர்த் துவது நடராஜ ஓவியம்".[213]

திரு மூலட்டானச் சிறப்பு

சிதம்பரத் தலத்திலும் திருவாரூரிலும் சிவலிங்கக் கருவறையைத் திருமூ லட்டானம் என்றழைப்பர். இத்தலங்களில் உற்சவம் கொள்ளும் திருமேனிக்கும் நாள் வழிபாட்டுச் சிறப்பு உண்டு. தில்லை நடராசர் தேரூர் வார். அபிடேகம் கொள்வார் திருவாரூரரும் அவ்வாறே.

சபை வழிபாடு

கருவறை வழிபாட்டுக் கோயிலும் அமைந்திருக்க, சிறப்பான நடராசச் சபை வழிபாட்டுத் தலமாகவும் உள்ளது சிதம்பரம்.

ஆதி அமைப்பு

சிதம்பரம் கோயிலின் சித்சபை, இன்றும் ஆதித் திருக்கோயில் அமைப்பு போன்றே மரத்தாலான அம்பலமாகத் திகழ்வது தொன்மைக்கு அறிகுறி.

இரகசியக் கோயில்

இரகசிய அமைப்பு அமைந்த தில்லை, திருவாரூர், திருவெண்காடு கோயில்களுள் தலைசிறந்த இரகசிய வழிபாட்டு முழுமைத் தத்துவம் அமைந்தது சிதம்பர சித்சபை, இது தாந்திரிக, சாக்த வழிபாட்டு நெறியின் அம்சம் எனலாம்.

திருவைந்தெழுத்து நிலை

திருவைந்தெழுத்தின் உருவாயும் அதன் பொருளாயும் அமைவன சிதம் பரத்தலம், கோயில், சித்சபை முதலியன எனவே, அவை மந்திரமயமானவை எனப்படும்.

லயத் தலம்

தில்லை நடராசரின் கலைகள், ஒவ்வொன்றும் எல்லாத் தலங்களி லுமுள்ள தெய்வங்களின் உருவங்களிலும் ஒளிர்கின்றது. அக்கலைகள் இரவில் அர்த்தசாம பூசையின் போது நடராசரிடம் லயமடைந்து மீண்டும்

---

211. அஃதே, ப:255
212. அஃதே, ப:260
213. வேங்கடசாமி ப:19 (திரு. வி. க. முன்னுரை)

அதிகாலையில் அவ்வத் தலங்கட்குச் செல்கின்றன. எனவே சிதம்பரத் தல தரிசனம் எல்லாத் தல மூர்த்திகளின் தரிசன பலனைத் தருகின்றது.[214] சிவ சக்தி ஐக்கியம், சிவசீவ ஐக்கியம், சிவவிஷ்ணு ஐக்கியம், பல்தல தெய்வ ஐக்கியம் முதலிய சிறப்புக்களையுடையது இத்தலம்.

சிவ விஷ்ணு தொடர்பு

சிதம்பரத்தில் அம்பலத்தில், நிருதி திசையில் திருமால் பள்ளி கொண்டுள்ளார். திருமால் தகரோபாசனையால் சிவபெருமானை வழிபடும் நிலை இது. திருவெண்காட்டில் சுவாமி சந்நிதிக்கு நிருதி திசையில் திருமால் நின்ற கோலத்தில் உள்ளார். திருவாரூரில் தியாகேசர் தானத்துக்குப் பின்புறம் திருமால் நின்ற கோலத்தில் உள்ளார்.[215]

ஆத்ம சோதி வழிபாடு

காண இயலாத ஆத்ம சோதியை, காண இயலா, பரமாத்மப் பேரொளியைக் காட்டுவித்து ஒருமிக்க வைக்கும் யோகத்தலம்.

தத்துவ நுண்மை

தத்துவங்களின் இருப்பிடமாகயும் விளக்கமாயும் விளங்கும் திருக் கோயிலை உடையது சிதம்பரம்

தில்லை தானச் சிறப்புக்கள்[216]

அ) அநாகதத் தலம்

ஆறாதாரத் தலங்கள் எனப்படும் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி, ஆய ஆறனுள் சிதம்பரம் அநாகதத் தலமாக விளங்குகின்றது.

ஆ) ஆகாயத் தலம்

பஞ்சபூதத் தலங்கள் எனப்படும் திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆய ஐந்தனுள் சிதம்பரம் ஆகாயத் தலமாகத் திகழ்கின்றது.

இ) தரிசிக்க முத்தி

முத்தித் தலங்கள் எனப்படும் திருவாரூர், திருவண்ணாமலை, சிதம்பரம், காசி ஆய நான்கனுள் சிதம்பரம் தரிசிக்க முத்தித் தலமாகவுள்ளது.

ஈ) சுழுமுனை நாடி

நாடித் தலங்கள் என அழைக்கப்படும் இலங்கை, இமயம், சிதம்பரம், என்ற மூன்றனுள் சிதம்பரம் சுழுமுனை நாடியாகவுள்ளது.

உ) இதயத்தலம்

பிண்டத் தலங்கள் எனப்படும் பர்வதம், தேதாரம், காசி, சிதம்பரம், குருட்சேத்திரம் ஆயவற்றுள் சிதம்பரம் இதயத்தலமாகவுள்ளது.

கோயில் நிலைகள்.

கோயிற் சிறப்பு

இந்து சமய மரபில் "கோயில்" என்ற சிறப்புப் பெயர்ச் சொல் சைவமரபில் தில்லை திருக்கோயிலையும், வைணவ மரபில் திருவரங்கம்

---

214. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:88 பா:174
215. சோம லெ., (பதிப்) கோயில், ப:395
216. சேது தீட்சிதர், சோம, நடராசர்கோயில் சரித்திரம், ஐ.த.ரா, கணேச தீட்சிதர், இதயக்கோயில்.

திருக்கோயிலையும் குறிக்கும் சிறப்புடையது. தில்லை - சிதம்பரம் திருக்கோவில் தமிழக சைவக் கோவில்கட்கெல்லாம் தலைமைத் தலமாக விளங்கியது. அது பல சிறப்புக்களை உடையது. சைவ மறுமலர்ச்சி மையமாகத் திகழ்ந்துள்ளது. இம்மறுமலர்ச்சி நடராசத் தத்துவத்தை மையமாகக் கொண்டது.

பஞ்ச கோசங்கள்

தில்லைத் திருக்கோவிலில் ஐந்து சபைகள் உள. இவ்வைந்து சபைகளும் ஆனந்தமா நடராசர் நடமிடும் இடங்கள். இவ்வைந்து சபைகளின் அமைப்பும், உயிருக்குப் பஞ்ச கோசங்கள் அமைந்தது போன்றமைந்துள்ளன என நூல்கள் புகலும்.[217]

கோசங்களும் அதன் அம்சங்களும் பட்டி எண். 15(இ)

கோசங்கள்	சரீரம்	கடவுளர்	சபைகள்
அன்னமய கோசம்	தூல சரீரம்	பிரம்மா	இராச சபை (ஆயிரக்கால்)
பிராணமய கோசம்	சூக்கும சரீரம்	விஷ்ணு	தேவ சபை (உற்சவ)
மனோமய கோசம்	குண சரீரம்	ருத்திரன்	நிருத்த சபை
விஞ்ஞானமய கோசம்	கஞ்சுக சரீரம்	மகேஸ்வரன்	கனக சபை
ஆனந்த மய கோசம்	காரண சரீரம்	சதா சிவன்	சித் சபை

உயிருக்கு அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஐந்து கோசங்கள் வெங்காயச் சருகு போன்று உறைகளாகத் திகழ்வன போன்று தில்லைத் திருக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபமாய இராச சபை அன்னமய கோசமாகவும், தேவ சபை என்னும் உற்சவ மண்டபம் பிராணமய கோசமாகவும், நிருத்த சபை மனோமய கோசமாகவும், சித்சபை ஆனந்த மய கோசமாகவும் அமைந்தது என்பர். ஆனந்தமய கோசம் நுண்மையும் மேன்மையும் மிக்கது. அதுவே சதாசிவ ரூபமானது, மகாதாண்டேஸ்வர லயசிவம் நடமிடும் இடம்.[218] இவற்றின் கட்டிட அமைப்புக்கள் காலத்தால் பிந்தியன. இவற்றுள் உயிர் எது என வினவின், பரமாத்மாவே எனலாம், எனினும் பரமாத்மாவுக்குக் கோசங்கள் இல்லை. எனவே பரமாத்மாவை மையமாக வைத்து ஆத்ம விளக்கம் தரப்பட்டுள்ளது எனலாம். சித்சபையே பரமாத்மா; சித்சபையே ஆனந்தம். சித்சபையும், மூலட்டானமும் காலத்தால் முந்தியவை.


ஆறாதார நிலைகள்

யோகிகள் தென்முகம் நோக்கித் தவம் செய்வர். ஆலமர்கடவுள் தட்சிணா மூர்த்தியும் நடராசப் பெருமானும் தென்திசை முகம் உடையவர்.

217. குஞ்சிதாங்கிரிஸ்தவம், பா:76, ப:34

218. உமாபதிசிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், பா.76, ப:34

படம் எண் 24



சிதம்பரம் கோவிலில் சபைகள் ஐந்து கோசங்கள்



படம் எண் 25

தென்முகத் தெய்வத்தலமாகிய தில்லைக் கோவிலை வடக்கே தலையும் தெற்கே திருவடியும் அமைந்த யோகியின் திருவுடலாக நோக்கினால் திருக் கோயிலின் சிறப்புப் பகுதிகள் யோகியின் சரீர பாகங்களை ஒத்திருக்கும் என்பர்.[219]

ஆயிரக்கால் மண்டபம் - சகஸ்ராரம்

அபிடேக மண்டபம் - ஆக்ஞை

தட்சிணாமூர்த்தி கோவில் - விசுக்தி

சித்சபை - அநாகதம்

சிவ கங்கை - மூலாதாரம், அமிர்த வாபிகை.

விராட் புருட மத்தி

சிவன் நடம்புரியும் சித்சபை என்பது விராட்புருடனின் சிகாய மத்தியில் உள்ளது எனத் தில்லைவன மகாத்மியம் கூறும்.[220] சித்சபையின் தென்பகுதியில் தரிசன வேதியுள்ளது என்பர். இத்தரிசன வேதி என்பது பக்தர்கள் தரிசனத்துக்கு நிற்கும் இடமாகலாம்.[221] சித்சபைக்குள் யார் கண்ணுக்கும் தெரியாத அதிருஸ்யமான தரிசன எந்திரம் ஒன்றுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது. விராட் புருடனின் இட நாடி இலங்கை யையும், பிங்கலை இமயத்தையும், சுழுமுனை நாடி தில்லையையும் அடைவதாகவும் சிதம்பர மகாத்மியம் கூறும்.[222] சரீரத்தில் எவ்வாறு ஆத்மா இடம் பெறுகின்றதோ அது போல், பிரபஞ்சமாகிய உடலில் சிதம்பரத்தில் நான் உறைகின்றேன் என இறைவன் கூற்றாகக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும்.[223] அந்தத் தானத்திற்குச் சித் என்று பெயர். எனவே அத்தலம் சிதம்பரம் எனப்பட்டது எனவும் சிதம்பர மகாத்மியம் கூறும். சிதம்பரம் சைதன்ய ரூபமாக, விராட் புருடனின் நடுப் பகுதியாகவுள்ளது எனப் புண்ட ரிகபுர மகாத்மியம் கூறும்.[224]

இதயக் கோயில்

சைவ சமய நெறியில் தோற்றம் ஒடுக்கம் இரண்டுக்கும் இம்மண் ணுலகில் நிலைக்களனான, தானமாக, அமைவது நன்காடு என்ற சிந்தனை உள்ளது. சிவபெருமானைச் சுடலை ஆடி என்பது இதன் பொருட்டே இதயமே நன்காடென்பர்.[225] இக் கருத்தை யொட்டி, வளர்ச்சி நிலையாக இறைவன் பிண்டத்தில் இருதயத் தானத்திலும், அண்டத்தில் சிதம்பரத் தலத் திலும் இருக்கும் உயர் கருத்தை, உபநிடதங்கள் மொழியத் தொடங்கின.

யோக - தியான நிலை

மலைகளிலும், காடுகளிலும், கடற்கரைகளிலும் இயற்கைச் சூழலில் இறைவனைக் கண்டு, கோயில்களை நிர்மாணித்த நிலை இருக்க, மனிதனின் இதயத் தானத்தில் சிதானந்த மயமான இறைவனைக் கண்டு, அவ்விறைவனே அண்ட சராசரங்களை ஆட்டிப் படைக்கும் ஆனந்த நடராசர் என்று தெளியும் ஞான நெறி உருவாகியது. இந்த ஞான நெறிக்குரிய மார்க்கம், யோகம் - தியானம். இத்தத்துவங்களின் உருவக நிலைக்களனே சிதம்பரம் சித்சபை. எனவே சித்சபையும் - நடராசரும், சிதம்பரமும் தத்து வங்களும் ஒன்றே என்பர்.[226]

---

219. அய்யர் பா:105:ப:49
220. சோமசுந்தரம், ப:51
221. சாத்தனார், கூத்த நூல் ப:217
222. இராமலிங்கம், ப:21
223. அஃதே, ப:87
224. அஃதே, ப:87
225. பிரொஜேஷ் பானர்ஜி, நடனத் தெய்வம் நடராசர் ப:72
226. இராமலிங்கம், ப:92

யோகக் கோயில் முறை

ஞான வழிபாட்டுக் கோயில்களில், கொடிமரம், நந்தி பலிபீடம் முதலியன அமைவதில்லை. அருவமாயமைந்த இறைவற்கு, இவ்வகை உருவ அங்கங்கள் தேவை இல்லை என்பது கருத்து.

தியானிப்பவரின் அகமுகப் பார்வையே நந்தியென்றும், வீணாத் தண்டு வழி, மேல் நோக்கி, புருவமத்தி வரை செல்கின்ற, தியான சக்தியாகிய சுழுமுனைப் பேறே கொடி மரமும், அவண் காணும் ஒலி ஒளி அனுப வங்களே, கொடி எனவும், கொள்ளுதல் நன்று. மணிபூரகமாகிய மார்புப் பகுதியே பலிபீடம். இவண் யோகியாகிய தியானிப்பவனின் உடலிலேயே ஞான அற்புதங்கள் மேலேறுவதாக மரபு. திருப்பெருந்துறைக் கோவிலிலும், திருவாரூர் தியாகராசர் சந்நிதியிலும், தில்லை சித் சபையிலும் நந்தி, கொடிம ரம், பலிபீடம் முதலியன இருப்பதில்லை. பிற்காலத்தில் தில்லையில் யோக நெறி மறைந்து, ஆகமப் பூசா நெறியைத் தீட்சிதர்கள் கொண்டவுடன், அருச்சனை அபிடேக ஆராதனையாக அபர முத்தர் வழிபாட்டு நிலைக்கு இறங்கியவுடன், கனக சபையில் நந்தி இடம் பெற்றது. மீண்டும் இரண்டாவது பிரகாரத்தில் கொடிமரம் பலிபீடம் அமைந்தது. மூன்றாவது பிரகாரத்திலும் ஒரு நந்தி அமைந்தது. திருவாரூரில், நின்ற கோலத்தில், செப்பு நந்தி, பிரதிஷ்டை இன்றி, தியாகேசர் முன் வைக்கப்பட்டுள்ளது.

இருதய வழிபாடு

ஈசனை வழிபட அவரது உருவத்தைக் கட்டை விரல் அளவிற்குத் தியானம் செய்வது சூக்குமதரம் என்றும், ஒரு சாண் அளவில் அவரது உருவை உபாசிப்பது சூக்குமம் எனவும், புருஷாகாரமாக அவரை உபாசிப்பது தூலம் என்றும், வடிவற்ற நிலையில், ஞான உருவாக வழிபடுவது சூக்குமதரம் என்றும் சாத்திரங்கள் கூறும்.[227]

இவண் :

சூக்குமதரம்-கட்டை விரல் அளவில் உபாசிப்பது - சந்திரமௌலீசுவரர் (படிகலிங்கம்)

சூக்குமம்-ஒரு சாண் அளவில் - இரத்தினசபாபதி

தூலம்-புருஷாகாரமாய் - நடராசமூர்த்தி

சூக்குமதரம்-வடிவற்ற ஞான உருவாக உபாசிப்பது-இரகசியம்

என்பனவாகச் சித்சபையில் இடம் பெற்றுள்ளன.

தகராகாயமாய இருதய நடுவில் இறைவன் அங்குஷ்ட (கட்டை விரல்) அளவில் இருப்பதாக கிருஷ்ண யசுர்வேத உபநிடதம் கூறும். கிருஷ்ண யசுர் வேத உபநிடதம் உயிருக்கு அழிவில்லை; உயிரின் உயிர் நாடித் தானத் துறையும் இறைவன் முக்காலங்கட்கும் ஈசானர். அவர் எவர்க்கும் அஞ்சுபவ ரல்லர்[228] எனப் புகலும்.

யோக யாக்ஞவல்லிய உபநிடதம் இன்னும் ஒரு படி மேல் சென்று "எல்லா உலகத்திலும் இருதயத்தில் இருப்பவராகவும் உலகத்துக்குக் காரண மாகவிருக்கின்ற ஈசுவரன்" என்று கூறும். இதனையே விராட்புருட இதயத் தானம் என்பது.[229] சாம வேத மைத்ரேயவுபநிடதத்தில் சிவபெருமான் மைத்ரேயருக்குக் கூறியதாக "இருதய கிரந்தி அற்றவனாய் இருதய நடுவில் இருக்கிறேன்" என்று வருகிறது.[230]

227. சேது தீட்சிதர், சோம., நடராஜர் கோவில் சரித்திரம், ப:63
228. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி முதலியார், ஓங்கார விளக்கம் ப:59
229. இராமலிங்கம், ப:99
230. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி முதலியார் ஓங்கார விளக்கம், ப:103

இதயத் தானம்

இதயத் தானம் என்ற சிந்தனை, இறைவனைச் சூத்திரதாரியாக, ஐந்தொழில் தலைவனாக, மகாதாண்டவேஸ்வர பரநிலைக்குரியவராகக் காட்டும் சித்சபேஸ்வரத்தான உயர் நிலைக்கு மிகவும் பொருத்தமாவுள்ளது. சிவதாண்டவ மூர்த்தத்தின் தத்துவக் கருவே இதயத் தானச் சிந்தனை தான். சிதாகாசம், சிதம்பரம், பரம வியோமம், பரவெளி என்பன யாவும் அண்டத்தும், பிண்டத்தும் எங்கும் உள்ளன. அவற்றுக்குள்ளே ஒரு சித்து நுண்பொருள் ஞானப் பொருள் உள்ளது. அது இயங்கினால் தான், உடலும் உயிரும், அண்டங்கள் அனைத்தும் இயங்கும். அச் சித்துப் பொருளே மூலாதாரம் எனப்படும். தில்லைப் பொன்னம்பலத்திலும், பிற சபைகளிலும் நடமிடுவது. அதன் இயக்கம் நின்றால், எல்லா இதயங்களும்-உயிர்களும் எல்லா அண்ட சராசர இயக்கங்களும் நின்றுவிடும் என்பதைத் திருமந்திரம் பலப்பட விளக்கிச் சொல்கின்றது.[231] இதனையே மாணிக்க வாசகப் பெருமான் "சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்திலும் என் சிந்தையுள்ளும் உறைவான்" என்பார். புரசினோபநிடதமும், பிரஹதாரண்ய உபநிடதமும், "தேகமாம் புரியின் கண்ணே அந்தர்யாமியாய்ச் சயநித்துக் கொண்டிருக்கும் புருஷராய சிவ பெருமான்" என்று கூறும். பிரஹதாரண்ய உபநிடதம் இன்னுமோரிடத்து "இறைவன் விஞ்ஞானமயமாய்ப் பிராணன்களுள்ளே இருதயத்து அந்தர் ஜோதியாயுள்ள புருடன்" என்று புகலும்.[232] இதயத் தாமரையிலும், சித்சபை இரகசியத்தும் இறைவன் அந்தர்யாமியாய் யோக அனுபவம் காட்டுவது போல், கேளா ஒலியாய், காணா ஒளியாய், கேட்கும் ஒலியாய், காணும் ஒளியாய், எல்லாமாய், அல்லதுமாய் பரிபூரண, பரநிலையில் இருக்கிறான் என்பது கருத்து.

சித்சபை, சாத்திர, தத்துவ நிலைகள்

கோயில் அமைப்பு ஒன்பது கலசங்களை உடையது. கருவறைக்கு ஒரு கலசம் தான் உண்டு. கருவறைக்கு அர்த்த மண்டபம், மகாமண்டபம், கொடிமரம், நந்தி பலிபீடம் முதலிய துணை அமைப்புக்கள் இருப்பது போன்ற வழிநிலை அமைப்புக்கள் சபைக்கு இல்லை. சபையில், நடமிடும் இறைவனை எந்தவிதத் தடையுமின்றி சபை உறுப்பினர்கள் நேரடியாகத் தொழ, தியானிக்க என ஏற்படுத்தப்பட்ட அமைப்பே இது. கருவறைகள் பெரும்பான்மையும் கிழக்கு நோக்கிய திருவாயிலை உடையதாக அமைய, இச் சபைகள் தெற்கு நோக்கிய திருவாயிலை உடையன.

சித்சபை

சிதம்பர வழிபாட்டின் மையத்தானம் சித்சபை. கோயில் கட்டிட அமைப்பில் சித்சபை சில சிறப்புக்களை உடையது. சித்சபையே நடராசர். சித்சபைக்கும் நடராசருக்கும் பேதமில்லை என்பர். சித்சபை கட்டிட அமைப்பில் அமைந்த கட்டிடம், பீடங்கள், தூண்கள், கதவுகள், அடைப்புக்கள், கூறை, விமானக் கலசங்கள், படிகள் முதலிய அனைத்தும் தத்துவக் குறிப்புடையன. இச்செய்திகள் விரிக்கிற் பெருகும்.

தத்துவ விளக்கம்

சித்சபை என்பது சைவ நெறி போற்றும் தத்துவம் அனைத்திற்கும் விளக்கமாக அமையும் தத்துவக் கருவூலமாகும். சித்சபை, ஹேம சபை என்றும் அழைக்கப்படும். தில்லைவன மகாத்மியம், புண்டரிகபுர மகாத்மியம்,

231. ஆறுமுக நாவலர் கே., இந்து மத இணைப்பு விளக்கம் ப:54
232. ஸ்ரீலஸ்ரீ அருணகிரி முதலியார், ஓங்கார விளக்கம், ப:59

சிதம்பர மகாத்மியம் முதலிய தல புராணங்கள் சித்சபையின் தெய்வீகத் தன்மையைச் சிறப்புற எடுத்துரைக்கின்றன.

ஆத்ம நிலை

மனித உடலில் எவ்வாறு ஆத்மா அமைந்துள்ளதோ அது போன்று பிரபஞ்சமாகிற உடலில், சிதம்பரத்தில், இறைவன் உறைகிறான். அந்தத் தானத்துக்குச் 'சித்' என்று பெயர் எனச் சிதம்பர மகாத்மியம் செப்பும்.[233]

ஆனந்த - சித் சபை

சச்சிதானந்த ரூபமுடைய, மேலான பிரம்மமாகிய எனக்கு ஆனந்தத்திற்குக் காரணமாக விளங்குவதால் ஆனந்த சபை எனப்படும். சின்மயமான அச்சபை சித்சபை எனவும் படும் எனப் புண்டரிக மகாத்மியம் புகலும்.[234]

அறிவு வெளி

இயற்கை என்னும் நன்காடு சக்திக்கு ஆடுமிடம். சித்ஆகாசம் அல்லது அறிவு வெளி ஐயனுக்கு ஆடுமிடம். இவ்வறிவு வெளியே சித் அம்பரம் என்றும் சித்சபை என்றும் இயம்பப்படுகிறது.[235] சக்தி நிலை மேலோங்கிய போது நன்காட்டு நடம். சிவ நிலை மேலோங்கிய போது சித்சபை நடனம்.

நடராசத் திருவுரு

இச்சிற்சபையே நடராச மூர்த்தியின் சொரூபம். மூர்த்திக்கும் சபைக்கும் வேறுபாடில்லை எனப் புராணங்கள் புகலும்.[236]

ஒளி நடனம்

ஞான சபை என்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத் தான் சித் சபை அல்லது ஞானசபை என்றும் நடராசர் என்றும் கூறுகிறோம்.[237]

இச்சபை இம்மைப் பயன், மறுமைப் பயன், வீடுபேறு என்ற மூவகைப் பேறுகளையும் அளிக்க வல்ல பூதாகாய, மனோகாய, சிதாகாய நடனக் கோலங்களை ஒருங்கே கொண்டது சபை. எந்திர, மந்திர, சக்கர மகேஸ்வர, சதாசிவ, பரநிருத்த, பர ரகஸ்ய வழிபாடுகளனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டது சபா நிலை. சித் சபை, ஞானப் பிரகாச ஞான சபை என இராமலிங்க அடிகளார் அவர்களால் அழைக்கப்படுகிறது. யோக நெறியில் அனாகத, துவாத சாந்தத்திற்கு விளக்கமாகச் சித் சபை அமைந்து வருகின்றது. இவண் ஞானாகாச ரகஸ்யம் விளங்குகின்றது. இது ஞான தீட்சை பெற்றவர்கட்குத் தலைமை இடமாகவுள்ளது. அருவ, உருவ, அருவுருவ இவையனைத்திற்கும் மேற்பட்ட பரசிவ நிலை வழி பாட்டுத் தலமாக விளங்குகின்றது. சித்சபையே நடராசர் திருவுரு என்பதன் விளக்கமாக உள்ளது. விராட்புருட மத்திய நிலையாக உள்ளது. சபாபதியைத் தலைவராகக் கொண்டது. யோகத் திருக் கோயிலாகத் திகழ்கின்றது. உபநிடதத் தத்துவங்களின் விளக்கமாவுள்ளது. தத்துவ தத்துவாதீத பரஸ்தானமாகவுள்ளது. தூல வடிவ ஆனந்த நடராசர், சூட்சும வடிவ இரத்தின சபாபதி, அதி சூட்சும ஞான வடிவ இரகஸ்யம், அருவுருவ சந்திர மௌலீஸ்வரர், ஸ்வயம்புவாகிய முகலிங்கம், திருவடிகளாகிய சிவபாதுகை, பலிநாயகராய ஹஸ்தராசர் முதலிய

233. சிதம்பர மகாத்மியம், சிதம்பரம் 39,40,42,43 ப:78,79,80
234. புண்டரிக மாகாத்மியம் 76
235. சித்பவானந்தர், ப:146
236. சேது தீட்சிதர் சோம., நடராஜர் கோவில் சரித்திரம் ப:56
237. ம.பொ.சி. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப:165

அனைத்து நடராச வடிவங்களையும், முனிவர்கள், முதலியவர்களையும் ஞானத் தானத்தில் ஒரே இடத்தில் காட்டும் வழிபாட்டுத் தலம்.

கட்டிட அமைப்பு

சித்சபையின் கட்டிடம் இமாலயத்துக் கோயில்களில் உள்ளது போன்றும், கற்கோவில்களின் காலத்துக்கு முந்திய கோயில் கட்டிட நிலை போன்றும் மரத் தாலாயதாகும். இது தோன்றிய தொன்மையையும், அத்தொன்மை இன்றுவரை காக்கப்பட்டு வருவதையும் குறிக்கும்.

சித்சபையின் அமைப்பு

சித்சபை என்றழைக்கப்படும் தர் கப்பூச்சமைந்த செப்பு விமானமும், ஒன்பது தங்கக் கலசங்களும் அமைந்த சபை மேல் வடக்காக நீள் சதுர வடிவமானது. இதன் கிழக்குப் பகுதி தவிர மூன்று பகுதிகளும் சந்தனப் பலகையால் மூடப்பட்டுள்ளன.

வரலாற்று நல்லோர் சிற்சபையின் கல்லாலாய அடிப்பீடப் பகுதி முற்காலச் சோழர் காலக் கட்டிடக் கலையைப் பின்பற்றியது என்பர். எனினும் மேற்கோயில் தொன்மை மாற்றமின்றி மரக்கோயில் அம்பலமாகவே அமைக்கப்பட்டு மரபு காக்கப்பட்டு வருகின்றது. சிற்சபையின் வெளிப்புறத்தும், முப்புறத்தும் இரட்டை கருப்புக் கருங்கல் தூண்கள் நகரத்தார் திருப்பணியின் போது அமைக்கப்பட்டுள்ளன.

தென் திசை நோக்கு

நால்வர்க்கு மோனத்தால் ஞானம் உபதேசித்த தட்சிணாமூர்த்தி, காலனைக் கடிந்த கடவுள், மாயாகரி உரி உரித்த சிவன் முதலியோரின் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்திருப்பது போன்றே ஆடல்வல்ல இறைவனின் சபை தெற்கு நோக்கிய திருவாயிலை உடையது. இது ஞான நெறியின் மரபெனலாம்.

சித்சபை தத்துவாதீதம்

தத்துவாதீதம்

சித்சபையினை சர்வ தத்துவாத்மக வடிவம் என்றும், சித்சபையில் அமைந்த சிதாகாசத்தினைத் (இரகஸ்ய நிலை) தத்துவாதீத ஸ்வரூபம் என்றும் கூறுவர்.

சித்சபை குறிக்கோள்

தில்லைக் கோவில் சித்சபை அநாகதத்தான தகரவித்யா நெறித் தலைமைத் தானமாக தத்துவார்த்த முறையில் கட்டியமைக்கப்பட்ட சிறப்புச் சபைக் கோயில். அநாகத அனுபவத்தை ஆக்ஞைக்கு உயர்த்தி துவாத சாந்தப் பேரனுபவப் பெருஞ் சோதியினைக் கண்டு களிப்பதே இதன் குறிக்கோள். இதுவே நடராச நெறி.

சித்சபையும் கனக சபையும்

தில்லை திருக்கோயில் வளாகத்தில் சித்சபை மிகவும் தொன்மை வாய்ந்தது. அதற்கு அணித்தாக அதே அளவில் உருவில் கனக சபை பிற்காலத்து அமைக்கப்பட்டுள்ளது. சித்சபை கட்டிடம் தரை மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய மூன்று அல்லது நான்கடி உயரமாக அமைகிறது.

பொன்னம்பலம்

உபநிடதங்களில் பொன் என்னும் சொல் பரியாயமாக ஞானத்தைக் குறிக்கும். உபநிடதங்களில் போற்றப்படும் இந்த ஞான சபையை பொன்னம்பலம் என்றும் அழைப்பதுண்டு. பதஞ்சலி வியாக்ரபாத முனிவர்கள் நடனம் கண்டபின், நடனம் கண்ட இடத்தில் பொன்னம்பலம் அமைத்தனர்.

நாற்புறமும் தங்கப் பட்டங்களினாலே கவசம் போட்டு அலங்காரம் செய்தமையால் பொன்னம்பலம் எனப்பட்டது என்பதுமுண்டு.

இராமலிங்கரும் சித்சபையும்

இராமலிங்க அடிகளார், சிதம்பரம் சித்சபையில் ஞான வழிபாடு மறைந்த இன்றளவில் கற்பூரத் தட்டும் காணிக்கை நெறியும் வழங்குவதை வெறுத்து உத்தர சிதம்பரம் என்னும் வடலூர் ஞானசபையை நிறுவி ஒரு திரைக்குப் பதிலாக ஏழு திரைகள் அமைத்து சோதி வழிபாடியற்ற வழி வகுத்தார்.

மாதுருகாட்சர மயம்

சித்சபையின் கீழ் முதல், மேல் வரையில் உள்ள கற்கள் மாதுருகாட்சர மயங்கள் என்பர். மாத்ருகாட்சரம் என்பது சக்தி பீஜங்கள்.

இதயத் தானம்

சித்சபையின் வாயில் நேர்ப்புறமாக அமையாமல் கிழக்கு மேற்கு இரு புறங்களிலும் அமைந்திருப்பது சிதம்பரம் விராட்புருடனின் இதயத் தானம் என்று குறிப்புதற்குப் பொருத்தமாகவுள்ளது. எவ்வாறு இதயத்தின் வாயில் நேர்ப்புறமின்றி இருபுறங்களிலும் அமைந்துள்ளனவோ அது போன்றே சித்சபையின் வாயில்களும் புறத்தே அமைந்துள்ளன.

ஒன்பது வாயில்கள்

சித்சபைக்கு ஒன்பது வெளி வாயிற்புறங்கள் அமைந்துள்ளன. அவை சரீரத்தின் ஒன்பது துவாரங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் இரு புகுமுகக் கதவுகளும் வெள்ளித் தகடுகளாலும் மற்றேனைய வெளிக் கதவுகள் பித்தளைத் தகடுகளாலும் போர்த்தப்பட்டுள்ளன.

தகர வித்யாலயக் கனக சபை

சித்சபைக்கு முன் மண்டபமாகக் கனக சபை அமைந்துள்ளது. இன்றளவில் கனக சபையில் நின்று கொண்டு தான் தரிசனம் செய்தல் வேண்டும். தகர வித்தையில் கூறப்படுகின்ற தகரவித்தையாக இக்கனக சபை உருவகிக்கப்படுகின்றது. சித்சபைக்கு முன் மண்டபமாக இது அமைவதால் கனகசபையாகிய தகராகாசத்துக்குள் சித்சபையாகிய சிதாகாசம் அமைவதாகக் கொள்ளப்படுகின்றது.

இராசராசன் காலத்தில் கனகசபை அமையவில்லை என்பது தஞ்சைக்கோவில் ஓவியங்களினின்று புலனாகும். அப்பொழுது சித்சபை மட்டும் இருந்த போலும் சிதம்பரத் தலத்தை இதய புண்டரிகம் என்றும், அதனுள் தகராகாசமாய கனகசபையும், அக்கனகசபையுள் சிதாகாசமாய சிற்சபை இருப்பதாகவும் கொள்ளப்படுகின்றது.

சர்வ தத்வாத்மக வடிவம்

இக் கனகசபையைப் பிரணவ ரூபம் எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும். இக்கனக சபை சர்வ தத்வாத்மக வடிவம் என்றும், மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத தத்துவாதீத ஸ்வரூபமான சித்சபை இதன் ரகஸ்யம் என்று மொழிவதும் உண்டு.

முனிவர்கள்

கனக சபையின் மேற்குப் பகுதியில் தூணில் வியாக்ரபாத மகரிஷியும், அவர்க்கு மேலே தண்டி என்ற ரிஷியும், கிழக்குப் பகுதியில் தூணில் பதஞ்சலி மகரிஷியும், அவர்க்கு மேலே முண்டி என்ற மகரிஷியும், இச்சபையில் உள்ள நடராசருக்கு எதிரே கனக சபையில் நந்திகேசுவரரும் அமைந்துள்ளனர்.

கனக சபை

சித்சபையில் அமைந்துள்ள பீடங்களில் பிரம்ம பீடப்பகுதி கனகசபை யாகும். கனக சபை சித்சபைக்கு எதிரே அமைந்ததால் எதிரம்பலம் என்படும்.

பதினெண் புராணங்கள்

கனக சபையின் கண் உள்ள பதினெட்டு தூண்களும் பதினெண் புராணங்களாகக் கருதப்படுகின்றன.

பஞ்சபூதக் கற்கள்

கனக சபையில் பாவாடை பரப்பப்படுகின்ற ஐந்து பெரிய தளவரிசைக் கற்களும் பஞ்சபூதங்களாகக் கருதப்படுகின்றன.

பஞ்சாட்சரப் படிகள்

கனகசபையிலிருந்து சித்சபைக்கு ஏறும் ஐந்து வெள்ளிப்படிகளும் பஞ்சாட்சரப் படிகள் என்றழைக்கப்படும். இப்படிகளின் இரு பக்கங்களிலும் யானை உருவம் அமைந்திருப்பதால் திருக்களிற்றுப்படி எனவும் அழைக்கப் படும்.

வழிபாட்டு நிலை

நடராசப் பெருமான் ஆண்டில் இருமுறை கனக சபைக்கு எழுந்தருள் கிறார். ஏனைய நாட்களில் சித்சபையில் இருந்து கொண்டே பரமானந்தக் காட்சியளிக்கிறார்.

திரு அணுக்கன் வாயில்

கனக சபையின் மேற்கிலும் கிழக்கிலும் இருக்கும் வாயில்கட்டுத் திரு அணுக்கள் திரு வாயில் என்று பெயர். கனகசபையில் நாள்தோறும் பெருமான் ஆறுகால பூசைகளும் ஆண்டில் நான்கு முறை திருமஞ்சனமும் கொண்டருள்கின்றார்.

சந்தனக் காப்பு

கனக சபைக்கு மேலேயுள்ள மச்சு பல பூ வேலைப்பாடுகள் நிறைந்தும், அழகிய கண்ணாடி குளோபுகள் நிறைந்தும் அழகுறக் காட்சிதரும். இதற்கு வர்ணம் தீட்டுவதில்லை. சில ஆண்டுகட்கு ஒரு முறை சந்தனக் காப்பு அடிக்கப்படுகிறது.

கனக சபை பெயர்க் காரணம்

ஸ்வர்ணம் என்ற சொல் உபநிடதங்களில் ஞான பரியாயமாகக் கூறப் படுகின்றது. இது காரணமாகவே இந்த ஞான ரூபமான. சித்சபையை சுவர்ண சபை என்று சொல்வதாயும், இச்சபை திருகூட பர்வதத்தின் தட்சிண சிகர மாகிய சுவர்ண சிகரத்தில் இருப்பதால் சுவர்ண சபை என்று ரிஷிகளால் சொல்லபட்டதாயும், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்கள் மகா தாண்டவ தரிசனம் கண்டபின், இத்தாண்டவ பூமிக்கு நான்கு பக்கத்திலும் தங்கப்பட்டங்களினால் கவசம் போட்டு அலங்காரம் செய்தமையால் சுவர்ண சபை என்று மனிதர்கள் சொல்வதாயும் கூறப்படுவதாக் கூறப்படுகிறது.

இறைவன் ஆடுமிடம் சிதாகாசம், இது அறிவுவெளி. இவ்வறிவு வெளியினின்று வெளிப்படும் இறைவனின் பேரொளி கனக ஒளி போன்றது. எனவே கனக சபை எனப்பட்டது எனச் சித்பவானந்தர் கூறுவார்.

கனக சபை என்ற சொல் சித் சபை, கனக சபை என்ற இரண்டையும் குறிக்குமாறு பயன்படுத்தப்படுவதுண்டு.

சிதம்பர இரகசிய ஆய்வில் தோய்ந்த அறிஞர் அகண்டாகார விருத் தியில் பிரதிபலித்த சித்தினைச் சிதம்பரமென்றும், சிதாகாசமென்றும், அகண்டாகார விருத்தியைப் பொற்சபை என்றும் கூறுவர் என்பர்.

சித் சபையினைக் காமதேனுவின் கோவில் என்றும், சங்க பதும நிதிகளின் இருப்பிடம் என்றும், சுவர்ண கர்ஷன பைரவராலும், அஷ்டலட் சுமிகளாலும் வழிபடப்படும் தலம் என்றும் கூறுவர்.

கனக சபையிலிருந்து சித்சபையின் உள் பஞ்சாட்சரப் படிக்குமேல் விஷ்ணு பீடத்தில் சித்சபையின் நுழைவாயிலாக அமைந்த கதவினை அவித்யை என்பர். இக் கதவில் மேற்குப் பகுதியில் சுபாகு என்ற வாயிற்கா வலரும் கிழக்குப் பகுதியில் விமலன் என்ற வாயிற்காவலரும் துவாரபாலகர்கள்ளாக நிற்கின்றனர். இவ்வாயில் இதய வாயில் என்றும் அழைக்கப்படும்.

தெய்வீகப் பீடங்கள்

சித்சபையில் நடு அடைப்புக்கு முன் தெற்கேயுள்ள இடங்களில் சதாசிவ பீடம் மகேஸ்வர பீடம், ருத்ர பீடம் விஷ்ணு பீடம், பிரம்ம பீடம் என்ற ஐந்து பீடங்கள் உள.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மூர்த்தி நிலைகட்கு மேலானது மகேஸ்வர நிலை. சதாசிவ நிலை மகேஸ்வர நிலைக்கும் மேலானது.

பிரம்ம பீடம்

பஞ்சாட்சாரப் படி ஏறி கால் வைக்கும் இடம் பிரம்ம பீடம். இது சற்றேறக் குறைய கால் அடி அகலமிருக்கும். பிரம்ம பீடமும் பஞ்சாட்சரப் படியும் கனக சபையின் பகுதிகள்.

விஷ்ணு பீடம்

பிரம்ம பீடத்தை அடுத்து, சற்றேறக் குறைய ஒரடி அகலமுள்ள இடத்தில் ஐந்து தங்கத்தூண்கள் உள. இப்பகுதி விஷ்ணு பீடம் எனப்படும். இவ்வைந்து தங்கத் தூண்களும் பஞ்ச பூதங்கள் என்பர்.

ருத்ர பீடம்

மகேசுவர பீடத்தை அடுத்து தெற்கே முன்புறம் அர்ச்சகர் நின்று பூசனை செய்யும் இடம் ருத்ர பீடம் எனப்படும். இது மூன்றடி அகலமிருக்கும். இங்கு ஆகமங்களைக் குறிக்கும், இருபத்தெட்டு வெள்ளித் தூண்கள் உள.

மகேஸ்வர பீடம்

ஆனந்தமா நடராசப் பெருமானும், சிவகாமித் தாயும் கொலு வீற்றிருக்கும் மகேஸ்வரபீடம் சற்றேறக் குறைய ஆறு அல்லது ஏழடி நீளமும் இரண்டரை அடி அகலமும் இருக்கும் என்பர். இப்பீடம் தங்கத்தால் போர்த்தப்பட்டிருக்கும்.

மகேஸ்வரபீடத்தில் ஓரழகிய மண்டபம் உள்ளது. இம்மண்டபம் மகேஸ்வர பீடத்தின் மேலமைந்தது. மகேஸ்வர பீடத்துக்கு இரு படிகள் உண்டு. அவற்றுள் மேற்குப்படியில் சந்திரமௌலீசுவரர் என்றழைக்கப்படும் ஸ்படிகலிங்கமும், இரத்தின சபாபதி என அழைக்கப்படும் இரத்தினத்தினாலான நடராசத் திருவுருவமும் தனித்தனி பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளனர். மகேஸ்வர பீடத்தில் இரத்தினம் இழைத்த இறைவனின் திருவடிகள், சிவ பாதுகை என்ற பெயருடைய தங்கத்தட்டில் இறைவனுக்கு வலப்புறம் வைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ நடராசரின் வலப்புறம் அதே திண்ணையில் ஸ்ரீ முகலிங்கம் உள்ளது.

ஸ்ரீ நடராசருக்கு மேற்புறம் அதே திண்ணையில் அஸ்திரராசர் இடம் பெறுகின்றார். ஸ்ரீ நடராசருக்குக் கீழ்ப்புறம் ஒன்றரை அடிச் சதுர மர ஸ்டூல் ஒன்றில் ஸ்ரீ பலிநாயகர் வீற்றிருக்கிறார். அது போன்றே இன்னொரு ஸ்டூலில் சுவர்ண கர்ஷன பைரவர், கீழ்ப்புறம் உள்ளார். சிவகாமித் தாயின் தங்கத் திருவாசியில் அவரது தோழியரான சுகேசா என்னும் ஜயாவும், சுயசா என்னும் விஜயாவும் இடம் பெற்றுள்ளனர்.

சித்சபையின் மையத்தில் உள்ள மர அடைப்பு சந்தன மரத்தாலானது. இறைவன் இறைவி கொலுவீற்றிருக்கும் மகேசுவர பீடத்தில் அமைந்த நான்கு தங்கத் தூண்களையும் நான்கு வேதங்கள் என்பர். மகேஸ்வர பீடத்தில் அமைந்த ஆறு தங்கத்தூண்களை ஆறு சாத்திரங்கள் என்பர்.

சதாசிவ பீடம்

சித்சபையின் வடக்கு அடைப்பை அடுத்து அமைந்துள்ள முதல் தெய்வ நிலை சிதம்பர ரகஸ்யம். இச்சிதம்பர ரகஸ்யம் சதாசிவ பீடம் என்ற பீடத்தின் மேல் அமைந்துள்ளது. சிதம்பர ரகஸ்யப் பகுதி இருமருங்கும் இரட்டைத் தூண்களை உடையதாக அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் ஒருருவும் ஓர் நாமமும் இன்றி சிற்பர வியோமமாக ஆகாய உருவில் அண்ட சராசங்களையும் ஐந்தொழிற்படுத்தி நடத்தி வரும் ஞான வடிவமே சிதம்பர ரகசியம்.

ஞானமாய தெய்வத்தை, சிற்பரத்தை, பரம வியோமத்தை, அறியாமையாய மாயை மறைத்திருப்பதைக் காட்டத் திரையிடப்பட்டுள்ளது. திறையை விலக்கி, கற்பூர சோதி காட்டும் போது, அவண் தொங்கும் தங்க வில்வ சரம் நம் கண்முன் தோன்றும். இரகசியம் அதுவன்று. ஒன்றுமில்லா, நிலையே பரம ரகசியம். அதுவே அளக்கலாகா அனவரதத் தாண்டவ உயர், ஞான இரகசிய நிலை.

ஸ்ரீ ரகஸ்யம் இருக்கும் சதாசிவ பீடமும், ஸ்ரீ நடராசர் கொலுவீற்றிருக்கும் மகேஸ்வர பீடமும் சேர்ந்து சித் சபையின் கீழ், மேல் பகுதியில் ஐந்தில் மூன்று பகுதியை நிறைவு செய்வன. இரு மருங்கும் ஐந்தில் ஒரு பகுதி சுற்றிடம் அமைந்துள்ளது.

பிரணவ பிரகாரம்

ஸ்ரீரகஸ்யம் முதல் இறைவன் கொலுவீற்றிருக்கும் மகேஸ்வர பீடம் வரை அதனைச் சுற்றியிருக்கும் இடம் பிரணவப் பிரகாரம் எனப்படும். இறைவனையே பிரணவரூபன் என்பதும் உண்டு.

சுத்த வித்தை

அம்பலம் விளங்கும் பிரதேசமாய, இறைவன் பல்வேறு திருவுருவங்களில் இரகஸ்ய, நடராச, ஸ்படிகலிங்க, முகலிங்க, சிவபாதுகை, ஹஸ்திரராசர், இரத்தினசபாபதி என்றெல்லாம் கொலுவீற்றிருக்கும் சித்சபை இடம் முழுவதையும் சுத்த வித்தை தத்துவமாகக் குறிப்பிடுவர். இதுவே சிதாகாசம் என்பதும்.

கலைகளாகும் கை மரங்கள்

சித்சபையின் மேலமைந்த அறுபத்து நான்கு சந்தனக் கைமரங்களும் அறுபத்து நான்கு கலைகளாகக் குறிக்கப்படுகின்றன.

திருவைந்தெழுத்தோடுகள்

சித்சபையின் கூறையில் அமைந்த இருபத்தோராயிரத்து அறுநூறு தங்கம் பூசிய செப்போடுகளும் மனிதன் ஒவ்வொருநாளும் விடும் சுவாசங்களில் எண்ணிக்கையைக் காட்டுவதாகும். இவ்வோடுகளில் திருவைந்தெழுத்து வரையப்பட்டுள்ளது.

சுவாச சஞ்சார ஆணிகள்

அவ்வோடுகளில் பொருத்தப்பட்ட எழுபத்திரண்டாயிரம் ஆணிகளும் நமது சுவாச சஞ்சாரமான நாடிகளின் எண்ணிக்கையைக் காட்டுவதாகும்.

நவசக்திக் கலசங்கள்

சித்சபையின் மேலமைந்த ஒன்பது தங்கக் கலசங்களும் நவ்சக்திகளைக் குறிப்பதாகும்.

உலகப் பலகைகள்

இருநூற்று இருபத்து நான்கு உலகங்களும், இருநூற்று இருபத்து நான்கு அடைப்புப் பலகைகளாக அமைந்துள்ளன.

புராணத் தூண்கள்

கனகசபையில் அமைந்த பதினெண் தூண்களும் பதினெண் புராணங்களைக் குறிப்பன.

இரகசியம் காணும் தத்துவப் பலகணிகள்

இந்த இரகசியத்தை, பக்தர்கள் பிரம்ம பீடத்திலுள்ள வெள்ளி கவாட்சங்கள் என்றழைக்கப்படுகின்ற தொண்ணூற்றாறு தத்துவங்களைக் குறிக்கும் வெள்ளிப் பலகணிகள் வாயிலாகக் காண்கின்றனர். தத்துவப் பலகணிகள் வழிதான் பரம தாண்டவ இரகசியம் பார்க்க இயலும் என்பது தத்துவம். சித்சபையின் சிறப்பே இந்த இரகசியத் தானம் தான். இரகசியத் தானத்தில் திருவம்பலச் சக்கரம், மண் சுவற்றில் கீறப்பட்டிருப்பதாகவும், ஸ்ரீ சக்கரம்

பதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுவர். சக்கரங்கள் மந்திர வழி லயத்தானம் செல்வனவே. மகேஸ்வர மூர்த்தங்கள் நவந்தரு பேதங்கட்கு எல்லாம் மேலான லயநிலை கடந்த பரம காரணரான பரநிருத்த மூர்த்தியாக அமைந்த மகா ஆனந்த தாண்டவேஸ்வரரே, நடராசராசராக இரகஸ்யமாக விளங்குகிறார் என்பதே குறிப்பு.

இரகசியம் சித்சபையில் வடக்குப் பகுதியில் இதய வாயிலை விட்டு ஒதுங்கியுள்ளது.

இதய வாயில்

சித் சபையில் இதய வாயில் என்னும் வாயிலில் அமைந்த அவித்யை என உருவகிக்கப்படும் திருக்கதவினைத் திறந்தவுடன் மகேஸ்வர பீடத்திலுள்ள ஞானமா நடராசப் பெருமானும் சிவகாமியம்மையும் காட்சியளிப்பர். நடராசப் பெருமானும் சிவகாமி அம்மையும் சகளத் திருமேனி. ஐம்பொன் உருவம் மகேஸ்வர பீடத்தில் அழகமைந்து ஒரு சிறு உள் மண்டபத்துக்குள் கொலு வீற்றிருக்கின்றனர்.

சிற்றம்பலம்

சிற்றம்பலம் விளங்கும் இடத்துக்குப் பெயர் சுத்த வித்தை எனப்படும். இது இறைவனும், இறைவியும் இரகசியமும் விளங்கும் இடம்.

நடராசப் பெருமான் கொலுவீற்றிருக்கும் பகுதி அறிவாகாயம் என்னும் சிதாகாசம்.

நடராசரைக் காணும் இதயவாயில் மனித உடலில் இதயம் இடப்புறம் ஒதுங்கியிருப்பது போலவே ஒதுங்கி இருக்கின்றது.

சித் சபையில் இறைவன் உருவம் அருவம் அருவுருவம் ஆய மூவகைத் திருமேனிகளுடனும் விளங்குகிறார். உருவத் திருமேனி நடராசர். அருவத் திருமேனி ஸ்ரீரகஸ்யம்அருவுருவத் திருமேனி சதாசிவரூபமென்னும் இலிங்க உருவம்.

"சித்சபையின் திருக் கதவினை அவித்தை என்னும் அஞ்ஞானம் என்பர். இந்த அஞ்ஞானக் கதவை திறக்கும் போது சமம், தமம் என்ற இரு துவார பாலகர்கள், தரிசனார்த்திகட்கு மோட்ச துவாரத்தின் உட்புறமுள்ள உபநிடதங்களின் வழி, சத்ரூபமான ஆகாயத்தை வியாபித்த, ஓங்கார மயமான பிரணவப் பிரகாரத்தில், சபையில், மகேஸ்வர பீடத்தில் நடனம் புரிந்து கொண்டிருக்கும் இறைவனைக் காண்பிப்பார்" எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும்.


சித்சபையில் இறைவன் நடராசர் கோலத்தில் ஆடும் நடனம் ஊன நடனமாகும்.

ஸ்ரீ ரகஸ்யம் ஞான நடனக் காட்சியாகும்


மூன்று பஞ்சாட்சரப் படிகள்

சித் சபைக்கு மேல் செல்ல வலப்பக்கம் உள்ள படிக்கு குரு பஞ்சாட்சரம் எனப்படும்.


இடப்பக்கம் உள்ள படிகட்கு சிவபஞ்சாட்சரப்படி சக்தி பஞ்சாட்சரம் எனப்படும்.




படம் எண் 26



படம் எண் 27



படம் எண் 28



படம் எண் 29

விஞ்ஞானமய கோசமும், ஆனந்தமய கோசமும், காரணசரீரம் என அழைக்கப்படுவதுண்டு. அஃதே போல் கனகசபையாய விஞ்ஞான மய கோசமும் சித்சபையாகிய ஆனந்தமய கோசமும் இணைந்துள்ளன.

சித்சபையும் திருவைந்தெழுத்தும்

தில்லைக் கூத்தப் பெருமானின் திருமேனி, ஐந்தொழில் முதலியன பலவும் திருவைந்தெழுத்தருள் நிலைகள் என்பதனைத் திருமந்திரம், உண்மை விளக்கம் முதலிய நூல்கள் புகலுவன. சித்சபையாகிய, தில்லை ஞான சபையின் உருவ அமைப்பிலும், திருவைந்தெழுத்தின் நுட்பம் உள்ளது. சித்சபையின் நுழைவாயிற்படிக்குப் பஞ்சாட்சரப்படி என்று பெயர். இது வெள்ளியாலானது. சித்சபையின் மேற் கூரையை மூடியுள்ள இருபத்தோரா யிரத்து அறுநூறு ஓடுகளிலும் திருவைந்தெழுத்து எழுதி வேயப்பட்டுள்ளது எனத் தில்லை உலா கூறும். திருப்பணியைக் கண்ட நல்லோர் சிலரும் திருவைந்தெழுத்து எழுதிய நிலையைக் கண்டுள்ளனர். ஸ்ரீ ரகசியத்தானம் அமைந்த சதாசிவ பீடத்தையும், ஸ்ரீ நடராசரும், சிவகாமியும் வீற்றிருக்கும் மகேஸ்வரபீடத்தையும் சுற்றியமைந்த பிரகாரத்துக்குப் பிரணவ பிரகாரம் என்று பெயர். ஸ்ரீ ரகசிய அமைப்பில் கூறப்பட்டுள்ள சிதம்பர சக்கரம் திருவைந்தெழுத்தினைப் பன்முறை எழுதியமைந்தது.

வாச்சிய நிலைகள்

ஆனந்த தாண்டவர் எழுந்தருளியுள்ள தானமும், சிதாகாச இரகசியத் தானமும் சிவசக்தி லய பிரகாச விமர்சனப் பிரணவங்களாகும், பிரணவங் களின், வாக்கியார்த்தம். ஸ்ரீ நடராச மூர்த்தியும் சிவகாமியம்மையும், பிரணவத்தின் இலட்சியார்த்தம்.[238] சிற்சத்தியபின்ன பரமசிவம் நிஷ்கள மாகவே உள்ளது. நிஷ்கள தெய்வம், சகளமாக வடிவெடுத்து, ஸ்ரீ நடராச சிவகாமியாக நடம்புரிகின்றது. இது தூல நிலை. இத்தூல நடராசருக்கு ஒரு சூட்சும நிலை இரத்தின சபாபதி. ஸ்ரீ நடராசருக்கு, அவ்வியக்த சகள நிஷ்கள வடிவமே ஸ்படிகலிங்கம் என்னும் சந்திர மௌலீசுவரர். இதனை இராமலிங்க அடிகளார் "வாசகமாம் வாச்சியமாம்" எனப் பாடுகின்றார்.

சித்சபை உறுப்பினர் தகுதி

திருச்சிற்றம்பலம் என்ற தெய்வீக ஞானப் பேரவையில் அங்கம் வகிக்கக் குறைந்தது ஐந்தாவது ஞான தீட்சை பெற்றிருக்க வேண்டும் என்பர். இவர்கள் சீவன் முக்தர்களாவர்.

பதி ஞானமும் பர ஞானமும் உணர்ந்தோராவர் இவர்.

அனாகத சகஸ்ர வழிபாட்டு நிலை

சித்சபையில் நடராசரை உருவ நிலையில் கண்டு தகரோபாசனையில் வழிபடுவதை அனாகத நிலை எனலாம்.

ஒலியுடன் ஒளி வழிபாடாக இரகஸ்யத் தானத்தில் வழிபடுவது ஆக்ஞா நிலையாகும்.

இரகசியத்தில் துவாத சாந்த நிலை அடைந்து ஒலி அடங்கி ஒளியாக மட்டும் கண்டு கலப்பது சகஸ்ர நிலை எனலாம்.

இம்மூன்று நிலைகளிலும் இறை தரிசனம் காணல் யோகியர்க்கே சாலும்.

---

238. அய்யர் - ப:

எளிய சோடோபசார பூசனையில் இதன் உட்பொருளை வேண்டு மெனில் அறிய முயலலாம், அடைய இயலாது.

சித்சபை வழிபாடு

சித்சபை, இரகசியத் தானத்துக்கு ஆண்டுக்கு ஒரு முறை புனுகுச் சட்டம் பூசப்பட்டு திரை மாற்றப்படும்.

ஆனந்த நடராசருக்கு ஆண்டுக்கு நான்கு நாள் கனகசபையில் அபிடேகம் நடைபெறும்.

மேலும் ஆனந்த நடராசருக்கு ஆண்டுக்கு இரு நாள் ஆயிரக்கால் மண்டபத்தில் அபிடேகம் நடைபெறும். ஆக ஆறு அபிடேகங்கள்.

இரத்தின சபாபதிக்கு நாள்தோறும் இரண்டாம் காலத்தில் மட்டும் பால், தேன், சந்தன அபிடேகங்கள் நடைபெறும்.

சந்திர மௌலீசுவரருக்கு நாள்தோறும் ஆறு கால பூசை நடைபெறும். இறைவன் சகளத் திருமேனிக்கு அபிடேக முறை தொடங்கப்பட்ட நிலை சிதம்பரத்தில் தான் முதலில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சிவபெருமானைப் பொருத்த வரை அவரது சகள நிஷ்களத் திருமே னிக்கே மூலத்தான அபிடேக ஆராதனைகள் அமைவது மரபு. இவண் தில்லைச் சிற்றம்பலச் சிறப்பு. உருவத் திருமேனிக்கும் அபிடேக ஆராத னைகள். ஞான குருவின் உதவி பெற்று மலமாயையாகிய, அறியாமையாகிய மறைப்பாகிய திரைகளை அகற்றி ஞான சொரூபத்தில் ஐக்கியமாகலாம் என்பதே சித்சபை ரகசியம்.

இடப்பகுதி

இறைவனின் அர்த்த பாகத்தில் இறைவி உள்ளாள். இரகஸ்யச் சுவற்றின் கீழ்ப்பாதியில் இறைவன் கொலு வீற்றிருக்கின்றார். இத்திருக்கோ லத்தினை சிவகாமி அன்னையும், ஞான சக்தியும் காண்கின்றனர் என்று குஞ்சிதாங்கிரிஸ்தவம் மொழிகின்றது.

சித்சபை செப்பு நடராசர் காலம்

இன்று சித்சபையில் கொலுவீற்றிருக்கும் ஆனந்த நடராசர் செப்புச் சிலையினை சிவபாத சேகரன் என்றழைக்கப்படும் இராசராச சோழனே முதலில் செய்வித்தவன் என்ற கருத்து நிலவி வருகின்றது.

செப்புச் சிலை இடம் பெறுவதற்கு முன் சுதையாகவோ, ஓவிய மாகவோ நடராசர் இருந்திருக்கலாம். திருக்குற்றாலத்தில் ஓவியம் அமைந்திருப்பதை நினைவு கூர்ந்தால் நன்று.

புனுகுச் சட்டம் பெறும் ஸ்ரீ இரகஸ்யச் சுவரில் சுதையாலான நடராசர் இருந்திருக்கலாம்.

தில்லை வன மகாத்மியம்

கூத்த நூல் உரைகாரர் தில்லைவன மகாத்மியத்தில் சிற்சபை பற்றிக் கூறிய செய்தியைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"விராட்புருடனது சிகாய மத்தியில் சிவன் நடம்புரியும் சிற்சபை இருக் கின்றதென்றும், தென்பகுதியில் தர்சன வேதியும், அங்கு அதிருஸ்யமான தரிசன சக்கரம் உள்ளதாகவும், காமதேனு சந்நிதி, சங்கம், பதுமம் என்னும் சர்வ நிதிகளும், ஸ்வர்ண கர்ஷன பைரவரும், அஷ்டலட்சுமிகளும் சாந்நித்

தியமாய் உள்ளதாகவும், இடப்பால் ஸ்பர்சன சக்கரமும், சுற்றிலும் படிப் படியாக சதாசிவ, மகேஸ்வர, ருத்ர, விஷ்ணு பிரம்ம பீடங்களும், நாத பிந்து கலைகளும் (64) நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும், ஆறு தர்சனங் களும், பதினெண் உப புராணங்களும், இருபத்தேழு ஆகமங்களும், நூற்றெட்டுத் தந்திரங்களும், தொண்ணூற்றாறு தத்துவங்களும், அமலனோடு இணைந்த ஆதி பராசக்தி அம்சங்களான, அறுபத்து நான்கு யோகினிகளும் குடி கொண்டுள்ளதாகவும், இருநூற்று இருபத்து நான்கு கோடி உலகங்களை இரு நூற்று இருபத்து நான்கு பலகை மூலமும், மனித சுவாசங்களை இருபத் தோராயிரத்து அறுநூற்று தங்க ஓடுகளும், எழுபத்தீராயிரம் நாடிகளை எழுத்தீராயிரம் ஆணிகளும், இவற்றை உள்ளடக்கிய வாமா, ஜியேஷ்டா, ரௌத்ரி, காலி, பலவிகரிணி, பலப்ரமதமணி, சர்வபூத தமணி, சக்தி, மனோன்மணி என்னும் சக்திகள் ஸ்தூபிகளாகவும், அமைந்து என்றும் கூத்தன் சிவனும் கூத்தி சிவையுமே யாவற்றையும் ஆக்கி அளித்து அழிக்கும் பரம் என்பதைத் தெளிவாக்குகிறது'.

சந்திர மௌலீசுவரர் வழிபாடு

சந்தர மௌலீசுவரர் என்றழைக்கப்படும் ஸ்படிக லிங்கத்துக்குக் கனக சபையில் தினந்தோறும் ஆறு கால பூசை அபிடேகத்துடன் நடைபெற்று வருகின்றது.

இந்த லிங்கம் ஒரு நாள் யாருமறியா வண்ணம் ஹேம சபையில் இறைவன் முன் இருப்பதைத் தில்லை மூவாயிரவர் கண்டனர். அப்பொழுது இறைவன் தோன்றி இவ்விலிங்கத்தின் சிறப்பைக் கூறினார் என்பர்.

நடராசப் பெருமான், தன்னுடைய தானத்தில் தினமும் அபிடேகம் செய்யப்படுவதற்காக இந்த ஸ்படிக லிங்கத்தைத் அளித்தார் எனக் குஞ்சிதாங் கிரிஸ்தவம் கூறுகின்றது.

மூவாயிரவர்கள் இறைவனை எங்கு பூசை செய்வது என ஏங்கிக் குழம்பியிருந்தபொழுது இறைவன் தன் சிரசில் இருக்கும் சந்திரனின் அமிர்த தாரகையை எடுத்து ஸ்படிக லிங்கமாக்கி சந்திர மௌலீசுவரர் என்ற பெயரோடு தந்தார் என்பர். இக்கூற்று யோகத் தானத்தை ஆகம வழிபாட்டுத் தலமாக ஆக்கிய முயற்சிக்கு ஒரு சான்று.

இந்தப் ஸ்படிகலிங்கம் ஆதி சங்கரர் கைலாயத்திலிருந்து கொண்டு வந்த பஞ்சலிங்கங்களில் ஒன்றாகும் என்பாரும் உண்டு. ஆதி சங்கரர் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டென்பர்.

யோக நெறியாய ஞான வழிபாட்டில் அபிடேக ஆராதனைக்கு வழியில்லை என்றமையால் சித்சபை வழிபாட்டில் எளிய மக்கட்காகச் செய்யப்படும் வழிபாட்டு முறைகள் பின்பற்ற வேண்டுவதில்லை.

எனினும் அபிடேக ஆராதனை விரும்பிய பூசகர்கள் பிற்காலத்தில் ஸ்படிகலிங்கத்தை வைத்து, அபிசேக ஆராதனைகள் செய்யும் நடைமுறை இன்று இருந்து வருகின்றது. இத்தகய அபிடேக ஆராதனைக்காகவே கனக சபை கட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஸ்ரீ நடராச மூர்த்தியின் பூசனை முறைகளைக் குறிக்கும் பூஜா பாதஞ்சல் மரியாதையில் சந்திர மௌலீசுவர ஸ்படிகலிங்கம் ஸ்ரீ நடராச மூர்த்தியின் உருவாரூபம் என்ப போற்றப்படுகின்றது.

பூசனை வளர்ச்சி ஆகம நெறிக்கு வந்ததெனினும் யோக அடிப்படை அளவு மிஞ்சி மாறவில்லை.

தில்லை மூவாயிரவர் இன்றளவில் சித்சபை வழிபாடு ஆகம வழிபாடன்று வைதிக வழிபாடு எனக் கூறி வருகின்றனர். வைதிக ஆகம யோக நெறிகளின் சங்கமம் இது என்பதே சிறப்பானது.

பல்லீஸ்வரர்

கோதாவரி தீரத் திருந்த பொய் பேசும் இயல்புடைய சோதிடன் ஒருத்தன் க்ஷேத்திராடனத்தின் போது சிதம்பர நடராச தரிசனம் செய்த புண்ணியத்தின் காரணத்தால் மறு பிறவியில் சிதம்பரத்தில் பல்லியாகப் பிறந்து தன் பூர்வ ஜன்ம வாசனை அறிந்து இறைவனைச் சதா வழிபடு பவனாக சித்சபை கீழ்ப்புறக் கொடுங்கையில் இடம் பெற்றுள்ளான்.

இப்பல்லிக்கு அருள் செய்த மூர்த்தி வைபவம் பல்லீஸ்வரர் என்ற பெயரில் வடக்கு, இரண்டாவது பிரகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

சித்சபை ஐயம் ஒன்று

சித் சபையின் சரிபாதிப் பகுதியில் மேற்கு கிழக்காக ஒரு மர அடைப் புள்ளது. அதன் தென்புறம் தான் தெய்வ நிலைகள். மேற்குப் புறப்பகுதி அடைப்புக்குள் என்ன உள்ளது என ஒரு வியப்புக்குரியான ஐயம் பலருக்கும் உள்ளது. அங்கு வெற்றிடம் உள்ளதென்பர்.

தில்லை, சித் சபைக்குள் மாணிக்க வாசகர், நந்தனார், திருமூலர் போன்ற நல்லோர் பலர் ஐக்கியமானதாக வரலாறுள்ளது. எனவே வெற்றிடம் சமாதித் தலமாகவோ, நைஷ்டித யோகத் தானமாகவோ இருக் கலாம் என்பர். யாவும் நன்றே.

சித்தர்கள், யோகிகள், திருத் தொண்டர்கள் சமாதியடைந்த தலங்களில் தெய்வத் தானங்கள் அமைக்கும் நடைமுறைப்படி இவ்வடைப்புப் பகுதியில் திருமூலர் போன்ற சான்றோரின் சமாதி இருக்குமோ, என்ற ஐயம் பலருக்கும் உண்டு.

எது எவ்வாறாயினும் சித்சபை தத்துவம் சமயாதீத உயர்வு நிலை பெற்றது. மிகப் பெரிய யோகத் தானம். ஞான நெறியாய யோக நெறியில் எல்லாவற்றையும் அறிவிக்கும் கற்பிக்கும் சிறப்புடையது. சித் சபை தானத்தில் புவியீர்ப்பு சக்தி அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

சித் சபை மூலட்டானத் தொடர்பு

பொதுவாகத் திருக் கோவில்களில் தலைமை வழிபாட்டிடமாய கருவ றையில் சிவலிங்கம் என்னும் சதாசிவ மூர்த்தம் இருக்கும். இது இறைவனின் அருவுருவத் திருமேனி. இக் கருவறையைச் சுற்றிப் பிற பரிவாரத் தெய்வங்களின் சிறு கோயில்கள் அமையும். இவண் சிதம்பரம் கோயிலின் தலைமை வழிபாட்டு நிலையமாயமைவது சித்சபை என்னும் தெற்கு நோக்கிய திருச்சிற்றம்பலம் என்னும் ஞானசபை. திரு மூலட்டானம் எனப் படும் சிவலிங்கக் கோயில் சிதம்பரம் திருக் கோவிலின் வடபகுதியில் தனிக் கோயிலாக இச் சபையுடன் இணைந்தது போன்றமைந்துள்ளது. திரு மூலட் டானத் திருக்கோவில் காலத்தால் முந்தியது. சிற்சபை அது தோன்றிய காலத்தில் தனி அமைப்பாகத் திட்டமிடப்பட்டு, பிற் காலத்தில் அதற்குரிய திருச்சுற்றுக்களையும் வாயில்களையும் பெற்று, ஒரு முழுமையான

அமைப்பாக அமைக்கப்பட்டு, மூலக் கோயிலோடு இணைக்கப்பட்டுள்ளது. சித்சபையில் நடமிடும் ஆனந்த நடராசரும் மூலட்டானேசுவரரும் ஒன்றே.

திருவிழாக்களில் திருக்கூத்துத் தரிசனம்

தில்லையில் ஆண்டு தோறும் நிகழும் ஆனித் திருமஞ்சன விழாவிலும், மார்கழித் திருவாதிரை விழாவிலும், ஒன்பதாம் திருநாளில் ஆனந்தமா நடராசப் பெருமான் சித்சபையிலிருந்து எழுந்தருளி திருத்தேர் அமர்வார். திருத்தேரில் நான்கு வீதிகளிலும் உலாப் போந்த பின் அன்றிரவு ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருந்து, மறு நாள் வைகலில், திருமஞ்சனம் கொண்டருளி, நண்பகலில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து, புறப்பட்டு, திருக் கூத்து பயின்று மக்கட்குத் திவ்ய தரிசனம் தந்து, கீழை வாயில் வழியாகச் சித்சபை புகுந்தருள்வார். பத்தாம் திருவிழாவாகிய தரிசனத் திருவிழாவன்று நடைபெறும் இத்திருநடனக் காட்சியே திருக் கூத்துத்தரிசனம் ஆகும். இது அண்ட சிதம்பரத்தில் நிகழ்வது.[239] சிற்றம்ப லத்தில் ஆடல் புரியும் கூத்தப்பெருமானை, ஆயிரக்கால் மண்டபத்தே எழுந்தருளச் செய்து, மீண்டும், சிற்றம்பலமாய ஞான மன்றத்தே புகுந்தருளச் செய்யும் இத்திரு விழா நிகழ்ச்சி, மன்னுயிர்களின் இதயத் தாமரையில் உயிர்த்துடிப்பாக இடைவிடாது நடம்புரிந்தருளும் கூத்தப் பெருமானை, அநாகதத்தானத்திலிருந்து எழுந்தருளச் செய்து, ஆக்ஞையாய புருவ நடுவில் தியானித்து, ஆறு ஆதாரங்கட்கு அப்பாற்பட்டதாய் உச்சந்தலைக்குமேல் சகஸ் ராரமாய ஆயிர இதழ்த் தாமரையில் எழுந்தருளும்படி செய்து, முதல்வனது திருவருளோடு ஒன்றியிருந்து, அம்முதல்வனை மறுபடியும், நெற்றிக்கு நேரே புருவமத்தியில் கண்டு போற்றி, மீண்டும் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளச் செய்யும் சிவஞானச் செல்வர்களின் அகப்பூசை நெறியாய, திருக்கூத்துத் தரிச னத்தை நினைவுபடுத்துவ தொப்பதாகும். இவண் தில்லைச் சிற்றம்பலமாகிய சித்சபை என்னும் ஞான சபையை, அநாகதமாகவும், ஆயிரக்கால் மண்ட பத்தைச் சகஸ்ராரமாகவும், சிற்றம்பலத்துக்கும் ஆயிரக்கால் மண்டபத்துக்கும் நடுவேயுள்ள குலோத்துங்க சோழன் மாளிகைக் கிழக்குத் திரு வாயிலை ஒட்டியமைந்த முகமண்டபத்தைப் புருவ நடுவாகிய ஆக்ஞையாகவும் கொள்வதும் ஒரு மரபு.

தில்லை நடராச வழிபாட்டு முறை

வழிபாட்டு நெறிகள்

வேதம் இறைவனை தியான ரூபத்தில் வழிபட வழி வகுத்தது.[240] ஆகமங்கள், அடியார்கள் வழிபட, கிரியா ரூபமாக, சகளத் திருமேனியில் இறைவனைக் காட்டுகின்றன. இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றோர், இவரெனச் சுட்டு முகத்தான், புராணங்கள், கதா ரூபமாக இறைவனைச் சுட்டுவன. யோக நெறி, ஆத்மரூபமாக ஆறாதார ஒளி உருவாக, ஒலி உருவாக இறைவனைக் காட்ட வல்லது. இந்நெறிகள் ஒன்றை ஒன்று தழுவியன. நவந்தரு பேதப் பகுதிகளான அருவம், உருவம் அருவுருவம் என்ற மூன்று நிலைகட்குள் இறை உருவங்கள் யாவும் அடங்கும். எல்லாம் இறை மயமே.

சாதாக்கிய நிலை

சிவயோகிகட்கும், துறவிகட்கும், ஞானிகட்கும் தியானிப் போர்க்கும், தியானம், வழிபாடு நிமித்தம், நிஷ்கள சிவம், சகளத் திருமேனி தாங்குவது, சாதாக்கியம்[241] எனப்படும். லயசிவமாயினும், வழிபடுங்கால் முதல்

239. வெள்ளைவாரணனார், தில்லைப்பெருங்கோயில் வரலாறு, சிதம்பரம் 1987, ப:42
240. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு, சிவபராக்கிரமம், முன்னுரை
241. தேசிகர், ப:141

நிலையாக, சாதாக்கிய நிலை போற்றப்படுவதால், பரதாண்டவேசுவரராய லய சிவத்துக்கும் உருவம் கூறப்படுகின்றது. எனவே உருவற்ற பர நிருத்த தெய்வத்தை, ஒளி, ஒலி மய உருவாகி, மறையும் தெய்வத்தை, முதற்கண் சாதாக்கியமாகிய உருவ நிலையில் சகளத் திருமேனியில் வணங்கி, மேனிலை செல்வது யோக, தியான மரபு.

உருவ நிலைகள்

படிமங்கள் உருவாக்கப்படுவதற்கு முன் சித்ராபாசமாக, சுவற்றிலும், கிழியிலும் உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கின்றன.[242] சுதை உருவங்களும் மரச் சிற்பங்களும் கூட அமைந்திருக்க வேண்டும்.

மகுடாகமத் தியான முறை

சிதம்பரம் சித்சபை வழிபாடு மகுடாகமப்படி நடக்கின்றது என்ற கருத்து தமிழ்ச் சைவர் மனதில் ஊன்றியுள்ளது. மகுடாகமத்தில், பஞ்சகிருத்திய பரமேசுவரின் தியான முறை கூறப்படுகின்றது. தேசிகர் அவர்கள் இதனை விளக்கியுள்ளார்கள்.[243] இவண், லய சிவத் திருமேனியுடையவனாயினும் தியானிக்கின்றபோது, ஐந்தெழுத்தின் வடிவாகவே தியானிக்க வேண்டும் என்றும், ஐந்தெழுத்தின் உருவாக தியானிக்கும்போது பஞ்சப் பிரம்ம வடிவாகிய, ஐந்து முகங்களோடு தியானிக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. ஐந்தெழுத்து அருள்நிலையை அது பற்றிய பகுதியில் காண்க. தியானம் பூசனை முதலியன தொன்று தொட்டு வரும் முறைகளே. தியானத்தில் நிருத்த மூர்த்தி லயசிவமாக விளங்குகிறார். தியானத்தின் போது மந்திரம் ஓதுவது இயல்பு. அது முதல் படி. மந்திரம் ஓதும் போது, மந்திர மூர்த்தியாக இறைவன் உருவில் தோன்றுவார். அவண் சதாசிவ உருவம் உட்பட்ட பல தெய்வ உருவங்கள் தியானத்தில் தோன்றுவது இயல்பு. தியானத்தில் உருவத் திருமேனியைக் கண்களால் கண்டு, இதயத்தில் அங்குஷ்ட பிரமாணராக வணங்கி, ஆக்ஞையில் நாதமாகவும் பின் சகஸ்ராரம் வரை, ஒளியாகவும் அதற்குமேல் லயமாகவும் ஒன்று மின்றியும் வணங்குவது யோக அனுபவம். எனவே, இவண், தியானத்தின் போது, திருவைந்திழுத்தினை ஓதி, நிருத்த மூர்த்தியைப் பூசிக்கும்போது, முதலில், அதிகார சிவத்தின் இடமாக விளங்கும், சதாசிவ மூர்த்தியைச் சிரமாகிய பீடத்தில், நவ தத்துவார்ச்சனை செய்யப்பட வேண்டும். அதன்பின் ஈசான மந்திர மூர்த்தியின் மூல மந்திரத்தால் ஆவாகனம் செய்யப்படும். அதற்குப் பின் நடராசத் தியானம்.[244] உபநிடதத் தத்துவங்களால் காட்டப்பட்ட பிரம்ம நிலை நடராசரை, ஆகம நிலை வழிபாட்டுக்கு வருகையில் ஆவாகனம் நவ தத்துவார்ச்சனை முதலியன சுட்டப்படுகின்றன. இத்தியான முறையை, இவண், விளக்கப் புகுந்ததின் காரணம், பரசிவ லய மேற்றானம், ஆகமத் தியானத்தின் போதும் வலியுறுத்தப்படுகின்றது என்பதை வலியுறுத்தவே. வாதுள சுத்தாக்யத்தில், சிவத்தின் நடுவில் நிருத்த மூர்த்தி விளங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் நிருத்த மூர்த்திக்கு மேல், பரநிருத்த மூர்த்தியாகிய, லய சிவ சத்தியும் சமஷ்டி ரூபமாக விளங்குகிறதையும் கூறுகிறது. எனவே ஆனந்த தாண்டவ மூர்த்தியாகிய சிற்சபாநாதன் லயசிவ நிலை என்பது பெறப்படுகின்றது.[245]

242. ராவ் ப:53 (நூல் 1.1)
243. தேசிகர் ப:142-3
244. அஃதே. ப:145
245. அஃதே. ப:146

தரிசனப் பலன் – ஞான நெறிக்கண் உய்த்தல்

தில்லைத் திருநடன தரிசனப் பலன், உயிரை ஞான நெறியில் உய்வித்து பயன் எய்துவித்தலாகும். சிவலிங்கத் திருவுரு, சோமாஸ்கந்தத் திருவுரு, ஏனைய மூர்த்தங்களின் திருவுருக்களை விட ஆனந்த நடராசத் திருக்கோலத்தில் தரிசிக்கப்படும், ஐந்தொழில் நடன தரிசனம், அகத்தும், புறத்தும் நற்பயன்களைத் தந்து ஞான நெறிக்கண் உய்த்த செய்தி, பயன்களை, பல பக்தர்கள் பாடியுள்ளார்கள். இதன் சிறப்பு மயக்கம் தெளிந்து ஞானம் பெற்று இறை நெறி எய்தலாகும்.

ஆண்டு கொள்ளல்

மாணிக்க வாசகர் 'இந்திரிய வயம் மயங்கி, இறப்பதற்குக் காரணமாகி செயலில் திரிந்து, அருநரகில் வீழவிருந்த என்னை, என் சிந்தனைகளைத் தெளிவாக்கி, தெளிவித்து, சிவமாக்கி, எனை யாண்டு கொண்டார் ஆனந்த மணி கொல் தில்லை இறைவன்' என்பார்.

ஆனந்த அமுதுண்ணல்

திருமூலர் அவர்கள் திருக்கூத்துக் கண்டு தெளிந்த நிலையில் பாடியவர்[246] அவர் 'புளியைக் கண்டவுடன் வாயில் நீர் ஊறுதல் போன்று, களிக்கும் ஆனந்தத் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம், காத்து அளிக்கும் அருட்கண்ணீர் ஊறி, நெஞ்சை உருக்கும் ஒளி தரிசனம் காட்டி அதனுள் ஊறும் ஆனந்த அமுதினைத் துய்க்கும் அருள்நிலை எய்தும்' என்பார்.

மாயை மறைதல்

'சித்சபையில், சின்மயமாயிருக்கும், உமா சகித சிவனை தரிசிக்கையில் ஒரு அஞ்சத்தகு மாயை என்பால் வந்தது. இறைவனின் திருமுடிக்கண் அமைந்த குளிர் கிரணங்களையுடைய சந்திரனின் நிலவொளியால் மாயை மறைந்து ஒளி பிறந்தது, ஞானம் பெற்றேன்' எனப் பாடுகின்றார்.[247]

பாபம் தீரல்

'சிதம்பரத் தலத்தில் தரிசனப் பயனாக, பல பிறவிகளில் அனுபவிக்கத் தகுந்த சஞ்சிதம் முதலிய பாபங்கள், இறைவனுடைய கட்டளையால் ஒரு நிமிடத்தில் தீரும். இறைவனுடைய கட்டளையால் பைரவர் தனது சூலத்தினால் அடித்து, பாபங்களை விரைவில், பஸ்மமாகச் செய்து, ஜனன மரணத்தைப் போக்கடிப்பார். இதற்குக் காரணமாயமையும் தாரக மந்திரத்தையும், பிரம்ம தத்துவத்தையும் சித்சபேசர் உபதேசிக்கிறார்' என்ற பொருள்படக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் கூறும்.[248]

அகத்து ஐந்தொழில்

தில்லைத் திருநடத்தின் பயனை அஞ்சல் என்று அங்கை காட்டி, நலம் எய்துக என அழகிய முறுவல் காட்டி, திருவடிச்சரண் பயனை வலியுறுத்தி, குஞ்சித பாத தரிசனம் காட்டி, ஆங்கிகாபிநயத்தால் குறித்த பரம்பொருள் நிலையாக ஒரு பொருளைக் காட்டி, செகத்தின் விளையாட்டாய, இயக்கமான நடத்தை ஊனக் கண்ணுக்கும், ஞான அகத்துக்கும் காட்டி, பக்தனின் நெஞ்சிலே புகுந்து ஐந்தொழில் நடனம் இயற்றுவான்' இறைவன் என்கின்றார்.[249]

---

246. திருமந்திரம் 2778
247. திருமந்திரம் 2745,2768
248. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:159,ப:79
249. நஜன், ப:76

ஆனந்தம்

எந்த வகை மூர்த்தமானாலும் தெய்வம் ஒன்றே எனினும், மூர்த்தி பேத விசேடம் காரணமாக ஆனந்த நடன சபேசரின் திருநடனத்தின் தரிசன விசேடத்தைத் திருவாசகம் கூறும் போது, 'நினைக்கும் தொறும், காணும் தொறும், பேசும் தொறும், எப்பொழுதும் அனைத்து என்பும் நெக, ஆனந்தத் தோரியும் குறிப்பு டையான்' என்றும், பிற மூர்த்த தரிசனம் 'தினையத்தனை அளவு தேன் உள்ளதோர் பூவினில் தேன் உண்ணல் போன்றது' என்றும் புகலும்.[250]

பந்தம் அகற்றல்

தில்லை ஆனந்த நடனப் படிமத்தின் சிறப்பினைக் கூறும் திருவாதவூரடிகள் 'ஐந்தொழில் நடனப் படிமமாய இந்தப் படிமம் பந்தமது அகற்றும். வந்து உலகில் காண்பவர் அனைவர்க்கும் வழுவா முத்தி தந்து, அருள் அளிக்கும்' எனக் கூறுவர்.[251] மாயை அகற்றும் சிறப்பை இது கூறுகின்றது.

இரகஸ்ய வழிபாடு மறைபொருள்

நான் மறைகள் நவின்ற பொருள் பொதிந்த தத்துவங்கள் பொதுமக்கட்கு விளங்காத மறை பொருளாக அமைதல் இயல்பு. நிறை மொழி மாந்தர் ஆக்ஞையில் எழுந்த ஆணையிற் கிளந்த நுண் பொருள் அமைந்த மொழிகள் மறைமொழி எனப்படுவன. மந்திர தந்திர சாத்திர வழிபாட்டில், எளிதில் விளக்கப்படாத மறைவுகள் -இரகஸ்யங்கள் அமைந்துள்ளமை இயல்பு. மறைவான கருத்துடைய புராணங்கள் நம் சமய நெறிக்கு அணி சேர்க்கும் காப்பியங்களாக அமைவதையும் காண்கிறோம்.

வான்பற்றி நின்ற மறைப் பொருள்

சிதம்பர ரகசியம் என்பதை 'வான்பற்றி நின்ற மறைப் பொருள்' என்று கூறும் மரபு ஒன்றுள்ளது.[252] சிதம்பர ரகசியம் என்பது நடராச நிலை.

திருமூலர் கூறும் திருக்கூத்துத் தரிசனம். திருவைந்தெழுத்தாய திருமந்திர நிலை என்பனவற்றை வைத்து, 'திருமந்திரமே சிதம்பரம் காணும்' என வரும் திருமந்திரப் பாடலையும் நோக்குகையில், அக நெறியில், ஞானம் உணர்ந்து, அம்பலவாணரைத் தரிசித்தலே வான்பற்றி நின்ற மறைப் பொருளைக் காணல் என்பது புலனாகும்.

இரகஸ்ய வழிபாடுகள்

தந்திர சாத்திர வளர்ச்சியின் போது ஊர்த்துவ சாதகர் என்னும், உயர் சாதகர், உயர் ஞான யோக நெறிகளைக் கையாண்டு வழிபாடுகளை நிகழ்த்தும் போது, இரகஸ்ய வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. பொதுமக்கட்குத் தெரிந்த அளவில், தமிழகத்தில் சிதம்பரம் சிற்சபையில் ஞானாகாய இரகஸ்ய வழிபாடும், திருவாரூர் தியாகராசர் வழி பாட்டில், பீஜாட்சர இரகஸ்ய வழிபாடும், திருப்பெருந்துறை ஆத்ம நாதர் வழிபாட்டில், பூசாபாகமற்ற சிவலிங்கத்துக்கு அன்னத்தின் ஆவியைப் படைக்கும் திரையிட்ட தீ பாராதனையாகிய இரகஸ்ய வழிபாடும், திருவெண்காட்டில் நடராசருக்குப் பின் புறம் திரையிட்டு விலக்கி கற்பூர வழிபாடும் நிகழ்வதைக் காண்கிறோம். சாக்த வழிபாட்டு முறையில் ஜ்வாலமுகி ஆலயம், வைஷ்ணவி தேவி

250. திருத்தொண்டர் புராணம், நாவலர் பதிப்பு சிதம்பரம் ப:56,57
251. அக்தே, ப:56
252. அருணாசலம் ப., திருமந்திரக் கோட்பாடு சென்னை 1982 ப:356

ஆலயம், முதலிய இமாலயத்துள்ள தொலை கிராமக் கோவில்கள் சிலவற்றில், தவ முனைப்புடைய யோகிகள் பலர் இரகஸ்ய வழிபாடு நிகழ்த்துவதையும் அறிகிறோம். பரம ரகஸ்யம் என்பது பொதுவில், ஒருருவும் ஒரு நாமமும் இல்லா இறைவன், படைத்து, காத்து, அழித்து, அருள் செய்து, மறைத்து அண்ட சராசரங்களை இயக்குவதேயாகும்.

இப் பரம ரகஸ்ய தெய்வத நிலையை, யோக வழிபாட்டு முறையில் அநாகதத் தான தகர வித்தையாகவும, அதனுயர் ஆக்ஞா, சகஸ்ரார அனுபவ ரகஸ்யங்களாகவும் உருவகித்து வழிபடும், வழிபாட்டு நிலையே, சிதம்பரம் சித்சபையில் ஆனந்த நடராசப் பெருமானுக்கு வலப்பக்கம் அமைந்துள்ள இரகஸ்ய அமைப்பாகும்.

சித்சபை இரகசியம்

சித் சபையில் உள்ள இரகசியம் என்று கற்பூர ஆரத்தியின் போது நமக்குக் காட்டப்படுவது, ஆனந்த தாண்டவமூர்த்தியின் பின்புறமாக இரகசியத் தூண் வரை அமைந்துள்ள சற்றேறக் குறைய பதினோரு அடி நீளமும் ஒன்றரை முதல் இரண்டடி அடி அகலமும், ஆறடி உயரமும் உடைய ஒரு மண் சுவராகும். இரகசியத் திரைக்குப் பின் உள்ள பகுதியில் திருவைந்தெழுத்தினைப் பன்முறை மடக்கி எழுதிய திருவம்பலச் சக்கரம் இம்மண் சுவரில் கீறப்பட்டு எழுதப்பட்டுள்ளது. திருமந்திரத்தில் திருவம்பலச் சக்கரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சித்சபை கும்பாபிஷேக பாலாலய காலத்தில் சென்று கண்ட அறிஞர்கள் இதனைக் கூறியுள்ளனர். பூசனை செய்து வரும் தீட்சிதர்கள் சிதம்பர சம்மேளனச் சக்கரம், ஸ்ரீசக்கரம், ஸ்ரீ சிதம்பர சக்கரம் முதலிய பெயருடைய ஒன்றோ பலவோ சக்கரங்கள் இரகசியச் சுவரில் அல்லது இரகசியம் அமைந்த பீடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதாக மொழிவதுண்டு. ஆதி சங்கரர் அவர்கள் ஸ்ரீ சக்கர ஸ்தாபிதம் செய்ததாகக் கூறப்படுவதுண்டு.

இரகசியம் பற்றிய கருத்துக்கள்

நிர்விகல்ப, சமாதியின் போது, இறைநிலை, ஆக்ஞா, சகஸ்ரார நிலைகளில், பிரகாசமாகவும் இரகசியமாகவும், ஆகாய அனுபவமாகத் தோன்றும்; இவ்வாகாய அனுபவத்தை, உபநிடதங்கள் கூற முயன்று, இயலாது தவிக்கும். இது, சிவ, சீவ ஐக்கிய நிலை ஆகும். இதுவே இரகஸ்யம்.[253] நடராசப் பெருமானின் உருவ நிலையைக் குறிக்கும் போது அவரது அருவ நிலையே சிதம்பர ரகஸ்யம்.[254] கைலாய மலையில், சகல உயிர்கட்கும் காரணரான பரமசிவன், தன் தலைமைக் கோயிலில்-சிதம்பரத்தில் விளங்குகிறார். அப்பரமசிவ னானவர் எல்லாத் திருத் தலங்களிலும் மறைந்தவராய் இருந்து கொண்டு, தனது அம்சத்தினால் சதாசிவ உருவத்தோடு எப்பொழுதும் விளங்குகிறார். அப்பரம சிவனானவர் இதயத் தானமாகிய சித்சபையில் உட்புறமுள்ள சுவற்றில் பூரண அம்சத்தோடு, சிதம்பர இரகஸ்யமாக, நடனம் செய்து கொண்டு மகிழ்வினால் அண்டங்களைக் காத்தருள்கிறார்.[255] சிதம்பர நடராச உருவம் ஆகாய லிங்க ரகஸ்யத்தைக் குறிக்கும்.[256] திருவாரூர் தியாகேசர் ரகஸ்யம் பீஜாட்சர ரகஸ்யத்தைக் குறிக்கும்.[257] அசுரர்கள் இறக்

253. குஞ்சிதாங்கிரிஸ்தவம் ப:137 பா:269
254. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், ப:39 பா-84
255. உமாபதி சிவம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், பா:84, ப:39
256. சாமு ப:141
257. சமய வழக்கு

காமலிருக்க வரம் கேட்பவர்கள். அவர்கள் 'அசு' என்னும் பிராணனில் மகிழ்பவர்கள். தேவர், நரர் முதலியோர் பிறவாதிருக்க வரம் கோருபவர். இப்பிறவா நெறியைக் காட்டும் வழியே சிதம்பர ரகஸ்யம்.[258] ஆகாயம் என்பது எந்தப் பொருளுமில்லா வெற்றிடம். இவ்வெற்றிடத்தை ஆகாய லிங்கமாக, பாவித்து வழிபடுவது இரகசியம்.[259] சிதாகாசமான இரகசியத்தில் பரமசிவம் சித்சக்தியுடன் இணைந்து விளங்குகிறார். இவண் இது சிவசக்தி ஐக்கிய நிலை.[260] நடராசருக்குப் பெயருண்டு; சதாசிவ மூர்த்தத்துக்கும் பெயருண்டு; மற்ற மகேஸ்வர மூர்த்தங்கட்கும் பெயருண்டு. சித் சபையில் நடராச மூர்த்தியின் வலப் பக்கத்தில் மாசுபடியா ஆகாய மூர்த்தமாக சிதம்பர ரகசியமிருக்கின்றது. இது நாம ரூப விகற்பப்படாதது, ஆகையால், அனைவ ராலும் வழிபடற்குரியது; மேலானது.[261]

ஆண்டவன் உன் உள்ளத்தில் நடனம் செய்து கொண்டிருக்கிறார். இங்குக் காண்பது போல, அவரை உன் உள்ளத்தில் கண்டு தரிசனம் செய்" என்னும் சமயப் பொதுக் குறிப்பைக் காட்டுவது சிதம்பர ரகசியம். இவண் நடராசர், சமயாதீதக் கடவுள் என்பது விளங்கும். "எல்லாம் வெளியே என்ன, எச்சமயத்தவரும் வந்திறைஞ்சா நிற்பர்" என்பதே இது.[262] நமது உடலில் இருபத்தாறு எலும்புகட்கிடையில் இதயக் கமலம் உளது. அதன் நடுவே ஞானவெளி. அத்தகராகாச ஞான வெளியின் நடுவே ஒரு ஞான ஒளி இடையறாது நடராசராக அசைந்து கொணடிருக்கின்றது. இதுவே சிதம்பர ரகசியம். " இவண் சச்சிதானந்த சிவம், அவன் முமூட்சுக்களால் நாடப்படுப வன்" எனப் பஞ்சப் பிரம்மோபநிடதம் கூறுகின்றது.[263] சித்சபை, விராட்புருடனுக்கு இதயத் தானம். பூ மண்டலத்துள்ள ஏனைத் தலங்கள் பிற உறுப்புக்கள். இதயத் தானத்தில் உயிருக்கு ஒளி மிக்கிருப்பது போன்றே, தில்லைத் தலத்திற்கு - தகர நிலைக்கு ஒளி அதிகம். அனைத்து இந்திரியங் களும் இறுதிக் காலத்தில் இதயத்தில் லயமடைவது போல், அனைத்துத் தலங்களில் உள்ள தேவதைகளும், அர்த்த ஜாம பூஜா காலத்தில், இச்சிதம்பர இரகசியத்தானத்தில் லயமடைகின்றன.[264] அகண்டாகார யோகானுபூதி பெற்ற உயிருக்கு உகந்த நட்பாய ஆனந்தப் பொருளாய இறைவன் மலரிடை மணம்போல் பௌதிக உலகமுழுதும் கலந்திருக்கும் நிலை சிதம்பர ரகசியம்.[265] சிதம்பரம் என்பது பேரறிவுப் பெருவெளி. அது சிதாகாசம். தவத்தின் வாயிலாகவே அதைக் காண இயலும். எனவே அது ரகசியம். இந்த ரக சியமே உயிர்த்திரளை ஆட்டுவிக்கும் விழுப்பொருள். தில்லை மன்றுள் எல்லாம் வெளியாகத் தெரியும் இரகசியம் எச்சமயத்தவரும் இறைஞ்சி நிற் கும், ஆனந்தம் காட்டும், இதய நெறியாகும். இது அகமும், புறமும் ஒன்றுபடும் புணர்க்கையாகும். காணரிய எல்லாம் காட்டும், விளையத்தக்கன அனைத் தையும் விளைத்துக் காட்டும். கற்பூரமலை தீப்பட்டதொத்த பேரொளி காட்டும். பந்தமறுத்த பளிங்கனைய அறிவுப் பொருளின் விளக்கம் இரகசி யம். காணாப் பொருளாய இறையும், காணாப் பொருளாய உயிரும் கற்பூர ஒளிபோல் கரைந்தினைவதைக் காட்டும் ஞான நெறி இரகசியம். இவ்விரக சியமே பெரிய பரிபூரணம். துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்ற மூன்று சாதனங்கட்குரிய வழிகளையும் காட்டுவது சிதம்பர ரகசியம். பெரிய

258. அஃதே, ப:12
259. அஃதே, ப:12
260. சோம.லெ., (பதிப்) கோயில், ப:470
261. அஃதே, ப:272
262. அஃதே, ப:161
263. அஃதே, ப:71
264. சோம.லெ., கோயில் சிதம்பரம் ப:71

மோனநாதனாய் ஆலமர்ந்த கடவுள் சொன்ன பேசாச் செய்தியின் நுண் பொருள் இரகசியம்.

இரகசியப் பகுதி

இரகசியம் திரையிட்டுக் காட்டப்படும் இடம் சற்றேறக்குறைய மூன்றடி முதல் நான்கடி அகலமுள்ள பகுதி. திருவாசிக்கு மேற்புறம் உட்புறம் சிகப்பும் வெளிப்புறம் கறுப்புமாய திரையினால் மூடப்பட்டுள்ளது. அத்திரைக்குள் இன்று (1984) ஒன்பது வரிசை தங்க வில்வ தளங்கள் தொங்குகின்றன. 1963 இல் ஆறு வரிசைகளும் தொண்ணூற்றைந்து வில்வ தளங்களும் இருந்ததாகக் கூறுவர்.[266] மூன்றாயமைந்த வில்வ தளங்களைத் திரிபுடி என்பதுமுண்டு. ஹம்ஸ, ஸோஹம் என்பது சுத்தத் திரிபுடி.[267] இத்தங்க வில்வ இலைகளில் ஐம்பத்தொரு அட்சரங்கள் எழுதிப் பொறிக்கப்பட்டுள்ளன என்பர்.[268] கூத்தப் பெருமான் கொன்றை மாலை அணிந்து நடனமாடினார். கொன்றை மாலை அணிந்த சடையினையே பொன் வடிவத்தில் செய்து தொங்க விடப்பட்டுள்ள தென்பாரும் உளர். அப்பொற்சடையின் பொன்னிறமான ஒளி நடராசரின் உண்மை உருவை உணர்த்தும் சிதம்பர ரகசியம் என்பர். இச் சித்சபையே சிதம்பர ரகசியம் என்பர்.[269] சிதம்பர ரகஸ்யம் காட்டப்படும் சுவரில் கற்பூர தீபத்தின் போது கூர்ந்து கவனித்தால் மேடு பள்ளங்கள் தெரியும். இவற்றை மேரு என்றும், பிரஷ்டா கல்பம் என்றும் தில்லை வாழ் நல்லோர் நவில்கின்றனர்.[270] சிதம்பர ரகஸ்யச் சுவரில் திருமூலர் கூறும் திருவம்பலச் சக்கரம் சற்றேக்குறைய மூன்றுக்கு மூன்று சதுரத்தில் எழுதப்பட்டுள்ளதாக, பாலாலய காலத்தில் கண்ட சான்றோர் கூறுகின்றனர். நூலோர், பலர் ஸ்ரீ சக்ரம், சிதம்பர சக்கரம், சம்மோஹன சக்கரம், மகா தாண்டவ சக்கரம், திரஸ்கரணி சக்கரம், ஆனந்த ஸ்ரீ பஞ்சாட்சரியந்திரம் சக்கரம் முதலியன அமைக்கப்பட்டுள்ளதாக நவில்கின்றனர்.[271] ஆதி சங்கரர் அவர்கள் சித்சபைக்கு ஸ்படிகலிங்கம் அன்பளிப்பாகத் தந்தபோது ஸ்ரீ சக்கரத்தை இரகஸ்யத்தானத்தில் நிறுவியதாகக் கூறப்படுகின்றது.[272] திருவைந்தெழுத்தாலாய பஞ்சாட்சரி எந்திரம் அமைத்து, அதன் முன்னர் தங்க வில்வமாலை அமைந்துள்ளது என்பதும் காண்கிறோம்.[273] தில்லை வாழ் அந்தண நல்லோரிடம் உரையாடுகையில் சிதம்பர ரகஸ்யம் என்ன என்பது விளங்காப்புதிர் ஆகும். எனினும் அவர்கள் ஸ்ரீ சக்ரம் அமைந்துள்ளதாகவும் அது கண்ணுக்குத் தெரியாதிருப்பதாகவும் புகல்வர். தில்லைக் கோவில் காம கோட்டத்தில் சங்கரர் நிறுவிய ஸ்ரீ சக்கரக்கோயில் வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. சிதம்பர ரகசியத்தின் பூசையின் போது பூசை ஸ்ரீ சக்ர சிதம்பர சம்மோஹன யந்திரத்திலுள்ள நாற்பத்து மூன்று கோணங்களுக்கும் அதன் கண் அமைந்த ஆவரண தேவதை கட்குமே என்ற கருத்து இன்றைப் பூசகர் களிடையே உலவுகின்றது. இக்கருத்து சிதம்பர இரகசிய சிந்தாந்தத்துக்கு முரணானது. பரம சிவமே, மகா தாண்டவேஸ்வரராக இரகசியமாக விளங்கி அருளும் வழிபாட்டு நெறியில் ஆவரண தேவதைகட்கு இடமிருக்க வாய்ப்பில்லை. இன்றைய சிதம்பர இரகஸ்ய பூசை மந்திரங்களையும், பூசா முறையையும் ஆய்வது பல புது உண்மைகட்கு உதவலாம்.

265. தாயுமானவர், சிதம்பர ரகசியம், 226. சாமு, ப:101
266. சாமு ப:101
267. அய்யர், ப:1
268. நஜன், ப:13
269. சோமலெ., (பதிப்) கோயில் ப:201
270. தீட்சிதர்கள் கூற்று.
271. சேது தீட்சிதர் சோம. பக்:58
272. நஜன், ப:13, ப-15
273. அஃதே, ப:13

மௌன வியாக்கியான நிலை

தென்முகக் கடவுளாய் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியவர்கள் கர கமல சின்முத்திரையால் மௌன வியாக்கியானமாக, சிந்தாந்த பரிபாடையை சனகாதி முனிவர் நால்வர்க்கு உபதேசித்தது, போலவே, உன்மனானந்தமாகிய **ஸ்ரீ சிதம்பர ரகஸ்ய மீதான வெளியில், சொல்லிறந்து, மனமிறந்து, அவாய்மனோ கோசரமாய், வசனமில்லா நிலையில் இறைவன் அடியவர்க்கு அருளும் திறனுடையது சிதம்பர ரகஸ்யத் தானம்.**[274] சகல தத்துவங்களும் கடந்த நிலையில், யோக நிலையில்,.துவாத சாந்த ரூப உன்மனா தீத நிலையே இரகசிய சித்தாந்தம். சர்வ சந்தேக நிவர்த்தமாய், நிச்சய ஞான உருவாகிய, சிந்தாந்த ஞானமே, ஸ்ரீ சிதம்பர ரகஸ்ய நிலா முற்றமான ஞான வெளியில் விளங்கும் சிவபோக ரஜ தகர வித்தையான யோக நெறியாகும். இரகசிய வழிபாட்டின் போது ஆதிபரமாச்சார்யரான ஸ்ரீமத் நடராஜப் பேரறிவுத் திறம், தட்சிணா பிமுக பரமாச்சார்ய நிலையில் இருந்து, எல்லாம் அறிவித்து எல்லாம் பயக்கும் சிறப்புடைத்தாகும் என்ற கருத்தை பௌஷ்கர பாஷ்யகாரர் விளக்கிச் செல்கிறார். அருவமான ஸ்ரீ ரகசியம் என்பது நமது ஆத்ம சோதி.[275] ஸ்ரீ ரகஸ்ய அமைப்பில் தெற்கு நோக்கியுள்ள நடுச்சுவர் மகா மாயை. திரோதன சக்தியானது மேற்கில் சுவராக சுத்தமானதாகப் பிரகாசிக்கிறது. கிழக்கில் மாயையானது சுவராக உயர்ந்ததாக இருக்கின்றது. திரோதன சக்தியானது திரையாக இருக்கிறது.[276] சிதம்பர சக்கரத்தில் எட்டு கட்டங்கள், நடுவில் பிந்து, அதன் நடுவில் சபாபதியின் உருவம், அதனைச் சுற்றி தாரக மந்திரங்கள் முதலியன இடம்பெறும். இச்சிதம்பர சக்கரம் வேண்டுவார்க்கு வேண்டுவதைக் கொடுக்கக் கூடியது. அறியாமையாகிய திரையை நீக்கி, உலக உயிர்களனைத்தையும் மோட்சமடையச் செய்யும் சக்தியுள்ளது, தில்லையில் நடம் புரியும் கூத்தப் பெருமானாகிய சாம்ப சதாசிவனின் கூத்து சிதம்பர ரகசியம். சக்கரத்தின் நடுவில் உள்ள தாமரையில் நடுவில் உள்ள திரிகோணம் லயத்தின் மூலாதாரமாகும். இதனைப் பார்த்த அளவில் கைவல்யப் பேறு கிடைக்கும்.

மறைப்பு

இரகசியம் என்றால் அதற்கு ஒரு மறைப்பு தேவை. திருவாசிக்குள் வில்வ மாலைகள், அவற்றின் மேல் உட்புறம் சிகப்பு நிறமும், வெளிப்புறம் கறுப்பு நிறமும் அமைந்த ஆறு மீட்டர் பட்டினாலான திரை போடப் பட்டுள்ளது. கறுப்பு நிறம் அவித்தையையும் சிகப்பு நிறம் வித்தையையும் குறிப்பதாகும். இது அவித்தையே வித்தையாகவும், மாயையே சிற்சக்தியாகவும் ஆகும் தன்மையை உணர்த்துகிறது.[277]

இரகசிய பீடம்

சிதம்பர ரகஸ்யம் இருக்கும் பீடம் ஒன்றரை முதல் இரண்டடி அகலமிருக்கும். இப் பீடத்திற்குச் சதாசிவ பீடம் என்று பெயர். பிரணவ பீடம் என்பாரும் உண்டு. ஸ்ரீ ரகஸ்யம் முதல் நடராசர் இருக்கும் மகேஸ்வர பீடம் வரையுள்ள திருச் சுற்றை பிரணவ பிரகாரம் என்பதும் உண்டு. சிதம்பர ரகஸ்யத்தில் பொறிக்கப்பட்டுள்ள சக்கரத்துக்கு ஆனி, மார்கழி தரிசனத்தன்று புனுகுச் சட்டம் பூசப் பெற்று ஆறு மீட்டர் பட்டினாலாய புதுத் திரைச் சீலை மாற்றப்படும்.[278] தடவை ஒன்றுக்குப் பதினைந்து சேருக்குக் குறையாமல் புனுகுச் சட்டம் சாத்தப்படும்.[279] இவண் புனுகு, சவ்வாது,

274. செந்தில் நாதய்யர் - ப:62-75
275. அஃதே.
276. அஃதே.
277. நஜன் ப:14
278. சேது தீட்சிதர், சோம, நடராஜர் கோவில் சரித்திரம், ப:62
279. சோம. லெ., (பதிப்) கோயில், ப:225

சாம்பிராணித் தைலம் முதலியன அபிடேகம் செய்யப்படுகின்றன என்பாரும் உண்டு. பொதுவாகச் சுதையாலான தெய்வ உருவங்கட்கு, புனுகுச் சட்டம் சார்த்துதல் மரபு. பண்டைக் காலத்தில் செப்புச் சிலைகள் வார்க்கப்படுவதற்கு முன் இவண் சுதையாலான நடராசர் சிலை இருந்திருக்கலாம். சிதம்பர ரகஸ்யப் பகுதி மட்டும் ஒரே கருங்கல்லாலானது என்பாரும் உண்டு.

தில்லைத் தானம்

தில்லைத் தானம் எனப்படும், தில்லை சித்சபை இரகசியத் தானம், சிவதாண்டவ வழிபாட்டின் உயர் நுண்மை நிலை ; சைவசமய வழிபாட்டு நுண்மையின் சிறப்பிடம். யோக ஞான மேநிலை.

அறு கோணத்தில் ஆனந்த தாண்டவம்

இரகசியத் தானத்தில் ஸ்ரீ சக்கரம்

அறு கோணங்களுடன் அமைந்த ஸ்ரீ சக்கரம் சிதம்பர இரகசியத் தானத்தில் வரையப்பட்டு மறைந்து காண்கிறது என்பதுண்டு. ஓவிய முறையில் வரைபடமாக ஆனந்த தாண்டவக் கோலத்தை அறு கோணங்கட்குள் அடக்கி வரைந்து காட்டும் முறையும் உண்டு.

சிருஷ்டி லயக் கிரமங்கள்

ஸ்ரீ சக்கரத்துக்குப் பொருள் விளக்கம் கூறும் போது நடுவில் அமைந்துள்ள, பிந்துவைவைத்து, பிந்துவிலிருந்து வெளி நோக்கிய வகையில், ஆனந்தமயம், சர்வ சித்தப் பிரதம், சர்வரக்ஷாகரம், சர்வ சௌபாக்ய தாயம், சர்வ சம்ஷோபனம், சர்வ பரிபூரணம், திரிலோக்ய மோகனம் முதலிய சக்கரங்கள் வழி, பூசனை செய்து வழிபடுவதைச் சிருஷ்டிக் கிரமம் என்றும், திரிலோக்ய மோகனம் முதல் ஆனந்தமயம் வரை, உள்நோக்கி பூசனை செய்து வழிபடுவதை லயக் கிரமம் என்றும் நூலோர் நுவல்வர்.

ஆனந்த மயம்

ஆனந்த தாண்டவம் சிருஷ்டியலயம் ஆய இரு கிரமங்களையும் இயைத்துக்காட்டுவது. இது ஸ்ரீசக்கரத்தில் பூர்ண கிரி பீடம் எனும் கீழ் நோக்கிய முக்கோணப் பகுதியில் ஆனந்த மயம் என்னும் உள் சக்கரத்தில் தொடங்குகிறது.

வளர்நிலை

இவண் ஸ்ரீ சக்கர விளக்கத்தின் போதும், குண்டலினி யோக ஆறாதார விளக்கங்களையும், பஞ்சபூதத் தத்துவங்களையும் இணைத்து தந்திர நூல்கள் போற்றுகின்றன. ஆழ்ந்து நோக்குகையில் தந்திர வழி ஸ்ரீ சக்ர வழிபாடு, குண்டலினி யோகம், உப நிடதங்கள் கூறும் தகர வித்தை, ஆனந்த நடராசத் தத்துவம் சித் சபை வழிபாடு முதலிய இவையாவும் சமய நெறியில் வளர்ச்சி காட்டும் ஒரே பொதுநிலையன என்பது புலனாகின்றது.

ஆனந்த நிலை


பிந்து என்னும் மையப் பகுதி அமைந்த சக்கரம் ஸ்ரீ சக்கரத்தில் ஆனந்த மயம் என்றே அழைக்கப்படும் என்பதும் கருதத் தக்கது. ஆனந்தமே, இறை மயம், லயமயம், சிருஷ்டி மயம், தாண்டவ மயம் என்பதும் கருதிப் போற்ற வேண்டியது.

முத்தொழில்கள், ஆறாதாரங்கள் முதலியவற்றை லய சிருஷ்டிக் கிரமங்களில் ஸ்ரீ சக்ர உறுப்புக்களாகக் காட்டும் வரைப்படம் ஒன்று வரையப்பட்டு இக்கட்டுரையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கர உறுப்புகள் யோக-ஐந்தொழில் வைபவங்கள் (பட்டி எண். 21)

குண்டலினி யோகம் சக்கரங்கள் சிருஷ்டி லயக்கிரமம்	சகஸ்ராரம்	விசுவம்	மூலா தாரம்	சுவா திட்டானம்	மணிபூரகம்	அநாகதம்	விசுத்தி	உள்நாக்கு	ஆக்ஞை
கூடங்கள்	வாக்பவ கூடம் – சோம குண்டலினி (புருவ மத்தி)			காமராஜ கூடம் – சூரிய குண்டலினி (இருதயம்)			சக்தி கூடம் – அக்னி குண்டலினி (மூலாதாரம்)		
கருத்தாக்கள்	பிரம்மா			விஷ்ணு			சிவன்		
முத்தொழில் வைபவம்	சிருஷ்டி			ஸ்திதி			சங்காரம்		
ஸ்ரீ சக்கரங்கள்	திரை லோக்ய மோகனம் (மூன்று மஞ்சள் அல்லது வெள்ளை இதழ்கள்)	சர்வாச பரிபூரகம் (பதினாறு நீல இதழ்கள்)	சர்வ சங்க க்ஷோ பணம்	சர்வசௌ பாக்ய தாயகம் பதினான்கு நீல முக் கோணங்கள்	சர்வார்த்த சாதகம் பத்து சிகப்பு முக் கோணங்கள்	சர்வ ரக்ஷாகரம் பத்து சிகப்பு முக் கோணங்கள்	சர்வரோக கரம் பத்து நீல முக் கோணங்கள்	சர்வ சித்தி பிரதம் வெள்ளை தலைகீழ் முக்கோணம் உதயனம் சாமதபம் பூர்ண கிரிபீடம்	ஆனந்த மயம் சிகப்பு பிந்து.

படம் எண் 30



[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ சக்கரத்தில்


ஆனந்த நடராசரின் பிந்து ஸ்தான நடனம்.
(மைசூர் ஸ்ரீரெங்கசுரு ஓவியம்)

படம் எண் 31



ஆனந்தமார்க்கிகள் பயன்படுத்தும்
பரதாண்டவேஸ்வர ஓவியம்


படம் எண் 32.



ஸ்ரீ சக்கர உறுப்புகள் யோக-ஐந்தொழில் வைபவங்கள் (பட்டி எண். 21)

குண்டலினி யோகம் சக்கரங்கள் சிருஷ்டி லயக்கிரமம்	சகஸ்ராரம்	விசுவம்	மூலா தாரம்	சுவா திட்டானம்	மணிபூரகம்	அநாகதம்	விசுத்தி	உள்நாக்கு	ஆக்ஞை
கூடங்கள்	வாக்பவ கூடம் – சோம குண்டலினி (புருவ மத்தி)			காமராஜ கூடம் – சூரிய குண்டலினி (இருதயம்)			சக்தி கூடம் – அக்னி குண்டலினி (மூலாதாரம்)		
கருத்தாக்கள்	பிரம்மா			விஷ்ணு			சிவன்		
முத்தொழில் வைபவம்	சிருஷ்டி			ஸ்திதி			சங்காரம்		
ஸ்ரீ சக்கரங்கள்	திரைலோக்ய மோகனம் (மூன்று மஞ்சள் அல்லது வெள்ளை இதழ்கள்)	சர்வாச பரிபூரகம் (பதினாறு நீல இதழ்கள்)	சர்வ சங்க க்ஷோபனம்	சர்வசௌபாக்ய தாயகம் பதினான்கு நீல முக் கோணங்கள்	சர்வார்த்த சாதகம் பத்து சிகப்பு முக் கோணங்கள்	சர்வ ரக்ஷாகரம் பத்து சிகப்பு முக் கோணங்கள்	சர்வரோக கரம் பத்து நீல முக் கோணங்கள்	சர்வ சித்தி பிரதம் வெள்ளை தலைகீழ் முக்கோணம் உதயனம் சாமதபம் பூர்ண கிரிபீடம்	ஆனந்த மயம் சிகப்பு பிந்து.

படம் எண் 30



ஸ்ரீ சக்கரத்தில்


ஆனந்த நடராசரின் பிந்து ஸ்தான நடனம்.
(மைசூர் ஸ்ரீரெங்கநகுரு ஓவியம்)


படம் எண் 31



ஆனந்தமார்க்கிகள் பயன்படுத்தும்
பரதாண்டவேஸ்வர ஓவியம்

படம் எண் 32.







ஆக்ஞா ஸ்தானத்தில் ஒளி நடனம்

ஒலி நடனமாதல்

படம் எண் 33



படம் எண் 34



(Courtesy—Ananda Vikatan)

The Tiru-Chitrambalam and Sivaganga.

4.00 நூற்றாண்டுகளில் சிவதாண்டவச் செய்தி வளர்ச்சி

(சிந்துவெளிக் காலம் முதல் கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை)

.01 கால நிர்ணய ஐயங்கள்

இந்து சமயம், சைவ சமயம், சிவ வழிபாடு முதலியன உலக வரலாற்றில் காலத்தால் மிக முந்தியன. நமது மறை நூல்கள் எழுதாக் கிளவியாக, கர்ணபரம்பரையாக, வளர்ந்த, கால எல்லை மிக மிக நெடிது. சமய தத்துவ வளர்ச்சி என்பது பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில், பல்வேறு நிலைகளில் தொடர்ந்துள்ளது. சிந்துவெளிக் காலம்,வேத காலம், புராண காலம், உபநிடத காலம், சைவ சமய மறுமலர்ச்சிக் காலம், என்பனயாவும் உத்தேச கால நிர்ணயங்கள் தாம். இவை ஒன்றற்கொன்று நிறைந்த கால இடைவெளியுடையவை. நமது சமய இலக்கியங்களை ஆய்கையில், வளர்ந்துள்ள பல்வகை கருத்துகட்கு, மூலங்கள் வேதம் போன்ற முற்கால மறை நூல்களில் அமைகின்றன. எது முன், எது பின் என்ற முடிவுக்கு வர இயலாத கால முதுமை, நமது சமய தத்துவத்தில் உள்ளது. எனினும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில், வளர்ச்சியை நோக்க, ஒவ்வொரு நூற்றாண்டிலும் கிடைக்கும், சிவதாண்டவத் திருவுருவ, தத்துவ வளர்ச்சிச் செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

.02 கி.மு. பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன் (சிந்து வெளிக் காலம்)

கால எல்லை

சிந்துவெளி நாகரிகத்தின் மேல் எல்லை, கி.மு. இருபத்தேழாம் நூற்றாண்டு. கீழ் எல்லை கி.மு. பதினெட்டாம் நூற்றாண்டு.[1] சிந்து வெளி நாகரிகம் திராவிட நாகரிகத்தின் முன்னோடியாகலாம். அவண் நடராச வழிபாட்டுக்குரிய சான்றுகள் ஏதும் உண்டா என்பதை ஆய்வோம்.

சிந்து வெளியில் நடன வழிபாடு

சிந்து வெளி அகழ்வாய்வில் கிடைத்த உருவப் பொருட்களில் ஒப்பனை அமைந்த நடனக் கோல, உருவங்கள் போன்றவை கிடைத்துள்ளமை கண்கூடு. அவை தெய்வ நடனக் கோலமாகவும் இருக்கலாம். வழிபாட்டு நடனக் கோலமாகவும் இருக்கலாம்.[2] அகழ்வில் கண்டெடுத்த 430 எண்ணுள்ள முத்திரையில், தெய்வத்தின் முன், விலங்கொன்றும், ஏழு நடன மாதர் அணிவகுப்பொன்றும் நிற்பதொத்துள்ளது. வழிபடும் உருவமும் நடனக் கோலத்திலேயே உள்ளது. இவை சிந்துவெளிக் காலத்தில் நடன வழிபாட்டு முறை இருந்துள்ளமைக்குச் சான்றாகும்.

யோக அமைப்பு

யோக அமைப்பில் அமைந்த உருவங்களைக் கொண்ட முத்திரைகள் அவண் கிடைத்துள்ளன. 235, 420 எண்களையுடைய உருவங்கள் அத்தகையவை. 420 எண்ணுள்ள முத்திரையினை பசுபதி என்றும், ஆலமர் செல்வன் திருவுருவின் முன்னோடி என்றும் கருதும் சிந்தனை உளது. சமய உயர்சிந்தனைகட்கு வழிவகுப்பதாய யோக நெறியும், யோக நெறிப்பட்ட தெய்வ

---

1. மக்கே. இ.ஜே.எ., மொகஞ்சதரோவில் தொடர்ந்த அகழ்வாய்வு. புது டில்லி 1937, ப:122.23
2. அஃதே.

வழிபாடும் சிந்து வெளிக்காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

சிவனின் உறுப்புக்கள், அணிகள்

522 எண்ணுள்ள முத்திரையில் மரத் தமர்ந்த தெய்வத்தை நோக்கி, புலியொன்று திரும்பி நிற்கும் காட்சி உள்ளது. திரிசூலம், யானை, இடபம், புலி முதலிய சின்னங்களும் பல்வேறு முத்திரைகளில் இடம் பெற்றுள்ளன. இச்சின்னங்களின் வழி சிந்துவெளிக் காலத்தில் சிவ வேடத்துக்கான உறுப்புக்கள் ஓரோவழி அங்குமிங்கும் இடம் பெற்றுள்ளன எனக் கருதலாம். பொதுவாக வேத காலத்தில் ருத்திரனாக வீரப் புகழ் எய்திய சிவன், அதற்கு முந்தைய காலமாகிய சிந்துவெளி நாகரிகத்தில் யோகியாகவும், பசுபதியாக வும், கொம்பு முளைத்த தெய்வ மாகவும், நடன வழி பாட்டுக்குரிய நாயகனாகவும் திகழ்கிறார் என்பது மேற்கண்ட செய்திகளால் புலனாகிறது.

.03 வேத காலம் (கி.மு. 700 க்கு முன்)

வேத காலத்தின் எல்லை

வேதங்கள் இந்து சமயத்தின் உயிர் நாடியான நற்கருத்துக்கள் பலவற்றுக்கும் மூலமாக அமைந்துள்ளன. சிவதாண்டவத் தத்துவத்துக் கான கருத்துக்கள் வேதத்துள் இருப்பவற்றைத் தொகுத்துக் காண முயல்வோம். வேத காலத்தின் மேல் எல்லை என்பது கி.மு.2500. வேத காலத் தின் கீழ் எல்லை கி.மு.700.[3] இரிக்வேதத்தில் சிவன், உருத்திரன் என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றார். இவர் இரிக் வேதத்தில் பிரபஞ்சத்தின் இயக்க, தோற்றக் காரணத் தந்தை என்னுமளவிற்குக் குறிப்பிடப்படுவதை திரு. ஜி.எஸ். குரியா அவர்களும், பிற ஆசிரியர்களும் விளக்கி யுள்ளனர்.[3அ] வீரர், யோகி போன்ற பல கோணங்களில் ரிக்வேத ருத்திரன் தோற்றுகிறார். பால, சர்வ, பசுபதி, உக்கிர, ருத்திர, ஈசான, மகாதேவ என்ற வகைகளாய் பல பெயர்களில் சிவருத்திரன் இரிக் வேதத்தில் போற்றப்படுகிறார். அட்டவீரட் டம், அட்ட மூர்த்தம் போன்றவற்றிற்கான அடிப்படைகளும் வேதத்தில் உள. ருத்திரனின் மக்கள் எனப்படும் மருத்துக்களைப் பற்றிய வேதப் பாடல்களில் பிறையணி, மான், உரி, பாம்பு, விஸ்வதேவத்துவம் முதலியன குறிப்பிடப்ப டுகின்றன.சிவபெருமானின், கற்றைச் சடை(கபர்தா) நீலகண்டம் முதலியன வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.[4] வேத காலத்திய உருத்திரனும் முழுமுதற் கடவுளான சிவனாரும் ஒருவரே என இணைக்கப்பட்டனர் .

நிருத்தி என்ற தெய்வம்

இரிக் வேத ஏழாம் சாகை 57.5 ஆம் பாடலில் மருத்துக்கள், நிருத்தி என்னும் தெய்வத்திடமிருந்து பக்தனைக் காக்கும் திறம் உடையவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.[4அ] ' நிருத்தி ' என்ற இச்சொல் ஒரு பெண் தெய் வத்தைக் குறிப்பது என்ற கருத்து உள்ளது.[5] இத்தெய்வம் மரணத்திலும் துன்பத்திலும் மனிதனைக் காக்கும் சிறப்புடையது என மானியர் வில்லி யம்ஸ் அகராதி கூறுகின்றது.

கைலை இமய முதன்மை

சிவபெருமானின் இருப்பிடம் இமயத்துக்கைலை. அன்னை உமை, இம வான் புதல்வி. கங்கையின் மூலத் தோற்றத் திருவிடம் இமயத்து கங்கோத்திரி.

---

3. குர்யே. ஜி.எஸ்., 'வேத இந்தியா', பம்பாய் 1979. ப:1
3. அ. அஃதே. அத்தியாயம் 6
4. அஃதே. ப.131,132,134,118
4. அ. அஃதே. ப.143,120,121
5. அஃதே. மானியர் வில்லியம் அகராதி

கேதாரம் அமர்நாத் முதலிய திருத்தலங்கள் இமாலயப் பகுதியில் உள. இறைவனின் திரிசூலத்தின் பெயர் உள்ள திரிசூல் எனும் மலைப் பகுதியும் அவண் உள்ளது.

நடன வழிபாடு

வேத காலச் சடங்குகளில் மகளிர் நீர்க்குட மேந்தி வட்டமிட்டு ஆடிய நடன நிகழ்ச்சிகளை டாக்டர் கேட்கர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[6] இந்திரனை வேத இருடிகள் வீரக் கடவுளாகவும் நடனமிடுபவ ராகவும் குறிப்பிடுகின்றனர். 1887 இல், வாலிஸ் என்ற அறிஞர் எழுதிய 'இரிக் வேத காலப் பிரபஞ்ச இயல்' என்னும் கட்டுரையில் 'கடவுளர்கள் நடனமாடும் போது பூமி உருவாவதற்கான அணுக்களை உதைத் தெறிந்ததாகக் குறிப்பி டப்படுகின்றது.[7]

மருத்துக்கள் நடமிடுபவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அஸ்வின்கள் எனப்படும் இரட்டைத் தெய்வ அம்சத்தினரும் விண் வெளியில் நடமிடுவதாகக் கூறப்படுகின்றது.[8] காலைக் கடவுளான உஷை, நடமிட்டுக் கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.[9] ஈமச் சடங்குக் குரிய வேதப் பாடலில் அந்திமச் சடங்கின்போது உறவினர்கள் ஆடிய நிகழ்ச்சிகள் குறிப்பிடப்படுகின்றன.[7] இரிக் வேதத்தில் 'அகாம நிருத்தயே உற்சாய திராசீய ஆயு பிரதரம் ததானா' என்ற சூத்திரத்தில், நிருத்தம், லாஸ்யம் என்பன பற்றிக் குறுப்பிடப்படுகின்றது. வேதக் கடவுளர்களாகிய இந்திரன் போன் றோர், நிருத்த கீதம் செய்த குறிப்புகள் உள.[10]

இது காறும் கண்டவற்றால், வேத காலத்தில் நடராசத் தத்துவத்தின் நுண்மையான பிரபஞ்ச இயக்கக் காரணமாக உருத்திரன் குறிப்பிடப்படுவதும், பிற நடன அடிப்படைகளும், வேதமந்திரங்களில் இடம் பெற் றுள்ளன என்பதை அறிந்தோம். நடனமிடும் தெய்வக் கோலங்கள் வேதத்தில் இடம் பெற்றுள்ளன. வேதப் பாடல்களில் நடன வழிபாட்டு முறைக்கான சான்றுகள் அமைகின்றன. சிவபெருமானின் சடைமுடி, நீலகண்டம் போன்றன அங்க நிலைகள் போன்றன வேத மந்திரங்களில் இடம் பெற்றுள்ளன. நிருத்தி என்ற சொல் வேதத்தில் நடமிடும் பெண் கடவுளைக் குறிப்பிடுவதாகச் சிந்திக்க இடம் உள்ளது. பொதுவில் நடராசத் தத்துவ வளர்ச்சிக்கான அடிப்படைகள் வேதத்தில் இடம் பெற்றுள்ளன என்பது தெளிவு.

.04 உபநிடதக் காலம் (கி.மு. முதலாம்-மூன்றாம் நூற்றாண்டுகள்)

தத்துவ வளர்ச்சியில் உபநிடதங்கள்

இந்தியத் தத்துவ வளர்ச்சி வரலாற்றில் உபநிடதங்களின் காலம் இந்தியத் தத்துவ எழுச்சிக் காலம் எனலாம். அலைந்து திரிந்து இயற்கையை ரசித்து அதன் ஆடல்களில் மூலவனைக் கண்ட நிலை வேத காலத்தது. அதற்கு மேல் பிரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, காரணம், முடிவு, கருத்தா என்ற பிரபஞ்ச இயல் சிந்தனை உபநிடதங்களில் முகிழ்க்கின்றது. பிரம்ம தத்துவம் என்பது இந்தியத் தத்துவத்தின் திறவுகோல் போன்றது. இது உப நிடத காலச் சிந்தனை.

உபநிடத காலம்

சாந்தோக்ய, பிரகதாரண்யக, தைத்ரேய, ஆத்ரேய, கௌசிக, கேன, ஈச, மாண்டுக்ய உபநிடதங்கள் கி.மு. எட்டாம் ஏழாம் நூற்றாண்டையன என்பர்.

6. அஃதே, ப:254
7. அஃதே, ப:255
8. அஃதே, ப:255
9. அஃதே, ப:255-56
10. அஃதே, ப:256, இரிக் வேதம், முதல் பாகம்.

இவை புத்தர் காலத்துக்கு முந்தியவை.[11] காலக் கணிப்பில் கருத்து வேற்றுமைகள் இருப்பினும் முதற்கால உபநிடதங்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடையே மலர்ந்தன என்பது ஏற்றுக் கொள்ளத் தக்க கால எல்லையாகும்.[12]

ஸ்வேதாஸ்வதர உபநிடதமும் சைவமும்

ஸ்வேதாஸ்வதர உபநிடதம், வேதாந்தம், யோக சாங்கியம் முதலிய தத்துவங்களின் இணைப்பைக் காட்டுவதாகும்.[13] ஸ்வேதாஸ்வதர உபநிடதத்தில், ஐந்தாம் அத்தியாயம் முழுவதும் இறைவன் உயிர், பரமாத்மா ஜீவாத்மா, மாயா காரியம் முதலியவற்றின் செயலைப் பேசுகின்றது.[14]

மேலும் ஸ்வேதாஸ்வதர உபநிடத்தில் ஆறாம் அத்தியாயத்தில், பிரம்மத்தின் நிர்குணத்தன்மை போற்றப்படுகின்றது.[15] ஸ்வேதாஸ்வதர உபநிடதத்தில், மாயை, இறைவனை, உயிருக்கு, மறைத்துக் காட்டும் தன்மையும், இறைவனின் இரண்டற்ற ஒருமைத் தன்மையும் அதே பகுதியில் விளக்கப்படுகின்றன.[16] மேலும் பொதுவாக மாயை என்பது பிரபஞ்ச இயல் பிரம்மை என்ற கருத்து முதன் முதல் இவ்வுபநிடதத்தில் தான் வருகின்றது என்பர்.[17] அனாதியான பிருகிருதியின் முக்குணங்களாய இரஜோ, சத்வ, தாமச குணங்களை, சிகப்பு, வெள்ளை, கறுப்பு நிறத்தன என்று குறிப்பிட்டு அவை பிருகிருதி, புருடன், மாயை என்ற முப்பொருள்களைக் குறிப்பன என்ற கருத்துக்களும் இவண் வருகின்றன.[18] ஸ்வேதேசுவதர உபநிடதத்தின் முன்னுரையில் சங்கரர், பிரம்மஞானம் அமரத் தன்மை அளிக்க வல்லது என்பதற்கு சுருதி, ஸ்மிருதிகளிடமிருந்து பல மேற்கோள்களைக் காட்டுகின்றார்.[19] வைணவம் கீதையை அடிப்படையாகக் கொண்டது என்பது போல் சைவம், ஸ்வேதாசுவதர உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது அறிஞர் கருத்து.[20]

உபநிடதக் கருத்துக்களும் சிவதாண்டவமும்

பொதுவாக, சைவ சித்தாந்தத்தின் மூலங்களாக வேத ருத்திரக் கருத்து, பிராமணங்கள் குறிப்பிடும் ருத்திரசிவச் சிந்தனை முதலியன மாபாரதம், ஸ்வேதாஸ்வதர உபநிடதம், சைவ ஆகமங்கள் முதலியன பற்றி அமைகின்றன என்பது பொதுக் கருத்து.[21] வேதத்தில் சதுர்துரியம் சைவச்சிறப்புக்கு ஆதாரம் என்பர். உபநிடதங்களில் சுவேதாஸ்வதர் உபநிடதம் அத்தகையது. அதில் சிவ தாண்டவத் தத்துவத்தின் அடிப்படைக் கருத்துக்களாய மாயை, பிரம்மம், சிவ சீவ ஐக்கியம், பிரபஞ்ச இயல் முதலியன இடம் பெற்றுள்ளன. எனவே, **சிவதாண்டவத் திருவுரு உபநிடதக் கருத்துக்கட்கு அமைக்கப்பட்ட வழிபாட்டுத் திருவுரு எனில் மிகையாகாது.**

.05 பதஞ்சலி முனிவரின் காலம் - கி.மு. 150

தில்லை ஆனந்த தாண்டவ தரிசனத்தின், சிறப்புப் பக்தர், பதஞ்சலி முனிவர். பதஞ்சலி முனிவர் மகாபாடியம் இயற்றியது கி.மு. நூற்றைம்பதாம் ஆண்டுக்கு முன்னதாக இருக்கலாம் என்பது அறிஞர் கெய்த் அவர்களின்

11. ருத் ரெய்னா, இந்தியத் தத்துவம், பம்பாய்,1971, ப:39
12. ராதாகிருஷ்ணன். எஸ். உபநிடதங்களின் கொள்கைகள், ப:39
13. ருத் ரெய்னா, இந்தியத் தத்துவம், ப:39
14. அஃதே, ப:44
15. அஃதே, ப:52
16. அஃதே, ப:55
17. அஃதே, ப:61
18. அஃதே, ப:141,142
19. அஃதே, ப:196
20. அஃதே, ப:227
21. அஃதே, ப:231

கருத்து.[22] பதஞ்சலியாரின் வியாகர்ணம் இயற்றப்பட்ட காலம் கி.மு. நூற்றைம்பதுக்கு முன்னதாகலாம் என்பது அறிஞர் குர்யே அவர்களின் கருத்து. சிதம்பர தரிசனம் கண்ட பதஞ்சலி வியாகர்ண கர்த்தா அன்று என டாக்டர் சிவராம மூர்த்தி அவர்கள் கருதுகின்றார்கள்.[23]

மகாபாஷ்யம், யோகசூத்திரம், வியாகர்ணம் முதலிய மூன்றும், வெவ்வேறு பதஞ்சலி முனிவர்களால் ஆனவை என்ற கருத்தும் உள்ளது.[24] தில்லை தரிசனம் கண்ட பதஞ்சலி முனிவர் இந்த மூவருள் ஒருவர் எனக் கொள்வது தகும். எனவே இவரின் காலம் கி.மு. நூற்றைம்பதுக்கு முன் எனக் கொள்வது சால்பு.

.06 வியாக்ரபாதர் காலம் - கி. மு. 150

சிதம்பர தரிசனம் பெற்ற முனிவருள் வியாக்ரபாதரும் ஒருவர். கண்வ முனிவரின் வம்சத்தில் வந்த கன்னிபுத்திரரின் மாணவரான வியாக்ர பாதர் என்பவரின், மகள் வழி மகனான, வியாக்ரபதி புத்திரர் என்பவர் பற்றி பிரகதாரண்ய உபநிடதத்திலும், சதபாத பிராமணத்திலும், சாந்தோக்ய உப நிடதத்திலும் வருகின்றது. அவரே தில்லை தரிசனம் கண்ட வியாக்ரபாதர் ஆகலாம். இவ்வியாக்ர பாதரின் காலம் மேற்கண்ட உபநிடதங்களின் காலம் ஆகலாம். பதஞ்சலி யோக சூத்திரத்தின் காலம் கி.மு.150க்குமுன் என்பர்.[25] வியாக்ரபாதர் வசிஷ்டரின் சகோதரியை, மணந்தார். வியாக்ரபாதரின் மகன் உபமன்னியு பால் வேண்டி அழ, பரமன் பசுவிற்கு மேல், பாற்கடலையே வழங்கிய பெருமை உண்டு. இச்செய்தி சிதம்பர வரலாற்றில் வருகின்றது.[26]

இதே செய்தி ஏழாம் நூற்றண்டுக்கு முந்தைய சம்பா கல்வெட்டு ஒன்றிலும் மகாபாரதத்திலும் சில புராணங்களிலும் குறிப்பிடப்படுகின்றது.[27] பிற்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் எடுத்தாளப் படும் இச் செய்தி காலத்தால் முந்தியதாக இருக்கலாம். பதஞ்சலி முனிவரும், வியாக்ரபாதரும் சம காலத்தவர் என்பதற்குச் சான்றுகள் உள. அவர்கள் வாழ்ந்த கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே நடராச வழிபாடு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது.

.07 கி.பி. முதலாம் நூற்றாண்டு

கிடைக்கும் சின்னங்கள்

சிவதாண்டவ உருவங்களைப் பற்றிய ஆய்வினைத் தொடங்கக் கிடைக்கும் முதல் நடனக் கோலச் சிவ உருவம் அமைந்த சின்னங்கள் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. மாபாரதநூலை முதலாம் டையது என்று கொண்டால் மகாபாரத்தில் உள்ள சிவ சகஸ்ரநாமத்தில் சிவன் 'நர்த்தன சீலாய' என்று அழைக்கப்படுவதும் கருதத்தக்கது.

முதலாம் நூற்றண்டையது எனக் கருதப்படும் இந்தோ கிரேக்க, மாயோ நாணயம் ஒன்றில் கட்வாங்கத்துடன், முயலகன் மேல் நடமிடும் பிரளயாலித சிவன் அமைந்துள்ளார். இது முயலகனின் முதல் தோற்றம். கிடைப்பவற்றுள் முதல் சிவ நடனக் கோலம்.[28] கடி, கட்வாங்கம், திரிசூல சகிதம் லலித வீர

22. கெய்த் பெர்ரிடேல், ஏ., சமஸ்கிருத இலக்கிய வரலாறு, டெல்லி 1920,1973. ப:45
23. சிவராம, ப:79
24. கெய்த்., ப:490
25. அஃதே, ப.45
26. சிவராம, ப:79
27. அஃதே, ப:79
28. அஃதே, ப:169

நடன சிவன் அமைந்த தட்சசீல செப்பு முத்திரை ஒன்றுள்ளது. அதில் பிராமி கரோட்டி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது கிரேக்க இயைபு நிலை.[29]

.08 கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

தமிழ் இலக்கியத்தில் சிவ தாண்டவம்

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தில் தான். முதலில், சிவதாண்டவங்கள் பற்றிய குறிப்பு வருகின்றது. சிலப்பதிகாரத்தில், திருவைந் தெழுத்து பற்றியும், சேரன் செங்குட்டுவன் அவையில் கூத்தச் சாக்கையன் கொடு கொட்டி ஆடியதும் கூறப்படுகின்றது. வெள்ளியம்பலம் மதுரையில் இருந்த செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. மணிமேகலையில் அட்ட மூர்த்தம் சைவர் கொள்கை என்ற கருத்து குறிப்பிடப் படுகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், தில்லையில், பொன்னம்பலத்தில், சித்சபையில், ஓவியமோ, சுதையோ இருந்திருக்கலாம். அக்காலத்தில் தில்லைக் கோவில் சிலப்பதிகாரக் காலக் கோவில் போன்று இருந்திருக்கலாம். சித்சபையின் மரக் கூரை வடிவம், சிலப்பதிகாரக் காலத்த தாகலாம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும், சிவதாண்டவங்கள், அட்டமூர்த்தம், திருவைந்தெழுத்து முதலியன, மக்கள் அறிவில், நாட்டுச் சமய வாழ்வில் விளக்கம் பெற்றிருந்த செய்திகளையும், நடன வழிபாட்டு நிலையையும், படம்பிடித்துக் காட்டுகின்றன. இவை தமிழகத்துச் செய்திகள் என்பது ஒரு சிறப்பு. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கோவில்கள் இருந்துள என்பதையும் இந்நூல்கள் புகல்கின்றன. சிவதாண்டவ வழிபாட்டின் தொன்மைக்கு இவை துணை நிற்கின்றன.

முயலகன் மேல் சிவநடம்

சித்தூர் குடிமல்லம் சாதவாகன உஷ்நிச அக்னி ருத்ர எஜமானர், முயலகன் மேல் நடமிடுகின்றார். இது முயலகன் தென்படும் சிற்பச் சான்றுகளில் முதலானது.[30] கி.பி. இரண்டாவது நூற்றாண்டின், குடிமல்லம் உஷ்நிச அக்னி ருத்ர எசமானர் எனப்படும் ஊர்த்துவ லிங்கம், பிரபஞ்ச இயக்க உற்பத்தி அடையாள நிலை, மாயா நிலை முயலக அம்சம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. உபநிடத வேதச் செய்திகட்கு உருவ வழிபாட்டில் தகுதி அமையும் சான்றுகள் இவை.

.09 கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

எட்டுத் தொகையில் சிவநடம்

நல்லந்துவனார் இயற்றிய கலித்தொகை கடவுள் வாழ்த்துப் பாடலில் திரிபுரம் தீ மடுத்தமை, கொடு கொட்டி, பாண்டரங்கம், காபாலம் முதலிய சிவ தாண்டவங்கள் குறிப்பிடப்படுகின்றன. கலித்தொகையின் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டென்பர்.

நாட்டிய சாத்திரக் காலம்

பரதரின் நாட்டிய சாத்திரக் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டென்பர்.[31] பரத நாட்டியக் கலையின் கருத்தா நடராசர்.

சைவக் கோவில் வளர்ச்சி

கோச்செங்கட் சோழன் என்னும் சோழ மன்னன் செங்கண்ணான் எழுபது கோவில்களைக் கட்டிய காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும்

---

29. அஃதே, ப:169
30. அஃதே, ப:169
31. கெய்த்., ப:427,472,490-91

ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகலாம் என்பர். இது சைவ எழுச்சிக் காலமாகலாம்.[32] கி.பி. மூன்றாம் நூற்றாண்டில், கோச்செங்கண்ணான் வழி, கோயில்கள் பெருகின. கலித்தொகை கொடுகொட்டி, காபாலம், பாண்டரங்கம் என்றெல்லாம் வழங்கப்பட்ட அட்ட வீரட்ட திரிபுராந்தக நடனத்தைக் கூறி கடவுள் வாழ்த்து பாடுகின்றது. பரத சாத்திரக் காலமும் மூன்றாம் நூற்றாண்டெனக் கருதப்படுவ தால், இந்நூற் றாண்டில் புராணவழி அட்ட வீரட்ட நிலைக்கு மேல், பரத வழிச் சிவதாண்டவங்கள் உருவகிக்கப்பட்டிருக்க வழி ஏற்பட்டிருக்கலாம்.

.10 கி.பி. நான்காம் நூற்றாண்டு

பேரரசுகளின் ஆதரவு

பாரதத்தின் வட பகுதியில் குப்தப் பேரரசு வளர்ச்சி பெற்றிருந்த கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் சிவ வழிபாடு, வைதிக நெறி முதலியன வளர்ந்தோங்கின. பிராமணீயம், இந்திய தேசிய உணர்வு முதலியன இக்கா லத்தில் நிலை நாட்டப்பட்டன எனலாம். இது இந்து மறுமலர்ச்சிக் காலம்.[33] இது போன்றே தமிழகத்தில் களப்பிரருக்குப் பின் பல்லவர், சோழர் காலத்தில் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இவண் பிராமணீயம் என்பது ஒரு உயர்ஞானத் தொண்டு மரபு நிலை குறிப்பது.

காப்பியங்களும் புராணங்களும்

காளிதாசரின் காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டென்பர். புராணச் செய்திகள் பல காளிதாசரின் நூல்களில் இடம் பெற்றுள்ளன. இச்செய்திகள் புராணங்களோடு ஒத்துப் போகின்றன. எனவே புராணங்கள் கி.பி. நான் காம் நூற்றாண்டுக்கு முந்தையனவாகலாம் என்பர்.[34] காப்பியங்களிலும், புராணங்களிலும் சிவ தாண்டவச் செய்திகள் மலர்ந்த காலம் இது எனலாம்.

ஆகமங்களும் சிவதாண்டவமும்

யஜுர் வேதத்தமைந்த சதுர்துரியத்தில் பிற்கால சைவ சமயத்தின் கரு அமைந்துள்ளது. சுவேதாஸ்வதர உபநிடதம் சைவ சமயக் கருத்துகட்கு தொடக்க நிலை வகுப்பாகும். இதன் காலம் கிறித்து பிறப்பதற்கு முன் நான்காவது நூற்றாண்டின் முன்னோ, பின்னோ ஆகலாம். ஆகமங்கள், சதுர்துரியத்தில் வரும் ருத்ர-சைவச் செய்திகட்கு முதன்மை தரும் இயல்பின என்பர். ஆகமங்கள் தென்னாட்டுத் தொடர்புடையன. அவை திராவிட மொழிகளிலும் அமைந்திருக்கின்றன.[35] வேத அடிப்படையில் காண்கை யில், சைவ வட்டங்களில், ஆகமங்கள் முதன்மை ஆதாரப் பெருமை உடையன.[36] வேதக் கொள்கைளை ஆகமங்களின் வழிகளைப் பின் பற்றியே நிறைவேற்ற இயலும் என்பர்.[37] ஆகமங்கள் சமய உண்மைகளை, தத்துவங்களைச் செயல் முறையில் நடைமுறைப்படுத்தும் நெறிகளையும், சாதனை நெறிகளையும் கூறும் சமய நூல்களாகும். மகுடாகமம், காரணாகமம் முதலிய ஆகமங்களில் நடராச வழிபாடுபற்றிக் கூறப்படுகின்றது. மிரு கேந்திர ஆகமத்தில், ஐந்தொழில் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.[37அ] மிருகேந்திர ஆகமம் சங்கரர் காலத்துக்குப் பிந்தியது. இதன் காலம் எட்டாம் நூற்றாண்டாகலாம்.[38]

---

32. இராசமாணிக்கனார் ப:59
33. கெய்த்., ப:75
34. ஜான் கொண்டா, இந்திய இலக்கிய வரலாறு ப.164
35. ஜான் கொண்டா, இந்திய இலக்கிய வரலாறு, விஸ்பேடன் 1977, ப:170 ப:178
36. அஃதே, ப:169
37. அஃதே, ப:169
37. அ. அர்சனா விதிப்படலம்
38. அஃதே, ப:164

ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே, போதாயன பிரம்ம சூத்திர காலத்துக்கு முன்பே சைவ ஆகமக் கருத்துக்கள் இருந்திருக்க வேண்டும். காளிதாசரின் நூல்களிலும், சம காலத்திய புராணங்களிலும் கூறப்பட்ட செய்திகள் பல ஆகமங்களில் இடம் பெற்றுள்ளதால், ஆகமங்களின் காலத்தை 4, 5 நூற்றாண்டுகட்குப் பின் தள்ள முடியாதென்பர்.[39] மிகத் தொன்மையான ஆகமங்கள், கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கும், எட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றியிருக்க வேண்டும் என்பர்.

வளர் நிலைகள்

கி.பி. நான்காம் நூற்றாண்டில் குப்தப் பேரரசு ஓங்குகின்றது. இந்து மறுமலர்ச்சி மேலோங்குகிறது. கட்டுமானக் கோவில்கள் வளர்கின்றன. இந்திய தேசியச் சமய நிலை உருவாகின்றது. வேதநெறிகள் ஆகம நெறிகள் இணைந்து வளர்ந்து வழிபாட்டுக் கலை மேம்படுகின்றது. புராணங்கள் தெய்வங்களின் வீரப் பெருமைகளை, கருணை மறங்களை விதந்தோதுகின்றன. காளிதாசர் போன்ற மகாகவிகள் கலைப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றனர். விக்கிரக வழிபாடு ஆகம வழி மேலும் சிறப்புப் பெறுகின்றது. இந்த வளர்ச்சியில் குப்தர் கோவில்களில் பல தெய்வ வடிவங்கள், சிவ தாண்டவ மூர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன.

.11 ஐந்தாம் நூற்றாண்டு

குப்தர் ஆட்சிக் காலத்தில் வளர்நிலை ஐந்தாம் நூற்றாண்டில் அமைகின்றது. இக்காலத்தில் சிவ தாண்டவ மூர்த்தங்கள் கிடைக்கின்றன. ஆகமத் தத்துவ வளர்ச்சி எழுகின்றது.

தொன்மைக் கற்கோவிலில் நடராசர்

இந்தியக் கருங்கல் கட்டுமானக் கோவில்களில் மிகவும் தொன்மையானது உத்திரப் பிரதேச புமாரா சிவன் கோவிலாகும்.[40] புமாரா கோவில் சாளரக்கூடு ஒன்றில் பத்துக் கைகளுடன் ஜடாபாரம், கஜ ஹஸ்தம், குஞ்சித பாதம், ஸ்தித பாதம் முதலியவற்றுடன் சிறிய சிதைந்த நடராசர் உருவம் ஒன்றுள்ளது.[41] பிற்காலத்தில் பாண்டியச் சிற்பங்களில் காணும் சடாபாரத்தினை இந்த ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய புமாரா நடராசரில் காண்கிறோம். இது நமக்குக் காணக் கிடைக்கும் முதல் நடராசர் திருவுரு. இது குஞ்சித பாதம், ஸ்தித பாதம் இரண்டும் அமைந்த தொன்மை நிலை. இது சீயமங்கலம் ஆனந்த தாண்டவ முன்னோடி போன்ற ஒன்று.

குப்தர் கால நான்கு கை நடன சபேசர்கள்

உத்திரப் பிரதேச புமாராவுக்கு அருகிலேயே அமைந்த நச்சன குதாரா ஊரைச்சேர்ந்த குப்தர் கால, உடைந்த நான்கு கை நடராசர் சிலை ஒன்று திருமதி பியூபல் ஜெயகர் அவர்களிடம் உள்ளது. இதில் கஜஹஸ்தம், சடைமுடி முதலியனவும் ஆனந்த தாண்டவம் போன்ற நான்கு கை அமைப்பு முதலியனவும் உள.[42] நச்சன குதாரா சிவன்கோவிலில் குள்ளமான வடிவில் வாமதேவ சிவன், தன் பூத கணங்களுடன், இடக்கை அபயமாகவும், வலக்கை கரிஹஸ்தமாகவும், வலக்காலை உயர்த்தியவாறு சடையுடன் நான்கு கைகளுடன் புஜங்க திராசிதம் போன்ற கரணத்தில் ஆடுகின்றார். இது மதுரை கால்மாறியாடிய நிலை போன்றது என்பர்.[43]

39. அஃதே.ப:164
40. சிவராம. ப:169
41. அஃதே. ப:169
42. அஃதே ப:170
43. அஃதே ப:170-171



ஐந்தாம் நூற்றாண்டைய, சிர்புர், எண்கை, குப்த, லலித,
ஊர்துவ லிங்க நடராசர்

படம் எண் 35



எட்டாம் நூற்றாண்டைய, ஆந்திர பட்டடக்கல்,
ஜம்புலிங்கேசுவரர் கோவில் கோபுர முகப்பில் அமைந்த,
நந்தி அம்மை சகித, ஆறு கை, மேலைச் சாளுக்கிய சதுர தாண்டவர்

படம் எண் 36

மத்தியப் பிரதேச புஜ தாருவன நடராசர்கள்

காளிதாசர் எண்ணிக்கையில் நிறைந்த கைகள் உடைய நிலையைப் புஜதாருவனம் என்பர். மத்தியப் பிரதேசக் கிழக்குப் பகுதியாகிய சிர்பூரில் எண்கை அமைந்த குப்த ஊர்த்துவ லிங்க நடராசர் தமருகம், சூலம், கபாலம், மேல் தூக்கிய பாம்பு, வலக்கை கஜ ஹஸ்தம் முதலியன உடையவராகக் கிடைத்துள்ளார்.[44] மத்தியப் பிரதேச, சாகோர் கோயிலில், வாயில் மேற்புறத் தோரணத்தில் அமைந்த பத்துக் கைகள் உடைய குப்த ஸ்வஸ்திக நடராசர் பூத கணங்கட்கிடையில் நடனம் புரிகின்றார்.[45] நடராசத் திருவுருவில் அமைந்த சடைமுடி, முயலகன், மூன்றாவது கண், முதலியன உத்திரப் பிரதேச குப்தர் கால ஏகலிங்கத்தில் தொடங்கி, தொடர்ந்து பல மூர்த்தங்களில் இடம் பெற்றுள்ளன.[46]

குப்தர் கால சிவமூர்த்தங்களின் இயல்பு ஊர்த்துவ மேரு அம்சமாகும். புவனேஸ்வரம், வைதல்தேவர் கோயில், சிசரேஸ்வரர் கோயில், பரமேஸ்வரர் கோவில், சர்குணேஸ்வரர் கோவில், அசனபட் கோவில் முதலியவற்றிலும் இந்நிலை உண்டு.[47] இது தாருகவன சிவவேட அடிப்படை. கோவனமும் அற்ற திகம்பர நிலை. லிங்கபுராணம் கோயிற் புராணக் குறிப்புகளில் வரும் சிவ சக்தி, யோனி அம்சமாகும்.

மகாராஷ்ட்டிர எலிபெண்டாவில் மாயத்திரையகற்றும் தாண்டவர்

சிவதாண்டவ மூர்த்தங்களில் பிரம்மாண்டமான, நாடகக் காட்சி போன்றமைந்த எலிபெண்டா குகையில் செதுக்கப்பட்டுள்ள வாகாடகர்களின் சிவதாண்டவம் ஐந்து ஆறாம் நூற்றண்டைச் சேர்ந்தது என்பர். லலித நடனம் புரியும் இச்சிற்பம் எட்டுக்கைகள், வலக்கரம் ஒன்று தண்ட ஹஸ்தமாக அமைய, உதர பந்தத்துடன் விஷ்ணு, பிரம்மா முதலிய பரிவாரங்களுடன் திகழ்கின்றது.[48] உபநிடதங்கள் கூறும் மாயா தத்துவ விளக்க நிலை இது. பிற முத்தொழில் கருத்தாக்களுடன் விளங்கும் இப்பெரிய காட்சி சிவ தாண்டவ மூர்த்த வளர் நிலைகளுள் சிறந்த ஒன்று.

தத்துவ வளர்ச்சி

குப்தர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரே இந்தியச் சிந்தனையும் இந்து சமய எழுச்சியும் துளிர்விடத் தொடங்கி மறுமலர்ச்சி எய்துகின்றன. குப்தர் காலத்தில் ஆகமங்கள் உருவாகியதால், சமய வளர்ச்சியில் ஒரு ஒழுங்கமைந்த பின்னணி அமைகின்றது. இவ்வாகமங்களின் வளர்ச்சி காரணமாக, தத்துவ அடிப்படையில் சமய வளர்ச்சி ஏற்படுகின்றது. ஐந்தொழில், சிவநடராச வழிபாடு முதலியன ஆகம வழிப்பட்டன. ஐந்தாம் நூற்றாண்டைய போதாயனரின் பிரம்மசூத்திரத்தில் பிரபஞ்ச இயக்கத்துக்கு இறைவனே காரணம் என்ற கருத்து வருகின்றது. சிவதாண்டவம், பிரபஞ்ச இயக்கத்துக்கு அடிப்படை. குப்தர் சாம்ராஜ்யத்தில் எழுந்த மறுமலர்ச்சி போலவே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஆந்திரம் கர்நாடகம் போன்ற தென்னகத்திலும் இந்து மதப் பிரிவுகள் இணைந்தன என்பர்.

.12 கி.பி. ஆறாம் நூற்றாண்டு

கி.பி. ஆறாம் நூற்றாண்டு ஆகம வளர்ச்சிக் காலம் எனப்படும். வராக

44. அஃதே ப:171-172
45. அஃதே ப:170-171 கேஸ்டன், ப:52
46. சிவராம், ப:169
47. கேஸ்டன்., ப:52
48. ஜான் கொண்டா ப:459

மித்திரர் சம்புவிக்ரகப் பிரதிட்டை பற்றிக் குறிப்பிடுகிறார். [48அ] ஆகமச் சிந்தனை வளர்ந்ததற்கேற்ப இந்நூற்றாண்டில் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம், தமிழகம் முதலிய பகுதிகளில் சிவ தாண்டவச் சிற்பங்கள் கோயில் நிலைகளில் வளர்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

தமிழகத்தில் தில்லைத் திருப்பணி

கி.மு. இரண்டாம் நூற்றாண்டைய பதஞ்சலி வியாக்ரபாதர் காலத்துக் குப்பின் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தில்லைக்கோவில் புதிய திருப்பணிகளைப் பெறுகின்றது. மூன்றாம் சிம்மவர்மனாகிய ஐயடிகள் காட வர்கோன் பாடிய க்ஷேத்திர வெண்பாவில் தில்லைச் சிற்றம்பலத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தில்லை சிறப்புப் பெறும் நிலை இது. கோயிற் புராணம் கூறும் கௌட தேச ஹிரண்ய வர்மன் என்னும், இரண்டாம் சிம்ம வர்மனின் காலம் கி.பி.550-575. இவன், தில்லைக் கோவி லுக்கு அம்பலம் அமைத்து, விழாக்கள் பல ஏற்பாடு செய்துள்ளான். இவன், காலத்தில் சிவகங்கைத் திருக்குளத் திருப்பணியும் நடைபெறுகின்றது. [49]

ஆந்திரத்தில் ஆனந்த தாண்டவ முன்னோடி

இந்நூற்றாண்டில் அட்டமூர்த்த, அட்டவீரட்ட, பரத சிவதாண்டவ வகை கட்கு மேல் ஆனந்த நடனத் திருவுரு ஆறாம் நூற்றாண்டில் உருவாகின்றது. ஆந்திரத்தில், விஜவாடாவுக்கு அருகில் உள்ள முகலிராச புரத்தில் மூவ றைகள் கொண்ட குகைகளில், ஒன்றில் பல்வகை, ஊர்த்துவ ஜானு நடராசர், முயலகன் மேல் நடமிடுகின்றார். இது விஷ்ணுகுண்டின் மன்னரான இரண்டாம் விக்கிரமேந்திரரால் (கி.பி. 515-538) செதுக்கப்பட்டது. [50] இது சிதைந்த தாயினும், ஏழாம் நூற்றாண்டைய மாமல்லபுரம் முற்காலப் பல்லவ நடராசருக்கு முந்தியது. வட இந்தியப் பல் கை பாணியும், தென்னிந்திய முயலகனும் இதன் கண் அமைந்துள்ளன. இதனையும் ஆனந்த தாண்டவ முன்னோடி என்பர். வாகாடகர் விஷ்ணுகுண்டின் மரபில் திருமணம் செய்து கொண்டனர். விஷ்ணுகுண்டின் மன்னரான விக்கிரமேந்திரர், பல்லவ முத லாம் மகேந்திரவர்மரின் தாய் வழிப்பாட்டன். அவர் காலத்திய இச்சிற்பம் ஆனந்த தாண்டவ முன்னோடிகளில் சிறப்புக்குரியது. [51] சாளுக்கிய விஷ் ணுகுண்டின் மன்னர்கட்கும், பல்லவர்கட்கும், இராஷ்டிரகூட மன்னர்கட்கும் இடையே ஏற்படும் அரசியல் திருமணத் தொடர்புகள் சிவ தாண்டவச் செல்வங்கள் வளர வாய்ப் பினை மிகுதியாக்கியுள்ளன. இதனால் மாமல்ல புரம், காஞ்சி, பட்டடக்கல், எல்லோரா, எலிபெண்டா, பாதாமி, இமாசலப் பகுதிகளில் சிவதாண்டவச் சிற்பங்கள் வளர்கின்றன. [52]

ஆந்திரத்தில் இரண்டாவது ஆனந்த தாண்டவ முன்னோடி

நெல்லூர் பைரவ கொண்டா குகைக் கோவிலில் அரிகரர் குகைக்கு அடுத்த குகையில் உள்ள எண்கை முயலகன் மேலாடும் நடராசர் விஷ்ணு குண்டின் மன்னரான விக்கிரமேந்திரரின் மருமகனான சிம்ம விஷ்ணுவால் ஆறாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டது. இச்சிற்பத்தில் வரும் சூலம் முத லியன முற்காலச் சாளுக்கிய வாகாடகர்களின் பாணியில் உள. கைசிகி

48. அ. சிவராம., ப:175
ஞான் கொண்டா, இந்திய இலக்கிய வரலாறு, விஸ்பேடன், 1977. ப:155
சர்மா, ஐ.கே., தொன்மை சைவக் கலை, கட்டிடக் கலைகளின் வளர்சி, ப:63
49. அஃதே, ப:459
சோம சுந்தரம் 1963. ப:63
50. சிவராம., ப:177
51. அஃதே, ப:177
52. அஃதே, ப:177-78

மற்றும் அராபத்தி அமைப்பு. இது பல்லவ முன்னோடி காலச் சிற்பங்கள் போன்றும் அமைகின்றது. இதனையும் ஒரு ஆனந்த தாண்டவ முன்னோடி என்பர்.[53] பைரவ கொண்டா நடராசர் இரண்டாம் விக்கிரமேந்திரரால் உருவாக்கப்பட்டது என்பாரும் உண்டு.

மகாராஷ்டிர எல்லோராவில் சிவதாண்டவங்கள்

. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மகாராஷ்டரத்தமைந்த எல்லோரா குகை சிவதாண்டவ மூர்த்தச் சிறப்புக்களை எய்தியதாகத் திகழ்கின்றது. மகாராஷ்டரத்தில் அமைந்த எல்லோரா கைலாசநாதர் கோவில் சிவ பராக்கிரமச் சிற்பங்களின் களஞ்சியம் என்றால் மிகையாகாது. அவண் இராஷ்டிரகூட மன்னன் முதலாம் கிருஷ்ணராஜனால் உருவாக்கப்பட்ட குடைவரைச் சிற்பங்களில் அமைந்திருக்கும், சிவ நடனம், கஜாந்தகர் முதலியனவும் கால்மாறி ஆடிய நடன ஒவியமும் சிறப்புக்குரியவை. எல்லோரா இருபத்திரண்டாவது இராமேஸ்வரக் குகையில் வாகாடாகரின் கஜஹஸ்த சதுர நடராசரைக் காண்கிறோம்.[54] எல்லோரா பதினைந்தாவது தசாவதாரக் குகையில் வாகாடக, எண் கை லலித நடராசர், கஜஹஸ்தம், அபயம், பிருங்கி, இந்திரன், பிரம்மா, விஷ்ணு முதலியவர்களை உடையவராக உள்ளார். முயலகன் இல்லை.[55] இது கைலை மலைமேல் இறைவன் ஆடுவதுபோல் உள்ளது. பொதுவாக எல்லோரா குகையில் செதுக்கப்பட்டுள்ள வாகாடக நடராசச் சிற்பங்கள், லலிதம், சதுரம், கடிஸ்மம், தலசம்போகிதம் முதலிய வகைகளில் அமைந்தன. டாக்டர் கோட்ஸ் அவர்கள் எல்லோரா சிற்பங்கள் பட்டடக்கல் பாணியில் அமைந்தன எனக் கருதுவார். எல்லோரா சிற்பங்களின் சாயல், காஞ்சி கைலாச நாதர் கோவில் சிற்பங்களில் உள்ளது என்பது பலரின் கருத்து.[56] அண்மையில் எல்லோரா கைலாசநாதர் கோவில் பாண்டியநாட்டு வெட்டுவான் கோவில் (கழுகு மலை) சாயல் உள்ளது என்ற கருத்தும் வந்துள்ளது.[56அ]

எலிபெண்டாவில்

பம்பாய்க்கருகில் உள்ள எலிபெண்டா குகை, சிவதாண்டவங்களாய அட்டவீரட்ட, லலித நடனச் சிற்பங்களின் மாபெரும் கலைக் கூடம் போன்று பிரம்மாண்டமாகத் திகழ்கின்றது. எலிபெண்டா குகையில் ஐந்து ஆறாம் நூற்றாண்டவையென கருதப்படும் மிக உன்னத சிவபராக்கிரமச் சிற்பங்கள் உருவாகியுள்ளன. அவற்றுள் பிரம்மா, விஷ்ணு, பிருங்கி அமைய, எட்டுக்கைகளுடன், மாயையை உதிர்க்கும் வாகாடக லலித நடராசர் மிக்க சிறப்புடையது. மாயை உதிர்த்தல் உபநிடத மாயா தத்துவ அடிப்படையில் அமைந்தது.

கர்நாடகத்தில் பாதாமி, ஐகோளே, பட்டடக்கல் நடராசர்கள்

கர்நாடகத்தில் கி.பி. ஆறாம் நூற்றண்டில் சிறந்த சிவதாண்டவச் சிற்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஐகோளே ராவல்பாடி குகையில் உள்ள செதுக்குச் சிற்பத்தில் முற்கால மேலைச் சாளுக்கிய பத்து கைகளை யுடைய நடராசர் தமருகம், பாம்பு மேல் தூக்கிய நிலையில் சப்தமாதர் கட்கு இடையே பிருங்கி முனிவருடன் உள்ளார்.[57]

---

53. அஃதே, ப:178
54. அஃதே, ப:174
55. அஃதே, ப:175-176
56. அஃதே, ப:215
56. அ. விசய வேணுகோபால். கோ., எல்லோரா குகைக்கோவில்கள், கழுகுமலை வெட்டுவான் கோவில் (கட்) புதுடில்லி 1988.
57. அஃதே, ப:85

கி.பி.575 ஆண்டைச் சேர்ந்த மைசூர், பாதாமி முதற்குகையில் முற்கால மேலைச் சாளுக்கியரின் பதினாறு கைகள், பாம்பினை மேலேந்திய நடராச உருவம், இடபப்பின்னணி உடையதாக சதுர தாண்டவமாக உள்ளது.[58] புஜதாருவன நிலையுடன் தலைமேல் இருகைகளில் பாம்பேந்திய கைகள் முதலியவற்றைத் தக்காண நடராச உருவங்களில் பாதாமி, ஐகோளே நடராசர்களில் காண்கிறோம்.[59] ஐகோளே நடராசரும் பாதாமி நடராசரும் ஒற்றுமைக் கூறுகள் மிக்கவர்கள். ஐகோளே நடராசர் திருவுரு காலத்தால் முந்தையது. பாதாமி நடராசர் அழகு நுணுக்கம் வாய்ந்தது. ஐகோளே, மேலைச் சாளுக்கிய பாதாமி, பல்லவ காஞ்சி, மாமல்லபுரம் நடராச உருவங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவற்றின் காலம் ஆறு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை ஆகலாம் என்பர்.[60]

பட்டடக்கல்

சிவதாண்டவச் சிற்ப வளர்ச்சி வரலாற்றில் பட்டடக்கல் ஒரு சிறப்பிடம் வகிக்கும் இடம். மேலைச் சாளுக்கியரின் புதிய தலைநகராக அது வளர்ந்த போது சிவ நடனச் சிற்பங்களும் நூற்றாண்டுகள் தோறும் அவண் வளர்ந்தன. இதன் தொடக்கம் ஆறாம் நூற்றாண்டாகும். பட்டடக்கல் விருப்பாட்சி கோவிலை மேலைச்சாளுக்கியப் பேரரசனான விக்ரமாதித்யன் பல்லவ வெற்றியின் சின்னமாக, காஞ்சியிலிருந்து குண்டா என்ற சிற்பியைக் கொணர்ந்து கட்டியதாகக் கல்வெட்டு கூறும்.[61] சாளுக்கியரை வெற்றிகண்ட இராஷ்டிர கூட கிருஷ்ணராசனும் பெரும் கலாரசிகனாகையால், சாளுக்கிய பட்டடக்கல் பாணியை, எல்லோரா கைலாச கோவிலில் எட்டாம் நூற்றாண்டில் பின்பற்றியிருப்பதில் நியாயமுண்டு. முயலகன், கங்கை, கமலபீடம், கால்மாறியாடிய ஆனந்த நடன அமைப்பு முதலிய பல ஒருமைப்பாடுகள் இவண் உள.[62]

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஐகோளே, பாதாமி முதலிய தக்காணப் பகுதிகள் நடராசச் சிற்ப வளர்ச்சியின் மையத் தானமாக வளர்கின்றன. இவண் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருவாகிய சிவதாண்டவ மூர்த்தங்களின் உருவ அமைப்பில் சங்கமநிலை தோன்றுகிறது.[63]

இவ்வளர்ச்சி பட்டடக்கல்-காஞ்சி-தில்லை மாமல்லபுரம் என்ற வட்டத்துள் பெருகுகின்றது என்று ஊகிக்க இடம் ஏற்படுகின்றது. இந்தப்பட்டியில் புவனேஸ்வரமும் இடம்பெறும் வாய்ப்புண்டு. கி.பி. எண்ணூறுக்குப் பின் சிவதாண்ட வகைகளின் எண்ணிக்கையும், நளினங்களும் குறைந்துள்ளன.

ஒரிஸ்ஸாவில் நடராச முதன்மை

ஒரிஸ்ஸாவில் ஒடிசி நடன வழிபாட்டில் பூரி ஜகந்நாதருக்கே முதலிடம் தருவர். பரதத்தில் நடராசருக்கு முதலிடம். கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் ஒரிஸ்ஸாவில் சிவன் கோவில்களில் நடராசச் சிற்பங்கள் உருவாயின்.[64] ஒரிஸ்ஸாவில் புவனேஸ்வரம் சிவநடன் முதன்மைத் தானமாகலாம். எனவே கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சிவதாண்டவச் சிற்பக் கலையும் தத்துவக்கலையும் மேலோங்கிய நிலைக்கான சான்றுகள் நிறைய உள என்பது துணிவு.

---

58. அஃதே, ப:179-80
    தேசிகர் 1967. ப:174 கேஸ்டன் ப:68
59. சிவராம. ப:180
60. கமில்., ப:15
61. சிவராம. ப:218
62. அஃதே. ப:218-20
63. கமில். ப:180
64. கேஸ்டன். ப:1

படம் எண் 37



ஆறாம் நூற்றாண்டைய, எல்லோரா, இருபத்திரண்டாவது குகையில், செதுக்கப்பட்டுள்ள, இசைக் கணங்கள் சூழ்ந்த, ஆறு கை வாகாடகச் சதுர தாண்டவர்



படம் எண் 38

ஆறாம் நூற்றாண்டைய, பல்லவ சிம்ம விஷ்ணுவால் நிறுவப்பட்ட, நெல்லூர், பைரவ கொண்டா குகையில் அமைந்த, எண்கை, கைசிகி அராபத்தி, முற்காலப் பல்லவ நடாாசர்

படம் எண் 39



ஆறாம் நூற்றாண்டைய, மைசூர், பாதாமி குகை அமைந்த, பதினாறு கை, மேலைச் சாளுக்கிய சதுர தாண்டவர்

படம் எண் 40



ஏழாம் நூற்றாண்டைய, தமிழக, வந்தவாசி, சீயமங்கலம் குகை, தூணின் மேல் சதுரப் பட்டத்தமைந்த, அடிக்கருகே பாம்பமைந்த, நான்கு கை புஜங்கதிராசித-ஆனந்த தாண்டவ முன்னோடி

.13 கி.பி. ஏழாம் நூற்றாண்டு
தமிழகத்தில் நடராசத் தத்துவ எழுச்சி

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சைவநாயன்மார்களின் தொண்டு மேலோங்குகின்றது. நாயன்மார்களில் காரைக்காலம்மையார் காலத்தால் முந்தியவர். காரைக்கால் அம்மையார் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தையதாகலாம்.[65] காரைக்காலம்மையர் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் அண்ட சராசரங்கள் சுழல இறைவன் அனல் கை ஏந்தி ஆடும் பெற்றிபாடப்படுகின்றது. இறைவன் நன்காட்டில் ஆடும் ஆட்டத்தால் பாவம் நாசமாதலையும் பாடுகின்றார். காரைக்காலம் மையார் அற்புதத் திருவந்தாதியில் சுடர் உருவில் எரியாடும் எம்மானாகிய இறைவனே படைத்தல் அருளல் முதலியன செய்வான். அவன் வானத்தான், உம்பர்கோன் தானத்தான் எனினும் ஞானத்தான் என்பார். சோதியாய், தொல்லுலகுக்கு ஆதியாய், அறிவானுமாய் அறிவிப்பானுமாய் இருப்பவன் என்பார். அவனே விரிசுடர், பார், ஆகாயம் யாவுமாவான் என்றும் புகல்வார். அட்ட மூர்த்தமாக ஒளிரும் அவனே ஞானமயனாவான் எனவும் போற்று வார். சிவதாண்டவ அனவரத தாண்டவ ஆனந்த தாண்டவத் தத்துவத்தின் உட்கிடையே இக்கருத்துக்கள்.

திருவாலங்காட்டைப் பாடிய காரைக்காலம்மையார் காலத்தினை கி.பி. ஆறாம் நூற்றாண்டென கா.பொ. இரத்தினம் அவர்களும் ஏழாம் நூற்றாண்டென பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களும் கூறுவர்.[65அ]

சமயக் குரவர் நால்வர் என்ற சிறப்புக்குரிய அப்பர், ஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்ற நால்வருள் திருநாவுக்கரசரும் சம்மந்தரும் சம காலத்தவர். இவ்விருவருள் திருநாவுக்கரசர் முந்தியவர். இவ்விருவரின் காலமும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு. மூவர் தேவாரத்திலும் திருவாசகத்திலும் நடராசத்தியல்புகளும் திருவைந்தெழுத்தின் தொடர்பும், திருவுருவச் சிறப்பு களும் போற்றப்படுகின்றன. திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் தில்லையைப் பாடியுள்ளனர். அவர்களின் தல யாத்திரை, திருப்பதிகங்கள் பாடியவை முதலியன சைவ மறுமலர்ச்சியின் அம்சங்களாகும்.

திருநாவுக்கரசர், சிவ மூர்த்தங்கள் பலவும் சிவ நடராசரில் ஐக்கியமாவ தைத் திருக்குறுந்தொகையில் பாடுகின்றார். இறுதியில் இறைவன் சோதிவடிவாய்த் திகழ்வதையும் பாடுகின்றார்.

திருநாவுக்கரசர் குனித்த புருவமும், குமிண் சிரிப்பும் இறைவன் இனித் தமுடைய எடுத்த பொற்பாதம் காட்டி, என்று வந்தாய் என்று குறிப்புக் காட்டி பிறவித் தளையறுத்த பெற்றியினைக் கோயில் திருவிருத்தத்தில் பாடுகின் றார். பரஞ்சுடரான பெருமான் ஏரொளியாய் பேரொளியாய்த் திகழ்வதைப் பெரிய திருத்தாண்டகத்தில் பாடுகின்றார். வீர இறைவரான நடராசர் மந்தி ரமும் தந்திரமும் தானே ஆன நிலையையும், ஆலமர நிழல் அமர்ந்தருளியதும், புறங்காட்டில் எரியாடி சிற்றம்பலம் புக்க செய்திகளையும் புக்க திருத் தாண் டகத்தில் போற்றுகின்றார். இவண் 'திருவாரூர்' திரு மூலட்டான மேயார், பூதம் சூழ புலியூர் சிற்றம்பலம் புக்கார்' என்ற குறிப்பு யோகத் தலங்களாய திரு வாரூர் தில்லை தொடர்பைச் சுட்டுகின்றது.

65. இராச ப:58
65. அ. இரத்தினம் கா.பொ., நூற்றாண்டுகளில் தமிழ், சென்னை 1961 ப:71 கண்ணப்ப முதலியார். பாலூர். ப:205

மாணிக்கவாசகப் பெருமான் சிலம்பொலி கேட்டு, சுடர்ப்பூ பெற்று தில்லை வெளியிலே கலந்தவர். தில்லை ஞானானுபவம் பெற்றவர். மாணிக்கவாசகர் சிற்சபேசரை, நாத நாதன் எனவும், அவர் பதஞ்சலிக்கருளியது பரம நாடகம் என்றும் கீர்த்தித் திருவகலில் குறிப்பிடுகின்றார்.

திரு அண்டப் பகுதியில் அண்டப் பகுதியின் பிறப்பு, நுண் அணுவின் உள் இயக்கம், பேரூழிகளின் நீக்கமும் நிலைப்பும், சூக்கும, தூல இயக்கங்கள் யாவும் நடராசப் பெருமானின் நடன வைபவமே என மாணிக்க வாசகர் பாடுகின்றார். நடப்பன நடக்கவும், கிடப்பன கிடக்கவும், நிற்பன நிற்கவும், நிறுவும் சொற்பதம் கடந்த ஆற்றலோன் என்றும் பாடுகின்றார். இவை சிவதாண்டவப் பிரபஞ்சயியற் கருத்துக்கள். விண்முதல் ஐந்து பதங்களும் வெளிப்பட பூவினில் நாற்றம்போல் அகமும், புறமும் இருப்பவர் என்பார். போற்றித் திருவகலில் ஐம்பூதங்கள் ஒன்றன் ஒன்று தொடர்புடையதாய் நடைபெறும் பஞ்சீகரணத்தைக் குறிப்பிடுகின்றார். இவை ஐந்தொழிற் கருத்துக்கள் ஆகும். மாணிக்கவாசகரவர்கள் தன் யோகானுபவத்தால் நடராசரைத் தரிசித்து அனுபவித்து அவ்வொளியிருந்த சோதியிலே கலந்தவர்.

ஒரிஸ்ஸாவில், ஆந்திரத்தில் கீழைக் கங்க நடராசர்

ஏழாம் நூற்றாண்டில் புவனேஸ்வரம் பரசுராமேசுவரர் கோவிலில் கீழக் கங்கரின் எண் கை அர்த்த நாரீஸ்வரர் நடமிடும் சிற்பக் காட்சி அழகமைந்தது. அதே கோவிலின் கோயில் முகப்பு சுகாசன பாகத்திலும், ஒரு ஊர்த்துவமேரு பத்து கை நடராசர் கொலு வீற்றிருக்கின்றார். புவனேசுவர், பரதேசுவரர் கோவில் மாடமொன்றில் பன்னிரு கை சதுர கீழைக் கங்க ஊர்த்துவ மேரு, பத்து கை சதுர நடராசர் அமைந்துள்ளார். ஆந்திராவில் முகலிங்கம் சோமேசுவரர் கோவிலின் முகப்பில் கீழைக் கங்கரின் நடராசர் கொலு வீற்றிருக்கின்றார்.[66]

ஐகோளே பாதாமி, பட்டடக்கல்

680-740/750-ல் சாளுக்கியர்களில் முதல் தலைநகரான கர்நாடக பிஜப்பூர், மாவட்டத்தைச் சார்ந்த ஐகோளேயில் தொடங்கிய சாளுக்கியக் கலை, பாதாமியில் 578-ல் வளர்ந்து பாதாமியின் வீழ்ச்சிக்குப் பின் அவர்களது மூன்றாவது தலைநகரான பட்டடக்கல்லில் முழுமை பெறுகின்றது. பட்டடக் கல்லில் பாபநாதர் கோவில் (680),சிரம்புலிங்கேஸ்வரர் கோயில் (690), கரசித்தேஸ்வரர் கோவில் (700), காசிநாதர் கோவில் (752) முதலிய நான்கும் வட இந்தியப் பாணியில் அமைந்தன. பட்டக்கல்லில் சங்கேஸ்வரர் கோவில் (725), விருப்பாட்சர் கோவில் (740), மல்லிகார்ஜுனர் கோவில் (740), ஆகிய நான்கும் திராவிடப்பாணியன.[67]

கி.பி. 6-8 நூற்றாண்டின் ஐகோளே, பாதாமி, பட்டடக்கல் முதலிய தக்காணப் பகுதி நடராச மூர்த்தங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருவாகிய உருவ அமைப்புகளின் சேர்ப்பினைக் காண முடிகின்றது. இப்பகுதி நடராசத் தத்துவ வளர்ச்சிக்கு மையத் தானமாக அமைந்திருக்கலாம்.[68]

பல்லவ பாதாமித் தொடர்பு

கி.பி. 642இல் பல்லவ முதலாம் நரசிம்மவர்மன் பாதாமியை வெல்கிறான். பல்லவர் சாளுக்கியர் தலைநகரான பாதாமியில் பன்னிரண்டாண்டுகள் இருந்தனர். **(630-668)** இப்பன்னிரண்டாண்டு

66. சிவராம, ப:292,296
67. அக்தே, ப:34 கேஸ்டன் ப:57
68. கேஸ்டன், ப:57,30,31

படம் எண் 41



ஏழாம் நூற்றாண்டைய, நெல்லை, திருமலைப்புரம், குகைக் கோவிலில் அமைந்த, நான்கு கை, பாண்டிய சதுர நடராசர்

படம் எண் 42



ஏழாம் நூற்றாண்டைய, மாமல்லபுரம், தர்மராச ரதத்தில் அமைந்த, கிடந்த முயலகன் மேல் நடமிடும், நான்கு கை, தொடக்க நிலை ஊர்த்துவ ஜானு அமைப்பு நடராசர்

பாதாமி அனுபவம், முதலாம் நரசிம்மன் காலத்தில் பல்லவரின் மாமல்லபுரத்தில் சாளுக்கியக் கலையின் மணம் வீசத் தொடங்கியது.[69] அது போன்றே இராசசிம்மன் (685-720) கட்டிய காஞ்சி கைலாய நாதர் கோவிலில் நடராசச் சிற்பங்கள் செழித்தோங்குகின்றன.[70] தமிழகத்தில் காஞ்சி கைலாயநாதர் கோவிலினைச் சிவபராக்கிரமச் சிற்பங்களின் காட்சிக்கூடம் எனின் மிகையாகாது. பிற்காலத்தில் மிகப்பெரிய சிவன் கோயில்கள் அனைத்திலும் சிவபராக்கிரமங்கள் பலவும் இடம்பெறினும் இக்காஞ்சி கைலாயநாதர் கோவில் ஒருமுன்னோடி எனலாம். காஞ்சி கைலாயநாதர் கோயிலில் இராசசிம்ம பல்லவன் கால எண்கை பிற்காலப் பல்லவ ஊர்த்துவஜானுவுக்கு முந்திய கரண நடராசர் உள்ளார். இவண் தீயகல் இல்லை. கைகள் அலபத்மம், மற்றும் அபயமாக அமைந்துள்ளன. பின் அதே கோவிலில், நான்கு கைகளுடன் பெரிய முயலகன் மேல் நடமிடும் பல்லவ ஊர்த்துவ கரண நடராசர் உள்ளார். அதே கோவிலில் வலக்கை கஜஹஸ்தம், சடைமுடி, துடியுடைய வலக்கை முதலியன உடைய பத்துக் கைகளுடன், இருந்த கோல அலிதநிருத்த நடராசர் உள்ளார்.[71] காஞ்சி கைலாச நாதர் கோவிலில் பிற்காலப் பல்லவர் கால பத்துக் கைகள் அபயம், துடியுடை வலஅபயகரம் உடைய இன்னொரு நடராசரும் உள்ளார்.[72] இவை காஞ்சி கைலாசநாதர் கோவில் சிவபராக்கிரமங்கள் என்ற நிலையில், சிவ தாண்டவ அமைப்புக்குச் சிறந்த இடங்களைத் தந்துள்ளது என்பதைக் காட்டுவன.

தமிழக எல்லைக்குள் ஆனந்த தாண்டவ முன்னோடி

வந்தவாசி வட்ட சீயமங்கலம் அவனிபாஜ குகையில் சிற்பத்தூண் ஒன்றின் மேற்சதுரப் பட்டமொன்றில், ஏழாம் நூற்றாண்டைய நான்கு கை அபயஹஸ்த பல்லவ நடராசரைக் காண்கிறோம். இது ஆனந்த தாண்டவ முன்னோடிகளுள் ஒன்று. சிறப்புக்குரியது.[73]

ஆனந்த நடராச உருவத்துக்குச் சிறிது ஒத்து அமைந்த ஸ்திதபாதம், குஞ்சித பாதம், அபயஹஸ்தம், தீயேந்திய வலக்கரம், மழுவேந்திய இடக்கரம், இடக்கை டோல ஹஸ்தம் முதலியவற்றுடனாய புஜங்காஞ்சித நடராச உருவம் இது. இவண் நான்கு கைகள் மற்றும் சடைமுடி உண்டு. முயலகன் இல்லை. ஆனால் ஸ்தித பாதத்துக்கருகே முயலகன் இல்லாது, படமெடுத்த பாம்பு நிற்கின்றது.[74] சீயமங்கலம் நடராசர் வைத்திருக்கும் இடக்கை தீயகல், பட்டடக்கல் விருப்பாட்சி கோவில் நடராசர் உட்பட தக்காணப் பகுதியில் உள்ள மூன்று நடராசத் திருவருவங்களிலும் உள. பொதுவாகத் தென்னிந்திய எல்லைக்கு மேல் தீயகல் இருப்பதில்லை என்பது சரியன்று.[75] இது முயலகன் அமைந்த மாமல்லபுரச் சிற்பத்துக்கு முந்தியது.

பாண்டிய நாட்டில் நடராசர்

திருநெல்வேலி திருமலைப்புரக்குகைக் கோவிலில் ஏழாம் நூற்றாண்டைய முற்காலப் பாண்டியர் நான்கு கை சதுர நடராசர் உள்ளார்.

.14 கி.பி. எட்டாம் நூற்றாண்டு

தமிழகத்தில் சமய நிகழ்ச்சிகள்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சமணரும் பௌத்தரும் தமிழகத்தில் தம்செல்வாக்கிழக்கின்றனர் சைவம் ஓங்குகின்றது. பல்லவ மன்னனான

69. கமில், ப:16
70. அஃதே, ப:122
71. சிவராம ப:195-96
72. அஃதே, ப:198-199
73. சிவராம ப:192
74. சிவராம, ப:192
75. கேஸ்டன், ப:118

இராசசிம்மன் (695-728) தன்னை ஆகம அனுசாரி என்று அழைத்துக் கொள்கிறான். இது ஆகம வழிப்பட்ட விக்ரக வழிபாடு ஓங்க மேலும் வழி வகுக்கின்றது.[76] இந்நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டு பரவுகின்றது. மிருகேந்திர ஆகமம் அர்ச்சனாவிதிப் படலத்தில் ஐந்தொழிற் கருத்து கூறப்படுகின்றது.[77] இக்காலத்தே ஆதிசங்கரர் சிதம்பர இரகஸ்யத்தானத்தில் ஸ்ரீசக்ரத்தைப் பிரதிட்டை செய்துள்ளார்.திரும்பலச் சக்கரம் திருமந்திரம் கூறுகின்ற ஒன்று.[78] ஆதிசங்கரர் சித்சபைக்குச் ஸ்படிக லிங்கம் தருவதும் இதே காலம். எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழகத்தில்சிற்பங்கள் சென்னை பொருட்காட்சிச் சாலையில் உள்ள கூரம் பல்லவர் கால முயலகன் மேலாடும் செம்பு ஊர்த்துவ ஜானு நடராசரின் பாத நிலை தவிர பிற ஆனந்த தாண்டவத்தினை ஒத்துள்ளன.[79] திருப்பரங்குன்றம் குடைவரைக் கோவிலில் முற்காலப் பாண்டியர் நான்கு கைமுயலகன் மேல் அபயம், கரிஹஸ்தம் அமைந்த லலித நடன நடராசர் உள்ளார். குன்றக்குடி குடை வறையில் முற்காலப் பாண்டியர் கால எண் கை துடி, தீயகல் உடைய முயலகன் இல்லா பாதவஸ்திக நடன நடராசர் உள்ளார்.[80]

பட்டடக்கல் சிற்பங்கள்

பட்டடக்கல்லில் இந்நூற்றாண்டில் சிவ தாண்டவச் சிற்பங்கள் மேலும் வளர்கின்றன. பட்டடக்கல் விருப்பாட்சி கோவிலில் தூர்ப்பனகை சிற்பமுடைய தூணில் மேலைச் சாளுக்கிய உடலசைக்கும் நான்குகை ஸ்வஸ்திக நடராசரைக் காண்கிறோம். பட்டடக்கல் விருப்பாட்சி கோவிலில் உள்ள நான்கு கை கஜ சம்காரர், ஹளேபீடு ஹொய்சலேஸ்வரர் கோவிலில் உள்ள எண் கை கஜ சம்காரர், ஆந்திர முகலிங்கம் சித்தேஸ்வரர் கோவிலில் உள்ள ஆறுகை கஜ சம்காரர் முதலிய மூர்த்தங்கள் கஜத்தின் மேல் நடமிடுதலாக உள்ளன.[81] கைகள் நிறைய உடைய திருவிக்ரமச் சிற்பங்கள் பாதாமி, ஐகோளே பட்டடக்கல், புவனேஸ்வர் முதலிய இடங்களில் உள.[82] பட்டடக்கல் விருப்பாட்சி கோவிலில் உள்ள ஆலித நிருத்த எண் கை திரிபுராந்தகர் சிற்பத்தில் கஜ ஹஸ்தம் உள்ளது.[83] பட்டடக்கல் பாப நாதர் கோவிலில் உள்ள முற்கால மேலைச் சாளுக்கிய பிரத்யாலித திரிபுராந்தகரின், அம்பு முனையில், தீ பரவி, அசுர மாயையை அழிக்கின்றது.[84] பட்டடக்கல் விருப்பாட்ச கோவிலில் முற்கால மேலைச் சாளுக்கியர் கால நான்கு கை ஊர்த்துவ ஜானு நடராசர் முயலகன் மேல் ஆடுகிறார்.[85] பட்டடக்கல் ஜம்புலிங்கேஸ்வரர் கோயில் முகப்பில் முற்கால மேலைச் சாளுக்கிய நான்கு கைகள் உடைய சதுர நடராசர் உள்ளார். அபய கஜ ஹஸ்தங்கள், இடபமும், தேவியும் உளர்.[86] பட்டடக்கல் காலக நாதர் கோவில் மேல் விட்டத்தில் அமைந்த நான்கு கை நடராசருக்கு அபய, கஜ ஹஸ்தங்கள் உள.[87] பட்டடக்கல் விருப்பாட்சி கோவிலில் அர்த்தமல்லியில் அமைந்த முற்கால மேலைச் சாளுக்கிய எண் கை நடராசரின் இடக்கையில் தீயகல், உள்ளது.[88] பட்டடக்கல் மல்லிகார்ஜுனர் கோவிலில் முற்கால மேலைச் சாளுக்கியர் கால நான்கு கை ஊர்த்துவ ஜானு நடராசர் தேவியுடன் ஆடல் கொண்டுள்ளார்.[89] பட்டடக்கல் பாபநாதர் கோவிலில் மேற் கூரையில்

---

76. நடராசன் பி. பிரபஞ்ச நடனத்தின் தலம், டில்லி 1974 ப:122
77. கொண்டா, ப:164
78. நடராசன் பி. பிரபஞ்ச நடனத்தின் தலம், ப:15
79. சிவராம ப:204,208
80. அஃதே, ப:203,206,208,210
81. கேஸ்டன், ப:152
82. சிவராம, ப:104,105
83. அஃதே, ப:25
84. அஃதே, ப:90
85. அஃதே, ப:185
86. அஃதே, ப:181
87. அஃதே, ப:181
88. அஃதே, ப:182
89. அஃதே, ப:183

அமைந்த முற்கால மேலைச் சாளுக்கிய நான்கு கை சதுர நடனத்து அபய கஜ ஹஸ்தங்கள் உள. இடபம் பின்புறமுள்ளது[90] பட்டடக்கல் விருப்பாட்சக் கோவிலில் மேலைச் சாளுக்கியர் கால நான்கு கை முயலகன் மேல் நடமிடும் துடி, நந்தித்துவஜம், அபயம், கஜ ஹஸ்தம் உடைய ஊர்த்துவ ஜானு நடராசரைக் காணலாம்.[91] முகலிங்கம் முகலிங்கேசுவரர் கோவில் மாடமொன்றில் பன்னிருகை ஊர்த்துவமேரு கீழைக் கங்க சதுர நடராசரைக் காண்கிறோம்.[92] புவனேஸ்வரம் சிசிரேசுவரர் கோவிலில் கீழைக் கங்க நடராசரைக் காண்கிறோம்.[93] ஐகோளேயில் ஹுச்சியப்பர் கோவிலில் முற்கால மேலைச் சாளுக்கிய எண் கை, முயலகன் மேல் தேசித நிக்குத்தித நடனம். பிருங்கி முனிவர் உள்ளார்.[94]

எல்லோராவில்

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சாளுக்கியரை வென்ற இராஷ்டிரகூடர், பட்டடக்கல் பாணியை எல்லோரா கைலாசநாதர் கோவிலில் பயன் படுத்தினர். சிற்ப சமய கலைத்துறையில் - தமிழகம் ஆந்திரம், தட்சிணம் முதலியன சங்கமிக்கின்றன.[95] எல்லோராவின் பதினான்காவது இலங்கேஸ்வரக் குகையில், எட்டாம் நூற்றாண்டைய நான்கு கை, இராட்டிரகூட திக்வஸ்திக பிரிஸ்தித நடராசரைக் காண்கிறோம்.[96] எல்லோரா பதினாறாவது இலங்கேஸ்வர குகையில் எட்டாம் நூற்றாண்டைய இராஷ்டிர கூடரின் முயலகன் மேலாடும் சதுர நடராசரைக் காண்கின்றோம்.[97] எல்லோராவின் கைலாசநாதர் கோவில் நந்தி மண்டபத்தில் எட்டாம் நூற்றாண்டைய இராட்டிரகூட லலித நடராசரின் வண்ண ஓவியத்தைக் காண்கினறோம்.[98] எல்லோரா கைலாசநாதர் கோவில் நந்தி மண்டபத்தில் இராஷ்டிரகூட ஓவியம் கால் மாறி ஆடிய பாணி, புஜங்கதிராசம் மாறியமைந்தன முதலியன உள. முயலகன் இல்லை.[99] முதலாம் கிருஷ்ணராசன் என்னும் இராஷ்டிரகூட மன்னர் எல்லோராவில் கைலாசநாதர் கோவிலில் பெரிய முயலகன் மேல் நடமிடும் நான்கு கை திக்வஸ்திகபிரிஸ்தா வஸ்திக நடராசரை நிறுவியுள்ளான். இது கிருஷ்ணராசர் பட்டடக்கல் பாணியில் செதுக்கியது என்பர்.

காஞ்சி நகர்ச் சிற்பி, குண்டா என்பவர் மேலைச் சாளுக்கிய விக்ரமாதித்தன் காலப் பட்டடக்கல் விருப்பாட்ச கோவிலைக் கட்டச் சென்ற செய்தியைக் கல்வெட்டு கூறும்.[100]

ஆந்திரத்தில்

ஆந்திராவில் அமைந்த ஆலம்பூர் கோவில்களில் பட்டடக்கல் பாணியைச் சார்ந்த முற்கால சாளுக்கியச் சிற்பங்கள் உள. ஆலம்பூர் பொருட்காட்சியக, முற்கால மேலைச்சாளுக்கிய எண் கை முயலகன் மேல் சதுர நடனம், இடம் தீயகல் வலக்கரம் துடி, இடம் தண்டஹஸ்தம் உள்ளது.[101] ஆலம்பூர் சுவர்க பிரம்ம கோவிலில் எண் கை தண்டஹஸ்த லலித நடராசர் பிருங்கியுடன் உள்ளார். ஆந்திர குந்தவேலி சங்கமேஸ்வரர் கோவிலின் முகப்பில் முற்கால மேலைச் சாளுக்கிய பதினான்கு கை சதுர நடராசர், காளியுடனாடல், அத்ரி தாங்க பைரவர். தண்டஹஸ்தத்துடன் உள்ளார்.[102]

90. அஃதே. ப:183
91. அஃதே. ப:185
92. அஃதே. ப:293-94
93. அஃதே. ப:295
94. அஃதே. ப:184
95. சிவராம ப:218
96. சிவராம. ப:218
97. அஃதே. ப:219
98. அஃதே. ப:220
99. அஃதே. ப:220
100. அஃதே. ப:218-20, கமில் ப:17
101. அஃதே. ப:188-89
102. அஃதே. ப:189

படம் எண் 43



எட்டாம் நூற்றண்டைய, பட்டடக்கல், பாபநாதர் கோவில் விதானத்து அமைந்த, நான்கு, கை, நந்தி சகித, முயலக முற்கால மேலைச் சாதுக்கிய நடராசர்.



எட்டாம் நூற்றாண்டைய, தனாங்-திரா-க்யு-சான,
பொருட்காட்சிச் சாலையில் உள்ள நான்கு கை சதுர நடராசர்

படம் எண் 44

குந்தவேலி சங்கமேஸ்வரர் கோவிலில் மூன்று முற்கால மேலைச் சாளுக்கிய லலித நடராசர்கள் எண் கை பன்னிரு கைகளுடன் உளர். தண்டஹஸ்தம், பிருங்கி உண்டு.[103] கர்னூலுக்கு அருகில் உள்ள ஆந்திர சத்தியவோலு இராமலிங்கேசுவரர் கோவில் முகப்பில் எண்கை தண்டஹஸ்த மேலைச் சாளுக்கிய லலித நடராசரைக் காண்கிறோம்.[104]

பிற பகுதிகளில்

இந்தோ சீனக் கடற்கரையைச் சேர்ந்த சம்பாவில், அமைந்த மிசான் பகுதியில் ஸ்ரீவிஜய வழி பன்னிரு கை சதுர நடராசர் முயலகன் மேல் நடமிடுகின்றார். இவண் இவ்வாறான இரு நடராசர்கள் உள்ளனர். சம்பாடெநாங், சாம் பொருட்காட்சிச் சாலையில், ஸ்ரீவிஜயவழி நந்தி மேல் நடமிடும் இருபது கை வீணாதர நடராசர் உள்ளார். அவண் நான்கு கை நடராசர் ஒருவரும் உள்ளார். அவண் படுத்திருக்கும் நந்தியின் மேல் நடமிடும் நடராசரும் உள்ளார். அவண் பத்துக்கை நடராசர் ஒருவர் உள்ளார். சம்பா, போநகர் டி, நாதராங்கில் இடது காலூன்றி நந்தி மேல் நடமிடும் ஸ்ரீவிஜய நடராசர் உள்ளார்.[105] காஷ்மீர், பாயரில், கார்கோட நடராசர், கோவில் மாடமொன்றில் உள்ளார்.[106] கேரள விழிஞ்ஞத்தில் முற்காலச் சேரரின் சதுர நடராசர் உள்ளார்.[107] படம் எண் 12

நடன வழிபாட்டுச் சான்றுகள்

நடன வழிபாடு நடராச வழிபாட்டுடன் தொடர்புடையது. இந்நூற்றாண்டில் நடன வழிபாடு இருந்தமைக்கான இரு சான்றுகள் கிடைத் துள்ளன. இராஜ தரங்கணியில் (699-736) லலிதாதித்ய முக்தபீடன் என்ற மன்னர் ஒரு இள நடன நங்கை, ஒரு தரிசு நிலத்தில் நடனமாடுவதைக் கண்டான். அப்பெண் அவ்விடத்து ஆடுவது பரம்பரை மரபு என்றனள். அகழ்ந்து பார்க்கையில் அவண் ஒரு பழைய கோவில் இருந்தது. நடன வழிபாடு, அக்காலத்தில் இருந்தமைக்கு இது ஒரு சான்று.[108] இரண்டாம் நந்திவர்மர், காலத்தில் (710-775) காஞ்சி முக்தேஸ்வரர் கோவிலில் தளிப் பரிவாரம் நாற்பத்து நான்கு கூத்திகள் இருந்தமை அறியப்படுகின்றது. இது நடன வழிபாட்டுக்கான தமிழகச் சான்றாகும்.[109]

15 கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

தில்லையில் திருமுறைகள்

நம்பியாண்டார் நம்பிகள் உதவியுடன் இராசராசன் தில்லையில் திருப்பதிகங்களைக் கண்டெடுக்கிறான். இது தமிழ்ச்சைவ வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது.

தில்லைத் திருப்பணிகள்

கி.பி. 871-907 இல் ஆட்சி செய்த முதலாம் ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்ற பொன்கொண்டு கனக சபைக்குப் பொன் வேய்ந்தான்.[110] கி.பி. 846-880 இல் விஜயாலய சோழன் தில்லைக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளான்.[111] கி.பி. 901-953 இல் ஆட்சி செய்த முதலாம் பராந்தக சோழன் கனகசபைக்குப் பொன் வேய்ந்துள்ளான்.[112]

103. அஃதே. ப:189-90
104. அஃதே. ப:187-89
105. அஃதே. ப:365
106. அஃதே. ப:305,07
107. அஃதே. ப:215
108. கேஸ்டன். ப:13
109. இராச ப:113
110. சத்திய மூர்த்தி டி., நடராசர் கோவில். புதுடில்லி,1978 ப:5
111. சோமசுந்தரம் ப:112
112. சத்தியமூர்த்தி டி., நடராசர் கோவில். ப:5

சோழர் காலத்தில் முதன்மை

கி.பி. 969-985 காலத்தில் சோழ அரசி செம்பியன் மாதேவியார் காலத்தில் திருக்கோவில்களில் முதன்மைத் தானம் கிடைக்கின்றது. குறிப்பாகத் தெற்குத் தெய்வக் கோஷ்டங்களில் நடராசருக்கு மையத் தானம் கிடைக்கிறது.[113] செம்பியன் மாதேவியர் கட்டிய கோனேரிராஜபுரம் கோவிலில் முதன் முதலாக இச்சிறப்பு கிடைக்கின்றது. ஒன்பதாம் நூற்றாண்டில் தான் ஆனந்த தாண்டவ உருவம் சமயக்கலை உலகில் முழுமை பெற்ற அளவில் இடம்பெறுகின்றது. கோனேரி ராசபுரம் நடராசரில் ஒரு ஆனந்த தாண்டவ முழுமையைக் காண்கின்றோம்.

செப்பு நடராசர்

ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் செம்பில் அமைந்த முதல் நடராசர் உருவாகியுள்ளது. இந்நல்லூர் எண் கை பல்லவச் செப்பு நடராசர் விஷ்ணுகுண்டின் பாணியாக இருக்கலாம். நிமிர்ந்த முயலகன் மேல், துடி, தீயகல், அபயம், கரிஉறஸ்தம் உண்டு. ஊர்த்துவஜானு அமைப்பு, பிரபை இணைப்பு உள்ளது.[114] இதில் ஆனந்த தாண்டவத்துக்குரிய, பாதநிலை இல்லை. பிற யாவும் உண்டு. பாதநிலை கால் மாறினால் சரியாகலாம். வெள்ளியம்பல நிலை போன்றது எனலாம். வெள்ளியம்பலத்தில் பத்து கைகள் உள. பாபநாசம் வட்டம் கிழக்காடு விருப்பாட்சேஸ்வரர் கோவிலில் நாற்கை செம்பு, பல்லவ அர்த்த ரேசித நடராசர் நிமிர்ந்து அமர்ந்த முயலகன் மேல் நடமிடுகின்றார். துடி, தீயகல் அபயம் உண்டு.[115]

சென்னை பொருட்காட்சிச் சாலையில் ஒன்பதாம் நூற்றாண் டைச் சார்ந்த கூரம் ஊரைச் சேர்ந்த நான்கு கை முயலகன் மேலாடும் பல்லவ ஊர்துவ ஜானு செப்பு நடராசர் உள்ளார். செவல்பட்டிக் குகையில் செதுக்குச் சிற்பமாக முதற்காலப் பாண்டியர் காலத்திய ஒன்பதாம் நூற்றாண்டைய பிரிஸ்தா வஸ்திக நான்கு கை நடராசரைக் காண்கிறோம்.[116]

விழிஞ்ஞம், முற்காலச் சேரர் குடைவரையில் திரிபுராந்தகர் முயலகன் மேல் நடமாடுகின்றார்.[117] முற்கால மேலைச் சாளுக்கியரின் தலைநகரான ஹேமாவதியில், நொளம்பர் கால முயலகன் மேல் நடமிடும் ஆறு கைகளுடன், பிரிஸ்தா வஸ்திக நடனமிடுகின்றார். இதுவும் சென்னை பொருட்காட்சிச் சாலையில் உள்ளது.[118] ஹேமாவதி கோவிலில் மேலைச் சாளுக்கியருக்குப் பின் வந்த நொளம்பரின் ஒன்பது பத்தாம் நூற்றாண்டைய முயலகன் மேலாடும், எண்கை சதுர அபய கஜஹஸ்த நடராசரைக் காண்கி றோம்.[119] காஷ்மீர உத்பால வம்ச பத்து கை லலித நடராசர் இமாசலப்பிரதேச, இலக்கமாண்டலில் வீற்றிருக்கிறார்.[120] கி.பி. 830-1250 பண்டல் கண்டை ஆண்ட சந்திராதித்தரயர் தம் கல்வெட்டுகளில் திருவைந் தெழுத்து பொறித்து தொடங்குகின்றனர்.[121]

குவாலியர் பொருட்காட்சிச் சாலையில் குப்தருக்குப் பின் வந்த கூர்ஜர பிரதாரா வம்சத்தினரின் எண் கை லலித நடராசர் உள்ளார்.[122] இந்தோர் பொருட்காட்சிச் சாலையில் வாயில் மேற்சட்டத்தில் கூர்ஜர பிராதாரா இன வகை சதுர பல்கை நடேசர் உள்ளார்.[123] அபனேரியில் கோவில்

---

113. குப்தா ஆர்.எஸ்., இந்து, பௌத்த, சமண படிமக் கலை, ப:121
114. சிவராம, ப:205,202
115. அஃதே, ப:206,203
116. அஃதே, ப:209,206
117. அஃதே, ப:215
118. அஃதே, ப:217,216
119. அஃதே, ப:217,215
120. அஃதே, ப:307
121. இராச ப:164
122. சிவராம, ப:309
123. சிவராம, ப:309

படம் எண் 45



ஒன்பதாம் நூற்றாண்டைய, தமிழக கிழக்காடு விருப்பாட்சீசுவரர் கோவிலில்
உள்ள, நான்கு கை, நேரமர்ந்த முயலகன் மேல் நடமிடும்,
பல்லவ செப்பு, அர்த்தரேசித நடராசர்

படம் எண் 46



ஒன்பதாம் நூற்றாண்டைய, நல்லூர்,
முயலக, எண்கை, செப்பு பல்லவ, ஊர்துவஜானு நடராசர்

மண்டபத்தில் கூர்ஜர பிரதாராவின எண், கை, லலித நடேசர் உள்ளார். மினாகில் மகாமாலா கோவிலில் கூர்ஜர பிராதாராவின கரிஹஸ்த ஆறுகை லலித நடராசர் உள்ளார். கோபேசுவரில், கூர்ஜர பிரதாராவின நான்கு கை சதுர நடராசர் உள்ளார். அரிதுனாவில், நீலகண்ட மகாதேவர் கோவிலில் கூர்ஜர பிரதாராவின ஊர்துவ ஜானு நடராசரைக் காண்கின்றோம்.[124]

பிற பகுதிகளில்

இராஜஸ்தான் ஜெய்பூர் பொருட்காட்சிச் சாலையில், கூர்ஜர பிரதாராவின நடராசர் வீணையுடன் உள்ளார். அதே போன்ற இதே வகை பத்து கை, இதே கால நடராசர் மேற்கு பெர்லின் இந்தியக்கலைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளார். நாக்டாவில், சாஸ் கோவிலில், கூர்ஜர பிரதார ஊர்துவ ஜானு நடேசர் உள்ளார். கிளவ்லாந்து பொருட்காட்சிச் சாலையில், கூர்ஜர பிரதாராவின ஊர்துவ மேரு, நான்கு கை ஊர்துவஜானு நடராசர் உள்ளார். குவாலியர் பொருட்காட்சிச் சாலையில், பதோவைச் சேர்ந்த கூர்ஜர பிரதாராவின நடராசர் ஊர்த்துவ மேளம் வாசிக்கிறார். அலகாபாத் பொருட்காட்சிச் சாலையில் கூர்ஜர பிரதாராவின ருக்கியன் ஊரினதான வீணாதர நடராசர் உள்ளார். இடபம் பின்புறமுள்ளது. கம்போடிய பாந்தை சிரேய ஊரில் ஸ்ரீவிஜய வழி வீணாதர நடராசர் உள்ளார். கம்போடிய போனம் சிசோர் ஊரில் ஸ்ரீவிஜயவழி வீணாதர நடராசர் உள்ளார்.

கம்போடிய பாசெட் ஊரில் ஸ்ரீவிஜய வழிமுறை, பத்து கை வீணாதர சதுர நடராசர் காரைக்காலம்மையாருடன் உள்ளார். கம்போடிய பிராபித்யு ஊர் கோவில் மேல்விட்டத்தில் பிரம்ம விஷ்ணு கட்கிடையே நடமிடும் ஸ்ரீவிஜய பத்து கை ஊர்த்துவஜானு நடராசர் உள்ளார். கம்போடிய பாந்தை சாம்ரே ஊரில் ஸ்ரீவிஜய வழி இரு கை நடராசர் கணேசருடன் நடமிடும் காட்சி உள்ளது. சம்பாவில், போகிளாங், கெராயில் ஸ்ரீவிஜய ஆறு கை நடராசர் உள்ளார்.[125] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தேவாரத் திருப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்டு சைவ மறுமலர்ச்சி இயக்கம் முடுக்கப்படுகின்றது. தேவ கோஷ்டங்களில் செம்பியன் மாதேவியாரின் முயற்சியால் நடராசருக்கு முதன்மைத் தானம் கிடைக்கத் தொடங்குகிறது. ஆனந்த தாண்டவ உருவம் ஓரளவு முழுமை பெறுகின்றது. இந்தியாவைத் தாண்டி கம்போடியா போன்ற நாடுகளிலும் நடராச வழிபாட்டுக்குச் சிறப்பு ஏற்பட்டுகின்றது.

16 கி.பி. பத்தாம் நூற்றாண்டு

சமயச் சூழல்

கி.பி. பத்தாம் நூற்றாண்டு சைவ சமய வளர்ச்சியில் ஒரு பெரும் சிறப்புக்குரிய ஆண்டாகும். முதலாம் இராசராச சோழன் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளின் உதவியுடன், தில்லைத் திருக்கோவிலில், அடைந்து கிடந்த, தேவாரத் திருப்பதிகங்களை மீட்டு திருமுறைகளை வெளிப்படுத்து கின்ற அரிய செயல் இந்நூற்றாண்டில் நடைபெறுகின் றது.

இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோவிலை நிறுவுகின்றான். நெல் அளக்கும் மரக்கால் ஆடல்வல்லான் மரக்கால் எனப் பெயரிடப்படுகின் றது. அளக்கும் கோலுக்கு சிற்றம்பலக்கோல் எனப் பெயரிடப்படுகின்றது. தஞ்சை பெரிய கோவிலில் நடன வழிபாட்டுக்காக நானூறு பதியிலாளரும்,

124. அஃதே, ப:315

125. அஃதே, ப:364

திருப்பதிகம் பாட நாற்பத்தெண்மரும் நியமிக்கப்படுகின்றனர். கல்வெட்டு களில் சிலைகளின் அளவுகளும் உருவ அமைப்பும் குறிப்பிடப்படுகின்றன. தஞ்சைக் கோவிலில் சிதம்பரம் சித்சபை ஓவியம் வரையப்படுகின்றது. தஞ்சைக் கோவிலில் எண்பத்தொரு பரதக் கரணச் சிற்பங்கள் கருவறை மேல் தளத்தில் செதுக்கப்படுகின்றன. இராசராச சோழன் தில்லை வாழ் அந்தணரிடம் சிவபாத சேகரன் என்ற பட்டம் பெறுகின்றான்.[126]

ஆனந்த தாண்டவமூர்த்த உதயம்

ஆனந்த தாண்டவ முன்னோடிச் சிற்பங்கள்.

ஆந்திரத்தில் ஆறாம் நூற்றாண்டில் முகலிராசபுரம், பைரவகொண்டா ஊர்களிலும், தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் சீய மங்கலத்திலும் காணப் படினும், முழுமையான ஆனந்த தாண்டவச் சிற்பங்கள், கற்சிற்பத்திலும் செப்புப் படிமத்திலும் பத்தாம் நூற்றாண்டில் தான் காணப்படுகின்றன. ஆனந்த தாண்டவம், சிற்பச் சிலைகளில் பத்தாம் நூற்றாண்டின் தென் படினும், ஆனந்த தாண்டவத் தத்துவம் காலத்தால் மிக முந்தியது. இது பதஞ்சலி வியாக்ரபாதர் காலத்திலேயே முகிழ்த்தது. ஆனந்த தாண்டவ உருவங்கள் பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஓவியத்திலோ மர, மண் சிற்பங் களிலோ இருந்திருக்க வேண்டும். இவை காலத்தால் அழிந்திருக்கலாம்.

ஆனந்த தாண்டவ ஆகம வழிபாட்டு முதன்மை

உற்சவ விக்கிரகங்களாகச் செப்புத் திருவுவருங்கள் அமைந்த இக்கா லத்தில் ஆனந்த நடராசர் திருவிழாக்களில் சிறப்பு இடம்பெறும் நிலை இந்நூற்றாண்டில் ஏற்பட்டிருக்க வழியுண்டு. அறிஞர் கே.வி. சௌந்தி ரராசன் அவர்கள் 'ஆனந்த தாண்டவச் சிற்பம் வழிபாட்டுச் சடங்குமுறை உடையதாகப் பத்தாவது நூற்றாண்டில் தான் சிறப்புப் பெறுகின்றது என் பார்.[127]

செம்பியன் மாதேவியார் திருத்தொண்டு

சோழகுலப் பேரரசராகிய கண்டராதித்தர் சிவநடராசரைப் போற்றி திருவிசைப்பா பாடுகின்றார். அவர் திருவிசைப்பாவில் தன் தந்தை பராந்த கசோழர் பொன் வேய்ந்த செய்தியைப் போற்றுவார்.[128] அவரது மனைவியாரான சோழகுலப் பேரரசி செம்பியன் மாதேவியார் தன் காலத்தில் கி.பி. 969-985 இல், தாம் கட்டிய கோவில்கள் அனைத்திலும்,[129] நடராசப் பெருமானுக்குத் தெற்கு தேவகோஷ்டச் சிறப்புச் செய்கிறார். இந்நிலையில் கி.பி. 984 இல் தெற்குத் தேவ கோஷ்டத்தில் மையத் தானம் கிடைக்கின்றது. படம் **எண் 15**

கற்சிற்பங்களில் முதன்மை ஆனந்த நடராசர்கள்

கற்சிற்பங்களில் தமிழகத்தில் ஆனந்த நடராசர் தோரணவாயில், தேவ கோட்டத் தானம் ஆய இரு நிலைகளிலும் முதல் கட்டத்தில் அமைகின்றார். அவற்றுள் தோரணவாயில் நடராசர்கள் காலத்தால் முன்னரே தோன்றுகின் றனர். கிடைத்தவற்றுள், நாம் கண்டவற்றுள், திருச் செம்பூண்டி சடையர் கோவிலில் அர்த்தமண்டபத் தென்பகுதியில் வீணாதர தட்சிணாமூர்த்தி தேவ கோஷ்டத்துக்கு மேல் அமைந்த தோரணத்தில், வீற்றிருக்கும், ஆனந்த

126. சிவராம. ப:221,222. இராச ப:172
127. கமில். ப:78
128. சிவராம. ப:220
129. பாரட். ப:185

நடராசர் திருவுரு காலத்தால் முந்தியது என்பது பாரட் அவர்களின் கருத்து. இதன் காலம் கி.பி. 920 எனலாம்.[130] தேவகோஷ்ட நடராசர்களுள் திரு வாவடு துறை தோரணவாயில் நடராசர் கி.பி. 920 ஆண்டைச் சேர்ந்தது, காலத்தால் முந்தியது என்பர்.[131]

செம்பில் நடராசத் திருவுருவங்கள் (ஆனந்த தாண்டவர் தவிர பிற)

செம்பில் நடராசத் திருவுருவங்கள் முதன்முதலில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தான் அமைகின்றன.

செம்பில் முதல் நடராசத் திருவுரு

நல்லூர், எண்கை, பல்லவ, துடி, தீ யகல், அபய கஜஹஸ்த பிரபையுடன் முயலக, ஊர்த்துவஜானு செப்பு நடராசர், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் முற்பகுதியில் அமைந்த செப்பு நடராசர். இது விஷ்ணுகுண்டின் பாணியில் பல்லவர் ஆட்சியில் இயற்றப்பட்டதாகலாம்.

இதுவே செப்பு நடராசர்களுள் காலத்தால் முந்தியது.[132] பாபநாசம் வட்டம் கிழக்காடு விருப்பாட்சீஸ்வரர் கோவிலில், நாற்கை, செம்பு பல்லவ அர்த்த ரேசித முயலக, துடி, தீ யகல், அபயகர, நடராசர் உள்ளார்.[133] ஒன் பதாம் நூற்றாண்டில் அமைந்த, முதன்மை, செப்பு நடராசர் இருவரும், விஷ்ணுகுண்டின் மரபினராலும், பல்லவ மரபினராலும், அமைக்கப்பட்டவர் கள். பத்தாம் நூற்றண்டில் பின் வரும் நடராசத் திருவுருவங்கள் செம்பில் அமைந்துள்ளன. மதுரை பொருப்பு மேட்டுப்பட்டி படம் எண்18 முதற்காலப் பாண்டியர் கால முயலகன் மேலாடும் செப்பு நடராசர் கால்மாறிய நடனம் ஆடுகின்றார்.[134] தேசியப் பொருட்காட்சிச் சாலையில் பத்தாம் நூற் றாண்டைச் சேர்ந்த முயலகன் மேல் நடமிடும் திருவரங்குளம் சதுர செப்பு நடராசரைக் காண்கிறோம்.[135] இதன் தீ யகல் ;சிவபுர நடராசரை ஒக்கும். சதுர தாண்டவத்தில் அமைந்த ஒரே செப்பு நடராசர் இது. குமார வயலூரில் முற்காலச் சோழரது செப்பு லலித நடராசரும் விரிசடை ஆனந்த நடராசரும் உள்ளனர். கொடுமுடியில் செப்புலலித தாண்டவர் முயலக னின்றி அழகுடன் திகழ்கின்றார்.

செம்பில் ஆனந்த நடராசத் திருவுரு

சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள, முற்காலச் சோழர் கால (கி.பி. 950) ஒக்கூர் ஆனந்த நடராசர் செப்புச் சிலைகட்குள் தொன்மையானது என்பர்.[136] இது புஜங்க திராசிதம் எனப்படுவது. இலண் டன், கென்னிங்டன் விக்டோரியா, ஆலபர்ட் பொருட்காட்சிச் சாலையில் உள்ள முற்காலச் சோழர் காலச் செப்பு ஆனந்த நடராசச் சிற்பமே தொன் மையானது என்பார் பாரட்.[137] பத்தாம் நூற்றாண்டைய (கி.பி.960) முற்காலச் சோழரின் நடனபுரீசுவரர் எனப்படும். தண்டன் தோட்ட ஆனந்த தாண்டவச் செப்புச் சிலையினை காண்கிறோம். திருவாசி இல்லை. அவண் அதே காலத்திய இன்னொரு செப்பு நடராசரும் உள்ளது.[138] கோனேரிரா சபுரத்தில் (கி.பி.977) நாற்பத்து நான்கங்குல உயரமுள்ள நீள்வட்டப் பிரபை முக்கோணத் தீ யகல் அமைந்துள்ள, ஆனந்த நடராசர் செப்புச் சிற்பம்

130. பாரட், ப:186
131. அஃதே, ப:186
132. சிவராம, ப:205,202
133. அஃதே, ப:206,203
134. அஃதே, ப:213,210
135. அஃதே, ப:228,225
136. அஃதே, ப:227,225
137. அஃதே, ப:228,236
138. சிவராம, ப:229-30, 226

படம் எண் 47



பத்தாம் நூற்றாண்டைய, சோழ குலப் பேரசி, செம்பியன் மாதேவியாரால், கோனேரிராசபுரத்துக் கட்டப்பட்ட கோவில், கருவறை தென்தேவ கொட்டத்து அமைந்த முயலகன் மேலாடும், மூன்று கால் பிருங்கி முனிவர் அமைந்த, நான்கு கைகளையுடைய, முதல் சோழ கற்சிற்ப ஆனந்த நடராசர்

படம் எண் 48




பத்தாம் நூற்றாண்டைய, டில்லி பொருக்காட்சிச் சாலையில் உள்ள, திருவரங்குளம், நான்கு கை சோழ செப்பு நடராசர்

படம் எண் 49



பத்தாம் நூற்றாண்டைய, சென்னை பொருட்காட்சிச் சாலையில் உள்ள,
ஒக்கூர், சோழ, செப்பு, ஆனந்த நடராசர்

படம் எண் 50



பத்தாம் நூற்றாண்டைய, பொருப்பு மேட்டுப்பட்டி, நான்கு கை, செப்பு,
பாண்டியர், கால்மாறியாடிய நடராசர்

படம் எண் 51



பத்தாம் நூற்றாண்டைய, குடந்தைக் கருகிலுள்ள, தாண்டவபுரம் என்னும் தண்டன் தோட்டம், முற்காலச் சோழர் ஆனந்த நடராசர்



உள்ளது. கங்கை இல்லை. முகம், மூக்கு, வாய் முதலிய இடங்களில் மறு செப்பம் செய்யப்பட்டுள்ளது. [139] விருத்தாசலம், விருத்தகிரீசுவரர் கோவிலில் (கி.பி.981) செப்பு ஆனந்த நடராசர் செப்புச் சிற்பம் உள்ளது. [140] பாரிஸ் கியூமெட் பொருட்காட்சிச் சாலையில் முற்காலச் சோழ செப்பு ஆனந்த நடராசர் உள்ளார். [141] நியூயார்க் மெட்ரோபாலிட்டன் பொருட்காட்சிச் சாலையில் முற்காலச் சோழர் காலச் செப்பு ஆனந்த நடராசர் உள்ளார். [142] சென்னை அருங்காட்சியகத்திலும், முற்காலச் சோழர்பாணி திருவாலங் காட்டுச் செப்பு ஆனந்த நடராசர் உள்ளார். திருவாசி இல்லை. [143] நியூயார்க் அருங்காட்சியகத்திலும் ஒரு செப்பு ஆனந்த நடராசர் உள்ளார். [144]

சோழ நாட்டில் வங்க நடராசர்

தஞ்சை மாவட்ட மேலக் கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோவிலில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த வங்க பால இனத்தைச் சார்ந்த பதினாறு கை. லலித, நந்திமேல் நடமிடும், நடராசர் உள்ளார். [145] இந்தச் செப்பு நடராசர் தென் கிழக்கு வங்கத்தில் உள்ள டாக்காவைச் சேர்ந்த திப்பெரா மாவட்டத்தைச் சேர்ந்த நட்கர் என்ற ஊரில் உள்ள நர்த்தேசுவரர் எனப்படும் நடராசர் தெய்வ உருவம் போன்ற ஒரு தனி வகை. [146] கங்கை கொண்ட இராசேந்திர சோழர் தனதுபோர் வெற்றிச் சின்னமாக வங்கத்திலிருந்து அதைச் சோழ நாட்டுக்குக் கொண்டு வந்திருக்கலாம்.

வங்கத்தில் நடராசக் கலை

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பால, சேனா இன மன்னர்கள் நடராசக் கலையினை வளர்த்து வந்துள்ளார்கள். வங்கதேசத்தில் உள்ள விக்ரம்பூர் பகுதியில் நடேஸ்வரம், நட்கர் என்ற நடராசப் பெயருடைய கிராமங்கள் உள. இது வங்கத்தின் பழைய தலைநகர்ப் பகுதி. [147]

வங்கத்தில் அதன் தென்கிழக்குப் பகுதிகளாகிய வங்கம், சம்தானம் ஆகிய இரு பண்டை மாவட்டங்களில் தான், மிகுதியாக, நடராசச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. ஹேறக் அவர்கள் பதிவு செய்த பதினேழு சிற்பங்களுள், பதினாறு, கற்சிற்பங்கள். அப்பதினாறில் பதினொன்று பங்களா தேசத்தில் கிடைத்தன. பங்களா தேசத்தில் கிடைத்த பதினொன்றில் ஏழு வங்கத்தின் பழைய தலை நகரான டாக்கா மாவட்டத்தில் உள்ள விக்கிரம்பூர் எல்லையில் கிடைத்தன. [148] மயூரபுராணம், நர்த்தேசுவரர், நந்தியின் மேல் நடமாடுவதைக் குறிக்கின்றது. இம்மரபு வங்கத்தில் உளது. நந்தி மேல் ஆடும் மூர்த்திக்கு இரண்டு கைகள். [149] கிழக்கிந்தியப் பகுதியில் உள்ள மயூரபஞ்ச் வகை நடராசச் சிற்பங்களில், நாட்டிய கரணங்கட்குள் வராத உடற்பயிற்சிகளில் வரும் வகை நடராசர்களும் உண்டு. [150] இது வளர்ச்சி நிலை.

தக்காணத்திலிருந்து சேனா இன மன்னர்கள் வங்கம் வரும் பொழுது, தம்முடன் சைவத்தையும் கொண்டு வந்தார்கள் என 'ஹேறக்' என்பார் கூறுகிறார். [151] தக்காண மரபு, வங்கத்தில் இடபமேல் நடனத் தன்மையுடன் தனி மரபாய் வளரத் தொடங்கியது. டாக்கா பொருட்காட்சிச் சாலையில், வல்லா

139. பாரட், ப:190.
140. அஃதே, ப:194
141. சிவராம ப:242,231
142. அஃதே, ப:240,230
143. அஃதே, ப:237,229
144. அஃதே, ப:240,230
145. அஃதே, ப:303,304
146. அஃதே, ப:304
147. கேஸ்டன், ப:57
148. அஃதே, ப:57
149. அஃதே, ப:57
150. அஃதே, ப:2
151. அஃதே, ப:57

லபாடி ஊரைச் சேர்ந்தது ஒன்றும், டாக்கா மாவட்ட இராணிஹத்தி ஊரைச் சேர்ந்தது ஒன்றுமாக இரு நந்திமேல் நடமிடும் பால வம்ச நடராச உருவங்கள் இடம் பெறுகின்றன.[152] மயூரபஞ்சு, பொருட்காட்சிச் சாலையில் கீழைக் கங்க நடராசர் உள்ளார்.[153] டாக்கா பொருட்காட்சிச் சாலையில் டாக்கா மாவட்ட இராணிஹத்தி ஊரைச் சார்ந்த பாலநடராசர் இடபத்தின் மேல் வீணையுடன் நடமிடுபவராகக் காட்சி தருகின்றார்.[154]

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் செப்புச் சிற்பங்கள் உருவாகின்றன. ஆனந்த தாண்டவம் செம்பிலும் கற்சிற்பத்திலும் இந்நூற்றாண்டில் உருவாகின்றது. தோரணவாயில் நிலைக்கு மேல், தமிழகத்தில் தேவகோஷ்ட தென்மையத் தானம் நடராசருக்குக் கிடைக்கின்றது.[155] வங்க நடராசர் தமிழகம் வருகிறார். வங்க நடராச மரபு டாக்கா மாவட்டத்தில் வலுப்பெற்றிருக்கின்றது.[156] வங்கம், அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம், மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் நடராசருக்குப் பெருமை ஏற்படுகின்றது.

.17 மன்னர் வழிமுறைகளில் சிவதாண்டவத் திருவுருவங்கள்

டாக்டர், சிவராமமூர்த்தி, அவர்களின் பதின்மூன்றாவது அத்தியாயத்தில் மன்னர் இனவரிசைப்படி சிவதாண்டவத் திருவுருவங்கள் அச்சிடப்பட்டும், விளக்கப்பட்டுமுள்ளன. அவற்றுள் அச்சிடப்பட்டுள்ள நடராச உருவங்களின் பட்டியலை வைத்துக் கொண்டு எந்தெந்த மன்னர் வழிமுறைக் காலத்தில் எவ்வெவ்வகை நடராசர் திருவுருங்கள் வளர்ந்துள்ளன என்பதைக் காண முயல்வோம்.

குப்த நடராசர்கள்

குப்தர் கால நடராசர்களுள், அச்சிடப்பட்டுள்ள மூன்றனுள், சிர்ப்பூர் நடராசர் ஒன்றுதான் வகை கண்டுபிடிக்க முடியும் அளவில் லலித நடராசராக அமைந்துள்ளது. இது ஐந்தாம் நூற்றாண்டையது. குப்தர் கால நடராசர்கள் புஜதாருவனம் என்று அழைப்பதற்கேற்ப நான்குக்கும் மேற்பட்ட கைகளையுடையவராவர்.

வாகாடக நடராசர்கள்

கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த எல்லோரா, தசாவதாரக் குகையில், லலித நடராசரும், இராமேஸ்வரக் குகையில் சதுர நடராசரும் உள்ளனர். அதற்குச் சற்று முந்தைய காலத்திய ஐந்து, ஆறாம் நூற்றாண்டு எனக் கூறப்படும் காலத்தில் அமைந்த பம்பாய் எலிபெண்டா குகையில் அமைந்த நடராசர் லலிதத்தில் நடமிடுகின்றார். அச்சிடப்பட்டுள்ள மூன்று வாகாடக நடராசர்களுள் இரண்டு லலிதம், ஒன்று சதுரம்.

விஷ்ணு குண்டின் நடராசர்கள்

ஆந்திர முகலிராசபுரம் முயலகன் மேலாடும் பல்கை ஊர்துவஜானு நடராசர் ஆறாம்நூற்றாண்டைச் சார்ந்தவர். இந் நடராசரைக் கிடைக்கும் நடராசச் சிற்பங்களுள் முதல் ஆனந்த தாண்டவ முன்னோடி என்பர்.

முற்காலப் பல்லவ நடராசர்

கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆந்திர நெல்லூர் மாவட்ட பைரவகொண்டா குகையில் அமைந்த பல்கை நடராசர் பரதவகையால்

152. சிவராம. ப:300
153. அதே. ப:295
154. அதே. ப:300
155. பாரட். ப:182-83
156. சிவராம ப:292,300,299,303

படம் எண் 52



பத்தாம் நூற்றாண்டைய, டாக்கா பொருட்காட்சிச் சாலையில் உள்ள, வங்க, பல்லபாடி ஊரைச் சேர்ந்த, கங்கை, கௌரி சமேத, இசைக் கணங்களுடன், பத்து கைகளையுடைய நந்தி மேல் நடமிடும் பாலா இன சதுர தாண்டவர்

படம் எண் 53



பன்னிரண்டாம் நூற்றாண்டைய, ஒரிசா பாணி, குளித்தலை, சோழ, செப்பு, ஆனந்த நடராசர்

வகை சொல்லப்பட இயலவில்லையெனினும் தோற்ற அளவில் இதுவும் ஒரு ஆனந்த தாண்டவ முன்னோடி என்பர்.

முற்கால மேலைச் சாளுக்கிய நடராசர்கள்

முற்கால மேலைச் சாளுக்கிய நடராசர்கள், ஆறாம் நூற்றாண்டில் ஒன்றும், எட்டாம் நூற்றாண்டில் பதினாறும் அச்சிடப்பட்டுள்ளன. எட்டாம் நூற்றாண்டைய நடராசர்களுள் மூன்று நடராசர்கள் பரத வகையில் வரைய றுத்து கூறப்படாதவையாக உள்ளன. இப் பதினாறு நடராசர்களுள், பட்டடக்கல்லில் ஆறு நடராசர்கள் அமைந்துள்ளனர். பட்டடக்கல் நடராசர்க ளுள், சதுரம் இரண்டு, ஊர்துவஜானு இரண்டு, ஸ்வதிஸ்தகம் - ஒன்று, அர்த்தமல்லி ஒன்றாக உள்ளன. ஆலம்பூரில் இரண்டு லலித நடராசர்களும், சத்தியவோலுவில் ஒரு லலிதநடராசரும், குந்தவேலியில் ஒரு லலித நடராசர், ஒரு சதுர நடராசரும் ஐஹோளேயில் ஒரு ரேசித நிக்குதித நடராசரும் அமைந்துள்ளனர். ஆறாம் நூற்றாண்டில் அமைந்த மைசூர் பாதாமி நடராசர் சதுரமாக உள்ளார்.

கீழைச் சாளுக்கிய நடராசர்கள்

பிக்கவோலுவில் பத்தாம் நூற்றாண்டுக்குடையதாக இரு நடராச உரு வங்கள் நான்கு கைகள், கஜஹஸ்தம் உடையனவாக உள்ளன.

பல்லவ நடராசர்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கும், ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்ததாக, பன்னிரெண்டு நடராசர்கள் பல்லவர் காலத்தாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வந்தவாசி மாவட்ட சீயமங்கலத்தில் தமிழகத்தில் அமைந்த முதல் ஆனந்த தாண்டவச் சிற்பம் என்று அழைக்கப்படுகின்ற நான்கு கை அபயஹஸ்த, ஸ்திதபாத, குஞ்சிதபாத நடராசர் அமைகின்றார். மாமல்லபுரத்தில் ஒன்றும், காஞ்சியில் இரண்டுமாக மூன்று ஊர்துவஜானு நடராசர்கள் ஏழாம் நூற்றாண்டில் அமைகின்றனர். ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியில் இரண்டு அலித நடராசர்கள் அமைகின் றார்கள். அலித வகை, திரிபுராந்தகப் போர்க் கோலம் போன்ற வகையினது. இதே நூற்றாண்டில் காஞ்சியில் இரண்டும், பானமலையில் ஒன்றுமாக மூன்று லலாடதிலக நடராசர்கள் அமை கின்றனர். ஒன்பதாம் நூற்றாண்டில் அமைந்ததாக அச்சிடப்பட்டுள்ள மூன்று செப்பு நடராசர்களுள், கூரம் நடரா சரும், நல்லூர் நடராசரும், ஊர்துவஜானுவாக உள்ளனர். கிழக்காடு செப்பு நடராசர் அர்த்தரேசிதத்தில் அமைந்துள்ளார். பொதுவாக பல்லவர் காலத்தது என்று கூறப்படும் பன்னிரெண்டு நடராசர்களுள் மூன்று கற்சிற்பங்களும், இரண்டு செப்புச் சிற்பங்களும், ஊர்துவஜானுவாக உள்ளனர். அதனை அடுத்து மூன்று லலாட திலகங்கள் அமைகின்றன. இரண்டு அலிதம். ஒரு அர்த்தரேசிதம், ஒரு புஜங்கதிராசிதம் என்றும் மற்றவை அமைகின்றன.

முற்காலப் பாண்டிய நடராசர்கள்

முற்காலப் பாண்டியர் காலத்ததாக ஏழாம் நூற்றாண்டில் நெல்லை திருமலைப் புரத்தில் ஒரு சதுரதாண்டவர் அமைகின்றார். எட்டாம் நூற் றாண்டில் திருப்பரங்குன்றத்தில் லலித நடராசர் அமைகின்றார். திருப்பரங்குன்றம் நடராசரைச் சந்தியா தாண்டவம் என்பதுண்டு. எட்டாம் நூற்றாண்டில் குன்னக்குடியிலும், ஒன்பதாம் நூற்றாண்டில் செவல் பட்டி யிலும் பாதவஸ்திக நடராசர்கள் அமைகின்றார்கள். ஒன்பதாம்

நூற்றாண்டில் பொருப்புமேட்டுப்பட்டியில் கால் மாறி ஆடிய கரணத்தில் ஒரு செப்பு நடராசர் அமைகின்றார்.

முற்காலச் சேரர்

சேர நாட்டு விழிஞ்ஞத்தில் எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டு என்று குறிப்பிடப்படுகின்ற சதுர அமைப்புடைய நடராசரைப் பார்க்கின்றோம்.

நொளம்ப நடராசர்கள்

முற்கால மேலைச் சாளுக்கியரையடுத்து ஹேமாவதியைத் தலைநகராகக் கொண்டு நொளம்பர்கள் ஆட்சி செலுத்தினர். இவர்களுடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. நொளம்பர் கால ஹேமாவதி நடராசர்கள் மூவராவர். அவை பிரிஸ்தாவஸ்திகம், சதுரம், ஊர்துவஜானு என்று வகைக்கு ஒன்றாக அமைகின்றன.

இராஷ்டிரகூட நடராசர்கள்

எல்லோரா, இலங்கேஸ்வரா குகையில் பிரிஸ்தாவஸ்திக நடராசரும், சதுர நடராசரும் அமைகின்றனர். எல்லோரா கைலாசர் கோவிலில் நான்கு கை பிரத்யாலித நடராசரும் கைலாச கோயில் நந்தி மண்டபத்தில் லலித நடராச வண்ண ஓவியமும் அமைந்துள்ளன.

சோழ நடராசர்கள்

சோழர் காலத்தியது எனப்படும் நடராசத் திருவுருவங்கள் பத்து முதல் பதின் மூன்றாம் நூற்றாண்டு வரையில் உள்ளவையாக முப்பத்து ஏழு நடராசத் திருவருவங்கள் டாக்டர். சிவராமமூர்த்தி அவர்களின் நூலில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக ஒக்கூர். திருவாலங்காடு, தென்கென்சிங்டன், பாரீஸ், நியூயார்க் அருங்காட்சியகங்கள் முதலியவற்றுள் ஒவ்வொரு செப்பு ஆனந்த நடராசரும், தண்டன் தோட்டத்தில் இரண்டு செப்பு நடராசர்களும் கொடுமுடி, குமார வயலூர் முதலிய ஊர்களில் செப்பு லலித நடராசர்களும், திருவரங்குளத்தில் செப்பு சதுர நடராசரும், ஆந்திர நந்தியூரில் லலித கற்சிற்ப நடராசரும், ஸ்ரீனிவாசநல்லூரில் இரண்டு ஊர்துவஜானு கற்சிற்ப நடராசரும், மாயூரத்தில் ஒரு கற்சிற்ப ஆனந்தநடராசரும் ஆகப் பதினான்கு கற்சிற்ப நடராசர்கள் இடம் பெறுகின்றனர். பதினோராம் நூற்றாண்டில் ஒன்பது நடராசத் திருவுருவங்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் தஞ்சை, புங்கனூர், கிழக்காட்டூர், செய்நல்லூர், முதலிய ஊர்களில் செப்பு ஆனந்தநடராசரும், கீரனூர், திருவாவடுதுறை, திருவாலீஸ்வரம், மாயூரம் முதலிய ஊர்களில் கற்சிற்ப ஆனந்த நடராசரும் ஒரு வண்ண ஓவியமும் ஆக ஒன்பது நடராசத் திருவுருவங்கள் அமைகின்றன. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பதினான்கு நடராசத் திருவுருவங்கள் அமைகின்றன. அவற்றுள் தீர்த்தனகிரி, தரங்கம்பாடி, ஸ்ரீமுஷ்ணம், திருப்புகலூர், பஞ்சநதிக்குளம், வளவனூர், திருக்கண்டீஸ்வரம், குளித்தலை, முதலிய ஊர்களிலும் தஞ்சைக் கலைக் கூடம், ஆம்ஸ்டர்டாம் அருங்காட்சியகம் முதலிய இடங்களிலும் செப்பு ஆனந்த நடராசர்கள் இடம் பெற்றுள்ளனர். கீரனூரில் கற்சிற்ப் ஆனந்த நடராசர் உள்ளார், திருவக்கரையில் ஒரு செப்பு ஊர்துவஜானு நடராசர் இருக்கிறார். குளித்தலை ரிஷியூரில் கற்சிற்ப ஊர்துவஜானுவும், குளித்தலையில் கற்சிற்ப லலாட திலக நடராசரும் அமைந்துள்ளனர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் உத்தத்தூரில் செப்பு ஆனந்த நடராசர் இடம் பெறுகின்றார்.

பொதுவாகப் பார்க்கையில் இம்முப்பத்தி ஏழு நடராசர்களுள் சோழர் காலத்தில் இருபத்திரண்டு செப்பு ஆனந்த தாண்டவமும், ஆறு கற்சிற்ப ஆனந்த தாண்டவமும், இரண்டு கற்சிற்ப ஊர்துவஜானுவும் இரு செப்பு ஊர்துவஜானுவும் ஆக நான்கு ஊர்துவஜானுவும் இரண்டு செப்பு லலித நடராசரும், ஒரு கற்சிற்பலலித நடராசரும் ஒரு செப்பு சதுர நடராசரும், ஒரு கற்சிற்ப லலாட திலகமும் அமைகின்றன. இருபத்திஎட்டு ஆனந்த தாண்டவத்தை அடுத்து நான்கு ஊர்துவஜானுக்கள் அமைகின்றன.

கீழைக் கங்க நடராசர்

ஒரிசாவைச் சேர்ந்த புவனேஸ்வர் நகரக் கோவில்களில் நடராசத் திருவுருவங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தொடங்கி விடுகின்றன. புவனேஸ்வர் பரசுராமேஸ்வரர் கோவிலில், இரண்டு நடராசத் திருவுருங்களும், முகலிங்கம் சோமேஸ்வரர் கோவிலில் ஒரு நடராசத் திருவுரு வமும், முகலிங்கம் புவனேஸ்வர் சிதிரேஸ்வர் கோவிலில் ஒரு நடராசத் திருவுரு வமும் ஏழாம், எட்டாம் நூற்றாண்டினதாக அமைகின்றன. புவனேஸ்வர் பரதேஸ்வரர் கோவில் முதலிய இடங்களில் இவை பெரும்பான்மையும் லலிதம், அலிதம் போன்ற வகையைச் சார்ந்தவையாய் இருக்கின்றன.

கூர்ஜரபிரதிகார நடராசர்கள்

கூர்ஜரபிரதிகார மன்னர்கள் தன்னுடைய அகண்ட சாம்ராஜ்யத்தில், குப்த மரபுகளைப் போற்றிக் காத்து வந்துள்ளார்கள். இம்மன்னர்களின் ஆட்சிக் காலத்தில், ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் அமைந்த நடராசத் திருவுருவங்கள் டாக்டர். சிவராமமூர்த்தி அவர்களின் நூலில் வெளியிடப் பட்டுள்ளன. இக்காலத்தில் வகை சுட்டப்படுவனவாக ஒன்பதாம் நூற்றாண்டில் பத்து நடராசத் திருவுருவங்களும், பத்தாம் நூற்றாண்டில் மூன்று நடராசத் திருவுருங்களும் அமைகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டில் நான்கு லலித நடராசர்களும், மூன்று ஊர்துவஜானு நடராசர்களும், மூன்று சதுர நடராசர்களும் அமைகின்றார்கள். பத்தாம் நூற்றாண்டில் அமைந்த மூன்று நடராசர்களும் லலிதமாக அமைகின்றனர்.

சண்டெல்லா நடராசர்கள்

சண்டெல்லா வகையைச் சேர்ந்த பெருமன்னர்கள் சந்திராத்ரேயர்கள் எனப்படுவர். இவர்கள் கஜுராகோவைத் தலைநகராகக் கொண்டவர்கள். இவர்கள் காலத்தில் பத்தாம் நூற்றாண்டையதாக அலிதம் ஒன்றும், லலிதம் ஒன்றுமாக இரு நடராசத் திருவுருவங்கள் குறிப்பிடப்படுகின்றன.

கடல் கடந்த நாடுகளில் நடராசர்

ஜாவா தீவில் ஒன்பதாம் நூற்றாண்டில் ஸ்ரீவிஜய மன்னர் காலத்தில் சண்டிப் பிரம்மானம் கோவிலில் பரதக்கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கம்போடிய நாட்டில், வீணாதர சிவநடனம், கஜாந்தக சிவநடனம், காரைக்கால் அம்மையார் திருவுருவங்கள் முதலியன பல்வேறு திருக்கோயில் களில் இடம் பெற்றுள்ளன. கம்போடியா, மலேயா, இந்தோனேசியா போன்றே, இந்தோ-சீன கடற்கரையில் அமைந்த பழைய சம்பா நாடு, இந்தியாவோடு தொடர்பு கொண்டிருந்த நாடாகும். கடல் கடந்த நாடுகளில் கிடைக்கும் சிவநடராசத் திருவுருவங்களை எண்ணிப் பார்க்கும் பொழுது, சம்பா பகுதியில் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நடராசத் திருவுருவங்கள் பல கிடைக்கின்றன. சம்பாவைச் சேர்ந்த மீசான் பகுதியில் எட்டாம் நூற் றாண்டைச் சேர்ந்த இரு சதுர நடராசர்கள் இடம் பெறுகின்றனர். 'போங்'

பகுதியில் பதினாறு கைகளையுடைய லலிதம் போன்ற, காலமைந்த நடராசத் திருவுருவம் ஒன்றுள்ளது. தனாங்சாம் அருங்காட்சியகத்தில், இருபத்துநான்கு கைகளையுடைய பிரஸ்தாவஸ்திக நடராசர் ஒருவர் உள்ளார். அதே அருங் காட்சியகத்தில் நான்கு கை நடராசரும் உள்ளார். 'தோ போன்' பகுதியில் நந்தி மேலாடும் லலித நடராசர் அமைகின்றார். ஐராய், 'போகிலாங்' பகுதி யில், ஆறு கை லலித நடராசர் ஒருவர் உள்ளார். தனாங் சாம் அருங்காட்சியகத்தில் பத்து கைகளையுடைய சதுர நடராசர் உள்ளார். தோ நகர் தீ நா தராங்கில்' நந்தி மேல் நடமாடும் சதுர நடராசர் உள்ளார். இவண் சம்பா வகை நடராசர்களுக்கு, குறிப்பிடப்பட்டுள்ள பரத வகைக் குறிப்புகள் ஊகத்தால் குறிப்பிடப்படுபவை. இவையாவும் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

பிற அரசவகை

பாரமார் அரசர்கள், ஹைஹய அரசர்கள், முதலியோர் பதினோராம் நூற்றாண்டில் நடராசத் திருவுருவங்களை அமைத்திருக் கின்றார்கள். பத்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பாலா, சேனா வகை அரசர்கள் நந்தி மேல் நடமாடும் நடராசத் திருவுருவங்களை அமைத்திருக்கின்றனர். பிற்காலச் சாளுக்கியர் ஹொய்சலர், காகத்தியர், விஜயநகரப் பேரரசர்கள், நாயக்க மன்னர்கள் போன்ற பலரும் நடராசத் திருவுருவங்களை அமைத்திருக்கிறார் கள். இவை யாவும் பத்தாம் நூற்றாண் டிற்கு அப்பால் எழுந்தவை.

.18 நடராச வகைகள்

டாக்டர். சிவராமமூர்த்தி அவர்களின் நூலின் அகரவரிசைப்படி எண் ணிப் பார்க்கையில், வெளிவந்துள்ள குறிப்பிடப் பட்டுள்ள லலித, ஊர்துவ ஜானு, சதுரம், ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் முதலியவற்றுள், ஐந்தாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டுக்குள் அமைந்த கால அளவில், ஐம்பத்தைந்து லலித நடராசர்கள், ஐம்பத்து நான்கு ஊர்த்துவ ஜானு, முப்பத்தைந்து சதுரம், பதினெட்டு ஊர்த்துவ தாண்டவம், மூன்று லலாட திலகம், இருபத்திரண்டு ஆனந்த தாண்டவம், இருபத்திரண்டு புஜங்க நட னங்கள் என்ற எண்ணிக்கையில் அடங்குவனவாக உள்ளன. எண்ணிக்கையில் அவற்றின் முதன்மையினைப் பின்பவருமாறு வரிசைப் படுத்தலாம்.

நடன வகை வளர்ச்சி பட்டி எண். 16

	நடன வகை	தொடக்க நூற்றாண்டு	கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை மொத்த எண்ணிக்கை	கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை மொத்த எண்ணிக்கை
1.	லலித நடராசர்கள்	ஐந்தாம்	33	55
2.	சதுர நடராசர்கள்	ஆறாம்	28	.35
3.	ஊர்த்துவ ஜானு நடராசர்கள்	ஏழாம்	16	54
4.	ஊர்த்துவ தாண்டவ, லலாட திலக நடராசர்கள்	ஏழாம்	3	13 + 5
5.	ஆனந்த தாண்டவ நடராசர்கள்	பத்தாம்	11	22

லலிதம், சதுரம், ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம் முதலியன பற்றிய வளர் சிற்ப எண்ணிக்கைகள் பற்றிய குறிப்புகளில் மன்னர் மரபு, கால வரிசைகளில் பின்வரும் பத்திகளில் காண்போம்

ஐந்தாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுக்குள் அமைந்த குறிப் பிடப் பட்டுள்ள நடராச மூர்த்தங்களை ஆய்வு செய்கையில், பின்வரும் முடிவுகள் வெளிவருகின்றன.

மன்னர் மரபு வகையில், கால வரிசையில் அவற்றின் வளர்ச்சியினைக் காண முயல்வோம்.

லலித நடராசர்கள்

1. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்தனவாக வெளியிடப்பட்டவை 55.
2. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்தவை என வெளியிடப்பட்டவை 33.
3. கற்சிற்பத்தில் முதல் லலித நடராசர் குப்தர்கால சிர்பூர் நடராசர் ஐந்தாம் நூற்றாண்டு.
4. செப்புச் சிற்பத்தில் முதல் லலித நடராசர் பாண்டியர் வகை, கொடுமுடி நடராசர் பத்தாம் நூற்றாண்டு.
5. பத்தாம் நூற்றாண்டுக்குள் அமைந்த முப்பத்து மூன்று லலித நடராசர்களுள் எட்டாம் நூற்றாண்டில் மேலைச் சாளுக்கியர் வகையில் பதினொன்றும், அதனை அடுத்து, ஒன்பதாம் நூற்றாண்டில் கூர்ஜர பிரதிகாரா வகையில் ஐந்தும் ஒரே மன்னர் காலத்தில் அதிகமாக அமைந்தவை.
6. எட்டாம் நூற்றாண்டில், பதிநான்கும் ஒன்பதாம் நூற்றாண்டில் ஒன்பதும் அதிக எண்ணிக்கைகளில் அமைந்தவையாகும்.
7. பின்வரும் பட்டி கால மன்னர் வகை வரிசையில் லலித நடராசர் வளர்ச்சியினைக் காட்டும்.

மன்னர் வழி முறை வரிசையில் லலித நடராசர் வளர்ச்சி பட்டி எண்: 17

லலிதம்	நூற்றாண்டுகள்						மொத்த எண்ணிக்கை
	5	6	7	8	9	10	
குப்தர்	1						1
வாகாடகர்	1	1					2
முற்கால மேலைச்சாளுக்கியர்				11			11
முற்காலப் பாண்டியர்				1			1
சோழர்						3	3
கீழைக்கங்கர்			2				2
காஷ்மீரம்					1		1
கூர்ஜரபிரதிகார					5	1	6
கஜுராகோ சண்டெல்லா						1	1
கம்போடியா					1		1
சம்பா				2	2		4
மொத்தம்	2	1	2	14	9	5	33

சதுர நடராசர்

1. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்தனவாக வெளியிடப்பட்ட சதுர நடராசர்களின் எண்ணிக்கை முப்பத்தொன்பது.
2. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்தவை என வெளியிடப்பட்டவற்றின் எண்ணிக்கை இருபத்தெட்டு.
3. கற்சிற்பத்தில் முதல் சதுர நடராசர்கள், ஆறாம் நூற்றண்டைச் சேர்ந்த எல்லோரா வாகாடகச் சதுரர், மைசூர் பாதாமி மேலைச் சாளுக்கிய சதுரர், ஒரிஸ்ஸா அசனபெட் பாஞ்சா இன சதுரர் முதலியவர்களாகும்.
4. செப்புச் சிற்பத்தில் அமைந்த ஒரே சதுர நடராசர் பத்தாம் நூற்றாண்டைய திருவரங்குளம் சோழ நடராசராகும்.
5. இருபத்தெட்டு சதுர நடராசர்களுள், ஒரே மன்னர் காலத்தில் எண்ணிக்கையில் மிகுதியாக அமைந்தவை ஏழாம் நூற்றாண்டில் கீழக்கங்கர் வகையில் ஐந்து சதுர நடராசரும், எட்டாம் நூற்றாண்டில் முற்கால மேலைச் சாளுக்கியர் வகையில் நான்கும், கம்போடியாவில் நான்கும், கூர்ஜரபிரதிகாரா வகையில் மூன்றுமாக அமைந்தவையாகும்.
6. நூற்றாண்டு வகையில் பார்க்கையில் இருபத்தெட்டனுள் எட்டாம் நூற்றாண்டில் பதினொன்றும், ஏழாம் நூற்றாண்டில் ஆறும், ஒன்பதாம் நூற்றாண்டில் ஐந்தும் எண்ணிக்கையில் மிகுந்தன எனலாம்.
7. பின்வரும் பட்டி கால, மன்னர் வகை வரிசையில் சதுர நடராசர் வளர்ச்சியினைக் காட்டும்.

மன்னர் வழி முறை வரிசையில் சதுர நடராசர் வளர்ச்சி

பட்டி எண். 18

சதுரம்	5	6	7	8	9	10	மொத்தம்
வாகாடகர்		1					1
முற்கால மேலைச்சாளுக்கியர்		1		4			5
கீழைச்சாளுக்கியர்						2	2
முற்காலப் பாண்டியர்			1				1
நொளம்பர்					1		1
இராஷ்டிரகூடர்				3			3
சோழர்						1	1
கீழைக்கங்கர்			5				5
வங்க பால, சேனாஇனம்						1	1
கூர்ஜரபிரதிகாரா					3		3
கம்போடியா					1		1
சம்பா				4			4
		2	6	11	5	4	28

ஊர்த்துவ ஜானு நடராசர்

1. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்த வெளியிடப்பட்ட ஊர்த்துவ ஜானு நடராசர் ஐம்பத்து நான்கு
2. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்த வெளியிடப்பட்ட ஊர்த்துவ ஜானு - பதினாறு.
3. கற்சிற்பத்தில் முதல் ஊர்த்துவ ஜானு நடராசர் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த முகலிராசபுரம் ஆனந்த தாண்டவ முன்னோடி எனப்படும் ஊர்த்துவ ஜானு நடராசராகும்.
4. செப்புச் சிற்பத்தில் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் வகை கூரம் செப்பு ஊர்த்துவ ஜானு நடராசரும், நல்லூர் பல்லவ ஊர்த்துவ ஜானு நடராசரும் காலத்தால் முந்தியவர்கள்.
5. பதினாறு ஊர்த்துவ ஜானு நடராசர்களுள், அரசவகையில் பார்க்கையில், ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் மூன்றும், ஒன்பதாம் நூற்றாண்டில் கூர்ஜர பிரதிகாரா வகையில் மூன்றும், அரச வகையில் ஒரே வகையில் மிகுதியான எண்ணிக்கையில் அமைந்தவையாகும்.
6. நூற்றாண்டு வகையில் பார்க்கையில் ஒன்பதாம் நூற்றாண்டில், கூர்ஜர பிரதிகாரா வகையில் மூன்றும், பல்லவர் வகையில் இரண்டும். நொளம்பர், கம்போடிய வகைகளில் ஒவ்வொன்றுமாக ஏழு அமைகின்றன. அதனை அடுத்து எட்டாம் நூற்றாண்டில் முற்கால மேலைச் சாளுக்கியர், இராஷ்டிர கூடர் வகை இரண்டிரண்டும். காஷ்மீரத்தில் ஒன்றுமாக ஐந்து ஊர்த்துவ ஜானு நடராசர்கள் அமைகின்றனர்.
7. பின்வரும் பட்டி கால வரிசையில் மன்னர் வழிமுறையில் ஊர்த்துவ ஜானு நடராசர்களின் வளர்ச்சியைக் காட்டும்.

மன்னர் வழி முறை வரிசையில் ஊர்த்துவ ஜானு நடராசர் வளர்ச்சி

பட்டி எண். 19

ஊர்த்துவ ஜானு	5	6	7	8	9	10	
விஷ்னுகுண்டின்		1					1
முற்கால மேலைச்சாளுக்கியர்				2			2
பல்லவர்			3		2		5
நொளம்பர்					1		1
இராஷ்டிரகூடர்				2			2
காஷ்மீரம்				1			1
கூர்ஜரபிரதிகாரா					3		3
கம்போடியா					1		1
மொத்தம்		1	3	5	7		16

ஆனந்த நடராசர்கள்

1. கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் அமைந்தவை என வெளியிடப்பட்டவை இருபத்திரண்டு.
2. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் அமைந்தன என வெளியிடப்பட்டவை ஒன்பது.
3. கற்சிற்பத்தில் முதல் ஆனந்த நடராசர் என வெளியிடப்பட்டவை
   அ) ஆந்திர முகலிராசபுரம் ஊர்த்துவஜானு நடராசர். ஆனந்த தாண்டவ முன்னோடி எனப் போற்றப்படுகிறது. இது ஆறாம் நூற்றாண்டையது.
   ஆ) வந்தவாசி மாவட்ட சீயமங்கலம் தூண் சதுரத்தமைந்த பல்லவ புஜங்க திராசிதம் ஆனந்த தாண்டவ முன்னோடி எனப் போற்றப்படுகிறது. இது ஏழாம் நூற்றாண்டையது.
   இ) முழுமையான ஆனந்த தாண்டவர் கற்சிற்பம் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த செம்பியன் மாதேவியார் கால கோனேரிராசபுரம், தென் தேவ கோஷ்ட கற்சிற்ப சோழ ஆனந்த நடராசர் எனலாம்.
4. செப்புச் சிற்பத்தில் முதல் ஆனந்த நடராசர் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒக்கூர் சோழ ஆனந்த நடராசராகும்.
5. ஆனந்த தாண்டவ முழுமையான அமைப்பு சோழர் காலத்தில் செம்பு, கற்சிற்பம் இரண்டிலும் ஒரே காலத்தில் பத்தாம் நாற்றாண்டில் தான் அமைகின்றது. அதற்கு மேல் வரும் நூற்றாண்டுகளில் அவை மேலும் வளர்கின்றன. மேலும், ஆனந்த தாண்டவ உருவங்கள் மற்ற தாண்டவங்களைவிட செப்புப் படிமத்தில் மிகுதியும் வந்துள்ளன.
6. ஆனந்த தாண்டவ முன்னோடிகள் கற்பசிற்ப முன்னோடிகள் பகுதியிலேயே தரப் பட்டு விட்டன. அவை வளர்ச்சிக்கு அடிப்படை வகுத்த முன்னோடிச் சிற்பங்கள்.
7. செப்புச் சிற்பங்கலில் கைகளின் எண்ணிக்கை நான்கு என்ற அளவுக்குக் குறைகின்றன. மிகுந்த கைகள் உடையனவும் உண்டு.

ஆனந்த தாண்டவம் புஜங்க திராசிதம் பட்டி எண். 20

	5	6	7	8	9	10	மொத்தம்
பல்லவர்			1				1
இராஷ்டிரகூடர்				1			1
சோழர்						9	9
			1	1		9	11

ஊர்த்துவ தாண்டவர்

யோக வழிபாட்டு முறையில் ஊர்த்துவ தாண்டவர் ஒரு உயர்நிலை. முதல் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தம் ஏழாம் நூற்றாண்டில் கற்சிற்ப மாக, காஞ்சி கைலாச நாதர் கோவிலிலும், வண்ண ஓவியமாகப் பானமலை யிலும் பல்லவர் தொண்டாக அமைகின்றன.

முதல் செப்பு ஊர்த்துவ தாண்டவர் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த சோழ ஊர்த்துவ தாண்டவர் ஆகும்.

ஏழாம் நூற்றாண்டில் காஞ்சி கைலாச நாதர் கோவிலில் இரண்டு பல்லவக் கற்சிற்பங்களும், அதே நூற்றாண்டில் பல்லவ பானமலை வண்ண ஓவியமும், பத்தாம் நூற்றாண்டில் திருவாலங்காட்டுச் சோழச் செப்பும், பன்னிரண்டாம் நூற்றாண்டதாகக் குளித்தலை சோழக் கற்சிற் பமுமாக ஐந்து ஊர்த்துவ தாண்டவத் திருவுருவங்கள் வெளியிடப்பட்டுள்ளன. படம் எண் 23

.19 நடராச மூர்த்தங்களின் பொது நிலை வளர்ச்சி

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில், சிர்புர் குப்த லலித நடராசராகவும் எலி பெண்டாவில் வாகாடக லலித நடராசராகவும் அமைந்து, வளர்ந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டில், எல்லோராவில் வாகாடக சதுர நடராசராகவும், மைசூர் பாதாமியில் கஜஹஸ்த சதுர நடராசராகவும், ஒரிஸ்ஸா அசனபட்டில் பாஞ்சா இன சதுர நடராசராகவும் அமைந்து வளர்ந்து கி.பி. ஏழாம் நூற் றாண்டில் ஆந்திர முகலிராசபுரம் விஷ்ணுகுண்டின், முயலகன் மேல் நடமிடும் ஆனந்த தாண்டவ முன்னோடியாகிய ஊர்த்துவஜானுவாகவும், மாமல்லபுரம் நான்கு கை அபயகர முயலக பல்லவ ஊர்த்துவ ஜானுவாகவும், சீயமங்கலம் ஆனந்த தாண்டவ முன்னோடியாகவும் காஞ்சி கைலாசநாதர் கோவிலில் முயலகன் மேலாடும் ஊர்த்துவ ஜானு பல்லவ நடராசர்களாகவும் அமைந்து, வளர்ந்து பத்தாம் நூற்றாண்டில் ஒக்கூர் சோழ செம்பு ஆனந்த தாண்டவராகவும், தண்டன் தோட்டம் மற்றும் பலவூர் சோழ ஆனந்த நடரா சர்களாகவும் நடராச மூர்த்தங்கள் முகிழ்த்துள்ளன.

ஊர்த்துவஜானு நடராசர்கள்

இக்கால எல்லைக்குள் ஏழாம் நூற்றாண்டில் பல்லவரது நான்கும், விஷ் ணுகுண்டின் ஒன்றும், எட்டாம் நூற்றாண்டில் சாளுக்கியரது இரண்டும், காஷ்மீர் பாயா வகை ஒன்றும், ஒன்பதாம் நூற்றாண்டில், பல்லவ இரண்டும், கூர்ஜரபிரதிகார வகை இரண்டும், கம்போடியா ஒன்றும், பத்தாம் நூற் றாண்டில் சோழரது இரண்டுமாக மொத்தம் பதினைந்து ஊர்துவஜானு நடராசர்கள் அமைந்துள்ளனர்.

ஆனந்த நடராசர்

ஆனந்த நடராசத் திருவுருங்கள் பத்தாம் நூற்றாண்டில் சோழரது செல் வாக்கில் முகிழ்த்தன வாகும்.

பத்தாம் நூற்றாண்டில் ஒன்பது ஆனந்த தாண்டவங்கள் அமைந்துள்ளன.

பொதுநிலை

லலித நடராசர்கள் ஐந்தாம் நூற்றாண்டிலேயே அமைந்து விட்டன. அவை முதன்மை நடராசர்கள். சதுர நடராசர்கள் ஆறாம் நூற்றாண்டில் அமைந்தன. ஊர்த்துவ ஜானு நடராசர்கள் ஏழாம் நூற்றாண்டில் அமைந்த னர். அலிதம், ஊர்த்துவ தாண்டவம், லலாடதிலகம் முதலியன சிறுபான்மையாயினும் ஏழாம் நூற்றண்டில் முகிழ்த்தன. அதி சிறுபான்மை யதாகிய ஸ்வஸ்திக நடராசர்கள் ஐந்தாம் நூற்றாண்டில் குப்த வகையிலும், எட்டாம் நூற்றாண்டில் மேலைச் சாளுக்கிய வகையிலும் தென்படுகின்றனர். பாதஸ்வதிக நடராசர்கள் பாண்டிய வகையில் எட்டு ஒன்பதாம் நூற்றாண்

டுகளில் தென்படுகின்றனர். பிரஸ்தாவஸ்திக நடராசர் எட்டாம் நூற்றாண்டில் இராஷ்டிர கூட வகையிலும், ஒன்பதாம் நூற்றாண்டில் நொளம்ப வகையிலும் தென்படுகின்றனர். அர்த்தமல்லி ஏழாம் நூற்றாண்டிலும் அர்த்தரேசிதம் ஒன்பதாம் நூற்றாண்டிலும் பல்லவ வகையில் தென்படுகின்றனர். நடராச மூர்த்தங்கள் குப்தர்கள் காலத்தில் ஐந்தாம் நூற்றாண்டில் லலிதமாகவும், ஆறாம் நூற்றாண்டில், சாளுக்கிய, வாகாடக, பாஞ்சா வகைகளில் சதுரமாகவும், ஏழாம் நூற்றாண்டில் விஷ்ணுகுண்டின், பல்லவ வகைகளில் ஊர்த்துவ ஜானுவாகவும், பத்தாம் நூற்றாண்டில் சோழ ஆனந்த தாண்டவமாகவும் படிப்படியாக ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு வளர்ந்துள்ளன.

.20 மன்னர் வகையிலும் கால வகையிலும் நடராச வளர்ச்சி

மன்னர் வகையிலும், கால எல்லையிலும் எந்தெந்த சிறப்பு வகை சிவ தாண்டவங்கள் வளர்ந்துள்ளன என்பதை ஒரு பட்டியில் கண்டு ஒப்பு நோக்குதல் வரலாற்று நோக்கில் வளர்ச்சியினை அறிய உதவும். கிடைத்த செய்திகளை மட்டும் அடிப்படையாக வைத்து ஒரு பட்டி பின் வருகின்றது.

.21 ஆனந்த தாண்டவ மூர்த்தத்தின் பாத கர நிலைகள்

இதுகாறும் சிவ தாண்டவத் திருவுருவங்கள் பல்வேறு நூற்றாண்டுகளில் வளர்ந்துள்ளமைக்கான, கிடைக்கின்ற சான்றுகளை, நூற்றாண் டுகள் மரபில், மன்னர்வரிசையில், ஓரளவு, தொகுத்துக் காண முயன்றோம், ஆனந்த தாண்டவ மூர்த்தத்தில் ஐந்தொழிற் கருவிகளாக உறுப்புகளாகப் பிற்காலத்தில் விளக்கப்பட்டன கால வரிசையில் எவ்வாறு வளர்ந்துள்ளன என்ற கருத்தைத் தொகுத்துக் காண முயல்வோம்.

ஆனந்த நடராச மூர்த்தத்தில் பாத கர நிலைகள்

வலக்கால் ஸ்தித பாதமாகவும், இடக்கால் குஞ்சிதபாதமாகவும், இடக்கை கஜ ஹஸ்தமாகவும், வலக்கை அபயகரமாகவும், இன்னொரு வலக்கை துடியுடனும், இடக்கை தீயகலுடனும், சடைமுடியில் கங்கையும், பிறையும் இன்ன பிற சிவ அலங்காரங்களும் உடையதாக அமைந்த ஆனந்த நடராசர் முழுவதும் தமிழகப் பாணி எனலாம். திருமந்திரத்திலும் உண்மை விளக்கத்தும் கூறப்படும் குறிப்புகள் இவ்வானந்த நடராசருக்கே உரியன. ஆனந்த தாண்டவ மூர்த்தத்தில் காணும் ஐந்தொழில் அம்சங்கள் அம் மூர்த்தம் முழுமையும் உருவாவதற்கு முன்பே பல்வேறு மூர்த்தங்களில் அமைந்து, இவண், ஒருமித்தன என்பது தகும்.

குஞ்சிதபாதம்

குஞ்சிதபாதம் ஆனந்த நடராச வழிபாட்டில் மிக்க சிறப்புடைய அம்சம். திருவடி அம்சமாய இது முழு தெய்வாம்சத்தின் சிறப்புக்குரியது. குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்ற நூல் நடராசர் பெருமை, குஞ்சிதபாதத்தின் பெருமை என்ற பொருள் பட அமைந்த நூல். சித்சபை வழிபாட்டில் மூர்த்தத்துக்கு மாலை இடுவது போலவே குஞ்சித பாதத்துக்குத் தனி மாலை இடுவது அன்றாடப்பூசை மரபு. அம்மாலையினைப் பிரசாதமாகப் பெறுவதும், அளிப்பதும், பெரும் பேறாகக் கருதப்படுவதுண்டு. எனவே, குஞ்சிதபாதம் என்பது, ஆனந்த நடராசத் தத்துவத்தில் சிறப்பு இடம்பெறும் உறுப்பென்பது பெறப்படும். சிற்பங்களுள் இக்குஞ்சிதபாத அமைப்பு கி.பி. ஆறாம் நூற்றாண்டைய,

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(அ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்துவ ஜானு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராசிதம்	6 அலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைபடுத்த படாதவை	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் பட்டவை
குப்தர்	5	1			1							3		3
வாகாடகர்	5-6	1										1	எல்லோரா	
	6	1	1									3	எல்லோரா	4
விஷ்ணுகுண்டின்	6			1								1	முகலிராசபுரம்	1
முற்காலப் பல்லவர்	6											1	பைரவகொண்டா	1
முற்காலமேலைச் சாளுக்கியர்	6		1									1	பாதாமி	
	8	2	3	2								7	பட்டடக்கல்	
		5	1				1					7	ஆலம்பூர்	
		1										1	சத்தியவோலு	
		3										3	குந்தவேலி	18
கீழைச்சாளுக்கியர்	10		2										பிக்கவோலு	2

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(ஆ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்த்துவ ஜானு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராசிதம்	6 அலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைபடுத்த படாதவை	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் பட்டவை
பல்லவர்	7					1						1	சீயமங்கலம்	12
				1								1	மாமல்லபுரம்	
				2			2	2				6	காஞ்சி கைலாசநாதர் கோவில்	
								1				1	பானமலை ஓவியம்	
	9			1								1	கூரம்	
				1								1	நல்லூர்	
												1	கிழக்காடு	
முற்காலப் பாண்டியர்	7		1									1	திருமலைப்புரம்	
	8	1										1	திருப்பரங்குன்றம்	
										1		1	குன்னக்குடி	
	9									1		1	செவல்பட்டி	
	10									1		1	பொருப்பு மேட்டுப்பட்டி	5

வளர்ச்சி

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(அ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்த்துவ ஜானு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராசிதம்	6 அலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைபடுத்த படாதவை	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் பட்டவை
குப்தர்	5	1			1							3		3
வாகாடகர்	5-6	1										1	எல்லோரா	
	6	1	1									3	எல்லோரா	4
விஷ்ணுகுண்டின்	6			1								1	முகலிராசபுரம்	1
முற்காலப் பல்லவர்	6											1	பைரவகொண்டா	1
முற்காலமேலைச் சாளுக்கியர்	6		1									1	பாதாமி	
	8	2	3	2								7	பட்டடக்கல்	
		5	1				1					7	ஆலம்பூர்	
		1										1	சத்தியவோலு	
		3										3	குந்தவேலி	18
கீழைச்சாளுக்கியர்	10		2										பிக்கவோலு	2

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(ஆ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்த்வ ஜானு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராசிதம்	6 அலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைப்படுத்த படாதவை	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் படாதவை
பல்லவர்	7					1						1	சீயமங்கலம்	12
				1								1	மாமல்லபுரம்	
				2			2	2				6	காஞ்சி கைலாசநாதர் கோவில்	
								1				1	பானமலை ஓவியம்	
	9			1								1	கூரம்	
				1								1	நல்லூர்	
												1	கிழக்காடு	
முற்காலப் பாண்டியர்	7		1									1	திருமலைப்புரம்	
	8	1										1	திருப்பரங்குன்றம்	
										1		1	குன்னக்குடி	
	9									1		1	செவல்பட்டி	
	10									1		1	பொருப்பு மேட்டுப்பட்டி	5

வளர்ச்சி

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(இ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்த்துவ ஜாநு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராஸிதம்	6 லலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைப் படுத்தப் படாதன	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் பட்டவை
நொளம்பர்	9		1	1						1			ஹேமாவதி	3
இராஷ்டிரகூடர்	8		2	2						2	1	7	எல்லோரா குகைகளில்	
			1			1					1	3	எல்லோரா கைலாசநாதர் கோவிலில்	10
சோழர்	10	1									1		நந்தி	
									1				ஒக்கூர்	
			1										திருவரங்குளம்	
									2				தண்டன்தோட்டம்	
					2								சீனிவாசநல்லூர்	
		1											கொடுமுடி	

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(ஈ)

		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
அரசமரபு	நூற்றாண்டு	வலிதம்	சதுரம்	ஊர்த்துவ ஜாநு	ஸ்வஸ்திகம்	புஜங்க த்ராஸிதம்	அலிதம்	லோப இலகம்	ஆனந்த தாண்டவம்	பிறவகை	வகைப் படுத்தப் படாதன	மொத்தம்	இடம்	மொத்தம் வெளியிடப் பட்டவை
									1				கென்சிங்டன்	
சோழர்									1				திருவாலங்காடு	
									1				நியூயார்க்	
									1				பாரீஸ்	
									1				மாயூரம்	
									1				குமாரவயலூர்	12
பிற்காலச் சாளுக்கியர்	11, 12		1	5							5		பல ஊர்கள்	
											4		புவனேஸ்வர்	
கீழைக்கங்கர்	7,8		2		1								முகலிங்கம்	
		1	3										கொனாரக்	
		1									1		மயூரபஞ்ச்	13
											4		கட்கர் முதலிய வங்க ஊர்கள்	
வங்கம் (நந்திமேல்) பால, சேனா, மரபினர்	10	1									2		மேலக்கடம்பூர்	7
அஸ்ஸாம் (நந்தி இடம்) காமரூபம்	10													

வளர்ச்சி

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(இ)

அரச மரபு	நூற்றாண்டு	1 லலிதம்	2 சதுரம்	3 ஊர்த்துவ ஜானு	4 ஸ்வஸ்திகம்	5 புஜங்க த்ராசிதம்	6 லலிதம்	7 லலாட திலகம்	8 ஆனந்த தாண்டவம்	9 பிறவகை	10 வகைப் படுத்தப் படாதன	11 மொத்தம்	12 இடம்	13 மொத்தம் வெளியிடப் பட்டவை
நொளம்பர்	9		1	1						1			ஹேமாவதி	3
இராஷ்டிரகூடர்	8		2	2						2	1	7	எல்லோரா குகைகளில்	
			1			1					1	3	எல்லோரா கைலாசநாதர் கோவிலில்	10
சோழர்	10	1									1		நந்தி	
									1				ஒக்கூர்	
			1										திருவரங்குளம்	
									2				தண்டன்தோட்டம்	
					2								சீனிவாசநல்லூர்	
		1											கொடுமுடி	

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21 (ச)

		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
அரசமரபு	நூற்றாண்டு	வலிதம்	சதுரம்	ஊர்த்வ ஜானு	ஸ்வஸ்திகம்	புஜங்க திராசிதம்	அலிதம்	லலாட திலகம்	ஆனந்த தாண்டவம்	பிறவகை	வகைப் படுத்தப் படாதன	மொத்தம்	இடம்	மொத்தம் வெளியிடப் பட்டவை
சோழர்									1				கென்சிங்டன்	
									1				திருவாலங்காடு	
									1				நியூயார்க்	
									1				பாரீஸ்	
									1				மாயூரம்	
									1				குமாரவயலூர்	12
											5		பல ஊர்கள்	
பிற்காலச் சாளுக்கியர்	11, 12		1	5							4		புவனேஸ்வர்	
கீழைக்கங்கர்	7,8		2		1								முகலிங்கம்	
		1	3										கொனாரக்	
		1									1		மயூரபஞ்ச்	13
											4		கட்கர் முதலிய வங்க ஊர்கள்	
வங்கம் (நந்திமேல்) பால, சேனா, மரபினர்	10	1									2		மேலக்கடம்பூர்	7
அஸ்ஸாம் (நந்தி இடம்) காமரூபம்	10													

வளர்ச்சி

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(உ)

அரசமரபு		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
	நூற்றாண்டு	லலிதம்	சதுரம்	ஊர்த்துவ ஜானு	ஸ்வஸ்திகம்	புஜங்க திராசிதம்	அலிதம்	லலாட திலகம்		பிறவகை	வகைப் படுத்தப் படாதவை	மொத்தம்	இடம்	மொத்தம் வெளியிடப் பட்டவை
காஷ்மீரம்	8			1							2		கௌஹாத்தி	2
	9	1											பாயர், காஷ்மீர்	
கூர்ஜரபிரதிகார	9	5	3	3									இமாசல இலக்கு மாண்டல்	2
	10	1											அபநேரி, மினால் அர்துவா, நாக்டா முதலிய ஊர்கள்	
சாளுக்கியர்	11	1	3										ஜால்வார்	12
(கஜுராகோ) சாண்டெல்லா	10	1					1						மோதரா, பதான் அருங்காட்சியகம்	4
கம்போடியா	9	1	1	1			3						கஜுராகோ	2
சம்பா											3		பாசெட், பாக்ஷம், சிரேஸ், சிசோரி, பிராபிதியு, முதலி	7
இந்தோசீனா கடற்கரைப்பகுதி	8	2	4				1				2			9
ஸ்ரீவிஜயமரபு	9	2												2
		33	28								27			

முகலிராசபுரம் சிற்பத்தில் தான் முதன் முதல் காணப்படுகின்றது. இச்சிற்பத்தினை முழு ஆனந்த நடராச அமைப்பு என்று கூற இயல்வதில்லை.[157] கி.பி. ஏழாம் நூற்றாண்டைய, சீயமங்கலம் சிற்பத்திலும் குஞ்சிதபாத அமைப்பு உள்ளது.[158]

புஜங்காஞ்சிதக் கரணம் என்னும் நாற்பதாவது கரணத்தில், இடத்துக்குப் பதிலாக வலக்கால் குஞ்சித பாதமாக அமைந்த நிலை போன்றுள்ளது.[159] சிற்ப அமைப்பு, முன்னேற்ற நோக்கில், பார்க்கும் போது, கஜசம்மார மூர்த்தத்தில் உள்ள, இடது பாத, தூக்கிய நிலை குஞ்சித பாதத்தின் முன்னோடியாக இருக்கலாம். இது போன்றே, காலாரி மூர்த்தத்தின், தூக்கிய திருவடி, ஊர்த்துவ தாண்டவத்தின் முன்னோடியாகவும் இருக்கலாம். குஞ்சிதபாதம் நான்ற மலர்ப் பாதம் எனப்படும். இது வணங்குவோர்க்கு முத்தி தருவது.

ஸ்தித பாதம்

ஆனந்த தாண்டவத்திலும் பிற சிவ தாண்டவங்களிலும் ஸ்தித பாதமாக, வலக்கால், முயலகன் மேல் ஊன்றி, ஆடுவதாக அமைந்துள்ளது. கஜசம்மார மூர்த்தத்தில் ஸ்தித பாதம் யானையின் மீது ஊன்றி நடமிடுகின்றது. காலாரி மூர்த்தத்தில், காலனின் மேல் கால் ஊன்றிய நிலை. இம்மூன்று வகை மூர்த்தங்களும் ஸ்தித பாத நிலையில் ஒற்றுமை உடையன. நந்தி மேல் ஆடுவதும் ஒன்று. ஸ்தித பாத நிலை இறைவனின் பேராற்றலாய சம்மார நிலையினையும், இறைவனின் எல்லாவற்றுக்கும் மேலாய பதி நிலை என்னும் உயர் நிலையையும் குறிப்பதெனலாம். கி.பி. ஆறாம் நூற்றாண்டைய ஐகோளே நடராசச் சிற்பத்திலும், சீயமங்கலம் நடராசச் சிற்பத்திலும், வல ஸ்தித பாத அமைப்பு அமைந்துள்ளது.[160] ஸ்தித பாதம் ஊன்று மலர்ப்பாதம் எனப்படும். ஊன்று மலர்ப்பதத்தே, உற்ற திரோதம் என்னும், மறைத்தலாகிய தொழில் நடைபெறும் என உண்மை விளக்கம் கூறும்.

இடக்கை கஜ ஹஸ்தம்

சிற்பப் பிரகாசம் என்ற நூல் ஒரிஸ்ஸாவின் நட்டம்பரரின் இலக்கணம் கூறும் போது, இடக்கை கஜ ஹஸ்தத்தைக் குறிப்பிடுகின்றது.[161] ஐந்தாம் நூற்றாண்டைய, நச்சன குதாரா நடராசர், சிர்புர் நடராசர், எலிபெண்டா நடராசர் முதலிய நடராசர்கள் வலக்கை கஜ ஹஸ்தமாக உடையவர்கள். ஆறாம் நூற்றாண்டைய முகலிராசபுரம், பாதாமி, பைரவ கொண்டா, எட்டாம் நூற்றாண்டைய பட்டக்கல் நடராசர் முதலியவர்கள் ஆனந்த தாண்டவ இலக்கண அமைதியான இடக்கை கஜ ஹஸ்தத்துடன் விளங்குகின்றனர். முதற்காலத்தில் வலக்கை கஜ ஹஸ்தமாக அமைந்திருக்க சக்தி, அம்சம் வளர்ந்த நிலையில், சுட்டு நிலை காட்டுவதாகிய, கஜ ஹஸ்தம், சக்தியின் இடப்பாகமாக இடது கரமாக வளர்ச்சியடைந்திருக்கலாம். கஜ ஹஸ்தம் நான்ற மலர்ப்பதத்தை நாடு என்ற அளவில் உயிர்கட்கு நான்ற மலர்ப்பத வழிபாடு முத்தி தரும் என்பதனைச் சுட்டும், சுட்டு நிலைக்குரியது. அருளற்கு உதவுவது, சிவனையும் சீவனையும் இணைக்க வழிப்படுத்துவது.

அபய ஹஸ்தம்

அருளல் செயலின் அம்சமான அபய ஹஸ்தம் மங்கள மூர்த்தங்களாகிய போக மூர்த்தங்களின் அம்சமாகும். ஆறாம் நூற்றண்டைய முகலிராசபுரம் சிற்பத்தில் அபய ஹஸ்தம் உள்ளது. நிருத்த மூர்த்தங்களில் ஆறாம் நூற்றாண்டைய பைரவ கொண்டா மூர்த்தத்தில் வலக்கை அபய

157. அஃதே. ப:177
158. அஃதே. ப:193
159. தேசிகர். படம்.40
160. சிவராம. ப:184,193
161. கேஸ்டன். ப:50

மன்னர் வழி முறை நூற்றாண்டு வரிசையில் சிவதாண்டவ வளர்ச்சி

பட்டி எண். 21(உ)

அரசமரபு		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
	நூற்றாண்டு	வலிதம்	சதுரம்	ஊர்த்வ ஜாநு	ஸ்வஸ்திகம்	புஜங்க த்ராசிதம்	அலிதம்	லலாட திலகம்		பிறவகை	வகைப் படுத்தப் படாதன	மொத்தம்	இடம்	மொத்தம் வெளியிடப் பட்டவை
காஷ்மீரம்	8			1							2		கௌஹாத்தி	2
	9	1											பாயர், காஷ்மீர்	
கூர்ஜரபிரதிகார	9	5	3	3									இமாசல இலக்கு மாண்டல்	2
	10	1											அபநேரி, மினால் அர்துவா, நாக்டா முதலிய ஊர்கள்	
சாளுக்கியர்	11	1	3										ஜால்வார்	12
(கஜுராகோ) சாண்டெல்லா	10	1					1						மோதரா, பதான் அருங்காட்சியகம்	4
கம்போடியா	9	1	1	1			3						கஜுராகோ	2
சம்பா											3		பாசெட், பாக்ஷம், சிரேஸ், சிசோரி, பிராபிதியு, முதலி	7
இந்தோசீனா கடற்கரைப்பகுதி	8	2	4				1				2			9
ஸ்ரீவிஜயமரபு	9	2												2
		33	28								27			

முகலிராசபுரம் சிற்பத்தில் தான் முதன் முதல் காணப்படுகின்றது. இச்சிற்பத்தினை முழு ஆனந்த நடராச அமைப்பு என்று கூற இயல்வதில்லை.[157] கி.பி. ஏழாம் நூற்றாண்டைய, சீயமங்கலம் சிற்பத்திலும் குஞ்சிதபாத அமைப்பு உள்ளது.[158]

புஜங்காஞ்சிதக் கரணம் என்னும் நாற்பதாவது கரணத்தில், இடத்துக்குப் பதிலாக வலக்கால் குஞ்சித பாதமாக அமைந்த நிலை போன்றுள்ளது.[159] சிற்ப அமைப்பு, முன்னேற்ற நோக்கில், பார்க்கும் போது, கஜசம்மார மூர்த்தத்தில் உள்ள, இடது பாத, தூக்கிய நிலை குஞ்சித பாதத்தின் முன்னோடியாக இருக்கலாம். இது போன்றே, காலாரி மூர்த்தத்தின், தூக்கிய திருவடி, ஊர்த்துவ தாண்டவத்தின் முன்னோடியாகவும் இருக்கலாம். குஞ்சிதபாதம் நான்ற மலர்ப் பாதம் எனப்படும். இது வணங்குவோர்க்கு முத்தி தருவது.

ஸ்தித பாதம்

ஆனந்த தாண்டவத்திலும் பிற சிவ தாண்டவங்களிலும் ஸ்தித பாதமாக, வலக்கால், முயலகன் மேல் ஊன்றி, ஆடுவதாக அமைந்துள்ளது. கஜசம்மார மூர்த்தத்தில் ஸ்தித பாதம் யானையின் மீது ஊன்றி நடமிடுகின்றது. காலாரி மூர்த்தத்தில், காலனின் மேல் கால் ஊன்றிய நிலை. இம்மூன்று வகை மூர்த்தங்களும் ஸ்தித பாத நிலையில் ஒற்றுமை உடையன. நந்தி மேல் ஆடுவதும் ஒன்று. ஸ்தித பாத நிலை இறைவனின் பேராற்றலாய சம்மார நிலையினையும், இறைவனின் எல்லாவற்றுக்கும் மேலாய பதி நிலை என்னும் உயர் நிலையையும் குறிப்பதெனலாம். கி.பி. ஆறாம் நூற்றாண்டைய ஐகோளே நடராசச் சிற்பத்திலும், சீயமங்கலம் நடராசச் சிற்பத்திலும், வல ஸ்தித பாத அமைப்பு அமைந்துள்ளது.[160] ஸ்தித பாதம் ஊன்று மலர்ப்பாதம் எனப்படும். ஊன்று மலர்ப்பதத்தே, உற்ற திரோதம் என்னும், மறைத்தலாகிய தொழில் நடைபெறும் என உண்மை விளக்கம் கூறும்.

இடக்கை கஜ ஹஸ்தம்

சிற்பப் பிரகாசம் என்ற நூல் ஒரிஸ்ஸாவின் நட்டம்பரரின் இலக்கணம் கூறும் போது, இடக்கை கஜ ஹஸ்தத்தைக் குறிப்பிடுகின்றது.[161] ஐந்தாம் நூற்றாண்டைய, நச்சன குதாரா நடராசர், சிர்புர் நடராசர், எலிபெண்டா நடராசர் முதலிய நடராசர்கள் வலக்கை கஜ ஹஸ்தமாக உடையவர்கள். ஆறாம் நூற்றாண்டைய முகலிராசபுரம், பாதாமி, பைரவ கொண்டா, எட்டாம் நூற்றாண்டைய பட்டக்கல் நடராசர் முதலியவர்கள் ஆனந்த தாண்டவ இலக்கண அமைதியான இடக்கை கஜ ஹஸ்தத்துடன் விளங்குகின்றனர். முதற்காலத்தில் வலக்கை கஜ ஹஸ்தமாக அமைந்திருக்க சக்தி, அம்சம் வளர்ந்த நிலையில், சுட்டு நிலை காட்டுவதாகிய, கஜ ஹஸ்தம், சக்தியின் இடப்பாகமாக இடது கரமாக வளர்ச்சியடைந்திருக்கலாம். கஜ ஹஸ்தம் நான்ற மலர்ப்பதத்தை நாடு என்ற அளவில் உயிர்கட்கு நான்ற மலர்ப்பத வழிபாடு முத்தி தரும் என்பதனைச் சுட்டும், சுட்டு நிலைக்குரியது. அருளற்கு உதவுவது, சிவனையும் சீவனையும் இணைக்க வழிப்படுத்துவது.

அபய ஹஸ்தம்

அருளல் செயலின் அம்சமான அபய ஹஸ்தம் மங்கள மூர்த்தங்களாகிய போக மூர்த்தங்களின் அம்சமாகும். ஆறாம் நூற்றண்டைய முகலிராசபுரம் சிற்பத்தில் அபய ஹஸ்தம் உள்ளது. நிருத்த மூர்த்தங்களில் ஆறாம் நூற்றாண்டைய பைரவ கொண்டா மூர்த்தத்தில் வலக்கை அபய

157. அகீதே. ப:177
158. அகீதே. ப:193
159. தேசிகர். படம்.40
160. சிவராம. ப:184,193
161. கேஸ்டன். ப:50

ஹஸ்தமாகவுள்ளது. ஏழாம் நூற்றாண்டைய காஞ்சி கைலாசநாதர் கோவில் பல்லவச் சிற்பங்களிலும் எட்டாம் நூற்றாண்டைய பட்டடக்கல் சாளுக்கிய மூர்த்தங்களிலும் அபய ஹஸ்தம் உள்ளது. பிற்கால மூர்த்தங்கள் அனைத்திலும் அபய ஹஸ்தம் பெரும்பான்மையும் உண்டு.

துடி

தோற்றக் காரணமான துடி அமைப்பினை, முன்னோடி நிலையில், ஐந்தாம் நூற்றண்டைய குப்தர் வழி லலித நடராசச் சிற்பம், ஆறாம் நூற்றாண்டைய வாகாடக எல்லோரா லலிதச் சிற்பம், எல்லோராவின் சதுர தாண்டவம், ஆறாம் நூற்றண்டைய முகலிராஜபுரம் விஷ்ணுகுண்டின் வழி ஊர்த்துவ ஜானு முதலியவற்றில் காண்கிறோம், பிற்காலத்தில் பெரும்பான்மையும் ஐகோளே, பட்டடக்கல் முதலிய எல்லா நடராசர் சிலைகளிலும் துடி இடம் பெற்றுள்ளது.

தீயகல்

தீயகல் அமைப்பை, முன்னோடி நிலையில், ஆறாம் நூற்றாண்டைய முகலிராசபுரம் சிற்பம், ஆறாம் நூற்றாண்டைய பாதாமி மேலைச் சாளுக்கியர் சிற்பம், ஏழாம் நூற்றாண்டைய பைரவ கொண்டா சிற்பம், எட்டாம் நூற்றண்டைய பட்டடக்கல் சீயமங்கலம் சிற்பங்கள் முதலியவற்றில் காண்கிறோம். பிற்காலத்தில் பெரும்பான்மைய நடராச துடியும் தீயகலும் எல்லா சிவமூர்த்தங்கட்கும் உண்டு. சிற்பங்களில் தீயகல் இடம் பெற்றுள்ளது. தீயகல் சங்காரச் சின்னம்.

எமன்-முயலகன் நிலை

நடராசத் திருவுருவின் கீழ் முயலகன் அமைந்தது போன்றே, காலாரி மூர்த்தங்களின் கீழ் எமன் தென்படுவதைக் காண்கிறோம். காஞ்சி கைலாசநாதர் கோவில் நான்கு கை காலாரி மூர்த்தி, கங்கை கொண்ட சோழபுர நான்கு கை காலாரி மூர்த்தி, பத்தாம் நூற்றாண்டைய கொடும்பாளூர் மூவர் கோயில் நான்கு கை காலாரி மூர்த்தி, பேலூர் கேசவர் கோவில் எண்கை காலாரி மூர்த்தி, ஹளபேடு, ஹொய்சலேசுவரர் கோவில் எண்கை காலாரி மூர்த்தி, ஆய காலாரி மூர்த்தங்களின் பாதத்தின் கீழ் எமன் படுத்திருப்பதைக் காண்கிறோம். இது போன்றே கஜ சம்மாரம், அந்தகாசுர வதம் போன்றவைகளிலும் உண்டு. எனவே முயலகன் அட்ட வீரட்ட மூர்த்தங்களில் காணப்படும் வதைக்கப்படும் அசுர அம்சங்களின் தொகுப்புச் சின்னம் எனலாம். ஆனந்த நடராசர் காலில் வதைக்கப்படும், முயலகன் சாகடிக்கப் படவில்லை என்பது, சத்துவ அருளல் தன்மையின் வளர்ச்சியாகலாம். முயலகனின் தாருக வன முனிவர்களின் அபிசார வேள்வித் தோற்றம் பற்றிப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. பெரும்பான்மையும் எல்லா வகை நடராச மூர்த்தங்களின் கீழும் முயலகன் அமைந்துள்ளது.

முயலகன் அமைந்த பிற சிவமூர்த்தங்களை ஆய்கையில் நடராச மூர்த்தம் மட்டுமின்றி, உமா மகேஸ்வரர், திரிபுராந்தகர் பைரவர், தட்சிணா மூர்த்தி முதலிய மூர்த்தங்களிலும் ஒரோ வழி முயலகனைக் காண்கிறோம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டதெனப்படும் குடிமல்லம் லிங்கத்தின் காலடியிலும் முயலகன் உள்ளார். திரு கோபிநாத ராவ் அவர்கள் பலவற்றைக் காட்டியுள்ளார்கள்.[162] தட்சிணாமூர்த்தி உருவத்தின் கீழ் எல்லாவற்றுள்ளும் பெரும்பான்மையும் முயலகன் உண்டு. முயலகத் தானம் காலன், கஜம் முதலிய சம்கார மூர்த்தங்களின் பிரதிபலிப்பு என்பதை ஞானசம்மந்தர் 'கூர்

162. ராவ், ப:67 163. சிவராம, ப:88

வாளரக்கண் தன் வலியைக் குறைவித்து, சிற்றம்பல மேயன்' என்ற அடிகளில் வலியுறுத்துகிறார். தென்முக ஆலமர் கடவுளாய தட்சிணாமூர்த்தி, தென்முகம் நோக்கிய நடராசர், தென் பிரகாரத்து தென் திசை நோக்கி அமையும் காலாந்தகர் என்றெல்லாம் காண்கையில் தென் திசையினை எம திசை என்பது நினைவுக்கு வருகின்றது. பைரவ, திருபுராந்தக, காலாந்தக, கஜாந்தக, யோக தட்சிணாமூர்த்தி என்று வளர்ந்த படிமம், ஆனந்த நடராசராக உயர்ந்த, தென் திசை உயர்வு இது எனலாம். ஆறாம் நூற்றாண்டைய ஏழாம் நூற்றாண்டைய காஞ்சி பல்லவ மூர்த்தங்களிலும், முகலிராசபுரம் விஷ்ணுகுண்டின் ஊர்த்துவஜானுவிலும் முயலக அம்சம் உள்ளது.

மோகாய முயலகனின் ஆற்றலை, இறைவன் குறைக்க வல்லான் என்பது காட்டி, முயலகனை, ஊன்று பதமாய திரோதநிலை, மாற்றி, நகை காட்டி முரலச் செய்யும் என்பதனையும் முயலகத் தானம் காட்டுவதாகும். மறைப்பும் மாயையும் ஒன்றன் மேல் ஒன்று தழுவி உதவுகின்றன.

தாள்தலை முத்தியும் திருவடிப் பேறும்

ஆனந்த நடராசத் திருக்கோலத்தின் சிறப்புக்களில் ஒன்று, தூக்கிய திருவடியும், அதனைச் சுட்டிக் காட்டும் தண்ட ஹஸ்தமும், திருமாலும் அயனும் காண்பரிய திருவடியை, பக்தர்கள் தரிசித்து உய்யக் காட்டிய தாள்தலை முத்தி நிலையின் விளக்கமாக அமையும். மேலும், ஊன்றிய திருவடி, முயலகனைச் சாய்த்தலும், எடுப்பதும், தொடுப்பதும் திருவடிப்பேறு என்பதைக் குறிப்பதாகலாம். இதுகாறும் கண்டவற்றால் ஆனந்த நடராச பாத கர நிலைகள் சித்தாந்தத் தெளிவினை உணர்த்துவன என்பது பெற்றாம்.

.22 சிவதாண்டவ மூர்த்த காட்சி தான நிலைகள்

நடராசத் திருவுருவங்கள் அமைந்த காலம், ஆனந்த நடராசத் திருவுருவின் ஐந்தொழிற் கருவிகள் உறுப்புக்களின் வளர்ச்சியை, வளர் கால வரிசையில் காண முயன்றது போலவே, சிவ தாண்டவ மூர்த்தங்களின் காட்சி, தான நிலைகளில், அமைந்த முதன்மைத் தானத்தையும், ஓரளவு கால வரிசையில் காண முயல்வோம். துல்லியமாகக் கால எல்லையினை வகுப்பது சிரமமாயினும் இது ஒரு முயற்சி.

சிவதாண்டவ மூர்த்த, காட்சி, தான நிலைகள்

காட்சியளவில் நடன வகைகள்

கைலாயத்தில் அன்னையார் அரியணையில் வீற்றிருக்க, தேவர்கள் புடை சூழ, இறைவன் ஆடிய சந்தியா தாண்டவம் ஒரு தெய்விகக் கலைக் காட்சி. அது மீண்டும், மீண்டும் தேவர்கள் விரும்ப இறைவன் விரும்பினால் இயலும் ஒன்று.[163] இது தேவர்கள் காட்சி.

சிவதாண்டவங்கள், இடையறாது ஆடுபவை, மீண்டும், மீண்டும் நடப்பவை, நடந்து முடிந்த காட்சிகள் ஆக மூவகைப்படுவன. தேவர்கள் காட்சி, யோகியர் அகக் காட்சி என வருவனவும் உண்டு.

திரிபுர சம்மாரம் உட்பட்ட, அட்ட வீரட்ட நிகழ்ச்சிகள் ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட பராக்கிரமத்திற்காக, நடந்து முடிந்த சிவ தாண்டவங்கள். இவை தேவர்கள் காட்சி. சதுரம், லலிதம், அலாத நிருத்தம் போன்றன நடன வகைச் சிவதாண்டவங்கள். இவை சிவபெருமானின் நடனக் கலைத் திறனைக் காட்டுவன. எப்பொழுது வேண்டுமாயினும், திரும்பத், திரும்ப நடிக்கத்

164. பிரஜேஷ் பானர்ஜி நடமிடும் கடவுள்

தக்கவை. யாரும் வேண்டி யோக தியானத்தில் பெறத் தக்க காட்சிகள். நாதாந்த நடனம், சதாநிருத்தம், அனவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்றெல்லாம் அழைக்கப் படும் தில்லைத்திருநடம், என்றும், எப்பொழுதும், இடையறாது நடந்து கொண்டிருக்கும் ஐந்தொழில் நடனம். இது பிரபஞ்ச அணுவியல் நடனம். திருமந்திரம் கூறும் ஐந்து நடனங்களும் அக யோகக் காட்சிகள். பொதுவாக அனைத்து, சிவ நடனங்களுமே அகக் காட்சியே அன்றி புறக் காட்சிகள் அல்ல. கௌரி தாண்டவம், உமா தாண்டவம் முதலியன, உருவ வழிபாட்டில், சகித உருவம், காரணமாக அமைந்த, பெய ருடைய சிற்ப உருவ நிலையால், பெயரமைந்த தாண்டவங்கள் ஆகலாம். இவை சக்தி அம்ச மேம்பாடுடையவை. இவற்றினை விரும்பும் பக்தர் தியா னத்தில் என்றும் காணலாம். இவை மங்கள உருவங்களின் இயக்க நிலை.

.23 நடராசருக்கு முதன்மைத் தானம்

காலத்தால் தொன்மை, முதன்மை

தில்லை சித்சபை, ஆனந்த நடராசர் தாண்டவமிடும் முதன்மைத் தலம். இச் சித்சபையில் அமைந்த இரகசியத்தானம் மண் சுவரினால் ஆனது. இச் சித்சபையின் கூரை மண்சுவராலும், கீற்றுக் கொட்டகையாலும் ஆகிய பழங்கால அமைப்பிலேயே இன்றும் அமைந்துள்ளது. கல்லிலும், செம்பிலும் சிலைகள் செய்யப்படும் காலத்துக்கு முன்பே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே இச்சபை இடம் இருந்திருக்க வேண்டும். ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் என்பது கீழ் எல்லை. அதற்கு முன் கி.மு.150க்கு முன் பதஞ்சலி வியாக்ரபாதர் காலத்துக்குப் போகலாம். தில்லைக் காட்டில் ஆலமரத்தடியில் பதஞ்சலி வியாக்ரபாதர் பண்டைக் காலத்தில் வழிபட்ட இடம் இது. இது கி.மு.150 வாக்கில் நடைபெற்றதாகலாம். சிலப்பதிகாரத்தில் கூறப்படும் வெள்ளியம்பலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும்.

ஹிரணியவர்மன் பொன் வேய்ந்த காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டா கலாம். பொன்னுக்குப் பின், வெள்ளி என்று கருதி, பொன்னம்பலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே அமைந்தது எனவும் போற்றலாம். பிற சிவத்தலங்களில் கற்கோவில்கள் எழுந்த காலத்தில் தமிழகத்தில் தென் மாநிலங்களில் நடராசருக்காகப் பிரகாரத்தில் தனிச் சபைக் கோயில்கள் அமைத்துள்ளனர். நடராச வழிபாடு, கற்கோவில் அமைப்புக் காலத்துக்கு முன்பே தொடங்கி விட்டது.

கோயில் தான நிலை

மதுரை வெள்ளியம்பலத்தில் அமைந்தது போல் சிவலிங்கமாய மூலவ ருக்கு முன் அர்த்த மண்டபம் அல்லது மகாமண்டபத்தில் தெற்குப் பார்த்த நிலையில் இச்சபைகளைக் கொண்ட கோயில்கள் சில உண்டு. நெல்லை, திருவெண்காடு போன்ற தலங்களில் பிரகாரத்தில் தனிச்சபை அமைந்த கோயில்களும் உண்டு. கோனேரிராசபுரம் போன்ற கோவில்களில் கரு வறைக் கோயிலின் சுற்றுச் சுவரில் தென்புறத்தே தேவ கோஷ்டங்களில் நடராசர் இடம் பெற்ற கோவில்களும் உண்டு. செம்பியன் மாதேவியார் காலத்தில் தான் .தேவ கோஷ்டத் தானம் கிடைத்தது என்பர். இது கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்றது. தோரண வாயில் நடராசர்களை, கலிங்கம், ஆந்திரம் முதலிய பகுதிகளில் கண்டோம். மத்தியப் பிரதேச சா்கோர் கோவில் தோரண வாயிலில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே

நடராசர் இடம் பெற்றுள்ளார். திருவாலீசுவரம் கருவறைக் கோயில் கோபுரத்தின் தென்பகுதிக் குடுவில் நடராசரைக் காண்கிறோம். இது போன்று பல கோவில்களின் கோபுரங்களிலும் காண்கிறோம். மதுரை, திருவாதவூர், உத்தரகோசமங்கை போன்ற தலங்களில் செப்பு நடராசர் மட்டுமன்றி கற்சிலை நடராசருக்கும் தனிக் கோவில் அமைந்துள்ளது. மதுரைக் கோவிலில் வெள்ளியம்பலம் சுவாமி சந்நிதி முதற் பிரகாரம், நவக்கிரம் அமைந்திருக்கும் பிரகாரம் முதலிய இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நடராச சபைகள் உள.

யோக சபை முதன்மை

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கி.மு.150 தொடங்கி, கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை பதஞ்சலி, வியாக்கிரபாதர் காலம். ஹிரண்யவர்மன் என்னும் பல்லவ மன்னன் காலம், சைவ மறுமலர்ச்சிக் காலம், சோழ மன்னர்களின் பொற்காலம் முதலிய காலங்களில் ஆனந்த நடராச சித்சபை என்னும் ஞான சபையாகிய யோக சபை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு உயர்வினைப் பெற்று உலகம் போற்றும் உயர் நிலை எய்தியுள்ளதென்பது புலனாகும். திருவெண்காடு, திருக்குற்றாலம், திருப்பெருந்துறை, திருவாரூர் போன்ற தலங்களில் யோக அம்சமாய ஞான அம்சம் வெவ்வேறு மாறுபட்ட அளவில் போற்றப்பட்டுள்ளது. மதுரை உள்ளிட்ட மற்ற சிவத் தலங்களில் எல்லாம் நடராசரை, சிவனின் உற்சவ பேர அஷ்டாஷ்ட மூர்த்த அம்சங்களுள் ஒன்றாகத் தான் கருதி இடமளிக்கப்பட்டுள்ளது. யோக-ஞான அம்சம் முழுவதும் வெளிப்படவில்லை.

வைணவத் தலங்களில் உற்சவபேரங்கள் அபிடேக ஆராதனை பெறுவது மரபு. வைணவத் தலங்களில் மூலவர் சுதையால் ஆகியிருப்பவர் ஆகையால் தைலக் காப்பு மட்டும் உண்டு.

சித்சசபை இரகசிய மண் சுவருக்கு, புனுகுச் சட்டக் காப்பு செய்வதைப் பார்க்கையில் அந்தச் சுவரில் ஒரு காலத்தில் சுதையாலான ஆனந்த நடராசர் இருந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது. சிவத் தலங்களில் மூலவராகிய சிவலிங்கம் கல்லாலாகியிருப்பதால் மூலவருக்கு அபிடேகம் உண்டு. சிவத்தலங்களில் நடராஜரைப் பொருத்தவரை எந்த நடராச உருவம் வழிபடப்பட்டாலும் ஆருத்ரா, ஆனித் திருமஞ்சன நாட்களில் விசேட அபிடேகங்களும் பிற மாத நாட்களில் எளிய அபிடேகமும் நடை பெறுவதைக் காண்கிறோம். இது பிற சிவமூர்த்தங்கட்குக் கிடைக்காது, நடராசருக்கு மட்டும் கிடைக்கும் சிறப்பு. தில்லை நடராசருக்கு அபிடேக ஆராதனை நடத்துதல் மகுடாகமம், காரணாகமம் முதலிய ஆகம வழிபாடு வந்தபின், செப்புச் சிலை நிறுவப்பட்ட பின் தொடங்கியிருக்கலாம். அதற்கு முந்திய காலத்தில் சித்சபையில் திரையில் ஓவியத்தில் அல்லது சுதையில் நடராசர் அமைக்கப்பட்டிருக்கலாம்.

.24 தாண்டவ மூர்த்தங்களின் வளர்ச்சி

நாடெங்கும் நடைபெறும் சிவலிங்க வழிபாட்டோடு, இணைந்த அஷ்டாஷ்ட மூர்த்த உருவ வழிபாட்டின் ஒரு அம்சம் சிவ தாண்டவ மூர்த்தங்கள். சிவ தாண்டவங்களுள் ஆனந்த தாண்டவம் என்பது ஊர்த்துவ சைவர்க்காக இயன்ற பரப்பிரம்ம உயர் நிலை யோக ஞான நெறிப்பட்டது. பிற்காலத்தில் இவ்வுயர்நிலை உருவம், பல கோவில்களிலும் இடம் பெற்றுள்ளது. எனினும் ஞான யோக நெறியின் விளக்கம் மறைந்துள்ளது. தில்லையும், திருவாரூரும், திருவெண்காடும், திருப் பெருந்துறையும் கூட இவற்றுள் அடங்கும்.

.25 சங்கமக் காலம்

இந்தியா முழுவதிலும் உள்ள சிவ மூர்த்தங்களை வைத்து நோக்கின் எந்த மூர்த்தம் எவ்வாறு வளர்ந்து எந்த மூர்த்தத்தில் எந்தக் காலத்தில் சங்கமித்தது, என்பது போன்ற கால ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கான ஆதாரங்கள் போதிய அளவு இல்லை எனலாம்.

ஓவியத்தும், சுதையிலும் அமைந்த மூர்த்தங்கள் கிடைக்க இயலாது. எனினும் கிடைக்கின்ற ஆதாரங்களை வைத்து பார்க்கையில் ஆனந்த தாண்டவ மூர்த்தம் வளர்ச்சியின் இறுதிநிலை எனலாம். ஆனந்த தாண்டவம் உருவாவதற்கு முன்பே வீரட்ட மூர்த்தங்களும், லலிதம் சதுரம் முதலிய நடன வகை மூர்த்தங்களும் வளர்ந்துள்ளன. குப்தர் காலத்தில் கட்டுமானக் கோயில்கள் உருவாவதற்கு முன்பே மூர்த்தங்கள் அமைந்து விட்டன. கல்லில் செதுக்கப்படுவதற்கு முன் அவை சுதையிலும் ஓவியத்திலும் இருந்திருக்க வேண்டும்.

.26 நாடகக் காட்சி போல் சிற்ப அமைப்பு

எல்லோரா, எலிபெண்டா, மாமல்லபுரம், குடவரைக் கோயில்களில் மிகப் பெரிய அளவில் நடராசச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை பெரிய நாடகக் காட்சிகளாகத் தோன்றுகின்றன.

.27 வளர் நோக்கு

குகைக் கோவில்களிலும், கோயில் தோரண வாயில்களிலும், தேவ கோஷ்டங்களிலும் நடராஜருக்குக் காலப் போக்கில் முதன்மைத் தானம் தரும் நிலை கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டில் எல்லோரா, எலிபெண்டாவில் தொடங்கியுள்ளது. அதன் பின்னர் அதே காலத்தில் கட்டுமானக் கோவில்களில் நடராசர் தோரண வாயிலில் இடம் பெற்றுள்ளார். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வாக்கில் தமிழகத்தில் தேவ கோஷ்டத்தானம் கிடைத்துள்ளது.

அதனை அடுத்த பிற்காலத்தில் அர்த்த மண்டபத்தானம், பிரகார சபைத் தானம் முதலியன கிடைத்துள்ளன. இவற்றுள் தேவ கோட்டத்தான கால வரையறை வரை அறிஞர்களால் ஆய்ந்து எழுதப் பட்டுள்ளன.

பைரவர் மேநிலை நடராசருக்கு வருதல்

எல்லோரா கைலாசச் சிற்பங்கள் எலிபெண்டா சிற்பங்கட்கு முந்தியவை. எல்லோராவில் கைலாசக் கோவிலில் கி.பி.ஆறாம் நூற் றாண்டு வாக்கில் தட்சிணாமூர்த்தி அமைப்புக்கு, எதிரே., பைரவர் இடம் பெற்றுள்ளார். எலிபெண்டாவில் பைரவர் இருந்த இடம் 5-6 நூற்றாண்டு வாக்கில் நடராசருக்குத் தரப்படுகின்றது. தட்சிண்ாமூர்த்திக்கு எதிரே நடராசர் அமைகிறார். பைரவ அம்சமான அந்தககாசுரவதம் உள்ளே செல்கின்றது.[164]

அனுக்கிரக மூர்த்திகளாகிய, கங்காதரர், இராவணானுக்கிரக மூர்த்திகள் முதலியன இவ்விடப் பெயர்ப்பில் இடம் பெறவில்லை.

.28 கஜாந்தக-நடராச முதன்மை

பத்தாம் நூற்றாண்டைய கொடுப்பாளூர் மூவர் கோவிலில் நடராசர் அமைந்த மாடத்தின், மேல் மாடத்தில் கஜாந்தகர் இடம் பெற்றுள்ளார். இவண் கஜாந்தகருக்குப் பின் நடராசருக்கு முதன்மை கிடைத்துள்ளது.[165]

நடராசர், டில்லி, 1985. ப:96
ஜோஸ் பெரிர்ரா, நடராசர் ஒரு புதிய விளக்கம், பம்பாய், 1955. ப:78
165. கியான் குசிப்பி, பிலிப்பி, முற்கால 'சோழர் கலையில் நடனராசராக சிவன்', டில்லி 1976. ப:15 ஜோஸ் பெரிர்ரா, நடராசர் ஒரு புதிய விளக்கம், ப:78

நடராசரும், தட்சிணாமூர்த்தியும், கஜாந்தகரும் தென்திசை நோக்கிய கடவுளர்கள். கல்லாலில் கீழ் அமர்ந்தார் தட்சிணாமூர்த்தி. ஆலமரத்தின் கீழ் நடனமாடினார் நடராசர். இருவர் திருவடிகட்குக் கீழும் முயலகன் உண்டு. வீரட்டத்துக்கு முதன்மை தந்த நிலைமாறி, அதன் பின் யோகம் அதன் பின் நடராசர் என்ற முதன்மைத் தன்மை வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் போன்றிருக்கின்றது. இம்மூன்று நிலைகட்கு இடையே அனுக்கிரக மூர்த்திகள், நிரந்தரமாக இருந்துள்ளனர். பிற்காலத்தில் அனுக்கிரக உற்சவ பேரம் வந்தபின் மூர்த்திகட்கு உற்சவங்களில் சிறந்த முதன்மை தரப்பட்டது.

.29 தோரண வாயில் நடராசர்கள்

சிவன் கோவில்களில் கோயில் முகப்பில் விட்டத்துக்கு மேற்பட்ட இடத்திலும் கோபுரங்களிலும், தோரணம், குடு போன்ற அமைப்புக்களில் நடராசத் திருவுரு அமைந்துள்ளது. இவை அனைத்தையும் பொது வகையால் தோரணவாயில் அமைப்பு என்று குறிப்பிடுவோம்.

கட்டுமானக் கோயில்களில் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த மத்தியப் பிரதேச சாகோர் கோவில் தோரண வாயில் முகப்பில் குப்தர் கால பத்து கைகளுடன். ஸ்வஸ்திக நடராசரைக் காண்கிறோம்.[166] ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாமல்லபுரம் தர்மராசரதத்தின் விமானத்தில் முயலகன் மேல் நான்கு கை ஊர்த்துவ ஜானு நடராசர் உள்ளார். அபயகரம் உண்டு.[167] எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டடக்கல் ஐம்புலிங்க கோவிலில் கோபுர முகப்பில், மேலைச் சாளுக்கிய நான்கு கை சதுர நடராசரைக் காண்கிறோம். அபய கஜ ஹஸ்தங்கள் உள. திரிசூலம் கட்வாங்கம் உண்டு.[168] கி.பி.740 ஆண்டைய பட்டடக்கல் விருப்பாட்ச கோவில் தூணில் தூர்ப்பனகை அமைப்புக்குக் கீழே மேலைச் சாளுக்கிய நான்கு கை ஸ்வஸ்திக நடராசரைக் காண்கிறோம்,[169] அதே கோவிலில் இன்னொரு தூணில் எண் கை அர்த்தமல்லி நடராசரைக் காண்கிறோம்,[170] கி.பி. 740 ஆண்டைய பட்டடக்கல் மல்லிகார்ஜுன கோவிலில் மேற் கூரையில் நான்கு கை அபய இடக்கை கஜ ஹஸ்தமுடைய ஊர்த்துவ ஜானு நடராசரைக் காண்கிறோம். இது கால் மாறிய நிலை போன்றது.[171] பட்டடக்கல்லிலேயே பாபநாத கோவிலில் மேற் கூரையில் முயலகன் மேலாடும் நான்கு கை சதுர தாண்டவம் உள்ளது. இதன் அபய கரமும் கஜஹஸ்தமும் ஆனந்த தாண்டவ நிலையை ஒட்டியன.[172] சாளுக்கியர் காலத்தில் நடராசர் கோபுரவிமானத்தில் சுகாசனத்தில் (முகப்புகுடு) அமைக்கப்படுவது ஒரு மரபாக இருந்துள்ளது.[173] எட்டாம் நூற்றாண்டைய ஆலம்பூர் கோயில்களில், சாளுக்கியர்களின் பட்டடக்கல் பாணிச் சிற்பங்களைக் காணலாம்.[174] எட்டாம் நூற்றாண்டைய ஆலம்பூர் வீர பிரம்மா கோவிலின் விமான முகப்பில் நடராசர் தேவியுடன் வாத்திய கணங்களுடன் உள்ளார்.[175] பட்டடக்கல் சந்திரசேகரர் கோவில், காசி விஸ்வேஸ்வரக் கோவில் கோபுர விமான முகப்புக் குடுவில் பல்வகை நடராசரைக் காண்கிறோம்.[176]

கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆலம்பூர் சுவர்க கோவிலில் கோபுர முகப்பில் மேலைச் சாளுக்கிய லலித நடராசரைப் பார்க்கிறோம். இவன் வலக்கை தண்டஹஸ்தமாகவுள்ளது.[177] கி.பி. எட்டாம் நூற்

166. சிவராம, ப:171
167. அஃதே, ப:194
168. அஃதே, ப:181
169. அஃதே, ப:182
170. அஃதே, ப:182,183
171. அஃதே, ப:180
172. அஃதே, ப:183
173. அஃதே, ப: 186
174. அஃதே, ப:185
175. அஃதே, ப:186
176. அஃதே, ப:180
177. அஃதே, ப:187

றாண்டைச் சேர்ந்த கர்னூலுக்கு அண்மையில் உள்ள சத்யவோலு, இராம லிங்கேசுரர் கோவில் கோபுர முகப்பில் தண்டஹஸ்தமுடைய எண்கை லலித நடராசர் உள்ளது.[178] ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹேமாவ தியில் உள்ள நொளம்பர் எண்கை ஊர்த்துவ ஜானு நடராசர், வாயில் முகப்பு மேற்பட்டியில் கணங்களுடன் நடமிடுகின்றார். இதுவும் சாளுக்கிய மரபினை ஒட்டியது.[179] பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆந்திரப் பிரதேச நந்தியில் அமைந்த போக நந்தீசுவரர் கோவிலில் விமானக் குடுக்களில் முயலகன் நான்கு கை சோழ இராஷ்டிர கூட அமைப்புகளையுடைய இரு நடராசர் களைக் காண்கிறோம். இவற்றுள் ஒன்று நான்கு கைகளையுடைய லலிதம், வலக்கை கஜ ஹஸ்தமாக உள்ளது.[180] கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தமிழ கத்தில் திருவாவடுதுறை, புஞ்சை, திருவெறும்பூர், திருச் செம்பூண்டி, முதலிய ஊர்களின் கோவில்களில் தோரண வாயிலில் நடராசர் இடம் பெறு கின்றார்.[181]

கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த இராசராசனால் கட்டப் பெற்ற பாண்டி நாட்டுத் திருவாலீஸ்வரம் கோவில் விமானத் தென் படம் எண் 24 முகப்பில் முயலகன் மேல் நடமிடும் நான்கு கை ஆனந்த தாண்டவ நடராசர் உள்ளது.[182] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைய பிற்காலச் சாளுக்கியர் காலத்தில் ஹம்பி கோவிலின் நுழைவாயில் விட்டத்தில் பிற் காலச் சாளுக்கிய ஊர்த்துவ ஜானு நடராசர் அமைந்துள்ளது.[184] நுழைவாயில் விட்டத்தில் நடராசர் அமைவது மிகப் பழைய மரபு. பட்ட டக்கல் காலக நாதர் கோவில் முகப்பு மேல் விட்டத்தில் எண்கை நடராசர் உள்ளார். இது சதுரம் போன்ற அமைப்பு.[185] கி.பி. பன்னிரண்டாம் நூற் றண்டைய தொட்டஹட்ட வல்லியில் அமைந்த கோயிலின் விமான சுகாசனத்தில் ஹொய்சல நடராசர் ஊர்த்துவ ஜானுவில் அமைந்துள்ளார்.[186] தேகல்வல்லிக் கோயில் சிகரத்தின் குடுவில் பத்து கைகளுடன் நடராசர் அமைந்துள்ளார்.[187] பெல்காம் மாவட்டத்தைச் சேர்ந்த அக்க தங்கிடிகுடி கோயில் சிகரக்குடுவிலும் ஒரு சாளுக்கிய நடராசர் நடமிடுகின்றார்.[188] பீஜப்பூர் மாவட்ட தாவல்ஜியில் அமைந்த இராமலிங்கக் கோயில், வாயில் மண்டப மகரதோரணத்தில் ஊர்த்துவ ஜானு சாளுக்கிய நடராசர் அமைந் துள்ளார்.[189] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைய ஹளபேடு ஹொய்சல கோவிலிலும் வாயில் விட்டத்தில் முயலகன் மேல் ஆடும் பல்கை ஊர்த்துவ ஜானு நடராசரைக் காண்கிறோம். ஹளபேடுவில் பன்னிரண்டு, கை, முயலக ஊர்த்துவ ஜானுவும் உண்டு.[190] இதே நூற்றாண்டில் பாலம்பட்டி இராமப்ப கோயிலில் அமைந்த வாயில் விட்டத்தில் காகதீய முயலகன் மேலாடும் நடராசர் அர்த்த பர்யங்க கரணத்தில் ஆடுகிறார்.[191] தமிழகத்தில் சோழர் காலத்தில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தான் முதல் தோரண வாயில் நடராசரைக் காண்கிறோம்.

.30 தேவகோஷ்டம்

திருக்கோவில் அர்த்தமண்டபச் சுவரின் வெளிப்புறம் மாடம் போன்ற அமைப்புக்கள் இருக்கும். அவற்றில் தெய்வத் திருவுருவங்கள் நிறுவுவது மரபு. அம்மாடம் போன்ற நிலைக்குத் தேவகோஷ்டம் என்று பெயர்.

178. அஃதே, ப:187-89
179. அஃதே, ப:217
180. அஃதே, ப:225,226
181. பாரட், ப:186
182. சிவராம, ப:210
183. சிவராம ப:267
184. அஃதே, ப:259
185. அஃதே, ப:262-63
186. அஃதே, ப:267
187. அஃதே, ப:263
188. அஃதே, ப:263
189. அஃதே, ப:263
190. அஃதே, ப:267-269
191. அஃதே, ப:273

முதலாம் ஆதித்திய சோழர் காலத்தில் (கி.பி.866-940) அர்த்த மண்ட பத்தின் இரு பக்கச் சுவர்களில் அல்லது ஒவ்வொரு பக்கத்திலும் இரு சதுரத் தூண்கட்கிடையே ஒரு மாடம் அல்லது தேவகோஷ்டம் இருக்கும். அவண் தெற்கு மாடத்தில் கணேசர் உருவமும் வடக்கு மாடத்தில் துர்க்கை உருவமும் இடம் பெறும்,[192] இதற்கடுத்த நிலையில், கி.பி. 940-70ல் மூன்று தேவகோட் டங்கள் அமைந்தன. திருவாவடுதுறை கோமுகேசுவரர் கோவிலில் அமைந்த தெற்குப் பிரகார மூன்று தேவ கோட்டங்களில்,மையத் தானம் கணேசருக் கும், மேலைத் தேவகோட்டம் அகஸ்தியருக்கும், கீழைத் தேவகோஷ்டம் ஒன்றுமின்றியும் இருந்தது.[193] 940 இல் புஞ்சை நல்துணை ஈசுவரர் கோவி லில் இரு தேவகோஷ்டங்கள் மட்டும் அமைந்து, ஒன்றில் அகத்தியரும், இன்னொன்றில், கணேசரும் இடம் பெற்றனர்.[194] செம்பியன் மாதேவியார் காலத்தில், 970-1014இல், ஒவ்வொரு பக்கத்துக்கும் மூன்று தேவகோஷ் டங்கள் அமைக்கப்பட்டன.[195] 969-976இல் அமைந்த கோனேரிராசபுரம் உமாமகேசுவரர் கோவிலில் தெற்குச் சுவரின் கீழைத் தேவ கோஷ்டத்தில் நடராசர் இடம் பெறுகிறார்.[196]

.31 வீரக்கற்களில் நடராசர்

மேலைச் சாளுக்கியர்கள் நடராசத் தத்துவத்தில் அதிக விருப்பம் உடை யவர்கள். நடராசரை அவர்கள் வீரத்தின் சின்னமாகக் கருதி வீரக் கற்களிலும் பொறித்துள்ளனர். தார்வார் மாவட்டத்தைச் சார்ந்த ரோன் என்ற ஊரில் அமைந்த வீரக்கல்லில் சிறு கோபுர தோரண முகப்பில் சதுர தாண்டவத்திலும், பெட்டிகிரி ஊரில் அமைந்த வீரக்கல்லில் கஜாசுர வத அமைப்பிலும் நடராசர் அமைந்துள்ளார்.[197] சிவ சாயுஜ்ஜியம் பெற இவ்வ மைப்பு போலும். இது பதினோராம் நூற்றண்டையதாகலாம்.

.32 பரதமும் ஆனந்த தாண்டவமும்

ஆனந்த தாண்டவம் என்னும் சிவதாண்டவம் அசையாது அசைந்து உலகை ஆட்டிப் படைக்கும் சூட்சும நிலை. அதற்குச் சமய தத்துவ அடிப் படைக் கருத்துக்களும்,. ஆகம வழிபாட்டு முறையுமே அடிப்படை. பரத சாத்திரம் முழு அடிப்படையாக அமைவதில்லை. கோல அளவில் மட்டும் ஓரளவு பரதத்தின் அடிப்படையைக் கொள்ளலாம்.

சிற்பத்தில் அமையும் நாட்டிய முத்திரைக்கும், நாட்டியத்தில் அமையும், புராணச் செய்தி தாங்கிய சிற்பக் கோலமும் ஒன்றையொன்று முழுமையும் தழுவியவை அன்று. தனித் தனியே வளரும் கலைகளின் சங்கமக் கூறுக ளாகவே சிற்பங்காட்டும் நடனக் கோலங்களும், நடனம் காட்டும், படிமக் கரணங்களும் அமைவது இயல்பு. சங்கேதக் குறியாக வழிபாட்டின் போதும், வாழ்வியல் நிலைகளிலும் கைக்கொள்ளப்பட்ட முத்திரைகள் கரணங்களின் உறுப்புக்களாகின்றன. ஹஸ்தங்கள்- முத்திரைகள் தந்திர-ஆகம வழிபாட்டு நியாசங்களிலும், சிற்பங்களிலும் வருகின்றன. அதே முத்திரைகள் பரதத் திலும் வருகின்றன. முத்திரைக் குறிப்புகளின் ஒற்றுமை, நடனக் கோலம் என்ற அளவில் தான் பரதத் தொடர்பைக் கொள்ள வேண்டுமேயன்றி இவண் பரதத்துக்கு முதன்மை இல்லை. ஆனந்த தாண்டவ நிலை என்பது பரதத்தில் ஒரு கரணமான புஜங்க திராசிதமா? என்ற வாதத்தினை நூல்

192. பாரட், ப:182,184
193. அக்தே. ப:183
194. அக்தே. ப:182-83
195. அக்தே. ப:183
196. அக்தே. ப:182-83
197. சிவராம. ப:266

களில் பார்க்கிறோம். ஆனந்த தாண்டவ அமைப்பு என்பது ஆகமங்கள் கூறும் ஆனந்த தாண்டவமாகிய சிறப்புக் கோலம். அது முழுமையும் பரதக் கரணங்கட்குக் கட்டுப்பட்டதாக அமைய வேண்டும் என்பதில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். நடராசத் திருவுருவம், மற்றும் பிற நடன தெய்வப் படிமங்களின் அமையும் நடன அம்சங்கள், பெரும் அளவில் தெய்வச் செயலைக் காட்ட அமைந்தனவே அன்றி நடனத்துக்கு முதன்மை தருவன அன்று என்பது பெற்றாம்.

நாட்டிய சாத்திரத்தின் இருபத்து நான்காவது கரணமாகிய புஜங்க திராசிதம், இருபத்தைந்தாவது கரணமாகிய புஜங்க லலிதம், நாற்பதாவது கரணமாகிய புஜங்காஞ்சிதம் முதலிய கரணங்கள் ஆனந்த தாண்டவத்தோடு தொடர்புடையன என்ற கருத்துள்ளது. ஆனால் தஞ்சைச் சிற்பங்கள், ஆடல் வல்லான் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சிற்ப ஓவியங்கள், சிதம்பரம் சிற் பங்கள் முதலியவற்றோடு ஒத்துப் பார்க்கையில் ஆனந்த தாண்டவச் சிற்பம் இப்பரத நாட்டிய சாத்திர விதிகளை மனதில் கொண்டு வடிக்கப்பட்டது அன்று என்பது புலனாகும். சிவதாண்டவங்களில் பாம்பிற்கு இடம் உண்டு. பாம்பைக் கண்டு இறைவன் அஞ்ச வேண்டியதில்லை. எனவே ஆனந்த தாண்டவச் சிற்பத்தினை ஏதேனும் கரண அமைதிக்குள் காட்ட வேண்டும் என்ற முயற்சியில் பாம்பினைக் கண்டு அஞ்சும் பாவம் காட்டும் புஜங்க திராசிதமா, புஜங்காஞ்சிதமா, புஜங்க லலிதமா அல்லது மூன்றும் இணைந் ததா, என்ற கற்பனை ஐயங்கள் நமக்கு எழுவது இயல்பு. பாம்புக்கு அஞ்சும் நிலை பரமனுக்கு இல்லை. எனவே ஆனந்த தாண்டவத்தை புஜங்க திராசிதம் முதலியவற்றோடு ஒப்பிட முடியாது. நடனக் கலை வல்லார், ஆனந்த தாண் டவத்தை, பரதத்தில் ஆடும்போது கடினமாக இருப்பதைக் குறிப்பிட்டுள்ளனர். ஒடிசி நடனத்தில் ஆனந்த தாண்டவ அமைப்பாகிய கால் தூக்கும் கரணம் சிறப்புக் குரியதன்று என்ற கருத்தும் உள்ளது.[198] எனவே ஆனந்த தாண் டவம் ஆகமநெறி வந்த நடனமேயன்றி, சிற்ப விக்ரக நிலையே அன்றி பரதச் சிறப்புடையதன்று என்பது பெற்றாம்.

நடராசத் திருவுருவம் நடன அமைப்புடை தெய்வக் கோலமே அன்றி முழுமையும் பரதக் கோலம் அன்று. பரத நுணுக்கங்கள் உருவாவதற்கு முன்பே அமைந்த தெய்வீகக் கிராமிய நாட்டுப்புற ஆடல்களில் அம்சங்களு டன்; தெய்வ முத்திரையாகிய அபயம், வரதம் முதலியவற்றுடன், பரதக் கோலத்தில் நடராசத் திருவுருவம் அமைகிறது. அங்கியாடல், துடியாடல், வெறி யாடல், பிச்சாடல் போன்ற கிராமிய அம்சங்களின் மிகையினை நடராசத் திருக்கோலத்தில் காணலாம்.

.33 புஜங்க நடனங்களும் ஆனந்த தாண்டவ ஒப்பு நோக்கும்

ஆகமச் செய்தி

ஆனந்த தாண்டவம், புஜங்க திராசித கரணத்தையொத்தது என்ற கருத்து, ரௌரவாகமம், சகளாதிகாரம், அஜிதாகமம், காரணாகமம் முதலிய ஆகமங் களில் குறிப்பிடப்படுகிறது என்பர்.[199]

உருவ ஒப்பு நோக்கு

ஆனந்த தாண்டவ உருவத்துக்கு, வலக்கால் ஸ்திதபாதம் இடக்கால் குஞ்சிதம், இடக்கை ஹஸ்தம், வலக்கை அபயம். இந்நிலைகள் பரதக் கரணங் களில் புஜங்க திராசிதம் முதலியவற்றில் அமைந்துள்ளனவா என்பதை அறிய முயல்வோம்.

198. கேஸ்டன், ப:23 199. அரங்கசாமி, ப:450

எந்தெந்தக் கரணங்களில் எந்தெந்த பாத , கர, நிலைகள் ஆனந்த தாண்டவத்தை ஒத்துள்ளன என்பதை மட்டும், இவண், மேல் நோக்காகக் காட்ட முயல்வோம். பரத சாத்திர நுணுக்க அறிவு மேம்படின், இது பற்றி மேலும் நுணுக்கமாக ஆய்வு செய்ய இயலும்.

.34 கால் மாறிய நிலை

கால் மாறிய கரணம்: ஒற்றைக் கால் கரணங்களுள் புஜங்காஞ்சிதம் என்ற நாற்பதாவது கரணத்தில், இரு கால்களின் நிலையைப் பொருத்தவரை ஆனந்த தாண்டவ வல ஸ்திக பாதத்துக்குப் பதிலாக, இடம் ஸ்தித பாதமாக வும், வலம் குஞ்சிதமாகவும் கால் மாறியாடிய நிலையில் உள்ளது. புஜங்காஞ்சிதத்தில், கரி உறஸ்தம், அபய உறஸ்தம் இல்லை.

.35 கைமாறிய நிலை

புஜங்க திராசிதம் என்ற இருபத்து நான்காவது கரணத்தில் ஆனந்த தாண்டவக் கை நிலைகள், கரி உறஸ்தம், இடத்துக்குப் பதிலாக, வலமாகவும், அபய உறஸ்தம் வலத்துக்குப் பதிலாக இடமாகவும் உள்ளது. இது கைமாறிய நிலை. இவண் இடக்கால் ஸ்தித பாதம். வலக்கால் குஞ்சிதம் போன்றமைய வில்லை.

அபய உறஸ்த நிலை.

இருபத்தைந்தாவது கரணமாகிய ஊர்த்துவ ஜானுவில் கரிஹஸ்தம் இல் லை. இடக்கரம் அபய உறஸ்தம். பதினெட்டாவது கரணமாகிய அலாதகத்துக்கும், ஊர்த்துவ ஜானுவுக்கும் கால் நிலைகளில் ஒற்றுமை உண் டு. ஊர்த்துவ ஜானுவில் இடக்கை அபயம் போன்றுள்ளது. ஆனால் அலாதகத்தில் அது இல்லை.

கரி உறஸ்த நிலை

கரிஉறஸ்த நிலையில் சதுரம் என்னும் முப்பத்தொன்பதாவது கர ணத்தில் ஆனந்த தாண்டவத்தில் அமைந்தது போலவே இடக்கரம் கரி உறஸ்தமாகவுள்ளது. இது இரு கால்களும் ஸ்தித்த நிலை. எண்பத்தேழாவது கரணமாகிய கரிஉறஸ்த கரணத்தில் வலக்கரம் கரிஉறஸ்தமாயினும் அழகா யுள்ளது. இரட்டைக் கால் கரணங்கள், வைகாச ரேசிதம் ஆகியவற்றில் வலக்கரம் அபய உறஸ்தமாகவுள்ளது. இவற்றை ஆனந்த தாண்டவ வகைக்கு ஈடாகச் சேர்க்க இயலாது.

.36 ஊர்த்துவ தாண்டவர்

ஒற்றைக் கால் கரணங்களில் லதா விருச்சிகம் (44), விருச்சிகம் (47), லலாட திலகம்(50), பிரேங்கோலிதம் (84) முதலிய கரணங்களில் மட்டும் ஆனந்த தாண்டவம் போன்றே வலக்கை அபய உறஸ்தமாகவுள்ளது. ஆனால் இவற்றுள், லதா விருச்சிகம், விருச்சிகம், லலாடதிலகம் மூன்றும் வலக்கால் உயரத் தூக்கி ஊர்த்துவராக ஆடும் நடனங்கள். பிரங்கோலிதத் தில், வலக்கால் உயரத் தூக்கி நடித்த நிலை. இவற்றையும், ஆனந்த தாண்டவத்துக்கு அண்மையில் கொண்டு வர இயலாது. ஆனால் ஆனந்த தாண்டவம் போன்று ஊர்த்துவ கரணங்களில் அபயறஸ்தம் வலமாக அமைந்துள்ளது என்பதை அறியலாம்.

முடிவாகப் பரதக் கரணங்களில் பாத அளவில் மட்டும் கால்மாறிய நிலையாக புஜங்காஞ்சிதத்தைக் கொள்ளலாமேயொழிய வேறு ஏதும் ஒத்து வரவில்லை. அது போன்றே கைமாறிய நிலைக்கு புஜங்க திராசிதத்தைக் குறிப்பிடலாம்.

படம் எண் 54



பதினோராம் நூற்றாண்டைய, திருவாலங்காடு,
முற்காலச் சோழ, செப்பு, ஊர்துவ தாண்டவர்

படம் எண் 55



பதினோராம் நூற்றாண்டைய, அம்பை, திருவாலீசுவரம் கோவில், கோபுரத்
தென்பகுதியில் அமைந்த முற்காலச் சோழ ஆனந்த நடராச


.37 ஊர்த்துவ ஜானு-ஆனந்த தாண்டவ கால் மாறிய நிலையா?

வல ஸ்தித பாத, இட குஞ்சித பாத அமைப்பை வைத்துப் பார்க்கையில், கால் மாறியாடிய நிலை ஊர்த்துவ ஜானுவை ஒத்திருக்குமோ என்று கருத இடமுள்ளது. முகலிராசபுரம் ஊர்த்துவ ஜானு, உருவ அமைப்பில் ஆனந்த தாண்டவ முன்னோடி என்பர். ஆனந்த தாண்டவம் ஜானுவின் வளர்ச்சியாக இருக்கலாம். இவண் தூக்கிய திருவடி இடம் வலம் மாற வேண்டும். வல்லோர் ஆய்வதற்கு இவண் கரு உள்ளது.

.38 ஒரே ஹஸ்தம்

தில்லை மூலட்டானத்துச் சிவலிங்கமும், சித்சபை சபாநாயக ஆனந்த நடராசரும் ஒன்றே. யாவும் சிவனே. பரத நாட்டியத்தில் சிவனைக் குறிப்ப தாயினும், சிவலிங்கத்தைக் குறிப்பதாயினும் சிகர ஹஸ்தம் என்ற ஒரே ஹஸ்தம் பயன்படுத்தப் படுவது சிவலிங்கமும், சிவனும், நடராசரும் ஒன்றே என்ற கருத்தை வலியுறுத்தும்.

டாக்டர் சிவராம மூர்த்தி அவர்களின் நூலின் அகரவரிசைத் தொகுப்பினை வைத்து கணித்துப் பார்க்கையில், அந்நூலில் வெளியிடப் பட்டுள்ள நடராச உருவங்களுள் லலித நடனம் எண்ணிக்கையில் மிகுதி (55). அதனை அடுத்து ஊர்த்துவ ஜானு(54) அமைகின்றது. மூன்றாவதாகச் சதுரமும்(39), நான்காவதாக ஆனந்த தாண்டவமும்(22) அமைகின்றன. ஊர்த்துவ தாண்டவம், லலாட திலகம் இரண்டும் சேர்த்து (23) ஆகின்றது. ஆனந்த தாண்டவ வகையில் அமையாத புஜங்க நடனங்கள் 22 ஆகும்.



5. திரு அருட்பிரகாச வள்ளலாரின் நடராச அனுபவம்
(பிற்சேர்க்கை)

அருட்பிரகாச வள்ளலார்:

நடராசப் பெருமானின் தத்துவத்தையும், திருவருளையும், திருக்கூத்தையும் முதன்மைக் குறிக்கோளாகக் கருதி, வழிபட்டு வாழ்ந்த திருவடியார்களில் சிதம்பரம் இராமலிங்க அடிகளார் என்னும் திரு அருட்பிரகாச வள்ளலார் அவர்கட்கு முதலிடம் உண்டு.

அருட் பிரகாச வள்ளலார் அவர்கள் நடராசத் தத்துவம் பற்றிய வேத காலச் செய்திகள் தொடங்கி,அவர் வாழ்ந்த நாள் வரை, வளர்ந்து கண்ட தத்துவங்களை, ஆய்ந்து, செயல்படுத்தி, அனுபவித்து, பயன்பெற்ற பேரருளாளர். திருவருட்பாவினை ஆய்ந்து அதன் வழி நடராசத் தத்துவத்தை அறிவது திரண்ட வெண்ணெயினைத் திகட்டாது உண்பதாகும்.

வடலூர் வழிபாடு

நடராச வழிபாடு எந்த குறிக்கோளோடு தொடங்கப் பட்டதோ, அந்த நுணுக்கங்களை ஆய்ந்தறிந்து, இன்றளவில் அவை மரபற்று இருப்பதை நினைத்து, மனமுருகி, மீண்டும் பழைய சித்சபை வழிபாட்டை, சிதம்பர வழிபாட்டை யோக வழிபாட்டை, ஒளி வழிபாட்டை புதுப்பிக்களண்ணி, சிதம்பரம் கோயிலில் அது செய்விக்க இயலாத சூழல் இருப்பதை அறிந்து வடலூரில் உத்திர சிதம்பரம் என்ற பெயரில் ஞான சபை ஒளி வழிபாட்டை, மாயத் திரைகள் பல அகற்றி இயற்றும் முறையினைக் கொண்டு வந்தார்கள்.

பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில், சிதம்பரம் கோயில் பழைய மூல வழிபாட்டு நெறியாகிய சுத்த சன்மார்க்க நெறியைப் புதுப்பித்து திருவிழாக் காண விழையும் தன் வேணவாவினை வெளியிட்டுள்ளார்.

அவர் வடலூரில் செய்யத் திட்டமிட்டவை யாவும் சிதம்பரத்து முதற் காலத்தில் இருந்த மூல சிதம்பர சிற்சபை வழிபாட்டு நெறிகளாகும். திருவருட்பாக் கடலில் புகுந்து நம்மாலியன்ற சில கற்க முயல்வோம்.

இவண், உத்தர சிதம்பரத்தும், பழைய சிதம்பர வழிபாட்டை முழுமையாகக் கொண்டு வர இயலவில்லை என்பதையும், அவரது சீடர்களும் அதன் சிறப்பை முழுமையாக உணரவில்லை என்பதையும், குறிப்பிட வேண்டியுள்ளது.

ஆகம பூசை நெறியில் தொழிலியற்றும் பூசகர்களின் ஆதிக்கம், புறப் பூசையில் அமைந்த எளிமை முதலியன ஞானநெறி பயிலத் தடையாயிருந்தன எனலாம்.

புருவ மத்தி அனுபவம்

யோக நெறியில் ஆக்ஞா சக்கரம் என்னும் புருவ நடுவில் ஒளியுருவாக இறைவனைக் காணல் இயல்பு.

வடலூரடிகள் இறைவனை அனுபவிக்க அமைதியான இரவு நேரத்தில் யோகத்தமர்வது மரபு என்பதை எதிர்கொள் பத்தில் "இன்றிரவில் எதிர் கொள்வேன்" என்று விளிக்கின்றார்.

அத்தகு வழிபாட்டின் போது, இருள் போக்கி, ஒளி வழங்கி இறைவன், தன் புன்னகை காட்டி, அருமைத் திருக்கையால் தடவி, திருவாய் மலர்ந்து

வாக்களித்த பொதுமையினை, தன் சுய அனுபவத்தை, தனித்திரு விருத்தத்தில் காட்டுகின்றார். இவண் இறைவன் "வாக்களித்து என்னுள் புகுந்தனன்" என்கிறார்.

இளம் பருவத்திலேயே வள்ளலார்க்குப் புருவ நடு அனுபவம் கிடைத்துள்ளது. வேட்கைக் கொத்தில் "இதுவும் பருவந் தன்னிலே என் புருவ நடு இருந்தான் பின்பு கண்டேன் இல்லை" என்றார். "அவன் அறிவான், நானறிவேன், அயலறிவார் யாரோ" என்றும் கூறுகின்றார்.

கால் என்பது காற்று. சோகம் பாவனையை, மூச்சுப் பயிற்சியை, பிராணாயாமப் பயிற்சியை கால் காட்டுதல் என்பர். தில்லை நடராசர் வள்ளலார்க்கு, சோகம் பாவனை கற்பித்து, அதன் வெற்றியாகத் திருவடி தரிசனம் ஈந்த கருணையைக் கால் காட்டி காலாலே காண்பதுவும் எனக்குக் காட்டிய, நின் கருணை என அன்பு மாலையில் போற்றுகின்றார்.

இறையனுபவங்கள்

வீடு பேற்றினை நாடும் நெறிகளை மெய்யுணர்தல் முதலாக காருணியத்திரங்கல் என்ற ஏழு பகுதிகளில் பாடிய வள்ளலார், எட்டாவது பகுதியாகிய 'ஆனந்தத் தழுவல்' என்ற பகுதியில், "மரங்களாகிய மாயையாகிய மேகம் கலைந்து, புத்தியாகிய சிதாகாசம் களங்கமின்றி விளங்கும் வெளியில், மலையின் உச்சியைக் கண மாத்திரை (பக்தன்) காண்கிறார். அவண் நாதாந்த இறை அனுபவம் கிட்டுகிறது" என்பதைப் பாடுகின்றார்.

இது போன்றே, மாணிக்க வாசகரும், சிலம்போசை ஒலிக்க இறைவன் ஆட்கொண்ட அற்புதத்தை அற்புதப் பத்தில் பாடுகின்றார். வள்ளலாருக்கு, இறைவன், திருஉருக்கொண்டு எழுந்தருளி, திருநீற்றுப்பை அவிழ்த்து, ஒரு செஞ்சுடர்ப்பூவும் திருநீரும் அளித்த அனுபவத்தைப்பிரசாத மாலையில் கூறுகின்றார்.

வள்ளலாரைப் போன்றே மாணிக்கவாசகரும் இறைவனிடம் செஞ்சுடர்ப்பூ பெற்றிருக்கின்றார். திருத்தெள்ளேனத்தில் மாணிக்க வாசகர் "என்னை ஆண்டு கொண்ட பரஞ்சோதி, நவமாய செஞ்சுடர் நலனாதலும் நாம் மொழிந்து" என்று பாடுகின்றார்.

ஜோதி மலை மேல் வீடு

சிவயோக நிலை என்ற பதிகத்தில் "வள்ளலார் ஜோதிமலை வீட்டில் தூய திருவமுதம் பருகிய" யோக அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார். குண்டலினி யோக தந்திர நூல்கள் சில ஒவ்வொரு ஆதாரத்துக்கும், ஒவ்வொரு தெய்வத்தைச் சொல்லிச் சென்ற நிலை போக, தமிழக யோக நெறியில் சிவமே யாவும் என்ற உயர் நிலை காட்டப்பட்டதை வள்ளலாரும் மாணிக்க வாசகரும் அனுபவத்தால் காட்டியுள்ளனர்.

கண்டதும் புகுந்ததும்

"சிற்சபையைக் கண்டோம் பொற் சபை புகுந்தோம்" என்பார் வள்ளலார். இது சித்தி நிலை.

இதய நடம்

தனித் திரு அலங்கலில், "உள்ளம் தாம் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம் என நான் தெரிந்தேன்" என்கிறார். இறைவன் நடமிடுவது இதயத்தென்பது கருத்து.

ஒளி நிலை

ஆகாயம், வெளி நிலை, அவண் உதிப்பது ஒளிநிலை, அவ்வொளியில் உலகமெலாம் உதிக்கின்றது. அந்நிலை ஒரு பய நிலை என்று சிற்றம்பல வெளி நிலையை அருட் பிரகாச மாலையில் பாடுகின்றார்.

மாயை இருள் தன்மையது. பக்தனின் உள்ளத்தும், உலகின் அகத்தும், புறத்தும், எல்லாவற்றின் உட்புறத்தும் இயல்பான இறைவன் மன்னிய ஜோதியாக விளங்குகிறான், என்பதைப் பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் வள்ளலார் பாடுகின்றார்.

ஆனந்தம் என்னும் இன்பநிலை தில்லைக் கூத்தன் திருவருளால் கிட்டும்போது, "மாலையாகிய இருள் அகன்று, உடல், உயிர், உள்ளம், உணர்வு, பிற உள்ளன எல்லா இடத்தும் கலந்திருந்த இருள் நீக்கி, எக்காலத்தும் உதயம், அஸ்தமனம் என்பதில்லாதசிவ சக்திகர ஏக போக ஆனந்த நிலை என்றும் ஒளிமயமாகின்றது என்பதை நடராசபதி மாலையில் வள்ளலார் காட்டுகின்றார்.

நடராசத் தத்துவத்தமைந்த அணு இயக்கத்தின் ஒரு குறிப்பை வடலூரார் பரசிவ வணக்கப் பதிகத்தில், "அன்பெனும் கரம், அன்பெனும் வலை, அன்பெனும் கடல் என்றெல்லாம் கூறி, இறுதியில் அன்பெனும் அணுவுள் அமைந்தவப் பேரொளி" என்கின்றார்.

மாணிக்கவாசகர் தில்லைக் கூத்தனை "எண்ணிறந்து எல்லை இலா நிலையில், விண்ணிறைந்து, மண் நிறைந்து, மிக்கோனாய் விளங்கொளியாய்" இருப்பதாகச் சிவபுராணத்துப் பாடியுள்ளார். இதே கருத்தினை வள்ளலாரும் ஞானோபதேசத்தில் "விண்ணிறவே மெய்ப்பொருளே, ஒண் மதியே, உள்நேர் உள்ளொளியே" என்பார்.

வேதாந்த பத நிலைகள்

உபதேச வினாவில், வள்ளலார், வேதாந்த நிலையில், நடராசரை விளக்குகின்றார். தொம்பதம், தத்பதம், அசி பதம், சின்மயம் என்பனவெல்லாம் நாதாந்த, போதாந்த, துரியாந்த நிலைகளாய திருநடனப் பொது என்பதை அனுபவ வாயிலாக விளக்குகின்றார்.

வெளிகள்

தில்லைப்பொது வெளி அவண் அடைந்த பக்தர்க்கு உதவுவது. அத் தில்லைப் பொதுவெளி அநாகதத் தானத்தில் அனைவரிடமும் உள்ளது. அதனை வைத்து வழிபடு நெறி தகர வித்தை. பேராகாய வெளி என்பது அண்ட வெளி.

வள்ளலார் அண்ட வெளி பெரிதா, தில்லை வெளி பெரிதா, அநாகத வெளி பெரிதா என்று வினவி, இதய வெளியே பெரிதென்பார், "வருவார் அழைத்து வாடி" என்ற பாடலில் ஞான சபை என்பது, சீவன் முக்தனின் இதயமே என்பதும், அதனை அடையக் காட்டிய தோற்ற இலக்கே சித்சபை என்பதும் இதன் வழி பெற்றாம்.

சிதம்பர இரகசியம்

சிதம்பர இரகசிய ஒடுக்கம் என்பது துரியாதீத நிலை. சுட்டு நிலை அகன்று, உருவகன்று, அருவும், அகன்று இரகசிய ஐக்கியம் பெறுவது துரியாதீத நிலை. இதனைத் திருச்சிற்றம்பலத் தெய்வமணி மாலையிலும்,

சற்குரு மணி மாலையிலும் பாடுகின்றார். இது தேகாதி கடந்த நிலை. ஏழு திரைகளையும் கடந்த நிலை.

கூத்தப் பெருமானைத் தரிசனம் காண்கையில் கண் மறந்து, கலை மறந்து, ஊன் கலந்து உயிர் கலந்து இறுதியில் ஒரே ஜோதி மயமாய்த் தோன்றி இறுதியில் அதுவும் மறைந்து எல்லாமாய்த் தாமாய் இறை ஐக்கியம் ஏற்பட வேண்டும். அந்தப் பெருமை வள்ளலார்க்கே வாய்த்த நிலையை அறிவுரு அருள்வடிவப் பேறு பகுதியில் பாடுகின்றார். "இறைவன் தன்னை ஈர்த்து ஐந்தொழில் நீ இயற்று என்றதைப் பாடுகின்றார்."

உத்திர ஞான சிதம்பர மாலை என்ற பதிகத்தில் வள்ளலார் உத்தர ஞான சிதம்பரத்தின் சிறப்பினைப் பாடுவதெல்லாம் தில்லைச் சிதம்பர மூல நிலை ஆய்வே எனலாம்.

வல்வினை தீர்க்கும், மோகாந்தத்தினின்று மீட்கும், தேகாந்தம் நீக்கும் இந்த ஏகாந்த வெளி என்பதே குறிப்பு.

சிதம்பர ரகசியத் திரை தூக்கிய போது சிறு வயதில் வள்ளலார் கண்ட தெய்வீகக் காட்சியை அருள் விளக்க மாலையில் காண்கிறோம். மனம் காயாக இல்லாத நிலையில், மனிதன் கட்டிய கட்டிட நிலைகளைக் காட்டா மல், எல்லாம் வெளியாகக் காட்டிய மெய் உறவு என்பார். அது அணுவியல் ஆகாயத் தாண்டவ நிலை. அதுதான் உண்மைச் சிதம்பரம். தில்லை வெளி என்பது இதய வெளி.

மாயத் திரைகள்

வடலூரார் அருட் பெருஞ்ஜோதி அகவலில், மாயத் திரைகளின் மனி தக் கற்பனைகளை விரிக்கின்றார். சுஜ சம்மார மூர்த்தத்து மாயத்திரை விலக்கிய சிற்பத்துள் அமைந்த தத்துவ விரிவினை இங்கின்றி வேறெங்கும் காண்பதற்கில்லை.

"கரும்பெருந்திரை மாமாயையை மறைத்தது.
நீலப் பெருந்திரை ஆருயிர் மறைத்தது.
பச்சைத் திரையால் பர வெளி மறைத்தது.
செம்மைத் திரையால் சித்துறு வெளியை அம்மையின் மறைத்தது.
பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை அன்மையின் மறைத்தது.
வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை அன்மையின் மறைத்தது.
கருப்புத் திரையால் கருது அனுபவங்கள் மறைந்தது.
தனித் தனித் திரையால் தத்துவ நிலைகள் மறைந்தன."

என்றெல்லாம் கூறி தோற்ற மாயை தொடர்பறுத்தருளினும், ஆணவ மெலாம் தவிர்ப்பினும் அருட்பெருஞ்ஜோதியின் அனுக்கிரகம் கிடைக்கும் என்பார்.

ஆகம நெறியினும் ஞான நெறி மேம்பாடு

திருவருட் பெருமை கூறுமிடத்து வள்ளலார் "விரதமாதிகளும் தவிர்த்து, மெய்ஞான விளக்கினால் என்னுளம் விளக்கியருளும் அருட் சோதியின்" திருவருளை வணங்குகின்றார். இவண் நடராச வழிபாடு விரதமாதிக்கும் ஆகம நெறிகட்கும் மேற்பட்ட ஞான நெறி என்பது விளக்கப்பட்டது.

தில்லையில் கனகசபை என்னும் முகமண்டபமாகிய சபையில் நடக்கும் அபிடேக வழிபாடுகள், ஞான நெறி மறந்த நிலையில் எழுந்த, பூசனையாளர் மரபு வழி நெறியின் வளர்ச்சியாகும். பழைய சித்சபை ஞான நெறி, யோக நெறி தியான நெறி வழிபாட்டை மீண்டும் புதுக்க வள்ளலார் விழைந்து தோல்வி கண்டார்.

சித்சபை

சித்சபையில் உருவம், அருவுருவம், அருவம் இரகஸ்யம், ஆகாயம், வெளியென்னும் சூன்யம், அனவரத இயக்கம் என்ற அவ்வியக்கம், தன் இதயத்தானத்தது, "உள்முகமது உயர்ந்தொளிக்கும் சூட்சும ஞான வழிபாட்டு நெறியாக" அமைந்ததை தத்துவவெற்றி என்ற பகுதியில் கூறுவதோடு, அலைக்கழிக்கும் பிற வழிபாட்டு முறைகளை வெற்றி கண்ட தன் உயர் ஏகாக்ரதையையும் சுட்டுகின்றார்.

மாணிக்கவாசகரும் அடைக்கலப்பத்தில் "அமுதே. சிற்சபையில் சிவமே, தவமே செய்கின்றார் ஊனே புகுந்த ஒளியே எனச் சித்சபை அடைக்கலத்தைப் பாடுகின்றார்.

பர நாத நிலை

பரநாத நிலை என்ற நாதாந்த நடராசத் தத்துவத்தைப்பற்றிக் கூற வந்த வள்ளலார் ஆய்வாளர்கட்கு ஒரு குறிப்புத் தருகின்றார். ஆகமம் முந்தியதா வேதம் முந்தியதா எனப் பேதம் பார்த்து வெற்றி காண நினையாது "பற்பூத நிலை கடந்து, நாத நிலைக்கப்பால் பரநாத நிலை உண்டு. அதன் மேல் இறைவன் உறைவதை அறி நீ என்கின்றார். அதுவே நாதாந்தம் போதாந்தம், யோகாந்தம் மற்றும் ஞானாந்தம்.

பொன் வடிவம்

சித்சபை பொன் வடிவம், ஞான வடிவம். அனுபவ மாலையில் " பொற்சபை எம்கணவரின் பொன் வண்ணம், இருந்தபடி நினைத்த போதெல்லாம் புகலரும் பேரானந்தப் போக வெள்ளம் ததும்பி என் வடிவிலும் பொங்குகின்ற தென்பார். சிவ சீவ ஐக்கிய உயர் நிலைக்குச் சீவனை இட்டுச் செல்லும் சூட்சும வழிபாடே நடராச நிலை என்பதை இது குறிக்கும். "என்புருப்பொன் உருவாக்க இறைவன் அருள்வதும்" குறிப்பிடுகின்றார். பொன் என்றது அரிய உயர் நிலை. இது துரியபதம், குஞ்சிதபாதச் சுட்டுநிலை.

நால்நெறிப் பொதுமை - கடந்த நிலை

சரியை, கிரியை, ஞானம், யோகம் என்ற நான்கு நெறிகளும் வழிபட்டு இறுதியில் நெறியின் பெயர், நெறி மறந்த நிலையில் இறைவனைச் சிவ ஞான நிலையில் அறிந்து, வேதாந்தமுதல் ஆறந்த நிலைக்கு மேலாம் பெரிய சமரச சன்மார்க்க அனுபவம் பெறுவதே நடராச வழிபாடு என்கின்ற கருத்தை அனுபவமாலையில் ஒரு பாடலில் வள்ளலார் காட்டுகிறார்.

சிதம்பர நெறி

"அட்ட மூர்த்த பூத நெறி, நாதாந்த மந்திர நெறி, அதற்கும் மேற்பட்ட பரவெளி காணும் ஆகாய நெறி என்னும் சிதம்பர நெறி" என்பதைக் குஞ்சிதபாதப் பதிகத்தில் வள்ளலார் காட்டுகிறார். வெண்ணிலாக் கண்ணியில் வள்ளலார். இருபத்து மூன்று கண்ணிகளில் நடராசத் தத்துவம் முழுவதையும் கோடிட்டுக் காட்டுகிறார்.


இவண், தத்வமசி, நாதாந்தம், சச்சிதானந்தம், துரியாதீதம் ஒளியுருவான சிவமயம், போத நடுவில்போதமற்ற நிலை இரகஸ்ய நெறி, வேத வெளிப்பாடு, குண்டலினிப் பால் அமுதம் ஆதியந்தமற்ற நிலை. முப்பொருளுண்மை, சோகம்பாவனை, அம்பலத் தத்துவம், பிரணவ-பஞ்சாக்கிர நிலைகள், யோக வண்ண ஒளி வெளிப்பாடுகள், அணு வியக்கப் பிரபஞ்ச இயலின் மையத் தானம், அண்ட பகிர் அண்ட இயக்கம் முதலியன அனைத்திலும் அம்பலத்தரசர் ஆடும் திறத்தினைக் குழந்தைக்குக் கூறுவது போன்று வள்ளலார் கூறுகின்றார்.

விராட்டுருவ வேதார்த்தன்

இறைவனின் விராட்டுருவ நிலையினைக் கூற வந்த வள்ளலார் விராட்டுருவ வேதார்த்தன் என்பார்.

இராமலிங்க அடிகளின் நடராச அனுபவம் ஒப்புயர்வற்றது இறை அனுபவ மேநிலைக்கு இலக்கணமாய் அமைவது என்று முடிக்குதும்.

திருச்சிற்றம்பலம் முற்றும்.



ஸ்ரீ நடராஜத் தத்துவம்

(சிவதாண்டவ மூர்த்தங்களின் வளர்ச்சியும் தத்துவமும்)

ஆய்வடங்கள் (அ)

1. திரு. ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இயற்றிய புகழ்பெற்ற "சிவ நடனம்" என்ற ஆங்கில நூலில், சிவ நடனம் பற்றிய கட்டுரை திருமந்திரம், உண்மை விளக்கம் அடிப்படையில் எழுதப்பட்ட முன்னோடிக் கட்டுரை. பலருக்கும் முன்னோடியாயமைந்தது. 1912

2. திரு. கோபிநாத ராவ் அவர்கள் "இந்து சிற்பவியல் கூறுபாடுகள்" என்ற நூலில் நிருத்த மூர்த்தங்கள் சிலவற்றின் படத்தை வெளியிட்டுள் ளார்கள். இப்பெரு நூலில் நிருத்த மூர்த்தங்கள் பகுதியில் ஆனந்த குமாரசாமி அவர்களின் கட்டுரையைப் பதிப்பித்துள்ளார்கள். 1916

3. திரு செந்தில் நாதய்யர் அவர்கள் இயற்றிய பௌஷ்கர பாஷ்ய உபோற்காதம், தேவாரம், வேத சாரம், சைவ வேதாந்தம், (1925) என்ற மூன்று நூல்களும் வேத உபநிடதச் செய்திகளாய அடிப்படைச் செய்திகளை மிகுதியும் கூறியுள்ளன. மிகச் சிறப்பான மூல நூல்கள், லயசிவம், பரதாண் டவம், மூவகை நடராசர் முதலிய செய்திகள் இந்நூல்களில் உள. சாரம் பிங்கள சித்திரை; சைவ வேதாந்தம். 1920

4. சென்னை. திரு. என் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "சிதம்பர இரகசியமும், நடராசத் தத்துவமும்" என்ற சிறிய நூலை வெளியிட்டுள் ளார்கள். இவண் சிதம்பரத் தத்துவ அடிப்படை சிறப்பாக விளக்கப்பட் டுள்ளது. 1923-1955

5. திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் இயற்றிய "இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்" என்ற நூலில் ஒவ்வொரு கிருத்தி யத்துக்கும் சில சிற்பங்களைக் காட்டி, திருப்புத்தூர் புராண அடிப்படையில் விளக்க முயன்றுள்ளார்கள். 1948

6. திரு. துரை அரங்கனார் அவர்கள் இயற்றிய "தேவாரச் சமயமும் தத்துவமும்" என்ற ஆய்வு நூலில், ஆகமப் பெயர் வேறுபாடுகள், ஹஸ்த நிலை வேறுபாடுகள் முதலியன இடம் பெற்றுள்ளன. தமிழ்ப் புராணச் செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. 1958

7. அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடான பல்கலைக்கழகச் சூழல் என்ற ஆங்கில நூலில் தில்லைக் கோவிலின் வரலாற்றை வரிசைப் படுத்திக் கூறும் சிறப்பு உள்ளது. 1963

8. திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய "ஆடல் வல்லான்" நூலில் லய சிவ, பர தாண்டவச் செய்திகள் சிறப்புடையன. பரதக் கரண ஒப்பு நோக்குக்குத் தேவையான ஓவியங்கள் விளக்கங்கள் உள. மகுடாகும மேற்கோள்கள் உள. 1967

9. திரு. ஜே. எம். சோமசுந்திரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டில் வந்துள்ள தன் கட்டுரையுடன், பின் இணைப் புகள் சேர்த்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்கள். மேலை நாட்டவர், நம்மவர் நடராசரைக் கலை நோக்கில் கண்ட சிறப்புகள் தொகுக்கப்பட்

டுள்ளன. இதனுள் அறிஞர் ஆனந்த குமாரசாமியின் கட்டுரையும் வெளியிடப்பட்டுள்ளது. 1970

10. திருமந்திர வழி திருக்கூத்துத் தரிசனம் புரிந்து கொள்ள, திரு. ஜி. வரதராசப் பிள்ளையவர்கள் உரை, திருமந்திரப் பதிப்பு, சிறப்புடன் உதவ வல்லது. (பழனியப்பா பிரதர்ஸ்) 1974

11. திரு. சிவராமமூர்த்தி அவர்கள் இயற்றிய அரிய பெரிய ஆய்வு நூலாய, "கலை, சிந்தனை, இலக்கியங்களில் நடராசர்" என்ற ஆங்கில நூலில், நிறைந்த செய்திகளும், படங்களும் இடம் பெற்றுள்ளன, கல்வெட்டு, வரலாறு, சமஸ்கிருத மூலச் செய்திகள் முதலியன தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. 1974

12. சுவாமி சிவானந்தர் எழுதியுள்ள சிவதாண்டவத் தத்துவம் என்னும் நூலில், இந்தியத் தத்துவப் பின்னணியில் சிவதாண்டவ உருவகம் விளக்கப்பட்டுள்ளது. 1978.

13. பிரிட்டிஷ் அகாடமியின் இதழில் அறிஞர் டக்ளஸ் பாரட் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில், ஆனந்த நடராசச் சிற்பம் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் பெற்ற உறுப்பு, தான வளர்ச்சிகள் ஆய்ந்து கூறப்பட்டுள்ளன. 1976, சூலை, 9

14. பி. ஜி. எல். சுவாமி அவர்கள் எழுதிய சிதம்பரமும் நடராசரும் என்ற ஆங்கில நூலில் சித் சபை கட்டிட அமைப்பு ஆராயப்பட்டுள்ளது. 1979

15. செல்வி அன்னி மேரி கேஸ்டன் அவர்களின் ஆய்வுக் கட்டுரை "நடனம், புராணம், சிற்பங்களில் சிவன்" என்ற ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது. பரத, ஒடிசி கரணங்களை ஒப்பு நோக்கி பரத ஆகமப் பெயர் வேறுபாடுகளைக் காலவரிசையில் ஆய்கிறார்கள். சிவதாண்டவ அனைத்திந்திய அடிப்படை வளர்ச்சி காட்டப்படுகின்றது. 1982

16. டாக்டர் எஸ். வி. சாமு அவர்கள், மைசூர், அஷ்டாங்க யோக விஞ்ஞான கேந்திரத்தின், குருநாதர், ஸ்ரீ ரங்க குரு அவர்களின் கருத்துக்களை, "தெய்விக நடேசர்" என்ற நூலாக எழுதியுள்ளார்கள். மேற்கோள் ஆதாரம் காட்டப்படவில்லை எனினும் ஸ்ரீ சக்ரம், யோக உட்கிடை போன்ற கருத்துக்களை மேம்போக்காகத் தொட்டுச் செல்கின்றார்கள். 1982

17. திரு. நஜன் அவர்கள் எழுதிய "சிதம்பரஇரகசியம்" என்ற தமிழ் நூல் மேற்கோள் அடிக்குறிப்பு, அட்டவணை முதலியன இல்லாத நூல் எனினும், சமயக் கண்ணோட்டத்தில் செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளது. 1983

18. திரு. பிரொஜேஷ் பானர்ஜி அவர்கள் எழுதியுள்ள, "நடமிடும் கடவுள் நடராசர்" என்ற ஆங்கில நூலில், உலகில் விஞ்ஞானிகள் கூறும் பிரபஞ்ச இயல் தத்துவங்களோடு நடராச அனவரத நடன பிரபஞ்ச இயலை ஒப்பு நோக்கி எழுதுகிறார்கள். 1985

19. திரு. கமில் சிலபில் அவர்கள் இயற்றிய "சிவ சதாநிருத்த மூர்த்தியின் ஆனந்தத் தாண்டவம்" என்ற ஆங்கில நூலில், வாகாடக, விஷ்ணு

குண்டின், பல்லவ அரசியல் தொடர்புகள் ஆய்வு செய்யபட்டு, தமிழகத தொடர்பு வலியுறுத்தப் படுகின்றது. 1985

20. சிதம்பரம், சித்சபை, இரகசியம், தகரவித்தை நடராசர் முதலியன தொடர்பான தலைப்புக்களில் பல சமஸ்கிருத நூல்கள் வெளிவந்துள்ளன. பல கையெழுத்துப் படிகளாக உள. ஆனால் அவை படிக்கக் கிடைப்பது அரிது. இத்தகைய நூல்கள் பல படி எடுக்கப்பட்டு, புதுவை பிரஞ்சு சிறப ஆய்வு நிறுவனத்தில் காக்கப்பட்டு, இருக்கின்றன. ஆகமங்கள் கூட அவண் பிரஞ்சு மொழியிலும், சமஸ்கிருதத்திலும் கிடைக்கும். 1986

ஆய்வடங்கல்(அ)

1. அண்ணா, 'உபநிஷத் சாரம்' இராமகிருஷ்ணமடம், சென்னை–4. 1978.
2. அருணகிரி முதலியார், சிவ. "ப்ரணவ வித்யா பரிமளம் என்னும் ஓங்கார விளக்கம்" சோளங்கிபுரம். 1920.
3. அருணாசலம். ப., 'திருமந்திரக் கோட்பாடு' சென்னை. 1982.
4. அறிவனார். 'பஞ்ச மரபு'. சக்தி அற நிலையம், பொள்ளாச்சி. 1975.
5. அறிவொளி. அ., 'திருவாரூர்' சிதம்பரம். 1983.
6. ஆச்சார்யா. பி. ஸ்ரீ, 'தில்லைத் திருநடம்' சென்னை. 1971.
7. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்புவிளக்கம், நாகர்கோவில். 1984.
8. ஆறுமுக நாவலர், 'இந்து சமய பாடத்திரட்டு' யாழ்ப்பாணம். 1967.
9. ஆறுமுக நாவலர் (பதிப்பாசிரியர்) 'சிதம்பர மான்மியம்' சிதம்பரம். 1976.
10. இரத்தின சபாபதிப் பிள்ளை, சிவயோகி. மா., 'திருவாசகமும் சிவராஜ யோகமும்' சென்னை. 1973.
11. இரத்தினசபாபதி. வை. 'வீரசைவம்' சென்னை. 1977.
12. இரத்தினம். கா. பொ., 'நூற்றாண்டுகளில் தமிழ்' சென்னை. 1982.
13. இரத்தினவேலு முதலியார், ஈக்காடு 'சிவபராக்கிரமம்' சென்னை. 1908.
14. இராசமாணிக்கனார். மா., 'சைவ சமய வளர்ச்சி' சென்னை. 1958.
15. உமாபதிசிவம். 'குஞ்சிதாங்கிரிஸ்தவம்' சிதம்பரம். 1958.
16. உமாபதி சிவம். "கோயிற் புராணம்" திருவாவடுதுறை. 1965.
17. உமாபதி தேவ நாயனார். 'சிவப்பிரகாசம்' தருமபுரம். 1962.
18. கணேச சாஸ்திரியார். சிவரகஸ்ய மகேதிகாரம் (மொழிபெயர்ப்பு) கயப்பாக்கம், சாதாரண ஆண்டு.
19. கணேச தீட்சிதர். ஐ.த.ரா., 'இதயக் கோவில்' சிதம்பரம். 1971.

20. கமலையா. க.சி., ஆனந்த மா நடம். சென்னை. 1978.
21. கிருஷ்ணராஜ மகாராஜா, ராஜஸ்ரீ, (தொகுப்) 'ஸ்ரீதத்துவ நிதி' தஞ்சாவூர். 1966.
22. கோவிந்தசாமி. 'திருச்சிற்றம்பலம் என்ற சிற்சபையும் பொற்சபையும்' கடலூர். 1977.
23. 'சரஸ்வதீய சித்ரகர்மம்'. சரசுவதி மகால். தஞ்சாவூர்.
24. சாத்தனார். 'கூத்த நூல்' ச.து.சு. யோகியார் உரை, சென்னை. 1968.
25. சித்பவானந்தர். சுவாமி, 'கடவுளின் வடிவங்கள்' திருப்பராய்த்துறை. 1977.
26. சிவ அருண சிவயோகி, 'ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த சங்க்ரஹ விளக்கம்' திருப்பனந்தாள். 1944.
27. 'சிவஞான சித்தியார் - சுபக்கம்' கழகம், சென்னை. 1954.
28. 'சிவஞான மாபாடியம்' சென்னை. 1986.
29. 'சிவஞான யோகிகள், 'சிவஞான போத வினா விடை', தூத்துக்குடி. 1930.
30. சுப்பிரமணிய சாஸ்திரி, (பதிப்) 'ஸ்ரீ காசியப சில்ப சாஸ்திரம்' தஞ்சாவூர். 1968.
31. சீகுமாரம் (ஸ்ரீ குமாரர்), 'சிற்பரத்னம்' தஞ்சாவூர். 1961.
32. செந்தில் நாதையர், 'தேவாரம் வேத சாரம்' திருப்பரங்குன்றம், பிங்கள ஆண்டு.
33. செந்தில் நாதய்யர் 'பௌஷ்கரபாஷ்யம்' திருப்பரங்குன்றம். 1925.
34. சேக்கிழார், 'பெரியபுராணம்', நாவலர் பதிப்பு. சிதம்பரம். சாதாரண ஆண்டு கார்த்திகை.
35. சோமசேகர தீட்சிதர், 'ஸ்ரீ நடராஜர் கோவில் சரித்திரம்' சிதம்பரம். 1971.
36. தண்டபாணி தேசிகர். ச. ஸ்ரீஜம்புகேஸ்வரர் கோவில், மகா கும்பாபிஷேக மலர். திருவானைக்காவல். 1970.
37. தண்டபாணி தேசிகர். 'ஆடல்வல்லான்' திருவாவடுதுறை. 1967.
38. தண்டபாணி தேசிகர். ச., 'திருவாரூர்த் தல வரலாறு' திருவாவடுதுறை. 1983.
39. தண்டபாணி தேசிகர். ச. 'சிதம்பரம் கும்பாபிஷேக மலர்' சிதம்பரம். 1972.
40. தண்டபாணி தேசிகர். ச., 'சிதம்பரம்' தருமை ஆதீனம், தருமபுரம். 1949.
41. தண்டபாணி தேசிகர். ச., பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி, திருக்கோயில் குடமுழுக்கு மலர். பழனி. 1973.
42. 'தாயுமான சுவாமி பாடல்கள்', ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை. 1980.
43. திருமூலர், 'திருமந்திரம்', இரமண சாஸ்திரிகள் பதிப்பு, சென்னை. 1912.
44. திருமூலர், 'திருமந்திரம்', இராமநாதப் பிள்ளை உரை, கழகம், சென்னை. 1975.

45. திருமூலர், 'திருமந்திரம்' வரதராசப் பிள்ளை உரை, சென்னை. 1983.
46. நந்திகேஸ்வரர், 'அபிநயதர்ப்பனம்', உ. வே. சா. நூலகம், அடையாறு. 1957.
47. நந்திகேஸ்வரர். 'பரதார்ணவம்' தஞ்சாவூர். 1957.
48. நஜன் (நடராசன்), 'சிதம்பர ரகசியம்', பிரதிபா பிரசுரம், சென்னை. 1983.
49. நஜன் (நடராசன்), 'திரிபுரா ரகசியம்' பிரதிபா பிரசுரம், சென்னை. 1973.
50. நஜன் (நடராசன்), 'ஆறாதாரங்களில் அம்பிகை', பிரதிபா பிரசுரம் சென்னை.4. 1982.
51. நஜன் (நடராசன்), 'குண்டலினி சக்தி', சென்னை. 1984.
52. பால சுப்பிரமணியம், எஸ். ஆர்., சோழர் கலைப் பாணி, சென்னை. 1960.
53. 'மயமதம்', சரஸ்வதி மகால், தஞ்சாவூர்.
54. மனவாசகம் கடந்தார், 'உண்மை விளக்கம்', தருமபுரம். 1961.
55. மெய்யப்பன், ச., 'தில்லை திருக்கோவில்', மணிவாசகர் நூலகம். சிதம்பரம். 1982.
56. வரதராசன். கோ.'திருமந்திர நெறி', மயிலாடுதுறை. 1976.
57. வைத்தியலிங்கம். செ. 'அழகுக் கலைகள்' சென்னை. 1981.
58. வெங்கட்ராமன். 'இந்தியக் கோவில் கலை வரலாறு'. மதுரை. 1983.
59. வேத வியாசர். 'புண்டரிகபுர மகாத்மியம்' சிதம்பரம். 1974.
60. வாசுதேவ சாஸ்திரி (பதிப்), 'சகளாதிகாரம்' தஞ்சாவூர்.
61. வாசுதேவ சாஸ்திரி (பதிப்), 'நாட்டிய சாஸ்திர சங்கிரகம்' தஞ்சாவூர்.
62. விபுலாநந்த அடிகள். ஸ்ரீமத், 'நடராச வடிவம்' சென்னை. 1965.
63. வெள்ளை வாரணர். க. 'தில்லைப் பெருங்கோவில் வரலாறு' சிதம்பரம். 1987.
64. வேங்கடசாமி, மயிலை, சீனி., 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்' சென்னை. 1967.
65. வையாபுரிப் பிள்ளை. ச., 'இலக்கிய உதயம்'. சென்னை.
66. "ஸ்ரீ தத்துவநிதி", சரஸ்வதி மகால், தஞ்சாவூர்/ஸ்ரீரங்கம். 1964.
67. Ajit Mookerjee & MadhuKanna, The Tantric Way, Newyork. 1977.
68. Anne Marie Gaston, Siva in Dance, Myth and Iconography, Bombay.1982.
69. Arunachalam, B. The Saiva Agamas, Kalashetra, Madras. 1983.
70. Arunachalam, M. Collected Papers on the Saiva Religion, Tiruchitrambalam.

71. Auguste Rodin, The Dance of Shiva, (article), Rupam.1921.
72. Balambal. V., Great Women of Chola Dynasty (article). Madras. 1976.
73. Balasubramaniam, S.R., Early Chola Art and Architecture. Madras. 1966.
74. Barret, Douglas, Dancing Siva in Early South Indian Art (article) Mortimer Wheeler Archeological Lecture, Proceedings of the British Acadamy, London. 1976.
75. Chanu. S.V., The Devine Dancer, Mysore. 1982.
76. Coomaraswami, A.K., The Dance of Shiva, Sagar Publications, New Delhi. 1968
77. Edgar Thurston and others. Illustrations of Metal Work in Brass and Copper, Madras. 1913.
78. Ghurye. G.S., Vedic India, Popular Prakashan, Bombay. 1979.
79. Gian Guiseppe Fillipi, Some Iconogaphic aspects of Siva as King of Dancers, New Delhi. 1976.
80. Gopal Chetty. D. Chidambara Rahasyam Revealed, Madras. 1930.
81. Gopinatha Rao. T.A., Elements of Hindu Iconography, New Delhi. 1985.
82. Gubil. L.N., Chidambaram (article), The Modern Review. 1942.
83. Gupta, R.S., Iconogaphy of the Hindus, Buddhists and Jains, Bombay.
84. Hadaway. W.S., Note on a dated Nataraja from Belur, (article) Rupam.1922.
85. Hadaway. W.S., Note on the Composition of Line in Nataraja Images, (article) Rupam. 1922.
86. Havell. E.B.,The Ideals of Indian Art, Varanasi. 1972.
87. Havell. E.B., A Hand Book of Indian Art, Varanasi.
88. Jagadisa Aiyar, South Indian Shrines, New Delhi. 1982.
89. Jon Gonda, A History of Indian Literature, Medieval Religious Literature Sanskrit, Wiesbadan, Germany. 1977.
90. John Dowson, Hindu Mythology and Religion, New Delhi. 1984.
91. Jose Pereira, "The Nataraja Theme: A New Interpretation" Journal of Asiatic Society, Vol 30, Pt, I., Bombay. 1955.
92. Kapila Vatsyayan, Siva Nataraja: (Dance and Form (article) Discourses on Siva (book). Bombay. 1984
93. Keith, Berriedale. A., A History of Sanskrit Literature, Delhi. 1920/1973.
94. Krishna Rao, A Dictionary of Bharatha Natya, Orient Lorgman, Madras. 1980.
95. Mackay. E.J.H., Further Excavations in Mohenjadaro, New Delhi. 1937.

A. No. 25526

96. Mortimer Wheeler, The Hindu Civilization, Cambridge University Press, London. 1968.
97. Mulk Raj Anand, The Hindu View of Art, New Delhi. 1957.
98. Nalini Kantha Bhattasali, Iconography of Buddhist and Brahmanical Sculptures in Dacca Museum, Varanasi. 1972.
99. Narayana Ayyar. C.V., Origin and Early History of Saivism in South India, Madras. 1936.
100. Natarajan. B., The City of Cosmic Dance, New Delhi. 1974.
101. Projesh Banerji, Nataraja the Indian God, New Delhi. 1985.
102. Projesh Banerji, Art of Indan Dancing, New Delhi. 1985.
103. RadhKamal Mukherjee, Cosmic Art of India, Allied Publisher, Bombay.
104. Rajamaickanar. M., Development of Saivism In South India, Dharmapuram. 1964.
105. Rangasami, Durai., The Religion and Philosophy Of Tevaram 2 Vols, Madras. 1958.
106. Ruth Reyne, Introduction to Indian Philosphy, Bombay. 1971.
107. Satyamurthi, T., The Nataraja Temple, New Delhi. 1978.
108. Sharma, I.K., The Development of Early Saiva Art and Architecture, Delhi. 1982.
109. Shanthim Swarup, 5000 Years of Arts and Crafts of India and Pakistan, Bombay. 1968.
110. Sivaramamurthi, C., Nataraja in Art Thought and Literature, New Delhi. 1974.
111. Somsundaram Pillai. M., A History of Tamil Literature, Annamalai nagar. 1967.
112. Somasundaram Pillai, J.M., Siva Nataraja, Annamalai nagar. 1970.
113. Somasundaram J.M., University Environs, Annamalai nagar, 1963.
114. Subramaniam, S.R., Early Chola Temples.
115. Subramanian. S.V., and Rajendran. G., Ed., Heritage of the Tamils, Madras.1985.
116. Swami Sivanandha., Lord Siva and his worship., Devine life society, 3rd Ed. Rishikesh. 1978.
117. Swami Sivananda, Kundalini Yoga, The Devine Life Society, Rishikesh. 1980.
118. Swami Swahananda, Hindu Symbology and other Essays, Ramakrishna Mutt, Madras-4. 1983.
119. Swami Vivekananda, Raja Yoga, Calcutta. 1982.
120. Thapar. D.R., Lt, Gl., Icons in Bronze, Bombay.
121. Venkateswaran S.V., Symbolism in Indian Art, (article) Quarterly Journal of Oriental Art. 1927.
122. Vijaya Venugopal. G. Kazhuaumalai Vettuvankoyil (article)., Ellora Caves., New Delhi. 1988.
123. Zvelebil, Kamil, V. Ananda Tandava of Siva Sada Nrittamurthi, Madras. 1985.

ஸ்ரீ நடராசப் பெருமானின் ஆங்கிகாபிநயுத் தத்துவங்கள்

1. இளம் பிறை
தக்கன் சாப வீடு (பு)
காம தகனம் (பு)
உயிர் வளர்ச்சி(பி)
காலச் சின்னம் (பி)
ஓஷதி நாதன்

2. மயிலிறகு
கிராதார்ஜுனியம் (பு)
மேற்செல் உயிர் (பி)

3. கொக்கிறகு
குண்டாசுர வதம் (பு)
அரசத்தன்மை

4. இடக்கண்
சந்திர மண்டலம்
இடநாடி (யோ)
இச்சா சக்தி

5. வலக்கண்
சூரிய மண்டலம்
பிங்கலை நாடி (யோ)
ஞான சக்தி

6. நுதல் விழி
விஸ்வதாட்சம் (பி)
சகஸ்ராட்சம்"(ஆ)
அக்கினி அம்சம் (ப)
நடு நாடி (யோ)
சுழுமுனை (யோ)
காம தகனம் (பு)
கிரியா சக்தி

7. திருநீறு
பிருதிவித் தன்மை (ப)
லய சிருஷ்டி (பி)
திரிபுரமெரித்தல் (பு)
திரிசத்யம்
சுடலையாடல்

8. காபாலம்
பிரம்ம சிரச்சேதம் (பு)
பிட்சாடனர் (பு)

9. ஊமத்த மலர்
அட்ட மூர்த்தம்
யோகி (யோ)

10. கங்கை
ஜலமய மூர்த்தம் (ப)
கங்காதரர் (பு)
சகஸ்ரார அமுதம் (யோ)
பாப விமோசனம் (ஆ)
ஆதிப் பெருந்திரு

11. நுண் சிகை
தட்சிணா மூர்த்தம் (பு)
ஞானம் (யோ)
குருத்துவம்

12. கொன்றை மலர்
கற்பகவல்லி (பு)
சாரோப, சாமீப, சாயுச்யம் (ஆ)

13. துடி
தோற்றம் (ஐ)
துடியாடல் (கி)

14. தீயகல்
சங்காரம் (ஐ)
தீ (ப)
எரியாடல் (கி)

15. குழை
சக்தி அம்சம்
பிருகிருதி (பி)
அர்த்தநாரீஸ்வரம் (பு)

16. தோடு
சிவ அம்சம்

17. நீல கண்டம்
அமிர்தம் கடைதல் (பு)
சமன்பாட்டு நிலை (பி)
தீதகற்றல்
அமரத்வம்

18. காபால மாலை
பிரம்மகர்ப்பக் கழிவு (பி)
யுகாந்தரம் (பி)

19. ஆதிவராகக் கொம்பு
வராகாவதாரம் (பு)
பிரபஞ்ச சமநிலை (பி)

20. ஆமை ஓடு
விஷ்ணு அம்சம் (பு)
கூர்மாவதாரம் (பு)
பிரபஞ்சக் காவல் (பி)

21. நரசிம்மரின் குருதித் தோல்
நரசிம்மவதாரம் (பு)
சரபமூர்த்தம் (பு)

22. அபயகரம்
காத்தல் (ஐ)
சுபமூர்த்தம் (ஆ)

23. அரவணி
நாக சக்தி
சீவாத்மா (ஆ)
குண்டலினி (யோ)

24. கைகள்
விராட்புருடத்தன்மை (பு) (பி)
வீர செயற்பாடு மிகுதி

25. தோள்கள்
திரிவிக்ரம நிலை (பு)
திசைகள் (பி)
காற்று (ப)

26. புநூல
நாயகத் தன்மை (ஆ)
வேதாந்தம்

27. உதர பந்தம்
வேக மூர்த்தம் (ஆ)

28. கஜஹஸ்தம்
வீசுகரம்
திருவடி சுட்டல்
இன்ப வழிகாட்டி

(பு) = புராணம்
(யோ) = யோகம்
(ஆ) = ஆகமம்
(ப) = பஞ்ச பூதம்
(ஐ) = ஐந்தொழில்
(பி) = பிரபஞ்ச இயல்





29. உடல்
ஆகாயம் (ப)
30. புலி உரி
தாருக வனம் (பு)
பிட்சாடனர் (பு)
31. யானை உரி
கஜசம்மாரம் (பு)
மாயாமலம் (ஆ)
32. ஊர்த்துவ மேரு
உலகோற்பத்தி (பி)
பிட்சாடனர் (பு)
துறவு
33. கோவணம்
தூய ஞானம்
34. குஞ்சிதபாதம்
சிதம்பர மகாத்மியம் (பு)
அருளல் (ஐ)
35. சிலம்பு
வேதங்கள்
கௌா ஒலி (யோ)
36. கழல்
வீரட்டம்
பிறப்பறுத்தல்
பதிநிலை
புருடன்
37. வீர கண்டாமணி
வீரம் (கி)
மந்திரத் திருவுரு
வெற்றி
திறன்
38. ஸ்தித பாதம்
ஊன்றிய திருவடி
காலாந்தகர் (பு)
மறைத்தல் (ஐ)
பதிநிலை
நிலம் (ப)
வினைப்பயன் ஊட்டல்
39. முயலகன்
கோயிற் புராணம் (பு)
தாருகவனம் (பு)
மும்மலம்
40. திருவாசி
இரண்ய கர்ப்பம் (பி)
பிரபஞ்சம் (பி)
பூரணத்துவம்
41. திருவாசி சுடர்
த்வனி (யோ)
பீஜ மந்திரங்கள் (ஆ)
42. கமலபீடம்
தகராலயம் (யோ)
இதயக் கமலம் (யோ)
சகஸ்ராரம் (யோ)

T.N. Ulaganathan

தி.நா. உலகநாதன்

Printed by Elangovan Printers, Madras-600014